ஸ்ரீ

ஸ்ரீராமமயம்.

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஸ்ரீமந்நிகமாந்தகுரவேநம:

# ஸ்ரீமத்கம்பராமாயண

அருங்கவிவிளக்கம்.

இஃது

,நவித்தலம். துரைசாமிமூப்பனாரால் ன்

ாக

ருங்

த்தப்

செயயப்பட்டு

சென்னை:

மிமோரியல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சர்வதாரி ஞு ஆவணி ம

Copy-right Registe

மகாமகோபாத்தியாய ...
37. தொ.
VII. 38.

ஸ்ரீ

ஸ்ரீராமமயம்.

# அறிவிப்பு.

## இவ்வுரைகாரர்செய்த புத்தகங்கள்.

| | | | | ரூபா. | அணா. |
|---|---|---|---|---|---|
| ஸ்ரீ அயோத்திமாநகரமான்மியம். | | ... | ... | 0 | 0 |
| ஜானகிபரிணயம. | ... | ... | ... | 0 | 6 |
| பிரசந்நராகவம் | தபாற்கூலியுட்பட | ... | ... | 0 | 3 |
| அமிசசந்தேசம | ஷை | ... | ... | 0 | 3 |
| ஸ்ரீகருடபுராணவசனம் | ஷை | ... | ... | 0 | 13 |
| ஸ்ரீமத்கயாமான்மியம | ஷை | ... | ... | 0 | 1 |
| காயாதராபராபவம் | ஷை | ... | ... | 0 | 13 |
| மகாபாரதச்சுருக்கம் | ஷை | ... | ... | 0 | [illegible] |
| த்கம்பராமாயண | | | | | 3 |
| நங்கவிவிளக்கம | ஷை | ... | ... | 3 | [illegible] |

வற்றில் முன்னைய விரண்டும கிடைககா. ஏனையபுத்தகங்கள் வேண்டுவோா சென்னை எஸ் பிளநேடரா - ஏ. ஐயாதுரைஐயங்காரவர்கள கமபேனியிலும, திண்டிவனம தாலூகாம் அமீனா நாராயணசாமிபிள்ளையவாகளிடததிலும், குமபகோணம் டவுன ஐஸ்கூல் போதகாசிரியா திருவேஙகடததயயங்காரருககளிடத்திலும், தஞ்சாவூா-சகாநாயகர்வீதி 107-வது. கெ. கிலும், த்தில முகாசா குமாஸ்தா பஞசாபிகேசராயரவர்களிடததிலுசிவ நாகபட்டினம் அந்தோனி ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் சதாசிவிஞசிராயரவாகளிடததிலுய, திரிசிராப்பள்ளியில ரிப்பன் பிடசாபீஸ் புரோப்ரைடா. T.V. வேஙகடராயலுநாயுடு அவர்களிடத்திலும், ஸ்ரீரங்கம-மேலையுததிரவீதி 81-வது. கெ. கிருசுத்துவஸ்ரீனிவாச ராகவையஙகா ரவர்களிடததிலும, திருநெலவேலிசர்க டிஸ்திரிகட்டு கோாடடு 2-வது, கிளாககு ரஙகசாமிபிள்ளையவலும் டததிலும், அடியிற் கைசசாத்திட்டிருககும எனனிடததி. பெற்றுக்கொளக.

என்னிடத்தில் ஒருசேர கஉ - புத்தகம் வாங்குவோர்க்கு ஒன்று தரவுகொடுக்கப்படும்.

ஸ்ரீமத் கம்பராமாயணத்தில் ஆயிரத்துச் சொச்சம் கவிகள் கொஞ்சம் லேசாகவும் மற்ற ஒன்பதினாயிரங்கவிகள்கடினமாக வும் இருக்கின்றமையாலும் முன் அச்சிட்டிருக்கின்ற பிரதியில் அச்சுப்பிழைகள் இருக்கின்றமையாலும் கையெழுத்துசுத்தப் பிரதியைக்கொண்டு பரிசோதித்து இப்போதெழுதியிருக்கின்ற படி சிலபாட்டுக்களுக்கு முழுமைக்கும் சிலபாட்டுக்களுக்குக் கடினபாகத்திற்குமாக மேற்படி ஒன்பதினாயிரத்திற்கும் உரையெழுதி ஒழிந்த ஆயிரத்துச்சொச்சம் செய்யுட்களோடு ப[ண்ணி] திருவ மூன்று சம்புடமாக பயிண்டுசெய்து வெளிப்படுத்தவு[ம்] தமிழ் மொழி ஸ்ரீமகாபாரதம் கையெழுத்துசுத்தப்பிரதியில்லையிறகொ போ[ய்] தச்சிட்டிருப்பது அச்சிட்டவரது கொள்கைக்கிரவாதத்தி னேக சுலோகங்கள் சேர்க்கப்பட்டும் எடுக்கப்பட்டும் திருத்த டும் இரு[க்கி]ன்றமையாலும் தமிழிலுள்ளபாரதங்களில் ஒன்று வடமொழிக்குச் சரியாய மொழிபெயர்க்கப்படாமலிருப்பதன் றிப் பின்பு பலராலும் செய்யுட்கள் திருத்தப்பட்டிருப்பனவாக லாலும் தெய்வத்தன்மைபொருந்திய சங்கப்புலவராகிய பெருந் தேவனார் பொய்யாமொழியாரானமையின் வடமொழிச்சுத்தப் பிரதிக்கிணங்கவே அவர் பாடியிருப்பாராகலாலும் அவர் பார தத்தைத் தக்க புலவர்கள் முன்னிலையில் பலபிரதிகளைக்கொ ண்டு பரிசோதித்து அச்சிட்டு வெளிப்படுத்தவும் இவ்வுரை காரருக்கு அபிப்பிராயமிருக்கின்றது. இவ்விரண்டனுக்கும் மிகுதியாய்ப் பொருள்வேண்டியிருப்பதால் மேற்குறித்த ஒவ் வொன்றிற்கும்-உரு0-கையொப்பமும் கையொப்பம் ஒன்றிற்கு முன்னதாகக் கொடுக்கவேண்டியதாய் நான் பத்திரிகை மூல மாய்த்தெரிவிக்குமதொகையும் கிடைக்குமாயின் அவ்விரண்டு வேலையும் தொடங்கப்படும். கவித்தலத்தில் போஸ்டாபீசிருக் கின்றது.

சர்வதாரி ௵ ஆவணி ௴
கவித்தலம்.

இங்ஙனம்
ப. விசுவநாதராவ்.

ஸ்ரீ

ஸ்ரீமதே கம்பநாட்டாழ்வார் குருவே நம:

# கவிச்சக்கிரவர்த்தி

## கம்பநாட்டாழ்வார் சரித்திரச்சுருக்கம்.

---

கம்பநாட்டையாண்ட வொரு குறுநிலமன்னன் போர்க்களத்தி லுயிர்மாய்க்கக் கருவுற்றிருந்தவவன்றேவி மாமருக்களுக்கஞ்சி மாறுவேடம்பூண்டு திருவழுந்தூரில் வந்தோரோச்சன் மனையுட்புகுந்தாங்காண் மகவையுயிர்த்தாள். உயிர்க்க வாங்குள்ளாரிம்மகனைக் கம்பநாடுடையோனாகலின் கம்பனென்ப் பெயரிட்டார். இதனை விளக்கியவன்றே, "சீரணி சோழநாட்டுத் திருவழுந்தூருள் வாழ்வோன், காரணக்கொடையான் கம்பன் தமிழினாற் கவிசெய்தானே" எனவும், "கம்பநாடன் கழற்றலையிற்கொள்வாம்" எனவும், "கம்பநாடுடைய வள்ளல் கவிச்சக்கிரவர்த்தி பார்மேல்" எனவுங் கூறினரறிந்தோர்

கம்பநாட்டாழ்வார் ஏழாட்டைப் பிராயத்தராகவும் அவர் வரலாற்றை யுணர்ந்த திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பிள்ளையவர்கள், தாயோடவரை யழைத்துத் தங்குடும்பமெனப் போற்றித் தம்புதல்வர்களோடு கழகஞ்சென்று கல்விபயிலச்செய்தனர். செய்யக் கம்பநாடர் கற்கு நாளிலொருநாட்டமதாசிரியரது தினைப்புனத்தைக் காக்கவேண்டிய முறைநேரக் கம்பர்சென்றப்புனத்தைச் சுற்றி நோக்கி யருகிலிருந்த காளிகோயிலைச் சார்ந்த தின்சையாப் பிராரத்தமெவர்க்கு முண்மையாற்றுயின்றார். துயின்றார்க்குக் காளிதேவி, குதிரையொன்று தினைப்புனத்தை யழிப்பதாய்க் கனவுண்டாக்கக் கம்பநாடர் துணுணென்றெழுந்து கிராமாதிபதியாகிய காளியங்கிராயன் பரிமாபுனத்தை யழிப்பக்கண்டோட்டவு மதோடாமலழிக்கக் கம்பர் பாலப்பருவத்தரானமையி னழுதனர். அழுதார்க்குக் காளிதேவி யெதிர்தோன்றி யழாதை நின்னுளை நீட்டென்றவர் நாவிற் கலைமகள் பீசாக்கரத்தைப் பொறித்துமறைந்தாள் மறையக் கம்பநாடர்,

> வாய்த்த வயிரபுர மாகாளி யம்மே கூர்
> காய்த்த தினைப்புனத்திற் காலைவை — [illegible] சாய்த்து
> மதிக்கு மாகாளி [illegible]
> [illegible]

எனப் பாடி குதிரையைக் கொன்றார். பின்னர்க் காளிங்கரா
னின மாணாக்கனென் குதிரையைக் கொன்றானென்று முனிவ
வொன்றாகிய தமதாசிரியருவப்பானென்காமடியை "குதிரைமீள
க் கொண்டுவா" என்று மாற்றிப்பாடிப் பரியைப்பிழைப்பித்தனர்.
இதனைச் செவியேற்றச் சடையப்பர் கம்பநாடரைப் புவியரச
னென்றனரோ போற்றிவந்தோமிவர் கவியரசனென்றியுந் தெய
வத்தன்மையும் பொருந்தி யிருக்கின்றனரென்றுவந்து முன்
னினும் மகிமையாய் வழிபட்டுவந்தார். வரவே யக்காலத்தரசு வீற்
றிருந்த ராசேந்திர சோழன் கம்பநாடரது மகிமையைக்கேட்ட
வரையழைத்துத் தனதவைத்தலைமைப்புலவராக நியமித்தான்.
பின்னாக குலோத்துங்க சோழனும் மமமானென்ற முறைகொ
ண்டு கம்பரைப் போற்றிவர, சடையப்பர் கம்பநாடரைநோக்கி
யிதிகாச சிரேட்டமாகிய ஸ்ரீமத் வான்மீகராமாயணத்தைத்
தேவரீர் பாடியருளவேண்டுமெனப் பலகாலும் வேண்டினார்.
வேண்டினார்க்குக்கம்பர் நன்றென்று கூறிக் காலநீட்டித்தார். நீட்
டிக்கச் சடையப்பர் சென்று குலோத்துங்க சோழனைப்பிரார்த்தி
த்தார். பிரார்த்திக்க வச்சோழன், பெறுதற்கரிய * நானகையும்
பயக்குங் கல்விச்செல்வமுமுடைய கம்பரை யாமென்செய்வோம்.
அவரைமாத்திரம் பாடச்சொல்லின் விரைவிற் பாடார். அவரோ
டினுஞ்சிலரையும் பாடச்சொல்லின் மற்றவர் பாடிமுடிக்குமு
ன்றுமுடிக்கவேண்டுமெனப் பாடுவரெனச் சூழ்ந்து, கம்பநாட
ரையுமொட்டக்கூத்தர் முதலியோரையுமழைத்து ஸ்ரீமத்வான
மீகராமாயணத்தைத் தமிழாற் பாடுமினென்றான். அவரெல்
லாரும் பாடவுங் கம்பநாடர் பாடாதிருந்ததைச் சடையப்பிள்ளை
யுணர்ந்து சோழனுக்கோத வவன் புலவரெல்லாரையுமழை
த்து வினாவினன். வினவ வவர் தாம்பாடிய வளவையுரைத்
தார். உரைக்கக் குலோத்துங்கன் கம்பநாடரைநோக்கி யம்மானே
நீரெம்மட்டிற் பாடினீரென்றான். என்றற்குக் கம்பர் யாஞ்சேது
பந்தனப்படலமவரையிலும்பாடினேமெனச்சோழனிவர் பொய்
த்தாரெனவுள்ளி யதனைச் சற்றேகூறுமென்றான். எனவேயன்று
காறும் பாடாதிருந்த கம்பநாடர் மற்றப்புலவர்கள் பாடியதற்
கு தாமதிகமாயப் பாடியதாய்த் தாங் கூறியவாறு முன்னமே

* [illegible]

பாடியிருந்தார் போன்றப் படலத்தைப் பாடிப் பொருள்கூறினர். கூற வொட்டக்கூத்தர், "குமுதனிட்ட குலவரை" என்ற பாட்டிற் றுமிதனுசான்றோர் செய்யுளினுள்ளதோ வுலகவழக்கினுள்ளதோ வென்று வினவக் கம்பநாட்டாழ்வார் கலைமகளைத் தியானித்தவ ளருள்பெற்று நானுமறியே னவளும் பொய்கூறாளென்று கூறி யதுலகவழக்கிலுள்ளதென் றதனை யுணர்த்திய வெழுந்து சோழ னொட்டக்கூத்தர் முதலியோரோ டொருநாளிரவின் கடையாமத்தில் விடிதற்குமுன் மருகிற்செல்லுங் காலாங்கோரில்லத்தில் வேதமே தயிர்த்தாழியும் வேதாந்தமே தயிருஞ் சாத்திரமே மத்துங் கயிறுமிதிகாசபுராணங்களே சிறுகுழந்தைகளுமாகக் நாமகளோராயச்சியுருக்கொடு தயிர்கடையுங் காற்றாழியினபானெருங்கும் புதல்வர்களைத் துமிதங்கெதறிக்கு மக்கா ணெருங்காதிரென்றாள். ஒட்டக்கூத்த ரதுகேட் டிவ்விடத்தின் முன்பு வீடிலலையே யிவ்வுரையுரைத்தாரார்ரென் றறிவா னதனுடபுக்கச் சரசுவதிமாத்திரமோ மறைந்தா ளவ்வீடும் மறைந்தது. மறைய வொட்டக்கூத்தர் கம்பநாட ரை நோக்கிச் சாரதாமூர்த்தியாகிய உமமோ டியானசெயவ தெவனென்று துதித்தார்.

பின்னாச சின்னாளி லொட்டக்கூத்தர் முதலியோர் ஸ்ரீராமாயணம்பாடி முடித்தலுங் கம்பநாட்டாழ்வா ரில்லந்துடைத்துப் புனமெளித்து பூவிட்டுத் தவிசிட்டுத் திருமகளார் மருமகளாரைத் தியானித்துத் தமதுபாசகமூர்த்தியாகிய வனுமானையு மவ்வாணியையும், "அஞ்சிலே யொன்றுபெற்றான," "புத்தகம் படிகமாலை," என்ற கவிகளைக் கூறி வணங்கிப் பாடத் தொடங்கலு நாமகள பொருக்கெனவந் தெதிரிலிட்ட பீடத்தில் வீற்றிருந்தருளினாள். வீற்றிருக்கக் கம்பநாட்டடிகள வளசந்நிதியிலிருந்து பாடுதலு மச்சரசுவதி ஞாயிறுபடுதலகண்டு கம்பர் பொழுது போயிற்றென அம்பாணிறுத்தினேனென்று நிறுத்தி நாளொன் றுக்கெழுநூறுகவிகள் வீதம்பாடியருளினர். அதற்குச்செய்யுள்,

> கழுந்தராயுனகழல்பணியாதவாகதிரமணிமுடிமீத்த
> அழுந்தயாளிக்கொடுசிலைராசவகுபிகவகவிநாதனை
> விழுந்தசாயிரெழுயதனமுனமறைவதியருடனாராயக
> தெழுந்தாயிரவிழுவைசமுனகவிபாடினனெழுநூறே.

கம்பநாட்டடிகள் பாடியருளிய வழுச்சொல்லையு முலகவழக்கெனப்போற்றி யமைத்தவர் பாடி முடிக்குமளவுமவர்களெதிர் சந்நிதிகொண்டிருந்தமையா லவர் முகமாய் ஸ்ரீராமாயணத்தை யந்நாமகளே பாடினளெனக

பிரமன் ஸ்ரீராமசரிதையை நீர் செய்யுமென்று யோகஞ் செய்த வான்மீகமாமுனிவர்க் கருள்புரிய வந்தானல்லன். அச்சரிதையைக் கூறவேண்டி முந்துற் றவ்வான்மீகர் திருநாவிலெழுந்தருளிய தன் றேவியைத்தேடி விரைந்துவந்தானென்று வடநூலார் வியந்து கூறுப. எனவே ஸ்ரீராமசரிதையைப் பலர் முகமானுங்கூறப் பாரதிகேள்வர் வேணவாவுண்டுபோலும்.

கம்பநாட்டாழ்வார் தாம்பாடிய ஸ்ரீராமாயணத்தைப் பூலோக வைகுண்டமெனப் புலவரும் புலவரும் போற்றி வணங்குந் திருவரங்கம் பெரியகோயிலி லரங்கேற்றுவானங்குச்சென்று பரமாசிரியராகிய ஸ்ரீமந்நாதமுனிகள் முதலியோரைப் பிரார்த்திக்க அவர்கள் கம்பரே தமிழ்வல்லாராகிய தில்லை மூவாயிரத்தாரு மந்நூலைக் குற்றங்கூறினுங் கூறுவர். அவர் கூறுவண்ண நூலை யவரைக் கேட்பித்து வருகவென கம்பநாட்டடிகளாங்குச் சென்று தாம்பாடிய ஸ்ரீராமாயணத்தைக் கேட்கவேணுமென்று தலைமைபெற்ற தீக்ஷிதர்க்குக் கூறவவர் தாமெல்லாருமொருங்குற்றன்று கேட்குதுமெனக்காலநீட்டியதைக் கம்பநாடரறிந்து, தில்லைநகர் திருச்சித்திரகூடந் தன்னுளெழுந்தருளியிராநின்ற கோவிந்தராசப்பெருமான் சந்நிதிசென்று வரங்கிடப்பேனென வரங்கிடந்தார். கிடந்தாரக் கவ்விறைவன் கனவிலெழுந்தருளி நாளையொருதீக்ஷிதன் மகனை விடத்தாற் சாவன். நீயவனைப் பிழைப்பித்து நின்குறை முடித்துக்கொள்கவென்றருளினன். அவ்விறைவனருளியவாறு பிறநாளொரு தீக்ஷிதன் மகனைக் கட்செவி கடித்திறக்கக் கம்பநாட்டடிகளாங்குச் சென்றறியாதார் போன்று தீக்ஷிதரைவினவி யுணர்ந்து ஸ்ரீகருடாழ்வானைத் தியானித்து நாகபாச படலத்திற் பாடிய, "பல்லாயிரத்தின்" "வாசங்கலந்த" என்ற திருவிருத்தங்களோடு,

அழியானைப் பள்ளியணையே யவனகலாத
வாழி வரையின் மணித்தாம்பே - யூழியான்
புள்ளை புரமெரித்த பொற்சிலையின் [illegible]
[illegible] யகலீர்.

மங்கை யொருபாகன மாமிலணியாரமே
பொங்கு கடலகடைந்த பொற்கயிறே - திங்களையும்
சீறியதன மேனூருந் தெய்வத் திருநாணே
எறியபணமே இறங்கு.

பாரைச் சுமந்த படவரவே பங்கயக்கண்
வீரனிடந்துறங்கு மெல்லணையே - ஈரமதிச்
செஞ்சடையான் பூணுந் திருவாபரணமே
நஞ்சுடையாய் தூரநட.

இவற்றையும் பாடுதலுமுன் கடித்தபாம்பே வந்துகடித்து விடத்தை வாங்க விறந்த மகனைப் பிழைப்பித்தருளித்தீக்கிதாக ளிராமாயணத்திற் செய்த சிலதடைகளுக்கு விடைகூறினர். கூறினார்க்குத் தீக்கிதர்கள் கம்பநாடரே நீர் தெய்வப்பிறப்பென்பதற் கிறந்த பிள்ளையைப் பிழைப்பித்ததினும் வேறு சான்று வேண்டுமோ வென்று துதித்து நீர் கூறுவதைக் கூறும். "நாடியபொருள்கைகூடும்" என்றபாட்டி னீர் கூறியபடி யெங்கட்கு நீறுபட்டன்றே யாககாசேனை யழிந்ததெனப் பொருண்மாற்றியுரைத்துச் சாற்றுக்கவி கொடுத்தனர். கம்பநாட்டாழ்வார் மீண்டுவர, திருவரங்கம் பெரியகோயிலார் திருநறுங்கொண்டைசைனர்களையும் மாவண்டூர் புலவனாகிய கருமானையும் புலமகளாகிய தஞ்சாவூர்தாசி யஞ்சனாக்ஷியையுமமது திருக்குமாரன்*அம்பிகாபதியையும் கேட்பியுமெனக் கம்பநாடரம்பிகாபதியொழிய ஏனை யோரிடஞ் சென்றவர் கடாவிற்கு விடைகூறி யிவ்விதிகாசத்துட்டங்களுக் கேதேனுமாதாரமுண்டோ வென்றார்க்குண்டென முறையே.

வில்லாள ரானார்க் கெல்லாமேலவன விளிதலொடும்
செல்லாத விலங்கை வேந்துக்கராசெனக் களித்ததேவர்
எல்லாருந் துக்கிக்கி யேறிட வாராதபோது
கொல்லாத விரதத்தாரதங் கடவுளர் கூட்டமொத்தார்.

இருப்புக் கம்பியாக கிழைநுழை யூசிபொன்றியற்றி
விருப்பிற கோடிரால விலைகெணுந்தனைமயின் விட்டான்
கருப்புக்கார் மழைவண்ணவக கம்ந்திசைக் களிற்றின்
மருப்புக்கலிய தோளவன மீளரு மாயம.

* அம்பிகாவலன் எனறும் வழங்குப.

மெய்வரு போகமொக்க வுடனுண்டு விலையுங்கொள்ளும்
பையர வல்குலார்தம் முள்ளமும் பளிங்கும்போல
மையரி நெடுங்கணோக்கம் படுதலுங் கருகிவந்து
கைபுகிற் சிவந்துகாட்டுங் கந்துகம் பலவுங்கண்டார்.

இப்பாடல்களையெடுத்துக்காட்டிச் சாற்றுக்கவிபெற்றம்பிகாபதியை யழைத்த தவன பாலப்பருவத்துக்குரிய சிலபாட்டுக்களையெடுத்துக்காட்டிச் சாற்றுக்கவி பெற்றுவந்து ஸ்ரீமந்நாதமுனிகணியமித்தருளியவா றொருதிருமண்டப மெடுத்ததி லரங்கேற்றத் தொடங்கலும், நம்பெருமாள் இத்துணையும் நோக்கியிருந்த ருச்சகன்முகமாய நஞ்சடகோபனைப்பாடினையோவென் றருளக் கம்பநாட்டாழ்வா ரக்கணமே சடகோபரந்தாதியென்னு மாழ்வா ரந்தாதியைப் பாடினர். அதற்குச்செய்யுள்,

நஞ்சடகோபனைப் பாடினையோவென நம்பெருமாள்
விஞ்சியவாதரத் தாற்கேட்பக்கம்பர் விரைந்துரைத்த
செஞ்சொலந்தாதி கலித்துறை நூறுந் தெரியுமவண்ணம்
நெஞ்சடியேற்கருள் வேதந்தமிழ்செய்த நின்மலனே.

பின்னாக் கம்பநாட்டடிக ளரங்கேற்று கையினூற்றுக் கொருகவியில் சடையப்பிள்ளையைத் துதித்திருந்ததைக்கண்ட வைக்களத்தோராகிய ஸ்ரீவைஷ்ணவ ரிவ்விதிகாசத்தி னரனைத் துதிக்கலாமோ வென்றார். என்றார்க்குக் கம்பநாட்டடிகட் டமதுதிருக்குமார னம்பிகாபதிக்குத் திருமணநடந்தகாலைச் சடையப்பிள்ளைக்கிருக்க விடமின்றித் தாம்போரத்தில் வீற்றிருக்க வெனது மனையாளெங்களண்ணை வீற்றிருக்க விதுவோ விடமென்றாள். என்றுடக்குங்களண்ணலை வைக்குமிடத்தில் வைக்கின்றேனென்றேன். அல்லதூஉம், அவர் அடியேனுக்கு முலக்குக்கும் பேருபகாரரென்றார். என்றார்க்கு ஸ்ரீவைஷ்ணவர் நூற்றுக்கொன்று வேண்டா மாயிரத்துக்கொன்று வைத்துக்கொள்ளுமென்றார். என்றார்க்குக் கம்பநாடர் அடியேன் சடையப்பரை நூற்றிலொருவராய்க் கொண்டேன். தேவரீராயிரத்தி லொருவராயச் சாதித்தருளினீர் நன்றென்று மகிழ்ந் தாயிரத்துக் கொருகவி வீதம் வைத்தார். பின்ன ருயுத்தகாண்டத்தி லிரணியவதைப்படலத்தைப் படிக்கும்போது ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீமத் வான்மீகராமாயணத்தி லில்லாத விக்கதையை நீரெற்றுக்குப் பாடினீர். அதனை யொப்புவதெங்ஙனமென்று மறுத்த தழகிய சிங்கர் திருக்கதை

யாயினமையி னிங்கெழுந்தருளி யிராநின்ற மோட்டழகிய சிங்கர் திருவுளம்பற்றிச் சிரககம் பனஞ்செயவாரோ லொப்புககொளவேோமென்றார். எனவே ஸ்ரீமந்நாதமுனிக ளொன்றுங கூறு திருககக் கம்ப ரிராணியவதைப்படலத்தைப் படித்தலுமோட்டழகிய சிங்கர் சிரக்கம் பனஞ்செயதனர். அவைக கண்ணுள்ளோரெல்லா மதுநோககி வியந்துவகக வககமபநாட்டாழவார் முற்று மரஙகேற்றினார். அதற்குசசெய்யுள்.

எண்ணிய சகாதத மெணணூற றேழினமேற சடையனவாழ்வு
நணணியவெணணெய் நலலூர் தனனிலே கமபநாடன
பணணிய விராம காதை பங்குனி யதத நாளில
கணணிய வரஙகா முனனே கவியரங கேறறினனே.

முந்நூறறேழின்மே லென்றும் பாடம். ஸ்ரீமந்நாதமுனிகள் காலமிவாகாலமானமையினிப்பாடமே பொருந்தும.

அவைக களத்தாரெல்லாருங கம்பநாட்டடிகளின் றெயவத்தன்மையையு மவாசெயத நூலின் பெருமையையு நோக்கியவரைக் கம்பநாட்டாழ்வான் எனவுந் தெயவப்புலமைக கம்பநாட்டாழ்வாரெனவுங கவிச்சககிரவாத்தியெனவுந் துதித்தனர். அதற்குசசெயயுள்.

தராதலத்தி னுளள தமிழக்குறறமெலலாம்
அராவு மரமாயிற றனறே - இராவணனமேல
அமபுநாட் டாழவா னடிபணியு மாதித்தன ;
கமபநாட்டாழவானகவி.

வாழ்வாா திருவெணணெய நலலூர்சசடையபபன வாழுந்துபெற
றாழ்வாருயரப புலவோாகவிரு டானகல
போழ்வாா கதிரி னுதித்தத செயவபபுலமைக கம்பநாட்
டாழவாா பததைச சிந்திபபவாசகியாது மரியதனறே.

அமபிலே சிலையை நாட்டி யமராககன றமுத மீநத
தமபிரா னெனனத தானுந தமிழிலே தாலை நாடி
கமபநாடுடையவளளல கவிச்சககிர வர்த்தி பாரமேல
நமபுபா மாலை யாலே நரருககின றமுத மீந்தான.

ஸ்ரீமந்நாதமுனிகள் போர வுகந்தருளி நம்பெருமா டிருமஞ்சனங் கண்டருளச்செயது ஸ்ரீகோசததைத் திருவடிகளிற் சமாப்பித்துக் கமபநாட்டாழ்வாருக்குச் சேவை செயதுவைதது தீர்த்தப்பிரசாதங் திருமாலைத் திருப்பரிவட்டஞ் சடாரி

கஜேச சாதிக்க வருளினார். கம்பநாட்டாழ்வார் பிரணவாகா
ரமான விமானத்தை வலம்வந்து பிரணவப்பொருளாகியசிர
ங்கநாதனையுஞ் சிரங்கநாயகியாரையுஞ் சேவித்து ஸ்ரீமந்நாத
முனிக ளியமனப்படி வீடுபேற்றிற்கு நிமித்தமாகிய தளிகைப்
பிரசாதமுஞ் சுவீகரித்து தந்நியனானேனென்று மகிழ்ந்து
ஸ்ரீமந்நாதமுனிகண் முதலியோர்க்குத் தண்டன சமர்ப்பித்து
நியமனம்பெற்றுத் திருவெண்ணெய்நல்லூர்வந்து கோயிலி
னிகழ்ந்ததையெல்லாஞ் சடையப்பிள்ளைக குணர்த்திச் சோழ
னவேண்டுகோளுக் கிணங்கி யவனவைக்கண்ணே பலபுவியரசா
கவியரசாநாபபண கவிசசக்கிரவர்த்தியார் வீற்றிருந்து ஸ்ரீரா
மாயணத்தைப பிரசஙகஞ்செய்து, யானை, குதிரை, ஒட்டகம,
தந்தச்சிவிகை, வெண்குடை. சாமரம், முதலிய சம்மானமுமெ
ல்லாருஞ சூழ நகர்வலமுஞ் செய்யப் பெற்றார பினனர்க் கம்ப
நாட்டாழவா ரயலூருக்குச் செல்லுங்கால் வழியிலவர்சேனையா
லழிந்த நிலனுககுக் கம்பர் போனவழி கண்டு கழிததெனற
நிறைகுறைககும வழககம் வழங்கிவந்தது.

கம்பநாட ரித்தகைய சிறப்புப்பெற்று வாழுநாளி லொரு
நாள், சநதனமுஞ் சண்பகமுந் தேமாவுந் திம்பலவும் ஆசினி
யும் அசோகும் கோங்கும் வேஙகையுங குரவமும விரிந்து,
நாகமுந் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும
மௌவலொடு மணஙகமழ்ந்து, பாதிரியும் பரவை ஞாழலும
பைஙகொனறையும பிணியவிழ்ந்த பொரிப்புனகும் புன்னைக
மும உருககொடு முகைசிறந்து, வண்டறைந்து, தேனார்ந்து,
வரிககுயில்கள இசைபாடத், தண்டெனறல் இடைவிராய பொ
ழிலதுநடுவண் குலோத்துஙகன் கம்பநாடடாழவாரோ டுலா
வித தோள குலுஙகச் சிரித்தான. சிரிககக கம்பா மருமானே
யெற்றுககு நகைததீரெனச் சோழ னம்மானே யெனனன்று
கூறுவேன. இத்தேயமு மிதிலுளள மன்பதையு மென்வயத
தனவன்றோ வென்று நினைத்தேன் சிரித்தேனென்றான. கம
பநாடர் மருமானே யவை யும்வயததனவே நீரெம்வயத்தினி
ரெனறார். சோழன சினமுட்கொண்டதைத் தோற்றுவியாது
பள்ளியறைசென்று பள்ளிகொண்டு தனது காதற் பாத்தையா
கிய பொன்னி யென்பாட்குக கமபநாட ருரைத்ததையுரைத்து

வருந்தினான். வருந்தினாற்கவளும்பெருமானே வருந்தாதிரவரை யென்னடிமையாக்கிப் போதருகின்றேனென்றிற்கண்ணே போதந்து வீதிவாயிற்செல்லுங் கம்பநாட்டாரை யழைப்பித்தாடையோரீஇ நின்று தன்னைப்புணரவேண்டினாள். வேண்டினாட்குக் கம்பரிதுசெய்யே னிதுவன்றி நீவேண்டுமெதுவுஞ் செய்வேனென்றார். என்றார்க்குப்பொன்னி, நீரெனக்கடிமையென்றெழுதிக்கொடுமென்றாள். என்றாட்குக் கம்பரெழுதிக்கொடுத்தார். பொன்னி யதைப்பெற்றுச்சோழன் பாற்கொடுக்க வவன்பெற்றுவந்து மறுநாட்டனவையேறி கம்பரைநோக்கி அம்மானே யிச்சீட்டிலிடப்பட்டுள்ளது உமதுகைச்சாத்தோ நீர் தாசிப்பொன்னிக்கடிமையோவெனக் கம்பநாடரதனைப்பார்த்து ஆம் நமது கைச்சாத்தே யாமவளுக்குக் கடிமையே யென்றார். என்றாரைச் சோழனோக்கி நீர் கவிச்சக்கிரவர்த்தி அல்லதூஉம் எம்மையு மும்மவையமாயுடையீர். நீரவட்குக் கடிமையாகலாமோ வென்று நகைத்தான். நகைத்தாற்குக் கம்பநாட்டடிகள்மருமானேயதன் பொருளையுணர்ந்தீரோ யிவ்வாறு சிரித்தற்கு. உலோகமாதாவாகிய பெரியபிராட்டியாருக் கடிமையென்று யாமெழுதிக்கொடுத்தா னீரேற்றுக்குச் சிரிக்கின்றீரென்று தாசிப்பொன்னிக் கடிமையென்றதற்குப் பொருளுமிலக்கணமுங்கூறியருளினார். அடிமைச்சீட்டைப் பார்த்துளமடங்காத வுவப்பெய்திய சோழன் அத்துணைத் துயரெய்தி,

போற்றினும்போற்றுவர்பொருள்கொடாவிடில்
தூற்றினுந்தூற்றுவர்சொன்னசொற்களை
மாற்றினுமாற்றுவர் வன்கணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடியராவரே.

என்று பாடி நீரென்னுடைய யகலுமென்றான், என்றானைநோக்கிக் கம்பநாட்டடிகள்,

காற்றிருப்பத்தூணைகொழிய காசினியை
யாழக்கடல்கொண்டொளித்ததோ — மேதினியில்
கொல்லிமலைத்தேனைச்சொரியுங்கொற்றவா நீமுனிந்தால்
இல்லையோவெமக்கிடம்.

மன்னவனு நீயோ வளநாடு முன்னதோ
உன்னையறிந்தோ தமிழை யோதினேம் — என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ வுண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு.

என்று பாடல்களைப்பாடித் தோட்கோப்புமின்றி யுடுத்திய வாடையோடு வழிச்சென் றெல்லார்க்குந் தெவிட்டாத செவியுணவுகொடுக்கு மிவர்க்குத் தெவிட்டும வாயுணவு கொடுப்பா ரின்மையான் வருந்தினார். ஓரூரில் வேலியென்பாட்டன்மனையிற் சுவரெடுப்ப வெடுப்பவதொரு பிரமராக்கதனால் விழுகின்றதாயிற்று. அதனையுணராத கம்பநாட ரவ்வூர்சார்ந்து வேலியை நோக்கிக் கூலிதரின் வேலைசெய்கின்றே னென்றவளேவியவாறு சுவற்றையெடுப்ப வதுபண்டை வழக்கம்போலாகக் கம்பநாட்டடிகள்,

மறங்கொண்ட திண்புயத்தான மாநகர்விட்டிங்குவந்தேன்
சொற்கொண்ட பாவின் சுவையறிவாரீங்கில்லையே
விற்கொண்ட பிறைநுதலாள் வேலிதருங் கூலி
நெற்கொண்டு போமளவுமில்லாய நெடுஞ்சுவரே.

எனப்பாடிச் சுவற்றைநிறுத்தி நெற்கூலியைக் கொண்டதை மாற்றிப்பசியைச்சிறிதுபோக்கியவ்வூரைக்கடந்து சென்றாவண் ணிறந்த வொருசெட்டியைநோக்கி வயிறுபசிக்கின்றேன் சிறிதவற்றம்மினென வவன் வம்மின்வம்மினுமக்கோவிக்காலைக்கடை திறந்தேனென்று மறுக்கவப்புறஞ்சென்றோரூரி லொருவேதியனில் லஞ்சேர்ந்து சிறிதுண்ணீர் வேண்டவவன்சேடமாகும் போதியெனப்போய்ப்பசியாற் சோர்ந்தோராலின்கீழமர்ந்திருந்தார். ஆங்கொரு வேளாளனுழுதலைச்செய்ய வவனில்லா ளவனுக்குக் கொணர்ந்தபழஞ் சோற்றையுண்ணப்புகுங்காற் கம்பநாடர் தம்பசியை யுணர்ந்ததனு மவனவர்க்கிட்டுண்டு யுழுதலைச் செய்தான். கம்பர் சிறிது சோர்வுதணந்திப் பாடலைப்பாடினார்.

செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே சேக்காரப்
பொட்டிமக்கள் வாசல்வழிப் போகோமே — முட்டிபுகும்
பார்ப்பாரகத்தையெட்டிப் பாரோமே யெந்நாளும்
காப்பாரே வேளாளர் காண்.

பாடலுமுழவனுழுத கொழுமுகந்தனம் பொதிந்த வொருகட்டத்திற் றண்டிக்கணிரென்றொலிக்க வவன் கடத்தையெடுத்தனு!

ஆ! இப்பெரியோர் பாடினமையாலன்றோ யித்தனம் நமக்குக் கிடைத்ததென மகிழ்ந்து கம்பநாட்டாழ்வாரை யெழுந்தருள வேண்டுமென்று வேண்டியில்லஞ் சார்ந்து தெய்வமெனப்போற்றி யாராதித்தான். ஆராதிக்கக் கம்பர் சின்னாளாங்கிருந்தவன்றானே கொடுக்க நேர்ந்த புதையற்றனம் பாதியை யவனுக்கே கொடுத்துத் தமக்கு வேண்டிய விரண்டு முண்டுபெற்றுப் பல வூர்களைக் கடந்து கொங்குநாடுசார்ந்து,

நீரெலாஞ்சேற்றுநாற்ற நிலமெலாங்கல்லுமுள்ளும்
ஊரெலாம்பட்டிதொட்டி யுண்பதோகம்பஞ்சோறு
பேரெலாம்பொம்மன்றிம்மன் பெண்களோநாயும்பேயும்
காருலாங்கொங்குநாட்டைக் கனவிலுநினைக்கொணாதே.

என்றிப்பாடலைப்பாடிச் சேரநாடுசென்றங்கொரு சீமானை யடுத்தையான் கம்பருக் கடப்பத்தொழிற் செய்து வந்தேனவர் சோழனைப் பிரிந்தகன்றமையான் வயிறுவளர்ப்பா னிங்குப் போந்தேன். நீரெனக்கோர் தொழிற் கற்பிக்கவேண்டுமென வச்சீமான் சேரமகாராசனிடங் கம்பநாடர் கூறி யாங்குக்கூறி யவனுக் கவரை யத்தொழிற்படுத்தினான்.

ஒருநாட் சேரன்றனதவைப்புலவர்களைக்கொண்டு ஸ்ரீமத் கம்பராமாயணத்தைப் பிரசங்கிக்கச்செய்துக்கேட்டான். கேட்க வுண்மைப்பொருளுரைக்குங்காற் கம்பநாடர் திருமுகமுவந்து மன்மைப்பொருளுரைக்குங்கால் வெறுத்துங் காட்டிற்று. அஃதுணர்ந்த சேர னடப்பக்காரரை நோக்கி நின்முகமுவந்தும் வெறுத்துங் காட்டக் காரணமென்னையென வடப்பக்காரர் வேந்தே! சிலவிடத்திலுரைக்கும் பொருளாசிரியர் கருத்தாகவுஞ் சிலவிடத்தி லுரைக்கும் பொருள் கருத்தன்மையாகவு மிருக்கின்றன வென்றார். என்றுரைநோக்கி யரசன், நீயவர்கருத்தை யாங்ஙன மறிகுவையென்ன வடப்பக்காரர் அரசே! கம்பர் பிரசங்கித்த காலைக்கேட்டிருக்கின்றேனென்ன வரசன் நீயும் பிரசங்கிக்கவல்லையோவென்றான். என்றற்கு அடப்பக்காரர் சிறிதுசெய்வேனென்று செய்தார் செய்யச் சேரன் மகிழ்ந் தடப்பக்காரரை மார்புறத்தழுவிப்போற்றினன் போற்ற வவனவைக் களத்துப் புலவர்முதலாயும் மடப்பக்காரரை யவையினின்று நீக்கு

வான சூழ்ந்தரசனுக்கு வினைபுரியு நாவிதனைக்கூயத்தாஞ்சூழ்ந்
தசூழ்ச்சியை யுணர்த்த வம்முழுமகனுடன்பட் டொருநா ளட
ப்பக்காரரைக்கண் டண்ணாவித்தனைநாளும் யாண்டுற்றாயென்று
தழுவிக்கொண்டழுதான, அழ அடப்பக்காரராகியகம்பருமசகு
னுறவையுணர்ந்து தம்பியென்றுதழுவி யவன கண்ணீரைத்து
டைத்துநடித்தவனோடில்லஞ்சேர்ந்தவனுண்ணவழைத்தகாலை
த்தம்பிநீயுநானும் பங்கிட்டுக்கொள்ளவில்லையேயதுவேயன்றிநீ
எத்தனைக்காலமரசனுக்குத் தொழிற்செய்தனையோ வத்துணைக
காலமியானுந்தொழிற்செய்யவேண்டுமன்றேயென்றார். நாவித
னஅண்ணா எனக்குத் தடையில்லையெனக்கம்பா நம்பியுனக்குத்
தடையில்லை யாயினு மரசனுக்குத் தடையுளதோ யிலதோவறி
வோம் வாவென்றழைத்து வரலு மடப்பக்காரரைநாவிதனுறவு
பாராட்டித் தழுவியதையு மவ்விருவரும வருவதையும வாயிற்
காப்போரா லுணர்ந்த வரசனவருந்திய மனத்தனாயடப்பக்கார
ரைநோக்கி நீநாவிதனோவெனவடப்பக்காரராமென்றுநடித்துக
கலைமகளாரைத்தியானித்தன்னையகினுதிட்டதுதிருவடியின சிலம்
பைத் தந்தருள்கவென்று வேண்டி யொருவருமறியாமற் பெற்ற
தையெடுத்தேந்தாலெங்கண்முன்னோர் நாண்முதலிருந்த சிலம்
பிரண்டி லென்னிடமுள்ளது இது. அவனிடமிருக்கு மதையும்
வாங்கி யெம்பெருமாட்டியாகிய நின்றிருத் தேவிக்காலி லணிக
வென்றான். அரசனுவிதனைப்பார்த்தச சிலம்பைக் கொடுவா
வென வவனஞ்சிப் புலவர் சூழ்ந்தத தனக் குரைத்ததை
யுந் தானதம் முடன்பட்டதையுங் கூறினன். கூற வரச
னடப்பக்காரரை நோக்கி நீயிச சிலம்பை யாங்ஙனம பெற்
றாயென அடப்பக்காரர் தோன்று ஞானபெற்றவாற்றைக் கூறு
கேனோ காட்டுகேனோ கூறுவதினுங் காட்டுதலே நன்றாமென்
றொருமண்டபத்தை யலங்காரஞ்செய்யச்சொல்லியதிலிருந்து
சரசுவதியந்தாதிப் பாடினார் பாடலு நாமகளோரறைக் காற
சிலம்போ டெல்லார் கண்ணுக்குந் தோன்றத் தோன்றி கம்பர
சிலம்பெங்கேயென அடப்பக்காரனுகிய கம்ப ராசசபையிலிரு
ந்ததை வாங்கி நீட்டச சிலம்பு தானே கலைமக டிருவடியிலேற
த்தேவிமறைந்தருளினாள்.

அரசனுஞ் சூழ்ச்சிபுரிந்த புலவரு மற்றையோரும் பெருவியப்பும் பேரானந்தமு முற்றுக் கம்பநாட்டாழ்வாரைத் துதித்து அறியாமற் பிழைத்ததைப் பொறுத்தருள்கவென்று வேண்டியருள்பெற்றனர். பின்னர்க்கம்பர் சேரனாலதிகம்போற்றப் பட்டாங்கிருந்ததனுஞ் சோழனவைக் களங்கம்பரில்லாமையாற் சந்திரனில்லாத வானம்போலாகத் தானு முயிர்பிரிந்த வுடல் போலப்பொலிவிழந்து வருந்திக் கம்பநாடர்சேரனிடமிருந்ததலை யறிந்தவரை யனுப்பவேண்டுமென்று சேரனுக்கு விண்ணப்பமுங் கம்பருக்குத் திருமுகமும் விடுப்பக் கம்பர் சேரனிடம் விடைபெற்று சோழனெதிர்கொண்டு வப்பவந்து சேரனவையி னிகழ்ந்ததை நிகழ்த்தி முன்னினுமதிகமாய்ச்சோழனாற் போற்றப்பட்டிருந்தார். இருக்க,

கம்பநாட்டடிகட் டிருக்குமாரன் அம்பிகாவதி யரசன்மகளை களவிற்புணர்தலை யுணர்ந்த சோழன் கம்பநாடருக்குரைக்க அவரென் மகனது செய்யானென்றார். என்றார்க்குச் சோழனதனைக் காட்டுவான் கம்பரையு மம்பிகாபதியையு முடனிருத்தி யுண்ணவச்சோழன்மகள் கலத்திற்பெய்வான கறிக்கலமெடுத்து வந்தாள். வர, அம்பிகாவதி யவளைப்பார்த்து,

இட்டவடி நோவவெடுத்தவடி கொப்புளிக்க
வட்டில்சுமந்து மருங்கசைய',

என்று பாடலுஞ் சோழன் கம்பநாடரைநோக்கினான். அவர்,

—கொட்டிக்

கிழங்கோ கிழங்கென்று கூறுவாளுவில
வழங்கோசை வையம்பெறும்.

என்று பாடலு நாமகள் கிழங்குவிற்பாள் போன்று கொட்டிக் கிழங்கோகிழங்கென்று தன்றிருவாயாலோதி வீதிவாய்ச் சென்றாள். சோழனதனைச் செவியேற்று பிறிதொன்றும் புகலானாகிப் பின்போர் குற்றத்தையுண்டாக்கி யம்பிகாவலனைக் கழுவேற்றிக் கொன்றான். கொல்லவதனைக் கற்றுவுற்றிருந்த கம்பநாடரொரு நாள் யானைக்கஞ்சி தந்திருமாளிகையுட்புகுந்த சோழன் மகளை மதயானைக்கஞ்சி கவியானையிடம்வந்தாலது விடுமோவென்று சீறிச் சுரிகையாற் குத்திக்கொன்றார். கொல்லப் புத்திரசோகமுற்ற சோழனதனைத்தோற்று வியாதொரு நாட்டானலங்காரம்பூ

ண்டு நின்று கம்பரைநோக்கி யம்மானே யான் யார்போலிருக்கின்றேனென்றான். என்றதற்கு கம்பநாடர் மருமானே ஸ்ரீராமபிரானைப்போ லிருக்கின்றீரென்றார் என்றுரைச் சோழன் நீரிராவணன்போ லிருக்கின்றீரென்றோ ரம்பாலெய்யக் கம்பநாட்டடிகள் திருமார்பி லவ்வம்பு தைத்தது. தைத்தலும்,

வில்லம்புசொல்லம்புமேதினியிலிரண்டுண்டு
வில்லம்பிற்சொல்லம்பேமேலதிகம்—வில்லம்பு
பட்டுருவிற்றென்னையிப்பாவேந்தாநின்குலத்தைச்
சுட்டுருவிற்றென்வாயிற்சொல்.

என்ற பாடலைப்பாடிச்சபித்துச் சோழனை நீங்கித் துறவுபூண்டு பாண்டியநாடுசார்ந்து நாட்டரசன்கோட்டையிற் சின்னாள்வசித்து திருநாட்டுக் கெழுந்தருளினர். அப்போதவர் மாணாக்கர் முதலியோரவர் விமலசரும விக்கிரகத்தை நீராட்டித் திருமண் காப்புச்சாத்தி யலங்கரித்து திப்பிய விமானத்திலேற்றிச் சங்கம்பேரி தண்ணுமை முதலிய வியங்களியம்பக் கவிச் சக்கிரவர்த்திகம்பநாட்டாழ்வார் திருநாட்டுக் கெழுந்தருளினரென்று திருச்சின்னமூதத் திருப்பள்ளிப்படுத்தி பரிபாலித் தாராதித்தனர். கம்பநாட்டாழ்வார் திருமேனியை திருப்பள்ளிப்படுத்திய விருந்தாவனத்தின் மண்ணையெடுத்து நாட்டரசன் கோட்டையினு மதனைச் சூழ்ந்த வூர்களினும் பிறக்குமாண் குழந்தைகளுக்குச் சிறிது கரைத்தூட்டுதலுமக் குழந்தைகள் கல்வியெய்துதலுமின்றுகாறு நடந்தேறிவருகின்றன. நாட்டரசன் கோட்டையை மறுத்துப் பிறிதோருரையுங் கூறுப.

கம்பர் வீட்டுக்கட்டுத்தறியும் பாடுமென்று சான்றோர் பாடினமையினவர் திருமேனியைத் திருப்பள்ளிப்படுத்திய விருந்தாவனத்தின் மண்ணையுண்ட பிள்ளை கல்வியெய்துத லரியதன்று. கம்பநாட்டாழ்வார் பரமபதஞ்சேர்ந்ததை யுணர்ந்த ஒட்டக்கூத்தர்,

இன்றுதற்சோ கம்பனிறந்தநாளப்புவியில்
வின்றுநகோவெனக்கவின்றயேறகுநாள்—இன்றைக்கோ
பூமடந்தைவாழ்வுபொறைமடந்தைவீற்றிருக்க
நாமடந்தைநூலிழந்தநாள்.

என்று பாடிவருந்தினா

தேவிற்சிறந்ததிருமாற்குத்தக்கதெய்வக்கவிஞன்
பாவிற்சிறந்ததிருவாய்மொழிபகர்பண்டிதனே
நாவிற்சிறந்தவம்மாற்குத்தக்கநாவலவன்
பூவிற்சிறந்தவாழ்வான்கம்பநாட்டுப்புலமையனே.

என்று துதிக்கப்படுவராயினவர் புகழைக்கூற வல்லார் யார். புலவனொருவனை யுயர்த்திக்கூறுங் காலுமிழித்துக் கூறுங் காலு நீ கம்பனோ கம்பனோவென்று கூறும்வழக்கமே யதற்குச் சான்றாயிற்று

சிலர் சரித்திரஞ் சிறிதாயிருக்கவு மதனை பெருக்கி யுரைத்துச் சரித்திரச்சுருக்கமென் றெழுதுவாரைப் போன்று யாமெழுதிலெம். கம்பநாட்டாழ்வார் விறகுதலையன் பாடிய பாட்டுக்கிலக்கணமும் பொருளுங் கூறியதையு மாயிரம்பொன்கொடுத்தோரைப் பாடி சோமனுக்குங் கதையையுஞ் சடசிகவிகள்பாடியதையுஞ் சேரனவர்க் கடப்பத்தொழிற் செய்ததையும்விரிவஞ்சியீண்டுக் கூறிலெம்.

கவிச்சக்கிரவர்த்தி, கம்பநாட்டாழ்வார் சரித்திரச்சுருக்கம்.

முற்றிற்று.

---

ஸ்ரீமத்கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

ஸ்ரீ

ஸ்ரீமங்கைபாகதேவாய நம:

# முகவுரை.

இஃது

## ம-ள-ள-ஸ்ரீ, பரங்கிப்பேட்டை இலக்குமணபிள்ளை அவர்களால் செய்யப்பட்டது

ஸ்ரீமத்கம்பராமாயண முழுதற்கு முரைசெய்யாம லதிலுள்ள வருங்கவிகளுக்குமாத்திரம் மூப்பனாரவர்கள் உரைசெய்திருந்தலால் இதற்கு ஸ்ரீமத்கம்பராமாயண அருங்கவி விளக்கம் எனத் திருநாமமிடப்பட்டது. இதிலெடுக்கப்பட்டுள்ள திருவிருத்தங்களைப்போன்ற வின்னுமிருநூறு கடின திருவிருத்தங்களு மியுத்தகாண்டத்தி லெடுக்கப்படலாம் அவை யெதனாலெடுக்கப்படாவாயினவெனிற் பெரியபுராணத்திற் கடினமாயுள்ள விருநூறுசெய்யுட்களுக்கு மிவ்வாறே யுரைசெய்யவேண்டுமென்று நங்கருத்திலிருந்தமையா லவற்றையுஞ் சேர்ப்பிற் பெருகுமென்றஞ்சிப் புத்தகத்தை முடித்துவிட்டமையானும் பெரியபுராணத்தின் முன்னமே யாயிரம் பாட்டுகளுக்கு மிதுபோது திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணத்திற்கு முரைசெய்யப்பட்டிருப்பதாய்த் தெரியவந்தமையானு மற்றுமுன்புள்ள புராணங்களிலதிக கடினபாட்டுக்களில்லாமையானு மவ்விருநூற்றுப் பாட்டுக்களு மெடுக்கப்படாவாயின.

கண்ணுற்றித்த லருமையன் றென்றுன்னி யிவ்வுரைகாரர் விடுத்திருக்கின்ற துதிகவிகளுக்கு மெடுத்திருக்கின்ற சில துதிகவிகளுக்குஞ் சம்பிரதாயத்தோ டுண்மைப் பொருளுணரவேண்டி னுபயவேதாந்தம் வல்லாரை வினவி யுணர்ந்து புலமையாற் பாடிலமைத்துக்கொள்க.

இவ்வுரைகாரருக் காசிரியராகிய மகாவித்துவத்ஜன சேகரர் திரிசிரபுரம் கோவிந்தபிள்ளையவர்கள் நாகபாசபடலத்திலிருப்பத்து நான்கு திருவிருத்தங்களுக் கருளிச்செய்த பதப்பதவுரை யவர்களனுமதிபெற்றிங்கு பதிக்கப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீமத் கம்பராமாயணத்திற் கிலக்கணந் தொல்காப்பியமென்பதைச் சான்றோருரையானன்றி யிவ்வுரையானு முணர்க. எனவே, தொல்காபபிய முணர்ந்தோர்க்கே சிலபாட்டுக்களினுரை புலப்படுமென்பது.

இவ்வுரைகாரருக கையமின்றிப் பொருளாகாத விதனடியிற்குறித்த (௬) திருவிருத்தங்களின் றலையில் * இவ்வடையாளம் போடப்பட்டிருக்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| கவந்தன்படலம் | ... | ... | ௪௬ |
| பம்பைப்படலம் | ... | ... | ௧. |
| இரணியன்வதைப்படலம | ... | ... | ௬௯. |
| ,, | ... | ... | ௭0. |
| விபீட்ணனடைக்கலப்படலம் | ... | ... | ௮௧. |
| களியாட்டுப்படலம | ... | ... | ௧௨. |

திருச்சிற்றம்பலம்.

# யாழ்ப்பாணம்.

## ஸ்ரீமத், சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் செய்த

நேரிசைவெண்பா.

கம்பரா மாயணத்தினை சட்டுரைக்கற் றெட்டுளப்பை
இம்பரா ரார வினிதளித்தான் - கும்ப
முனியேய் துரைசாமி மூப்பனார் தென்சொற்
சுனையேய் கவித்தலத்தான் சூழ்ந்து.

---

ஸ்ரீராமஜயம்.

கவித்தலம் கல்விச்சாலைத் தமிழ்ப்புலவர்

## மு. வை. ஐயாத்துரை ஐயரவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பொன்னிறப்பொலியுந் தூமணிபோற் புகழ்நிறப்பொலியுந் துரைசாமி
தன்னிறப்பொலியும்புலமையினற் சாலப்பொலியுந்தீஞ்சுவையிற்
கனலித்தமிழாலிராமகதை கம்பநாடன் தெள்ளமுதிற்
பன்னிப்பருகஆரியவைக்குப் பகர்ந்தானுரைதான்பாரீரே.

---

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மகாவித்வஜ்ஜன சேகரர்

திரிசிரபுரம்.

வி. கோவிந்தபிள்ளை அவர்கள் குமாரரும்

பெங்களூர் செண்ட்ரல் காலேஜ் தமிழ்ப்புலவரும்

ஆகிய

# நாராயணசாமிபிள்ளை அவர்கள்

இயற்றிய

நிலைமண்டில ஆசிரியப்பா.

பொன்மலி தாமரைப் பொன்னெடு மாக்கலைப்
பின்மலி செல்வ மன்விர வுற்றும்
அன்னம் படுபொழில் வண்ணம் படுபண்ணைக்
கன்னற் காரேற் றினவளந் தழீஇய
பொன்னிக் கரைக்கண் மன்னியு மொன்னலா
துன்னரு மிடற்றோ டென்னலமும் பெட்
ருஞ்சோற் றுடு ஞறுமேனை றும்
கறுஞ்சோ றுடவு பெருஞ்சத்திர முதல
பணனோ னகமும் மன்றின்று
நன்ஞெலா முக்க கணைஞய நிலவியும்
பரநிலை யந்தி லிறுதியநிலை கொண்டும்
ஒருபெருந் தனியாய் யுறுவது மான
கவித்தல நகரான கவித்தலை வனேன்
கவித்தல முறவிலா புவித்தல முண்டமால
தன்னடிப் பூத்த பொன்னுளத் தன்பன
கன்னியரு வகக்கு நன்னிற முடையான
முத்தைய வேந்தல புத்திர சிகாமணி
தத்துவ மயாவும் பொத்தறத் தெரிந்தோன
எந்தைபால விருவி வந்தகா மகூறும
சிந்தையா மபிறகூறு நதெரிவி தரனன
இலக்கண விதிபல விலக்கியப் பணிதன
சொலக்கணச் சுவைக்கண் ணிலக்குடை யானவெவ
பதாபபா மசசதா மாணவத்தில்
விதுவென்த தோன்றித் துதிபெறு தோன்றல

எற்பொருமெளியோர்க கற்பறவீயும்
கற்பககரத்தன மறபொருபுயததன
அரைசாமிககோன உரைசாமிககோன்
துரைசாமிபபெயா பரசுநாவலவன
மாணுறுமயோததி மாநகாமான்மியம்
ஜானகிபரிணயந் தூஙறுஙசஙகா
யாததிரைப்பரபாவ மேத்துறுமமச
சநதேசமபிர சன்னராகவம
பாரதசசுருககம் சீருறுகயாமான
மியமிவைதமிழா லியற்றிய துஙகன
வாழவாரகம்பநாட் டாழ்வாரதெயவக
சவிச்சகரவாததியார் புவிச்சகரவர்ததிகள
யாவருமபோற்ற நாவருசீர்த்தியா.
பலலலஙகார முளளுறவருளிய
இராமாயணமா மிராமாமதிமுக
ஜநகநநதனி யனகவைதேகி
நாகவணையரி யாகமேயணைதரு
தேவிசிறையின் மாவிய வுறைக்கும்
காவியததஙகங கேவியனபுதைபொருட்
சூததிரபபுரியால் யாததபாததொகைகளை
யவிழததுரையாகக குவித்துப்பொருநத
எழுதியெழுதா வெழுத்திலியைவித்
தெமமனோமயகக விமமநோயகறறி
இசையுடமபவனி மிசைவளாதரவே
நாட்டினனகைமமாறுறறலெனமாதோ.

ஸ்ரீ

ஸ்ரீமத்வரவரமுநயே நம:

# விலக்ஷணகவி.

## புதுவை ஏ. வே. இராமாநுஜநாவலரவர்கள்

### அருளிச்செய்த

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

கம்பர்கவியாம்பாற்குரவைக்கண்ணுவென்னுங்கன்றூட்டி
நம்பர்கவியாந்தொல்காப்பியக்கைமதிநற்சுதைவாங்கி
இம்பர்கவிகட்கிட்டகவித்தலநந்துரைசாமிக்கவிகளும்
உம்பர்கவிகட்கிட்டகவிகளுமெனவாசியுள்கவிகாள். (க)

பலவாகுறியமுங்கெடியகோவிந்தப்பேர்பகரவந்த
புலவாசிகரப்பெருமானபாறுபயின்றபெருஞ்சீர்ப்புலமையினல
தலைவனசீமானெனறுகண்டோர்தாதருயிரைநதெனறுணாநதீ
கலைசொற்பொருளைநனுநதெளிநதீாகம்பனகவிபபொனகாணீரோ. (உ)

செல்விமகளுக்கிடுதிருவுநதிருமாற்கடியனுநதிருவும
கல்விமகளுக்கிடுதிருவுங்கம்பன்கவியாக்கிடுதிருவும
அல்லியருட்சேர்க்கிடுதிருவுமனுட்டானமமாமததிருவும
எல்லிமணிபபொற்றுரைகவிததலததுத்துரைகடேயிருபபாமால. (௩)

அருளசெயகவியாழிக்குரிசிலாறறிராமாயணக்கவிக்குப
பொருளசெயபொய்யாமொழிபபுலவாபுகனறபொருளுமபுவியிலினி
வருமாண்புலவாவரைபேபாருளும்வளஞ்சூழகவிமாததலததுரைசெய
உரையுமிடறெனறுக்கிடக்கினுவன்மீயுரமயாருரைக்கிறபார். (௪)

எழுசீாககழிநெடிலாசிரியவிருததம.

சேததிரச்செவியானிங்குயிாதிலலையந்தணனுயிாபபச்செய்கம்பன
சூததிரப்பொருளைததருவியேததாததருட்கவித்தலததுரைசாமி
கோத்திரமகணமீச்செறிநசையாஙகனுளவெனவமலன்கோணிருதன
காததிரமுழுதுமுழுதுயிரமுதகலசங்கணடுததனைதககடுக்கும. (௫)

சென்னைச

சருவகலாசாலைத தமிழததலைமைப புலமைநடாததிய

## கோ. இராஜகோபாலபிள்ளையவர்கள்

### இயற்றிய

எணசீர்க்கழிநெடில ஆசிரியவிருத்தம.

கடலுலகலகக்கலர்கதிரிறசேறறுறஞ்செய்த கம்பநாட்டாழவாாதருசெய்யுளாழும, பட்சாலககமநதரணிபரிவினேக்கிபாகிவிராமாயணத்தையுலாபணிதது, மடலநாலவழிசெநதேததேறலபாயூவளர்செநநெற்பைங்கூழ்சூழகவிததலததில, கடனுகொணடுநீதிவழாதுரைசாமிப் போகாவலவன்றநதநூதககைமமாரினறே.

ஸ்ரீ

# பாலகாண்டம் பிழைதிருத்தல்.

| பககம். | வரி. | பிழை. | திருததல. |
|---|---|---|---|
| ௪ | ௩௨ | ” | ஏனவிவா. |
| ௧௫ | ௫ | ாண்டுகுடிகளை | ... ஈணடுககுடிகளே. |
| ௫ | ௩0 | வழகருபறறி | . வழககுபபறறி. |
| ௧௧ | ௭ | யாபபுசெயதவரே | . யாபபுச்செயதவரே. |
| ௧௭ | ௧௫ | வெனுங | ... வெனுங. |
| ௨௧ | ௩0 | ருணாதின | ... தணாதன. |
| ௩௧ | ௧௩ | பென | ... பொன |
| ௩௨ | ௧௭ | வினங்கு | ... விளஙகு. |
| ௪0 | ௨௬ | செள | செள. |
| ௪௮ | ௧௫ | உடைடோம | . உடையோம |
| ௫௪ | ௮ | பெணணடு | ... பெணணொடு. |
| ௬௧ | ௫ | வைறுதது | ... வெறுத்து. |
| ௬௨ | ௨௧ | பணி | மணி. |
| ௬௩ | ௧ | விரி | .. வரி. |
| ௭௭ | ௧௧ | கிலே | .. சிலே. |
| ௭௮ | ௩0 | ஆணே | .... ஆணே. |
| ௭௯ | ௧௨ | யின | . யிள. |
| ௮௧ | ௧௪ | நுகில | துகில். |
| ” | ௨௨ | துணே | ... துணே. |
| ௮௨ | ௧௭ | கிலர் | .. சிலா. |
| ௮௪ | ௨௩ | படிபபுக்கால | ... படிபுககால. |
| ” | ௨௪ | பககா | ... புககா. |
| ௮௬ | ௨௩ | னயெனுந | ... யெனனுந. |
| ௮௭ | ௧௮ | ஊஎனும | .. உளஎனும. |
| ௮௯ | ௧௬ | தோறு | ... டோறு. |
| ” | ௨௮ | ாககாா | ... நககாா. |
| ௯0 | ௧ | கடக | .. கடகக. |
| ” | ௧௧ | கெந | ... கொ. |
| ” | ௩௩ | யொதத | ... யொததூ. |
| ௯௧ | ௧0 | மாசுணப் | ... மாசுணம். |
| ௯௩ | ௩௨ | சொக்கா | .. செக்கா. |
| ௯௬ | ௨௫ | ளொருங் | ... ளொருககு. |
| ” | ௩௧ | மனேவிய | ... மனேவியா. |
| ௯௭ | ௨ | தாழான | ... தாழாள. |
| ” | ௩0 | விடு | ... விடு. |

மகாமகோபாத்தியாய

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| கஅ | ரு | கக்கண்டான் .. | கண்டான் |
| க0௨ | ச | சரித்தது | கரிந்தது. |
| க0௩ | உஅ | சோகினருள .. | சோகினருள். |
| ,, | உக | களவிற்குரியளாய | களவிற்கு முரியளாய. |
| க0ரு | கஎ | விளஙகும | விளங்கும். |
| ககo | க௨ | விழவினை ... | வழிவினை. |
| ககக | சரு | எறருள .. | எனருள். |
| கக௨ | உ௬ | சீனா ... | தனை. |

கஎ-வது பக்கம் உச-வது பாட்டுரையில் இந்நூல் முன்னாகக் குறும் என்பதையும் ௭0ச-வது பக்கம் ரு0-வது பாட்டுரையில் கனாவாவதுமாயப் புணர்ச்சி என்பதையும் நீக்கி க0௪-வது பாட்டுரையிலிருக்கின்ற மாயப்புணர்ச்சி யென்மனார் புலவர்.”† என்பதற்குமுன் என்பதையும் † “கனவெனப்படுவது யாதெனின் என்ற பாட்டையும் சேர்த்து கஎ-வது பக்கம் உ௯-வது பாட்டுரையிற் கொள்க.




நனருக குருவாழ்க குருவே துணை

ஸ்ரீமத்கமபநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்

# தனியன்கள்.

—:o:—

நேரிசைவெண்பா.

க. தராதலத்தினுள்ளதமிழ்கருறறமெலலாம
அராவுமரமாயிற்றனறே - இராவணனைமேல
அம்புராட்டாழவானடிபணியுமாதிததன
கம்பநாட்டாழ்வான்கவி. (க)

கலிததுறை.

உ. வாழ்வாதிருவெணணெயநலலூர்சசடையபபனவாழ்ததுபெற
தாழ்வாருயரபபுலவோரகவிருளதானகலப
போழவாாகதிரினுதிததெய்வப்புலமைககம்பநாட
டாழ்வார்பததனைசசிநதிப்பவாக்கியாதுமரியதனறே. (உ)

விருத்தங்கள்.

ங. அம்பராவணிசடையரனயனமுதல்
உம்பரானமுனிவராலயோகராலுயர்
இம்பராற்பிணிககருமிராமவேழஞ்சோ
கமபராம்புலவரைககருததிருததுவாம். (ங)

இ-ள். இராமவேழம் சோ - ஸ்ரீராமபிரானென்னும் யானை வந்து சேர்தற்குரிய, கம்பர் ஆம்-கட்டுத்தறியை யொக்கின்றவராகிய, புலவரை - (இந்நூலாசிரியராகிய) பேரறிவுடையாரை, கருத்து இருத்துவாம் - எமது மனத்தின்கண் நிலைபெறுத்துவாம். (ங)

கம்பு என்பது கம்பரெனப்போலியாயிற்று.

வேறு.

ச. சம்பநாடனனுமைசெவிசாற்றுபூங்
கொம்பநாடன்கொழுனனிராமப்போப
பம்பநாடழைக்குங்கதைபாச்செய்த
கம்பநாடனகழற்றலையிற்கொள்வாம். (ச)

இ-ள். சம்பு அளுளுள தன் உமை செவிசாற்றும் - சிவன் முற்காலத்தில் தனது தேவியாகிய பார்வதியின் செவியி லுபதேசித்த, (ச)

வேறு.

ரு. நாரணனவிளையாட்டெலலாமநாரதமுனிவனகூற
ஆரணக்கவிதைசெயதானறிந்தவானமீகியெனபான
சீரணிசோழநாடடுத்திருவழுந்தூருளவாழவோன
காரணகொடையானகமபனதமிழினாறகவிசெயதானே. (ரு)

இ-ள். ஆரணக்கவிதைசெய்தான் - வேதத்தோடொத்த கவிதையைச் செய்தான். (ரு)

சு. அமபிலேசிலையைநாட்டியமராககனறமுதமீயநத
தமபிரானெனனததானுநதமிழிலேதாலைநாட்டி
கமபநாடுடையவளளலகவிசசககிரவாததிபாாமேல
நமபுபாமாலையாலேநாருககினறமுதமீயநதான. (சு)

எ. எண்ணியசகாததமெண்ணூறறேழினமேறசடையனவாழ்வு
நண்ணியவெணணெய்நல்லூர்தன்னிலேகம்பநாடன
பண்ணியவிராமகாதைபஙகுனியததநாளில்
கண்ணியவரங்கர்முனனேகவியரஙகேறறினானே. (எ)

இ-ள். கண்ணிய அரங்கர்முன - யாவராலுங் தியானிக்கப் பட்ட ரஙகநாதர் சந்நிதியில்,

மூநநூறறேழினமேல எனறும பாடம.

வேறு.

அ. இமபாநாடடிற்செல்வமெலலாமெய்தியரசாணடிருநதாலும
உமபர்நாட்டிறகறபகக்காவோஙகுநீழலிருநதாலும்
செம்பொனமேருவனையபுயத்திறலசேரிராமனறிருக்கதையில
கமபநாடனகவிதையிறபோறகற்றோாக்கிதயஙகளியாதே. (அ)

வேறு.

க. கழுநதராயுனகழலபணியாதவர்சிர்மணிமுடிமீதே
அழுநதயாளிகளதொடுசிலைராகவனபிரவைகவிநாதன
விழுநதநாயிறுவெழுவதனமுனமறைவேதியருடனுராய்ந
தெழுதநாயிறுவிழுவதனமுனகவிபாடினதெருளூரே. (க)

## ப ய ன்.

௧௦. நாடியபொருள்கைகூடுஞ்ஞானமும்புகழுமுண்டாம
வீடியல்வழியதாக்கும்வேரியங்கமலைநோக்கும்
நீடியவரக்கர்சேனைநீறுபட்டழியவாகை
சூடியசிலையிராமனதோள்வலிகூறுவோர்க்கே. (௧)

வேறு.

௧௧. நன்மையுஞ்செல்வமுமநாளுமநல்குமே
தின்மையும்பாவமுஞ்சிதைந்துதேயுமே
சென்மமுமரணமுமின்றித்தீருமே
இம்மையேராமவென்றிரண்டெழுத்தினால். (௨)

௧௨. வடகலைதென்கலைவடுகுகன்னடம்
இடமுளபாடையாதொன்றினாயினும்
திடமுளரகுகுலராமன்றன்கதை
அடைவுடன்சேட்பவரமரராவரே. (௩)

௧௩. வென்றிசேரிலங்கையானைவென்றமாலவீரமோத
நின்றராமாயணத்திலநிகழ்ந்திடுகதைகடம்மில்
ஒன்றினைபடித்தோர்தாமுமுரைத்திடக்கேட்டோர்தாமும்
நன்றிதுவென்றோர்தாமும்நரகமசெய்திடாரே. (௪)

௧௪. இராகவன்கதையிலொருகவிதன்னிலேகபாதத்தினையுரைப்போர்
பராவருமலரோனுலகினிலவனும்பின்முறைவழுத்தவீற்றிருந்து [ரு
புராதனமறையுமண்டர் பொற்பதமும்பொன்றுநாளதனினுமபொன்றா
அரா வணையமலனுலகெனும்பரமபதத்தினையணுகுவரன்றே. (௫)

வேறு.

௧௫. இறுவரம்பிலிராமவென்றோரும்பர்
நிறுவரெனபதுநிச்சயமாதலான்
மறுவின்மாக்கதைகேட்பவர்வைகுந்தம
பெறுவரெனபதுபேசவும்வேண்டுமோ. (௬)

௧௬. அன்னதானமகிலநற்றானங்கள்
கன்னிதானங்கபிலையின்றானமே
சொன்னதானபலமெனச்சொல்லுவர்
மன்னிராமகதைமறவாதவர்க்கே. (௭)

வேறு.

௧௭. ஆதியரியோநமோநாராயணர்திருக்கதைஅறிந்தனுதினம்பரவுவோர்
நீதியனுபோகநெறியினாறுநெடுநாளதினிறந்துசெகத்திடைமுழுதுக் [ல்
காதிபர்களாயரசுசெய்துளதினைத்ததுகிடைத்தருள்பொருந்தமுடிவி
சோதிவடிவாயழிவில்முத்திபெறுவாரெனவுரைத்தகருதித்தொகைக
[ளே. (௮)

### வேறு.

கஅ. இனையநற்காதைமுற்றுமெழுதினோவியாதோர்கற்றோர்
அனையதுதனைச்சொலவோர்க்கருமபொருள்கொடுத்துக்கேட்போ
கனைகடற்புடவிமீதேகாவலர்க்கரசாய்வாழ்ந்து [ர
வினையமதறுத்துமேலாம்விண்ணவனபதத்திற்சேர்வார். (௧)

### ஆழ்வார்துதி.

ஒருகைநீண்டதயரதன்றனறரும்
இருகைவேழத்திராகவன்றன்கதை
இருகைவேலைத்தரைமிசைச்செப்பிட
ஒருகைநாதனகுரைசழல்காப்பதே. (௧)

### அனுமானதுதி.

அஞ்சிலேயொன்றுபெற்றனஞ்சிலேயொன்றைத்தாவி
அஞ்சிலேயொன்றாறாகவாரியற்காகவேகி
அஞ்சிலேயொன்றுபெற்றவணங்கைக்கண்டயலாரூரில்
அஞ்சிலேயொன்றைவைத்தானவனெம்மையளித்துக்காப்பான். (௨)

### சரஸவதிதுதி.

புத்தகம்படிகமாலைகுண்டிகைபொருள்சேர்ஞான
வித்தகந்தரித்தசெங்கைவிமலையையமலைதனை
மொய்த்தகொந்தளகபாரமுகின்முலைத்தவளமேனி
மைத்தடங்கருங்கட்செவ்வாயணங்கினைவணங்கல்செய்வாம். (௩)




நன்றாக குருவாழ்க குருவே துணை.

ஸ்ரீ

ஸர்வம்விஷ்ணுமயம்ஜகத்.

ஸ்ரீமத்கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

# ஸ்ரீமத்கம்பராமாயண

## அருங்கவிவிளக்கம்.

## முதலாவது. பாலகாண்டம்.

*இது ஸ்ரீராமபிரானது பால்யபருவத்தின் சரித்திரத்தை யுணர்த்து கின்றமையின் அப்பெயர்த்தாயிற்று.*

### க-வது. சிறப்புப்பாயிரம்.

கவிதான் எடுத்துக்கொண்ட காவியம் இனிது முடிதற் பொருட்டும் அது நின்று நிலவுதல்வேண்டியும் வழிபடுகடவுளை யாதல் ஏற்புடைக்கடவுளை யாதல் வாழ்த்துதல் முறைமையாக லின், ஈண்டு வழிபடுகடவுளும் ஏற்புடைக்கடவுளும் ஒருவனே யாகலால், இவ்வாசிரியரும் அவ்விறைவனை வாழ்த்துவான் றொ டங்கி அவனது சொரூபம் ஐந்தையும் இத்திருவிருத்தத்தாற் கூறுகின்றார்.

க. உலகமயாவையுந்தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலுநீக்கலுநீங்கலா
அலகிலாவிளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கேசரணாங்களே. (க)

இ-ள். உலகம் யாவையும் தாம் - உலகம் யாவும் தாமே யாகி, உள ஆக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா அலகு

இலா விளையாட்டு உடையார் அவர் தலைவர் - படைத்தலும், காத்தலும், அழித்தலும், நீங்கலாக அளவில்லாத லீலைகளுடையராகிய அவரே எல்லா உலகங்களுக்கும் முதல்வர், அன்னவர்க்கே நாங்கள் சரண் - அத்தன்மையராகிய இறைவரையே அடியோங்கள் புகலடைந்தோம். எ - று.

ஐகாரமசாரியை. ஏகாரம் முன்னையது புகலிடம் பிறிதின்மை யுணர்த்தி நின்றது. பின்னையது அசை. அன்னவர்க்கென பது வேற்றுமை மயக்கு. உளவாக்கல் நிலைபெறுத்தல நீக்கல் என்பனவற்றையே அலகிலா விளையாட்டாகக் கொண்டு பொருளுரைப்பர், அவ்விளையாட்டு மூன்றெனை முடிந்தமையின் அலகிலாவிளையாட்டு அதனின் வேறுதலறிக. (க)

உலகம்யாவையும் தாம் எனவே அந்தர்யாமித்துவமும, உளவாக்கலும நிலைபெறுததலும் நீக்கலும் எனவேவியூகமும், அலகிலாவிளையாட்டுடையார் எனவே விபவமும், தலைவர் எனவே பரத்துவமும், அன்னவர் என்வே அருச்சையும, போந்தன. பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அருச்சை, என்பதே முறையாயினும மாண்டுச்செய்யுளோகிப் பிறழவைத்தார். அவற்றுள் பரததுவம் - பரவாசுதேவனென்ற திருநாமத்தோடு நிரதிசய இனப வீட்டில் பரமானந்த சொரூபமாய்த்திகழ்ந்தருளவது. வியூகம்-சங்கர்ஷண பிரத்தியுமன அநிருத்தர்களைத் தோற்றுவித்து வாசுதேவனென்ற திருநாமத்தோடு பாற்கடலிற் பள்ளிகொண்டருள்வது. விபவம - ஸ்ரீராமகிருஷ்ணாதி திருவவதாரங்கள் செய்து துட்டரைத் தணடித்துச் சிட்டரைக்காத்தருள்வது. அந்தர்யா மிததுவம-சித்திலும அசித்திலும் எள்ளுக்குள் நெய்போலஉறைநதருள்வது. அருச்சை-திருப்பதிகளில்*"தமருகந்ததெவ்வுருவம்" என்றபடிநின்ற கிடந்த இருந்ததிருக்கோலங்களாக உறைந்தருள்வது. இவ்வைந்து சொரூபங்களுக்கும் சுருதிப்பிரமாணம் முதலிய பிரமாணங்களை வல்லார்வாயுணாக.

* தமருகநதவெவ்வுருவமவ்வுருவநதானே
தமருகந்தவெபபேரமறறெபபேர் - தமருகாத
தெவ்வண்ணஞ்சிந்திப்ப ரிமையாதிருப்பரேல்
அவ்வண்ணமாழியானும்.

இக்கருத்து விளக்கியவன்றே தாம என்றேதி முத்தொழிலையும் பிறலீலையையும் பிரிதது அவனொனறும அன்னவனொன்றும சுட்டினுர்.

இனியோருனை - உலக மெல்லாவற்றையும தாமேபடைத்தலும காததலும அழிததலும நீஙகலாகக கணக்கிறந்த திருவிளையாட்டுடையராகிய அவரே எலலாவுலகங்கட்கும் முதல்வா. அததனமையராகிய ஆதி பகவனையே அடியோஙகள் புகலடைந்தோம.

*எலலாககுந தலைவனுகிய பரவாசுதேவனையும பாடத்தொடஙகிய விபவததைதயுமவணஙகாமல அருசசையையவணஙகியது என்னை எனபாாககுச சொலலியது.*

உ. சிறகுணததாதெரிவருநனனிலை
எறகுணததரிதெணணியமூனறனுள
முறகுணத்தவரேமுதலோரவா
நறகுணககடலாடுதனனறரோ (உ)

இ-ள். சிதகுணததா தெரிவு அரும நலநிலை எறகு உணர்த்த அரிது - ஞான குணததை யுடையோரும உணாதலருமையாகிய அப்பரவாசுதேவரது நலல நிலையை அறிநது கூற எனக்கு அரிது, எணணிய மூனறனுள் முனகுணததவரே முதலோா-சாததுவிகம, இராசதம, தாமதம, என்றெணணபபட்ட முககுணஙகளுள் சிறநததாகியமுதற் குணமுடையவரே ஏனை இரண்டு குண முடையோாக்கும முதலவராதலால், அவர் நல் குணககடல ஆடுதல் நனறு - கடபுலததிற்குத் தோனறும அவரது (திவ்விய மஙகள விககிரகததைச்சேவிதது) நல்லமஙகள குணஙகளாகிய கடலிலாடுதல் வீடுபேற்றிறகுரிய நிமித்தம் பலவறறினும் நனமையாம என - று.

ஆடுதல் குறுநுபவம் செயதல. உணர்தத என்னும் செய வென்னெச்சததகரம் தொகுத்தல. உயர்வு சிறப்புமமை தொக்கது. ஏகாரம்பிரிநிலை. (உ)

இதனுலம்முதலோரது திருநாமத்தைதக கூறுகினறுர.

ரு. ஆதியநதமரியெனயாவையும
ஓதினாலிலலனவுளளன
வேதமெனபனமெயநெறிநன்மையன்
பாதமல்லதுபறறிலர்பற்றிலார். (௩)

இ-ள். அலகு இல்லன உள்ளன வேதம் என்பன யாவையும் - அளவில்லாதனவாய் என்றும் உள்ளனவாகிய வேதமென்று சொல்லப்பட்ட எல்லா நூல்களையும், ஆதி அந்தம அரி என ஓதினார்-அரிஓம் என்று தொடங்கி அரிஓம் என்று முடித்தவர்களாகிய, பற்று இலார் - அகப்பற்றுப் புறப்பற்றற்றவர்கள், மெய்ந்நெறி நன்மையன் பாதம் அல்லது பற்றிலர் - மெய்ம்மார்க்கத்தை இனிய இருப்பாக வுடைய இறைவனது திருவடிகளல்லாதமற்றெப்பொருளையுந் தமக்குப் பற்றுக்கோடாகப் பற்றமாட்டார்கள். எ-று.

"பிறவிப்பெருங்கட லீந்துவர் நீந்தா-ரிறைவனடி சேராதார்." என்பவாகலின் வீட்டை விரும்பிய பற்றற்றவர் அவ்விறைவன் தாளைப் பற்றுவாரென்பது. (௩)

௪. நொய்தினொய்யசொனூற்கலுற்றேனெனை
வைதவைவினைமராமரமேழுந்தொளை
எய்தவெய்யதவற்கியமாக்கதை
செய்தசெய்தவன்சொன்னின்றதேயத்தே. (௫)

இ-ள். வைதவை வினை ஏழு மராமரம் தொளை எய்த-நிறைமொழி மாந்தர் சபித்த சாபமொழிபோல ஏழுமராமரங்களுந் தொளைபட, எய்தவற்கு எய்திய மாக்கதை - அம்பால் எய்த ஸ்ரீராமபிரானுக்கு உரித்தாகிய ஆதிகாவியத்தை, செய்த செய்தவன் சொல் நின்ற தேயத்து-இயற்றிய செய்து முடிந்த தவமுடையோனாகிய வான்மீகி பகவனது சொல்லாகிய இராமாயணம் நின்று நிலவும் இந்தேயத்தின் கண், நொய்தின் நொய்ய சொல் நூற்கல் உற்றேன் எனை - ஆலோசியாமல் விரைவாயப் புன்சொல்லால் இந்நூலைச் செய்யத் தொடங்கினேன் இஃதென்ன அறிவின்மை. எ - று.

என்னை என்பது என்னையெனத் தொகுத்தது. (௫)

௫. தேவபாடையினிக்கதைசெய்தவர்
மூவரானவர்தம்முளுமுந்திய
நாவினாருரையின்படிநான்றமிழ்ப்
பாவினாலிதுணர்த்தியபண்பரோ. (௭)

இ-ள். மூவரானவர் - வான்மீகனார், போதாயனர், சிவனார், சிவனை நீக்கி வசிட்டரைக் கூறுவாறுமுளர். அவர்செய்த

வாசிட்டமென்பது இராமசரிதையன்மையானும் அல்லதூஉம் அதனை ஒருசாராரன்றி எல்லாரும் ஒப்பாமையானும் அவரைக் கூறுதல் பொருந்தாது. சிவன்செய்த ராமாயணம் அத்தியாத்மகம். முந்தியநாவினோர் - வான்மீகனார் எ-று. (எ)

சு. துறையடுத்தவிருத்தத்தொகைக்கவிக்
குறையடுத்தசெவிகளுக்கோதில்யாழ்
நறையடுத்தவசுணநன்மாச்செவிப்
பறையடுத்ததுபோலுமென்பாவரோ (அ)

இ-ள். துறை அடுத்த விருத்தத்தொகைக் கவிக்கு உறை அடுத்த செவிகளுக்கு பலதுறைகளையுடைய விருத்தத்தொகையாகிய பாட்டுக்களுக்கு இடமாகப்பொருந்தியசான்றோர் செவிகளுக்கு, என்பா ஓதில்-என்னது பாட்டுக்களைச்சொல்லின், யாழ்நறை அடுத்த நல் அசுணமாச் செவிப்பறை அடுத்ததுபோலும்- கேட்டற்கினிய யாழொலியாகிய தேனையுண்ட நல்ல அசுணப் புள்ளின் செவிகளில் காது பிளத்தற்குரிய பறையொலிசார்ந்ததை யொக்குமென-று. (அ)

எ. நடையினின்றுயர்நாயகன்றோற்றத்தின்
இடைநிகழ்ந்தவிராமாவதாரப்பேர்
தொடைநிரம்பியதோமறுமாக்கதை
சடையன்வெண்ணெய்நல்லூர்வயிற்றந்ததே. (கக)

இ-ள். நடையில் நின்று உயர்நாயகன் தோற்றத்தில் - நல்லொழுக்கத்தினின்றுயர்ந்த இறைவனது பரசுராம தயரதராம பலராமாவதாரங்களுள், இடைநிகழ்ந்த இராமாவதாரப் பேர் தொடை நிரம்பிய தோம் அறுமாக்கதை - மத்தியில் நடந்ததாகிய அத்தயரத ராமாவதாரத்தைக் குறித்த பெரியதொடுத்தல் நிரம்பிய குற்றமற்ற பெருமைபொருந்திய இதிகாசம், சடையன் வெண்ணெய் நல்லூர்வயின் தந்தது-சடையப்பிள்ளையது வெண்ணெய் நல்லூரிலிருந்து செய்யப்பட்டது. எ-று.

சென்னைவாசிகளெல்லாரும் சடையப்பிள்ளையை சடையப்பமுதலியாரென்பர் அந்நகரவழக்குபற்றி. (கக)

## உ - வது. ஆற்றுப்படலம்.

# சரயுநதியைக்கூறும்படலம்.

அ. பம்பிமேகம்பரந்ததுபானுவால
நம்பன்மாதுலன்வெம்மைமையநண்ணினன
அம்பிலாட்டுதுமென்றகன்குன்றின்மேல
இம்பர்வாரியெழுந்ததுபோன்றதே. (௩)

இ-ள். நம்பன்மாதுலன் பானுவால வெம்மையை நண்ணினன அம்பில ஆட்டுதும என்று அகன்குன்றின்மேல் இம்பர்வாரி எழுந்தது போன்றது மேகம பம்பிபரந்தது - சிவனுக்கு மாமனாகிய இமவான சூரியனால வெப்பத்தை யடைந்தான, அதைத் தணித்தற் பொருட்டு நீராட்டுவோமென்று அகன்ற அவ்விமய மலையின்மேல இவ்வுலகத்துள்ள கடல எழுந்ததை யொத்ததாகி மேகங்கள நெருங்கிப பரவியது. எ-று. (௩)

க. புள்ளிமால்வரைபொன்னென்னநோக்கிவான
வெள்ளிவீழிடைவீழ்த்தெனத்தாரைகள
உள்ளியுள்ளவெல்லாமுவந்தீயுமவ
வள்ளியோரினவழங்கினமேகமே. (௪

இ-ள். புள்ளிமாலவரை பொன என நோக்கி-உலகில இலக்காயுள்ள பெரிய இமயமலை பொனனென்று நோக்க, வான வெள்ளி வீழ இடை வீழ்த்தது என - ஆகாயம வெள்ளிக கம்பிகளை அம்மலைமேல் வீழ்த்தது என்னுமாறு, உள்ளிஉள்ள எல்லாம் உவந்து ஈயும அவ்வள்ளியோரின-கரப்பது தமபழியென்று நினைத்துத் தமமிடத்துள்ள எல்லாவற்றையும மகிழ்ந்து கொடுக்கும அவ்வள்ளியோரைப் போல, மேகம் தாரைகளை வழங்கின - மேகங்கள் மழைத்தாரைகளைப் பெய்தன. எ-று.

நோக்கவென்னும வினையெச்சம நோக்கியெனத்திரிந்தது.

மலைதான பொன்னிறமாயிருக்கவும வெள்ளிவிழுதுகளைப் பொன்னென்ன நோக்க வென்றது-கடுங்கோடையில்பெய்யுமழையை சுவர்ண வருஷமென்று கூறும் வழக்குபற்றி. புள்ளிமால் வரையென்றது - இமசேது பரியந்தமென்று இலக்குக் கூறுதல் பற்றி. (௪)

க௦. தலையுமாகமுந்தாளுந்தழீஇயதன்
நிலைநிலாதிறை * நின்றதுபோலவே
மலையினுள்ளவெலாங்கொண்டுமண்டலால்
விலையின்மாதரையொத்ததவ்வெள்ளமே. (௯)

இ-ள். அவ்வெள்ளம் தலையும் ஆகமும் தாளும் தழீஇ அதன் நிலை நிலாது இறை நின்றதுபோல மலையில் உள்ள எல்லாம் கொண்டு மண்டலால் விலையின் மாதரை ஒத்தது - அவ்வெள்ளம் சிகரத்தையும் நடு இடத்தையும் அடி வாரத்தையும் தழுவி அதனிடத்தில் நில்லாது, சிறிது நேரம் நின்றது போலக் காணப்பட்டு மலையிலுள்ள எல்லாப் பொருள்களையும் வாரிக்கொண்டு வருதலால் பொருட்பெண்டிரை யொத்தது.

சுட்டுப் பெயர் முன் வந்தது. † "முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே" என்பவாகலின். விலை மாதரைக் குறித்துரைக்குமிடத்து, தம்மை விரும்பி வந்த காமுகரது தலையையும் மார்பையும் பாதத்தையுந் தழுவி அத்தழுவிய நிலையில் நில்லாது கடனுக்கு நின்றதுபோலச் சிறிது நேரம் நின்று அக்காமுகரிடமுள்ள பொருள்களை யெல்லாங் கொண்டு போதலால் என்றுகொள்க. எ-று. (௯)

கக மலையெடுத்துமரங்களைப்பறித்துமா
டிலைமுதற்பொருள்யாவையுமேந்தலால்
அலைகடற்றலையன்றணைவேண்டிய
நிலையுடைக்கவித்தமந்நீத்தமே. (௰)

இ-ள். அந்நீத்தம் - அவ்வெள்ளம், மலைகளைப் பிடுங்கிக்கொண்டும் மரங்களைப் பறித்துக்கொண்டும் பக்கங்களிலுள்ள இலை முதலாகிய பொருள்களியாவற்றையும் தாங்கிக்கொண்டும் வருதலால் திரையுடைய கடலில் அப்போது அணைகட்ட விரும்பிய மன நிச்சயமுடைய வானர வெள்ளமேயாகும். எ-று.

வெள்ளத்திற்கு, அணைவேண்டிய என்பதற்கு சமுத்திரராசனைக் கூடலை விரும்பிய எனக் கூறுக. மற்றவை இரண்டற்கும் ஒக்கும். (௰)

கஉ. பணைமுகக்களியானைபன்மாக்களோ
டணிவகுத்தெனவீர்த்திரைத்தார்த்தலின்
மணியுடைக்கொடிதோன்றவந்தான்றலால்
புணரிமேற்பொரப்போவதுபோன்றதே. (கக)

---

* இறை - சிறிது, கடன்,

† தொல்காப்பியம் கிளவியாக்கம் ௩௯.

இ-ள். (வெள்ளம்) பருத்தமுகத்தையும் களிப்பையுமுடைய யானைகளைப பலகாலாள்களோடு அணிவகுத்தாற்போல இழுத்து மிகுந்து ஒலித்தலானும மணிகட்டிய கொடிகளை விளங்கக் கொண்டுவநது நாட்டுதலானும் கடலிறைவனமேல் போர்செய்யப்போவதை யொத்தது. எ-று.

அதிகாரப்பட்டமையின வெள்ளம் வருவிக்கப்பட்டது. வெள்ளத்திற்குப், பல மிருகங்களோடெனவும் அழகுடைய பூங்கொடியெனவுங கொள்க. (கக)

கஉ. கொடிச்சியரிடித்தசுண்ணங் குங்குமங் கோட்டமேலம்
நடுக்குறு சந்தஞ் சிந்தூரத்தொடு நாரந்தகாகம
கடுக்கையார் வேங்கை கோங்கு பச்சிலை கண்டில் வெண்ணெய
அடுக்கல் விண்டுத்த தேனி லொடு நாறு மன்றே. (கஉ)

இ-ள். நடுக்கு உறு சநதம் - குளிர்ச்சி மிகுதியுடைய சந்தனம், அரைப்பின் நடுவில தேயும் சந்தனம் எனவுமாம். (கஉ)

கக. கதவினை முட்டி மள்ளர் கையெடுத்தார்ப்ப வெய்தி
நுதலணி யோடை பொங்க நுகர்வரி வண்டு கிண்டத்
ததைமணி சிந்த வுந்தித் தறியிறத் தடக்கை சாய்த்து
மதமழை யானை யென்ன மருதஞ்சென் றடைந்த தன்றே. (கக)

இ-ள். கதவினை முட்டிமள்ளர் கையெடுத்து ஆர்ப்ப எய்தி - (வெள்ளம) மதகின் கதவைமுட்டி உழவர் கையெடுத்து ஒலிக்கச்சென்று, நுதல் அணி ஓடைபொங்க - ஊருக்குமுன்புள்ள குளம் நிறைய, நுகர் வரிவண்டு கிண்ட - இரை உணணும் வரியுடைய வண்டுகள் குடைய, ததைமணிசிந்த - நெருங்கிய ஆரதனங்கள் சிதற, உநதித்தறி இறததடம் கைசாய்த்து - ஆற்றின் கரையில் நாட்டிய முளைகள ஒடிய அலையென்னும விசாலித்த கையால் அசைத்து, மதமழையானை என்ன மருதம் சென்றடைந்தது - மதமழையுடைய யானையைப்போல மருதநிலத்தில் போய்ச்சேர்ந்தது. எ-று.

மள்ளர் கையெடுத்தார்த்தல் புதுப்புனலைக் கண்டு மகிழ்தல். முட்டி எய்திச் சாய்த்துச சென்றடைந்ததென முடிக்க.

யானைக்கு-கூடத்தின் கதவை முட்டிப்பாகரும் பயந்தோட கையைத்தூக்கி ஆரவாரிக்கப்போய் நெற்றியிலணிந்த பட்

டம் விளங்க மதநீரையுண்ணுகின்ற வரிவண்டுகள் குடைய இருபுறத்திலும் நெருங்கிய மணிகள் ஒலிக்க பெரியதுதிக்கையால் சாய்த்தெனக் கூறுக. அன்று ஏ அசைகள். (கசு)

கரு. முல்லையைகுறிஞ்சியாக்கிமருதத்தைமுல்லையாக்கிப
புல்லியநெயதறனைப்பொருவருமருதமாக்கி
எல்லையிற்பொருளகளெல்லாமிடைதடுமாறுநீராற்
செலலுறுகதியிறசெல்லுமவினையெனசசென்றதன்றே. (கஎ)

இ-ள். முல்லையைக் குறிஞ்சி ஆக்கி - (வெள்ளம்) குறிஞ்சி நிலப்பொருள்களை முல்லைநிலத்திற சேர்தது அதனைக் குறிஞ்சி நிலமாகச் செய்து மருததனை முல்லை ஆககி - முல்லை நிலப்பொருள்களை மருதநிலத்திற் சேர்த்து அதனை முல்லைநிலமாகச்செய்து, புல்லிய நெய்தல் தன்னைப் பொருவு அரும மருதம் ஆக்கி- மருதநிலப்பொருள்களை அற்பவளமுடைய நெய்தல் நிலத்திற் சேர்த்து அதனை ஒப்பற்ற மருதநிலமாகச்செய்து, எல்லை இல் பொருள்கள் எல்லாம இடைதடுமாறும் நீரால—வரமபில்லாமல் பொருள்களெல்லாம் தததம் நிலத்தை நீங்கி மயங்குந் தன்மையால், செல் உறுகதியில செலலும் வினை எனச்சென்றது - உயிர் செல்லும் நால்வகைக கதியினும் உடன செல்லும இருவினை போலபபோயிற்று. எ-று. அனறு ஏ அசைகள. (கஎ)

நாற்கதியாவன, தேவகதி, மக்கட்கதி, விலங்குக்கதி, நரக கதி, என்பன. இருவினை, நல்வினை தீவினை என்பன. கருத்து வினைகள் தம்மைசசெய்த உயிர்களைத தககக கதியில் செலுத்துதல் போல வெள்ளம் தானோடும் மார்க்கத்தில் அகப்பட்ட பொருள்களைச் செல்லுமிடமெல்லாம கொணடு சென்றது.

கஅ. கல்லிடைப்பிறந்துபோந்து கடலிடைக்கலந்தநீத்தம்
எல்லையின்மறைகளாலு மியமபரும்பொருளீதெனனத்
தொல்லையிலொன்றேயாகித் துறைதொறுமபரந்தசூழ்ச்சி
பல்பெருஞ்சமையஞ்சொலலுமபொருளுமபோறபரநததன்றே. (கஅ)

இ-ள். கல் இடைப்பிறந்து போந்து கடல் இடைக்கலந்த நீத்தம் - இமயமலையில் உற்பததியாகிச் சென்று கடலிற்சேர்ந்த வெள்ளம், தொல்லையில் ஒன்றேயாகித் துறைதொறும் பரந்த

சூழ்ச்சி - தோன்றிய ஆதிகாலத்தில் ஒன்றேயாகி நதி முதலிய வற்றில் சென்ற ஆராயச்சியுடையதாகி, எலலேயில் மறைகளா லும் இயம்ப அருமபொருள் ஏது என்ன - அளவில்லாத வேத ஙகளாலும் இததனமைததெனறு சொல்ல அருமையாகிய ஜகத் காரணவஸ்து இதுவேயென்று, பலபெரும் சமையம்சொல்லும் பொருளுமபோல் பரந்தது - பலபெரிய சமையநூல்கள் தம் மதத்துககுரிய தெயவமாகச் சொல்லும அவ்வஸ்துவைப்போ ல அவவிடஙகளில வியாபிததது. எ-று. (கக)

சமையம் ஆகுபெயா.

வெள்ளம ஒன்றேயாகி சூழ்ச்சியுடைய தாகிப் பரந்தது என முடிக்க. அறுசமையமேயன்றி மறறெல்லாச் சமையங்க ளும அடஙகப் பலபெருஞ சமையமென்றா. கருத்து ஜகத்கார ணவஸ்து ஒனறே பல சமயஙகளில் வியாபித்தாற்போல வெளளம் ஒன்றே பல விடஙகளிலும வியாபிததது.

---

## ௩-வது. நாட்டுப்படலம்.

## கோசலநாட்டின் வளத்தைக் கூறுகின்றபடலம்.

---

கள. வாஙகரும்பாதநானகும்வகுத்தவானமீகியெனபான
தீஙகவிசெவிகளாரததேவருமபருககசெயதான
ஆஙகவனபுகழநதநாடடையனபெனுநறவமாநதி
மூஙகையானபேசலுற்றானெனனயானமொழியலுறறேன. (க)

இ-ள். வாஙக அருமபாதம் நான்கும் வகுத்த வான்மீகி என்பான - யாவராலும் வகுக்க அருமையான பாதம் நான்கை யும் வகுத்துச்செயத வான்மீகி என்று உயர்த்திச் சொல்லப் படுகிற முனிபுங்கவன், தீம்கவி தேவரும செவிகள் ஆர பருகச் செயதான்-மதுரமாகிய கவியமுதைத் தேவர்களுஞ் செவிகளா கிய வாய்கள் நிறைய உண்ணும்படிச் செய்தருளினான், ஆங்கு அவன் புகழ்ந்த நாட்டை யான் அன்பு எனும் நறவம் மாந்தி- அவ்வாறு அவன் சிறப்பித துரைத்த கோசல தேசவளனை அடி

௧௦௪ முத்தருக்கொண்டுசெம்முளரியலாநதால
ஒததிருக்கும்மெழிலுடையவிவ்வொளியால
எததிருக்குஙகெடுமென்பதையெணணுச
சததுருககனனெனச்சாத்தினனுமம. (௧௨௨)

௧௦௫. பொயவழியினமுனிபுகறருமறையால
இவ்வழிபெயாகளிசைத்தழியிறைவன
கைவழிநிதியெனுநதிகலைமறையோா
மெய்வழியுவரிநிறைததனமென்மேல. (௧௨௩)

இ – ள். பொயவழி இல்முனிபுகல்தருமறையால் - பொய் மார்க்கமில்லாத வசிட்டமாமுனிவன்முன்னமேசொன்ன வேத முறைப்படி, இவ்வழிபெயர்கள் இசைததுழி - சக்கரவர்த்திக்கு மாரர்களுக்கு இவ்வாறு திருநாமங்களைக் கூறியபோது, இறைவன் கைவழி நிதி எனும் நதி - தயாதன்தனுதுகையேவழியாக நிதியென்று சொல்லப்படுகிற பெருககாற்றுக்களால், கலைமறையோர்மெயவழி உவரி மேல மேல் நிறைத்தனன் - கலைவல்ல வேதபிராமணரது மெய்ச்சந்ததியாகிய கடலை அதிகம் நிறைத்தான். எ-று. (௧௨௩)

மெய்வழியென்றது சத்பிராமணரைச் சுட்டிநின்றது.

௧௦௬. அமிாதுருதலையோடணிநடைபயிலா
திமிரமதறவருதினகரனெனவும்
தமரமதுடன்வளர்சதுமறையெனவும்
குமரர்கணிலமகள்குறைவறவளர்நாள். (௧௨௫)

இ-ள். திமிரமது அறவரு-இருள் நீங்க உதிக்கின்ற, தமரமதுடன்-சுரங்களின் ஒலியோடு,

கoஎ. ஐயனுமிளவலுமணிநிலமகடன்
செய்தவமுடைமைகடெரிதரநதியும
மைதவழ்பொழிலகளும்வாவியுமருவி
நெய்குழலுறுமிழையெனநிலைதிரிவார். (கஉக)

இ-ள். ஐயனும் இளவலும் - ஸ்ரீராமபிரானும் இளையபெருமாளும், நெய்குழல் உறும் இழைஎனநிலை திரிவார் - நெய்கின்றகுழலோடு பொருந்திய நூலிழைபோல இணங்கி இடங்களில்சஞ்சரிப்பார். (கஉகூ)

கoஅ. அஃதையநின்னையெமதரசெனவுடையேம்
இஃதொருபொருளலவெமதுயிருடனேழ
மகிதலமுழுதையுமுறுகவிமலரோன
உருபகலளவெனவுரைநனிபுரிவார். (கஙரு)

இ-ள். அஃதுஐய-திககற்றவர்களுக்குத் தந்தையே, நின்னை எமது அரசு என உடையேம் இஃது ஒரு பொருள் அல்ல-உன்னை எங்களரசனாக உடைளோம் நீவினவிய இது எங்களுக்கு ஒருபொருளல்ல, எமது உயிருடன் ஏழ்மகிதலம் முழுதையும் எங்களாயுளோடு ஏழுலகங்களையும, இம்மலரோன் உருபகல் அளவு உறுகஎன நனிஉரை புரிவார் - இப்பிரமகற்பம் வரையிலும் நீ அரசாட்சி செய்கவென்று மிகவும் வாழ்த்துவார். எ-று.

அகி என்னும வடமொழி அஃதை எனத்திரிந்து ஈண்டு ஈறுதொகுத்தது. அஃதை தந்தை என்பதனுணு முணர்க

## எ-வது. கையடைப்படலம்.

## சக்கரவர்த்தி இராமலக்ஷ்மணர்களை விசுவாமித்திரர்கையில்ஒப்புவித்தலைக்கூறும்படலம்.

கoக. நனைவருகறபகநாட்டிநனகா,
அனைவருமனை,ரரவயிரக சருசிநதையான
நினையவுமரியதுவிசுமயினீனடதோா
புனைமணிமணடபம்பொலியவெய்தினுனை (க)

இ-ன். நனைவருகற்பகம் நாட்டுநல்நகர்-அரும்புகளை அரும்புகின்ற கற்பக விருக்கங்களையுடைய தேவலோகத்திலுள்ள

அமராவதியென்னும் நல்ல நகரத்தில் வதிகின்ற, அனைவரும் அணைதர அயிர்க்கும சிந்தையான்-எல்லாத்தேவர்களும வந்து சேர சந்தேகிக்கின்ற குறிப்புடையோனாகிய தயரதசக்கரவர்த்தி, நினையவும் அரியது விசும்பின்நீண்டது - மனத்தால் நினைப்பதற்கும் அரிதாயதும் சுவர்க்கம்வரையிலுமஉயாந்ததுமாகிய, ஓர்புனை மணிமண்டபம் பொலிய எய்தினன் - ஒப்பற்ற அலங்கரிக்கப்பட்ட ரத்நமண்டபம் பொலிவெய்த அதிற்சேர்ந்தான்.

சிந்தை - குறிப்பு. சிந்தையான் என்பதற்கு மனத்தாலென்று பொருளுரைப்பாருமுளர். சிந்தையானவது தேவரெல்லாரும் தமது நாயகனாகிய இந்திரனோவென்று ஐயமுற்றுவருவதற்குரிய குறிப்புடையானென்பது. "நாட்டமோ ஆயிர மில்லை யென்றைய நீங்கினார்" என்றமையின் அவ்வாயிரமன்றி மற்ற இலக்கணங்களெல்லாம் பொருந்தினவனென்று பொருள்படுதலால் சிந்தையான் என்பதற்கு அதுவே பொருளென்க. நினையவும் அரியதென்றது மண்டபத்தின் தொழிலருமையை விளக்கிநின்றது. எ-று. (க)

௧௧௦. தூயமெல்லரியணைப் பொலிந்துதோன்றினன
சேயிரு விசும்பிடைத் திரியுஞ்சாரணர்
நாயகனிவனகொலென் றயிர்த்துநாட்டமோ
ஆயிரமில்லையென் றையநீங்கினார். (உ)

௧௧௧. என்னனையமுனிவரு மிமையவரு மிடையூறின்றுடையரானால்
பன்னகமுநகுவெள்ளிப் பனிவரையும் பாற்கடலும் பதுமபீடத்
தன்னசருங் கற்பகநாட் டணிநகரும் மணிமாடப் போகவதியென்னும்
பொன்னகருமல்லாது புகலுண்டோ விகலரக்கர்ப் புலவுவேலோய். (எ)

இ-ள். பல் நகமும் நகுபனி வெள்ளி வரையும - பல மலைகளையும் அவமதித்துச் சிரிக்கின்ற குளிர்ச்சிபொருந்திய வெள்ளி மலையாகிய கைலாயமும, பணிவரையென்று பாடமோதி திருவேங்கடத்தை யுரைப்பாருமுளர். ஈண்டது பொருந்தாது,

௧௧௨. தருவனத்துளயானியற்றுந் தவவேள்விக்கிடையூறாத் தவஞ்செய்வோர்கள், வெருவரச்சென்றடைகாமவெகுளியென நிருதரிடைவிலக்காவண்ணம், செருமுகத்துக்காத்தியெனநின் சிறுவர்நால்வரினுங்கரியசெம்மல், ஒருவனைத்தந்திடுதியெனவுயிர்க்குமுன் கொடுங்கூற்றினுளையச் சொன்னான். (௧௦)

கக௩. எண்ணிலாவருந்தவத்தோனியம்பியசொன்மருமத்தினெறிவேல்பாய்ந்த, புண்ணிலாம்பெரும்புழையிற் கனனுழைந்தாலெனச்செவியிற்புகுதலோடும், உண்ணிலாவியதுயரம்பிடித்துந்தவா ருயிர்நின்றூசலாட, கண்ணிலானபெற்றிழந்தானெனவுழந்தானகடுந்துயரங்காலவேலான்.

இ-ள். மருமத்தில எறிவேல் பாய்ந்த புண்ணில் ஆம் பெரும்புழையில்-மார்பில் பகைவன் எறிந்த வேலாயுதம் பாய்ந்ததனாலுண்டாகியபுண்ணிலுண்டாகிய பெருந்தொளையில், கனல் நுழைந்தால என - அக்கினி புகுந்தாற்போல, எண் இலா அருந்தவத்தோன் இயம்பியசொல் - அளவில்லாத அரியதவமுடைய விசுவாமித்திரமுனிவன சொன்ன சொல, செவியில்புகுதலோடும் - தனதுசெவிகளில் புகுதலோடும், காலவேலான்-பகைவருக்கு யமனையொத்த வேலாயுதமுடைய சக்கரவர்த்தி, உள் நிலாவிய துயரமபிடித்து உந்த - உள்ளத்தில் முன்னமே உண்டாகிய துன்பமபிடித்துத் தளள, ஆர் உயிர்நின்று ஊசலாட-தேகமெல்லாம நிறைந்த உயிர் போவதும் வருவதுமாக, கண் இலலான பெற்று இழந்தான என கடும்துயரம உழந்தான் - பிறந்தபோதே கண்ணில்லாதவன் இடையிற்பெற்றுபபின்பதை யிழந்தவன்போலக் கொடியதுன்பததை யனுபவித்தான் எ-று. (கக)

எண்ணிலாவருந்தவத்தோனியம்பிய சொல்லாவது, நின் சிறுவர் நால்வரினுங்கரிய செம்மல ஒருவனைத் தந்திடுதி யென்றது. வேல்பாய்ந்த புண்ணிலாம் பெரும்புழையாவது, தன்னைப்போல மகனைப்பிரிந்து சாகென்று முனிவனிட்ட சாபம். உண்ணிலாவிய துயரமாவது, அருமைத் திருமகனைப் பிரிந்து தான் இறுதியுற நேர்ந்தது.

## அ-வது. தாடகைவதைப்படலம்.

### தாடகையைக்கொன்றதைக்கூறுகின்றபடலம்.

ககச. என்றவன்றலைவனியம்பலும்வியந்தவ்வயிற்
சென்றவனெதிரெழுந்[illegible]செவ்வரோ
டன்றுறைந்தவர்கதிர்ப்பரிதிமண்டிலமகன
குன்றினின்றிவரவோர்சுரனொரங்கூறுகின்றார். (௧)

இ-ள். என்று அவ்வந்தணன் இயம்பலும் - என்று அவ் விசுவாமித்திரமுனிவன் சொல்லுதலும், அவ்வயின்சென்று - அவ்விடத்திற் சென்று, வியந்து - ஆச்சரியமுற்று, எதிரெழும்- (விசுவாமித்திரனை) எதிர்வணங்கி எழுகின்ற,

கக௫. பேய்பிளந்தொக்கநின் றுலர்பெருங்கள்ளியின
தாயபிளந்துக்ககாரகிலகளுந்தழையிலா
வேயபிளந்துக்கவெண்டரளமுமவிடவரா
வாயபிளந்துகச்செமமணியுமேவனமெலாம.
(அ)

இ-ள். பேயபிளந்து நின்று ஒக்க - பேயகள் தலைவிரிந்து நின்றதையொப்ப, உலர் பெரும களளியின தாயபிளந்து உக்க- உலர்ந்த பெரிய கள்ளிமரஙகளின அடிபிளககபபட்டுச்சிந்திய, கார் அகிலகளும்-வயிரம் பறறிய அகிறகட்டைகளும, எ-று. ()

கள்ளியில் அகிலுண்டாதலை, "கள்ளிவயிற்றி னகிற்பிறக் கும்" என்பதனானும் அறிக.

கக௬. பாருமோடாதுநீடாதெனுமபாலதே
சூருமோடாதுகூடாசரோசூரியன
தேருமோடாதுமாமாகமீதேரினோ
காருமோடாதுநீளகாலுமோடாதம்ரா.
(க)

இ-ள். பாரும் நீடாது எனும் பாலது ஓடாது - பூமியும் அசையாதென்னுந் தன்மையதாதலால் அவ்வெப்பத்தை விட்டுப்போகாது, சூரும் ஓடாது கூடாது - அவ்வனத்திற்குரிய தெய்வப்பெண்ணும் ஓடாமல்மெல்ல நடக்கக்கூடாது, மாமாக மீது சூரியன் தேரும ஓடாது - பெரிய ஆகாயத்தின்மேல் சூரி யன் தேரும் செல்லாது, தேரின்-ஆராயின, நேர்காரும் ஓடா து-அந்நிலத்திற்கு நேர்மேகமும்போகாது,நீள்காலும் ஓடாது- பெருங்காற்றும் வீசாது. எ-று. (கூ)

ககஎ. பொரிபரற்படாநிலம்பொடிநதுகீழுற
விரிதலிற்பெருவழிவிளங்கித்தோனறலால
அரிமணிப்பணத்தராவரசர்நாட்டினும
எரிகதிர்க்கினிதபுக்கியகைலாயதே.
(சக)

இ-ள். பொரிபரல் படர்நிலம் பொடிந்து கீழுற விரிதலில்- பொரிந்த பருக்கைக்கற்கள் பரந்த அப்பூமி சாம்பராய் வெந்து

கீழுலகுவரைகரும் விரிதலாலும், பெரும்வழி விளங்கித் தோன்றலால் - பெரியவழி விளங்கிக காணப்படுதலாலும், அரிமணிப்பணத்து அராஅரசர் நாட்டினும் - செவந்தாதநம பொருந்திய படத்தையுடைய நாகராசா லோகத்திலும், எரிகதிர்க்கு இனிதுபுகரு இயஙகல் ஆயது - எரிக்கும்சூரியனுக்கு இனிதாயச் சென்று சஞசரிககலாயது. எ-று. (ககூ)

சகஅ. நோக்கினனவர்முகநோக்கநோக்குடைக
சோகருமாருமடிகுறுகநானமுகன
ஆக்கியவிருக்கைசளிரண்டுமவழி
ஊக்கினனவையவருளளதகளினோ. (கஅ)

இ-ள். நோக்கினன் அவர்முகமநோக்க - அவ்வாறு மனத்துளெண்ணி அவர்களது முகததைப் பார்க்க, நோக்கு உடை கோக்குமரரும் - அப்பார்த்தலை யுணர்ந்த சககரவர்த்தித் திருக்குமாரர்களும், நோக்குடையென்பதற்கு அழகுடைய வென்றுரைப்பாருமுளா.

ககக. சுழிபடுகங்கையசசோகசன்மௌலியான
விழிபடவெநதநோவெறுதாறணடோ
பழிபடாமன்னவனபடைத்தநாட்டிறுங
கழிவதெனகாரணமறிஞகூறெனறான. (உ0)

இ-ள். பழிபடாமனனவன் படைததநாட்டில் - பழிக்குட்படாத சக்கரவாததி காககப்பெற்றுள்ள நாட்டில், ஊங்கு அழிவது எனகாரணம் அறிஞகூறுஎன்றான - அதிகமாக இப்படி அழிவதறகு யாதுகாரணம அறிஞ சொல்வாயென்றான்.

சஉ0. மிகுத்தறனைமாதமைவேறுசீங்குருந்
தகுதேதாழினமுனவரனசவைதையுண்ணியே
வருநதுயனைசுவரிவதிநதவ்வனம
புகுநதனளழலெனபயழங்குகெஞசினன். (சஉ)

இ-ள். வசுவரிவதிந்த - வசுவரியெனபான் வதிந்த, வருந்தின் - வழியினையுடைய, இவ்வனம்-இவ்வனத்துள்.

சஉச. நிலைபுகன்சிலம்பிடைசெறிததகழலோடு
சிலம்புசயிதிரதனைவென்றதஆழ்வேலைச
சடைமடுகவனறறஅசுனைநதகரூமஞ்சிய
பிலம்புகவிலக்கினிகளபின்னெருடாயவந்தார. (சஅ)

இ-ள். சிலம்பிடை - பாதநூபுரத்தில், செறித்த - பரல் போல நிறைந்த, சிலம்புகள் - மலைகள், கழலோடு நிலம்புக மிதித்தனள் - காலோடு நிலத்தினுட்புக மிதித்தாள், நெளித்த குழி - அம்மிதித்தலாலுண்டாகிய குழியில, வேலைச்சலம்புக - கடல்நீர் மண்டவும், அனல்தருகண அந்தகனும் அஞ்சிப்பிலம் புக - அக்கினிபோல அஞ்சாமையுடைய யமனும பயந்து குகையி லொளியவும், நிலக்கிரிகள் பின்றொடர - வேகத்தால் புவியி லுள்ள மலைகள பின்றொடர்ந்து வரவும, வந்தாள் - வந்தாள். எ-று. (௪௮)

ஒடு உருபிற்கு ஆனுருபின் பொருள்கொண்டு பாதநூபுரத் தையணிந்த காலால் மலைகள நிலத்துட புகவெனினு மமை யும்.

௪௨௨. கடங்கலுழ் தடங்களிறு கையொடுகை தெற்று
வடங்கொள நடங்குமிடை யாளைமறு கினோர்
இடங்களு நெடுந்திசையு மேழுலகு மெங்கணும்
அடங்கலு நடுங்கவுரு மஞ்சவணி யாத்தாள். (௫௦)

இ-ள். கடமகலுழ் தடமகளிறு - மதமொழுகுகின்ற பெரிய யானைகளை, கையொடுகைதெற்று - கைகளோடுகைகளைமுடிந்து, வடமகொள - வடமாயகக்ழுத்திலணிதலால, நுடங்கும் இடையாள் - துவளுகின்ற இடையினையுடையாள். (௫௦)

மறுகி நடுங்கவென்று கூட்டுக.

௪௨௩. ஆர்த்தவரை நோக்கிநகை செய்தவரு மஞ்சக்
கூர்த்தநுதி முத்தலைய யிற்கொடிய கூற்றைப்
பார்த்தெயிறு தின்றுபகு வாயமுழை திறந்தோர்
வார்த்தைசெய் தனளிடிக்கு மழையனையாள். (௫௧)

இ-ள். ஆர்த்து - ஆரவாரித்து, அவரைநோக்கி - அம்மூவரையும்பார்த்து, நகைசெய்து - இகழ்ந்து சிரித்து, அவரும் அஞ்ச - அம்மூவர்களும் அஞ்சும்படி, (௫௧)

௪௨௪. கடக்கருமலைத்தெனுநாக வலிக்கியாவும
கெடக்கருசநுச்சதனை வெஞ்சமலை கிடக்கும
விடக்கரிதெனக் கருதியாவிதொகோடுந்தட
பட்க்கருதியா பகாநிலவந்தபரிசெனறே (௫௨)

இ-ள். இனிச்சுவைகிடக்கும் விடக்கு அரிது எனக் கருதியோ - இனிச்சுவையிருக்குந்தசை எனக்கு இல்லையென்று நினைத்தோ,

கஉரு. நாண்மையேயுடையார்பிழைத்தார்நகு
வாண்மையேபெற்றவன்றிறலாடவா
தோண்மையேயிவள்பேர்சொலத்தோற்பரேல
ஆண்மையென்னுமதாரிடைவைகுமே. (ருஎ)

இ-ள். நாண்மையே உடையார் பிழைத்தார் - பெண்ணொடு போர்செயதல் அறமன்றென்று நாணத்தை மேறகொண்டோர் உயிர்பிழைததார், நகு ஆண்மைபெற்ற வன திறல ஆடவர்-விளங்குகின்ற வீரங்கொண்ட வலியவெற்றியுடைய வீரர்கள், இவள்பேர்சொல - இவளது பேரைச் சொன்னஅளவில், தோண்மை தோறபரேல் - புயவலியை இழப்பாராயின, ஆண்மையென்னும் அது ஆர் இடைவைகும் - ஆண்தன்மையெனனுமது யாவரிடத்திலிருககும். எ-று. (ருஎ)

கஉசு. பிருகுவெனனும்பெருந்தவனறனமனை
வருகயற்கட்கியாதிவல்லாசுராக
குருகுகாதலுடவுறவாதலே
கருகியாவிகவாநதனனேமியான. (சு0)

இ-ள். வருகயல கண் கியாதி - நீரிலோடுகின்ற சேல் மீனையொதத கண்களையுடைய கியாதி யென்பாள.

கஉஎ. ஆதலாலரிக்காகண்டலன்றனக்
கோதுகீர்த்திபுடையவல்லாதுடை
எதமெனபனசெய்துயவோசொலாய
நாதடாந்துதயங்கியதாரினாய். (சுஉ)

இ-ள். ஆதலால் அரிக்கு - அச்செய்கையால் திருமாலுக்கும், ஆகண்டலன் தனக்கு - இந்திரனுக்கும், ஓதுகீர்த்தி உடைய அல்லாது - யாருஞ் சொல்லுகின்ற கீர்த்திகள் அவர்களுடைமையாயின வல்லாமல், (சுஉ)

கஉஅ. கறங்கிடநதிசிரிப்படிகாத்தவர்
பிறங்கடைப்பெரியோரயபெரியோரெலாம்
மறங்கொடித்தனாமனனுயிர்மாய்த்துநின
றறங்கெடுத்தவட்காண்மையுமவேண்டுமோ. (சுங)

இ-ள். திகிரிகழங்கிட படிகாத்தவர் – ஆஜ்ஞாசக்கரம் யாண்டும் சுழல பூமியைக காத்தவர்களாகிய சூரியகுலத்தரசாது, பிறஙகடைப் பெரியோய - வழித்தோனறலாகியமகானே.

சஉக. சொலலொக்குங்கடியவேகச்சுடுசுரஙகரியசெம்மல
அலலொக்குநிறதநிருண மேல்விடுதலுமவயிரகசூனறக்
கல்லொக்குநெஞ்சிறறஙகாதபபுறங்கழனறுகலலாப
புல்லாக்குநலலோர்சொனனபொருளெனபபோயிற்றன்றே.(எஉ)

---

## கூ-வது. வேள்விப்படலம்.

## விசுவாமித்திரர் யாகஞ் செய்ததைக் கூறுகின்றபடலம்.

கூ0. குசனகுசநாபனகோதில்பணபுதினதூாத்தனகொறறத
திசைசெழுவசுவெனறோதுமிவாபெயரிவாகடம்மில
குசனகவுசாமபிநாபனகுளிர்மகோதயமதூர்தநன
வசையிலதனமவனமறறைவசுகிரிவிரசமவாழநதாா. (எ)

இ-ள். குசன்-குசன், குசநாபன் - குசநாபன், கோது இல் குணத்தின் அதூர்ததன்-குற்றமில்லாதகுணததையுடைய அதூர்த்தன், கொற்றதது இசை செழுவசுஎன்று ஒதும்இவர்பெயர்-வெற்றியால் கீர்ததி பொருந்திய வசுவென்று சொல்லப்பட்ட இவர்களுடைய பெயர்களாம், இவாகள்தமமில - இவர்களில், குசன்கவுசாமபி-குசனென்பான்கவுசாம்பி நகரத்திலும், நாபன் குளிாமதோயம் - குசநாபனெனபான் குளிாந்த மகோதய நகரத்திலும, அதூர்த்தன் வசையில தனமவனம - அதூர்த்தனென்பான் குற்றமில்லாததருமவனம என்னும நகரத்திலும், மற்றைவசு கிரிவிரசம் வாழ்ந்தார்-மற்றையோனாகிய வசுஎன்பான் கிரிவிரசமென்னும் நகரத்திலுமிருந்து அரசாண்டார். எ-று.()

கூஉ. பாரின்பால்விசும்பினபாலும்பற்றறப்பமபபரனருன
பேரொனபானவலசெயமாயப்பெரும்பிணககொருங்குநேர்வார்
ஆறொன்பானமலமூர்த்திகருதியதறிசறேற்றும்
நசைம்டாணுழிகாலமிருக்கையிடற்றியிட்டனை. (கஎ)

இ-ள். பாரின்பால - புவியிலுள்ளோரும், விசும்பின் பாலும் - விண்ணிலுள்ளோரும, பற்று அறப்படிப்பது - அகப்பற்றுப் புறப்பற்றற் றுய்வதற்குச் சங்கீர்த்தனஞ்செய்வது, அன்னான்பேர் - அவனது திருநாமமாம, அவன்செய மாயப்பெரும்பிணக்கு ஒருங்குதேரவார் ஆர் - அவன்செய்கின்ற மாயமாகிய பெரியபேதத்தை முற்றும அறிவார்யார், அமலமூர்த்தி - மலமில்லாத அப்பிராகிருத திவ்யதேகமுடையவன, கருதியது அறிதல தேறறும - திருவுளம்பற்றியதை யாம அறிகிலேம. நாமபான் ஊழிகாலம இருந்தவம இயற்றிஇட்டான - அவன நாலூழிகாலம இங்கெழுந்தருளியிருந்து பெரியதவம செய்தான். எ-று. (கஎ)

கஅஉ கயந்தரு நறும்புனல் கையிற் றீண்டலும
பயந்தவர்க ளிகழ்ந் தெனப் பார்த்து வெந்திற
வியந்தவர் வெருக்கொளச் சுமையி னோங்கினான
உயர்ந்தவர்க் குதவிய வுதவி யொப்பவே. (கஅ)

இ-ள. கயம தரும் நறும்புனல் கையில் தீண்டலும் - (பலிச்சக்கரவர்த்தி வார்த்த) குளத்திலுண்டாகிய நல்லநீர் தனது கையிற் படுதலும், பயந்தவர்களும இகழ்குறளன் - பெற்றவர்களும் இகழும் வாமனர், எதிர்பார்த்து வியந்தவர் வெருககொள - (தானவந்தபோது) எதிரிலகண்டு ஆச்சரியமுற்றவர் அச்சமடைய, உயர்ந்தவர்க்கு உதவிய உதவி ஒப்ப-ஒழுக்கத்தாலுயர்ந்த மேலோர்க்குச செய்த உதவிப்பயனையொப்ப, விசும்பில ஓங்கினன - அண்டமுகடுவரையிலும் உயர்ந்தான். எ-று.(கஅ)

பயந்தவர்களும இகழ்தல என்றது குறளனின்றுஞ் சிறு குறளனாமைபற்றி. வியந்தவர் என்றதும அதுபற்றியே.

கஅங. ஈண்டிருந் தியற்றுதி யாகம் யாரெனா
நீண்டுயர் முனிவரர் நெறியினெய்தப்பின்
வேண்டவை கொண்டனன் வேள்வி மேவினான்
சாண்டகு குமரரைக் காவ லேவியே (கக)

இ-ள். சாண்தகு குமரரைக் காவல் ஏவி - ஞானத்தால் உணரத்தக்க குமரரைக் காவலாகவைத்து,

௧௩௪. எண்ணுதற் காகா தரிதிரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன்வேள் வியை
மனனினைக்கச் செய்கின்ற மன்னனை [illegible]
கண்ணினைக் காக்கின்ற [illegible] (௪0)

இ-ள். எண்ணுதற்கு ஆகாத அரிது இரண்டு மூன்றுநாள் விண்ணவர்க்கு ஆக்கிய முனிவன் வேள்வியை - நினைக்கவும் செய்யவும் அரிய ஆறு நாளும் தேவர்பொருட்டுச் செய்த முனிவனது யாகத்தை,

இரண்டு மூன்று நாள் விண்ணவர்க் காக்கிய என்பதற்கு ஐந்து நக்ஷத்திரங்களைத் தேவர் பொருட்டுப் படைத்த என்றேனும் ஆருமுளார் ஆறுதினமென்று கூறுவது வடமொழியோ டொப்பதால் மேலே கூறப்பட்டதே யுரையெனக.

---

## ௧0-வது. அகலிகைப்படலம்.

## அகலிகையின் சாபந்தீர்த்ததைக் கூறுகின்றபடலம்.

௧௩௫. அலம்பு மாமணி யாரொ டகிலணி புனைந்த
நலம்பெய் பூண்முலை நாகிள வஞ்சியா மருங்குற்
புலம்பு மேகலைப் பூமலர் புனையறற் கூந்தற்
சிலம்பு சூழுங்காற் சேணமாந் தெரிவையைச் சேர்ந்தார் (௧)

இ-ள். அலம்பு மாமணி - அசைகின்ற பெரிய அரதனங்களுடனும், ஆரத்தோடு அகில அணிபுனைம - சந்தனத்துடனும் அகிற்கட்டைகள் பொருந்திய மணநகுன்றிய, நலம்பெய்பூண்முலை - இன்பம் தருகின்ற பூணைகளணிந்த முலைகளையும், நாகு இளம்வஞ்சி ஆம்மருங்குல் - மிகவும் இளமைபொருந்திய பூங்கொடியாகிய இடையையும், புலம்பு மேகலைப்பூஅமலர் - ஒலிக்கின்ற மேகலாபரணமாகிய புதியமலர்களையும், புனை அறல் கூந்தல் - அலங்கரிக்கப்பட்ட கருமணலாகிய கூந்தலையும், சிலம்புசூழும் கால் - பாதநூபுரமணிந்த பாதத்தையுமுடைய, சேணம் ஆம் தெரிவையைச் சேர்ந்தார் - சேணகதியாகிய பெண்ணைச்சார்ந்தார். எ-று. (௧)

நதியைக்குறிககுமிடத்தில் சிலமபு சூழுங்கால் என்றதற்குப் புனல் செல்லும ஒலிபொருந்திய கால்வாயகளையுடைய என்றுரைகக.

௪௯௬ கறங்கு தண்புனற்கடிநெடுந்தாளுடைக்கமலத்
தறங்கொணாண்மலாக்கோயிலகளிற்றழககத்தவமிடைப்ப
பிறங்குதாமரைவனம்விட்டுப்பெடையொடுங்களிவண்
டிறங்குகின்றதோராறுமலாச்சோலைபுக்குறைந்தார. (௫)

இ-ள். அறமகொள நாளமலர் - சூரியனுககு மலர்தலென்னும் தருமத்தைககொண்ட அன்றலாந்த மலர்கள். (௫)

௪௯௭ பெய்யுமாமுகில்வெள்ளியம்பிறங்கன்மீப்பிறழும
செய்யதாமரையாயிரமலர்ந்துசெங்கதிரின
மொய்யசோதியைமிலைச்சியமுறைமைபோனறொளிரும
மெய்யினோடையிராவதக்களிற்றின்மேல்விளங்க (௬)

இ-ள். அம்-அழகிய, வெள்ளிபிறங்கல் மீப்பிறழும் - வெள்ளிமலைமேல் தவழ்கின்ற, பெய்யும் மாமுகில்-மழையைப் பெய்கின்ற பெருமைபொருந்திய மேகம், ஆயிரம செய்யதாமரை மலர்ந்து - ஆயிரஞ் செந்தாமரை மலர்களைப் பூத்து, செங்கதிரின் மொயய சோதியை - சூரியனது நெருங்கிய சோதியை, மிலைச்சியமுறைமைபோன்று - சிரத்திற் சூடிய முறைமையையொத்து, ஒளிரும் மெயயினோடு-விளங்குஞ் சரீரத்தோடு, ஐராவதக்களிற்றின்மேல் விளஙக-ஐராவதமாகிய யானைமேற் பொலிய. எ-று. (௬)

வெள்ளிமலை ஐராவதத்திற்கும் மேகம் இந்திரனுக்கும் தாமரை அவன கண்களுக்கும் கதிரின் சோதி கிரீடத்துக்கும உவமை.

௪௯௮. பள்ளிநீங்கியபங்கயப்பழனநன்னாரை
வெள்ளம்வான்களைகளைவுறுகடைசியர்மிளிர்ந்த
கள்ளவாணெடுங்கணின்னிழல்கயலெனக்கருதா
அள்ளியாறுறுமகலவம்பிமிதிலைநாடடைந்தார். (௭)

இ-ள். பளளிநீங்கிய - சேக்கைவிட்டெழுந்த, பங்கயப்பழன நன்னாரை - தாமரையுடைய வயல்களிலுள்ள அழகிய நாரைகள், வெள்ளம் வான்களை களைவுறும் - மிகுதியாகிய பெரிய

களைகளைப்பறிக்கின்ற, கடைசியர்மிளிர்ந்த - உழத்தியரது விள ங்குகின்ற, களாமவாள நெடுங்கண்நிழல் - களவுடைய ஒளி பொருந்திய நீண்டகண்களின் நிழலை, கயல் எனக் கருதா அள் ளி - சேல்மீனென்று நினைத்துக்கொாதி, நாணஉறும் அகன் பணை மிதிலைநாடு அடைந்தார்-வெட்கும் அகன்றவயல்சூழ்ந்த மிதிலைநாட்டைச்சார்ந்தார். எ-று. (௬௩)

௧௬௪ வரம்பில்வானசிறைமதகுசேகணமுழவொலிமுழங்க
அரும்புநாண்மலரசோகங்களலாவிளக்கெடுப்ப
நரம்பினுன்றதேனறுநாகொண்டுமலாயாழின
சுரும்புபாணசெய்யதோகைநின்றுடுவசோலை. (௬௪)

இ-ள். அளவில்லாத பெரியகுளங்களின மதகுகள் மத்தள வொலிபோல வொலிக்க, அரும்புகின்ற அசோகமரங்கள் அன் றலாந்த மலர்களாகிய விளக்குகளையேந்த, நரம்பைப்போல ஒழுகுகின்ற தேன்தாரைகளைக் கொண்டிருக்கின்ற நல்லமலர்க ளில், வீணைபோல, வண்டுகளிசைபாட, சோலைகளில், மயில் கள் நின்றாடுவன. எ-று. (௬௪)

௧௬௫ பட்டவாணுதனமடந்தையர்பார்ப்பெனுந்தூண்டில
இட்டவாதரித்துழலபவரிதயங்களவெறுப்ப
வட்டநாணமரைமலரினமேலவயலிடைமள்ளா
கட்டகாவியங்கடைக்கணொப்பனகழனி (௬௫)

இ-ள். மள்ளர் வயலிடைகட்டகாவி - உழவர்கள் வயலிற் பிடுங்கிய குவளைப்பூக்கள், வட்டம் நாண்மரைமலரில்மேல்-வட் டமாகிய தாமரையின அன்றலர்ந்தமலர்களின்மேற் கிடத்தல், பார்ப்பு எனும தூதால் - பார்வையென்னும தூதினால், இட்ட ஆதரித்து உழல்பவா இதயங்கள வெறுப்ப - அணையவிரும்பி உழல்பவராகிய மைந்தர்களது மனங்கள் வெறுப்படைய, பட் டம் வாள் நுதல்மடந்தையா - பட்ட மணிந்த ஒளிபொருந் திய நெற்றியுடைய மாதர்கள், கண்கடைகழிப்பு அனகழனி- (இது புணரும் அமையமன்றென்று)கண்களைக் கடையில் கழித் தலை ஒக்கும் கழனிகள். எ - று. (௬௫)

கருத்து உழவர்கள் வயலில் தாமரைப்பூக்களின்மேல்ஓரத் தில் குவளைப்பூக்களைக் களைந்து போட்டிருத்தல மங்கையர்

தம்மைப் புணர விரும்புவோராகிய மைந்தரை இது சமயமன்றென்று கண்காட்டுதலை யொக்கும கழனிகள்.

கழனி-பெண்கள், தாமரை-முகங்கள், குவளை-கண்கள்.

௧௪௧ தூவியன்னந்தமினமென்றுநடைகண்டுதொடர
கூவுமென்குயிற்குதலையார்குடைந்ததண்புனல்வாய
ஓவில்குங்குமச்சுவடுறவொன்றொடொன்றூடி
பூவுறங்கினும்புள்ளுறங்காதனபொய்கை. (௬௬)

இ-ள். தூவி அன்னம் - சிறையுடைய அன்னங்கள், நடை கண்டு - நடையைப்பார்த்து, தம இனமென்று தொடர-தமது சுற்றமென்று தொடரும்படி, கூவும மென்குயில குதலையர் குடைந்த - கூவுகிற மெல்லியகுயிலினது குரலையொத்த மழலைச்சொல்லுடைய மாதர்கள்சென்று நீராடிய, பொய்கை தண் புனல்வாய் - குளத்தினது குளிர்ந்தநீரில, ஓவு இல் குங்குமச் சுவடு உற - நீக்கமில்லாத குங்குமக்குழம்பின் சுவடு தம்மேற் படிய, ஒன்றோடு ஒன்று ஊடி - ஒன்றோடொன்று பிணங்கி, பூ உறங்கினும - மலர்கள் உறங்கினும், புள் உறங்காதன - பறவைகளுறங்காதிருப்பனவா'-று. (௬௬)

பூஉறங்குதலாவது இதழ்குவிதல்.

௧௪௨. தீதிலாவசம்செய்யத்தெய்வதிகிரிடசெம்மல்
கோதமன்றனைத்தானசொன்னபொருளொடுமனத்திற்கொண்டு
மாதவனருளுண்டாகில்வழிப்படாப்படருறாது
போதி நீ அன்னையென்றுபொன்னடிவணங்கப்போனாள் (௮௩)

இ-ள். அன்னை - அன்னாய, மாதவன அருள் உண்டாகில்- கௌதமருஷியின் அநுமதியுண்டானால், நீவழிபடா படர் உறா து-நீவழிச்செல்லுகையில வருந்தாமல, போது என்று-செல்க வென்று, பொன்னடிவணங்க - அவளது அழகியபாதத்தைத் தொழுதும், போனாள் - அகலிகை கௌதமரிடம் சென்றாள். ()

## ௧௧-வது. மிதிலைக்காட்சிப்படலம்.

### மூவரும்மிதிலாபுரியைப்பார்த்ததைக்கூறுகின்றபடலம்.

க௬௫. சொற்கலைமுனிவனுண்டசுடர்மணிக்கடலுந்துன்னி
அற்கலர்ந்திலங்குபன்மீனரும்பியவானும்போல
விற்கலைநுதலினாருமைந்தருமவெறுத்துநீத்த
பொற்கலன்கிடந்தமாடநெடுந்தெருவதனிற்போனார். (௬)

இ-ள். சொற்களாலமைக்கப்பட்ட கலைகளைச் சொல்லிய அகத்திய முனிவருண்ட பிரகாசிக்கின்ற அரதனங்களையுடைய கடலையும், நெருங்கி இரவிற்கலந்து விளங்குகின்ற பல நக்ஷத்திரங்கள் விளங்கிய ஆகாயத்தையும்போல, ஒளிபொருந்திய பிறைபோன்ற நெற்றியுடைய மாதரும் புருடரும் வெறுத்து நீக்கிய, பொன்னுபரணங் கிடந்த மாளிகைகள் நெருங்கிய நீண்ட வீதியிற் போனார். எ-று. (௬)

க௬௬. தாறுமாய்தறுகட்குன்றந்தடமதவருவிதாழ்ப்ப
ஆறுமாய்க்கலினமாவிலாழியாலழிந்துதேரோராறுயச
சேறுமாய்த்தேர்களோடத்துகளுமாயொன்றொடொன்று
மாறுமாறாகிவாளாகிடக்கிலாமறுகிற்சென்றார். (௭)

இ-ள். அங்குசத்தை முறிக்கின்ற அஞ்சாமையுடைய யானைகள் பெரிய மதமாகிய அருவிகளைப் பொழிய, நதியாகி கடிவாளம் பூட்டிய குதிரைகளின் நுரையால் அந்நதியழிந்து ஒருவிதமாகி, (பின்பு) சேறுமாகித் தேர்கள் செல்லப்புழுதியுமாகி ஒன்றோடொன்று, வேறுவேறாகி வெறுமே கிடக்காதவீதியிற் போனார். எ-று. (௭)

குன்றம் - ஆகுபெயர்

க௭௫. கொட்புறுகலினப்பாய்மாகுலாலன்மகன்முடுக்கிவிட்ட
மட்கலத்திகிரிபோலவாளியின்சுருவமேலோர்
நட்பினிடையறுவாய்ஞானிகளுணர்விற்றொருவ
கட்புலத்தினையவென்றுதெரிவிலதெரியக்கண்டார். (௯)

இ-ள். கொட்பு உறுகலினப்பாய்மா - வளைவு பொருந்திய கடிவாளம் பூட்டிய குதிரைகள், குலாலமகன் முடுக்கிவிட்

டமண்கலத்திகிரிபோல வருவ - குயவன் விரைவாய்ச் சுழற்றி விட்ட மட்கலங்களைச் செய்தற்குரிய சக்கரம்போலச் சுழல்வனவாம், வாளியின வருவ - அம்புபோல நீளமாய் ஓடுவனவாம், மேலோர் நண்பினின் இடை அறுவாய கண்புலத்தது இனைய என்று தெரிவில - (சக்கரம்போலச்சுழலுங் குதிரைகள்) பெரியோர்களுடைய சினேகம்போல இடைமுறியாதனவாய் இத்தனையென்று கண்ணுக்குத் தெரிவிலவாம். ஞானிகள் உணர்வின் ஒன்றாய தெரியக்கண்டார் - (அம்புபோல நீளமாய் ஓடுங் குதிரைகள்) மெஞ்ஞானமுடையோரது அறிவைப்போல ஒன்றென்று தெரியப்பார்த்தார். எ-று. (௧௩)

சக்கரம்போலச் சுழலுங் குதிரையொன்றாயினும் வாளிபோல நீளமாயோடுங் குதிரையொன்றாயினும், அவ்வாறுசுழல்வனவுமோடுவனவும் பலவாகலிற் பன்மையாற் கூறினர். சுழல்தலாவது, நடுவிலொருவன் கயிறு பிடித்து நின்றும் நில்லாமலுங் கொள்ளிவட்டம்போலச் சுற்றுவது. * "இருவகைச்சாரியுமெதிர்ந்து வட்டமாய வருவழி ஞெகிழ்போன" என்றார் பிறரும். சக்கரம்போலச் சுழல்தலும் வாளிபோல ஓடுதலுஞ் சாரி பதினெட்டுள்ளுங் கதி ஐந்தனுள்ளு மடங்கும்.

௧௬௪. வாளரம்பொருத வேலும் மன்மதன் சிலையும் வண்டின
கேளொடு கிடந்த நீலச் சுருளுஞ் செங்கிடையுங் கொண்டு
நீளிருங் களங்க நீக்கி நிரைமணி மாடந் தெற்றிச்
சாளரந் தோறுந் தோன்றுஞ் சந்திர வதனங் கண்டார். (௧௪)

இ-ள். வாள் அரம்பொருத வேலும் - ஒளிபொருந்திய அரத்தால் அராவப்பட்ட வேலாயுதத்தையும், மன்மதன் சிலையும் - மதனன வில்லையும், வண்டின கேளொடு கிடந்த நீலச்சுருளும் - வண்டுகளுக் குறவாகிய பூவொடுகிடந்த பின்மயிர்ச் சுருளையும், செங்கிடையுங்கொண்டு - செங்கொட்டியையும் பெற்று, நீள் இரும் களங்கம் நீக்கி - மிகவும் பெரிய களங்கத்தைப் போக்கி, நிரை மணி மாடம் தெற்றிச் சாளரம்தோறும் தோன்

* திருவிளையாடல் - நரி பரியாக்கிய படலம் - ௬௬. இருவகைச்சாரியு மெதிர்ந்து வட்டமாய், வருவழி ஞெகிழ்ந்து போன் மறுகெலா மொரு, தா கதமேகில நின்ற தேரோத்தமோத், தொருவறநடாத்தினு ரொருகணத்திலே.

றும் சந்திர உதயம்கண்டார் - விரிசையாயிராநின்ற அழகுபொருந்திய மாளிகைகளினமுன் வைககப்பட்ட பல்கணிகள்தோறும்தோன்றப்படுகிற சந்திரோதயத்தைப் பார்த்தார். எ-று.(கசு)

வேலாவது கண, சிலையாவது நெற்றி அல்லது புருவம், செங்கிடையாவது இதழ, சந்திரனாவது முகம. கருத்து-உப்பரிகைமேல் சாளரங்கள்தோறும நிறகினறமகளிர்முகஙகளைப்பார்த்தார.

கசஎ. மெய்வருபோகமொக்கவுடனுண்டுவிலையுங்கொளளும
பையரவல்குலார்தமுள்ளமும்பளிங்குமபோல
மையரிநெடுங்கணோக்கமபடுதலுமகருகிவந்து
கைபுகிறசெவந்துகாட்டுங்கந்துகமபலவுங்கண்டார். (சசு)

இ-ள். மெய்வருபோகம ஒக்க உடன் உணடு - யாக்கைசேர்த்தலால் வருகினற காமவின்பத்தை ஏற்றுககுறைவின்றித்தாமும் மைந்தரோடனுபவித்து, விலையும்கொள்ளும் பை அரவு அல்குலார் உள்ளமும - அதறகு விலையுமபெறும விடப்பையுடைய பாமபினபடத்தையொத்த அல்குலையுடையவிலைமாதரது மனத்தையும், பளிங்கும்போல - கண்ணாடியையும் ஒப்ப, மை அரிநெடும கண்நோககம் படுதலும கருகி - அஞசனமதீட்டிய செவ்வரிபரந்த நீண்ட கண்களின் பார்வைபடுதலும் கறுத்து, வந்து கைபுகின் செவந்து காட்டும் கந்துகம பலவும் கண்டார்- வந்து கையிறபொருந்தின் செவப்புற்றுத் தோன்றுகின்ற பந்துகள் பலவற்றையும் பார்த்தார். எ - று. (கசு)

தன்மனம் வேறாயிருககவும் பொருள்கொடுப்போனை தன்னிடத்துள்ளவன் போலவும தனித்துள்ள பொருளைத் தனனிடத்துள்ளதுபோலவும் காட்டுதலபொருட் பெணடிருள்ளத்திற்குங் கண்ணாடிக்குங் குணம்.

கசஅ. பொனனின்சோதிபோதினிறைறம்பொலிவேபோல
தெனனுணடேனிற்றீஞ்சுவைசெஞ்சொறகவிபலபம்
கன்னிமமாடத்தும்பரின்மாடேசழிபேடோ
டன்னமமாடுமுனறுறைகண்டங்கயனினூர். (உகூ)

இ-ள். பொன்னில் சோதி பொலிவுபோல் - பொன்னிற்பிரகாசம் பொலிதல்போலவும், போதினில் நாற்றம் பொலிவு

MAHAMAHOPADHYAYA
... IYER LIBRARY

போல்) — மலரில் மணம் பொலிதல்போலவும், தேன் உண் தேனில் தீஞ்சுவை (பொலிவுபோல்) - வண்டுகள் உண்ணுகின்ற தேனில இனியசுவை பொலிதலபோலவும, செஞ்சொல் கவி இன்பம (பொலிவுபோல்) - செஞ்சொற்கவியில ரசம பொலிதல்போலவும், கன்னிமாடத்து உம்பரினமாடு - கன்னிமாடத்தின்மேலிடத்தில, (சீதாபிராட்டி வீற்றிருக்கின்றாள) கழிபேடோடு அன்னம ஆடும முன்துறைகண்டு அங்கு அயல் நின்றார் - இளமை மிகுந்த பெட்டை அன்னங்களோடு ஆணன்னங்கள் விளையாடுகின்ற முன்னிடத்தைப்பார்த்து அவ்விடத்திற்குப் பக்கத்தில் நின்றார எ - று. (உ௫)

உபமானத்திற் கேற்ப உபமேயம் வருவிக்கப்பட்டது. கழிபேடோடன்னமாடு மென்பதை உபமேயமாகக் கொள்ளலாகாதோ எனின் சீதாபிராட்டி வீற்றிருத்தலைவேறியாண்டு மோதாமையானும் "அன்றம்மாடத்தும் பரிக்கும்முதனனாள்" என்று இம்மாடத்தைச் சுட்டிக் கூறினமையானும் அன்னத்தைக் கொள்ளலாகாதென்க.

கசக. செப்புங்காலைச் செங்கமலத் தோன்முதலியாரும்
எப்பெண்பாலுங் கொண்டுவமிப்போருவமிக்கும்
அப்பெண்டானே யாயினபோதிங் கயல்வேறோர்
ஒப்பெங்கே கொண்டெவ்வகைநாடி யுரைசெய்வோம். (உ௬)

இ - ள். செப்புங்காலைச் செங்கமலத்தோன் முதல்யாரும் - சொல்லுங் காலைப்பிரமன் முதலிய எல்லாரும், எப்பெண்பாலும் கொண்டு உவமிப்போர் உவமிக்கும் அப்பெண்தானே இங்கு ஆயினபோது - எப்பிறப்புப் பெண்களுக்குஞ் சிறப்பாகக்கொண்டு உவமித்துச் சொல்லுவோர் உவமித்துச் சொல்லுகின்ற அத்திருமகள்தானே இங்கு சீதாபிராட்டியாய்த் திருவவதரித்தபோது, அயலவேறு ஓர் ஒப்பு-அன்னியமாகிய வேறொரு உவமையை, எங்கு நாடி-எவ்வுலகத்திற்றேடி, எவ்வகைகொண்டு-எவ்விதம கொண்டு, உரை செய்வேம் - சொல்லுவோம். எ - று. (௨௬)

தெய்வமகளிர் தொடக்கமாய எல்லாரும் அடங்குதற்கு எப்பெண்பாலு மென்றார். கருத்து எல்லாப் பெண்களுக்கும்

உவமம் சொல்லும் இலக்குமியே இங்கு திருவவதரித்தபோது அவளுக்கு ஒப்பு எங்கே கொண்டு சொல்லுவோம.

கரு0. உமையாளொக்கும்மங்கையருச்சிக்கரம்வைக்கும
கமையாண்மேனிகண்டவர்காட்சிகரைகாணா
திமையாநாட்டம்பெற்றிலமென்றாரிருகண்ணால
அமையாதென்றாரந்தரவானத்தவரெல்லாம. (உரு)

இ-ள். உமையாள் ஒக்கும் மங்கையர் - பார்வதியும அவளையொக்கும மகளிரும், உச்சிக்கரமவைக்கும் கமையாள் மேனி கண்டவர் - உச்சியில கரங்குவித்துத் தொழுதற்குரிய பொறுமை யுடையாளாகிய சீதாபிராட்டியின திருமேனியி னழகைப் பார்த்தவர், காட்சிகரைகாணா - அப்பார்வையினது எலலையைககாணமல், இமையாநாட்டம பெற்றிலம் என்றார் - மண்ணவர் இவ்வழகைப்பார்ப்பதற்குத் தேவரைப்போல இமையாத கண்களைப் பெற்றிலமென்று வருந்தினார், அந்தரவானத்தவர் எல்லாம் இருகண்ணால் அமையாது என்றார் - விண்ணவரெல்லாம் இரண்டு கண்ணாலபார்க்க முடியாது இந்திரன்போல ஆயிரங்கண்கள் வேண்டுமென்றார். எ-று. (உரு)

இமையாநாட்டம் பெற்றிலமென்றமையின் மண்ணவர் வருவிக்கப்பட்டது. உமையாள் ஒக்கும் - உமையாள் ஒப்பாவள், மங்கையர் - ஏனைமங்கையர் என்றுரைப்பாருமுளர். எப்பெண்பாலு மெனவே உமையாளுமடங்கிஅவளுககுமவள் உவமமாயினமை யினது பொருநதாது.

கருக. வென்றம்மானைத்தாரயில்வேலுங்கொலைவாளும
பின்றமமானப்போர்கயலஞ்சப்பிறழ்கண்ணாள
குன்றமமாடக்கோயினளிக்குங்கடலன்றி
அன்றமமாடத்தும்பரளிக்குமமுதன்னாள. (உசு)

இ-ள். அம்மானைவென்று - அழகிய மான்பார்வையைவென்று, தார் அயில்வேலும் கொலைவாளும் பின்ற - வெற்றிமாலையணியப்பெற்ற கூர்மைபொருந்திய வேலாயுதமுங் கொலைசெய்யும் வாளும் பின்னிடவும், மானம் பேர்கயல் அஞ்ச - சிறந்த பெரியகெண்டைகள் அஞ்சவும், பிறழ்கண்ணாள் - பிறழுகின்ற கண்ணுடையாளாகிய சீதாபிராட்டி, குன்றம் ஆடக்கோவின்

அளிக்கும் கடல் அன்றி - மந்தரகிரிசுழலத்திருமாலால் கொடுத்தருளிய கடலல்லாமல், அன்று அமமாடத்து உம்பர்அளிக்கும் அமுது அன்னாள் - அற்றையதினத்தில் அம்மாளிகையின் மேலிடம்கொடுத்த அமுதையொத்தவளாவள். எ-று.

மான் ஆகுபெயர்.

௬௨. பெருந்தோளல்குற்பெண்ணிவளொப்பாளொருபெண்ணை
தருந்தானென்னானான்முகனின்னுந்தரலாமே
அருந்தாவந்தத்தேவரிரந்தாலமிர்தென்னும
மருந்தேயல்லாதென்னினிநல்குமமணியாழி. (உஎ)

இ-ள். பெரும்தோ அலகுல் பெண் இவள் ஒப்பாள் ஒரு பெண்ணை - பெரியதேர்த தட்டினைபபோனற நிதமபததையுடைய பெண்ணாகிய இவளையொதத ஒருபெண்ணை, நான்முகன் தரும என்றால - பிரமனபடைககவலலனாயின, இன்னும் தரலாமே-இன்னும படைசகலாமே, அநதேவா - அத்தேவர்கள், அருநதா - முனபுபெறற அமிர்ததைதையுண்டு, வந்து இரந்தால-வந்துவேண்டினால, அமிாது என்னும் மருந்தேயலலாது-அமிர்தமென்று சொலலபபடுகிற மருநதையேயன்றி, மணி ஆழி இனி என் நல்கும-ரதநாகரமாகிய திருபபாற்கடல இனி வேறியாதைக்கொடுககும. எ-று. (உஎ)

நான்முகனின்னுந்தரலாமே, என்னினி நல்கும் மணியாழி என்றமையால பிரமனால படைக்கவும் கடலால் பெறத்தக்கவும் அல்லள எனபது. * "சமைத்தவனாயின்" என்பதனானுமுணர்க.

௬௩. அனையாண்மேனிகண்டபினண்டத்தரசாளும
வினையோர்மேவும்மேனகையாதிமின்னார்வேற்கண
இனையோருள்ளத்தின்னலினோடேமுகமென்னும்
பனிபோயகாலினவெண்மதிக்கொத்தம்பகலன்றே. (உஅ)

இ-ள். அனையாள் மேனிகண்டபின் - அச்சீதாபிராட்டியினழகைப் பார்த்தபின்பு, அண்டத்து அரசு ஆளும்வினையோர்-விண்ணுலகத்தை அரசாளுகின்ற நல்வினையுடையதேவர்கள், மேவும மேனகையாதி மின்னார்வேல் கண் இனையோர் - புணரு

* கோலங்காண்படலம் - உகூ.

கின்ற மேனகைமுதலாகிய பிரகாசிக்கின்ற வேல்போன்ற கண்களையுடைய இம்மாதர்களாகிய, உள்ளதது இன்னவிரோர்தம்மனத்தில் துக்கமுடையாராது, முகம் எனனும பனிதோயவானின்வெண்மதிககு என்றும பகல்-முகஙகளெனகிற குளிர்ச்சிபொருந்திய ஆகாயததிலுளள சந்திரனுககு (அத்திருமேனி) என்றும சூரியனுகும. எ - று. அனறு ஏ அசைகள். (உ-அ)

இரவும் அடங்குதற்கு எனறும் என்றூர். கருத்து - சூரியனைக்கண்டு சந்திரன் ஒளிமழுஙகுவதுபோலப்பிராட்டியார திருமேனியழகைககணடு மேனகையாதி மஙகையர்கள் அழுகுகுன்றுவர்.

௧௫௪. இழைகளுங் குழைகளு மின்ன முன்னமே
மழைபொருங் கண்ணிணை மடந்தை மாரொடும்
பழகிய வெனினுமிப் பாவை தோன்றலால்
அழகெனு மழகுமோ ரழகு பெற்றதே. (௩௪)

இ - ள். இழைகளும-ஆபரணங்களும,குழைகளும-தோடுகளும், இன்ன - இவைபோல வனவும, முனனமே - பிராட்டியார்திருவவதரிக்கு முனனமே, மழை பொருகண் இணை மடந்தை மாரொடுமபழகியவெனினும-குளிர்ச்சிபொருந்திய இரண்டு கண்களை யுடைய பெண்களோடும பழகியவாயினும, இப்பாவை தோன்றலால் - இச்சீதாபிராட்டி திருவவதரிததலால, அழகு எனும் அழகும ஓர் அழகுபெறறது-அழகுஎனறு சொலலப்படுகின்ற அழகும ஒப்பற்றஅழகைப்பெறறது எ-று. (௩௪)

அழகு எனும அழகும ஓர் அழகு பெற்றது - பாலைப்பருவத்திலிருந்த அழகெனறு சொலலபபடுகினறஅழகும ஒப்பற்ற யௌவன பருவததை யடைந்தது எனபாருமுளர.

௧௫௫. மாலுற வருதலும் மனமும் மெய்யுந் தன்
நூலுறு மருங்குல்போ னுடங்கு வாளொடும்
காலுறு கண்வழி புகுந்த காதல் நோய்
பாலுறு பிரையெனப் பரந்த தெங்குமே. (௪௧)

இ - ள். நெடும்கால் உறு கண்வழி புகுந்தகாதல் நோய்-நெடுந்தூரம் பார்க்குங் கண்வழியாகப் புகுந்த காமநோய், உ-ம்

"தெரிந்துணராகோககிய வுண்கண் பரிந்துணராப் - பைதலுழப் பதெவன்." எனவரும். (சக)

கருசு. கலங்குழைந்துகநெடுநாணுங்கண்ணற
நலங்குழைதரநகினமுகத்தினேவுண்டு
மலங்குழையெனவுயிர்வருந்திசசோாதர
பொலங்குழைமயிலைகசொண்டரிதிற்போயினா. (சரு)

இ-ள். நகில் முகத்தில் ஏ உண்டு - முலைமுகத்தில் மன்மதபாணத்தால் எய்யபபெறறு. (சரு)

கருஎ. அலலினைவருததகதோாலங்கறகாடெனும்
வலலெழுவலலவோாமரகதப்பெருங்
கலலெனுமிருபுடங்கமலங்கணணெனும்
விலலொடுமிழ்நததோாமேகமெனனுமால. (ருக)

இ-ள். வல் எழு அல்ல - வலிய தூண்கள் அல்ல. (ருக)

கருஅ. பிறநதுடைநல நிறைபிணிததவெநதிரம
கறஙகுபதிரியமெனகனனிமாமதில்
எறிநதவககுமரனையினனுமகணணிறகண
டறிநதுயிரிழககவுமாகுமேகொலாம (ருக)

இ-ள். பிறந்து உடை - எனனுடுபிறந்து நானுடைத்தாகிய, நலம் நிறைபிணித்த எந்திரம் - நன்மையாகிய கற்பாற் கட்டப்பட்டயந்திரம், கறங்கு பு திரியும் - சுழலாகின்று திரிகின்ற, என் கன்னிமாமதில் - எனது கன்னிப்பருவமாகிய பெரியமதிலை, எறிந்த அக்குமரனை - உடைத்த அக்குமரனை, இன்னுமகண்ணில்கண்டு அறிந்து - இன்னுமொருகால் கண்ணாற்பார்த்து அவனின்னானென்று தெரிந்து, உயிர் இழக்கவும ஆகுமே - உயிரை இழக்கவுங் கூடுமோ. எ - று. (ருகூ)

கருகூ. அன்னமெனனடையவட்கமைநதகாமந்தி
தனனையுஞ்சுடுமெனதரிக்கிலானென
நன்னெடுங்கரங்களைநடுக்கியோடிப்போய்
முனனைவெங்கதிரவனகடலினமூழ்கினான். (கூக

இ-ள். சீதாபிராட்டிக்கு அமைந்த காமத்தீ தன்னையுஞ் சுடுமென்று நிற்கத்தரிக்கிலான்போலச், சூரியன் கிரணங்களாகிய கரங்களை நடுக்கிக்கொண் டோடிப்போய்க் கடலிற் குளித்தானென்க. (கூக)

கசூ0. விரிமலர்ததென்றலாமவீசுபாசமும
எரிநிறச்செக்கருமிருளுங்காட்டலால
அரியவட்கனலதருமநதிமாலையாம்
கருநிறசசெமமயிர்கசாலனறோனறினன. (சூஉ)

இ-ள். விரிமலர்த்தென்றல் ஆய வீசுபாசமும் - மலர்ந்த மலர்களிற் றோய்ந்துவருகினறதெனறற்காற்றாகிய வீசுதற்குரிய கயிற்றையும், எரிநிறச் செக்கரும இருளும் காட்டலால் - தீநிற த்தையுடைய செவ்வானத்தையு மிருளையுந்தோற்றுவிததலால், அரியவட்கு - அரியவளாகிய சூரியன் மனைவிககு, அனல் தரும் அந்திமாலை ஆம் - அக்கினியை வளர்த்துக் கொடுககின்ற அந்தி மாலைப்பொழுதாகிய, கருநிறச் செமமயிர்க காலன்தோன்றி னன் - கரியநிறததையுஞ் செவநத மயிரையுமுடைய யமன் றோன்றினன, எ-று (சூஉ)

சூரியன் கழிந்தமையின் நீககுளிக்க அவன் மனைவிக்கு அக்கினி வளர்ததுககொடுக்கினற அந்திமாலைப் பொழுதாகிய யமன் வந்தானெனபது. இனி இவ்வாறனறி அரியவட்கு அனல் தரும் - அரியவளாகிய பிராட்டிக்கு வெபபததைத் தருகின்ற என்பாருமுளர். அவளுக்கு வெபபந்தரக காமனன்றிக காலன தோன்றக் காரணமின்மையறிக.

கசூச. மீதறைபறவையாமபறையுங்கீழ்விளி
ஓதமென்சிலமபொடுமுதிரச்செக்கரும
பாதகவிருள்செயகஞ்சுகமுமபறறலால
சாதகமெனனவுநதழைத்தமாலையே. (சூக)

இ-ள். மீது அறை பறவை ஆம்பறையும் - மேலே ஒலிக் கின்றபறவைகளாகிய முழக்குகின்ற பறையையும், கீழ்விளி- கீழே யொலிக்கின்ற, ஓத மென சிலம்பு ஒடு உதிரச்செககரும்- கடலாகிய மெல்லிய நூபுரத்தோடு செவ்வானமாகிய இரத்தத் தையும், பாதக இருள்செய கஞ்சுகமும்-பாபரூபமாகிய இருளா கிய கஞ்சுகத்தையும், பற்றலால் - கொண்டிருத்தலால், மாலை- அம்மாலைக்காலம், சாதகம் எனனவும் தழைத்தது-பூதமென்று சொல்லும்படியுந் தழைத்தது. எ-று. (சூக)

கசூஉ. மைவானிறததுமீனெயிற்றுவாடையுயிரப்பினவளாசெககாப
பைவாயநதிப்படவரவேயெனவுவளைதழபபகைத்தியால்
எய்வாளொருவன்கையோயானுயிருமொனறேயினியிலலை
உய்வாளுறவிப்பழிபூணவுன்றோடெனககுப்பகையுண்டோ.(சூசூ)

இ-ள். என் நாவளைத்துப் பகைத்தி - யாதுகாரணத்தால் நாவினால் வளைத்து என்னை வருத்துகின்றாய், எய்வான் ஒருவன் கையோயான்-அம்பெய்வானாகிய மன்மதன் சிறிதும் கையோய் கின்றானிலன், உயிரும் ஒன்றே இனி இல்லை - எனக்குயிர் ஒன் றே யுள்ளது வேறில்லை, உய்வான் உற - அம்மதனனுக்குப் பிழைத்துயிர்வாழ்வானிருக்க, (சுசு)

கசுரு. நீத்தமதனின் முளைத்தெழுந்த நெடுவெண்டிங்களெனுந்தச்சன்
மீத்தன் கரங்களவை பரப்பி மிகுவெண்ணிலவாம் வெண்சுதையால்
காத்தகண்ணன் மணியுந்திக் கமலநாளத்திடைப் பண்டு
பூத்தவண்டம் பழையதென்று புதுக்குவானும் போன்றுளதால். ()

இ-ள். நீத்தம் அதனில் முளைத்து எழுந்த - கடலிற்றோன்றிமேலெழுந்த, நெடுவெள் திங்கள் எனும தச்சன் - மிகுந்த வெள்ளிய சந்திரனாகிய தச்சன், மீத்தன் கரங்கள் அவை பரப்பி - மேலே தனது காங்களைப பரப்பி, மிகு வெள்நிலவாம் வெண்சுதையால் - மிகுந்தவெண்மை பொருந்திய நிலவாகிய வெள்ளிய சாந்தால், காத்தகண்ணன் மணி உந்திக் கமலநாளத்து இடை - உலகைக காத்தருளுகின்ற திருமாலினது அழகிய உந்திததாமரையின நாளத்தினிடமாக, பண்டு பூத்த அண்டம் பழையது என்று புதுககுவானும் போன்று உளது-ஆதிகாலத்திலுண்டாகிய உலகம பழைமையாயிற்றென்று புதுக்குவானையும் (நிலாததோற்றம) போன்றிருந்தது (எரு)

கசுசு. கொடியையல்லை நீ யாரையுங் கொல்கிலாய
மடிவிலின்னமுதத்தொடும் வந்தனை
பிடியின் மென்னடைப் பெண்ணொடென்றலைச்
சுடுதியோ கடறோன்றிய திங்களே. (எஎ)

இ-ள். கடல்தோன்றிய திங்களே - சமுத்திரத்தில் தோன்றிய சந்திரனே, நீ கொடியை அல்லை - நீ கொடுமையுடையாயல்லை, யாரையும் கொல்கிலாய் - யாரையும் கொல்லமாட்டாய், மடிவு இல் இன் அமுதத்தொடும் பிடியின் மெல்நடைப் பெண்ணொடும் - உண்டோர் சாகாத இனிய அமுதத்தொடும் பெண்யானையினது மெல்லிய நடையையுடைய திருமகளொடும், வந்

தனை என்றால் - பிறந்தனையென்றால், என்னைச்சுடுதியோ - என்னைச்சுடுவாயோ. எ-று. (எஎ)

அன்பிலாதானை நோக்கி நீ ஆணோடு பெண்ணோடு பிறந்திலையோ என்று பழிக்கும் உலகுவழக்குபற்றி பெண்ணோடு பிறந்த நீ என்னை வருத்தலாமோ என்றாள்

கசுரு மீதுமொய்த்தெழுவெண்ணிலவின்கதிர்
மோதுமத்திகைமென்முலைமேற்பட
ஓதிமப்பெடைவெங்கனலுற்றெனப்
போதுமொய்த்தமளிப்புரண்டாளரோ. (எஅ)

இ-ள். மோதும் மத்திகை - இரும்படிக்கும் சமமட்டியைப் போல, மீது மொய்த்து எழுவெள் நிலவின்கதிர் - மேலே நெருங்கி எழுகின்ற வெள்ளியசந்திரனது கிரணம்-மென்முலைமேல்பட - மெல்லியமுலைகளமேல்பட, (எஅ)

கசுசு. அரசமாதவன்யாதியைந்துநாட்டென்பால்வந்துன
புரைவிளக்கிடுகவென்றுசக்கடவுளர்போயபின்னர்
கிரைதவனவிரைவினோக்கெடுங்கட்டறக்கிறைவனவைக்கும்
உரவிடந்தனைநணணியுற்றவமுஞற்றுங்காலை. (௧௧௧)

இ-ள் நீ அரசமாதவன் ஆதி - நீ இராஜருஷியாகக் கடவை, ஐந்துநாள் தென்பால்வந்து உனபுரைவிளக்கிடுக - ஐந்து நக்ஷத்திரங்கள் தென்திசையிலவந்து உனது தபோபலத்தின் மேன்மையைத் தோன்றச்செயக, (௧௧௧)

ஐந்துநக்ஷத்திரங்களாவன அநுஷம, கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம என்பன. படைப்புககாலந்தொட்டு வடதிசைக்கண்ணிருந்த இவை விசுவாமித்திரர்க்காகத் தேவர்களால் தென்திசைவந்தன

கசுஎ. கொடுந்தருள்வெறுக்கைவேண்டிற்றொற்கமாம்விழுமங்குன்ற
எடுத்தெனைவளர்த்ததாதைக்கென்றவற்றெழுந்தகைநதன
தம்பருந்தேரினேறித்தடையிலாப்படாதலோடும
சுடாக்கதிர்க்கடவுள்வானத்துச்சியைக்குழலப்புக்கான். (௧௨௨

இ - ள். ஒற்கம் ஆம் விழுமம் குன்ற - தரித்திரமாகிய மிகுதி நீங்க, எனை எடுத்து வளர்த்த தாதைக்கு - என்னை எடு

த்துவளர்த்த தந்தைக்கு, வேண்டிற்று வெறுக்கை கொடுத்தருள் என்று -வேண்டியதாகிய பொருளைக் கொடுத்தருள்வா யென்று, அவன்தொழுது - அத்தாதையைததொழுது, (கஉஉ)

கசுஅ. அரைசனேடேகியூபத்தணைக்குபிம்மறையையாய்தி
விரசுவாமிணுேளாருமவிரிஞ்சனுமவிடைவலோனும
உரைசெறிவேள்விமுற்றுமுனதுயிாகசிறுண்டாகா
பிரசமென்றுரோயெனனபப்பிசசொடுமபெயாநதுபோனுன். ()

இ - ள யூபத்து அணைக்குபு - யூபத்தமபத்தில அணையாநின்ற பினபு, இம்மறையை ஆயதி - இம்மந்திரத்தை ஜபம் செய்தி செய்வாயாயின, (கஉஅ)

கஙக. புண்டரீகனுமபுட்டிருபபாகனும
குண்டையூர்திரவிச்யுமறறுள
அண்டர்தாமுமவநதுவாழ்த்தினையதிவே
றெண்டபோதனனாணனைனயெதிர்நதனா. (கஙச)

இ - ள். வேறு எண்தபோதனன் - பிறநதபிறப்பைமாற்ற எண்ணிய விசுவாமித்திரனை, (கஙச)

## கஉ-வது. குலமுறைகிளத்துபடலம்.

## சூரியவம்சத்தரசர் மேன்மையைக்கூறுகின்றபடலம்.

கஎo. பிணியரங்கவினையகலப்பெருங்காலாநதமாடபணி
மணியரங்கசெநமுடியாயமைரயணைவழிபட்டு
பணிடாங்கப்பெரும்பாயபடரஞ்சுடாயடாங்காண
அணியரங்கத்துநதாணையதியாதாரறிபாதா. (உ)

இ - ள். பிணி அரங்க - நோய் நீங்கவும், வினை அகல-அன்னேய்க்குக் காரணமாகிய பாபமொழியவும், மணி அரங்கநெடுமுடியாய் - அரதனங்கள் பதித்த பெரிய கிரீடமணிந்த சனகமகாராஜனே, அணி அரங்கம் - அழகிய திருவரங்க மென்னும் கோயிலில், தந்தானை - பிரதிட்டை செய்தவனை, (உ)

இவன் இட்சுவாகு.

கஎச. இடரோட்டவினெடியவரையுருட்டியிவ்வுலகம
திடரோட்டமெனக்கிடக்கும்வகையிரங்கிதெவ்வேந்தா
உடரோட்டநெடுவேலாயிவாகுலத்தோருவரிநீரக
கடரோட்டாரெனினவேறோரகட்டுரையுமவேண்டுமோ. (அ)

இ-ள். தெவ்வேந்தர் உடல்தோட்ட நெடுவேலாய-பகை யரசருடைய உடலைத் தொளைதத நீண்டவேறபடையையுடைய சனகமகாராசனே, இவா குலத்தோர் - இவா குலத்தோராகிய சாகரர், இடறு ஒட்ட - துன்பைப்போக்க, இனம நெடியவரை உருட்டி - கூட்டமாகிய உயாந்த மலைகளையுருட்டி, இவ் உலகம் திடல் தோட்டம் எனககிடககும் வகை இரஙகி - இப்பூமி திடல் போலவும தோட்டமபோலவும இருககுமபடி (குதிரைககாக) இரக்கமுற்று, உவரி நீரக்கடல தோட்டாா எனில் வேறு ஓர் கட்டுரையும வேண்டுமோ - உப்பு நீரககடலைத் தோண்டினார் என்றால் இதனினும வேறொரு புனைந்துரையுஞ சொல்லவேண் டுமோ. எ - று. (அ)

கஎஎ. சந்திரனைவென்றானுமுருத்திரனைச்சாயத்தானும
துந்துவெனுந்தானவனைச்சுடுசரத்தாறறுணித்தானும
வந்தகுலத்திடைவந்தாரகுவென்பானவரிசிலையால
இந்திரனைவென்றுதிசையிருநானகுஞ்செருவென்றான. (கக)

இ - ள். சந்திரன் தாரையைக்கூடி அவளை விடாதிருக்க அதுகாரணமாயத் தேவாகள் குருவினபக்கததிலும் அசுரர்கள் சந்திரன் பக்கத்திலும் சேர்ந்து போர் புரிய தேவர் அவ்வசுரர் களுக் குடைநதோடினர். பினபு குரு திலீபனைவேண்ட அவன் சென்று அசுரர்களைக் கொன்று சந்திரனை வென்று சநதிரஜேதா வென்னும் பெயா பூண்டானாகலின சந்திரனை வென்றானுமென் பவன் திலீபன. பகீரத சககரவாததி அசுவமேதஞ் செய்வதற் குப் பரியை விடுபப ஆறுமுகன அப்பரியைக கவர்ந்து செல்ல ப் பகீரதன் சென்று தனனை யெதிரதத சிவனைவென்றானாகலின உருத்திரனை வென்றானு மென்பவன் பகீரதன. இவ்வாறு கந்தப்புராணம் சனதகுமார சங்கிதையிற கூறப்பட்டது. துந் துவைத் துணித்தவன், குவலயாசுவன. அவன் அவனை மாய்த் தமையின், துந்துமாரனென்ற பெயர்கொண்டான். ரகுமகாரா சன் இந்திரனையும் எண்டிசையையும் வென்றான். (கக)

கஎங. அருவலியதிறலினராயறங்கெடுக்கும்விறலரக்கர்
வெருவருதிண்டிறலார்கள்விலலேநதுமெனிற்செம்பொற்
பருவரையுநெடுவெள்ளிப்பருப்பதமும்போலவாரகள்
இருவரையுமிவ்விருவர்க்கிளையாளுமீன்றெடுத்தாள். (உஉ)

இ-ள். அரும்வலிய திறலினராய் அறம் கெடுக்கும் விறல் அரக்கர் - பிறரால் வெல்லுதற்கரிய வலியுடைய வெற்றிபொருந்தினவராகிய தருமத்தைக கெடுக்கின்ற வீரமுடைய இராக்கதர்கள், வெருவரு திண் திறலாரகள் - அஞ்சமிகக பலமுடையார்களும், செம்பொன் பருவரையும் நெடுவெள்ளிப் பருப்பதமும் - செம்பொன்னுகிய பெரியமேருவும் வெள்ளியாகிய உயர்ந்த கைலாயமும், வில ஏந்தும் எனில்-வில்லேந்தி நிற்குமாயின், போல்வாரகள்-அவற்றை யொப்பவாகளுமாகிய, இருவரையும்-இலக்குமண சததுருக்கனரையும், இவ்விருவர்கு இளையாளும் ஈன்று எடுத்தாள் - கோசலை கைகைஎனனு மிருவர்கரும் இளையவளாகிய சுமிததிராதேவியும் பெற்றெடுததாள். எ-று. (உஉ)

---

## கரு-வது. கார்முகப்படலம்.

### சைவதனுசை இறுத்ததைக் கூறுகின்றபடலம்.

கஎச. இச்சிலையுகுத்தநற்கோற்கிலைகைகம்யாதெனபார
நச்சிலைநங்கைமேனாட்டுவேநதென்பார்
நிச்சயமெடுக்குங்கொலோவியானென்பார்
சிரசிலாங்கிசெய்தீமைதானெனபார. (க)

இ-ள். நாட்டுவேந்து - நமது நாட்டரசனுக்கு, நங்கைமேல் - சானகிமேல், நச்சிலை - ஆசையில்லை, எனபார - என்று சொல்லுவார். (க)

பெற்றபெண்மேல் காதலுள்ளவனுயின் இவ்வில்லை வளைத்தவனே நங்கைமணுளன் என்பாரேனு என்பதுகருத்து.

கஎரு. தாளுடைவரிசிலைசம்புவும்பாதம
நாளுடைமையினைவாநடுக்கநோக்கியிக்
கோளுடைவிடையனுன்குலத்துட்டோன்றிய
வாளுடையுழவனோமன்னனபால்வைத்தான். (கஎ)

இ-ள். இக்கோள் உடைவிடை அன்னான்குலத்துள்தோன்றிய - வில்லைவளைத்தவனுக்குப் பெண்கொடுப்பேனென்ற இக்கொள்கையையுடைய இடபத்தையொத்த சனகமகாராசனது குலத்திற்பிறந்த, (௧௪)

௧௭௬. இரும்பனையகருநெடுங்கோட்டிணையேற்றினபணையேற்ற
பெரும்பியலிற்பளிக்குநுகம்பிணைத்ததனோடிணைந்தீர்க்கும்
வரம்பின்மணிப்பொற்கலப்பைவயிரத்தின்கொழுமடுத்திட்
டுரம்பொருவிணிலம்வெள்விக்கலகில்பலசாலுழுதேம். (௧௫)

இ - ள். வேள்விக்கு-யாகஞ்செய்வதற்காக, இரும்பு அனைய கரும் நெடும் கோட்டு இணை ஏற்றின - இரும்பைப்போன்ற வலிய நீண்ட கொம்புகளையுடைய இரண்டிடபங்களின், பணை ஏற்ற பெரும்பியலில்-பருமைதங்கிய பெரியபிடரின் மீது, பளிக்கு நுகம்பிணைத்து அதனோடு அணைத்து ஈர்க்கும் - பளிங்கு நுகத்தைச்சேர்த்து அதனோடு பொருத்தி இழுக்கின்ற, வரம்பு இல் மணி பொன்கலப்பை - அளவற்ற ரதநங்களைப் பதித்த பொன்னாலாகிய கலப்பையில், வயிரத்தின் கொழுமடுத்திட்டு-வயிரத்தாலாகிய கொழுவை நுழைத்து, உரம் பொருவு இல் நிலம்-வலியா லொப்பில்லாதபுவியை, அலகு இல் பலசால் உழுதேம்-கணக்கில்லாத அனேகசால் உழுதோம். எ-று. (௧௫)

௧௭௭. குணங்களையெனகூறுவதுகொம்பினைச்சேர்ந்தவையுய்ய
பிணங்குவனவழகிவளைத்தவஞ்செய்துபெற்றதுகாண்
கணங்குழையாளெழுந்ததற்பின்கதிர்வானிற்கங்கையெனும்
அணங்கிழியப்பொலிவிழந்தவாறொத்தார்வேற்றுற்றார். (௧௬)

இ - ள். குணங்களைக்கூறுவது என் - அவளது நற்குணங்களையாம் கூறுவது எப்படி, அவை - அக்குணங்கள், கொம்பினைச் சேர்ந்து உய்ய - பூங்கொம்பு போன்றவளை அடைந்து மேன்மைபெறுதலும், பிணங்குவன-தம்முளொன்றுக்கொன்று மாறுபடுவனவாய், அழகு இவளைத்தவம் செய்து பெற்றது-அழகு இம்மையிலியைத் தவம்புரிந்து எய்தப்பெற்றதுகாண், கணம் குழையாள எழுந்ததன்பின் - பலவாய்த்திரண்ட குழையினையுடைய இவள் திருவவதரித்தபின்பு, வேறு உற்றார்-மற்றைப் பெண்கள், கதிர்வானில் கங்கை எனும் அணங்கு இழியப்

பொலிவு இழந்த ஆறு ஒத்தார் - ஒளி பொருந்திய சத்திய லோகத்தினின்றுங் கங்கையென்னுந் தெய்வப்பெண் மண்ணுலகிற்கு வந்ததால் தமது மேன்மையை யிழந்த மற்ற நதிகளை யொத்துப் பொலிவிழந்தார். (கஅ)

காண்முன்னிலை. பலவாயத்திரண்ட குழையணியும் விடுகாது அத்தேயத்திற்கு மக்களாதிக்கு முரித்தன்றென்பதை மறந்து கணங்குழையாள் என்று கூறினார்.

கசு. சித்திரமிங்கிதுவொப்பதெங்குண்டுசெயவினையால்
வித்தகமுமவிதிவசமுமவெவ்வேறுபுறங்கிடப்ப
அத்திருவையமராகுலமாதரிதாமெனவறிந்து
இத்திருவைநிலவேந்தரெல்லாருங்காதலித்தார். (கசு)

இ - ள். இங்கு சித்திரம் இது ஒப்பது எங்கு உண்டு - இங்கு ஆச்சரியம் இதனை யொப்பது எவ்விடத்திலுண்டு, இனி இதற்கு, சானகியின் உருவை யொப்பதாகிய சித்திரம் எவ்விடத்திலுண்டு என்பாருமுளர். அவ்வாறு கூறின் செயவினையால் என்பதோடு இயையாமைகாண்க (கசு)

உo. கலித்தானைக்கடலோடுங்கைத்தானைக்களிற்றரசர்
ஒலித்தானையெனவந்துமணமொழிந்தார்க்கெதிருந்து
புலித்தானைக்களிற்றுரிவைப்போர்வையான்போர்வில்லை
வலித்தானையிக்கைத்திருமணத்தானென்றியாமவலித்தேம். (உo)

இ - ள். கலி - ஒலியுடைய, தானைக்கடலோடும் - சேனையாகிய கடலோடும், கைத்தானகளிற்று அரசர் - துதிக்கையையும் மதத்தையும் பொருந்திய யானைகளை யுடைய அரசர்கள், ஒலித்து ஆனை என வந்து மணம் மொழிந்தார்க்கு - ஆரவாரித்து யானைகள்போல வந்து மணத்தைக்குறித்துப் பேசினவர்களுக்கு, எதிர் - மறுமொழி, புலித்தானை உடுத்தகளிற்று உரிவையான் - புலித்தோலை ஆடையாக வுடுத்திய யானையினது தோலாகிய மேற்போர்வையை யுடையவனாகிய சிவனது, போர் வில்லைவலித்தானை மங்கை திருமணத்தானென்று யாம் வலித்தேம் - வலியவில்லை வளைத்தவனே சானகியினது திருமணத்திற்குரியவனென்று யாங்கள் சொன்னோம். எ - று. (உo)

வலித்தானை என்னும் ஏற்றிலுள்ள ஐகாரம் சாரியை.

ச௮0. நாணுலாவுமேருவோடுநாணுலாவுபாணியும்
தூணுலாவுதோளுமவ்வாளியூடுலாவுதூணியும்
வாணிலாவினூலுலாவுமாலைமார்புமீளவும்
காணலாகுமாகினுவிகாணலாகுமேகொலாம். (சஎ)

இ - ள். நாண உலாவு மேருவோடு - நாண் பொருந்திய விற்பிடித்த இடது திருக்கரத்தோடு, நாண் உலாவு பாணியும்-வில் நாணைத்தெறிக்கும் வலது திருக்கரத்தையும், தூண் உலாவு தோளும-தூணை யொத்த தோள்களையும, வாளி ஊடுஉலாவு தூணியும-அம்புகள நிறைந்த அம்பறாததூணியையும், (சஎ)

க௮க. விண்டலங்கலந்திலங்குதிங்களோடுமீதுசூழ்
வண்டலம்பலங்கல்தங்குபங்கியோடுமாசிலைக்
கொண்டலொன்றிரண்டுகண்ணின்மொண்டுகொண்டெனாவியை
உண்டதுண்டெனெஞ்சினின்றுமுண்டதென்றுமுண்டரோ. ()

இ - ள். விண்தலம கலந்து இலங்கு திங்களோடு-ஆகாயத்திற்சேர்ந்து விளங்குகின்ற சந்திரனோடும, மீதுசூழ் வண்டு அலம்பு அலங்கல் தங்கு பங்கியோடும - மேற்சூழ்ந்த வண்டு களொலிக்கின்ற மாலைசூடிய சிகையோடும, மாசிலைக்கொண்டல் ஒன்று இரண்டு கண்ணின - நீண்டவில்லையுடைய ஒருமேகம் இரண்டு கண்களால, என் ஆவியை மொண்டுகொண்டு உண்டது உண்டு - எனதுயிரை மொண்டுகொண்டு உண்டதுண்டு, அது - அமமேகம், என நெஞ்சில இன்றும் உண்டு-எனது மனததிலிப்போதுங் குடிகொண்டிருக்கின்றது, என்றும் உண்டு-இனி எப்போதும் உண்டு, எ - று. (சஅ)

திங்கள - முகம, கொண்டல-திருமேனி,

க௮௨. எங்குநின்றெழுந்ததிங்குவந்ததென்னெஞ்சுலாய்
அங்கியன்றனங்கனெய்தவம்பினோடுவந்தசிந்தைநோய்
பொங்குகின்றகொங்கைமேல்விடம்பொழிந்ததென்னினும
கங்குல்வந்ததிங்களன்றுகண்களாகவிலையே. (ருக)

இ - ள். எனநெஞ்சு உலாம அங்கு இயன்று அனங்கன் எய்த அம்பின்வந்த சிந்தைநோய-எனது மனத்தி லுலாவி அங்கிருந்து மதனனெய்த அம்பினா லுண்டாகிய மனத்தி லுள்ளகாமநோய், (ருக)

## கச - வது. எழுச்சிப்படலம்.

## தயரதசக்கரவர்த்தி மிதிலைக்குச்சென்றதைக் கூறுகின்றபடலம்.

கஅங. கடுகியதூதருங்காலிற்காலிறசென
றிடிகுரன்முரசதிரயோத்தியெய்தினா
அடியிணைதொழுமிடமன்றிமன்னாதம
முடியொடுமுடிபொருவாயின்முன்னினார். (க)

இ - ள். கடுகிய தூதரும் காலில் காலில் சென்று - விரைந்துசென்ற தூதர்களும் தமது கால்களினாலகாற்றைப்போலஅதிவேகமாய்ப்போய், இடிகுரல் முரசு அதிர்அயோத்தி எய்தினர்- இடிமுழக்கம்போலப் பேரிகை முழங்காநின்ற அயோத்திமாநகரத்தைச் சார்ந்து, மன்னர் தம்முடியொடுமுடிபொருவாயில் அன்றி - அருள் சூடவந்த வேந்தர்களது முடிகளோடுமுடிகள் மோதுகின்றவாயிலைககடந்து, அடி இணை தொழும்இடம் முன்னினார் - தயரத சக்கரவர்த்தியினது பாதங்களைத் தொழுகின்ற இடத்தைச் சேர்ந்தார். (க)

கஅச. இலைமுகபபடததவரெழுதிக்காட்டிய
சலைமகனசிலைததொழிலசெவியிறசாாதலும்
நிலைமுகவலையநகணிமிர்நதுநீஙகிட
மலையெனவளர்நதனவயிரததோளகளே. (உ)

இ - ள். இலை முகப்படத்து - ஓலையில், அவர் எழுதிககாட்டிய - சனகமகாராசனும் கோசிகனும் எழுதிக்காட்டிய, தலைமகன சிலைத்தொழில் செவியில சார்தலும் - தனது மூத்த திருக்குமாரனது விற்றொழில் செவியிற் புகுதலும், (உ)

சிலைத் தொழிலாவது, சைவதனுசை இறுத்தானென்ற செய்தி.

கஅரு. வானவன்குலததெமாவரத்தினல்வரும்
வேனில்வேளிருநதவம்மிதிலைகோக்கிநம்
சேனையுமரசருஞ்செல்கழுநதெனு
ஆனைமேலமணமுரசறைகென்றேவினன். (ஏ)

இ - ள். வானவன் குலத்து எமர் வரத்திஞல் வரும் - சூரியகுலத்திற் றோன்றிய எம்முனனோர் வருந்திப்பெற்ற வரத்திஞல் திருவவதரித்த, வேனில் வேள்இருந்த அமமிதிலை நோக்கி- வசந்தகால மதனனை யொத்த இராமனிருககினற அம்மிதிலாபுரியை நோக்கி, (எ)

கஅசு. கால்விரிநதெழு துடைகணககிலோதிமம
பாலவிரிநசதுவெனபபறப்பபோனறன
மேல்விரிநதெழுகொடிபபடலைவிணணெலாம்
தோலுரிநதுகுவனபோனறுதோனறுமால். (சஉ)

இ - ள். கால்விரிந்து எழுகுடை - கம்பிகள் விரிநது எழுகின்றகுடைகள்,

சஅஎ. இழையிடையினவெயிலெறிககுமவ்வெயில
தழையிடைநிழலகெடததவழுமததழை
மழையிடையெழில்கெடமலருமமமழை
குழைவுறமுழஙகிடுகுழாங்கொளபேரியே. (கச)

இ - ள். இழை இடை இளவெயில் எறிக்கும் - ஆபரணங்களில் இளவெயில் வீசும், அவ்வெயில் தழை இடை நிழல் கெடத்தவழும் - அவ்வெயில குடை இடத்துண்டாகிய நிழல் கெடும்படித் தவழும், அத்தழைமழை இடை எழில் கெடமலரும்- அக்குடை மேகத்திலுண்டாகிய அழகுகெட விரியும், அம்மழை குழைவு உற - அமமேகஙகள் சிதையுமபடி, குழாம் கொள்பேரி - மிகுதிகொண்ட முரசுகள், முழஙகிடும் - முழங்கும் எ - று. (கச)

கஅஅ. மாறெனததடஙகளைபபொருதுமாமரம்
ஊறுபட்டிடவிடையொடிததுசசாயததுராய
ஆறெனச்செனறனவருவிபாய்கவுட்
டாறெனக்கனலுமிழ்தறுகணயானையே. (உகூ)

இ - ள். அருவி - மலையருவியினது, தாறு என - அளவுபோல, கவுள் - கதுப்பினின்று, பாய் - ஒழுகுகின்ற (மதத்தையும்) உமிழ் - கண்ணினின்று கக்குகின்ற, கனல் - கனற்பொரியையும், தறுகண்-அஞ்சாமையையும் உடைய, யானை - யானைகள், மாறுஎனத் தடங்களைப் பொருது - பகையென்று நினைத்து

மலைகளைமோதி, மாமரம் ஊறுபட்டு இட இடை ஒடித்து - பெரியமரங்கள் துண்டுபட நடுவிலொடிதது, சாயத்து உராய் - சாய்ததுத் தேயத்து, ஆறு எனச் சென்றன - அவ்விடமே வழியாகபபோயின. எ - று. (உ௯)

௧௨௯ தோணமிடைநதன தூணமிடைநதென
வாணமிடைநதன வானமினமிடைநதென
தாணமிடைநதன தமமினமிடைநதென
ஆணமிடைநதன ஆளிமிடைநதென (௩0)

இ-ள். தம்மில் மிடைந்து என-ஒருவன காலகளிரண்டுந தம்முள நெருங்கினறபோல, தாள மிடைந்தன - ஆடவர்கால்கள் நெருஙகின, (இதனுல் நெருககத்தையுணாததியவாறு) ஆளிமிடைநதென - சிஙகஙகள நெருஙகினறபோல, ஆள்மிடைநதன - காலாட் படைகள் நெருஙகின. (௩0)

௧௩0. துணைததசாமரைசோவததொடாநதோடா
கணைககருஙகணிருளையோாகாளைதான
பணைததவெமமுலைபபாய மதயானையை
அணைககநஙகைககககலிடமிலலெனருன. (௩௧)

இ-ள். ஓர்காளை - ஓராண்மகன, துணைத்ததாமரை சோவத்தொடர்நது அடா - இரணடாகிய தாமரை மலர்போன்ற பாதங்கள் வருந்த ஓடிவந்து நெருஙகி, கணைக்கரும் கண்ணினளை - அமபுபோன்ற கருஙகணணுடைய ஒருததியைப் பார்த்து, பணைத்த வெம்முலைப்பாய மதயானையை - பருததவிருபபத்தைத் தருகின்ற முலையாகிய பாயகின்ற மதயானையை, அணைகக நம் கைக்கு அகல இடம இல் எனருன் - பிடிகக நமது கையில அகன்ற இடம் இலலையென்று சொல்லினன்.

முலையாகிய யானையைப் பிதிராமல் கச்சால் கட்ட இந்நங்கைக்கு அகன்ற மாபிலலையென்ருன் எனினும அமையும். ()

௧௩௧. அரததநோககினாராநிரணமேனியர்
பரிததகாவினாபபபரேகினா
திருததகூடததிறநின கணையததொடும்
எருததிளைததியமாலகளிறெனனவே. (௩௨)

இ - ள். திருத்து கூடத்தில் - அடக்குதற்குரிய சம்மட்டி யோடு, திண்களையத்தொடும் - தம்மைகட்டும் வலிய கம்பத் தோடும், எருததில ஏந்திய மால்களிறு என்ன - பிடர்மேற் சுமந்து செலலுகின்ற பெரிய யானைகளைப்போல, அரதநம் நோக்கினர் - இரத்தம் போன்ற கண்களுடையாராய, அல்திரள் மேனியர் - இருள் திரண்டாற் போன்ற தேகமுடையாராய, பரி த்தகாலினர் - சுமந்த காலடி யுடையராய், பப்பார் ஏகினர்-பப் பரர் சென்றார. (ந-அ)

கக௨. நுடசிலமபியலாநதன நுணடுகில
கடசிலமபுகருங் குழலார்குழு
உடசிலமபுசிலமபவொதுஙகலால
புடசிலமபிடுபொய்கையுமபோனறதே. (சகூ)

இ - ள். நுண் சிலம்பி அலாநதன - நுண்ணிய சிலந்திப பூச்சிகள பாவினாற் போன்ற, நுண் நுகில் - மெல்லிய வலைகள், கண் சிலம்பு - முகஙகளிற பரவுகின்ற, கருமக குழலார் குழு-கரிய கூந்தலையுடைய பெண்கள் கூட்டம,உள்-தம்முள்,சிலம்பு சிலம்ப ஒதுங்கலால - பாதநூபுரமெலிக்க நடத்தலால், புள சிலம்பிடு பொய்கையும போன்றது - பறவைக ளொலிகின்ற தடாகத்தையுமொத்தது. (சங)

நுகிலும கண்ணும ஆகுபெயா - இக்காலை ஊணமாதா தரி க்கும் முகவலை அக்காலத்தே உண்டெனக.

கககூ. உழைகலித்தனவென்னவுயிர்த்துணை
நுழைகலிக்கருங்கணணியாநூபுர
இழைகலித்தனவினனியமாவெழு
மழைகலித்தெனவாசிகலித்தவே (சஅ)

இ - ள். உழைகலித்த என்ன-மான்கள் ஒலிததாற்போல, .யிர்த்துணை நுழைகலிக கருங்கண்ணியர் நூபுரம் இழைகலித் ன - கணவரிடஞ்செல்லும் வஞ்சகமுடைய கரியகண்ணுடை மாதர்களது காறசிலம்பாகிய ஆபரணங்கள் ஒலித்தன, இன் யம் ஆ எழுமழை கலித்தென - ஆரமபத்தில் இனியவாத்திய ாகத் தொடங்குகின்ற மேகங்கள் ஒலித்தாற்போல, வாசிகலித் - குதிரைகள் கனைததன. எ - று. (சஅ)

கககச. எண்ணமாத்திரமும்மரிதாமிடை
வண்ணமாததுவர்வாய்க்கனிவாயச்சியர்
திண்ணமாததொளிர்செவ்விளநீரிழி
சுண்ணமாத்தனதூளியுமாத்தவே. (ருo)

இ - ள். எண்ணமாத்திரமும அரிதாம் இடை - நினைத்தல வளவுக்கும் அரிதாகிய இடையும, வண்ணம - நிறமும, மா - பெருமையும் பொருந்திய, துவர்வாய - பவளமபோன்ற வாயினையும், கனிவாய்ச்சியா - கனியின ரசம்போன்ற சொல்லையுமுடைய பெண்கள், திண்ணம ஆதது ஒளிர் செவ்விளநீர இழி - வலிமையாக கச்சாற்கட்டப்பட்டு விளங்குகின் முலைகளினின்று முதிர்ந்த, சுண்ணம ஆத்தன - சுண்ணபொடிகள் நிறைந்தன, தூளியும் ஆத்த - மண்தூளிகளும் நிறைந்தன. எ - று. ()

## கரு - வது. வரைக்காட்சிப்படலம்.

## சந்திரசைலத்தைப் பார்த்ததைச்சொல்லும் படலம்.

ககரு. கோவையார்வடகொழுங்கவடொடிதரநிவர்ந்த
ஆவிவேட்டனவரிசிலையனங்கனமேற்கொண்ட
பூவைவாயசியர்முலைசிலர்புயதொடும்பூட்ட
தேவதாரத்துஞ்சந்திநும்பூட்டினசிலமா. (க)

இ-ள். கோவை ஆர்வடகொழும் கவடு ஒடிதர நிவர்ந்த- கோர்வை நிறைந்த முத்துவடத்தோடு கொழுமையுள்ள கிளையாகிய இடை யொடியபபருத் துயர்ந்தனவாய், ஆவிவேட்டன- ஆடவரதுயிரை வேட்டஞ்செய்தனவாய், வரிசிலை அனங்கன் மேற்கொண்ட - கட்டமைந்த கருப்புவில்லையுடைய மதனனால் முடியாகத் தலைமேற் கொள்ளப்பட்டனவாயுள்ள, பூவை வாய்சசியர் - நாகணவாயப்புளளின் சொல்லையொத்த சொல்லுடைய பெண்கள், முலை சிலர் புயதொடும்பூட்ட - முலைகளைத் தமது கணவர்புயங்களோடுஞ் சேர்க்க, சிலமா - சிலயானைகள், தேவதாரத்தும் சந்திநும் பூட்டின - தேவதார மரங்களிலும் சந்தனமரங்களிலுங கட்டப்பட்டன.

இனியோருரை. கோவை ஆரவடகொழும் கவடு ஒடிதர- ஆகாயத்தைப் பொருந்திய ஆலமரத்தினது கொழுமையான கிளைகள் ஒடிய, சிலமா - சிலயானைகள், நிவாந்த - உயர்ந்தன வாய், ஆவிவேட்டன - தடாகத்தை விரும்பினவாய், வரிசிலை அனங்கனமேற்கொண்ட - வரிசிலை அனஙகன்போல்வாரை தம் மேற்கொண்டுவந்தனவாய, பூவைவாயச்சியா முலை சிலர் புயத் தொடுமபூட்ட - சேர்கக, தேவதாரத்துமம சந்தினும் பூட்டின- கட்டப்பட்டன. எ-று. (க)

முலைசிலா புயத்தொடும பூட்ட என்றது - யானைகளினின் றும் இறஙகும் மகளிா தமது கணவரது தோளைததழுவி இறங குதலை.

ககசு. மாறுகாணுமதாயநின்றுமழையெனமுழஙகும
தாறுபாயகரிவனகரிதணடததைததழுவி
பாறுபினசெலககாலெனசசெலவதுபண்டோா
ஆறுபோகியவாறுபோமாறுபோனறதுவே. (ரு)

இ - ள். தாறுபாய்கரி - அங்குசத்தாற் குத்தப்பட்ட அர சன் யானை, வனகரி தண்டத்தைத தடவி-காட்டி யானையினது வழியை நாடி, பாறுபினசெலக காலெனச் செல்லுவது-பருந்து கள்பின் தொடரக் காற்றைப்போலச் செல்லுதல், (ரு)

ககஎ. அலகிலானைகளனேகமுமவறறொடுமிடைநத
திலகவாணுதறபிடிகளுஙகுருளையுஞசெறிநத
உலவைநீளவனததூதமேயொததசுவலுதத
தலைவனேயொததுபபொலிநதுசநதிரசலம. (எ)

இ - ள். அலகு இல் ஆனைகள் அனேகமும் - கணக்கில் லாத யானைக ளனேகமும, அவற்றொடு மிடைந்த திலகம்வாள் நுதல் பிடிகளும்-அவற்றோடு சேர்நததிலகமணிந்த ஒளிபொரு ந்திய நெற்றியையுடைய பிடிகளும், குருளையும் - கனறுகளும் செறிந்த உலவை நீள்வனதது - நெருங்கிய மரகொம்புகள் நீண்ட வனததிலுள்ள, ஊதமே ஒத்தது - யானைக்கூட்டத்தை யேயொத்தது, சந்திரசயிலம் - சந்திர சயில மென்னுமலை, அவ் வூதத்தலைவனே ஒத்துப் பொலிந்தது -அவ்யானைககூட்டத்தலை வனையே யொத்து விளங்கிற்று. எ - று. (எ)

சகூஅ. கொவவைநோககியவாய்சளையிநதிரகோபம
கவவிநோககினவெனறசொலகாட்டினமயிலகள்
நவவிநோககியாநலங்கொணமேகலைபொலஞ்சாயற
செவ்விநோககினதிரிவனபோல்வனதிரிநத. (கூ)

இ - ள். காட்டு இனமயில்கள் - வனததிலுள்ள கூட்டமாகிய மயிலகள், நவ்வி நோககியா - மானபோன்றபார்வையுடையமகளிரது, கொவ்வை நோக்கிய வாய்களை - கொவ்வைக்கனிபோன்ற அழகுடைய வாய்களை, இந்திர கோபம கவ்வி நோக்கின எனறு சொல - இந்திரகோபப் பூச்சியைக கவ்வி அழகுடையன வென்றே, நலம்கொள்மேகலைபொலம்சாயல்செவ்வி-அம்மகளிரது அழகைககொண்ட மேகலாபரணத்தின அழகிய பொன்மயமாகிய சாயலையும அழகையும, நோக்கின திரிவன போல வன திரிந்த - பாரததுச சூழ்வன்போல்வனவாய்த திரிந்தன

இ-ள், இளையோன் - இலக்குமணன், தீட்டாத வேல்கண் சிறுதாய் -தீட்டாத வேல்போன்ற கண்ணுடைய சிறுதாயாகிய கைகேசி, வரத்தினால் கிளர்ஞாலம் மீட்டாள் - வரத்தால் இடமகன்ற புவியை மீட்டு, தம்முனின் வனம் அளித்தாள் எனதம்முனுக்குவனத்தைக கொடுத்தாளென்று, கேட்டான்-கேட்டு, யாவராலும் மூட்டாத காலக்கடைத் தீஎன - யாவராலும்-மூட்டப்படாத ஊழிக்கடையின் தீயைப்போல, வெம்மைமுற்றி-வெப்பமிகுந்து, மூண்டு எழுந்தான-முனிந்தெழுந்தான். ()

எரு. கண்ணிறகடைததீயுசசெறறிபிறககறறைநாற
விணணிறசுடருஞசுடர்தோன்றமெயநாவிரிபப
உணணிறகுமுயிாபபெனுமூதைபிறககினற
அணணறபெரியோனறனதாதியினமூாததியொத்தான். (கசசு)

இ-ள். உள்நிற்கும் உயிர்ப்பு என்னும் - உடலுள்ளே நிற்கும் மூச்சாகிய, ஊதை பிறக்க நின்ற அண்ணல் பெரியோன்-ஊழிக்காற்று தோன்ற நின்ற பெருமை பொருந்திய பெரியோ

ன், கண்ணில் கடைத்திஉக - கண்களினின்று ஊழித்தீ சிதற வும், நெற்றியில் கற்றை நாற - நெற்றியில் சோதிவீசவும், (அதனால்) விண்ணில் சுடரும் சுடர்தோன்ற - இறுதியிலாகாயத்திற் பிரகாசிக்குஞ் சூரியன தோனறவும், மெயநீர் விரிப்ப - திருமேனியினினறு பிரளயகாலவெள்ளம பெருகவும், தனது ஆதியின்மூர்த்தி ஒத்தான் - தனதாதியின் மூர்த்தியையொத்தான். ()

தனதாதி மூர்த்தியாவது - ஆதிசேடமூர்தநி. ஊழிமுடிவில் ஆதிசேடனது திருமேனியினினறு அந்நான்குந் தோன்றி உலகையழிக்குமெனக.

எசு. விண்ணாட்டவர்மண்ணவர்விஞ்சையாநாகாமறறும்
எண்ணாட்டவாயாவரும்நிறகவோாமூவராகி
மண்ணாட்டினர்காடடினாவீடடினர்வநதபோதும
பெணணாடடமொட்டேனினிபபேருலசததுளெனறு .(கஉஉ)

இ-ள். விண்நாட்டவர் - விண்ணுலகத்தாரும், மண்ணவர் - மண்ணுலகத்தாரும், விஞ்சையர் - விஞ்சையரும, நாகா - நாகலோகத்தாரும், மறறும் எண்நாட்டவர் யாவரும நிற்க - வேறு எண்ணத்தகுந்த நாட்டிலுள்ளவரெல்லாரும் நிற்க, ஓர் மூவர் ஆகி - ஒரு மூவராகி, மண்காட்டுனர் - புவியைப் படைக்கின்றவரும், நாட்டுனர் - காக்கின்றவரும், வீட்டுனர் - அழிக்கின்றவரும், வந்தபோதும் - வந்தகாலத்தும், இனிப் பேர்உலகத்துள் - இனி இப்பெரிய வுலகத்துள், பெண்ணாட்டம் ஒட்டேன்என்று - பெண்தோற்ற மிருககவைக்கேனென்று. எ-று. (கஉஉ)

எஎ. நஉறுழைபயுமீதவிராயசனிவயிற்றில்
பெற்றாயுமீயேபிறரிலலைபிறர்கருநல்கக
கறறாயிதகாணுதியெனறெசசைமறிசசான்
முறறுமதியம்மிலைநதாணமுனிநதாலையனறன. (கநகூ)

இ-ள். முற்றுமதியம் மிலைந்தான - முதிராத பிறையைச் சூடிய சிவனை, முனிந்தானை அன்னான் - கோவித்தகாமனையொத்த இலக்குமணன், (கநகூ)

எஅ. தாயாற்றுகிலாாதனையாற்றுனொாகள்தமபால
தீயாற்றுகிலார்தனிச்சிந்தையினின்றுசெற்ற
நோயாற்றுகில்லாவுயிர்போலுடங்கிடையாா
மாயாப்பழியாள்தாவற்கணையேக்கிவந்தார். (கசக)

இ-ள். ஆற்றுகிலாள்-பிரிவையாற்றாதவளாகிய, தாய்தனை-சுமித்திராதேவியை, ஆற்றுகின்றார்கள் தம்பால் - ஆறச்செய்கின்ற ஸ்ரீராமலக்குமணரிடத்தில், மாயாப்பழியாள் தர-அழியாதபழியையுடைய கைகேசிகொடுக்க, தீ ஆற்றுகிலார்-நெருப்பைப் பொறுககாதவருடைய, தனிச்சிந்தையின் நின்றுசெற்ற-மெலிந்த மனத்தினின்று கொல்லத்தக்க, நோய் ஆற்றுகில்லா உயிர்போல-நோயைப் பொறுக்காதவருடைய உயிரைப்போல, துடங்கு இடையார் - துவளும் இடையுடைய பெண்கள், வற்கலை ஏந்திவந்தார் - மரவுரியைக கொண்டுவந்தார். (கசசு)

எகூ. தண்டலைகோசலைத்தலைவனமாதரை
கண்டனனிரவியுங்கமலவாண்முகம்
விண்டலத்துறையும்நலவேந்தறகாயினும
உண்டிடருறறபோதென்னுருதன. (கஅசு)

இ-ள். இரவியும் - சூரியனும், தண்டலைகோசலைத் தலைவன்மாதரை - சோலைகளையுடைய கோசலதேயத தரசனாகிய தயாதனுடைய மனைவிகளது, கமலம வாள்முகம் - தாமரை மலர்போன்ற வொளியுடைட்ய முகஙகளை, கண்டனன - பார்த்தான், (கஅசு)

அ0. வலஙகடிநதேழையராயமன்னரை
நலஙகடிநதறஙகெடநயககாலீகளநும
குலங்கடிந்தானவலிகொணடகொண்டலை
நிலங்கடிநதாளொடுநிகரொனறாகிலர். (ககூக)

இ-ள். நும்குலம் கடிந்தான் - நுமதுகுலத்தை யழித்த பரசுராமனது, வலிகொண்ட கொண்டலை - வலியை வாங்கிய மேகமாகிய ஸ்ரீராமபிரானை, (ககூக)

சாதியொப்புமை பற்றி நுங் குலங்கடிந்த என்றார்.

அக. நிறைமகவுடையவாநெறிசெலைம்பொறி
குறைமகுறையினுமகொடுப்பராமுயிா
முறைமகனவனமபுசமொழியைக்காகின்ற
இறைமகன்றிருமணமிருமபெணாாசிலா. (ககூரு)

இ-ள். நிறைமகவு உடையவர்-அதிகம் புத்திரருடையவர், நெறிசெல் ஐம்பொறி-நெறியிற்செல்லும் ஐம்பொறிகள், குறை

மக குறையினும் - இல்லாதமகவுசாகினும், உயிர்கொடுப்பராம் - உயிரை நீக்குவராம், (௧௯௫)

அதிகம் புத்திரருடையோர் அங்கவீனமுடைய மகவுசாகினும் உயிர்கொடுப்பரென்பது கருத்து.

௮௨. ஆடினாரழுதனரமுதவேழிசை
பாடினாரழுதனர்பரிந்தகோதையா
ரூடினரழுதனருயிரினன்பரைக்
கூடினாரழுதனர்குழாங்குழாங்கொடே (௨௧௧)

இ-ள். குழாம் குழாம்கொடு - கூட்டங்கூட்டமாக நின்று, ஆடினர் அழுதனர் - ஆடினரெல்லாரும் அழுதார், (௨௧௧)

இவ்வாறே முடித்துக்கொள்க.

௮௩. திக்குநோக்கியதீவினைப்பயனெனச்சிந்தை
நெக்குநோக்குவோர்நல்வினைப்பயனெனநேர்வோர்
பக்கம்நோக்கலென்பருவரலின்பமென்றிரண்டும்
ஒக்கநோக்கியயோகருமருந்துயருழந்தார். (௨௧௫)

இ-ள். தீவினைப்பயன் - பாவத்தின் பயனாகிய துன்பங்கள், திக்கு நோக்கிய என - உமக்கு வந்தன வென்று சொல்ல, சிந்தைநெக்கு நோக்குவோர் - மனம்வருந்துவோர், நல்வினைப்பயன் என நேர்வோர் - புண்ணியத்தின் பயனாகிய இன்பங்கள் வந்தனவென்று சொல்ல மகிழ்வோர், பக்கம் நோக்கல் என் - அவ்விருதிறத்தார் கருத்தை நோக்குவதென்னை, பருவரல் இன்பம் என்ற இரண்டும் - துன்ப இன்பங்களென்ற இரண்டையும், ஒக்க நோக்கிய யோகரும் - ஒருதன்மையாயெண்ணிய ஞானியரும், அருந்துயர் உழந்தார் - அரியதுன்பத்தை யனுபவித்தார். எ-று. (௨௧௫)

௮௪. அண்ணலன்னசொற்கேட்டனனன்றியும்
உண்ணிலாந்தகருத்துமுணர்ந்தனன்
கண்ணினீர்க்கடல்கைவிடநேர்கிலன்
எண்ணுகின்றனனென்செயற்பாற்றென. (௨௨௭)

௮௫. அனையவேலையகன்மனையெய்தினன்
புனையுஞ்சீரத்துணிந்துபுனைதனன்
நினைவில்வள்ளல்பின்வந்தயல்நின்றனன்
பனையினீள்கரம்பற்றியகையினன். (௨௨௮)

இ-ள். நினைவு இல்வள்ளல் பின்-அழைத்துப்போக மனமில்லாத ஸ்ரீராமபிரானுக்குப்பின்பு, "என்செயற்பாற்றென்" என்றமையின் அழைத்துப்போவதோ இல்லையோ வென்னும் ஆலோசனையிலிருக்கின்ற ஸ்ரீராமபிரானுக்குப் பின்பு, எனவுமாம.

அசு. பிரிதொராமாற்றமபெருந்தகைபேசலன்
மறுகிவீழ்ந்தழுமைந்தருமாதரும்
செறுவில்வீழ்ந்தநெடுந்தெருச்சென்றனன
நெறிபெருமையரிதினினீங்குவான (உகூகூ)

இ-ள். செறுவில் வீழ்ந்த நெடும் தெருசசென்றனன்-வயல்போலச் சேறுபட்ட நெடியவீதியிற் போனான, (உகூகூ)

அஎ சீரைசுற்றித்திருமகளபினசெல
மூரிவிறகையிளையவனமுனசெல
காரையொத்தவனபோமபடிகணடவவ
வூரருற்றதுணர்த்தவுமொணணுமோ. (உகூச)

இ-ள். சீரைசுற்றித் திருமகள் பின் - மரவுரியை யுடுத்துச் சென்ற சீதாபிராட்டிக்குப்பின்பு, மூரிவில்கை இளையவன்செல- வலிபொருந்திய வில்லைக் கையிலுடைய இளையபெருமாள் செல்ல, காரை ஒத்தவன் முனசெல - மேகத்தையொத்த ஸ்ரீராமபிரான் முன்புசெல்ல, போம்படிகண்ட அவ் ஊர் - செல்லும்படி பார்த்த அநநகரார், உற்றது உணர்த்தவும் ஒண்ணுமோ- அடைந்ததாகிய துயரத்தைச் சொலலவுங்கூடுமோ (உகூச)

## ரு-வது. தைலம்மாட்டுபடலம்.

## சக்கரவர்த்தியின் சரீரத்தைத் தைலத்தோணியிற் பெய்ததைக் கூறுகின்றபடலம்.

அஅ. கைசணிபாநதகால்தொடரக்கண்ணுரும
வெய்யகோவெள்ளத்தமெள்ளச்சேறலால்
உய்யவேழுலகுமொன்றுணநீருழல்
தெய்வநீனெருத்தச்செம்பொறரோரோ. (க)

இ-ள். செம்பொன் தேர் - ஸ்ரீராமபிரானேறிய செம்பொ ன்றாலாகிய திருத்தேர், கண் உகும் - கண்ணினின்றுபெருகும், கைகள் நீர்பரந்து கால்தொடர - கைகளினற புனல் பரந்துல கிற்செல்ல, வெய்யநீர் வெள்ளத்து மெள்ளச்சேறலால் — வெப் பம்பொருந்திய அந்நீர வெள்ளத்தில் மெள்ளச்செல்லுதலால், ஏழ் உலகும் உய்ய ஒன்றான நீர் உழல் - ஏழுலகுமுய்ய வொன் றாகிய பெரும்புனலிற் சுழலுகின்ற, தெய்வமீன ஒத்தது-மச் சாவதாரப்பெருமாளை யொததது. (உ)

அக. வட்டமோரோசனைவளைவிறறுயநடு
எட்டனையிடவுமோரிடமிலாவகை
புட்டகுசோலையினபுறததபபோாதரென
விட்டதுகுரிசிலைவிடாதசேனையே. (அ)

இ-ள். குரிசிலை விடாதசேனை - ஸ்ரீராமபிரானை விடாதசே னை, ஓர் ஓசனை - ஒருயோசனைதூரம, வட்டம் - வட்டமாக, வளைவிற்றாய் - வளைவினையுடையதாகி, நடு என் தனை இடவும் ஓர் இடம் இலாவகை - நடுவிலெள்ளைப் பெய்யவுமொரு சிறு இடமிலாதவிதமாய், புள் தருசோலையின் புறத்து - பறவைகள் தங்குகின்ற சோலையினிடததில, போர்த்து என - போர்த்தாற் போல, விட்டது - சூழ்ந்துவிட்டது. எ - று. (அ)

க0. செவ்வியகுரிசிலகூறததோழலானசெப்புவானவ
வெவ்வியதாயில்தீயவிதியினிலமேலெனபோலாம
இவவையினினனைநீக்கியின்றுயிாதிாநதினறேஎ
அவவையினனையகாணடறசமைதலாலளியனெனானன. (உ0)

இ-ள். அவ்வெவ்வியதாயில - தீக்குணமுடைய அச்சிறிய தாயினும், தீயவிதியினில - தீயவிதியினும, மேலென போலாம்- யான்பெரிய வன போலாம. (உ0)

கக. ஆளவினையாணமைபிறரிறமபலனெறுநத
தாள்முதல்வனையங்கயதவிர்திணைபோலவான
வாழ்வினைவசததுயிாநிலையெனவுனனுவான
வாழ்வினைபோக்கியையவனயகிபோக்கினன. (கக)

இ - ள். ஆண்மையில் - ஆண்டானொருகாலை, ஆள்வினை- அடிமைத் தொழிலுடையோர், திறமபல் அன்று எறு - ஏவி பனை மறுத்தல முறையன்றெனறு, (கக)

௬௨. மருமத்துத்தன்னையூன்றுமமறக்கொடும்பாவந்தீர்க்கும்
உருமொத்தசிலையினோரையொருப்படுத்துதவுகின்ற
தருமத்தின்விளைவையெண்ணிக்களிப்பொடுகாணவந்த
தருமத்தினவதனமென்னப்பொலிந்ததுதனிவெண்டிங்கள். (௬௦)

இ-ள். மறக்கொடும் பாவம் தீர்க்கும்-கொலைமுதலிய கொடியபாவங்களை நீக்குகின்ற, மருமத்துத் தன்னை ஊன்றும்-திருவுள்ளத்தில் தன்னை நினைக்கின்ற, உரும் ஒத்தசிலையினோரை-இடியொத்த ஒலியுடைய வில்லுடையோரை, (௬௦)

தன்னையென்றது-தருமத்தை.

௬௩. நோயுமின்றிநோன்கதிர்வாள்வேலிவையின்றி
மாயுஞ்செல்வமக்களினோலோமறமன்னன்
காயும்புள்ளிச்சீற்றநாகமகனிவாழை
வேயும்போன்றானென்றுமயங்காவிழுகின்றாள். (௬௬)

இ-ள். நோயும் இன்றி - பிணியுமின்றி, நோன்கதிர்வாள் வேல் இவை இன்றி - வலிமைபொருந்திய ஒளியுடையவாள்வேலென்னு மிவையுமின்றி, மறம மன்னன்-வெற்றியுடைய சக்கரவர்த்தி, செல்வமக்களினோலோ - தனது அருமைப்புத்திரர்களினாலோ, மாயும்-இறப்பான, கீற்கடம்-ஞெண்டையும், காயும் புள்ளி நாகம் - சீறுகின்ற புள்ளியையுடைய சர்ப்பத்தையும், கனிவாழை - கனியுடைய வாழையையும், வேயும்-மூங்கிலையும், போன்றான் என்று-என மகன் ஒததானென்று, மயங்காவிழுகின்றாள்-மயங்கி விழுகின்றாள். எ-று (௬௬)

௬௪. வேள்விச்செல்வந்துய்த்திகொலமெய்மைத்துணையின்மை
சூழிச்செல்வந்துய்த்திகொலந்தோலாமனுநூலின
வாழிச்செல்வந்துய்த்திகொலமுன்னென்றனள்வானோர்
கேள்விச்செல்வந்துய்க்கவயிற்றோரிளைதந்தாள். (௬௧)

இ-ள். வானோர் கேள்விச்செல்வம் துய்க்க-தேவர்கள் செவிச்செல்வத்தை யனுபவிக்க, வயிற்று ஓர் இளை தந்தாள்-வயிற்றினின்று ஒப்பற்ற புத்திரனைப்பெற்ற கோசலை, (௬௧)

௬௫. கைத்தசொல்லொனுயிரிழந்தமபுதல்வற்பிரிந்தும்கடையோட
மெய்த்தவேந்தன்திருவுடமையைப்பிரியாதாரறிவிட்டிலரால்
பித்தமயக்காஞ்சுறவெறிபும்பிறவிபெரியகடலகடக்க
உய்த்தமீண்டகாவிற்றமும்போவாரோகின்றார். (௭௧)

இ-ள். பித்தமயக்கு ஆம் சுறவு எறியும்-பித்தமயக்கமாகிய சுறுமீன்வீச, பிறவிப்பெரிய கடல்கடக்க - பிறவியாகிய பெரிய கடலைக்கடக்க, உய்த்து மீண்ட நாவாயில் - சக்கரவர்த்தியைச் செலுத்தி மீண்ட தோணியில், போவார் தாமும் ஒக்கின்றார்- போவாரைத் தாமு மொக்கின்றார் (எ௩)

௬௬. செய்யக்கடவசெயற்குரியசிறுவரீண்டையாரலலர்
எய்தக்கடவபொருளெய்தாதிகவாவென்னவியல்பென்ன
மையறகொடியாளமகனீண்டுவந்தாலமுடித்துமற்றென்ன
தையறகடனினறெடுத்தவனைத்தயிலக்கடலினறலையுய்த்தான். (எ௫)

இ-ள். செய்யக்கடவ செயற்கு உரிய சிறுவர் - செய்யக் கடவதாகிய ஈமக்கடனை செய்தலுக்குரியராகிய புத்திரர், ஈண டையார் அல்லர் - இப்போது யாரிருக்கின்றார் இலர், எய்தக் கடவ பொருள் எய்தாது - வரக்கடவதாகிய பொருள்வராமல், இகவா என்ன இயல்பு என்ன - நிறுத்தாமலென்ன முடிப்ப தெப்படி,

## ௬-வது. கங்கைப்படலம்.

### ஸ்ரீராமபிரான் கங்கையாற்றைச்சார்ந்ததைக் கூறுகின்றபடலம்.

௬௭. வெய்யோனொளிதன்மேனியின்விரிசோதியின்மறைய
பொய்யோவெனுமிடையாளொடுமிளையானொடும்போனான்
மையோமரகதமோமறிகடலோமழைமுகிலோ
ஐயோவிவன்வடிவென்பதோரழியாவழகுடையான். (௧)

இ-ள். வெய்யோன் ஒளி - சூரியனதொளி, தன்மேனியின் விரிசோதியில் மறைய - தனது திருமேனியில் விரிகின்ற சோதியிலடங்க, சூரியன தொளிகஞ்சிய பிராட்டி ஸ்ரீராமபிரானது திருமேனியில் விரிகின்ற நிழலில் மறைய எனவுமாம். (௧)

௬௮. அஞ்சம்பையுமையனறனதலசம்பையுமளவா
நஞ்சங்களைவெல்வாகியநயனங்களையுடையாள்
அஞ்சுங்களிவரிவண்டுகள்குழலின்படிசுழலும்
கஞ்சங்களைமஞ்சன்கழலாகுகின்றதுகண்டாள். (௨)

இ-ள். குழலின்படி - அளகத்திற்சூழ்வதுபோல, துஞ்சும் களிவரிவண்டுகள் சுழலும் - தூங்குகின்ற தேன்மயக்கமுடைய வரிபொருந்திய வண்டுகள் சுழலுகின்றனவாகிய, கஞ்சங்களை - தாமரைமலர்களை, மஞ்சன்கழல் நகுகின்றது கண்டாள் - ஸ்ரீமபிரானது திருவடிகள் அவமதித்துச சிரித்தலைப்பார்த்தாள்.()

௯௯ மாகந்தமும் மகரந்தமு மளகந்தரும் மதியின
பாகந்தரு நுதலாளொடு பவளந்தரு மிதழான
மேகந்தனி வருகின்றது மிலைஞ்சோடு மிளிரப்பூண
நாகந்தனி வருகின்றது மயிலோடென நடவா. (௪)

இ-ள். மாகந்தமும் - மிகுந்தவாசனையையும், மகரந்தமும் - பராகத்தையும் பொருந்திய, அளகம தரும - கூந்தலுடைய, மதியின் பாகம தருநுதலாளொடு - சந்திரனது பாதியையொத்த நெற்றியையுடைய பிராட்டியோடு, (௪)

௪00. தொளைகட்டிய கிளைமுட்டிய சுருதிச்சுவை யமுதின
கிளைகட்டிய கருவிக்கிளரிசையிற்பசை நறவின
விளைகட்டியின் மதுரித்தெழு கிளவிக்கிளி விழிபோல்
களைகட்டவர் தளைவிட்டெறி குவளைத்தொகை கண்டான். (௫)

இ-ள். தொளைகட்டிய - தொளை யுண்டாக்கிய, கிளை முட்டிய - வேயங்குழலில் முட்டிய, சுருதிச்சுவை அமுதின் - இராகமாகிய சுவையினையுடைய அமுதினும், கிளைகட்டிய - நரம்பைக்கட்டிய, கருவிக்கிளர் இசையில் - வீணையி லெழுந்த இசையினும், பசை நறவின் - பசையுடைய தேனினும, விளைகட்டியின் - விளைந்த கறகண்டினும், மதுரித்து எழு - மதுரித் தெழுகின்ற, கிளவிக்கிளர் விழிபோல - மொழிகளையுடைய பிராட்டியினது விளங்கிய கண்கள்போல, களைகட்டவர் - களை களைந்தவர், தளை விட்டு எறி - வயலை விடடெறிகின்ற, குவளைத்தொகை கண்டான் - குவளைமலர்தொகுதியைப்பார்த்தான். (௫)

௪0௧. அருப்போதிய கலசத்துணை யமுதேந்திய மதமா
மருப்பேந்திய வெனவாமுலை மழையேந்திய குழலாள்
கருப்போதிரு முதலாயின கண்டாளிடர் காணுள
பொருப்பேந்திய தோளானெறு வில்லையடினன் போனான். (௬)

இ-ள். அரும்பு ஏந்திய எனல் ஆம் - தாமரையரும்பைத் தாங்கியதை யொக்குமென்று சொல்லலாகும், அமுது ஏந்திய கலசத்துணை எனல் ஆம் - அமிர்தங்கொண்ட இரண்டு கலசங்களென்று சொல்லலாகும், மதமா மருப்பு ஏந்திய எனல் ஆம் முலை - யானையினது கொம்புகளை யேந்தியதை யொக்குமென்று சொல்லலாகுந் தனத்தையும், மழை ஏந்திய குழலாள் - மேகம் போன்ற அளகத்தையுமுடைய பிராட்டி, (௬)

௪௦௭. பன்னந்துகள் தாளந்தொகு படர்பந்திகள் படுநீர்
அன்னந்துயில் வதிதண்டலை அயல்நந்துறை புளினம்
சின்னந்தரு மலர்தந்தன செறிநந்தன வனநல்
பொன்னந்தியநதி கண்டுளம் மகிழ்ந்தனர் போனார். (௭)

இ-ள். பல நந்துகள் - பல சங்கங்களின்ற, தாளம் தொகு - முத்தங்கள்சேர்ந்து, படர்பந்திகள் படுநீர் - விசாலமான வரிசைகளுண்டாகின்ற புனலையும், அன்னம் வதிதுயில் தண்டலை - அன்னங்கள் வதிந்து துயில்கின்ற சோலைகளையும், அயல்நந்து உறைபுளினம் - அதனயலகத்தில் சங்கங்களுறைகின்ற மணற் பரப்புகளையும், சின்னம் தரும் மலர்தந்தன - பராகத்தைத் தந்த மலர்களைத் தந்தனவாகிய, செறிநந்தனவனம் - நெருங்கிய நந்தனவனங்களையும், நல்பொன் நந்தியநதி - நல்ல பொன் அதிகமுண்டாகிய நதிகளையும், கண்டு உளம் மகிழ்ந்தனர் போனார் - பார்த்துத் திருவுளமுவந்துபோனார். எ-று. (௭)

௪௦௮. கால்பாய்வன முதுமேதிகள் கதிர்மேய்வன கடைவாய்
பால்பாய்வன நறைபாய்வன மலர்வாய் அளிபடரச்
சேல்பாய்வன கயல்பாய்வன செங்கால்மட அன்னம்
போல்பாய்புனல் மடவார்படி நெடுநாடவை போனார். (௮)

இ-ள். முதுமேதிகள் - முதிர்ந்த எருமைகள், கதிர்மேய்வன - நெற்கதிர் முதலியவற்றை மேய்வனவாகி, கடைவாய்பால் பாய்வன - கடைவாயினின்று பாலொழுகுவனவாகி, கால்பாய்வன - கால்வாய்களில் பாய்வனவும், நறைபாய்வன மலர்வாய் - தேனொழுகுவனவாகிய மலர்களில், அளிபடர - வண்டுகள்மொய்க்க, (அம்மொய்த்தலால்) சேல்பாய்வன - சேல்மீன்கள் பாய்வனவும், கயல்பாய்வன - கயல்மீன்கள் பாய்வனவும், பாய்புனல்-

ஓடும் நீரில், செங்கால் மட அன்னம்போல் - செவந்தகால்களை யுடைய இளமைபொருந்திய அன்னங்கள்போல, மடவார்படி - மகளிர் நீராடுவனவுமாகிய, நெடுநாடவைபோனார் - நெடுநாடு களைககடந்துபோனார். (அ)

௪0௪. பெண்ணிலநோககுஞ்சுவையிற்பிறாபிறாக்
கெணணிநோககியமபருமினபததை
பணணிலநோக்குமபராவமுதைபபசுந
கண்ணிலநோககினருளளகளிககினறா (௧௧)

இ-ள். பெணணில் நோககும் சுவையில்-காமுகர்பெண்ணை யனுபவிக்கு மின்பத்தைபபோல, பிறர் எண்ணி நோக்கி-பிறர் மனத்தா லெண்ணி கண்ணுறப்பாாதது, பிறர்கு இயம்ப அரும் இன்பத்தை - பிறர்க்குச்சொல்ல அருமையாகிய இனபததை, பண்ணில் நோக்கும் பாராஅமுதை - இசையா லுணரப்படும் பாரவமுதை, (கக)

௪0௫. துறக்கமேமுதலவாய்தூயனயாவையேனும்
மறக்குமாநினையலமமாவரம்பிலதோறறுமாகாள்
இறக்குமாறிதுவெனபானபோலமுனனைநாளிறநதானபின்னுள்
பிறக்குமாறிதுவெனபானபோல்பிறநதனனபிறவாவெய்யோன். (௫0)

இ-ள். துறக்கம் முதலஆய - சுவர்க்க முதலாகிய, தூயன யாவை ஏனும்-பரிசுத்த முடையவுலகங்களி லுள்ளோராயினும், (மரணத்தை) மறக்கும ஆநினையல - மறக்குமவிதத்தை நினைய லாகாது, (௫0)

௪0௬. படருறாவுளனுமபிாாறுறைறபகலெல்லாம
இடருறுபகையாபோயானனைவுரியாய நீ
சுடருறுவடிவேலாயசொனமுறைறசடவேலயான
வடதிசைவருபகாள்கீழுமுவருகினறேன. (௭0)

இ-ள். சுடர் உறுவடிவேலாய் - ஒளி பொருந்திய கூர்மை யுடைய வேலாயுதமுடையாய, கான உறைபகல் எல்லாம்-யான வனத்தில் வதியுங்கால மெலலாம, உம்பி படர் உறஉளன்-உன் தம்பியாகிய பரதன் துன்பமடைய விருககின்றான், இடர் உறு பகையா-யான் துன்புறும்பகைகளெனக்கு யாவை, நீபோய் யா ன் என உரியாய்-(பாதனுக்குப் பகையுளதாயின்)நீசென்றுளனை ப்போலவுதவுதி, (௭0)

# எ-வது. வனம்புகுபடலம்.

## ஸ்ரீராமபிரான் வனத்துட்சென்றதைக் கூறுகின்றபடலம்.

௪0எ. பூவலர்குரவோடும்புடைதவழ்பிடவீனும
மாவலர்சொரிசூழல்துயிலெழுமயிலொன்றின
தூவியினமணநாறத்துணைபிரிபெடைதானச
சேவலொடுறவூடித்திரிவதனியல்காணாட. (எ)

இ-ள். பூ அலர் குரவு ஓடும் - மலர் மலர்ந்த மருதாணியோடும், புடை தவழ்பிட - பக்கத்திற் றவழ்ந்த, ஈனும்மா அலர் சொறி சூழல்-விரும்பத்தக்க மாமரத்தினது மலர்களைச்சொரிந்த விடத்தில, துணைபிரி-பெடையைப்பிரிந்து, துயில் எழு மயில் ஒன்றின் - துயின்றெழுந்த மயிலொன்றினது, தூவியிலமணமநாற-தோகையில் அம்மலர்களின் மணமவீச, பெடை - அப்பெண் மயில், அசசேவலொடு உறவூடி - அவ்வாண்மயிலோடு அதிகம் ஊடி, திரிவு அதன் இயல் காணாய்-வேறுபடுகின்ற அதனது இயல்பைக காணாய். எ-று. (எ)

௪0அ. அருந்ததியனையாளேயமிர்தினுமினியாளே
செருந்தியினமலர்தாங்குஞ்செறியிதழ்வனசோகம்
பொருந்தினகளிவண்டிறபொதிவனபொன்னூதும
இருந்தையினெழுதீயொத்தெழுவனவியல்காணாய். (அ)

இ-ள் வனம் தாங்கும் - வனங்கொண்ட, இதழ்செறிசோகம் - இதழ்கள் நெருங்கிய அசோக மலர்களில், பொருந்தின- பொருந்தினவாகிய, செருந்தியின் மலர் - செருந்தியினது மலர்கள், களிவண்டில் பொதிவன-மயக்கமுடைய வண்டுகள்போல மொய்த்தன, பொன் - பொன்னையுருக்க, இருந்தையின் எழு-கரியினின் றெழுகின்ற, ஊதும் - கொலலனூதுகின்ற, தீ ஒத்து எழுவன இயல்காணாய் - (அவ்வசோக மலர்கள) நெருப்பை யொத்து எழுகின்ற வியலபைப் பாராய். (அ)

௪0௯. ஏந்திளமுலையாளேயெழுதருமெழிலாளே
காந்தளினமுலகைக்கண்ணிற்கண்டொருகளிமஞ்ஞை
பாந்தளினெனவுன்னிக்கவ்வியபடிபாராய்
தீந்தளவுகள்செய்யுஞ்சிறுகுறுநகைகாணாய். (௯)

இ-ள். தீமதளவு உகள்செய்யும் - அப்பூபாம்பன்றென்று இனிய முல்லைமலர்கள் செய்கின்ற, சிறுகுறுநகைகாணாய் - மிக வுஞ் சிறிய சிரிப்பைப்பாராய். (௯)

௪௧0. கூடியநறைவாயிற்கொண்டனவிழிகொள்ளா
மூடியகளிமன்ன முடுகினநெறிகாணா
ஆடியசிறைமாவண்டந்தரினிசைமுன்னா
பாடியபெடைகண்ணாவருவனபலகாணாய (௧௫)

இ-ள். ஆடியசிறைமாபலவண்டு - அசைதல் பொருந்திய சிறையுடைய பெருமைபொருந்திய பலவண்டுகள், கூடியநறை வாயில்கொண்டன - கூட்டிய தேனைவாயிற்கொண்டனவாகி, விழிகொள்ளா மூடிய களிமன்ன-கண்கள் கொள்ளாமல் மூடிய மயக்கமேற, முடுகினநெறிகாணா - முடுகினவாகி வழிதெரியா மல், அந்தரின - குருடனைப்போல, பெடைபாடிய-பெண்வண்டு கள் பாடிய, இசைமுன்னா - இசையைக்கொண்டு, கண்ணா-அது வேகண்ணாக, வருவனகாணாய் - வருவனபாராய். (௧௫)

௪௧௧. பூநனைசினைதுன்றிப்புள்ளிடையிடைபம்பி
நானிறகுளிர்வல்லிகொடியளவிலமலகி
மானினமயில்மாலைக்குயிலினம்வருகானம்
தீநிகர்தொழிலாடைத்திரைபொருவனபாராய் (௧௮)

இ-ள். பூநனைசினைதுன்றி - மலர்களும் அரும்புகளுங் கிளை களும் நெருங்கி, புள் இடை இடைபம்பி - பறவைகள் இடங் கள்தோறும் பரவி, நால் திற குளிர்வல்லிகொடி - நாலுவிதத் திறமுடைய குளிர்ந்தவல்லிகளும் கொடிகளும், அளவு இல மல்கி - கணக்கிலவாய் நிறைந்து, மாலை - வரிசையாக, மான் இனம் - மான்கூட்டமும், மயில் - மயிற்கூட்டமும், குயில் இனம் - குயிற்கூட்டமும், வருகானம் - வருகின்ற கானமெல் லாம், தொழில்-பூமுதலியவெல்லாம் பொறித்த, தீநிகர்-நெருப் பையொத்துச்சிவந்த, திரைஆடை பொருவனபாராய்-திரைச் சீலையை ஒப்பாவனபாராய். (௧௮)

காடெல்லாம் பூமுதலிய பொறித்த திரைச்சீலையை ஒப்பா வனபாராய் என்பது கருத்து.

ககஉ. என்றுகாதலினையினனடிதொழுதேத்தி
கொன்றைவேய்ங்குழற்கோவலர்முல்லையங்குடிமி
சென்றுசெங்கதிர்ச்செல்வனுந்திவுறச்சிறுமான்
கன்றுநீர்றுகர்காளிந்தியெனுந்திகண்டார (௩௪)

இ-ள். கொன்றை - கொன்றைக்குழலையும், வேய்ங்குழல்-வேய்ங்குழலையுமுடைய, கோவலர் முல்லை அம்குடிமி சென்று-இடையரது முல்லை நிலத்தின் கடையிற்சென்று, (௩௪)

ககங. ஆலைபாய்வயலயோத்தியாண்டகைக்கிளையான
மாலைமாலவரைத்தோளெனுமந்தாந்திரிய
காலைவேலையைக்கடந்ததுகழிந்தநீாகடிதின
மேலைவேலையிறபாயந்ததுமீண்டநீாவெள்ளம். (௩௭)

இ-ள். கழிந்த நீா - நீந்தும்போது இடதுகாந்துழாவக்கழிந்தபுனல், காலை வேலையைக்கடந்தது-கிழைக்கடலைக்கடந்துசென்றது, மீண்டநீா வெள்ளம-வலதுகாந்துழாவத் திரும்பிய நீர் வெள்ளம், கடிதில் - விரைவில, மேலை வேலையில் பாயந்தது-மேலைக்கடலிற் பாய்ந்தது. (௩௭)

ககச. எயினர்தங்கிடமிருடிகளிருபபிடமெய்ந்த
வயினவயினெரூஉமணிகிறகோபங்களமலாந்த
பயிலமரநதொறுமபரிந்தனபேடையைபபயிலும
குயிலிரங்கினகுருந்தநின்றருமபினமுருந்தம். (௩௫)

இ-ள். குருந்தம நின்று - குருந்தமரங்கள் நின்று, முருந்தம் அருமபின - இறகினடிக் குருத்தைப்போன்ற அரும்புகளையரும்பின. (௩௫)

## அ-வது. சித்திரகூடப்படலம்.

—— o: ——

## ஸ்ரீராமபிரான் சித்திரகூட மலைச்சிறப்பைப்பிராட்டிக்குக் காட்டுவதைக் கூறுகின்றபடலம்.

க௫. வினையுந்தேவாகருகமக்குமொத்தொருநெறிநின்ற
அனனையகனையாயிரம்பெயருடையமலன்
சனகன்மாமடமயிற்கநதச்சந்தனஞ்செறிந்த
கனகமால்வரையியல்பெலாந்தெரிவுறக்காட்டும். (க)

இ-ள். நினையும் தேவர்க்கும் - தியானிக்கின்ற தேவர்களுக்கும், நமக்கும் - அடியோங்களுக்கும், ஒத்து ஒரு நெறிநின்ற- வேற்றுமையின்றி ஒரு தன்மையாய் உள்ளத்தில் நின்ற, (-)

ககசு சலந்தலைக்கொண்டசீயததால்தனிமதகககதமா
உலநதுவீழ்தலிறசிந்தினவுதிரததினமடவாா
புலந்தகாலையறதுக்கனகுங்குமபபொதியில்
கலநதமுததெனவேழமுததிமைபபனகாணுய. (சு)

இ-ள். மகளிருடிய காலையிற்சிதறிய குங்குமக்குவியலிற் கலந்தமுத்துககளைப்போல கோலஙகொண்ட சிங்கத்தால் யானை செத்து விழுதலால் சிதறிய இரத்தத்தில் அவ்யானை முத்துக் கள் ஒளிர்வனபாராய. (சு)

ககஎ, தொடடமாசுணமசுடரொளிமணியொடுநதூவி
விடடசெனறனவிடாமதமழையனவேழம்
வட்டவேங்கையினமலரொடுந்ததைநதனவயங்கும்
பட்டமநெற்றியிறசுறறியபோலவணபாராய். (அ)

இ-ள். தொட்டமாசுணம - யானைகளைப்பிடித்த மலைப்பாம்புகள், சுடர்ஒளி மணி ஒடும - சுடரொளியுடைய முடிரத்நத் தோடும், தூவிவிட்ட சென்றன - கக்கிவிட்டனவாய்ச் சென்றன, விடாமழை அன மதவேழம - விடாமழ்பெய்யும் மேகத்தையொத்த மதத்தைப் பெய்கின்ற அவ்யானைகள், (அ)

ககஅ. மஞசளாவியமாணிககபபாறையில்மறைவ
செஞசெவேநெடுமாகதப்பாறையிறறெரிவ
விஞசைநாடியாகொழுனரோடீடினாவிமலப்
பஞசளாவியசீறடிச்சுவடுகளபாராய. (உ0)

இ-ள். கணவரோடூடினவராகிய விஞ்சைமகளிரது செம்பஞ்சூட்டிய காற்சுவடுகள் மேகஞ்சூழ்ந்த செவப்பாகியமாணிக்கக் கல்லில் மறைந்தனவாய பச்சையாகிய மரகதக்கல்லில் தெரிவனபாராய். (உ0)

கககூ, மாவியதுநயமாந்தனபயானவன்
மேவியபசையிருளவுணர்வீய்ந்தக
காவியல்குடவனக்காலநேமிமேல்
ஏவியதிகிரிபோலிரவியேகினன். (கஅ)

இ-ள். திருமால் இருளாகிய அசுரர் மாய அத்தகிரியாகிய காலநேமியென்னும் அசுரன்மேலேவிய சக்கரம்போலச் சூரியன் சென்றான். (௫அ)

௧௨௦. மொய்யுறுநறுமலாமுகிழ்த்தவாமசில
மையறுநறுமலர்மலாநதவாமசில
ஐயனேடிளவறசுமமுதனனுக்கும
கைகளுங்கண்களுங்கமலமபோனறவே. (சஉ)

இ - ள். கண்மூடிக கரங்குவித்து அந்திககடன் கழித்தாரென்பது. (சஉ)

௧௨௧. நெடுங்கழைககுறுநதுணிநிறுவிமேல்நிரைத
தொடுங்கலினெடுமுகடொழுகியூழுற
இடுங்கலிலகைவிசிததேறறியெங்கணும்
முடங்கலிலவரிசசுமேலவிரிசசுமூடியே. (சச)

இ-ள். நெடும்கழைக்குறும் துணி நிறுவி - நீண்ட மூங்கிலினது குறியதுண்டுகளை நிறுத்தி, இடுகல் இல் - இடுங்கலில்லாமல், கை - கைமரங்களை, மேல - மேலே, ஏற்றி - ஏற்றி, நிரைத்து - வரிசைப்படுத்தி, விசித்து - கட்டி, ஒடுங்கல் இல்-பதுங்கலில்லாமல், ஊழ்உற - குவிய, நெடு முகடு ஒழுக்கி - நெடிய முகட்டைச் சேர்த்து, எங்கணும் - எவ்விடத்தும், முடங்கல் இல் வரிசசு - மடங்கலில்லாமல் வரிச்சுக்களை, மேல் விரிச்சு மூட்டி - மேலே விரித்திசைத்து. (சச)

---

## ௯-வது. பள்ளிஅடைப்படலம்.

௧௨௨. எழுகசேனையெனறேவினனெயதினன
தொழுதகேகயாகோமகனசொலலொடும
தழுவுதேரிலடதம்பியோடேறினன
பொழுதுநாளுங்குறிததிலனபோயினன. (அ)

இ-ள். பொழுதும் - புறப்படுதலுக்குரிய காலத்தையும், நாளும் - நக்ஷத்திரத்தையும், குறித்திலன் போயினன்-பாராது போனான். (அ)

௧௨௩. கொடிநெருங்கினதொங்கல்குழுமின
வடிநெடுங்கணைமடக்கையருர்மட்ப
பிடிதுவன்றினபூணொளிபோந்தன
இடிதுவன்றினமின்னெனவெங்குமே. (௬௦)

இ-ள். இடிதுவன்றினமின் என - மேகத்திற் றோன்றிய மின்னல்போல, எங்கும-எவ்விடத்திலும, பூண் ஒளிபோந்தன- ஆபரணங்களின ஒளிகள விளங்கின, (௧௦)

இடி ஆகுபெயர்.

௧௨௪. தொளைமுகத்திறசுருதிவிளம்பின
இளைமுகத்தினனுமபரினேகிட
விளைமுகத்தனலவேலையின்மீதுசெல
வளைமுகத்தனவாசியுமவந்தவே. (௧௨)

இ-ள். தொளைமுகத்தில் - பொள்ளாங்குழலில், சுருதிவிளம்பின - இராகங்கள் பாடப்பட்டன, இளைமுகத்தினன் உம்பரின் ஏகிட - இளைத்தமுகமுடைய சக்கரவர்த்தி விண்ணினேக, அனல்விளை முகத்து - அனல்விளைகின்ற முகத்தை யுடைய, வேலையின்மீது செல - கடலின்மேற் செல்லுகின்ற, வளைமுகத்தன - வளைந்த முகத்தைய்டையனவாகிய, வாசியும் வந்த-குதிரைகளும் வந்தன. (௧௨)

௧௨௫. ஊனளைந்தவுடற்குயிராமென
தானளைந்துதழுவினதண்ணுமை
தேனளாதுசெவியுறவார்ந்தென
வானளாத்துமாகத்தாபாடலே. (௧௬)

இ-ள். ஊன அளைந்த உடற்கு - தசை கலந்த உடலுக்கு, உயிர் ஆம என - உயிராகுமென்று சொல்லும்படி, தண்ணுமை அளைந்துதழுவின-மிருதங்கங்கள்பாட்டோடுகலந்துதழுவின,

௧௨௬. நாவிநீத்தஅருநல்வளந்துன்னிய
பூவினீத்தெனநாடுபொலிவொரீஇ
தேவிநீத்தஅருந்தேசெனதிசாவிட
ஆவிநீத்தவுடலெனலாயதே. (௨௭)

இ-ள். நாவி நீத்த அரும நல்வளம் துன்னிய-வாசமிகுந்த அருமையாகிய நல்லவளம பொருந்திய, பூவின் நீத்து என - தாமரைமலரைத் துறந்தாற்போல, தேவி நீத்த அரும்சேன்

நெறிதாவிட - சீதாபிராட்டி துறந்து அரிய தூரமாகிய வழிச் செல்ல, நாடுபொலிவு ஒரீஇ - கோசலநாடு அழகைப்போக்கி, ஆவிநீத்த உடல் என ஆயது-உயிரைததுறந்த உடலைபபோல வாயது. ()

கஉஎ. செவ்வழியுருட்டியதிகிரிமனனவ
எவவழிமரபினுமிரவலாளாதாம
இவவழியுலகினிலினமைநணபினோா
அவவழியுலகினுமுளாகொலோவையா. (ருக)

இ-ள. இவ்வழி உலகினில் இன்மை - இவ்வுலகி லின்மை யால, நண்பினோா - அவ்விரவலராகிய நடபுடையோா, (ருக)

கஉஅ. ஒனறமபொடயாமனனைவாயலுயிரோடும
தினறநதிராவனபழிகொணடுத்திருவெயதி
எனறும்நீாவாழவுவநதிரவனேகக
கனறநதாயும்போவனகணடுமாழியீோ (எகூ)

இ-ள. அவன் ஏக - அவ்விராமன் போக, கனறும்-இலக்குமணனாகிய கன்றும், தாயும்-பிராட்டியாகிய தாயும், போவன கண்டும் கழியீர் - உடன்செல்லப் பார்த்தும் மாயீர். அவன் ஏகக்கன்றும் - அவ்விராமன் போக மனம் நையும், தாயும் போவனகண்டும் கழியீா - பிராட்டியாகிய தாயும் உடன்போகப் பார்த்தும் மாயீர் எனவுமாம். (எகூ)

கஉகூ. தானுறுகுரிசிலதாய்சொற்கேட்டனும
கோளுறுமடஙகலிறகுமுறிவிம்முவான
நாளுறுநலலறநடுஙகநாவினால
சூளுறுகடடுரைசொலலலமெயினை (ககூ)

இ-ள. கோள் உறுமடங்கலில்-பிடிபட்ட சிங்கமபோல, ()

கஙo. இறநதுபோயினனெனவேதோனறலநீ
பிறக்துபோறம்பிழைத்ததெனறல்போல
இறநதுபோயினனிருநததாணடது
மறநதுவேறொருமைத்தனுஞ்சொலாம. (கஙo)

இ-ள. தோன்றல் - தோன்றால், நீபிறக்து - நீதோன்றி, பேர் அறம் பிழைத்தது என்றல்போல் - பெரியதருமம தவறிற் றென்றல்போல், இறந்துபோயினன் - இறந்துசென்ற சக்கர

வர்த்தி, ஆண்டு துறந்துபோயினன் - அப்போது நீபுத்திரனுகா யென்று நீக்கிப்போனுன். அது இருந்தது - அது என்மனத்தி லிருந்தது, மறந்து வேறு ஒருமைந்தன் ஆம் - ஈமக்கடன் நீசெ ய்வதை நிறுத்தி சத்துருக்கனன செய்வனுவான். (கஙO)

## கO-வது. ஆற்றுப்படலம்.

## பாதாழ்வான்வழிச்செல்வதைக் கூறுகின்றபடலம்.

சஙஈ. வெண்மதிமீசசெலமேகமூர்ந்தென
அணைலவெங்கதிரவனளவில்மூர்த்தியாய்
மணணிடையிழிநதொருவழிக்கொண்டாலென
எண்ணருமனனவர்களிறதிேைகினர். (க-க)

இ-ள். சந்திரன் மேலேசெல்ல மேகங் கிழூர்ந்தாற்போல வும், பெருமைபொருந்திய வெப்பம்பொருந்திய கிரணமுடைய சூரியன் அளவில்லாதபேர்க்ளாய், புவியில் வந்தொரு வழியிற் சென்ரூர்போலவும்,கணக்கில்லாத அரசர்கள் யானைகளிலேறிப் போனுர்கள். எ-று. (க-க)

கஙஉ. தாவருநாள்முதலணியலால்தகை
மேவருஙகலங்களைவெறுத்தமேனியர்
தேவருமருணசோளதெரியுங்காட்சியர்
பூவுதிாகொம்பெனமகளிர்போயினர். (க-௨)

இ-ள். தாவரும் நாள்முதல் அணி அல்லால - கேடுவந்த நாளுக்கு முதல்நாளிலணிந்த அணிகளையுல்லாமல், தகைமேவ ரும் கலங்களை - மேன்மைபொருந்திய ஆபரணங்களை, வெறுத்த மேனியர் - பூணுதசரீரமுடைய மகளிர், (க-௨)

தாவருநாளாவது-ஸ்ரீராமபிரான் வனஞ்சென்றநாள்,

## கக-வது. குகப்படலம்.

---

# பரதாழ்வான் குகப்பெருமானைக்கண்டதைக் கூறுகின்றபடலம்.

௧௩௩. துடியெறிநெறிகளுந் துறையுஞ் சுற்றுற
ஒடியெறியம்பிகள் யாதுமோட்டலிர்
கடியெறிகங்கையின் கரைவந்தோர்களைப்
பிடியெறிபடவெனப் பெயர்த்துங்கூறுவான். (௪௩)

இ-ள். துடி எறிநெறிகளும - பறையடிக்கின்ற வழிகளிலும், துறையும் சுற்றுற - துறைகளிலுஞ் சுற்றுற, ஒடி எறி அம்பிகள் யாதும் ஒட்டலிர் - கவணெறிகின்ற நாவாய் யாதையும் ஓட்டாதிர், கடிகங்கையின கரைவந்தோர்களை - காவல்பொருந்திய கங்கையின்கரை வந்தோர்களை, பிடி - பிடித்து, எறிபட - ஊறுபட, எறிக என - அடிக்கவென்று, பெயர்த்தும கூறுவான் - மீண்டுஞ்சொல்லுவான். எ-று. (௧௩)

௧௩௪. கற்காணுந் திண்மையானைக் காணுங்காதலான்
அற்காணிற் கண்டனைய வழகமைந்த மேனியான
மற்காணுந் திருநெடுந்தோள் மழைக்காணு மணிநிறத்தாய
நிற்காணு முள்ளத்தானெறியெதிர் நின்றானென்றான். (௨௬)

இ-ள். அல்காணில்கண்டு அனைய- இரவை அங்கங்களோடு கண்டாற்போன்ற, அழகு அமைந்த மேனியான் - அழகுகொண்ட மேனியுடையான், (௨௬)

௧௩௫. வந்தெதிரே தொழுதானை வணங்கினான் மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு மவனடிவீழ்ந்தானை
தந்தையினுங் களிகூறத் தழுவினனற் றகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியானை.

இ-ள். வந்து எதிரே தொழுதானை - (திசைநோக்கித் தொழுகின்றானென்றபடி) வந்து தென்றிசைநோக்கித் தொழுத பரதாழ்வானை, வணங்கினான் - குகப்பெருமான் திருவடிதாழ்ந்தான், தகவு உடையோர் சிந்தையினும் சென்னியினும்-தகை

மையுடையோர் மனத்திலுஞ் சிரசிலும், வீற்று இருக்கும் சீர்த்தியான் - வீற்றிருக்குங் கீர்த்தியுடையானாகிய, மலர் இருந்த அந்தணனும் - தாமரைமலரை இடமாகக்கொண்ட பிரமனும், தனைவணங்கும அவனும-தன்னைவணங்குந் தகுதியுடைய அப்பாதாழ்வானும், அடிவீழ்ந்தான் - தன் திருவடியை வணங்கினவனாகிய குகப்பெருமானை, அவன் தந்தையினும் களிகூரத் தழுவினான் - அவன தந்தையினும் உவகைமிகத் தழுவினான்.

கசுசு. என்புகழ்கின்றதேனழ்யெனேனிரவியென்பான
தன்புகழ்க்கற்றைமற்றையொளிகளைத்தவிர்க்குமாபோல
மன்புகழ்பெருமைநுங்களமரபினோர்புகழ்களெல்லாம்
உன்புகழாக்கிக்கொண்டாயுயர்குணத்துரவுத்தோளாய. (௬௬)

இ-ள். உயர்குணத்து உரவுத்தோளாய் - உயர்ந்தகுணமுடைய வலிபொருந்திய தோளுடையாய, இரவி என்பான் தன புகழ்க்கற்றை - சூரியனென்று சொல்லப்படுவான் தனது புகழ் பொருந்திய ஒளியால், மற்றை ஒளிகளைத் தவிர்க்கும ஆபோல்- மற்ற சந்திராதிகளின ஒளிகளைப்போக்கும் விதம்போல, மன் புகழ்பெருமை - அரசாகள துதிக்கின்ற பெருமையையுடைய, நுங்கள் மரபினோர் புகழ்கள எல்லாம - உங்கள் குலமுடைய அரசர்களது கீர்த்திகளெல்லாவற்றையும், உன்புகழ் ஆக்கிகொண்டாய் - உனது புகழாகச் செய்துகொண்டாய், ஏழை எயினனேன் புகழ்கின்றது என-அறிவிலலாத வேடனாகிய அடியேன் உனது புகழைச் செலலுகின்றதெப்படி. எ-று. (௬௬)

கசுஎ. கங்கையாறுகடந்தனையைப்பாறுமுறசெலவினுவாய்
கங்கையுமிடமிலாக்கமமிடைந்தனகலந்தவெனுரும
அங்கொடிங்கிழித்திபேற்றுமமைதியினமரர்வைய
திங்கொடங்கிழித்தியேற்றுமிருவினையனையனானை. (௬௭)

இ-ள். இங்குகொடு அங்கு இழித்து ஏற்றும் அமைதியின - இடக்கன் இக்கரையிலேற்றி அக்கரையிலிறக்கிப் பின்பு ஏற்றும் அமைதியால், இங்கு கொடு - இவ்வுலகிற்கொண்டு, அமரர்வைபத்து - சுவர்க்கத்தில், இழித்து ஏற்றும் இருவினை என்ன ஆனை-இறக்கி ஏற்றும் நல்வினை தீவினைகளைப்போலாயின. (௬௭)

கருஅ. அகிலிடுதூபமன்னவாய்மயிற்பீலியார்த்த
முகுளிடுமுரண்மாத்தண்டுகூம்பெனமுகிலின்வண்ணத்
துகிலொடுதொடுத்தசெம்பொற்றகட்டிடைதொடுத்தமுத்தம்
நகுகொடிநெடியபாயினவ்வெனச்சென்றநாவாய். (ருஅ)

இ-ள். அகில இடுதூபம் அன்ன-காஷ்டமிட்ட புகையைப் போல, ஆய்மயில் பீலி ஆர்த்த-ஆயந்தமயிலினது தோகைகள் நிறைந்தன, முகுள் இடுமுரண் மாத்தண்டு கூம்பு என-தலையிற் குவிந்த வலிமையுடைய பெரியதண்டாயுதம்பாய்மரம போலத் தோன்ற, முகிலின்வண்ணத் துகிலொடு தொடுத்த-மேகம்போன்ற நிறமுடைய ஆடையோடுசேர்த்த, செம்பொன் தகட்டிடைதொடுத்த முத்தம்-செம்பொனாலாகிய தகட்டிற் கட்டிய முத்தங்கள், நகுகொடி நெடியபாயின் - விளங்குகின்ற கொடிகள் பொருந்திய நீண்டபாயினையுடைய, நாவாய் - ஓடங்கள், நவ்வெனச்சென்ற - நவ்வெனப்போயின. எ-று. (ருஅ)

நவ்வெனபது விரைசகுறிப்பு

கருக. இழிந்தநாயாசிவிகையினேறந்தான
பொழிந்தகண்ணிலபுதுப்புனலபோயினன
ஒழிந்திலனருக்குமமுடனேகினன
கழிந்தனனபலகாவதங்காலினே. (எஉ)

இ-ள் பொழிந்தகண்ணில் புதுப்புனல்போயினன் - பொழிந்த கண்ணினின்று புதுப்புனலொழுகப்போயினன், ஓகினன் என்பது கன்னடமொழி, (எஉ)

---

கஉ-வது. கிளைகண்டுநீங்கு படலம்.

# ப. காழ்வான் ஸ்ரீராமபிரானைக்கண்டு மீண்டதைக் கூறுகின்றபடலம்.

கசுo. நானம்நன்குரைத்தார்களிர்வானிடை
ஆனகங்கையரும்புனலாட்டினா
தானமாமணிக்கற்பகத்தாங்கிய
ஊனமில்மலராடையுடுத்தினர். (க)

இ-ள். தானம் மாமணிக்கற்பகம் தாங்கிய - கேட்டவை யெல்லாம் கொடுப்பனவாகிய சிந்தாமணியும் கற்பகவிருக்கமுங் கொண்ட, (௯)

௪௪௧. கொம்பினின்றுநுடங்குறுகொள்கையார்
செம்பொனின்கலராசிதிருத்தினார்
அம்பரத்தினரம்பையரன்பொடும்
உம்பர்கோனுகரின்னமிர்தூட்டினார். (௧௦)

இ-ள். செம்பொன்னின் கலராசி திருத்தினார் - செம்பொன்னாலாகிய உண்கலங்களைப் பரப்பினார், (௧௦)

௪௪௨. கோடகத்தேர்படுகுதிரைதாவிய
ஆடகத்தட்டிடையலகையற்றுகு
கேடகத்தடக்கைகள்கவ்விக்கீதத்தின
நாடகநடிப்பனகாண்மநாதரீ. (௧௧)

இ-ள். கோடகம் தேர்படு குதிரை தாவிய - முடியுடைய தேரிற்பூட்டிய குதிரைகளின்மேற் பாய்ந்த, அலகை - பிசாசுகள், ஆடகத்தட்டு இடை - பொன்னாலாகிய அத்தேர்த் தட்டினிடத்தில், அற்று உகு - எனதுவாளியா லற்றுச்சிந்திய, கேடகத்தடக்கைகள் கவ்வி - கேடகத்தையுடைய விசாலித்த கைகளைக் கவ்வி, கீதத்தின நாடகம் நடிப்பன - சங்கீதத்தோடு நாடகமாடுவதை, நாதர் காண்டி - நாதா நீபார் எ-று. (௧௧)

கருத்து - தேரிற்பூட்டிய குதிரைகளின்மேற் பாய்ந்த பிசாசுகள் அத்தேர்த்தட்டில் எனதுவாளியா லற்றுவிழுந்த கைகளைக் கவ்விக்கூத்தாடுவதை நீபார்.

௪௪௩. உயாவுயிர்த்தழுவண்டருவிமார்பிடை
உயாவுரத்திருவளமுருகப்புல்லினான்
நியாயமத்தனைக்குமோர்நிலயமாகினான்
தயாமுதலறத்தினைத்தழுவியென்னவே. (௧௨)

இ-ள். முதல்தயா அறத்தினைத் தழுவி என்ன - முதலாகிய அருள் தருமத்தைத் தழுவினாற்போல, (௧௨)

௪௪௪. என்றலும்பரதனெழுந்தகைதொழா
நின்றதோன்றலைநெடிதுநோக்கிநீ
அன்றியாவரேயறத்தனோர்தர்
பின்றவாய்க்கொலாவெனப்பேசுவான். (௧௩)

இ-ள். ஆதர்பின்று வாய்சொல் என்னப் பேசுவான் - அத்தருமவழியை நீங்குவாயோ வென்று பேசுவான், (௬௭)

௧௪௫. மனக்கொன்றாதவரத்தில்நினையும்
நினக்கொன்றுமிலைநிறுவிநேமியான்
தனக்கொன்றாள்தருந்தனையனாதலால்
எனக்கொன்றாதவமடுப்பதெண்ணிறல். (௬௮)

இ-ள். நேமியான் - சக்கிரவர்த்தி, மனக்குஒன்றாதவரத்தில் நினையும் - தன்மனத்திற்கு ஒவ்வாத வரத்தால் உன்னையும், நினக்கு ஒன்றுமிலை நிறுவி - உனக்கடுக்காத ஆச்சிரமத்தில் நிறுத்தினைகலின், தனக்கு ஒன்றாள் தருமதனையன் ஆதலால் - அச்சக்கிரவர்த்திக்கு மனம் பொருந்தாதவள் பெற்றமகன் யானாதலால், எனக்கு ஒன்றாது - அடியேனுக்கு அரசடுக்காது, அடுப்பது எண்ணிறல் தவம் - அடியேனுக்கு அடுப்பதை எண்ணில தவமேயாகும். (௬௮)

# இரண்டாவது. அயோத்தியாகாண்டம்.

முற்றிற்று.

---

காண்டம் இரண்டிக்கு ஆக திருவிருத்தம்.

---

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

முற்றிற்று

ஸ்ரீ

# அயோத்தியாகாண்டம்

## செய்யுளகராதி.


| செய்யுள். | பக்கம். |
|---|---|
| அகலிடு | ௪௯ |
| அஞ்சம்மையும் | ௩௫ |
| அணைவு | ௩௧ |
| அணங்கு | ௧௪ |
| அயா | ௫௦ |
| அரக்கர் | ௧௯ |
| அருஞ்சிறப்பு | ௪ |
| அருந்ததி | ௩௯ |
| அருப்பேர்ந்திப | ௩௮ |
| அரைசரை | ௪௦ |
| அறுபதின | ௨ |
| அனையவேலை | ௩௬ |
| — | |
| ஆங்குவந்து | ௨௩ |
| ஆடகத்து | ௨௦ |
| ஆடினர் | ௩௧ |
| ஆலைபாய் | ௪௧ |
| ஆவதறுமு | ௧௧ |
| ஆழிபபொன | ௧௮ |
| ஆளவினை | ௩௩ |
| — | |
| இப்பொழுது | ௨௪ |
| இழிந்து | ௪௯ |
| இறந்தானவலன | ௨௫ |
| இனியது | ௪ |
| — | |
| ஊனவோர்த்த | ௪௪ |
| — | |
| எயினர்துய்த்த | ௪௧ |
| எழுகசேனை | ௪௩ |
| எனபுகழ் | ௪௮ |
| என்றலும | ௫௦ |
| என்றுகாதலின | ௪௧ |
| என்னைக்கண்டும | ௨௯ |
| — | |
| ஒக்கிளமுலை | ௪௦ |
| ஒண்பால் | ௧௮ |
| ஏய்ந்திதழ் | ௧௩ |
| — | |
| ஒருத்தலை | ௮ |
| ஒலிகலில் | ௪௧ |
| ஒறுப்பினும | ௧௭ |
| ஒன்றும | ௪௫ |
| — | |
| கடிகமழ | ௪௧ |
| கண்ணில | ௨௮ |
| கரகாணும | ௪௭ |
| கன்னியாகத் | ௩ |
| — | |
| காலபாயவன | ௩௭ |
| காலமும | ௨ |
| — | |
| குலமுதல் | ௨ |
| — | |
| கூடியநகைற | ௪௦ |
| கூறுமுனனம | ௪௯ |
| — | |
| கேட்டான | ௩௮ |
| — | |
| கைகணா | ௩௨ |
| கைத்தசொல் | ௩௪ |
| — | |
| கொடிநெருங்கின | ௪௪ |
| கொமபில | ௫௦ |
| — | |
| கோடகம | ௫௦ |
| கோரந் | ௧ |
| — | |
| சரிந்து | ௭ |
| சலந்தலை | ௪௨ |
| — | |
| சித்பபணி | ௨௯ |
| சிலைகுறி | ௩௦ |
| — | |
| செய்யக்கடவ | ௩௫ |
| செவ்வழி | ௪௫ |
| செவ்விய | ௩௩ |
| — | |
| சேதாம்பல | ௨௭ |
| — | |
| ஞானி | ௨௮ |
| — | |
| தணடலை | ௩௦ |
| — | |
| தாயாறறு | ௨௯ |
| தாஞெறு | ௪௫ |
| தாவரு | ௪௯ |
| — | |
| திக்குரோககிய | ௩௧ |
| — | |
| தியமநதரை | ௧௫ |
| — | |
| துடிபெரி | ௪௭ |
| துறகசமே | |
| துறநது | ௪௫ |
| துனிபுர | ௧௨ |
| — | |
| தூபமுரிய | ௨௧ |
| — | |
| தொட்டமாசுணம | ௪௨ |
| தொககைசட்டிய | ௩௯ |
| தொக்கைமுக | ௪௪ |
| — | |
| நங்கையா | ௪௮ |
| நவவி | ௧௯ |
| நறுநைதயும் | ௨௯ |
| — | |
| நாமவிறலை | ௧௯ |
| நாவிநதந | ௪௪ |
| நாறகடல் | ௧௪ |
| நாணம | ௪௯ |

| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| கிறைமகவு | ௯௦ | போகின்று | ௨௫ | வங்கிபம | ௨௧ |
| கிளையும் | ௬௧ | போதுபென | ௧௫ | வருசமொ | ௨௬ |
| — | | போவாது | ௨௭ | வடடமோர் | ௯௯ |
| கிலமா | ௨௯ | — | | வளாகிள | ௧௭ |
| கிளெழு | ௭ | மஞ்சளாரிய | ௪௨ | வாதெத்திரா | ௬௭ |
| — | | மணவணிறு | ௫ | வலமேக்மநது | ௯௦ |
| கெடுவிக்கழை | ௬௯ | மணடலம | ௭ | வளருறை | ௮ |
| — | | மதுகரா | ௧௫ | — | |
| கோயுமினறி | ௯௬ | மருமாது | ௯௬ | வாயடிகத்தன | ௪௮ |
| — | | மனனா | ௮ | வாயானமனனன | ௨௮ |
| பஞ்சி | ௬ | மனகது | ௫ | வாரம் | ௫ |
| படருற | ௯௮ | மணிரா | ௮ | வாணிநாது | ௧ |
| பண்ணும் | ௧௬ | — | | — | |
| பனைகிளைக்குன | ௮ | மாகநசம | ௯௮ | வினைறு——வா | ௨௮ |
| பனைநதுகள | | மாவியல | ௬௨ | விருமபு | ௯ |
| — | | மாறுன | ௨௭ | விளகொளி | ௨௨ |
| பிதிதொர் | ௯௨ | — | | — | |
| — | | மினனினறனைய | ௨௫ | வெணமதி | ௬௮ |
| புறத்து | ௬ | — | | வெய்யனே | ௯௫ |
| — | | முத்திலிலை | ௧௯ | வெயினமுறா | ௧௫ |
| பூகனை | ௬௦ | முகலெரி | ௧ | வெணறிகெதா | ௧௦ |
| பூவலா | ௯௮ | முயாபது | ௨௨ | — | |
| — | | முஙாரை | ௯ | வேலைகை | ௨௯ |
| பொகலெய் | ௨ | — | | வேசுகி | ௨௨ |
| பொறபு | ௨ | மெடாக | ௧௮ | வேண்டிகொலம | ௯௬ |
| பொன | ௫ | — | | — | |
| | | மொ... | ௬௯ | வையமே | ௨௦ |


செய்யுளகராதி முற்றிற்று.

ஸ்ரீ

# ஆரணியகாண்டம் பிழைதிருத்தல்.

| பக்கம். | வரி | பிழை | திருத்தல். |
|---|---|---|---|
| ௫ | ௪௯ | ரின்ற | ... நின்ற. |
| ,, | ௧௦ | அவணைவ்வி | ... அவணைவி. |
| ௭ | ௨௩ | பின்ன | ... பின்னம. |
| ௨௨ | ௧ | முசறதும | . முசறதும. |
| ,, | ௨௨ | பணை | .. பணை. |
| ௨௩ | ௧௪ | புலி | ... புலி. |
| ௨௮ | ௯ | செலை | ... சீலை. |
| ,, | ௧௩ | செலை | ... சிலை. |
| ௨௫ | ௩௨ | வயினை | ... வயினுனை. |
| ௨௬ | ௩ | பொருந்தார் | ... பொருந்தாத. |
| ,, | ௫ | பார்த்தான | .. படார்ந்தான |



நன்றாக குருவாழக குருவே துணை.

ஸ்ரீ

ஸர்வம விஷ்ணுமயமஜகத்.

ஸ்ரீமத்கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

# ஸ்ரீமத்கம்பராமாயண

## அருங்கவிவிளக்கம்.

## மூன்றாவது. ஆரணியகாண்டம்.

இது ஆரணியத்தில் நடந்த சரித்திரத்தைக் கூறுகின்றமையின்
ஆரணியகாண்டமென்னும் பெயர்த்தாயிற்று.

### க - வது. விராதன்வதைப்படலம்.

அயோத்தியாகாண்டக் காப்புச்செய்யுளில் வைதரியா மிதத்துவத்தைக் கூறியதுபோல இவ்விடம் முதலிய பிரவாஹத்தையும் இதுமுதலேனைய காப்புச் செய்யுட்களாற் கூறுபவர். அவதாரங்களெல்லாமொன்றாக.

காப்பு.

க. பேதியாது நிமிர்பேத வுருவம் பிறழ்கிலா
ஓதியோதி யுணருந்தொறு முணர்ச்சி யுதவும்
வேதம்வேதியர் விரிஞ்சன் முதலோர் தெரிகிலா
ஆதிதேவ ரவரெம் மறிவினுக் கறிவரோ. (க)

இ-ள். பேதியாது - தாம்வேறுபடாது, நிமிர்பேத உருவம் பிறழ்கிலா - நெருங்கிய வேற்றுமைப்பட்ட வுருவங்கள் தோறும் வேறுபடாத, ஓதி ஓதி உணரும் தொறும் உணர்ச்சி உதவும் - ஓதியோதி யுணருந்தோறும் மெய்யறிவைக்கொடுக்கின்ற, வேதம் வேதியர் விரிஞ்சன் முதலோர் தெரிகிலா - வேதங்களும் வேதியரும் பிரமனுமாகிய முதலோர் நின்றுமறியாத, ஆதி தேவர் அவர் எம் அறிவினுக்கு அறிவு - ஆதிதேவராகிய அவரெமதறிவினுக்குள்ளறிவாய் விளங்குவர். எ-று. (க)

உ. முத்திருத்தியவ்விருந்தனையமொய்நகையொடும்
சித்திரக்குனிசிலைக்குமாரசெனறணுகினர்
அத்திரிப்பெயராருந்தவனிருந்தவமைதி
பத்திரப்பழுமரப்பொழிலதுவனறபழுவம. (உ)

இ-ள். அத்திரிப்பெயர் அரும்தவன் இருந்த அமைதி-அத்திரியென்னும் நாமமுடைய அரியதவத்தோன் வதிந்த மாட்சிமைபொருந்திய, பத்திரம் பழுமரம் பொழில்துவன்ற பழுவம்-இலைகளையுங் கனிகள் பழுத்த மாங்களையு முடைய சோலைநெருங்கிய வனத்தை, முத்து இருத்தி அவ் இருந்து அனையமொய்நகை ஒடும்-முத்தங்களை வரிசையாயப்பதித்து அவைகளிருந்தாற்போன்ற நெருங்கிய பலலுடைய சீதாபிராட்டியோடும், சித்திரக்குனிசிலை குமரர்சென்று அணுகினார். அழகுடைய வளைந்த வில்லுடைய ஸ்ரீராமலக்குமணாபோயக்கிட்டினார். (உ)

பத்திரப்பழுமரப் பொழில - இலைகளையுடைய ஆலமரச்சோலை எனினு மமையும. மொய்நகை - அனமொழித்தொகை.

ங. திக்குறும்செறிபரம்தெரியநின்றநன்பொற்
கைக்குறுங்கணமலைபோலகுமரர்காமமுறலாம
முக்குறையபாலியசிந்தஞ்சேவைநாமமுனியனை
புக்கிறைஞ்சினாருகந்தமுலகுடையபம. (ங)

இ-ள். திக்கு உறும் செறிபரம் தெரியநின்ற - ஒரு திசை பொருந்திய செறிந்தகள மிவ்வளவிற்றென்று அறியநின்ற, இரண் பொன்கைக்குறும கண்மலைபோல் குமரர் - திரண்ட அழகுடைய கரத்தையுஞ் சிறியகண்களையுமுடைய யானையைப் போல ஸ்ரீராமலக்குமணர், (ங)

விராதனைக்கொன்றது.

ச. எட்டோடெட்டுமதமாகரிஇரட்டிஅரிமா
வட்டவெங்கண்வளருயாளிபதினாறுவகையில்
இட்டிழைத்திடையிடக்கனதெரிந்தநெருக்க
தொட்டமுத்தலையில்தொகைமிடற்கழுவொடே. (ச)

இ-ள். மதம் - மதமுடைய, மா - பெரிய, எட்டோடு எட்டு - பதினாறு, கரி - யானைகளையும், இரட்டி அரிமா - முப்பத்திரண்டு சிங்கங்களையும், வட்டவெங்கண் பதினாறு வகை ஆளி-வட்டமாகிய வெவ்விய கண்ணுடைய பதினாறு வகையாளிகளை

ழுப்பில்லாத செவந்த ரத்நங்களைக் கலந்து செய்த, வெம் கண் அங்கம் வலயங்களும் இலங்க - வெவ்விய கண்களையுடைய அங்கத்திலணியும் வலயங்களும் விளங்க, விரவி சங்கு அணங்கிய சலஞ் சலம் அலம்பு - கலந்து சங்கங்கள் வருந்திய சலஞ் சலமென்னுஞ் சங்கங்கள் ளசைகின்ற, தவளக்கங்கணங்களும்-வெண்ணிறமுடைய கங்கணங்களும், இலங்கிய காம்பிறழ - விளங்கிய கைகள் பிறழ. எ-று. (கசு)

இதுவுமது.

கஎ. பூதமத்தனையுமோர்வடிவுகொண்டுபுதிதென
ரேதவொத்தவுருவத்தனுருமொத்தகுரலன
காதலித்தயனளித்தகடையிட்டகணிதப
பாதலக்கமதவெற்பிடைபடைத்தவலியான (கஅ)

இ-ள். அயன் காதலித்து அளித்த - தவத்திற் கயன் விரும்பிக்கொடுத்த, கணிதம் கடை இட்ட - கணக்கு முடிவுசெய்த, பாதலக்கம்மத வெற்பிடைபடைத்த வலியான் - இருபத்தையாயிரம யானைகளினின்று அடைந்த பலமுடையான். (கஅ)

சஉ. ஓமராமரையொருங்குமுணர்வோருணர்வுறும
நாமராமவரைநல்லறமதிறுத்தநணுகி
தாமராவணைதுறந்துதரைநின்றவரையோர்
மாமராமரமிறுத்ததுகொடெற்றவரலும். (உ०)

இ-ள். ஓமராமரை-பிரணவத்தை இடமாகவுடைய ஸ்ரீராமரை, ஒருங்கும் உணர்வோர் உணர்வுறும் நாமராம அவரை-முற்றுமுணர்ந்தோருணர்கின்ற திருநாமமுடைய அவரை, நல் அறம் நிறுத்த - நலலதருமத்தைக்காக்க, அராவணை துறந்து-பாப்பணையை நீக்கி, நணுகி - வந்து, தரை நின்றவரை-காணிலத்தோய நின்றவரை, ஓர் மாமராமரம் இறுத்து - ஒருபெரிய மராமரத்தை யொடித்து, அதுகொடு எற்றவரலும் - அதனைக்கொண்டு ஓச்சவரலும். எ-று. (உக)

உஉ. கவணவண்ணனொடுகன்னலுறைதோளனவிசைசேர
அவனைவ்வினைனிடைபிரிந்துபடர்கின்றவனறம
வெனைத்தனனிறைமுனைவரோடேகுசெலவத
அவனையென்னும்செமெனவுமொத்தனனரோ. (உஅ)

இ-ள். கவணவண்ணனொடு கன்னன் உறை தோளன்-பொன்னிறமுடைய இலக்குமணனொடு ஸ்ரீராமபிரானுமையுக்

தோளுடையானுகி, விசைதோய் அவண் அவ்விண்ணிடை நிமிர்ந்து படர்கின்றவன் - வேகம பொருந்தி ஆங்கு நின்று அவ்வானத்தில் நிமிர்ந்து செல்லுகின்ற விராதன, முன் அவரோடு ஏகு செலவத்து - முன்பு ஸ்ரீகிருஷ்ணார்ச்சுனரென்னு மிருவரைச்சுமந்து செல்லுஞ் செலவால, அறம சிவணதனனசிறை - தருமத்தையொத்ததன்னுடைய சிறைகளையுடைய, உவணன்எனனும் நெடும மன்னவனும ஒத்தனன - கருடனெனனும் பெரிய மன்னவனைபு மொத்தான். எ - று. (௩௮)

கச. தோளிரண்டுமைய வாளைக் கொடுந்தனித் தவிசையால
மீளிமொய்மபினார் கிளர்ந்துமவெழுந் தெடுருவத
தாளிரண்டுமெரியசசினவுச் செங்கணரவக்
கோளிரண்டுசுடருமெதொடாவதிறநதறுகலும. (சக)

இ-ள். புருவத்தேகள் இரண்டும் நெரிய - புருவமாகியதேளிரண்டும் நெரிய, சினவு செங்கண் அரவகோள - சேரவங்கொண்ட செவந்த கணணுடைய பாமபாகிய இராகு கேதுகள், இரண்டு சுடரும் தொடாவதில குறுகலும - சந்திர சூரியிருவரையும் பிடிப்பதுபோல (அசுராங்கள) குறுகிகிடததலும். (சங)

கரு புண்ணிடைபபொழிபயிரப்புனலபொலிந்துவரவும
விண்ணிடைபபடாதலவிடவெழுவிகற்பமநினையா
எண்ணுடைக்கருசிலெண்ணிரிவிளையாபயவிலையிம
மண்ணிடைக்கடிதுவெபாறறநடைக்கெனவுமே. (சச)

இ-ள். புண்ணிடைபபொழி உயிரப்புனல் பொலிந்து வரவும் - புண்ணினின்று பொழிகின்ற அரத்தநீர் பொலிந்து ஒழுகவும், எண்ணுடைக் கரிசில எண்ணி - எல்லார் மனங்களுமுடைய ஸ்ரீ ராமபிரான திருவுளத்திலெண்ணி, இளையோரய - இலக்குமணு, விண்ணிடைபபடாதல விட்டு - ஆகாயத்துறசெல்வதைத் தவிர்த்து, எழுவிகற்பம் நினையா இயலை - எழுகின்ற பிழையை நினையாமற் கிடக்குமவனை, இமமணணிடைக்கடிது பொததுதல் அழகு என்றும - இப்புவியில் விரைவிற் புதைத்தல் முறையென்று சொல்லுதலும். எ - று. (சச)

கசா. மதகயானையினைமாரியமெய்கதழுமையா
கமுகையவளிநிலையணைபூசசணைதூ
அதமெய்நுழ்பவள்பிலளனையாகருநிற
அநவுசெம்பிருகமனுசதததுமே. (சஞ)

இ-ள். நவைதீர் அதவம் ஆய் - குற்றமற்ற யாகாக்கினியில் நெய்யைச்சொரியும் அததியகப்பையாய, நறுநெய் உண்டு - நல்ல நெய்யையுண்டு, (சரு)

சஎ. பட்டதன்மையுமுணர்ந்துபடாசாபமிடமுன்ன
கட்டவன்பிறவிதந்தகடையானவுடலதான
விட்டுவிண்ணிடைவிளங்கினனவிரிஞ்சனெனவோர
முட்டைதந்ததனில்வந்தமுதன்முன்னவனிலே. (சசு)

இ-ள். விரிஞ்சன் என ஓர் முட்டைதந்து - பிரமாண்டமென்றுசொல்லப்பட்ட ஒரு முட்டையைப் படைத்து, அதனில் வந்த முதல் முன்னவனில - அம்முட்டையுள் திருவவதரித்த உலகுக்கு முதலாகிய பரமன் சந்நிதியில், பட்டதன்மையும் உணர்ந்து - தானிறந்ததையு மறிந்து, முன் படா சாபம் இட - முன்பு குபேரன் கொடியசாபங்கொடுக்க, கட்டவன் பிறவிதந்த கடை ஆன உடல - (அதனாலவந்த) கஷ்டமாகிய வலிய சன்மங்கொடுத்த இழிவானவுடலை, விட்டு விண்ணிடை விளங்கினன் - நீக்கித தேவசரீரம்பெற்று வானத்தில விளங்கினன். (சசு)

விராதனதுதி.

சஅ. அன்னமாடருமறைகளுரைநாயகியைபுனைவ
முன்னமாமோதுவிதாரெல்லாருமுடிந்தாரே
பின்னமாயொன்றுமலபிரிந்தேயபிரிடாதோ
என்னமாமாயமிலையேனமாயமண்ணிடந்தாய. (சு0)

இ-ள். பின்ன ஆய் ஒன்றுதல் - சிலர்வேறாகி யுன்னோடு ஐக்கியமாதல், பிறிந்தேயோ பிறியாதோ - பிறிந்தோ பிறியாம லோ, (சு0)

---

# உ-வது. சரபங்கர் பிறப்புநீங்குபடலம்.

## ஸ்ரீராமபிரானைச்சேவித்துச் சரபங்கமுனிவர் முத்தியடைந்ததைக்கூறுகின்றபடலம்.

---

க. குரங்குவிசோங்கலர்கொம்பிதெருந்ப
இரங்கனும்பொழுதெங்கினாலல
சரபங்கனிருந்தகமருந்தம
பரங்கனெனச்சாகொன்னாவாசனை. (க)

இ-ள். குரவம் அலர்கோங்கு குவிகொம்பினொடும்-கூந்தலிற் சூடிய மருதாணிப்பூவலர்ந்த தனங்களாகிய கோங்கரும்புகள் குவிந்த கொம்பாகிய சானகிபிராட்டியோடும், (க)

இந்திரனைச்சொல்லியது.

உ௦. அனையினதுறையைம்பதொடைம்பதுநால்
வினையினதொகைவேள்விநிரம்பியமா
முனிவன்முததேவரினமூவரலார்
புனையுமமுடிதனறபொலனகழலான். (ரு)

இ-ள். அனையின் துறை - அவ்விளிய மார்க்கமாகிய, நால்வினையின் தொகை - நூலின் செய்கைப்படி மொத்தம், ஐம்பதொடு ஐம்பது - நூறு, வேள்வி நிரம்பிய மாமுனிவன் - வேள்வியைச்செய்த பெரியதேவன், (ரு)

இதுவுமது.

உக. திசைகட்டியமால்கரிதெட்டமதப
பசைகட்டினகிட்டினபறபலபோா
விசைகட்டழிதானவர்விட்டவர்போ
இசைகட்டியவொத்திவர்சாமரையான. (அ)

இ-ள். திசைகட்டியமால் கரிதெட்ட - திசைகளிற்கட்டிய பெரியயானைகள் தெவிட்ட, மதப்பசை கட்டின கிட்டினபற்பல போர் - மதப்பசை யூட்டப்பட்டனவாகிகிட்டிய பலயுத்தங்களில், விசைகட்டழி - வேகங்கட்டழிந்து, விட்டவர் - விட்டோடினவராகிய, தானவர்பேர் - அசுரரது பெயர்களை, இசைகட்டிய ஒத்து இவர் சாமரையான் - இசைத்துக் கட்டியதையொத்தெழுகின்ற சாமரமுடையான். (அ)

இதுவுமது.

உ௨. செற்றிககதிரிறபொலிசெமமணியின்
கறைறசுடர்விட்டெரிகஞ்சுகியான
வெறதித்திருமினவுமிர்வெணணைகபோல
சுற்றிகளொரும்சுடாதோளவனையான. (௧௦)

இ-ள். செற்றிக்கதிரில் பொலிசெம்மணியின் - செதுக்கி சூரியன்போல விளங்குகின்ற செவந்தரத்நங்களினது, கற்றைச்சுடர்விட்டு எரிகஞ்சுகியான் - திரண்ட ஒளியைப் பரப்பி யெரிகின்ற கஞ்சுகமுடையான், (௧௦)

இதுவுமது.

உ௩. கண்டாமலையாயிரமுங்கதுவ
கண்டாமரைபோல்கருநாயிறெனக
கண்டானிமையோரிறைகாசினியின
கண்டானருநான்மறையின்கனியை. (உ௪)

இ-ள். இமையோர் இறை - தேவர்க்கரசன், காசினியின் கண் - புவியினிடத்தில், கண் தாமரைபோல் - கண்களைச் செந்தாமரை மலர்போலவும், கருந்நாயிறு என திருமேனியைக் கரியசூரியன் போலவுமுடைய, அரும் நான்மறையின்கனியை - அரிய நான்குவேதங்களின் கனியை, கண் தாம அவை ஆயிரமும்கதுவ - கண்களாகிய அவையாயிரமும் பொருந்த, கண்டான் - பார்த்தான். எ-று. (உ௪)

கடைசித்தான் அசை

உ௪. போனவனகங்கிலபுலமையினுணர்வான
வானவாதலைவனவரவெதிர்கொண்டான்
ஆனவனடிதொழுவருளவரவுழுதான
தானடவிடவகைதழுவினனுழைவான. (௩௩)

இ-ள். தான் நட இடவகை - தான் நடக்கின்ற இடவகுப்பில், தழுவினன் நுழைவான் - தழுவினனாகி ஆசிரமத்துட் செல்வான். (௩௩)

---

## ௩-வது. அகத்தியப்படலம்.

## அகத்தியமுனிவரைக் கண்டதைக் கூறுகின்றபடலம்.

அகத்தியமுனிவரைக்கூறியது.

உரு. யோகமுறுபெருயிர்கள்தாமுலைவுறுமல
ஏகுநெறியாதெனமிகுந்தடியினேறி
மேகமெனமாலைதவழ்விதையெனும்விண்தோய்
நாகமதுநாகமுறநாகமெனநின்றான். (௧௧)

இ-ள். நாகம் அது நாகம் உற நாகம் என நின்றான் - மலையாகிய அது பாதாளத்தி லழுந்த யானைபோல நின்றான் (௧௧)

இதுவுமது.

௨௬. உழக்கும்மறைநாலினுமுயர்ந்துலகமோதும்
வழக்கினும்மதிக்கவியினும்மரபினாடி
நிழற்பொலிகணிச்சிமணிநெற்றியுமிழ்செங்கண்
தழற்புரைசுடர்க்கடவுள்தந்ததமிழ்தந்தான். (௪௧)

இ-ள். உழக்கும் மறைநாலினும்-பழகுகின்ற வேதம் நான்காலும், உயர்ந்து உலகம் ஓதும் வழக்கினும் - எடுத்து உலகஞ் சொல்லும் வழக்காலும், மதிக்கவியினும் - தனது புத்தி விசேடத்தாலும், மரபின் நாடி - முறைப்படி யாராய்ந்து, (௪௧)

இதுவுமது.

௨௭. விண்ணினிலநிலத்தினில்விகற்பவுலகில்பேர்
எண்ணினிலிருக்கினிலிருக்குமெனயாரும்
உண்ணினைகருத்தினையுறப்பெறுவெனென
கண்ணினிலெனக்கொடுகளிப்புறுமனத்தான். (௪௨)

இ-ள். விண்ணினில் - ஆகாயத்தில், நிலத்தினில்-புவியில், விகற்ப உலகில - வேறு உலகங்களில், பேர் எண்ணினில - பெரியமனத்தில், இருக்கினில் - வேதத்தில், இருக்கும் என - வீற்றிருக்குமென்று, யாரும உள் நினைகருத்தினை-எல்லாரும் மனத்துள் நினைக்கின்ற பொருளை, என கண்ணினில் - எனது கண்களால், உறப்பெறுவென் - பார்க்கப்பெறுவேன், எனக்கொடு களிப்பு உறுமனத்தான - என்றுகொண்டு களிப்புடைய மனத்தான். எ - று. (௪௨)

இதுவுமது.

௨௮. இசைத்தமறைநாலினொடியைந்தபிறயாவும்
நிரைத்துநெடுஞானதிமிர்கல்லினெடுநாளிட்
டரைத்துமயனும்மறியாதபொருளாகின்
றுரைக்குதவுமாலையுமுணர்ச்சியிலுய்ப்பான். (௪௩)

இ-ள். அந்நெடுஞானம் திமிர்கல்லில் - அந்த நெடியஞானமாகிய உயர்ந்த அம்மியில், இசைத்த மறைநாலினொடு - ஒலியுடைய வேதம் நான்கோடு, இயைந்த பிறயாவும் நிரைத்து இட்டு - சேர்ந்த பிறநூல்களையும் நிறைத்துவைத்து, நெடுநாள் அரைத்தும் - நெடுங்காலம் அரைத்தும், அயனும் அறியாத பொருள் - பிரமனாலும் அறியப்படாத பரம்பொருள், சேர்

நின்று உரைக்கு உதவும் எனும்-எனக்கு நேர்நின்று வார்த்தை சொல்வதற்கு அருளுகின்றது என்கின்ற, உணர்ச்சியின் உவப்பான் - உணாவால் களிப்பான், எ-று (௪௩)

## ௪-வது. சடாயுகாண்படலம்.

## சடாயுவைக்கண்டதைச்சொல்லுகின்றபடலம்.

சடாயுவைச்சொல்லியது.

௨௯. மால்நிறவிசும்பெழிலமறையத்தனமணிக
காலநிறசசேயொளிசதுவககணணகல
நீல்நிறவரையினிலபவளநீளகொடி
போல்நிறமபொலிநதெனபபொலிகின்றானறனை. (௪)

இ-ள். மால்நிற விசும்பு எழிலமறைய - கருமைநிறமுள்ள ஆகாயத்தி னெழிலமறைய, தன்மணிக்கால் நிறச்சேய் ஒளி கதுவ - தனதழகுடைய காலகளினது நிறத்தின சிவந்த ஒளி பொருந்த, கண் அகல நீல நிறவரையினில் - இடமகன்ற நீல நிறமுடைய மலையில, நீள பவளகொடி-நீண்ட பவளககொடி, நிறம்பொலிந்து எனப் பொலிகின்றானை-நிறத்தாற் பொலிந்தாற்போலப பொலிகின்றவனை. எ-று (௪)

இதுவுமது.

௩௦. கோளிருநாலிரணடொனறுகூடின
ஆளுறுகிரிபோலாரததானறனை
நீளுறுமேருவினெறறிமுறறிய
வாளிரவியிறபொலிமெளலியானறனை. (எ)

இ-ள். ஆள் உறுகிரிபோல் ஆரத்தான் தனை - திருமாலெடுத்தாளுந் திருவாழிபோன்ற மாலைபூண்டவனை, (எ)

சடாயுசொல்லியது.

௩௧.பாவலருக்கொடைக்குநின்றன்பணிக்குடைக்கும்பொறைக்குநெடும்
காவலரும்கற்பகமும்முப்பதியும்கடலிடமும்களித்துவாழ [பண்புதோற்ற
பூவலர்தம்பூவலனேபொய்ப்பகையேமெய்க்கனியேபுகழின்வாழ்வே
இராவலரும்கல்வறமும்யானுமினியென்படநீத்தேகினையோ. (௨௧)

இ-ள். பாவல் அரும் கொடைக்கும் - அறிந்தனுக்கருமையாகிய ஈகைக்கும், நின்தன் பனிக்குடைக்கும்-உனது குளிர்ந்த குடைக்கும், பொறைக்கும் - பொறுமைக்கும், நெடும் பண்பு தோற்ற - நெடியகுணந்தோற்ற, காவல் அரும்கற்பகமும்-ஒளித்தல் செய்யாத கற்பகத்தருவும், உடுபதியும் - சந்திரனும், கடலிடமும்-புவியும், களித்துவாழ-இனித்தங்கள் குணந்தோன்றுமென்று உவந்துவாழ, (உக)

கொடைக்குக் கற்பகத்தையுங் குடைக்கு உடுபதியையும் பொறைக்குப் பூமியையும் நிரனிரையாய்க்கொள்க.

இதுவுமது.

கஉ. அலங்காரமெனவுலகுக்கமுதளிக்குந்தனிக்குடையாயாழிசூழ்ந்த
நிலங்காவலதுகிடக்கநிலையாதநிலையடையேனையநெஞ்சின
நலங்காணநடந்தனையோநாயகனேதீவினையேனவையினாலும்
விலங்கானேனுலவிலங்கினேனினுமுயிர்கட்டிலேனால். (உஉ)

இ-ள். அலங்காரம் என - உனக்கு அலங்காரம்போல, உலகுக்கு அமுது அளிக்கும் - உலகங்களுக்குத் தண்ணென்றஅமுதைக் கொடுக்கின்ற, தனிககுடையாய - ஒப்பற்ற குடையையுடையாய், (உஉ)

கங. தாயினீங்கருந்தந்தையிற்றண்ணகா
வாயினீங்கிவனம்புகுந்தெய்திய
கோயினீங்கினெந்துன்னிலெனெங்களை
நீயுநீங்குதியோநெறிநீங்கலாய். (கரு)

இ-ள். நெறி நீங்கலாய்-நெறியினின்று நீங்காதாய், தாயில்-ஈன்றதாயையும், நீங்க அருந்தந்தையில் - நீங்க அரிதாகிய தந்தையையும், தண்நகர்வாயில் - குளிர்ந்த நகரத்திடத்தையும், நீங்கி வனம்புகுந்து எய்திய கோயில் - நீங்கிவனம் வந்து சேர்ந்த கோயை, துன்னில் நீங்கினெம்-உன்றால் நீங்கினேம், நீயும் எங்களை நீங்குதியோ என் - நீயும் எங்களை நீங்குதியோ இஃதென்னை. (கசு)

கச. அல்லிறந்தனதாடகையாதியா
வில்லிறந்ததிடைபெனமேலைநாள்
பல்லிறந்தவுயாவும்புன்றதன்
சொல்லிறந்தனன்றோன்றல்பின்றோன்றினான். (எக)

இ-ள். புல் இறுத்தது யாவும் - சக்கரவர்த்திக்கு நமக்கு டன் முடித்தது முதல்யாவும், (௬௫)

---

# ரு-வது. சூர்ப்பநகைப்படலம்.

:o:

## சூர்ப்பநகைவந்து மூக்கறையாகிச் சென்றதைக் கூறுகின்றபடலம்.

௩.௫. புவியினுக்கணியாயான்றபொருள்தந்துபுலத்திற்றாகி
அவியகத்துறைகள்தாங்கியைந்திணைநெறியளாவி
சவியுறத்தெளிந்துதண்ணென்றொழுக்கமுந்தழுவிசான்றோர்
கவியெனக்கிடந்தகோதாவிரியினைவீரர்கண்டார். (க)

இ-ள். புவியினுக்கு அணி ஆய் - பூமிக்கு அலங்காரமாய், ஆன்ற பொருள்தந்து - மாட்சிமை யுடைய அர்த்த விசேடங் களைத் தோற்றி, புலத்திற்று ஆகி - அறிவைக்கொண்டதாகி, அவி அகத்துறைகள் தாங்கி - அடக்குகின்ற மனோலய மார்க்கங்களை யுடைத்தாகி, ஐந்திணை நெறி அளாவி - ஐந்திணைக் காமமார்க்க த்தைக் கலந்து, சவி உறத் தெளிந்து - அழகுறத் தெளிந்து, தண் என்ற ஒழுக்கமும் தழுவி - ஈரம்போல ஒழுக்கத்தையுங்கொண்டு, சான்றோர் கவி எனக்கிடந்த - சான்றோர் செய்யுட்போலக் கிடந்த, கோதாவிரியினை வீரர்கண்டார் - கோதாவிரி யாற்றை ஸ்ரீராமலக்குமணர் பார்த்தார். நதியைக் குறிக்குமிடத்து - பூமி க்கு ஆபரணமாய் மலையிலுள்ள பொருள்களைக்கொடுத்து வயல் களைக்கொண்டதாகி வெப்பத்தை யவிக்கின்ற தன்னிடத்தில் நீர் த்துளிகளைத்தாங்கி, மருதம், முல்லை, குறிஞ்சி, நெய்தல், பாலை, என்னும் ஐநிலத்திலுங் கலந்து என்றுகொள்க. மற்றவை இர ண்டற்கும் ஒக்கும். எ-று. (க)

௩.௬. நாளங்கொணளினப்பள்ளிநயனங்களமையநேமி
வாளங்களுறையக்கண்டுமென்னகைதனைக்கொங்கைநோக்கும்
நீலங்கொள்சிலையோன்மற்றைநேரிழைநெடியநம்பி
தோளின்கண்மனம்வைத்தன்னதடங்கள்கண்டான். (உ)

இ-ள். நீளம் கொள் சிலையோன் - நீண்ட விற்பிடித்த ஸ்ரீராமபிரான், நயனங்கள் அனையநேமி வாளங்கள் - இருகண்கள் போன்ற சக்கரவாளப் புட்கள், நாளம் கொள நளினப்பள்ளி- தண்டைக் கொண்ட தாமரைமலர்ச்சேக்கையில், உறைவகண்டு- உறைவனவற்றைப்பார்த்து, (ச)

புள்ளிரட்டை தோன்ற நயனங்களனையவென்றார்.

சூர்ப்பநகையைச்சொல்லியது.

கஎ. செம்பராகம்படச்செறிந்தகூந்தலாள
வெம்பராகுத்தனிவிளைந்தமெய்யினாள
உம்பராணவர்க்குமொண்டவர்க்குமோதரா
இம்பரார்க்குமோரிறுதியீட்டுவாள. (க)

இ-ள். ராகுவெம்ப - ராகுவெனனும் பாமபுகலங்க, தனிவிளைந்த மெய்யினாள - ஒப்பின்றி வளர்ந்த சரீரமுடையாள், (க)

கஅ. சிந்தையிலுறைபவற்குருவமீந்ததால
இந்திறகாயிரமநயனமீசறகு
முந்தியமலர்க்கணோமூன்றுநான்குதோள
உந்தியிலுலகளித்தாற்கென்றுன்னுவாள். (கஉ)

இ-ள். சிந்தையில் உறைபவற்கு உருவம் ஈந்தது - மனத்திலுறையும் மனமதனுக்கு உருவம்போயிற்று, (கஉ)

ககூ. எவனசெயவினியவிவ்வழகையெய்தினேன
அவனசெயத்திருவுடம்பலசநோற்கின்றான்
நவனசெய்ததகையவிக்கனிநாட்டத்தான
தவன்செய்ததவனசெய்ததவனென்னென்கின்றாள. (கஅ)

இ-ள். எவன் செய்ய இனிய இவ் அழகை எய்தினேன் - யாதுசெய்ய இனிதாகிய இவ்வழகைப் பெற்றேன், அவன் செய்யத் திருஉடம்பு அலசநோற்கின்றான் - அதனை வீண்செய்யத் திருமேனி வாடத்தவஞ் செய்கின்றான், நவன் செய்த தகைய இக்கனின நாட்டத்தான் - புதுமை செய்யத்தகைமையுடைய இத்தாமரைக்கண்ணான், தவன் செய்த்தவன் செய்த தவன் என் என்கின்றான் - தவத்தைச் செய்யத்தவஞ் செய்த தவம் யாதென்கின்றான். எ-று. (கஅ)

அவன் நவன் தவன் தவன் என்பனபோலி.

சூர்ப்பநகையைச்சொல்லியது.

௪௦. நீத்தமும்பரவையுங்குறுகநெஞ்சிடை
கோத்தவனபுணர்விடைக்குளிப்பமீக்கொள
ஏத்தவம்புரியவொனறீகலானபொருள்
காத்தவனபுகழெனத்தேயுங்கறபினாள். (௨௬)

இ-ள். நீத்தமும் பரவையும் குறுக - வெள்ளமுங்கடலுஞ் சிறிதெனறு சொல்லும்படி, நெஞ்சு இடை கோத்த அன்பு- மனத்திற்பதிந்த ஆசை, உணாவு இடைகுளிப்ப - அறிவிலழுந்த, மீக்கொள-மேனமைபெற, ஏத்தவம்புரிய ஒனறு ஈகலான்- எல்லாருந் துதிக்கின்ற தருமத்தைச்செயய ஒனறுங்கொடாதவனாகி,பொருள் காத்தவன புகழ் என - பொருளைக்காத்தவனது புகழைப்போல, தேயும் கற்பினாள் - தேயகினற கற்புடையாள் எ - று. (௨௬)

இதுவுமது.

௪௧. பஞ்சியொளிர்விஞ்சுகுளிர்பல்லவமனுங்க
செஞ்செவியகஞ்சம்நிமிர்சீறடியளாகி
அஞ்சொலிளமஞ்ஞையெனவனனமெனமின்னும்
வஞ்சியெனநஞ்சமெனவஞ்சமகள்வந்தாள். (௩௧)

இ-ள் ஒளிர்விஞ்சு - சோதிமிகுகின்ற, பஞ்சி - செம் பஞ்சும், குளிர்பல்லவம் அனுங்க - குளிர்ந்த தளிர்களும் ஒப்பாகாமையால் வருந்த, (௩௧)

இதுவுமது.

௪௨. பொன்னொழுகுபூவினுறைபூவையெழில்பூவை
பின்னெழில்கொளவாளிணைபிறழ்ந்தொளிர்முகத்தாள
கன்னியெழில்கொண்டதகலைத்தடமணித்தேர்
மின்னிழிவதன்மையிதுவிணணிழிவதெனன. (௩௨)

இ-ள். பொன் ஒழுகுபூவின உறை பூவை எழில் - அழகு ஒழுகுஞ் செந்தாமரைமலரிலுறைகின்ற இலக்குமியினழகு, பூவை பின் எழில் - சூர்ப்பநகையினது பின்னழகாகும், கொள் இணைவாள் பிறழ்ந்து ஒளிர்முகத்தாள்-கைக்கொள்ளு மிரண்டு ஈத்திகள் பிறழ்ந்து விளங்குகின்ற முகத்தையுடையாள், மின்- மின்னல், கன்னி எழில்-பெண்ணழகையும், கலைத்தடம் மணித் தேர் - மேகலையணிந்த விசாலித்த அழகுடைய தேரையும், கொண்டது - பெற்றதாகி, இழிவது அன்மை - புவியில் வருவ

இல்லை, இது - இம்மின்னல், விண் இழிவது என்ன - அவ்வாறு ஆகாயத்தினின்று வருவதென்று சொல்லும்படி எ-று. (ருஉ) இணை வாள் - கண்கள், தேர் - அல்குல்,

சக. விண்ணிடையிம்பர்நாகர்விரிஞ்சனேமுதலோர்க்கெல்லாம்
கண்ணிடையொளியின்பாங்காகடிகமழ்சாலைநின்றும்
பெண்ணிடையரசிதேவர்பெற்றநல்வரத்தால்பின்னர்
மண்ணிடைமணியின்வந்தவஞ்சியேபோல்வாள்வந்தாள். (ருஎ)

இ-ள். விண்ணிடை விரிஞ்சன் - வானத்திலுள்ளபிரமன், இம்பர் நாகர் - மனிதர் நாகர், முதலோர்க்கெல்லாம் - முதலாயினோர்க்கெல்லாம், கண்ணிடை ஒளியின்பாங்கர் - கண்ணிலுள்ள சோதியாகிய ஸ்ரீராமபிரான் பக்கலில், கடிகமிழ்சாலை நின்றும்-வாசம் வீசுகின்ற பன்னசாலையினின்றும், தேவர்பெற்றநல்வரத்தால்- தேவர்கள் பெற்ற நல்ல வரத்தால், பின்னர் மண்ணிடை மணியின்வந்த - கடலிற் றோன்றிய பின்பு மண்ணில் வித்திய ரத்ந விரையால்முளைத்த, வஞ்சியே போல்வாள்-கொடியையொத்தவளாகிய, பெண்ணிடை அரசி-பெண்ணரசி, வந்தாள்-வந்தாள், எ-று. (ருஎ)

சச. ஆர்த்தானைக்கரசுந்தியமரர்களைத்தொறுமடர்ந்த
போர்த்தானையிந்திரனைப்பொருதவனைப்போர்தலைத்து
வேர்த்தானையுயிர்கொண்டுமீண்டானைவெரிநபண்டு
பார்த்தானேயான்பட்டபழிவந்துபாராயோ. (க0உ

இ-ள். ஆர்த்து ஆனைக்கு அரசு உந்தி - ஒலித்து ஐராவதத்தைச் செலுத்தி, அமரர்களைத்தொறும் அடர்ந்த - தேவகூட்டத்தோடும் போர்செய்த, போர்த்தானை இந்திரனைப்பொருது- வலியசேனையுடைய இந்திரனைபொருது, அவனைப் போர்தொலைத்து - அவனையுத்தத்தில் வெருட்டி, வேர்த்தானை உயிர்கொண்டு மீண்டானை - வேர்த்தவனாகிய உயிர்கொண்டோடிய அவ்விந்திரனது, வெரிந்பண்டு பார்த்தானே - முதுகை முன்பு பார்த்தோனே, யான்பட்ட பழிவந்து பாராயோ - யான் பட்ட பழியைவந்து காணாயோ. எ-று. (க0உ)

சரு. மநனையுங்கெடுக்காவில்மறைந்துறையுந்தாபதர்கள்
உரனேயோவடலரக்கரோய்வேயோவுற்றெதிர்ந்தார்
அரனேயோஅயனேயோஅரியேயோவெனுமாற்றல்
கரனேயோயான்பட்டதையறியாயோ. (க0ங)

இ-ள். உற்று எதிர்ந்தார் - எதிர்வந்து பொருதோர், அரனேயோ - இவன் உருத்திரனே, அயனேயோ - பிரமனே, அரியேயோ - திருமாலோ, என னும் ஆற்றல் காரனேயோ - என்றையப்பட்டுச் சொல்லுகின்ற வலியுடைய காரனே, மரன் ஏயும நெடும்கானில் - மரங்கள் பொருந்திய நெடியகாட்டில், மறைந்து உறையும் தாபதர்கள் உரனேயோ - மறைந்து வதியுந் தபசிகளது வலியையும், அடல் அரக்கர் ஓய்வேயோ - வெற்றி பொருந்திய அரக்கரது ஓய்வையும், யான் பட்டகையறவு - யான்பட்டதுன்பத்தையும், காணுயோ - நீவந்து பாராயோ எ-று. (க0சு)

சசு. தேட்டந்தான்வாளெயிறறிலதினனவோதீவினையோர்
கூட்டந்தானபுறத்துளதோகுறித்தபொருளறிந்தில்மால்
நாட்டந்தானெரியுமிழநலலாளமேல்பொலலாதாள்
ஓட்டந்தாளரிதினிவருடன்றெழுநதாளெனவுரைததான். (கஉ0)

இ-ள். தேட்டந்தான் - தேடிவந்தது தான், ஓட்டந்தாள் - ஓடிவந்தாள், (கஉ0)

சஎ. ஏற்றவளைவரிசிலையோனியம்பாமுனிகலரக்கி
சேற்றவளைதனகணவனருகிருப்பசினநதிருகி
சூற்றவளைநீருழக்குநதுறைகெழுநீர்வளநாடா
மாற்றவளைக்கண்டககாலழலாதோமனமென்றாள். (கஉக)

இ-ள். ஏற்றவளை வரிசிலையோன் இயம்பாமுன் - நாணேற்றியவளைந்த வில்லுடைய இலக்குமணன் சொல்லாமுன்னம், இகல் அரக்கி - வலியுடைய சூர்ப்பநகை, சேல்-ஒருபெண்கயல், தவளை தன் கணவன் அருகு இருப்ப - தவளையின் கணவனுக்கு அணித்திருக்க, சூல் தவளை - கருப்பமுடைய அப்பெண் தவளை, சினம் திருகி - கோபங்கொண்டு, நீர் உழக்கும் துறைகெழும் நீர்வள நாடா - புனலைக்கலக்குந் துறைகளையுடைய நீர்வளம் பொருந்திய நாடுடையாய், மாற்றவளைக் கண்டக்கால் மனம் அழலாதோ என்றாள் - சககளத்தியைப்பார்த்தால் எனதுமனங் கொதிக்காதோ வென்றாள். எ-று. (கஉக)

சஅ. போக்கினிசொன்னுசிபோய்த்தென்னீர்பொறுக்குவிரேல்
ஆக்குவெனோர்நொடிவரையிலழகமைவெனருள்கூறும்
பாக்கியமுண்டெனினதனுல்பெண்மைக்கோர்பழுதண்டோ
மேக்குயருகெழுக்கும்மடநதையர்க்குரியகைடன்றே. (கஉஉ.)

இ-ள். என்நாசி போக்கினீர் - எனது மூக்கை யரிந்தீர், போய்த்து என் - அதனால்போயதென்னை, (௧௨௯)

௪௧. உளங்கோட லுனையிழைத்தா ளொருத்தி யென்னுதியேல் நிருத ரொடும், களங்கோடற்குரியசெருக்கணியக்காலொருமூவேங்கலந்த காலை, குளங்கோடுமெனறிதுவுமுறுகோளேயென்றுணரும் குறிக்கோ ளில்லா, இளங்கோவோ டெனையிருத்தி யிருகோளுஞ் சிறைவைத்தாற கிளையே னென்றாள். (௧௩௧)

இ-ள். உனை உளம்கோடல் இழைத்தாள் ஒருத்தி உள் என்னுதியேல் - என்னைககூடாம லுன்னை யுள்ளங்கோணலைச் செய்தவ ளொருத்தி யிருக்கின்றா ளென்பாயேல், நிருதரோ டும் - இராக்கதரோடும், களமகோடற்கு உரிய செருக்கண்ணி யக்கால் - யுத்தகளத்தை அடைவதற்குரிய போர் நேர்ந்தால், ஒரு மூவேம் கலநதகாலை - நாம் மூவருங் கூடியபோது, குளம் கோடும் - குளமபறித்துவிடுவோம், என்றிதுவும் உறுகோளே என்று உணருமஂ-என்று சொல்லப்படுகினற இதுவும் யாமடை யத்தகுந்ததே யென்றறியும், குறிககோள் இல்லா-கருமமுடிக் குந் துணிவிலலாத, இளம்கோவோடு எனை இருத்தில்-இலக்கு மணனோடு எனனை வாழச்செய்யின், இருகோளும் சிறைவைத் தாற்கு இளையேன் என்றாள் - சந்திர சூரியரென்னு மிருகோ ளையுஞ் சிறைப்படுத்திய இராவணனுக்கு வலிகுறையமாட்டே னென்றாள். எ-று. ()

---

## ௯-வது. கரன்வதைப்படலம்.

ஞ௦. இருந்தமாக்கரனதன்னையினயிசை
சொரிந்தசோரியனகூநதலன்தூம்பென
தெரிந்தமூக்கினன்வாயினன்செக்கர்மேல்
விரிந்தமேகமெனவிழுந்தாளரோ. (௧)

இ-ள். தூம்பு என தெரிந்த மூக்கினள் - சலதாரையைப் போலத் தெரிந்த மூக்குடையாள், வாயினள் - வாயுடையாள், மேல்செக்கர் விரிந்த மேகம் என விழுந்தாள்-மேலே செவ்வா னம்படர்ந்த மேகம்போல விழுந்தாள். (௧)

ருக. கேட்டனனுரைகண்டிலன்கேடினர்
தோட்டநங்கில்துளையுறுமூக்கினை
காட்டென்றெழுந்தானெதிகணடவர்
நாட்டந்தீயவுலகைநடுக்குவான். (அ)

இ-ள். உரைகேட்டனன் - சொல்லைக்கேட்டான், கேடினர் தோட்டநுங்கில் - சீவுகின்றவர் தோண்டிய நுங்கையொத்த, தொளை உறு மூக்கினை - தொளையுடைய மூக்கை, கண்டிலன்- பார்த்திலன், காட்டு என்று எழுந்தான் - அவரைக் காட்டென்று எழுந்தான். (அ)

ருஉ. மருப்பிருமதகளிற்றமராமனனனும
விருப்புருமுகத்தெதிரவிழிக்கிலெனநிற்ம
உருப்பொருவுலைவுறுமுலகமூன்றினும
செருப்பெருத்தினவுறுசிகாததோளினா (சஅ)

இ-ள். உருப்பொரு உலை உறும் உலகம் மூன்றினும்- அரக்கரது உடற்பொறையைப் பொறுக்காமல் துன்புறுகின்ற உலக மூன்றிலும், (சச)

ருங. வந்ததுசேனைவெள்ளமவள்ளியோனமருங்குமாய
பந்தமாவினையைமாளப்பற்றறுபெரியோர்க்கும
உந்தருநிலையதாகிவுடனுறைந்துயிர்கள்தம்மை
அந்தகர்க்களிக்குநோய்போலரக்கிமுன்னாகவம்மா. (ருங)

இ-ள். மாயபந்தமா வினையை மாள - மாயம் பொருந்திய கட்டாகிய பெரிய வினைகளை மாய்க்க, பற்று அறுபெற்றியோர்க்கும் - அகப்பற்றுப் புறப்பற்றற்ற பெரியோர்க்கும், உந்தஅரும் நிலையதாகி - நீக்க அரிய நிலையுடைத்தாகி, உடன் உறைந்து உயிர்கள் தம்மை-உடனுறைந்து உயிர்களை, அந்தகர்க்கு அளிக்கும் நோய்போல் - நமனிடஞ் சேர்க்கும் நோயைப்போல, சேனைவெள்ளம் - சேனைக்கடல், அரக்கிமுன்னாக- சூர்ப்பநகையை முன்னிட்டு, வள்ளியோன் மருங்குவந்தது - ஸ்ரீராமபிரானுக்கு முன்புவந்தது. (ருங)

ருச. மால்பொருத்தினமறவோருடல்மழைபொத்தினவழிசெம்
பால்பொத்தினகதிரிற்கிளர்படிபொத்தினபடர்வான்
மேல்பொத்தினகுழுவின்னவர்விழிபொத்தினர்விரைவெங்
கால்பொத்தினர்கமன்னனுவர்கடிதற்றுயிர்கவர்வார். (௪00)

இ-ள். மால்பொதித்தின-மயக்கம் நிரம்பிய, மறவோர் உடல் மழை பொதித்தவழி - விராதது உடலிற் சரமழை பொதித்திய வழியை, செம்பால் பொதித்தின - அரத்தங்கள் மூடினவாய், நதியில் இளர்படிபொதித்தின-நதிபோல நிறைந்து புவியை மறைத்தன, படர்வான்மேல் பொதித்தின குழுவிண்ணவர் - அகன்ற ஆகாயத்தின்மேல் நிறைந்த கூட்டமாகிய தேவர்கள், விழிபொதித்தினர் - கண்களை மூடினார்கள், நமன் தூதுவர் கடிது உற்று உயிர் கவர்வார் - யமன் தூதுவர் விரைவிற்சார்ந்து உயிர்களைப் பிடித்து, விரைவெம்கால்பொதித்தினர் - விரைந்தோடும் வெவ்விய தமது கால்களை வலிநீங்கப் பிடித்தனர் எ-று. (௧௦௦)

௫௫. தலைசிந்தினவிழிசிந்தினதழல்சிந்தினதரைமேல்
மலைசிந்தினபடிசிந்தினவரிசிந்துரம்மழைபோல்
சிலைசிந்தினகணைசிந்தினதிசைசிந்தினதிசையோ
டுலைசிந்தினபொறிசிந்தினவுயிர்சிந்தினவுடலம். (௧௦௨)

இ-ள். தலைசிந்தின - அரக்கரது தலைகள் சிதறின, விழி சிந்தின - கண்கள் சிதறின, தழல் சிந்தின-அக்கண்களினின்று அக்கினிகள் சிதறின, தரைமேல் மலைசிந்தினபடி - புவிமேல் மலைகள் சிதறியபடி, வரிசிந்துரம் சிந்தின - கல்லணை கட்டிய யானைகள் சிதறின, மழைபோல் சிலைசிந்தின கணைசிந்தின-மேகம்போல விற்களுகள் சிந்திய அம்புகள் சொரிந்தன, திசைசிந்தின-திசைகளிடிந்து சிதறின, திசையோடு உலைசிந்தின பொறி சிந்தின-அத்திசைகளோடு கொல்லுலையிற் சிதறினபோல அக்கினிப்பொறிகள் சிதறின, உடலம் உயிர்சிந்தின - உடல்கள் உயிரை நீக்கின. எ-று. (௧௦௨)

௫௬. அற்றனசிரமெனவறிதல்தேற்றலா
கொற்றவெஞ்சிலைச்சரம்கோத்துவாங்குவார்
இற்றவரிருதவரெழுந்துவிண்ணினைப்
பற்றினமழையெனப்படைவழங்குவார். (௧௮)

இ-ள். சிரம் இற்றவர் - தலைகளறுபட்டவர், அற்றன என அறிதல் தேற்றலர் - அவையறுபட்டன வென்றறியாது, சரம் கோத்து - வாளிகளைப்பூட்டி, கொற்றவெம் சிலை - வெற்றி பொருந்திய வெவ்விய வில்லை, வாங்குவார்-வளைப்பார், இருதவரெழு

ந்து-தலைகளறுபடாதவரெழுந்து, விண்ணினைப் பற்றின மழை என - ஆகாயத்தைப் பற்றிய மேகம் தாரைகளை வழங்குதல் போல, படை வழங்குவார் - ஆயுதங்களை வழங்குவார். (ககஅ)

ருள. ஏற்றியநுதலினனிருண்டகாரமழை
தோற்றியவில்லொடுமதொடரமீமிசை
காற்றிடையழிந்தெனககார்முகததையும்
மாறறரும்பசழிபாலறுசதுமாறறினை. (கருஉ)

இ-ள். காற்றிடை அழிந்து என - காற்றால் மேகமழிந்தாற்போல, (கருஉ)

ருஅ. துருவியோடினவுயிர்நிலைசுடுசரநதரநத
கருவியோடினகசசையுங்கவசமுங்கழல
அருவியோடினவெனவழிகுருதியாறொழுக
உருவியோடினகேடகத்தட்டொடுமுடலம. (கரு௦)

இ-ள். துரந்தசுடுசரம்-ஸ்ரீராகவபிரான்விட்டசுடுகின்றஅம்புகள், உயிர்நிலை துருவி ஓடின - அரக்கர துயிர்நிலையை துளைத்துச் சென்றன, கச்சையும் கவசமும் கழல - கச்சையுங் கவசமுங் கழன்று நீங்க, அருவி ஓடின என - அருவியாறு ஓடினாற்போல, அழிகுருதி ஆறு ஒழுக - அழிந்த இரத்தவாறுசெல்ல, கேடகத் தட்டு ஒடும் உடலம் - கேடகத்தட்டோடுமுடலை, கருவி - படைகள், உருவி ஓடின - துளைத்தோடி, ஓடின-போயின. எ-று. (கரு௦)

ருக. தாரவட்டவெண்டிசைகளைத்தனித்தனிசுமக்கும்
பாரவெட்டிஞேடிரண்டினிலொனறுபார்புரசக
போவிட்டவனுதலணியோடைபிறபிறழும
வீரபட்டிகைபடடனவின்னவாவெருவ. (கருக)

இ-ள். தாரவட்டம் எண்திசைகளை - தாரத்திலுள்ள வட்டமாகிய எட்டுத்திசைகளையும், தனித்தனி சுமக்கும் - தனித்தனியே தாங்கும், பாரம் எட்டினோடு இரண்டினில் ஒன்று-பெரியஎட்டு யானைகளோடு சக்கிரம் ஆதிசேடன் என்னுமிரண்டில் பாரதாழ்வானுகிய திருவாழியை, பார்புரக்க போவிட்டவன்-புவியைக்காக்கத் தன்னினின்றும் நீங்கவிட்ட ஸ்ரீராமபிரானது, நுதல் அணி ஓடையில் - நெற்றியிலணிந்த பட்டம்போல, பிற

ழும் வீரபட்டிகை - விளங்கும் வீரபட்டிகையில், விண்ணவர் வெருவ - தேவர்களுமஞ்ச, பட்டன - அம்புகள் தைத்தன. எ - று. (௧௫௯)

## ௭-வது. மாரீசன்வதைப்படலம்.

### மானாகிவந்த மாரீசனைக்கொன்றதை யுணர்த்துகின்றபடலம்.

இராவணன வீறறிருநதலைச்சொல்லியது.

௧௦. நிலையிலாவுலகினிடைநிற்பனவுமநடப்பனவுமநெறியினீந்த
மலரினமேலநானமுகறகும்வகுப்பரிதுநுனிப்பதொருவரமபிலாறறல்
உலைவிலாவகையுழநதருமமெனநினைநதவெலாமுதவுநதச்சன [னோ.
புலனெலாநதெரிபபதொருபுனைமணிமண்டபமதனிலபொலியமன

இ - ள். மலரின்மேல் நான்முகற்கும்-தாமரைமலரில் வீற்றிருக்கின்ற பிரமனுக்கும், வகுப்ப அரிது நுனிப்பது ஒரு வரம்பு இல் ஆற்றல் - செய்ய வரிதாகிய மதிக்கத்தக்க ஒப்பற்ற அறிவால், உலைவு இலாவகை உழந்த தருமம் என - அழிவில்லாதபடி வருந்திச் செய்த தருமத்தைப்போல, நினைந்த எல்லாம் உதவும தசசன - நினைந்தவற்றையெல்லாங் கொடுக்கின்ற மயனுடைய, புலன் எலாம தெரிப்பது ஒரு - புத்திவிசேடங்களையெல்லாங் காட்டுவதாகிய ஒரு, புனைமணி மண்டபம் அதனில் பொலிய-அலங்கரித்த ரதநகசிதமான மண்டபத்தில் வீற்றிருந்து விளங்க. எ-று. (௨)

௧௧. பண்டலங்கலதிசைக்களிற்றின் பணைமருப்பி னிணையொடியப் படர்ந்த
பொற்றோள், விண்டலங்கள்தோறு வீங்கி யோங்குதடமால்வரையின்வள
ங்கமீதில, குண்டலங்கள் குலவரையை வலம்வருவானிரவிகொழுங்க
திர்சூழ்வதென, மண்டலங்கள பலவிரண்டும் நாலைந்தாய் பொலிந்த
வெனவயங்கமன்னோ. (௩)

இ - ள். பண்டு அலங்கல்திசைக்களிற்றின் - முன்னம் அசைதலுடைய திசையானைகளினது, பணைமருப்பின் இணை ஒடிய-பருத்தகொம்புகளி ளிரட்டைமுறிய, படர்ந்தபொன்தோள்-

அகன்ற அழகிய தோள்கள், விண்தலங்கள் உறவீங்கி - ஆகாய மளாவப்பருத்து, ஒங்குமால் உதயவரையின் விளங்க-உயர்ந்த பெருமைபொருந்திய உதயகிரியைப்போல விளங்க, குலவரை யை வலம் வருவான் - மேருகிரியைச் சுற்றிவருகின்ற, சுற்றை- கூட்டமாக, சூழ் - சூழ்ந்த, சொழும் - கொழுமையான, கதிர்- ஒளிகளையுடைய, இரவி மண்டலங்கள் பன்னிரண்டும் - சூரிய மண்டலங்கள் பன்னிரண்டும், நால் ஐந்தாய் பொலிந்த என - இருபதாய்ப் பொலிந்தாற் போல, மீதில் - அத்தோள்களின் மேல், குண்டலங்கள் - காதிலணிந்த குண்டலங்கள், வயங்க - விளங்க, எ-று. (ரு)

கஉ. புலியினதளுடையானும்பொனனுடைபுனைநதானும்பூவினனும
நலியும்வலததாரலலர்தேவரினிஙகியாவரினிநாட்டலாவாா [தர்
மெலியுமிடைதடிச்சும்முகிலேயெனநரோட்சேயரிககண்வெனறிமா
வலியநெடும்புலவியினும்வணஙகாதமகுடநிரைவயங்கமனனோ. ()

இ-ள். நலியும் வலத்தார் அல்லர் - இராவணனை வருத்தும் பலமுடையாரல்லர், (எனின்) இனி இஙகு நாட்டல் ஆவார் தேவரில்யாவர் - இனி இஙகு சொல்லுதற் குரியார் தேவரில் யாவர், (ச)

கங. வானுலாம் முழுமணிகள் வயங்கொளியின தொகைவழங்கவயிரக்கு ன்றத், தோளெலாம் படி சுமநத விட அரவின படநிரையில் தோன்று ஆன்ற, நாளெலாம் புடைதயங்க நாமநீா இலங்கையில்தான வாரிஇ ட்ட, கோளெலாம் கிடந்தநெடுஞ்சிறை அனனநிறை ஆரம்குலவமன னோ. (௬)

இ-ள். ஆன்றநாள் எல்லாம் புடைதயங்க-வானிலமைந்த நக்ஷத்திரங்களெல்லாம் விளங்க, (௬)

கச. சேணுயர்நெறிமுறைதிறம்பலின்றியே
பாணிகள்பணிசெயப்பழுதில்பண்ணிடை
வீணையினாம்பிடைவிளைத்தநேமறை
வாணியினாதன்செவியினவாக்கவே. (கரு)

இ-ள். சேண் உயர் நெறிமுறை திறம்பல் இன்றி - நெடுங் காலமாயுயர்ந்தவழியாகிய முறைதவிராமல், பழுது இல்பண் இடை - குற்றமில்லாத இசைப்பாட்டோடு, பாணிகள் பணி செய - காங்கள் தாளங் கொட்ட, நாரதன் - நாரதமாமுனிவன்,

வீணையின் நரம்பு இடை விளைத்த தேம்மறை - வீணையினது நரம்பிலுண்டாக்கிய இனிமையாகிய வேதத்தை, வாணியின் - சரசுவதியைப்போல, செவியில் வார்க்க - செவியிற் பெய்ய. எ - று. (கசு)

சுரு. சூலமேமுதலியதுறந்துசுற்றிய
சேலையாலசிறியவாய்புதைத்துச்செங்கையின
தோலுடைநெடும்பணைதுவைக்கும்தோறெலாம்
காலனவந்திசைகருநாள்கடிகைகூறவே. (கஎ)

இ-ள் நாள் கடிகைகூற – நாளினது நாழிகைகளைத் தெரிவிக்க, தோல் உடை நெடும்பணை துவைக்கும் தோறெலாம்- தோலைக்கட்டிய பெரியமுரசை முழக்கும்போதெல்லாம், காலன் - யமன், சூலமே முதலிய துறந்து - சூலமுதலிய படைகளை நீக்கி, சுற்றிய சேலையால் - சுற்றிய உத்தரீயத்தோடு, செங்கையின் – செவந்த கரங்களால், சிறியவாய்புதைத்து- சிறியவாயைமூடி, வந்து இசைகரும் - வந்து சொல்லுவான, எ-று. (கஎ)

சுசு. ஊருவில்தோன்றியவுயிர்பெய்லோவியம்
காரினிலசெருக்கியகலாபமஞ்ஞைபோல
வார்சிக்கருவியோர்வருத்தபாணியின
காரியர்ருநடம்நடிப்பநோக்கியே. (உஉ)

இ-ள். ஊருவில்தோன்றிய - பிரமனது தொடையிற் பிறந்த, காரியா - மேனகைகள், உயிர்பெய் ஓவியம் - உயிரைப்பெய்த சித்திரங்களைபபோலவும், காரினில் செருக்கிய கலாப மஞ்ஞைபோல் - கார்காலத்திற களிப்படைந்த தோகைகளையுடைய மயில்களைபபோலவும், வார்சிக்கருவியோர் வருத்தபாணியின்- வாரார்க்கட்டப்பட்ட வாத்தியமுடையோர் வருத்த தானத்தோடு, அரும நடம் நடிப்பநோக்கி- அரிய நடனமாடப் பார்த்து. எ - று. (உஉ)

சூர்ப்பநகைசூர்ப்பணகையாகிவந்ததைப்பார்த்ததாசர்சொல்லியது.

சுஎ. சொற்பிறந்தார்க்கிதனியவொன்றுமே
இற்பிறகரார்தமக்கிலைசெய்திலன்
கற்பிறந்தவெனக்கான்கோலமியன்
பொற்பிறந்தாக்கினன்புகன்றெனருர்மிலா (கஅ)

இ-ள். சொல்பிறந்தார்க்கு இது துணிய ஒண்ணுமே-இன்னவரென்று குறிப்பிட்டுச் சொல்லத்தகுந்தவர்கு இது செய்யக்கூடுமோ, (௩௨)

௬௮. நாந்தகவுழவரைநாட்டுந்தண்டத்தா
காந்தியமனத்தினாபுலவிகைமிகச
சேந்தகண்ணிதழுஞ்செவந்தநீருக
வேந்தனுக்கிளையவளதாளில்வீழ்ந்தனா (௩௮)

இ-ள். நாந்தக உழவரை நாட்டும் தண்டத்தர் - வாள்வீரராகிய தமது கணவரை ஊடித்தண்டிப்பவர், (௩௮)

இராவணனை சூர்ப்பநகையைவினவியது.

௬௯. செய்தனாகனமானிடரொனதிசையினைத்தும்
எய்தநகைவந்ததெரிசிந்தினகணெலாம்
நொய்தவர்வலித்தொழிலுவன்றமொழியொன்றோ
பொய்தவிர்பயந்தசைமொழிப்படக்கப்புகலென்றான். (௫௰)

இ-ள். நொய்து அவர் வலித்தொழில் நுவன்றமொழிஒன்றோ-அறபமாகிய அவரது வலித்தொழிலைச சொல்லிய சொல்லுண்மையோ, (௫௧)

சூர்ப்பநகைஇராவணனுக்குக்கூறியது.

௭0. வற்கலையர்வார்கழலர்மார்பிணணிநூலா
விற்கலையர்வேதமுறைநாவர்நணிமெய்யா
உற்கலையருனலோயாருகள்தலையுமுனரூா
சொற்றலைநெடுந்தொலைவில்துணிசனமந்தார. 

இ-ள். உற்கு அலையர் - உனக்குத்தோலார், (௫௪)

௭௧ ஆறுபுலனந்தணரரக்கரையடெனச்செல
றேறுநெறியந்தணரியம்பவுலகெல்லாம்
வேறுமெமுறாக்கரருலம்வேரொடுமடக்க
கோறுமெனமுன்னைமொருசூளுறவுகொண்டார். (௫௫)

இ-ள். ஆறுபுலன் - அடக்கிய இந்திரியங்களையுடைய நாங்கள், அரக்கரை அஞ்சினம் - அரக்கரையஞ்சினோம், வேறும் - வெல்லுதும், கோறும - கொல்லுதும்,

"அச்சக்கிளவிக் கைந்து மிரண்டு-மெச்சமிலவே பொருள்வயின்" என்ப.

இராவணன்காமத்தால்வருந்தியதைத்கூறியது.

எஉ. நூக்கலாகலாதகாதலூறுநூறுகோடியாய்
பூக்கவாசவாடைவீசுசிந்தநீர்பொதிந்தமென
சேக்கைவீக்கிகந்திக்கயங்களெட்டைவென்றதோள்
ஆக்கைதீயவுள்ளமுடையவராவிவேவதாயினன். (௧௦)

இ-ள். நூக்கல் ஆகலாத காதல்-நீக்குவதற்காகாத ஆசை, நூறு நூறுகோடியாய பூக்க-நூறு நூறுகோடியா யுண்டாக, ()

எ௩. தாவியாததீதெனாததையலாளைமெய்யுறப்
பாவியாதபோதிலாதபாவிமாலைமுபானலேவல
காவியானகண்ணிமேனிகாணமுனுமாலைசடால
ஆவிசாலநொந்து . . . துமாயினன் (௧௨.)

இ-ள். தாவியாது - நிலைபெறாது, தீது எனாது - தீமையென்று நினைக்காது, தையலாளை-சீதாபிராட்டியை, மெய் உறப்பாவியாதபோது - உண்மையாயுற நினைக்காதபோது, (௧௩)

இராவணன்சென்றசோலையைச்சொல்லியது.

எ௪. மாணிக்கம்பனசம்வாழைமரகதம்வயிரந்தேமா
ஆணிப்பொன்வேங்கைகோகமரவிந்தராகம்பூகம்
சேணுயர்நீலஞ்சாலங்குருவிந்தந்தென்னம்வெள்ளி
பாணித்ததென்னினாகம்பளிங்குபாடலம்பவளம்மன்னே. (௧௪)

இ-ள். பனசம் - பலாமரங்கள், மாணிக்கம் - மாணிக்கத்தைப் போல்வன, வாழை மரகதம்-வாழைகள்மரகதத்தைப் போல்வன, தேமாவயிரம்-மாமரங்களவயிரத்தைப்போல்வன, வேங்கை ஆணிப்பொன் - வேங்கை மரங்கள் ஆணிப்பொன்னை யொத்தன, கோகம் அரவிந்தராகம் - கோங்கமரங்கள் அரவிந்தராகத்தைப் போன்றன, பூகம் சேண் உயர்கும நீலம்-கமுகுகள் நெடுந்தூரங் கதிரைச் செலுத்தும் நீலத்தை யொத்தன, சாலம் குருவிந்தம் - ஆச்சாமரங்கள் குருவிந்தத்தைப் போன்றன, தென்னம்வெள்ளி - தெங்குகள் வெள்ளியைப்போன்றன, நாகம் பளிங்கு - புன்னாக மரங்கள் பளிங்கை யொத்தன, பாடலம் பவளம்-பாடல மரங்கள் பவளத்தைப் போன்றன, பாணித்தது என்-இனி நீட்டித்துச் சொல்வதால் பயனென்னை, எ-று. ()

நள்ளிரவில்சூரியோதயமானகாலைநிகழ்ந்ததைககூறியது.

எரு. புனைந்திதழுரிஞ்சுறுபொழுதுபுல்லியும
வனைந்திலவ்வைகறைமலரும்மாமலா
நனந்தலையமளியிலதுயிலுநஙகைமாா
அனந்தரினெடுங்கணோடொத்தவாமரோ (சஉச)

இ-ள். புனைந்து இதழ் உரிஞ்சு உறு பொழுது புல்லியும்- சேர்ந்து இதழை விரிககுஞ் சூரியன் பொருந்தியும, வைகறை மலரும் மாமலர் - விடியற்காலத்தில் மலர்கின்ற பெருமைபொருந்திய மலர்கள், நனந்தலை அமளியில - பள்ளியின மத்தியில், துயிலும் நஙகைமார் - தூஙகுகின்ற பெண்களது, அனந்தரின் நெடும் கண் ஒடு ஒத்த ஆம-நித்திரையுடைய நீண்டகண்களோடொத்தனவாகி, வனைந்தில-காலமபெருமையால் மலர்ந்தில. ()

எசு. நஞ்சுறுபிரிவினைநாளினீளமோா
தஞ்சுறவிடுவதோர்தயாவுதாங்கலால
வெஞ்சிறைநீஙகியவினையினோரென
நெஞ்சுறக்களித்தனநேமிப்புள்ளெலாம. (சஉசு)

இ-ள். ஓர்நாளின் நீளம - ஒருபகல் முழுதும், தஞ்சுற- இன்பமுண்டாக, நஞ்சு உறு பிரிவினை-விடமபோன்ற பிரிவை, விடுவதோர் தயாவு தாஙகலால் - விடுவதாகிய ஒப்பற்ற கருணையைப்பெறலால், நேமிப்புள் எல்லாம் - சக்கரவாளப் பறவைகளெல்லாம, வெம் சிறை நீஙகிய வினையினோர் என - வெவ்விய சிறைச்சாலையினின்று நீஙகிய குற்றவாளிகளைப்போல, நெஞ்சு உறக்களித்தன - மனமகிழ்வுவந்தன. (சஉசு)

எஎ. ஆண்டப்பிறைநீங்கலுமப்பியசந்தகாரம
தீண்டற்கெளிதாயபலதேயப்பனதேயக்கலாகி
வேண்டிற்காபத்திரத்தாசதுவிழுத்தலாகிக்
காண்டற்கினிதாய்ப்பலகாறுங்காட்டலாகி. (சஉஎ)

இ-ள். ஆண்டு அப்பிறை நீங்கலும் - அப்போது அவ்விளஞ் சந்திரனேகலும், அந்தகாரம்-இருள், தீண்டற்கு எளிதாய்- கரத்தால் தொடுவதற் கெளிதாகி, தேய்ப்பன பலதேய்க்கலாகி- தேய்ப்பனவாகிய பலவற்றையுந் தேய்க்கலாகி, வேண்டில் காபத்திரத்து ஈர்த்து விழுத்தலாகி-வேண்டுமாயின் வாளால் அறு

த்து விழுததலாகி, காண்டற்கு இனிதாய்ப்பலகந்து இரட்டலாகி - பார்த்தலுக் கினிதாய பலதூண்கள் இரட்டலாகி, எய்தியது - வந்தது. எ-று. (கரு-அ)

எஅ. முருடர்க்கருட்டறமெளிதெனபதெனமுற்றுமுற்றிய
பொருடீங்கிலக்கேள்விச்சுடர்புகக்குவழுங்கலின்றிக்
குருடிங்கிதெனனக்குறிக்கொண்டுகண்ணோட்டமின்றி
அருடீர்நெஞ்சிற்கரிதெனபதவந்தகாரம். (சகூக)

இ-ள். அவ் அந்தகாரம் - அவ்விருளை, முருளதீர்ந்து உருட்டறகு எளிது எனபது என - மூடத்தை நீங்கி யுருட்டம் எளிதென்று சொலவதென்னை, முற்றும் முற்றி - முழுதுமுற்றுபபெற்று, நீங்கு இல - கெடுதலிலலாத, பொருள் கேள்விச சுடர் - பொருட் கேளவியாகியவொளி, புகக்குவழுங்கல் இன்றி - புகுந்து விளக்குதலின்றி, ஈங்கு குருடு இது எனனக்குறிக் கொண்டு - ஈங்கு கணணிலலாத குருடு இது வென்று சொல்லும்படியான குறியைக்கொண்டு, கண்ணோட்டம் இன்றி - கண்ணோட்டமின்றி, அருள் தீர்ந்த நெஞ்சில் கரிது எனபது - அருள் நீங்கிய மனத்தினும் மிகக்கரிதென்று சொல்லத்தகுந்தது. எ-று

எகூ. காரமுதின் துளிகலவன காந்தமீனின்
வேந்தனொளியனைத்துமே மேலொடுகீழ்விரித்தான
[illegible]
[illegible] (கரு௭)

இ-ள். காலம் மீனின் வேந்தன் ஒளி அனைத்தும் - நாழிகையைத் தெரிவிக்கின்ற நக்ஷத்திரங்களின் தலைவனாகிய சந்திரனது ஒளியெலலாமும், அமுதின் துளிகாலவன - அமுதின் துளிகளைச்சொரிவனவாகிய, காந்தம் - சந்திரகாந்தக்கறகளை, மேலொடு கீழ்விரித்தான - மேலொடு கீழிடத்திலும் பரப்பி, (கரு௭)

அ0 [illegible]
[illegible]
[illegible]
[illegible] (உகூ)

இ-ள். பண்டு ஆரும் உறா இடர் படுவாள் - முன்னம் யாருமடையாத துன்பத்தை யடைவாளாகிய சானகிபிராட்டி,

உண்டாகிய கேடு உடையார்-தீவினையா லுண்டாகிய கேடுடை யார், என்தானும் இயைந்து இயையா உருவம் - விழித்துக் கையில் மனத்தில் நினைந்து பொருத்தாத வுருவத்தை, துயில் வாய்-கனவில், கண்டார் எனல ஆம் வகைகண்டனள-பார்த்தா ரென்று சொல்லலாம் வகை அம்மானைபார்ததாள எ-று (௨௧௫)

௮௯. காணுவிதுகைதவமெனறுணராள
பேணுதநலமகொடுபேணினளால
வாணுளையிராவணனமாளுதலால்
வீணுளினறமபுவிமேவுதலால. (௨௧௬)

இ-ள். இராவணன் வாழ்நாளை மாளுதலால் - இராவணன் ஆயுளைப்போக்கலாலும், வீண் நாளின் புவி அறம மேவுதலால்- வீணுளின்றி பூமி தருமத்தைப பொருநதலாலும, (௨௧௬)

ஸ்ரீராமபிரானஇளையபெருமாளுககுச்சொலலிடது.

௯௰. என்னெனறுநினைத்திஙழுந்துவராம்
கனனஙகளினவேறுளகாணுதமால
பொனனினஒளிமேனிபொருந்தியவெழ
அனனஙகளபிறந்ததறிந்திலேடா. (௨௨௩)

இ-ள். நம கன்னங்களின வேறுளகாணுதும்-நமது காதுக ளால் வேறுள்ளவற்றைக கேடகுதும, ஏழனனஙகளின் கதை யை மகாபாரதம வல்லாராவாயுணர்க. (௨௨௩)

௯௧. முறையுமமுடிவுமயிலெமொயபுரென
றிறையவனிளையானெடயம்பினனுல
பறையுநதுணை...பெரிபோய
மறையும்மெனவேழைகருநதினளால (௨௨௪)

இ-ள். பறையும்துணை அன்னது - வார்த்தை சொல்லும ளவுக்குள் அம்மான, (௨௨௪)

இளையபெருமாள்ஸ்ரீராமபிரானுக்குக்கூறியது

௯௨. பின்னினருமிளையரெண்டுமுணரிலம்பிடிதசமாயம்
என்னென்றுதெளிதலதேறருமயாவதிதென்றமோராம்
முன்னின்றாமுறைபினனுராமுனிவுளகேட்டடமுற்றல்
பொன்னின்றவிரதோளாயபுகழுடைத்தாமனறென்றான. ()

ள். முறையில் நின்றார் - ஒழுக்கத்தில் நின்றவராகிய, நின்றார் - முதன்மையோர், முனிந்து உளவேட்டை முற்றல் - வெறுத்து நீக்கியுள்ள வேட்டையைச் செய்தல், (உகங)

---

## அ-வது. சடாயுவதைப்படலம்.

:o:

## இராவணன் சடாயுவைக்கொன்றதைச் சொல்லுகின்றபடலம்.

*சந்நியாசிவேடங்கொண்ட இராவணனைச் சொல்லியது.*

அரு. ஊணிலருமெனவுலர்ந்தமேனியன
சேணெறிவந்ததோர்வருத்தச்செயலினன
பாணியினடத்திடைப்படிகின்றானென
வீணையினிசைபடவேதம்பாடினான். (உச)

இ-ள். பாணியின் - பாட்டினை, நடத்திடைப படிகின்றானென - நடனத்திற் படிகின்றவனைப்போல,

அசு. செயிருறுமனைசொல்லத்தீயவற்சேர்தல்செயதார
ஆயவரல்லர்சொல்லிற்றொனெறிதொடர்ந்தோரொன்றாள்
மாயவல்லரக்கர்வல்லாவேவரொருவரிக்கவென்ப
தாயவளறிதல்தேறாளாதலினடலொன்றெண்ணுளா. (ருச)

இ-ள். தொல் நெறி தொடர்ந்தோர - பழமையாகிய மார்க்கத்தை அனுட்டித்தவரோ, (ருச)

*இராவணனைப்பிராட்டியைநோக்கிக்கூறியது.*

அஎ. மேருவைப்பறிக்கவேண்டில்விண்ணினையிடிக்கவேண்டில
நீரினைக்கலக்கவேண்டில்நெருப்பினையவிக்கவேண்டில
பாரினையெடுக்கவேண்டிலபலவினைசிலசொல்லேழாய்
யாரெனக்கருதிச்சொன்னாயிராவணனாகிதெனனென்றான். (கஉ)

இ-ள். ஏழாய் - பெண்ணே, மேருவைப்பறிக்க வேண்டில் - மேருகிரியை பிடுங்கவிரும்பினும், விண்ணினை இடிக்கவேண்டில் - ஆகாயத்தையிடிக்கவிரும்பினும், நீரினைக்கலக்கவேண்டில் - கடலைக்கலக்க விரும்பினும், நெருப்பினை அவிக்கவேண்டில் - வடவாமு

காக்கினியை யவிக்க விரும்பினும்,பாரினை எடுக்கவேண்டிய் யை யெடுக்கவிரும்பினும், பலவினைச் சிலசொல்-இவ்வகைபட்ட பல அரிய செயல்களிற் சிலவற்றைச சொல், இராவணற்கு அரிது என் - இராவணனுக்கு அவற்றிலரிது யாது, யார் எனக் கருதிச்சொன்னாய் எனறான் - யாரென்று நினைந்து சொன்னா யெனறான். எ-று. (கூ௨)

இராவணன்சடாயுவின்மேலெறிநதவேலைக் தறிததுச்சொலலியது.

அஅ. பொனனோக்கியர்தம்புலனோக்கியபுனகரோருமை
இனனோககியரிலவழிவெயயதியால்விருந்துமை
தனனோககியநெஞ்சுடையோகியாதனமைசாாநத
மெனனோககியாநோககமுமாமெனமீணடதவவேல (கககூ)

இ-ள். அவ்வேல் - அவ்வேலாயுதம், பொன் நோக்கியர் தம்புலன் நோக்கிய புனகரோரும் - பொருளை விரும்பிய மகளிரது அழகை விரும்பியவறிஞரையும், இல்நோக்கியர் இலவழி எய்திய நல்விருந்தும் - இலலாள் முகததைப்பார்த்தவள் கருத்துப்படிநடபபவரது மனைககண்சென்ற நலலவிருந்தினரையும், தன் நோக்கியநெஞசு உடையோகியர் தன்மைசார்நத-தன்னை நோக்கிய வுணர்வுடைய யோகியரது தன்மையை விரும்பிய, மெல்நோககியர் நோக்கமும் ஆம் என மீண்டது-மெல்லிய பார்வையுடையமகளிரது பாாவையுமாமென்று சொலலுமபடி மீண்டது. எ-று (கககூ)

உ-ம். இல்லாளையஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று - நல்லார்க்குநலல செயல். எனவும், நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள் - பெட்டாங் கொழுகுபவர். எனவும் வரும்.

அகூ. கிளித்தனகளித்தமேனிதாமரைகசெழுவுசெம்பூத
துளித்தனவனையவென்னதுளவிசோவெள்ளக்கனனை
குளித்தனன்கொணடலாறறுக்களித்தபினகொண்டகனவிர்
அளித்தனனரகர்ச்செறறசிறறநாானவலாதிர்க்தான். (உ௨௧)

இ-ள், கிளித்து அன்னமேனி-கிளிச்சிறைப் பொன்னையொத்த நிறம்பொருந்திய, களித்த - தேனுடைய, தாமரைக்கொழுவு செம்பூ-தாமரைத்தண்டிற் பொருந்திய செந்தாமரைமலர், அளி

-, ள அனைய என்ன - துளித்தனவற்றை யொப்பாயின வென்று சொல்லும்படி, துள்ளிசோர் வெள்ளக்கண்ணன் - நீர்த்துளி யொழுகுகின்ற வெள்ளம் பொருந்திய கண்ணுடையானாகிய ஸ்ரீராமபிரான, கொண்டல ஆற்று - மேகமபோல நதியில், குளித்தனன் - நீராடினன், (உஉரு)

---

## கூ-வது அயோமுகிப்படலம்.

:0:

## இளையபெருமாள் அயோமுகியை மூக்கறுத்ததை யுணர்த்துகின்றபடலம்.

கo. உழந்தயோகத்தொருமுதல்கோபத்தால்
இழந்தமேனியுமெண்ணியிரங்கினான்
கெழுந்தகைக்கொருவனமைகிடைக்குமே
பழந்துயர்க்குப்பரிவுறும்பான்மையால். (உசு)

இ - ள். செழுந்தகைக்கு ஒருவன மைகிடைக்குமேல் - முன்னஞ் சேர்ந்த தளர்வுக்குப் பிறபொருவல் கிடைக்குமாயின், பழந்துயர்க்குப பரிவுறும் பான்மையால் - பழமையான அத்தளர்வாகிய துன்பத்திற்கு வருந்துந தன்மையால, உழந்த யோகத்து ஒருமுதல கோபத்தால - வருந்திச் செய்தயோகத்தையுடைய உலகுக கொருமுதலாகிய சிவனது கோபத்தால, இழந்த மே-னியும் எண்ணி இரங்கினான் - மதனன் தானிழந்த தேகத்தையு நினைந்து வருந்தினான். எ-று (உசு)

கக. வெள்ளஞ்சிலம்புபாற்கடலின்விரும்புந்துயிலைவெறுத்தவிரினை
கண்ணுஞ்சிலம்புமபுகோதைத்தரளைகடலிறபடிவார்ப்ப
புண்ணுஞ்சிலம்புமபொழிலின்சிலம்புமபுனலுஞ்சிலம்பும்பயோகம
உண்ணுஞ்சிலம்புச்சிலம்பாவாதுயிருண்டாருமையுண்டோ. (உஎ)

இ-ள். வெள்ளம் சிலம்பும் பாற்கடலில் - வெள்ளமொலிக்கின்ற பாற்கடலினிடத்து, விரும்பும் துயிலைவெறுத்து - விரும்புகின்ற யோகநித்திரையை வெறுத்து, அளியின் கள்ளும் சிலம்பும் - வண்டுகளோடு தேனுமபொலிகின்ற, பூங்கோதைத்தின்கடலில் படிவாற்கு - அழகிய அளகத்தையுடைய பிரா

ட்டியினது கம்பாகிய கடலில் ஆடுவானுக்கு, புள்ளும் சிலம்பும் - பறவைகளு மிரங்கும, பொழில் சிலம்பும - சோலைகளு மிரங்கும், புனலும் சிலம்பும்-நீருமிரங்கும், புனைகோலம் உளளும் சிலம்பும் - பிராட்டியினது அலங்கரித்த வுருவம மனத்துள்ளுந் தோன்றும, சிலம்பாவால்-அவ்வுருவம் கண்ணுக்குத் தோன்றுதபடியால், உயிா உண்டாகுமவகை உணடோ - உயிர் தரிக்கும் வகையுண்டோ. எ-று. (உஅ)

௧௭. இளிக்கறையின்சொலியைந்தனபூவை
கிளிக்கறையும்பொழில்கிஞ்சுகவேலி
ஒளிக்கறைமண்டிலமொத்ததுவோராங்கோர்
பளிக்கறைகண்டதிலவைகல்பயின்றார். (௧௭)

இ-ள். இளிக்கு அறை இன்சொல் இயைந்தன பூவை-வீணை நரம்பிற்குக் கற்பிக்கின்ற இனிய சொற்களைப் பொருந்திய நாகணவாய்ப் புட்கள், கிளிக்கு அறையும கிஞ்சுகவேலி பொழில் - கிளிகளுக்குக் கோதுகின்ற முருக்கமரவேலியை யுடைய சோலையில், ஒளிக்கறை மண்டிலம ஒத்துளது ஆங்கு ஓர் - ஒளியையும் களங்கத்தையுமுடைய சந்திரமண்டிலத்தை யொத்துள்ளதாகிய ஆங்கொரு, பளிக்கறைகண்டு அதில வைகல் பயின்றார்-பளிங்கு மண்டபத்தைக்கண்டு அதில் இருவரும வைகினா. (௧௭)

அயோமுகிவரவுசொல்லியது.

௧௮. தடிதடவந்தலைபலதழுவத்தான்
நெடிதடையக்குடர்செற்றுழுதினைத்தூண்
படிதடவப்பலபாவமிசைக்கும்
கடிதடத்தினளுருமுகறிப்பாள். (௨௧)

இ-ள். தடிதடவு - அளக்குங்கோலளக்கின்ற, அந்தலைபல தழுவ - அவ்விடம் பல இடையிற்கிடப்ப, தான் நெடிது அடைய - எடுத்தகால நெடுந்தூரஞ்செல்ல, குடர்செழுமு னைத்தூண் படிதடவ-குடல்பொருந்திய புலாலுணவு புவியிற்சிந்த, பலபாவம் இசைக்கும் - பலபாதகங்களைச் செய்கின்ற, கடிதடத்தினள் உருமுகறிப்பாள்-அல்குலையுடையவளாகி இடியைக் கறிப்பாள், எ-று. (௨௧)

இதுவுமது.

கச. இவையிறையொப்பனவென்னவிழிப்பாள
அவைகுளிரக்கடிதழலுமெயிற்றாள்
குலவரைகுலையக்கடல்குவியவலைப்பாள்
நவையில்புவித்திருநாணநடப்பாள். (சஎ)

இ-ள். இவை - இக்கண்கள், இறை ஒப்பன என்ன விழிப்பாள் - ஊழித்தீயை ஒப்பனவென்று சொல்லும்படி உருட்டிப் பார்ப்பாள், அவை குளிரக்கடிது அழலும் எயிற்றாள் - அக்கண்கள் குளிரும்படி பிரகாசிக்கின்ற பலலுடையாள், குலை குலையக்கடல் குவிய அலைப்பாள் - மலைகள் குலையவும் கடல்களொன்று சேரவும் அலைப்பாள, நவையில் புவித்திரு நாணநடப்பாள் - குற்றமில்லாத பூதேவி யிவளுமொருபெண்ணோவென்று வெட்கநடப்பாள், எ-று (சஎ)

கரு. வெய்தாகியகானிடைமேவருநீர்
ஐதாதலினோவயலொன்றுளதோ
நொய்தாய்வரவேகமுமநொய்திலனாய்
எய்தாநெறியாவதுவென்னைகொலாம. (சஅ)

இ-ள். நீர் ஐதாதலினோ - புனல்கிடைக்காமையாலோ, அயல் ஒன்று உளதோ - வேறொன்றுளதோ, நொய்தாய் வர - விரைவாய் வர, வேகமும் நொய்து இலன் - வேகமுஞ் சிறிதுடையனிலன் பெரிதுடையான், (சஅ)

## க0-வது. கவந்தன்வதைப்படலம்.

கக. ஐயைக்தடுத்தயோசனையின்விட்டியடவிபுடைபடுத்த
வையத்திரிகதார்க்கதிரவனுமவானிருப்பனைவாதற்றுன
எய்யும்சிலைக்கையிருவருஞ்சென்றிருகதேகிட்டியெவ்வுயிரும்
கையினகவேத்துவயிற்றடக்குங்கவந்தன்வனத்தைக்கண்ணுற்றார் ()

இ-ள். ஆர்க்கதிரவனும் - கிரணம் நிறைந்த சூரியனும், வையம் இரிந்து - தேரோடியுலாவி, (உ)

ஸ்ரீ




நன்றாக குருவாழ்க குருவேதுணை.

ஸ்ரீ

ஸர்வம்விஷ்ணுமயம்ஜகத்.

ஸ்ரீமத்கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

# ஸ்ரீமத்கம்பராமாயண

## அருங்கவிவிளக்கம்.

## நான்காவது. கிட்கிந்தாகாண்டம்.

இது பெரும்பாலும் கிஷ்கிந்தையில் நடந்த சரித்திரத்தைக்
கூறுகின்றமையின் அப்பெயராயிற்று.

## க-வது. பம்பைப்படலம்.

### பம்பாசரசின்சிறப்பைக்கூறுகின்றபடலம்.

தனியன்.

நலாற்றுயர்வியச்சகரன் திசைபடாளுமுமுடைமைநோக்கி
பாலாற்றுமுறையின்மும்மைமுப்பமிழுணர்ச்சமுறிபோருமறநரோரும்
மூரலாறறுங்கடற்பாரிற்கம்பருதமிழ்முதசொனமொழிபவன்றேற்
கொலாறறுமாலசயக்கமொகுமென்னயாம்வேறுரெபயம்பலாமால.

காப்பு.

க. * மூன்றுருவெனக்குணமும்மையாமுதல்
தோன்றுருவனையுமிம்முதலைச்சொல்லுதற்
கேன்றுருவனமாதவரிடையினின்றவன்
சான்றுருவுலகினுக்குலகத்தாயினன். (க)

உ. தேன்படிமலரதுசெங்கண்வெங்கைமாத்
தான்படிகின்றதுதெளிவுசான்றது
மீன்படிமேகமும்படிந்தவீங்குநீர்
வான்படிந்தலகிடைக்கிடந்தமாண்பது (உ)

இ-ள். தேன்படிமலரது - (பம்பை) தேன்கொண்ட மலர்களையுடையது, செங்கண் வெம்கைமா படிகின்றது - செவந்த கண்களையும் வெவ்விய துதிக்கையையுமுடைய யானைகள் படியப்பெறுகின்றது, தெளிவுசான்றது - அதனாற்கலங்காது தெளிவமைந்தது, மீன்படிமேகமும்படிந்து - மீன்களைப்போல மேகங்களுந் தோய்ந்து, வான்படிந்து - வானுலகத்தாரால் நீராட்டப்பட்டு, வீங்குநீர் - கடல்நீர், உலகிடைகிடந்த மாண்பது - அவ்விடத்திற்கிடந்த மாட்சிமையுடையது. எ-று. (உ

ங. ஈர்ந்தநுண்பளிங்கெனத்தெளிந்தவீரமபுனல்
பேர்ந்தொளிர்நவமணிபடர்ந்தபித்திகை
சேர்ந்துழிச்சேர்ந்துழிநிறத்தைச்சேர்தலால்
ஓர்ந்துணர்வில்லவருள்ளமொப்பது. (ங

இ-ள். ஈர்ந்தநுண்பளிங்கு எனத் தெளிந்த ஈரம்புனல் - செதுக்கிய நுண்ணியபளிங்கைப்போலத் தெளிந்த குளிர்ந்தநீர் பேர்ந்து ஒளிர் நவமணிபடர்ந்த பித்திகை - பெயர்ந்தொளி கின்ற ஒன்பதுவகை ரத்நங்கள் படர்ந்த கரையில், சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைச்சேர்தலால் - சேரும்போதெல்லாம் (அம் மணிகளின்) நிறத்தைப்பெறுதலால், ஓர்ந்து உணர்வு இல்லவர் உள்ளம் ஒப்பது - கலைகற்றுணர்வில்லாதவரதுள்ளத்தையொப் பது. எ-று. (ங

ச. குவான்மணித்தடத்தொறும்பவளக்காலியர்
கவானரசன்னமும்பெடையுங்கண்டவில்
நவாநெடுவானகத்தயன்றுமீனொடும்
உவாமதிபலப்பலவுதித்ததொப்பது. (ச

இ-ள். அன்னங்களும் பெடைகளுங் காணப்படுதலா ஆகாயத்தில் விளங்கும் நக்ஷத்திரங்களோடும் அளவில்லாத ச திரர்கள் உதித்ததையொப்பது. (ச

ரு. எற்பொருளாகாதிருக்கையீதெனக்
கற்பதோர்காட்சியதெனினுங்கீழுறக்
கற்பகமனையவக்கவிஞர்காட்டிய
சொற்பொருளாமெனத்தோன்றல்சான்றது. (௫)

இ-ள். பாதாளலோகத்தை யிதுவென்று காட்டுவதாகிய ஒருதோற்றமுடையதெனினும கற்பகவிருக்கம்போன்ற கவிஞர் ஆழத்தில்வைத்து எளிதிற்றோன்றககாட்டிய சொல்லினது பொருளைப்போல தோன்றுதலமைந்தது. (௫)

௬. கள்ளவிலன்னமேமுதலகண்ணகன்
றள்ளலம்புள்ளொடுந்தயங்கவின்னதோர்
கிளவியென்றறிவருங்கிளர்ச்சித்தாதலால்
வளநகர்க்கூலமேபோலுமாண்பது. (௭)

இ-ள். அன்னங்கள் முதலிய பறவைகளோடு விளங்குதலினின்னமொழியென்று அறியவருமையான எழுச்சியையுடைத்தாகலால் வளம் பொருந்திய நகரினது கடைவீதியைப்போலு மாண்பையுடையது. (௭)

௭. நவ்விநோக்கியரிதழ்நிகர்குமுதத்துநறுந்தேன
வவ்வுமாந்தரிற்களிமயக்குறுவனமகரம்
எவ்வநீங்கியபிறப்பிறேனுடைபிறப்பிலையெனக்
கவ்வுமீன்றொடுமுழுதுவெழுவனகர்ண்டம. (௧௭)

இ-ள். நவ்விநோககியர் இதழ் - மான்போலுங் கண்களையுடைய மகளிரது இதழை, வவ்வும் மாந்தரில் - உண்ணுகின்ற மாந்தரைப்போல, மகரம் - மகரமீன்கள், நிகர்குமுதத்துநறும் தேன் - அவ்விதழை யொத்த குமுதப்பூவிலுண்டாகிய நறுவிய தேனையுண்டு, களிமயக்கு உறுவன - செருககையும் மயக்கத்தையுமடைவன, (௧௭)

௮. ஏனுநீர்நிழல்லடையிடையெறித்தலிற்படிமம
போலும்வார்புனல்புகுந்துளவாமெனப்பொங்கி
ஆலுமீன்கணமஞ்சினவலம்வரவஞ்சிக்
கூலமாமரத்திருஞ்சிறைபுலர்த்துவகுரண்டம். (உ0)

இ-ள். வஞ்சிக்கூல மாமரத்து - கொடிகளையுடைய கரையிலுள்ள பெரியமரத்தில், இரும் சிறை புலர்த்துவ குரண்டம்-

சிறையைப் புலர்த்துவனவாகியகொக்குகளினது,நிழல்-நிழல், ஏலும் நீர் - கொண்ட புனலுள், இடை இடை எறித்த வில் இடங்கள் தோறுந்தோன்றுதலில், (அக்கொக்குக்கள்) படிகம்போலும் வார்புனல் - படிகம்போன்ற தெளிந்த அப்புனலுள், புகுந்துளவாம் என - புகுந்துள்ளனவாமென்று நினைந்து, ஆலும் மீன்கணம்-உலாவுகின்ற மீன்கூட்டங்கள்,பொங்கி-கொதித்தனவாய், வலம்வர அஞ்சின - சுழல அஞ்சின. (௨௦)

கூ. அங்கொருபாகத்திலஞ்சனமணிநிழலடைய
பங்குபெறறொளிர்பதுமராகதவொளிபரப்ப
கங்குலும்பகலுமெனப்பொலிவெய்துகரைய
மங்கைமார்தடமுலையெனப்பொலிவனவாளம். (௨௧)

இ-ள். பம்பைக்கரையி னொருபாதியிற் பச்சைரத்தினத்தின்சோதியடைய,மற்றொருபக்கத்திற்பதுமராகத்தி னொளிபரவ, இரவையும் பகலையும்போலப் பொலிவடைந்த கரைகளை யுடையது, அப்பச்சைரத்தினச்சோதியுடைய கரையிலுள்ளவாளங்கள் பகலைப்பெறாது தலையையுஞ் சிறையையு மொடுக்கி யிருத்தலால் மங்கைகளது முலைகளைப்போலப் பொலிவன. எ-று.(௨௧)

ஸ்ரீராகவபிரான்கூறியது.

௪௦. வரியார்மணிக்காலனமேமடவன்னமேயென்னை நீங்கத்
தரியாளடத்தாளில்லேனேற்றளர்ந்தபோதுந்தகவேயோ
எரியாநின்றவாருயிர்க்கிரங்கிலீர்திசையனைத்தும்
பிரியாதிருந்தேறகொருமாற்றம்பேசிற்பூசலபெரிதாமோ. (௨௨)

இ-ள். என்னை நீக்கத்தரியாள் - என்னை நீங்கியாண்டுந் தரியாள், நடைத்தாள் இலலளேல் - நீங்கிசசென்று என்னிடத்தி லிலளாயின், தளர்ந்தபோது-அவளால் யான் மெலிந்தபோது, உம்தகவேயோ - உமது பெருமையேயோ காட்டுகின்றீர். (௨௨)

௪௧. அடையீரெனினுமொருமாற்றமறிந்தனுரையீரன்னத்தின்
பெடையீரொன்றம்பேசீரோபிழையாதார்க்குப்பிழைத்தீரோ
நடையீரழியச்செய்தீரேசெவிலோதார்க்கேவியவீரோ
டையீர்பகைதானுமையோக்கியவெங்கின்றேனைமுனிவீரோ. (௨௩)

இ-ள். அன்னத்தின் பெடையீர் - அன்னத்தின் பெண்டீர், அடையீர் எனினும் - அடைக்கலத்துக்கொண்டிருப்பீராயினும்,

அறிந்தது ஒருமாற்றம் உரையீர் - அறிந்ததை யொருவார்த்தைசொல்லீர், (உஅ)

இதுவுமது.

௧௨. பஞ்சுபூத்தவிரறபதுமமபவளம்பூத்தவடிவாளென்
நெஞ்சுபூத்ததாமரையினிலையம்பூதசாணிறம்பூசத
மஞ்சுபூததமலர்பூகதகுழலாளகண்போனமணிககுவளாய
நஞ்சுபூததஹாலெனனநகுவாயெனனைநலிவாயோ. (௩௨)

இ-ள். பஞ்சுபூத்த - செம்பஞ்சூட்டிய, பதுமம் - கால்களாகிய தாமரை மலர்களில், விரல் - விரல்களாகிய, பவளம் பூத்த வடிவாள் - பவளங்களுண்டாகியதை யொதத பாதங்களி னழகினையுடையாள், என்நெஞ்சு பூத்த தாமரையின் - எனதுஇதயமாகிய மலர்ந்த தாமரை மலரினை, நிலையமபூததாள் - இருப்பிடமாகக் கொண்டவளாகிய, மலர்பூத்த-மலர்களை மலர்ந்த, நிறம்பூத்த - கருநிறத்தைக் கொண்ட, மஞ்சுபூத்த - மேகத்தைப்போல விளங்கிய, குழலாள் கண்போல மணிக்குவளாய - அளகத்தையுடைய சீதையினது கண்களையொத்த அழகுடைய குவளைமலரே, நஞ்சுபூத்ததால் என்ன - விடம்பரவினாற்போல, நகுவாய் என்னை நலிவாயோ-மலர்வாயாகி எனனை வருத்துவாயோ. எ - று. (௩௨)

௪௩. வாரளிந்தனழமாபபிடிவாயிடைக
காரளிக்கலுழிககருங்கைமமலை
நீரளிப்பதுநோக்கினனினறனன
பேரளிக்குபபிறநதவிலலாயினன. (௩௪)

இ-ள். பேர் அளிகருப்பிறந்த இல்லாயினன் - பேரருளுக்கமைந்த இல்லம் போன்றவனாகிய ஸ்ரீராமபிரான், கார் அளிக்கலுழிக்கரும் கைமலை - கறுத்தவண்டுகளுக் குணவாகிய மதநீரையுடைய வலிபொருந்திய யானைகள், வார் அளித்து அழைமாப்பிடிவாய் இடை-நீண்டகுளிர்ச்சியுடைய இலைகளைத்தின்னுகின்ற பெண் யானைகளின்வாயில், நீர் அளிப்பது நோக்கினன் நின்றனன் - தமதுகரத்தால் புனல்கொடுப்பதைப்பார்த்து நின்றனன். எ - று. (௩௪)

## உ-வது. அநுமப்படலம்.

## அநுமானைக்கண்டதைச் சொல்லுகின்றபடலம்.

அநுமானைக்குறித்து ஸ்ரீராகவபிரான் கூறியது.

௨௰. இல்லாதவுலகத்தெங்குமிங்கிவனிசைகள்கூரக
கல்லாதகலையும்வேதக்கடலுமேயென்னுங்காட்சி
சொல்லாலேதோன்றிற்றன்றேயார்கொலிச்சொல்லின்செல்வன்
வில்லார்தோளிளையவீரவிரிஞ்சனோவிடைவலானோ. (௨௰)

இ-ள். வில் ஆர் தோள இளையவீர - வில்லணைந்த தோளையுடைய இளையவீரனே, இங்கு இசைகள் கூர - இங்குப் புகழ்கள் மிக, இவன் கல்லாதகலையும் வேதக்கடலும-இவன் கற்காத கலைகளும் வேதக்கடல்களும், உலகத்து எங்கும் - உலகமெங்கும், இல்லாத - இல்லாதன, என்னும் காட்சி - என்னும் அற்புதம், சொல்லாலே தோன்றிற்று-அவனது மொழியாலே தோன்றிற்று, இச்சொல்லின் செல்வன் யார-இசசொற்செல்வமுடையோன் யார், விரிஞ்சனோ விடைவலானோ - பிரமனோ சிவனோ என்றான். எ-று. (௨௰)

## ௩-வது நட்புக்கோட்படலம்

## ஸ்ரீராமபிரானும் சுக்கிரீவமகாராசனும் நட்புக்கொண்டதை யோதுகின்றபடலம்.

அநுமான சுக்கிரீவனுக்குச் சொல்லியது.

௧. மண்ணுளார்விண்ணுளார்மாறுளார்வேறுளார்
எண்ணுளார்திசையுளாரியலுளாரிசையுளார
கண்ணுளாராயினார்பகையுளார்கழிநெடும்
புண்ணுளாராருயிர்க்கமுதமேபோலுளார். (௧)

இ-ள். மண்ணுளார் விண்ணுளார் - புவியிலுள்ளவர்க்கும் வானத்திலுள்ளவர்க்கும், மாறுளார் வேறுளார்-பகையாளர்க்

கும் கொதுமலாளர்க்கும், எண் உள் ஆர் திசை உளார் - மனத்திற் பொருந்திய திசைகளி லுள்ளவர்க்கும், இயல் உளார் - நற்குண முள்ளவர்க்கும், இசை உளார் - கீர்த்தியுள்ளவர்க்கும், கண் உளார் ஆயினார் - கண்களிலிருப்பவராகிய அவர், பகையுளார் - பகையுடையவராகி, கழிநெடும் புண்ணுளார் - மிகுந்த துன்ப முடையவராது, ஆருயிர்க்கு அமுதமேபோலுளார் - நிறைந்த உயிர்க்கு அமுததனையே யொத்தவர். எ-று. (ரு)

இதுவுமது.

கசு. நல்லுறுப்பமையுநம்பியரின்முன்பவனட
தெல்லுறுப்பரியபேரொழுக்கடாக்கடவனெ
பல்லிறுத்தவனவலிச்சகமைதிரியம்பகமெனும
வில்லிறுத்தருளினனமிதிலைபுக்கணையரான. (எ)

இ-ள். நல் உறுப்பு அமையும் நம்பியரில் முன்பவன் - நலல அங்கங்களமைந்தசிரேட்டர்களில்மூத்தவனாகியஸ்ரீராமபிரான்,

இதுவுமது.

கஎ. ஆயமாநாகர்தாழாழியானையலால
காயமானாயினானவனேகாவலா
நீயமானேர்தயானேருமாரீசனா
மாயமானாயினானமாயமானாயினான. (கக)

இ-ள். காவலா - அரசனே, ஆயமாநாகர் தாழ் ஆழியானே அலால் - ராகவபிரான் அமரேந்திரர் வணங்குகின்ற அப்ராகிர்த திவ்ய தேகமுடைய திருமாலே யல்லாமல், காயமான ஆயினான் ஆவனே - ப்ராகிர்த சரீரமுடைய மானுடனாயினானவனோ ஆவான், நீ அம்மான் நேர்தி - நீவந்து அகப்படவுனைப்பார், நேருமாரீசனார் - முன்னெதிர்ந்த மாரீசனார், மாயம்மான் ஆயினான் - மாயம்பொருந்திய மானுருவமாயினான், மாய - அவனிறக்க, மான் ஆயினான - மகானாயினான். எ-று. (கக)

"எனைத்துணையராயினுமென்னாந்தினைத்துணையுந் தேரான் பிறனில்புகல்" என்புழிப்போல இழித்தற்கண்பன்மை ஒருமை மயங்கிற்று.

அனுமான ஸ்ரீராமபிரானுககுச்சொலலியது.

கஅ. வெள்ளமேழுபதது்ளளமேருவைத
தளளலானதோளரிகடானையான
உளளமினறியவவுயிரையஞசலால
வளளலேயவனவாழவாழுமால. (சகூ)

இ-ள். வள்ளலே - வரையாது கொடுககினறோய், மேருவைத் தள்ளல் ஆன - மேருகிரியை உருட்டலுககுரியனவாகிய, ஏழு பத்துவெள்ளம் உள்ள - எழுபதுவெள்ளக் கணககுடைய, தோள் அரிகள் தானையான் - புயவலியுடைய குரக்குசசேனைகளை யுடையவன், உள்ளம் இன்றி அவ்வுயிரை அஞ்சலால் - அவ்வாலியினனுமதியினறிக் காலன் அககுரங்குகளினுயிர்களைப் பிடிக்க அஞசுதலால், அவன வாழவாழும் - அவ்வாலிவாழ அக்குரஙகுகளும வாழும. எ-று. (சகூ)

அனுமான சுககிரீவனுககுச சொலலியது.

கசு. துன்புதோனறியபொழுதுடனறோனறினனெவர்ககும
முனபுதோனறலையறிதறகுமுடிவெனெனறியம்ப
அனபுசானறெனவுரைததனனையவெனனுஙகை
எனபுதோனறலவுருகினனெனிறபிறிதெவனோ. (அக)

இ-ள். எவாக்கும முன்புதோன்றலை-தேவர் முதலிய எல்லார்ககும முன்புள்ளதோன்றலை, (அக)

## கூ-வது. கலன்காண்படலம்.

## பிராட்டியின் அணிகளைப்பார்த்ததைச் சொல்லுகின்றபடலம்.

சுககிரீவன ஸ்ரீராமபிரானைநோககிச்சொலலியது.

உ0. மூவரிமேலைவைகுயானமுருகறறநதவத
தனிரியல்பாகததானறடககையாழியான
அளவியொனருவரோயனறியையமில
இளவியாதனிததனிககிடைபபரோதுனை. (ககூ)

இ-ள். பிரமனும சிவனும்திருமாலும சோந்தொப்பாவரேயன்றித் தனிததனியே உனக் கொபபாவரோ. ஆகாரென்பது.

௨௧. உழையுலாநெடுங்கண்மாதரூசலூசலல்லவேல்
தழையுலாவுசந்தலர்ந்தசாரல்சாரலல்லவேல்
மழையுலாவுமுன்றிலல்லமன்றனாறுசண்பகக்
குழையுலாவுசோலைசோலையல்லபொன்செய்குன்றமே. (௩௫)

இ-ள். உழை உலாம் நெடுங்கண்மாதர் ஊசல்-மான்போலும் நீண்ட கண்களையுடைய மாதர்களாடுகின்ற ஊஞ்சல்களும், ஊசல் அல்லவேல் - அவ்வூசல்களில்லாத விடங்களில, தழை உலாவு சந்து அலர்ந்தசாரல் - இலைகள் பொருந்திய சந்தன மரங்கள் பூத்த சாரல்களும், சாரல் அல்லவேல் - அச்சாரல்களில்லாத விடங்களில, மழை உலாவுமுன்றில்-மேகம் படிகின்ற முற்றங்களும், அல்ல - அவையல்லாத விடங்களில, மன்றல் நாறு சண்பகக்குழை உலாவுசோலை - வாசம் வீசுகின்ற சண்பக மரத்தினது இலைகள் பொருந்திய சோலைகளும, சோலை அல்ல- அச்சோலைகளில்லாத விடங்களில்,பொன் செய்குன்றம-அழகு செய்கின்ற மலைவிளங்காநின்றது. எ-று. (௩௫)

௨௨. நீடுநாகமூடுமேகமோடநீருமோடநே
ராடுநாகமோடமானயானையோடவாளிபோம்
மாடுநாகநீடுசாரல்வாளையோடுமவாவியூ
டோடுநாகமோடவேங்கையோடுமூகமோடவே. (௩௭)

இ-ள். யூகம் ஓட - கருங்குரங்குகளோட, (அவ்வோசையால்) மேகம - மேகஙகள், நீடு நாகம் ஊடு ஓட - நீண்ட ஆகாயத்தினூடு மேகஙகளோட, நீரும்ஓட - அவற்றினின்று புனலுமொழுக, நேர் ஆடும் நாகம் ஓட - நேராயாடும் சர்ப்பங்களோட, மானயானை ஓட-பெருமை பொருந்திய யானைகளோட, ஆளிபோம் - சிங்கஞ் செல்லுகின்ற, நாகமமாடு - அம்மலையினிடத்திலுள்ள, நீடுசாரல் - நீண்டசாரலிலிருக்கின்ற, வாளைஓடும் வாவியூடு - வாளைமீன தாவுகின்ற குளத்தில, ஓடும் நாகம்ஓட- ஓடுகினற நீர்ப்பாம்புகள் செல்ல, வேங்கை ஓடும் - புலிகள் செல்லும். எ-று (௩௭)

அவ்வோசையாலென்று எல்லாவற்றுக்குங் கூட்டுக.

௨௩. தேனிழுக்குசாரல்வாரிசெல்லமீதுசெல்லநாள்
மீனிழுக்குமன்றிவானவில்லிழுக்கும்வெண்மதிக்
கூனிழுக்குமற்றுலாவுகோளிழுக்குமென்பரால்
வானிழுக்குமேலவாயமன்றனாறுகுன்றமே. (௪௧)

இ-ள். வான் இழுக்குமேலதாய மன்றல் நாறுகுன்றம-வானைத் தாழ்த்துகின்ற உயர்ந்ததாகிய நல்ல வாசங்கமழ்கின்ற மலையில், மீதுசெல்ல - மேலேறுவதற்கு, தேன் இழுக்குசாரல் வாரிசெல்ல - தேன் வழுக்குகின்ற அம்மலைப் பக்கத்தின் வழியிற்செல்ல, நாள்மீன இழுகக்கும் அன்றி – நக்ஷத்திரஙகள் வழுக்குகின்றதன்றி, வானவில் இழுகக்கும்-வானவில்லும் வழுக்கும், வெண்மதிக்கூன இழுக்கும் - வெண்மதிக்கூனும் வழுக்கும், மற்று உலாவ்கோள் இழுக்கும் என்பர் - வானிலவேறு உலாவுகின்ற கிரகங்களும் வழுக்கு மென்று சொல்லுவர். எ-று. (சக)

## எ-வது வாலிவதைப்படலம்.

## வாலியைக்கொன்றதை யுணர்த்துகின்றபடலம்.

உச. அவ்விடததிராமனீயனழததுவாலியானதோா
வெவ்விடத்தின்வநதுபோாவிளைக்குமெலலைவேறுநின
றெவவிடதது ணிநதமைநதெனகருததிதெனறனன
தெவ்வடக்கும்வென்றியானுநன்றிதெனறுசிநதியா. (க)

இ-ள். இராமன்-ஸ்ரீராமபிரான சுககிரீவனைப்பார்த்து, நீ-நீசென்று, வாலி ஆனதோா வெவ்விடததின் - வாலியானதாகிய ஒப்பற்ற கொடியவிடத்தினை, அவ்விடத்து - அந்தவிடத்தில், அழைத்துவந்து-கூட்டிவந்து, போர் விளைக்கும் எல்லை - அமர்செய்யுங்காலை, வேறு நினறு - யான் தனியேநின்று, ஏவிட - அம்புவிட, துணிந்து அமைந்தது என்கருதது இது என்றனன் - துணிந்தமைந்ததாகிய எனதுகருத் திதுவெனறு சொலலினன், தெவ் அடக்கும் வென்றியானும-பகையைவெலலுகின்ற வெற்றியையுடைய சுக்கிரீவனும், இது நன்று எனறு சிந்தியா-இது நன்றென்று கருதி. எ-று. (க)

தாரை வாலிகருச சொலலியது.

உரு கொற்றவநினபெருங்குலவுததோள்வலிக்
கிற்றயதல்லநாளீடுணைடேகுவான
பெறறிவனபிறந்திலனபெயாததும்போாசெயற
குறறதுநெடுநதுலையுடைமையாலெனறுள். (கரு)

இ-ள். கொற்றவ நின் பெருங்குவவுத்தோள்வலிக்கு - அரசனே நினது பெரியகுவிந்த தோள்களின் வலிக்கு, இற்றையஃது அலநாள் ஈடு உண்டு ஏகுவான் - இன்றல்லது பலநாளகளிலுந் தோற்றோடுகின்றவன், பெற்றிலன் - வேறுவலிபெற்றிலன், பிறந்திலன் - மிகுந்தவலியோடு பிறந்திலன், (௧௫)

இளையபெருமாள் பிரானுக்குச் சொல்லியது.

௨௬. விற்றுநங்குவெற்பன்னவிலங்கெழிற்றோளமெய்ம்மை
உற்றார்சிலரல்லவரோபலரென்பதுண்மை
பெற்றாருழைபெற்றபயன்பெறுமபெற்றியல்லால்
அற்றார்நவையென்றலுக்காகுநரார்கொலென்றான். (௩௫)

இ-ள். பெற்றார் உழை - தான் நேயஞ்செய்யப்பெற்றவர்மாட்டு, பெற்றபயன் - பெறுதலாகிய பயனை, பெறுமபெற்றி அல்லால் - கொள்ளுந்தன்மையல்லாமல், (௩௫)

வாலி ஸ்ரீராமபிரானுக்குக் கூறியது.

௨௭. இருமைநோக்கிநின்றியாவர்க்குமொக்கின்ற
அருமையாற்றலன்றோவறங்காக்கின்ற
பெருமையென்பதென்பிழைநோக்கல்விட்
டொருமைநீக்கியொருவற்குதவலே. (௮௫)

இ-ள். இருமைநோக்கி நின்று - நன்மை தீமைகளை யாராய்ந்து நின்று, யாவர்க்கும் ஒக்கின்ற - எல்லார்க்கு முடன்பாடாகின்ற, அருமை ஆற்றல் அன்றோ - அரியவினைகளைச்செய்தலன்றோ, அறம் காக்கின்ற பெருமை என்பது - அறத்தின்வழி நின்று உலகைக்காக்கின்ற பெருமையென்பது, பிழைநோக்கல் விட்டு - குற்றத்தை யாராய்தலை விட்டு, ஒருமைநீக்கி - ஒற்றுமையை நீக்கி, ஒருவற்கு உதவல் - ஒருவனுக்குதவிசெய்தலாகிய, இது என் - இது யாது. (இதுவுமோரறமோ வென்றான் என்க)

ஸ்ரீராமபிரான் வாலிக்குச்சொல்லியது.

௨௮. மறந்திறம்பல்வலியமெனுமனம்
புறந்திறம்பலெளியவாப்பொங்குதல
அறந்திறம்பலருங்கடிமங்கையர்
திறந்திறம்பறெளிவுடையோர்க்கெலாம். (௧௦௦)

இ-ள். தெளிவு உடையோர்க்கு எலாம் - உன்னையொத்த மனத்தெளிவுடையோர்களுக்கெல்லாம், வலியம் என மறம் திறம்பல் - புயவலியுடையமென்று வீரத்தினின்று வேறுபடுத லும், மனம் புறம் திறம்பல் - நீதியினின்று மனம வேறுபடுத லும், எளியவர்ப்பொருங்குதல்-எளியவரைககோபித்தலும்,அறம் திறம்பல் - தருமத்தைப் பிழைத்தலும, அரும் கடிமங்கையர் திறம் திறம்பல் – அரியவாட்கைபபட்ட மஙகையா திறத்தில் தவிர்தலும ஆகா. எ-று. (கoo)

உக. தறையடித்ததுபோற்றிராத்தகையவித்திசைகடாங்கும
கறையடிக்கழிவுசெய்தகண்டகனெஞ்சமூன்ற
நிறையடிக்கோலவாலிவில்லினமையயுனனுந்தோறும
பறையடிக்கின்றவந்தப்பயமறப்பறந்ததன்றே (கசஉ)

இ-ள். தறை அடித்தது போல் திராத்தகைய இத்திசைகள் தாங்கும - புவியில் முளையடித்தாறபோலப் பெயராமல் தகை யுடைய இத்திசைகளைத் தாங்குகின்ற, கறையடிக்கு அழிவுசெ ய்த-யானைகளுக்குக் கேடுசெய்த, கண்டகன் நெஞ்சம ஊன்ற-இராவணன் மனத்திற பதிய, (கசஉ)

---

## சஉ-வது. கார்காலப்படலம்.

---:o:---

### மழைக்காலத்தைக்குறித்துக் கூறுகின்றபாடலம்.

ங0. அரிபபெரும்பெயரவனமுதலினோரணி
விரிப்பவுமொத்தனவெறபுமீதுதி
எரிப்பவுமொத்தனவெசிலாசைகள்
சிரிப்பவுமொத்தனதெரிந்துமினனெலாம். (எ)

இ-ள். அரிப்பெரும் பெயரவன் - இந்திரன், (எ)

ஙக. பாடலமவறுமைகூரப்பகலவன்பசுமைகூரக
கோடல்களபெருமைகூரககுவலயஞ்சிறுமைகூர
ஆடினமயில்களபேசாதடங்கினகுயில்களனபர்த
தேடுறதுளர்ந்தார்போன்றுந்திருவுறக்கிளர்ந்தார்போன்றும். ()

இ-ள். அன்பர்த்தேடுறத்தளர்ந்தார்போன்று-கணவரைத் தேட மனந்தளாந்தவரை யொத்து, குயிலகள் பேசாது அடங்கின-குயில்கள் கூவாதொடுங்கின, திருஉறகக்ளர் வாரா போன்று-கணவர் வருதலாகிய செல்வம்வர உளமகிழ்ந்தவரை யொத்து, மயில்கள் ஆடின - மயிலகளாடின, (௨௫)

௩௨. பேடையுஞ்சிமிறும்பாயபபெயாவுழிபபிறககுமோசை
யூடுறததாககுநதோறுமொலலொலிபிறபபநலலா
ருடியறபாணிககொககுமாரியவமிர்தபபாடற
கோடியதாளஙகொட்டனமலாநதகூதாளமொதத. (௩௨)

இ-ள். பேடையும் சிமிறும பாய-பெண்வண்டுகளும் ஆண்வண்டுகளும் பறகக, பெயாவுழிப்பிறககும ஓசை - எழும்போதுண்டாகின்றவொலி, ஆரிய அமிர்தப்பாடல்-அமிர்தம்போன்ற தேவகானத்தையொககும, ஊடு உறததாககும தோறும் - பறக்கையி லொன்றோடொன்று மோதுந்தோறும், ஒல்லொலி பிறப்ப - ஒல்லொலிகளுண்டாவன, நலலார் ஆடு இயலபாணிக்கு ஒககும் - அவை கூத்திய ராட்டுககுப் பொருந்திய தாளத்தை யொககும், கொட்டல-கொட்டுதலையுடைய, கோடியதாளம்-வளைவுடைய தாளஙகள்,மலர்ந்த கூதாளமொத்த-அலர்ந்த கூதாள மலர்களையொததன. எ - று. (௩௨)

௩௩. பூவியற்புறவமெங்கும்பொறிவரிவணடுபோயபத்
தீவியகளியவாகிசசெருககியகாமசசெவவி
ஓவியமானகடோறுமுரைசதறவுரிஞசியொணகேழ்
நாவியசெவ்விநாறககலையொடுமபுலாநதநவ்வி. (௩௪)

இ-ள். பூ இயல புறவம எஙகுமபொறிவரி வண்டுபோயப-மலர்கள் பொருந்திய கானமெஙகும் புள்ளியையும வரியையுமுடையவண்டுகள மொயககு, தீவியகளிய ஆகிச செருககிய காமச்செவ்வி - (கலைமானகள்) இனிய வுவபபுடையனவாகி செருக்குடைய காமப்பககுவத்தை, ஓவிய மரனகள் தோறும் உரைத்து அறஉரிஞசி - நீக்கிய விருக்கஙகடோறுந் தாமே தேய்த்து அதிகம் உரிஞ்ச, ஒண்கேழ்-மிகுந்த ஒளியுடைய, நாவிய -** செவ்விநாற - அப்பககுவததின் மணம வீச, கலையொடும் நவ்வி புலர்ந்த-அக்கலைமானகளோடும் பெண்மான்களுேடின.எ-று.(௩௪)

௩௪. நோக்கினனமநோககழிகணடநுணமருஙகுல
தாக்கணங்கருஞசிதைசகுசநாங்ஈருநதுனபம
ஆககினுநமதுருவினென றரும்பெறலுவகை
வாக்கினுலுரையாமெனக்களிநதனமானசள். (௩அ)

இ-ள். நோக்கினல் நமை நோககு அழிகண்ட - கண்ணல் நமதழகை யழிவு செயத, (௩அ)

௩௫. பொழிநதமாநிலமபுறறாககுமடடியபுனிறரு
எழுநதவாமபிகளிடறின செறிதயிரோய்தத
மொழிநததேனுடைமுகிழமுலையாயசிபாமுழவிற
பிழிநதபால்வழிநுரையெனபபொருவுவபிடவம. (௪௯)

இ-ள். பொழிந்த மாநிலம் புல்தரககுமட்டிய புனிற்று ஆமழை பெய்த பெரிய நிலத்திற புலனுகள முளைகக அவற்றைத் தின்று தெவிட்டிய பசுககள, எழுந்த ஆமபிகள் இடறின-முளைத்த காளானகளைக் காலகளாலிடறின, செறிதயிர் ஏய்த்த - அக்காளான்கள் இறுகிய தயிரையொத்தன, பிடவம - ஒருசார் செடிப்பூ. (௪௯)

௩௬. அளவில்காறெனுமப்பெரும்பருவம்வந்தணைநதால
நளர்வொனபதுதவமபுரிவோாகடகுநதகுமால
கிளவிதேனினுமமிாதினுஙகிடைததவெளவளைததோள
வளவியுணடவனவருநதுமெனறுலதுவருந்தோ. (௪௯)

இ-ள். வெள்-வெள்ளிய, தேனினும அமிர்தினும் கிடைத்த-தேனினுலும அமிர்ததினுலு முண்டாகிய, கிளவி - மொழியையும், வளைத்தோள் - வளைகளையணிந்த தோளையும், அளவி உண்டவன - கலந்தனுபவித்தவன, வருந்தும என்ருல் அது வருந்தோ-வருந்துகின்றுனெனில அது வருத்தமாமோ. (௪௯)

ஸ்ரீராமபிரான சொல்லியது.

௩௭. மழைவாடையொடாடிவலிநதுயிாமேல
நுழைவாயமலாவாயநொடியாயகொடியே
இழைவாணுதலாளிடையோலிடையே
குழைவாயெனதாவிகுழைக்குதியோ. (௫௪)

இ-ள். மலர்வாய நொடியாய-மலராகிய வாயால பேசாய,

இதுவுமது.

ந-அ. விழைகேனவிழைவானவைமேன்மையினின
றிழைபேனுணாவேனவையினமையிறு,ப
பிழையேனுயிரோடுபிரிநதனரால
உழையேயவரெவவுழையாருரையாய். (ருரு)

இ-ள். உழையே - மானே, உயிரோடுபிரிந்தனரால்-சீதை யார் எனதுயிரோடு பிரிந்தனராகலின், விழைவானவை விழையேன் - விரும்பலானவற்றை விரும்பேன, மேன்மையினினறு இழையேன் - மேமபாட்டினின் றிழிதலைச் செய்யேன், உணர்வேன் - தகுதி தகுதியல்லாததை யறிவேன், அவையின்மையினால் பிழையேன் - அப்பகுத்தறிவுகள் உனககின்மையினால் உன்னிடத்தில் தவறுசெயயேன், அவா எவவுழையாா உரையாய் - அச்சானகியார் யாண்டுளார் சொலலாய். எ-று. (ருரு)

ந-க. பாசிழைமடநதையாாபழிபபிலகலலகுற
றூசுதொடாரூசனனிவெமமைதொடாவுறறே
வீசியதுவாடையெரிவெநதவிரிபுணவீழ்
ஆசிலயிலவாளியெனவாசைபுரிவாாமேல. (எக)

இ-ள். பழிப்பு இல் அகல் அல்குல் தூசு தொடர் ஊசல்- பழித்தலுககிடமிலலாத அகன்ற அல்குலைச் சுற்றிய ஆடை தொடர்கின்ற ஊஞசலிலாடுகின்ற, பாசு இழைமடந்தையர்- பசிய ஆபரணஙகளையுடைய மாதாகளிடத்தில், ஆசைபுரிவார் மேல் - ஆசையைச்செயகினற ஆடவரதுமேனியில, வாடை- காற்று, எரி வெந்த விரிபுண்வீழ் ஆசு இல அயில்வாளி என- நெருப்பால வெநத விரிநதபுண்ணில தைககின்ற குற்றமில்லாத கூர்மையுடைய அமபைப்போல, நனிவெமமை தொடாவுற்று வீசியது-அதிகம வெப்பததால் தொடரப்பட்டு வீசிற்று, எ-று.

ச0. வேலைநிறைவுறறனவெயிறகதிரவெதுமபும
சீலமழிவுறறபுனலுறறுருவுசெபபிற
காலமறிவுறறுணாதல்களனலளவலலால
மாலைபகலுறறதெனவோர்வரிதுமாதோ. (எஉ)

இ-ள். வேலை நிறைவுற்றன - கடல்கள் நிறைந்தன, வெயில்கதிர் வெதும்பும் சீலம் அழிவுற்ற - வெயிலையுடைய சூரியன்

வெதுப்பும் வெப்பம் அழிந்தது, காலம் கன்னல் அறிவுற்று உணர்தல் - பகலிரவென்னுங் காலத்தின் நாழிகையைத் தெரிந்தறிதல், புனல் உறறு உருவு செப்பின்-புனல்நிறைந்து அழுந்துகின்ற வளளததினது, அளவு அலலால - அளவல்லாமல, மாலைபகல உற்றது என ஓாவு அரிது - மாலைப்பொழுது வந்தது பகறபொழுது வந்தது எனறறிதலிலலை. எ-று. (எஉ)

சக. நெறகிழியநெறபொதிநிரமபினநிரமபாச
சொறகிழியநறகிளிகடோகையவா தூயமென
பறகிழிமணிபபடர்திரைபபரதா முனறிற
பொற்கிழிவிரிததெனசினைபபொதுளவ புனனை. (எ௩)

இ-ள். நிரம்பாச்சொற்கு இழியநல்கிளிகள் - நிரம்பாதமழலைச் சொல்லுககு இழிதலையுடைய நலல கிளிகள, நெல் இழிய நெல்பொதி நிரமபின - நெல்வெளிப்பட நெறகதிரில் நிறைந்தன, தோகையவர் தூய மெனபற்கு இழி - மாதர்களது வெள்ளிய மெல்லிய பற்களுககிழிநத, மணிப்படா திரைப்பரதர் முன்றில—முததங்கள படருகினற அலைகளையுடைய வலைபரதுஇல்முன், பொன்கிழிவிரித்து என - பொனமுடிச்சை விரித்தாற்போல, புன்னை சினைபொதுள்வ-புனனை மரங்களி லரும்புகள் நெருங்குவன. எ - று. (எ௩)

சஉ. கருநதகையதண்சினையகைததமடலகாலத
தருந்தகையபோதுசினையிற்புடைதயஙகப
பெருநதகையபொறசிறையொடுக்கியுடலபோா
இருநதகுருகினபெடைபிரிந்தவாகளெனன. (எஎ)

இ - ள். கருமதகைய தண்சினையகைததமடல கால - வல்லமைபொருந்திய அழகுடைய குளிர்ந்த அரும்புகளையுடைய தாழைகளினது மடலகளவிரிய, தரும்தகையபோது சினையில் புடைதயங்க - விருபபத்தைத் தருகினற பெருமையுடைய தாழைமலர்கள கிளைகளிலவிளஙக, குருகின்பெடை-பறவைகளின் பெடைகள், பெருமதகைய பொன் சிறை ஒடுக்கி-பெரியகவசம் போனறுடைய அழகியசிறைகளை யொடுககி, உடல போரு - உடலசையாது, பிரிந்தவர்கள் எனன - கணவரைப்பிரிந்த மகளிரைப்போல, இருந்த - துககிததிருநதன. எ - று. (எஎ)

ஸ்ரீராமபிரான் இளையபெருமாளுக்குச் சொல்லியது.

சங. தருமமெனறொருபொருடனனையஞ்சியான
தெருமருகின்றதுசெறுநர்தேவரோ
டருமையினவீந்தனரெனனுமஃதலால
உருமெனவொலிபடுமுரவிலோயெனறான். (கூச)

இ-ள். உரும் என ஒலிபடும் உரவிலோய்-இடிபோல ஒலியையுண்டாக்குகின்ற வலிய விலலுடையோய, தருமம எனற ஒருபொருள் தன்னை அஞ்சி யான தெருமருகின்றது - தருமமெனற ஒரு பொருளை யஞ்சி யான் மயஙகுகின்றது, (நான் முனிந்தகாலை) அருமை இல - அருமையிலலாமல, செறுநர் தேவரோடு வீந்தனர் எனனும் அஃது அலலால் எனறான்-பகைவர் தேவரோடு இறந்தனரெனறு சொல்லுகின்ற அதையல்லாமற பிறிதெனனுமென்றான. எ-று. (கூச)

சச. சொனனிறைகேள்வியிறறொடாநதமாநதரின்
இனனிறபபசலையுற்றிருநதமாதரின
தனனிறம்பயபபயநீங்கிததனனினும
பொனனிறம்பொருநதினபூகததாறெலாம். (ககரு)

இ - ள். சொல்நிறை கேள்வியில தொடர்ந்த மாந்தரின்-சொற்கள் நிறைந்த கல்வி கற்கச்சென்ற மைநதாகளால , இன்னிறம் பசலைஉற்று இருநதமாதரின-இனியநிறமாகிய பசலைகொண்டிருந்த மகளிரகளைப்போல, (ககரு)

## க0-வது. கிட்கிந்தைப்படலம்.

## இளையபெருமாள் கிட்கிந்தைக்குச்சென்றதைக் கூறுகின்றபடலம்.

சரு. அனனகாலமகலுமளவினில
முனனைவீரனிளவலைமொய்ம்பினோய
சொனனவெல்லையினூங்குமததூஙகிய
மன்னன்வநதிலனெனசெய்தவாறரோ. (க)

இ-ள். சொன்ன எல்லையின் ஊங்கும் அத்தூங்கிய-கூறிய காலத்திற் கதிகமும் ஆஙகுததங்கிய, மன்னன வந்திலன்-சுக்கிரீவன் வந்திலன, (க)

உசு. இன்றுநாடுதுமிங்கிவர்கருமவலி
துனனினுரையெனத்துணிந்தாரெனில
உனனைவெலலவுலகொருமூன்றினும
நினனலாறபிறரினமைநிகழ்ந்துவாய. (எ)

இ-ள். இவர்கரும் வலிதுனனினுரை-இவ்விருவர்கரும் அதிகம் வலியுடையாரை, இங்கு இனறுமநாடுதும் - இங்குஇன்றுந்தேடுதும், எனத்துணிந்தார எனில் - எனறு துணிவுகொண்டாராயின், உன்னை வெலல - (இலக்குவ) உனனை வெல்வதற்கு, உலகு ஒரு மூனறினும்-திரிலோகததிலும், நின அல்லால்பிறர் இன்மைநிகழ்த்துவாய - உனனை யலலாது பிறரினமையைச சொல்லுவாய். எ - று. (எ)

உஎ. மாடுவெனறியொாமாதிரயானையின
சேடுசெனறுசெடிலொருதிககினமா
நாடுகின்றதுநணணியகாலபிடித
தோடுகின்றதுமொததுளனாயினன. (கரு)

இ - ள். வென்றி ஓர்மாடு - வெறறிபொருந்திய ஒருபககததிலுளள, மாதிரயானையின சேடுசெனறு - திககயத்தினது கன்றுசென்று, செடுஇல் ஒருதிக்கின்மா நாடுகின்றதும் - இளமையில்லாத ஒருதிக்கினது யானையைத் தேடுகினறதையும், நண்ணிய கால்பிடித்து ஓடுகினறதும - காண்பதற்கு கால்விசைததோடுகின்றதையும, ஒத்துளனாயினன் - ஒத்துச் செல்வானாயினான். எ - று. (கரு)

சேடு ஆகுபெயர். சேடுஇல் எனபது செடிலெனநின்றது ஸ்ரீராமபிரானிருந்த விடத்தையும சுக்கிரீவனிருந்த விடத்தையும் இரண்டுதிசைகளாகவும அவவிருவரையும் இரண்டுதிசைக் கரிகளாகவும் இலக்குமணனைக் கரிககன்றாகவுங்கொளக.

சுககிரீவனைச சொல்லியது.

உஅ. சிநதுவாரததருநறைதேககில
சநதமாமயிறசாயலாதாழ்சூழற
கநதமாமலாககாடுகொவிய
மநதமாருதமவநதுறலைவுவான. (உ0)

இ - ள். அரும்நறைசிந்து ஆரதது தேக்கு அகில் - அரிய தேனைச் சிந்துகினற சந்தனமரத்தினதும் தேக்குமரத்தினதும்

அகில்மரத்தினதும் புகையுண்ட, சந்தம்மா மயிலசாயலர் - அழகிய பெருமை பொருந்திய மயிலபோலுஞ் சாயலுடைய பெண்களது, தாழ்குழல - பாதமவரையில தாழ்ந்த அளகத்திற் சூட்டிய, கநதம மாமலர்க்காடு கடாவிய-வாசமுடைய மிகுந்த மலர்ககூட்டங் கடாவிய, மந்தமாருதம வந்துறைவைகுவான்- தென்றற்காற்றுவீச வைகுவான எ-று. (௨0)

தாரை சொலலியது.

௪௯. மீட்டுமொனறுவிளமபுகினருள்படை
கூடடுமெனறுமைககொறறவனகூறிய
நாட்டிறமபினுங்நாட்டிறமபுமமெனக
கேட்டிலீரினிககாணடிர்கிடைத்திரால. (௨௯)

இ-ள். மீட்டும் ஒன்று விளம்புகின்ருள்-மீண்டு மொன்று சொல்லுகினருள், கொற்றவன் - ஸ்ரீராமபிரான், படைகூட்டும் என்று உமை கூறிய - படைகளைக கூட்டுமெனறுமக்குச்சொல்லிய, நாள்திறம்பின் - நாளவதிகழியின், உம் நாள் திறம்பும் எனக் கேட்டிலீர் - உமது வாழ்நாள கழியுமென்று தெரிந்திலீர் போலும், இனிக்காண்டிர் - இனிப்பார்ப்பீர், கிடைத்திர்- எமன்வாயி லகப்பட்டீர். எ-று. (௨௯)

இதுவுமது.

௫0. வாலியாருயிர்காலனுமவாஙகவிற
கோலிவாலியசெல்வஙகொடுததவர்
போலுமாலும்புறததிருப்பாரிது
சாலுமாலுஙகடனமையினோர்க்கெலாம. (௩0)

இ-ள். வாலி ஆருயிர்காலனும் வாங்கவில் கோலிவாலிய செல்வம் கொடுத்தவா - வாலியினது நிறைந்த உயிரை நமனும் பிடிக்க விலலேவளைதது மிகுந்த செல்வத்தைக் கொடுத்தவர், உம்புறத்து இருப்பாரபோலும் - சமையம்பார்த்து உமது கடைவாயிலிற் காததிருப்பார்போலும், உங்கள் தன்மையினோர்க்கு எல்லாம் - உஙகளை யொத்தவர்களுககெல்லாம, இதுசாலும்- இது அமையும். எ-று. (௩0)

இதுவுமது.

௫௧. திறம்பினீரமெயசிதைததீருதவியை
நிறமபொலீருங்கடவிளை நோக்ததால
மறஞ்செயவானுறினமாளுதிாமறறினிப
புறஞ்செயதாவதெனனெனகின்றபோதினவாய. (௩௨)

இ-ள். நிறம்பொலீர்-நெஞ்சுகெட்டீர், உங்கள் தீவினை நேர்ந்தது - உஙகளுடைய தீவினைப்பயன் வந்தது, (௩௨)

௫௨. கோளுறுததறகரியகுரககினம
நீளெழுதெதாடருமநெடுவாயிலைத
தாளுறுததிசதடவரைதநதன
மூளுறுததியடுசகினமொயம்பினால். (௩௩)

இ-ள். கோள் உறுத்தற்கு அரிய குரகசு இனம் - பிடித்தற்கரிய குரங்குககூட்டஙகள், நீள் எழுதெதாடரும நெடும் வாயிலைத் தாள உறுதநி - நீண்ட கமபஙகள் நின்ற பெரியவாயிலைத தாழ்ப்பாள்போட்டு, மொய்ம்பினால் - புயவலியால, தந்தன தடவரை - கொணாநதனவாகிய பெரியமலைகளை, மூளுறுத்தி அடுககின-ஒனறினமேலொன்று வைததடுககின. எ-று. (௩௩)

௫௩. சிககுறககடைசேமிததசெயகைய
தொக்குறுததமராததுவனறின
புகககுறககிபபுடைததுமெனபபுறம்
மிககிறுததனவெறபுமிறுததன. (௩௪)

இ-ள். சிககுறககடைசேமித்த செய்கைய - (குரங்குகள்) செல்வோர் சிக்குமபடிக கடைவாயிலைக் காபபுச்செயத தொழிலையுடையன, தொககு உறுததமராதத-ஒருசேரச்சேர்தத மரங்களையுடையன, துவன்றின - கூடினவாய, புக்கு புடைத்தும் என உறுககி - வந்து அடித்து மென்று அச்சஙகாட்டி, புறம் மிக்கு இறுததன-அயலி லதிகம் நின்றனவாய், வெற்பும் இறுத்தன - மலைகளையுஞ் சேர்ததுவைத்தன. எ-று. (௩௪)

௫௪. நீரெலாமயனீஙகுமினோநதியான
வீரனுளளமவிளஙகுவனெனறலும்
போகினறனாயாவருமபோகலாத
தாரைசெனறனடாாகுழலாரொடும. (௪௩)

இ-ள். யாவரும் போகின்றனா - எல்லாரும் அகலநின்றனர், போகலாத்தாரை - அகலாது நின்றதாரை, தார்குழலாரொடும் சென்றனள்-பூமாலையணிந்த கூந்தலுடைய மடந்தையரோடும் போயினள். (௪௩)

சுக்கிரீவன் சொல்லியது.

௫௫. அளித்தவரஞ்சநெஞ்சினடைந்தவரறிவுமூழ்கிக
குளித்தவரின்பதுன்பங்குடைந்தவர்குடைந்தவேரி
ஒளித்தவருண்டுமீண்டிவ்வுலகெலாமுணரவோடிக
களித்தவரெய்திநின்றகதியொன்றுகண்டதுண்டோ. (௬௩)

இ-ள். அளித்தவர் நெஞ்சின் அஞ்ச அடைந்தவர் - பெற்றவர் மனத்தி லஞ்சப்பிறந்தவரும், அறிவுமூழ்கிக் குளித்தவர் - அறிவில்லாதவரும், இன்பம் துன்பம் குடைந்தவர் - இன்பதுன்பங்களி லழுந்தியவரும், குடைந்த வேரி ஒளித்தவர் உண்டு - தோண்டிய தால்வடிந்த கள்ளை ஒளித்தவராயுண்டு, மீண்டு இவ்வுலகு எலாம உணர ஓடிக்களித்தவர - வந்து இவ்வுலகி லுள்ளவரெல்லாம அக்கட்குடித்ததை யறியவோடிச் செருக்கியவரும், எய்திநின்ற கதிஒன்று கண்டது உண்டோ - அடைந்துநின்ற நற்கதியொன்றை யாராயினும பார்த்ததுண்டோ. இல்லை. எ-று. (௬௩)

இதுவுமது.

௫௬. வஞ்சமுங்களவும்பொய்யுமயக்கமுமரபில்கொட்பும
தஞ்சமென்றுரைநீக்குந்தன்மையுங்களிப்புந்தாக்குங
கஞ்சமெல்லணங்குந்தீருங்கள்ளினைருந்தினேரை
நஞ்சமுங்கொல்வதல்லால்நரகினைநல்காதன்றே. (௬௫)

இ - ள். கள்ளின அருந்தினேரை - கள்ளினைக் குடித்தவரை, வஞ்சமும் களவும் பொய்யும மயக்கமும் - வஞ்சமுங் களவும் பொயயும் மயக்கமும், மரபு இல் கொட்பும் தஞ்சம் என்றுரை நீக்கும தன்மையும களிப்பும - முறைமையில்லாத சுழற்சியும் அபயமென்றுரைத் துறக்குந்தன்மையுஞ் செருக்கும், தாக்கும் - சேரும், கஞ்சமமெல் அணங்கும்தீரும - செந்தாமரை மலரில் வதிகின்ற இலக்குமியும் நீங்குவாள், நஞ்சமும் கொல்வதல்லால் நரகினை நலகாது - உணடவரை விடமுங் கொல்வதையல்லாமல் நரகத்தைக் கொடுக்காது. எ-று. (௬௫)

எனவே கள்கொடுக்குமெனபது.

இதுவுமது.

௫௭. ஐயநானஞ்சினேனிந்நறவினின்றியகேடு
கையினுலன்றியேயுங்கருதுதலக்குமமன்றால
வெய்யதாமதுவையின்னமவிருமபினேனென்னின்வீரன
செய்யதாமரைகளன்னசேவடிசிதைக்கவென்றுன. (௬௭)

இ-ள். செய்யதாமரைகள் அன்னவீரன்சேவடி சிதைக்க என்றான் - செந்தாமரை மலர்களையொத்த ஸ்ரீராமபிரானது திருவடிகள் என்னைக் கெடுக்கவென்றான். (கஎ)

ருஅ. திருவுறைமார்பனுந்தீர்ந்ததேயும்வந்
தொருவருங்காலமுன்னுரிமையோருரை
தருவினைத்தாகையிற்றாழ்வித்தாகுமோ
பரதனீயினையனபகரற்பாலையோ. (கஅ)

இ-ள். திருஉறைமார்பனும் - ஸ்ரீராமபிரானும், ஒருவு அரும் காலம் - நீங்குதலரிதாகிய மழைக்காலம், வந்து தீர்ந்த தேயும் - வந்து நீங்கியதாயினும், முன் உரிமையோர் உரை தருவினைத்து ஆகையில்-முன்புள்ள பெரியோரதுகட்டுரை செயலெல்லாஞ் செய்கின்ற வினைவயத்ததாகலின, பரதநீ-பரதனை யொத்தநீ, தாழ்வித்தாகுமோ - தாழ்வித்ததாகுமோ, இனையன பகரற்பாலையோ - இவ்வாறு கூறற்பாலையோ. எ-று. (கஅ)

## கஉ-வது. நாடவிட்டபடலம்.

## பிராட்டியாரைத்தேடவிட்டதைக் கூறுகின்றபடலம்.

சுக்கிரீவன் ஸ்ரீராமபிரானுக்குக் கூறியது.

ருகூ. ஆறுபத்தெழுகோடியனீகருக்
கேறுகொற்றத்தலைவரிவர்க்குமுன
கூறுசேனைபதிகொடுங்கூற்றையும
நீறுசெய்திடுநீலனெனறோதினன். (க)

இ-ள். அனீகருக்கு ஏறுகொற்றத்தலைவர் - படைவீரர்களுக்குச்சிங்கம்போன்ற வெற்றியுடைய தலைவர், ஆறுபத்து ஏழுகோடி - அறுபத்தேழுகோடிபேர்களாகிய, இவர்க்குமுன் - இத்தலைவர்களுக்குமேல், நீலன - நீலனென்பான், கூறு சேனைபதி - சொல்லிய சேனைகளுக்குப் பதியாவான், கொடும் கூற்றையும் - அந்நீலன் கொடிய எமனையும், நீறுசெய்திடும் என்று ஓதினன் - நீறுசெய்வானென்று சொல்லினான். எ-று. (க)

## ஸ்ரீராமபிரான் பிராட்டியின திருமேனி யடையாளத்தை அனுமானுக்குச் சொல்லியது.

கூ0. ஆலிலைபபடிவநதிட்டுமையருணபலகைநொய்ய
பாலநிறததட்டம்வடடககணணடிபலவுமின்ன
போதுமெனறுரைததபோதுமபுனைநதுரைபொதுமையாககின
ஏலுமெனறிசைககினேலாவிதுவயிறறியற்கையினனும். (ருகூ)

இ-ள். நொய்யபால நிறததட்டம-நுட்பமானபாலாடை,()

கூக. முன்கையேயொபபதொனறுமுணடுமூனறுலகததுளளும
எனகையேயிழுககமனறேயியமபினுங்காநதளெனறல
வனகையாழமணிககைகயெனறனமறறொனறையுணர்ததலனறி
நனகையாடடககைககாமோநலததின்மேனலமுணடாமோ. (சுரு)

இ-ள. முனகை ஒப்பது - முன்கையையொப்பது, மூன்று உலகத்துள்ளும - திரிலோகததிலும், ஒன்று உண்டு எனகை இழுக்கம் - ஒன்றுண்டெனறு கூறுவது இழுககமாம், மணிக்கை - அழகிய அக்கைககு, இயம்பினும - ஒப்புச்சொல்லினும், காந்தள் என்றல் - காந்தட்பூவைச்சொலலுதலும், வனகையாழ் என்றல் - வலிமை யென்னுஞ் சிறுமையையுடைய வீணையைச் சொல்லுதலும், மற்று ஒன்றை உணர்த்தல் அனறி-வேறொன்றை யுணர்த்தலலலாமல, நன்கையாள்-நல்ல ஒப்பனையுடையாளது, தடம்கைக்கு ஆமோ - விசாலமுள்ள கரத்திற்கொப்பாகுமோ, நலத்தினமேல நலம உண்டாமோ-அழகின்மேலழகுண்டாகுமோ. எ-று. (சுரு)

கூஉ. வெளளியமுறுவலசெவவாயவிளங்கிழையிளமபொறகொம்பின்
வள்ளுகிாககுவமைநமமானமயாவறவருககலாமோ
எள்ளுநிாநீாமூககையெனறுகொணடிவறிபபினனும
கிளளைகணமுருககினபூவைககிழிககுமேலுரைககலாமோ, (சுஎ)

இ - ள். இளம்பொன் கொமபில் - இளமையான அழகிய கொம்பையொத்த, வெள்ளிய முறுவல் செவ்வாய் - வெண்மையுடைய பற்களையுஞ் செவந்த வாயையுமுடைய, விளஙகுஇழை - சீதையினது, வள்உகிர்க்கு உவமை நம்மால் மயக்கு அறவருக்கல் ஆமோ - வலியநகங்களுக்கு ஒப்பு நம்மால் மயக்கந்தீரச் சொல்லலாமோ, கிளளைகள்-கிளிகள், மூககை நீரே எள்ளுகிர்

என்று கொண்டு - சீதையின் உகிரை யொவ்வாதென்று எமது மூக்கை நீரே இகழுதிரென்று நினைத்து, இவறி - முருக்கமரத்தின் மேலேறி, பின்னும் முருக்கின்பூவைக் கிழிக்குமேல் - பின்னும் அம்மரத்தினது மலரைக் கிழிக்குமாயின், உரைக்கலாமோ - அம்மூக்கை ஒப்புச்சொல்லலாமோ. எ - று. (௪௭)

விளங்கிழை - அன்மொழித்தொகை. முருக்கம் பூ வாய்க்கொப்பாகலானும் எகுவது அதுவாகலானும் பிராட்டியின் உகிர்களுக்குக் கிளிமூக் கொப்பாகாதென்று முருக்கம்பூ இகழ்வதாய் நினைத்து அதனைக் கிழிக்குமாயின அம்மூக்கை யொப்புச் சொல்லலாமோ எனபது கருத்து.

௬௩. நன்னாளுநளினநாளுமுகத்தினைநுதலைநாடிப
பனநாளும்பனவிடாறருமதியெறுமபண்பதாகி
முந்நாளினிளவெண்டிங்கண்முறைநாளுங்குறைவேயாகி
எந்நாளுமவளாந்தெனனினிறையொசகுமியல்பிறருமே. (௫௬)

இ - ள். நல்நாளும் நளினமநாணும் முகத்தினைநுதலைநாடி - தனக்கு நற்காலமாகிய பகற்காலததிலும ஒப்பாகாமை பற்றித் தாமரைமலர் நாணுகின்ற முகத்தையும் நெற்றியையுங் குறித்து, முன்னாளில் இளவெண்திங்கள் - முன்னாளிலுண்டாகிய இளமையான் வெள்ளியபிறை, பல் நாளும் பன்னி ஆற்றுமதி எனும் பண்பதாகி - பலநாளுந் தன்னை முகம் போலவும் நெற்றிபோலவுஞ்செய்து முடிக்காத மதியென்னுங் குணமாத்திரமுடையதாகி, முறைநாளும குறைவேயாகி - நுதலுக் கொப்பாக வேண்டி முறையாய்த் தினமுங்குறைந்து, எந்நாளும் வளர்ந்தது என்னின் - முகத்துக கொப்பாகவேண்டி எந்நாளும் வளர்ந்ததென்று சொல்லின், இறை ஒககும் இயல்பிற்று ஆமே - அத்திங்கள் அவ்விரண்டற்குஞ் சிறிதொககுந தகுதியுடையதாமா. ஆகாது. எ - று. (௫௬)

௬௪. வனைபவரில்லையனறேவனத்துணும்வநதபின்னா
அனையனவெனினுநததமழகுக்கோரழிவுணடாகா
வினைசெயக்குழனறவலலவிதிசெயவிளைந்தநீலம்
புனைமணிபபவளமினனுமபுதுமையாமுவமைபூணு. (௫௭)

இ - ள். நீலம - நீலரத்நத்தை யொப்பிடின், புனைமணி - அலங்கரித்தலுக்குரிய முத்தையும், பவளம் - பவளத்தையும் அந்நீலமொக்கும், இன்னும் புதுமை ஆமஉவமை பூணு - இன்னும் புதுமையாகிய வேறுவமைபூணு, (௫௭)

## ௧௫-வது. பிலநீங்குபடலம்.

### பிலத்துட்புகுந்து நீங்கியதை யோதுகின்றபடலம்.

:o:

௬௫. போயினார்போனபினபுறநெடுந்திசைகடோ
றேயினானிரவிகாதலனுமேயினபொருட்
காயினாரவரையஙகனனநாளவதியிற
றாயினாருலகினைததகைநெடுந்தானையார். (௧)

இ - ள். போயினார் போனபின் - தென்திசைக்கட் சென்றார் சென்றபின்பு, இரவிகாதலனும் ஏயினபொருட்கு ஆயினாரவரை - சுக்கிரீவமகாராசனும் ஏவினவினையை முடிக்கவல்லாரை, புறம் நெடும் திசைகள்தோறும் ஏயினான - மற்ற நெடிய திசைகள்தோறும் போக்கினான், தகைநெடும தானையார் - பெருமைபொருந்திய நெடிய அச்சேனையோர், அன்ன நாள் அவதியில் - அந்தநாட் கெடுவில்வர, உலகினைத் தாயினார் - அத்திசைகளுக்குச் சென்றார் எ-று. (௧)

௬௬. தாமகூடததிரைததீரததசஙகமும
நாமகூடப்பெருந்திசையைநலகிய
வாமகூடசசுடாமணிவயங்குறும
ஏமகூடததடஙகிரியையெயதினார. (௧௧)

இ-ள் தாமம் கூடம் திரைத்தீர்த்த சங்கமும் - ஒளிபொருந்திய முன்மண்டபத்தையுடைய அலைகளைப்பொருந்திய தீர்த்தகட்டத்திலும், நாமம்கூடப் பெரும்திசையைநல்கிய - கீர்த்தியுண்டாகப் பெரியதிக்குக்களைக்காட்டிய, வாமம் கூடசசுடர்-அழகுண்டாகச்சூரியனையொத்த,மணிவயங்குறும்-ரத்நங்கள் விளங்குகின்ற, ஏமகூடத் தடங்கிரியை எய்தினார் - ஏமகூடமென்னும் மலையைச்சார்ந்தார். எ-று. (௧௧)

௬௭. இந்திரநகரமுநிகரிலாதது
மந்திரமணியினிறபொன்னினமண்ணினில
அந்தரத்திழிசுடரவையினருயினும
உநதருமிருடுரநதொளிரநினறது. (௩௪)

இ-ள். இந்திரன் நகரமும் நிகர் இலாதது - இந்திரனது பட்டினமும் ஒப்பில்லாதது, மண்ணினில - அப்பிலத்துள், அந்தரத்து இழிசுடர் அவை இன்றாயினும் - ஆகாயத்தினின் றிழிகின்ற ஒளிகளின்றாயினும், மநதிரமணியினில பொன்னில்-கடலிலுண்டாகிய முததுககளாலும் பொன்னாலும், உந்த அரும் இருள் துரந்து ஒளிரநின்றது-நீகக அரிதாகிய இருளைப்போக்கி விளங்காநின்றது. எ-று. (௩௪)

௬௮. ஆயநகரததினியலபுளைருறவறிநதாா
மாயைகொலெனககருதிமறறுநினைவுறருா
தீயபிலனுட்பிறவிசெனறவிஃதொன்ேறு
தூயதுதுறககமெனநெஞசுதுணிவுறருா. (௪௧)

இ-ள். தீயபிலனுள் பிறவிசென்ற இஃது ஒன்ேறு-இத்தீயபிலனுள் நமபிறவிபோயிறறு இது ஒனேறு, தூயது துறக்கம் என நெஞ்சு துணிவுற்ருா - தூயதாகிய சுவாக்கமென்று துணிவுகொண்டார். (௪௧)

சுயமபிரபை அநுமாநுககுச சொல்லியது.

௬௯. நான்முகநுனிததநெறிநூலுவரநொயதாய
மேனமுகநிமிாததுவெயிலகாலொடுவிழுஙகா
மானமுகநலததவனமயனசெயததவததால
நானமுகனளிதததுளதிமாநகரநலலோய. (௫௮)

இ-ள். நலலோய் - பெரியோய், நாலமுகம் நுனித்தநெறி-யோகநூல்சொல்லிய நுட்பமானவிதி, நொயதாய நூறுவரளிதாய் நூறுபொருந்த, மேல்முகம நிமிர்த்து காலொடு வெயில் விழுங்கா - மேலேமுகத்தை நிமிர்த்து காலொடு வெயிலை விழுங்கி, மானமுகம் நலத்தவன மயனசெய்த தவத்தால்-மான் முகத்தையுடைய நன்மையுடையவனாகிய மயன்செய்த தவத்தால், (அவனுக்கு) இமமாநகரம் நான்முகன் அளித்துஉளது-இம்மாநகரம் பிரமன்கொடுத்துளது. எ-று. (௫௮)

இ-ள். குரும்பைநீர் முரைஞ்சும்சோலை - தென்னங்குரும்பை யுடைந்து நீரோடுகின்ற சோலைகளையுடைய, குலிந்தமும் புறத்துக்கொண்டார் - குலிந்தநாட்டையுங் கடந்துசென்றார்.

எஎ. சூலடிப்பலவின்சுளைதூங்குதேன்
கோலடிப்பவெரீஇக்குலமள்ளரேர்ச்
சாலடித்தருஞ்சாலியின்வெண்முளை
தோலடிக்கிளையன்னந்துவைப்பன. (ச0)

இ-ள். குலம் மள்ளர் - கூட்டமாகிய உழவர், சூல் பலவின் அடிசுளை தூங்குதேன் - கருவுடைய பலாமரத்தினது வேரிற் பழுத்த பழத்தில மொய்த்தவண்டுகளை, கோல அடிப்ப - ஏரோட்டுகின்ற கோலாலோச்ச, கிளை அன்னம் - அம்மரத்தின் கிளைகளிலிருந்த அன்னங்கள், வெரீஇ - அஞ்சி, ஏர்ச்சால் அடித்தரும் சாலியின் வெண்முளை - ஏர்ச்சாலடியில் முளைத்த நெல்லினது வெள்ளிய முளைகளை, தோல் அடி - தோலுடைய அடிகளால், துவைப்பன - துவைப்பன. எ-று. (ச0)

எஅ. தேரைவன்றலைத்தெங்கிளம்பாளையை
நாரையென்றிளங்கெண்டைநடுங்குவ
தாரைவன்றலைத்தண்ணிளவாம்பலைச்
சேரையென்றுபுலம்புவதேரையே. (சரு)

இ-ள். தேர் ஐ வன் தலை-முதிர்ந்த அழகிய வலிய தலையை யுடைய, (சரு)

## நான்காவது. கிட்கிந்தாகாண்டம்

முற்றிற்று.

---

காண்டம் நானகுக்கு ஆ திருவிருத்தம் - சுஉசு.

---

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

முற்றிற்று.

ஸ்ரீ

# கிட்கிந்தாகாண்டம்

## செய்யுளகராதி.


| செய்யுள். | பக்கம். |
|---|---|
| அங்கொா | ௬ |
| அடையீா | ௬ |
| அணிசொழிதா | ௨௭ |
| அரிபபெரும | ௬௨ |
| அவ்விடதது | ௪௰ |
| அளவில் | ௪௬ |
| அளிநதவா | ௨௧ |
| அனனகாலம் | ௧௭ |
| — | |
| ஆயநகர | ௨௬ |
| ஆயமா | ௭ |
| ஆவிலே | ௨௩ |
| ஆறுபத்து | ௨௧ |
| — | |
| இடியுண்டு | ௨௭ |
| இநதிரன | ௨௬ |
| இருமை | ௧௧ |
| இலலாத | ௬ |
| இனனும் | ௪௮ |
| — | |
| ஈாநதநுண | ௨ |
| — | |
| உண்டகததுள் | ௨௮ |
| உழையுலாம | ௯ |
| — | |
| எற்பொரு | ௩ |
| — | |
| ஏனுநீர் | ௩ |
| — | |
| ஐயநான | ௨௧ |
| — | |
| கருநதகைய | ௪௬ |
| களனவில் | ௩ |
| — | |
| குவான்மணி | ௨ |
| — | |
| கொற்றவ | ௪௰ |
| — | |
| சோனுறததல | ௨௰ |
| — | |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| சிஙகுற | ௨௰ |
| சிஙகுவார | ௧௮ |
| — | |
| சுரும்பொடு | ௨௯ |
| — | |
| சூலடி | ௨௯ |
| — | |
| சொனனவிறு | ௪௭ |
| — | |
| தசநவ | ௨௮ |
| தாலாறறம | ௧ |
| தருமம | ௧௭ |
| தனறயடிததது | ௪௨ |
| — | |
| தாமகூடம | ௨௫ |
| — | |
| திருவனை | ௨௨ |
| திரம்பினா | ௧௯ |
| — | |
| துனபு | ௮ |
| — | |
| தேசை | ௨௯ |
| தேனபடி | ௨ |
| தேனிமுகரு | ௯ |
| — | |
| நலவுறுபபு | ௭ |
| நவவி | ௩ |
| நனனுரும | ௨௬ |
| — | |
| நீடுநாகம் | ௯ |
| நீரெலாம | ௨௰ |
| — | |
| நூனமுகம | ௨௬ |
| — | |
| நெறகிழிய | ௧௬ |
| — | |
| நோககினுல் | ௪௬ |
| — | |
| பஞசபூதத | ௫ |
| — | |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| பாசிலைழ | ௧௫ |
| பாடலம | ௧௨ |
| — | |
| புனலிலை | ௨௭ |
| — | |
| பூவியல் | ௧௩ |
| — | |
| பேடையும் | ௧௩ |
| — | |
| பொறிகந்த | ௪௬ |
| — | |
| போயினுா | ௨௫ |
| — | |
| மணணுளாா | ௬ |
| மழைவாடை | ௧௬ |
| மறந்திறமபல | ௧௧ |
| — | |
| மாடுவெனறி | ௧௮ |
| — | |
| மீட்டுமொனறு | ௪௯ |
| — | |
| முளரிமேல | ௮ |
| முனகை | ௨௩ |
| — | |
| மூன்றுரு | ௧ |
| — | |
| வஞசமும | ௨௧ |
| வரியாா | ௬ |
| வலைபவா | ௨௬ |
| — | |
| வாரளி | ௫ |
| வாலியார் | ௧௯ |
| — | |
| விண்ணுற | ௨௮ |
| விழையேன | ௧௫ |
| விறருங்கு | ௧௧ |
| வெள்ளம் | ௮ |
| வெள்ளிய | ௨௩ |
| — | |
| வேலைநிறை | ௪௫ |


செய்யுளகராதி முற்றிற்று.

ஸ்ரீ

# கிட்கிந்தாகாண்டம் பிழைதிருத்தல்.

| பக்கம. | வரி. | பிழை. | திருததல். |
|---|---|---|---|
| ௧௪ | ௨0 | வருநதோ .. | வருததோ. |

## சுந்தரகாண்டம்.

| | | | |
|---|---|---|---|
| ௨௨ | ௧௭ | புகழின ... | புகழினை. |
| ௨௧ | ௧௨ | ெருடாததன . | ெருடாதன. |
| ௩௪ | ௧௪ | பிடதது ... | பிடிதது. |
| ௩௭ | ௧௧ | திசையின .. | திசையிற. |




நளாூக குருவாழ்க குருவே துணை

ஸ்ரீ

ஸர்வம்விஷ்ணுமயம்ஜகத்.

ஸ்ரீமத்கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

# ஸ்ரீமத்கம்பராமாயண

## அருங்கவிவிளக்கம்.

## ஐந்தாவது. சுந்தரகாண்டம்.

பாலகாண்டமுதலிய ஏனையகாண்டங்களைப் போலக் காரணக்குறியாயிது இலங்காகாண்டமெனப்பெயர்பெறாது சுந்தரகாண்டமெனப் பெயர்பெற்றதென்னையோவெனின் பெருமாளது திருமேனியி னழகைக் கூறுகின்றமையின் சுந்தரகாண்டமெனும் பெயர்த்தாயிற்று.

வடமொழிச் சப்தார்ணவங்கண்டு வசனப்படி ஆஞ்சநேயருக்குச் சுந்தரனென்னும் பெயருண்மையானும் இக்காண்டமுழுதும் அவர்செயலையே கூறுகின்றமையானும் இதற்குச் சுந்தரகாண்டமென்னும் பெயராயிற்றென்பாருமுளர்.

### க - வது. கடறாவுபடலம்.

### அனுமான்தென்கடலைத்தாவியதைக்கூறுகின்றபடலம்.

காப்பு.

க, அலங்கலிற்றோன்றும்பொய்ம்மையரவெனப்பூதமைந்தும்
விலங்கியவிகாரப்பாட்டினவேறுபாடுற்றவீக்கம்
கலங்குவதெவரைக்கண்டாலவரென்பர்கைவில்லேந்தி
இலங்கையிற்பொருதாரன்றேமறைகளுக்கிறுதியாவார். (க)

இ - ள். அலங்கலில் தோன்றும் பொய்ம்மை அரவு என - பழுதையால் காணப்படுகின்ற பொய்ப் பாம்புபோல, பூதம் ஐந்தும் விலங்கிய விகாரப்பாட்டின் - ஐம்பூதங்களும (தந்நிலையினின்றும்) பௌதிகமென்று நீங்கிய * அறுவகை விகாரப்படுதலையுடைய, வேறுபாடு உற்ற வீக்கம் - (தேவர் மக்கள் விலங்கு தாவரமென) வேறுபாட்டைப் பொருந்திய பிறப்பின மிகுதி, கலங்குவது எவரைக்கண்டால் - அஞ்சி நீங்குவது யாரைப்பார்த்தால், மறைகளுக்கு இறுதியாவார் - வேதங்களின் முடிவு பொருளானவராகிய, அவர் - அவர், கைவில் ஏந்தி இலங்கையில் பொருதார் என்பர் - இடது திருக்கரத்தில் தனுவேந்தி இலங்காபுரியிற் போர்புரிந்தாரென்று சொல்லுவரறிந்தோர். கலங்குவதெவரைக்கண்டா லெனவே மறைகளுக் கிறுதியாவாரைக் கண்டால் கலங்குமென்பதாயிற்று. எ - று. (க)

அலங்கல் ஆகுபெயர். அன்று ஏ - அசைகள்.

ஆஞ்சநேயன் கடலைத் தாண்டிய காலை நிகழ்ந்ததைக் கூறியது.

உ. வன்றந்த வரிக்கொணாகம் வயங்கனலுமிழும் வாய
பொன்றந்த முழைகடோறும் புறத்துராய்ப் புரண்டு போவ
நின்றந்த மில்லா னூன்ற நெரிந்துகீ ழழுந்த நீலக்
குன்றந்தன் வயிறு கீறிப் பிதுங்கின குடர்கண் மான. (ச)

இ - ள். வன்தந்த வரிகொள் நாகம் வயங்கு அனல் உமிழும் வாய - வலிய பற்களையும் வரியையுமுடைய பாம்புகள் எரிகின்ற நெருப்பைக் கக்குகின்ற வாயையுடையனவாய், பொன்தந்த முழைகள் தோறும் புறத்து உராய்ப் புரண்டு - பொன்னைத்தருகின்ற குகைகள் தோறு நின்று புறப்பட்டு வெளியிடத்தைத் தேய்த்து உருண்டு, அந்தம் இல்லான் நின்று ஊன்ற - முடிவில்லாதவனாகிய அனுமான் அம்மலைமேனின்றழுத்த, நெரிந்து கீழ் அழுந்தி நீலக்குன்றம் தன் வயிறு கீறி - உடைந்து புவியுளழுந்திக் கறுத்தமலையினது வயிறு கிழிந்து, பிதுங்கின குடர்கள் மான - சரிந்த குடர்களை யொப்பாக, போவ - செல்வன. எ - று. (ச)

---

* ஊறுபடவொன்றிலே பிறத்தல், பிறந்துளவாதல், வேறுபடவளர்தல், வளர்ந்தயலொன்றாய் விளைந்தமைதல், மாறுபடத்தேய்தல், அறமாய்தல்.

மலையின் குடலை யொப்பாகப் பாம்புகள் போவன வென் பது கருத்து

௧. புறததுறலஞ்சிவேறோரணம்புக்குறைதலபோகக
மறதொழிலரககாவாழுமாநகாமனுவினவநத
திறததகையிராமனெனனுஞசேவகறபறறிசசெலலும
அறததகையரசனறிணபோராழியுமனையனுனை (௧௦)

இ - ள். அறத்தகை அரசன திண்போர் ஆழியும் அனையன் ஆனான் - அறததைக் காப்பதில தகுதியுடைய தயரதசக்கிரவர்த்தியின் மிக்கவலியுடைய சகராயுதத்தையும அநுமா னொப்பாயினான். (௧௦)

௨. நாலினோடுலகமூனறுநடுககுறவடுககிநாகா
மேலினமேனினறகாறுஞசெனறகூலததினவிணடு
காலினலளநதவானமுகட்டையுநகடககககால
வாலினலளநதானெனறுவானவாமருளசசெனறான. (௧௧)

இ - ள். விண்டு காலினல அளநத - திருமால் சீர்பாதத்தாலளந்த, நாலினோடு உலக மூனறும நடுக்குற அடுக்கி - நாலினோடு மூன்றாகிய மேலேழு லோகஙகள் தததமிடத்திற் பொருந்த அடுககப்பட்டு, நாகர்மேலின் மேல் நின்ற காறும் சென்ற கூலத்தின்-தேவாகளது மேனுலகஙகளுககு மேனுள்ளவரையிலுமுயர்ந்த எல்லை யினையுடைய, வானமுகட்டையும-அண்டமுகட்டையும், கடகக - கடந்துசெல்ல, காலவாலினல் அளந்தான் என்று வானவர் மருளச்சென்றான் - காலபாசத்தை யொத்தவாலினு லளந்தானென்று தேவர்கள மயங்கப் போயினான். எ - று. (௧௧)

௩. விளிததுபபினவேலைதாவும்வீரனவாலவேதமெய்ககும்
அளிததுப்பினனுமனென்னுமறநதுணைபெறறதாயும்
களிததுப்புனறொழினமேனினறவரககாகணனுறுவராமென
றௌிததுபபினசெல்லுங்காலபாசததையொததனறே. (௧௨)

இ - ள். விளித்து - ஒலித்து, பின்வேலைதாவும் வீரன் வால் - பின்பு கடலைத் தாண்டுகின்ற அநுமானுடையவால், வேதம் மெய்க்கும் - வேதமுண்மையாயச் சொல்லுகின்ற, அளி - இராகவ பிரானருளாகிய, துப்பின அநுமன் என்னும் அறம் துணைபெற்ற தாயும் - வலியினையுடைய அநுமனெனறு சொல

லப்படுகின்ற தருமததைத் (தனக்குத்)துணையாகப் பெற்றதாயி ருந்தும், களித்து - களனுண்டு, புன் தொழில மேல் நினற அரக்கர் கண்ணுறுவர் எனறு - ஈனச்செய்கையினிடத்தில் நிலை பெற்ற இராககதர் கணடு கொள்ளுவரென்று, ஒளித்துப் பின் செல்லும காலபாசத்தை ஒத்தது - மறைந்து அவ்வனுமானுக் குப் பின்செல்லுங் காலபாசததை யொப்பாயிற்று. எ-று. (௩௪)

௫. இந்நாகமனனுனெறிகாலெனவேகுமவேலை
திந்நாகமாவிறசெறிகீட்டிசைககாவலசெயயும
கைந்நாகமனனுளகடலவந்ததொாகாட்சிதோனற
மைந்நாகமெனனுமமலைவானுறவநததனறே. (௪௦)

இ - ள். இம்மலையையொதத அனுமான வீசுகின்ற காற் றைப்போலச செலலுங்காலை, திககயங்களில நெருங்கிய கீட்டி சையைச் சுமந்து நிற்பதாகிய, துதிக்கையுடைய வெள் யானை (கடைந்த)அந்நாளில கடலினினறு வநததாகிய ஒரு தோற்றந தோன்ற, மைநாக மெனனும் மலை ஆகாயததைப பொருந்த வந்தது. எ - று. (௪௦)

௭. நூலேநதுகேளவிநுகராயபுலனோககலுறருா
போலேநதுநினறவனியாணமெயபொருதுநீஙகக
காலாழநதழுநதிககடலபுசகுழிஇககசசமாகி
மாலேநதவோஙகுநெடுமநதரமேயுமான. (௪௨)

இ-ள். நூல் ஏநது கேள்வி நுகராப்புலன நோககல் உற் றார்போல-நூல்சொனன பொருட் கேளவியைக கேளாமல வி ஷயங்களை யனுபவிபபதில் தலைபபட்ட சிறுவரைப்போல, அவ னியாள ஏந்திநினறு மெய பொருதுநீஙக - பூதேவி முனபே ந்திநினறு பினபு தாஙக சரீரம பெ. றுககாமல விலக, கால - (சந்திரனுகிய) தூணும, ஆழ்நது - அமிழநது, அழுந்தி - (மத் தாகிய மலையும) அமிழந்து, கடல்புக குழிககசசமாகி - கடலு முள்ளழுந்தியபோது கூர்மாவதாரஞ்செயது, மால் ஏந்த ஓங்கு நெடுமந்தரமேயுமான - திருமாலேந்த மேலெழுந்த நெ டியமந்தரகிரியையு மொப்பாக. எ-று. (௪௨)

௮. பிறங்குங்குமமொப்பன நீணிறமவாய்த்தநீரின
இறங்குமபவளககொடிசுறறினசெமபொனேயநத
பிறங்குஞ்சிகரபபடாமுன்றிரெறுமபிணுவோ
டுறங்குமமகரங்ஙுயிாப்பொடுணாநதுலாவ. (௪௭)

இ - ள். குங்கும நிறம ஒப்பன - குஙகும நிறத்தை யொப்பனவாயும், நீல்நிறம்வாய்த்த - நீலநிறத்தைப் பொருந்தினவாயும், நீரில் இறங்கும் பவளக்கொடி சுற்றின - புனலி லிறங்குகின்ற பவளக்கொடிகள் சுற்றினவாயும, செம்பொன ஏய்ந்த - செம்பொன்னைப் பொருந்தின வாயுமுள்ள, பிறஙகும் சிகரப்படர் முன்றில்தொறும - விளஙகுகின்ற அம்மலைச் சிகரங்களாகிய படர்ந்த முற்றங்கள தோறும, பிணாவோடு உறங்கும மகரங்கள் உயிர்ப்பொடு உணர்ந்து உலாவ - பெண் மீனகளோடு தூங்குவனவாகிய மகரமீன்கள் மூசசோடு நித்திரை தெளிநது சஞ்சரிக்க எ - று. (சஎ)

கூ. கூனசூனமுதிரிபபிகுரைக்கநிரைத்தபாசி
வானசூழமழையொபபவயஙகுபளிங்குமுனறி
ருனசூலநாளிறறகைமுததமுயிாததசஙகம
மீனசூழ்வருமமமுழுவெண்மதிவீறுகிற. (சஅ)

இ-ள். கூன் சூல் முதிர் இபபிகுரைகக - வளைவுடையகருப்பமுதிர்ந்த இப்பிக ளொலிக்க, நிரைத்த பாசிவான் சூழ்மழை ஒப்ப - நிரைந்த பாசிகள் ஆகாயத்தைச் சூழ்ந்த மேகங்களையொப்பாக, வயங்கு பளிங்கு முன்றில் - விளங்குகின்ற பளிங்குப் பாறை முன்றிலில், சூலநாளில் தகைமுததம் உயிர்த்த சங்கம் தான் - கருப்பத்தைப் பெறுகின்ற காலத்தில் பெருமை பொருந்திய முததுக்களை யீன்ற சங்கமானது, மீன் சூழ்வரும் அம்முழுவெண்மதி வீறுகிற - நக்ஷத்திரங்கள் சூழ்ந்து வருகின்ற அவ்வெள்ளிய பூரணச் சந்திரனது பெருமையைக்குலைக்க. எ - று. (சஅ)

இப்பி ஒலி - மேகவொலி, பாசி - மேகம், பளிங்கு முன்றில் - ஆகாயம், முத்து - நக்ஷத்திரம், சங்கம் - சந்திரன்

சo. பல்லாயிரமாயிரங்காசினம்பாடிமைக்கும்
கல்லார்சிமயததடங்கைததலநீண்டுகாட்டுந்
தொல்லாகலியுட்புகமூழ்கிவயங்குதேற்றந்த
தெல்லாமணியீட்டமுகநதெழுகின்றதென்ன. (சக)

இ-ள். பல் ஆயிரம் ஆயிரம் காசு இனம்பாடு இமைக்கும் - அனேகவாயிரரத்நக் கூட்டம் பக்கங்களில் மின்னுகின்ற, கல்

ஆர் சிமயத்தடங்கைத் தலம் நீண்டுகாட்ட - அம்மலையினது சிகரங்களாகிய விசாலித்தகைத்தலங்கள் நீண்டு தோன்ற, தொல் ஆர்கலி உள்புக மூழ்கியங்கு தோற்றத்து-பழைய கடலில் அழுந்தமுழுகி அங்கு விளங்குகின்றஒளியையுடைய, எல்லாமணியீட்டம் முகந்து எழுகின்றது என்ன - எல்லா இரத்தினக்கூட்டங்களையும் வாரி (முத்துக்குளித் தெழுகின்றவனைப்போல) வருகின்றதென்று சொல்லும்படி. எ-று. (சகூ)

அனுமான மைநாகமலைக்குச்சொல்லியது.

கக. முனபிறசிறநதாரிடையுளளவாகாதனமுறறப
பினபிறசிறநதாாகுணநனறிதுபெறறயாககைகக
கெனபிறசிறநதாயதொருஉறறமுணடெனனலாமே
அனபிறசிறநதாயதொாபூசனையாாகணுணடே. (சூக)

இ-ள். காதலமுற்ற - ஆசை மிரமபக கொடுபபதில, முனபில் சிறந்தாா - முறகாலததிற் சிறநதமுதல் வள்ளலகளும், இடை உள்ளவா் - நடுவிலுளள நடுவள்ளலகளும, பினபில்சிறந்தார் - பினபுள்ள கடைவள்ளலகளும, குணமனறு - கொண்டகுணம் நன்று, இது பெற்றயாக்கைக்கு - இககுணத்தைக் கொண்ட சரீரததிறகு, என்பில் - ததீசி மகாமுனி கொடுத்த முதுகெலுமபிலும, சிறந்தாயது ஓா ஊற்றம உண்டு எனனலாமே - சிறந்துள்ளதாகிய வோருறுதிப் பொருளுண்டென்று சொல்லுதல்கூடுமோ, (கூடாது) அனபில் - அவ்வாறென்னைக் கொடுத்தது மன்பாலாதலால், சிறந்தாயது ஓர் பூசனையார் கண் உண்டு - சிறந்துள்ளதாகிய அவ்வன்பிலுமிக்க வொரு பூசனையாரிடத்திலுள்ளது, இல்லை. எ-று. (சூக)

வேண்டாது வலியத்தாமேகொடுப்பவர் - முதல்வள்ளல்கள், வேண்டககொடுப்பவர் - இடைவள்ளல்கள், புகழக் கொடுப்பவர் - கடைவள்ளல்கள்.

கஉ. செவ்வானகதிருஙகுளிாதிங்களுநதேவர்வைகும்
வெவ்வேறுவிமானமுமீனொடுமேகமறறும்
எவ்வாயுலகததவுமீண்டியிருந்ததம்மின்
ஒவ்வாதனவொாதிடவூழிவெங்காலுமொத்தான். (சூரு)

இ - ள். செவ்வான் கதிரும் குளிர்திங்களும் - செவந்த பெருமையுடைய சூரியனுங் குளிர்ந்த சந்திரனும், தேவர் வை

கும் வெவ்வேறு விமானமும் - தேவர்களூருகின்ற வெவ்வேறு விமானங்களும், மீனொடு மேகமற்றும் - நக்ஷத்திரங்களோடு மேகமுதல மற்றும, எவ்வாய உலகத்தவும - எல்லாவிடங்களிலுமுள்ளனவும், ஈண்டி இருந்ததமமில ஒவ்வாதன ஒத்திட - சேர்ந்திருந்த தம்முள் ஒன்றோடொன்று சேராதவைகளெல்லா மொருங்கு சேர, வெம்மூழிகாலும் ஒத்தான - வெவ்விய ஊழிக்காற்றையும போன்றான. எ-று. (சுச)

ஈண்டி இருததலாவது ஆகாயத்திற் சேர்ந்திருத்தல. ஒவ்வாதனவாவது அதனுள் பலவேறுமண்டலங்களில தனித்தனியே யிருத்தல் அனுமான சென்ற வேகத்தால அவை யெல்லாம் ஓரிடத்தனவாயின வெனபது கருதது.

கரு. வாளொத்தொளிர்வாலெயிறூழின்மருங்கிமைப்ப
நீளொத்துயர்வாலின்விசுமபுநிரமபுமெய்யன
கோளொத்தவனமேனிவிசும்பிருகூறுசெய்த
நாளொத்ததுமேலொளிகீழிருளுற்றஞாலம. (சுரு)

இ-ள். வாள் ஒத்து ஒளிர்வால் எயிறு ஊழின் மருங்கு இமைப்ப - வாளாயுதத்தை யொத்து விளங்காநின்றவெள்ளைப பற்கள வரிசையாகவாயி னிருபுறத்திலும விளங்க, (அதனால்) மேல் ஒளி உற்ற - ஆகாயமெல்லாம பிரகாசமுற்றன, நீளம ஒத்து - சூரியமண்டலத்தளவு நீளஞ்சரியாய், உயர்வாலின - உயர்ந்தவாலால், விசுமபு நிரம்பு மெய்யன் - வானத்தில (ஒளியை) பரப்புகின்ற மேனியுடையவனாகிய சூரியனை, கோள - இராகுவைப் போல விழுங்குதலே, ஒத்த அவன் மேனி - ஒப்பாகிய அவ்வனுமானது திருமேனியால, விசும்பு இருகூறு செய்த நாள் ஒத்தது - விண்ணையிரண்டுபங்கு செய்த காலத்தை யொத்ததாய், கீழ் - வானத்தின கீழ, ஞாலம இருள உற்ற - பூமியெல்லா மிருளடைந்தன. எ-று. (சுரு)

அனுமானது திருமேனியினீளத்தாலும பருமத்தாலும் ஆகாயமிரண்டுபஙகு செய்தாற்போலாகிப புவியெல்லா மிருளாயின. தந்தவரிசையால் ஆகாயமெலலாமொளியாயினவென்பது கருத்து.

க௪. பேழ்வாயொராக்கியுருக்கொடுபெட்பினோங்கிக
கோழ்வாயரியினகுலததாயகொடுஙகூறறுமுட்க
வாழவாயெனககாமிசமாயவருவாயகொலெனறு
நீழ்வாய்விசும்பினறனதுசசிநெருஙகினாள. (௭௰)

இ-ள். (சுரசையென்பாள) அகனற வாயையுடைய ஒரு அரக்கியுருவைககொண்டு அனுமானைத தினன ஆசையாலோங்கி, கொழுப்பு வாயநத வானரகுலததாய, கொடியயமனுமஞ்சவாழ்வாய, எனககாகிய மாமிசமாய (எனதுவாய்ககுள்) வருவாயோவென்று, நெடுமைகொணட ஆகாயததைத் தனதுச்சியால் முட்டி நினறாள். எ-று. (௭௰)

க௫. அக்காலையரககியுமணடமனநதமாகப
புககாலுநிறையாதபுழைபபெருவாயதிறநது
விககாதுவிழுஙகநினறாளதுநோககிவீரன
திககாரவளவாய்சிறிதாமவகைசேணினீணடான. (௭௧)

இ-ள். அப்போது அவ்வரககியு மநந்தமாக அண்டங்கள், புகுந்தாலு நிரமபாத குகையை யொதத பெரியவாயைத் திறந்து, விக்காமல் விழுஙக நினறாள, அனுமான அதைப்பார்ததுத் திக்குக்களைப் பொருநதநிற்கின்ற அசசுரசையினதுவாய் சிறிதாகும் விதம அகலத்துடனுயர்நதான. எ-று. (௭௧)

க௬. நீண்டானுடனேசுருங்காநிமிரவாளவயிறறின
ஊணடானெனவுறறொருயிர்பபுயிராதமுனனா
மீணடானதுகண்டனாவிண்ணுறைவோாகளெமமை
யாணடானவலனெனறலாதூஉயநெடிதாசிசொனனார். (௭௨)

இ-ள். அவ்வாறுயாந்த அனுமான சுருங்கி, நிமிர்வாளாகிய அச்சுரசை வயிற்றில், உணவாகினறே னென்று புகுந்து ஒரு மூச்சு விடுவதற்கு முன்பு, (அவள்மார்பைப்பிளந்து) வந்தான், அதனைப்பார்தத விண்ணுறைவோர்களாகிய தேவர்கள், எம்மை யடிமைகொண்ட அனுமான வல்லனென்று மலர்களைத்தூவி வாழ்த்தினார். எ - று. (௭௨)

க௭. வெங்காநிறபபுணரிவேறேயுமொனறைப
பொங்காகலிபபுனறரபபொலிவதேபோல்
இங்கார்கடததினொனையெனறுவெழுநதாள
அங்காரதாரைபெரிதாலாலமன்னாள. (௭௩)

இ - ள். பொங்கு ஆர்கலிப்புனல் - பொங்குகின்ற கடல் நீர், வேறேயும் - தனக்கு வேறாகவும், வெம்கார் நிறப்புணரி ஒன்றை - வெவ்விய கறுப்பு நிறமுடைய கடலொன்றை, தரப் பொலிவதுபோல் - பெற்றுவிட அக்கடலுக்குமேல் விளங்குத ல்போல, பெரிது ஆலாலம அன்னாள - மிகுந்த விடத்தையொ த்த, அங்காரதாரை - அஙகாரதாரை யென்பாளநினறு, இஙகு என்னை ஆர்கடத்திா என்று எழுந்தாள - இவ்விடததி லென் னை யார் கடந்து செல்லுகின்றீரென் றெழுந்தாள், எ - று.

கடத்திரெனவென்று பாடமாயின யாது காரணத்தால் என்று கூறுக.

கஅ காதக்கடுங்குறிகணைக்கிறுதிகண்ணாள்
பாதச்சிலமபினொலிவேலையொலிபமப
வேதககொழுஞ்சுடரைநாடிநெறிமேனாள்
ஓதத்தினமேவுமதுகைடவரையொத்தாள். (எஎ)

இ - ள். காதககடுங்குறி - காதவழிததூரமாகிய கடுமை யான குறியைத் தெரிந்தறிகின்ற, கணககு இறுதி கண்ணாள் - அளவே முடிவாகப பெற்ற கணகளையுடைய அஙகாரதாரை, பாதச்சிலமபின் ஒலி - தனது பாதநூபுரததினொலி, வேலை ஒலி பம்ப - கடலோசைபோ லொலிகக, வேதககொழும் சுடரை - வேதத்திலுறைகின்ற பரஞ்சுடராகிய திருமாலைப் பொருத, நெறி நாடிமேல் நாள - வழிதேடி முன்னாளில, ஓததநின்மேவு மது கைடவரை ஒததாள் - கடலிற் சென்றமது கைடவரை அவ் வங்காரதாரை யொததாள, எ - று. (எஎ)

கக. நின்றுணிமிர்ந்தலைநெடுங்கடலினீரதன
வன்றாளலம்பமுடிவானமுகடுவவவ
அன்றாயதிறததவனறதையருளோடும
தினறொருததியிவளெனபதுதெரிநதான. (எக)

இ - ள். அலைநெடும் கடலின நீர - அலையையுடைய நெடி யகடலினது புனல, தன்வன்தாள் அலமப - தனது வலியகாலை யலம்பவும், முடிவான்முகடுவவ்வ - தலையண்டமுகடடையவாவ, நிமிர்ந்து நின்றாள் - நிமிர்நது நினறாள், அன்று ஆய்திறத்தவன் - அப்போது ஆய்ந்தறியுந் திறத்தையுடைய அனுமான்,

அறத்தை அருளோடும் - தருமத்தை இரக்கத்தோடும், இவள் ஒருத்தி - இவளொருத்தியே, தின்றாள் என்பது தெரிந்தான் - கெடுத்தாளெனபதை யறிந்தான். எ - று. (எகூ)

உ0. சாகாவரததலைவரிறறிலகமனானை
ஏகாவரககிகுடாகொணடுடனெழுநதான
மாகாலசைபபவடமணணிலுறவாலோ
டாகாயமுற்றகதலிககுவமையானன். (அூ)

இ - ள் சாகாவரத் தலைவரில் திலகம அனானன் - சிரஞ்சீவியாகச சாகாதவரததைப்பெற்ற தலைமைபெற்றோர்களில் திலகத்தையொதத அனுமான, ஏகா - வயிற்றுட்புகுநது, அரக்கி குடாகொண்டு உடன் எழுந்தான் - அரககியினது குடலைப் பிடுங்கிககொண் டுடனே யெழுநது, மாகால் அசைப்ப - பெருங் காற்றுவீச, வடம மண்ணில உறவாலோடு - கயிறு மண்ணில் விழ வாலோடு, ஆகாயம் உற்றகதலிககு உவமை ஆனான் - ஆகாயததிற் பறககினற காற்றாடிக் கொப்பாயினான. எ - று. (அூ)

---

## உ - வது : ஊர்தேடுபடலம்.

———:0:———

## இலங்காபுரியில் பிராட்டியைத் தேடியதைக் கூறுகின்றபாடலம்.

உக. பொனகொண்டிழைத்தமணியைககொடுபொதிநத
மினகொண்டமைததவெயிலைககொடுசமைதத
எனகொணடியற்றியவெனததெரிகிலாத
வன்கொணடலவிடடுமதிமுடடுவனமாடம். (க)

இ - ள். வன்கொண்டல்விட்டு மதிமுட்டுவனமாடம் - வலிமையுடைய மேகமண்டலத்தைக் கடந்து சந்திரமண்டலத்தைத் தீணடுவனவாகிய (அவ்விலங்காபுரியிலுள்ள) மாளிகைகள், பொன்கொண்டு இழைத்து - பொனனைககொண்டு செய்து, மணியைக் கொடுபொதிந்த - இரத்தினங்களைக் கொண்டு பதித்தனபோல, மின்கொண்டு அமைத்த - மின்னலைககொண்டு செய்தனபோல, வெயிலைக கொடுசமைத்த - வெயிலைக்கொண்டு

செய்தனபோல, என் கொண்டு இயற்றிய எனத்தெரிகிலாத - (ஒளிமிகுதியால்) யாதைககொண்டு செய்யப்பட்டன வென்று தெரியாதனவாயுள்ளன. எ - று. (க)

உஉ. நாகாலயஙகளொடுநாகருலகுநதம
பாகாமருஙகுதுயில்வெனனவுயர்பணைப
ஆகாயமஞசவகனமேருவையறுககும
மாகாலவழஙகுசிறுதெனறலவரகினற. (உ)

இ - ள். நாகர் ஆலயஙகளொடு நாகா உலகும - தேவர்களது கோயில்களும அத்தேவருலகும, தமபாகு ஆர மருஙகு துயில்வு என்ன - தமதொருபஙகாகப பொருந்திய வோரிடமாகத்தங்குதலையுடையவென்று சொல்லுமபடி, உயர்பணைப-(அம் மாளிகைகள்) மிகுந்த அழகுடையனவாய, ஆகாயம அஞ்ச அகல்மேருவை அறுக்கும் - ஆகாயமஞ்சுமபடி யுயர்ந்த மேருகிரியையும வருத்தும, மாகால - பெருங்காற்று, வழஙகு சிறு தென்றல்வரகினற-இனிதாயவீசுகின்ற இளந்தென்றற்காற்றுப் போலவர அசையாது நினறன. எ - று. (உ)

தேவர்கோயிலும அவருலகும் மாளிகைகளின் ஒருபாகமாகிய விடமென்றுசொல்லும்படி அமமாளிகைகள் உயாந்தன வென்பது கருத்து.

உங. மாசாரினமின்கொடிமடக்கினரடுககி
மீகாரமெஙகணுநறுநதுகளவிளககி
ஆகாயகஙகையினையங்கையினினள்ளிப
பாகாயசெஞ்சொலவர்வீசுபடுகாரம. (ங)

இ - ள். பாகு ஆயசெஞசொலவர் - தேன்பாகாகிய செவ்விய சொல்லையுடைய சிலதியர், மாகாரினமின்கொடி மடக்கினர் அடுககி - கறுபபுடைய மேகங்களிலுள்ள மின்னற்கொடிகளை மடக்கினராய்த (தொடைப்பம்போலச்) சேர்த்தடுக்கி, மீ ஆகாரம் எங்கணும் நறும்துகள் விளக்கி - மேலிடஙகளெவ்விடத்திலுஞ் சிதறியகளபப்புழுதியைக கூட்டியொதுக்கி, ஆகாய கங்கையினை அங்கையினின அள்ளி - ஆகாயகஙகையை அழகிய கையாலவாரி, வீசுபடுகாா - தெளிக்கின்ற தெளிநீர் என்க. எ – று. காரம் - முதற்குறை. (ங)

௨௪. பஞ்சியூட்டியபாடலிசைக்கிண்கிணிபபதுமச
செஞ்செவிச்செழுமபவளத்தினகொழுஞ்சுடாசிதறி
மஞ்சினஞ்சன நிறமறைத்தரக்கியாவடித்த
அஞ்சிலோதியோடுவமையவவாககுறுமுவமை. (௫

இ - ள். பஞ்சி ஊட்டியபாடடு இசைக்கிண்கிணி - செம்பஞ்சுக்குழம்பூட்டிய பாடலுக்கிசைந்த சதங்கை களையணிந்த, பதுமச்செம் செவிச்செழும் பவளத்தின்கொழுமசுடர்சிதறி - கால்களிலுள்ள செவ்வையாகிய அழகுடைய செவந்தவிரல்களினது கொழுமையான சோதிசிதறி, மஞ்சின ஆஞ்சனநிற மறைத்து - மேகஙகளினது கருமை நிறமறைககப்பட்டு, அவர்க்கு உறும உவமை - அரககியாாகளுக குவமையான அமமேகஙகள், அரக்கியர்வடித்த அமசில் ஓதியோடு உவமையா - அவ்வரக்கியாது சீவிவிட்ட அழகிய சடைபபிலலை யணிந்த செம்மயிரோடொப்பாயின. எ - று. (௫)

அரககியர் சரீரத்திற்குவமையான மேகங்கள் செம் பஞ்சுக்குழமபு சிதறித்தமது கருமைநிறம மறைககபபட்டு அவ்வரக்கியாது செவநத மயிரோடொபபாயின வென்பதுகருதது.

(௨௫) குழலும வீணையும் யாழுமென றினையனகுழைய
மழலைமென மொழிகிளிகளிருநத ளிக்கின றமகளிா
சுழலுநல்நெடுநட்டமணிச்சுவாதொறுந்தவனறும
நிழலுநதம்மையுமெயமமைமதினறறிவருநிலைய (௬)

இ-ள். (மாடங்கள்) பொள்ளாஙகுழலும் வீணையும் யாழுமென்று சொலலப்படுகின்ற இவைகள் தோற்க, மழலையாகிய மெல்லிய சொற்களைக் கிளிப்பிள்ளைகளுக்கு அவற்றின பக்கத்திலிருந்து சொல்லிககொடுககின்ற மாதாகளுடைய, சுழலுகின்ற நல்லநெடிய விசாலமுள்ள இரத்தினத்தாற் செய்த சுவர்களிலெல்லாம் பதிந்து தோனறுகின்ற, பிரதி பிம்பததையும் அம்மகளிரையும உண்மைபாாதது அறிவதறகரிதான நிலைமையையுடையன. எ-று. (௬)

௨௬. இனையமாடஙகளிநதிரறகமைவாவெடுதத
மனையின்மாடசியவெனனினசசொலலுமாசண்ணும
அனையதாமெனினாககாதநதிருவுககுமளவை
நினையலாமனறியுவமையுமினைதாநிறகும். (௭)

இ-ள். இனைய மாடங்கள் - இத்தன்மையவாகிய மாளிகைகள், இந்திரற்கு அமைவர எடுத்த மனையின் - இந்திரனுக்குப் பொருந்தக்கட்டிய மாளிகையைப்போல, மாட்சிய எனின் அச்சொல்லும் மாசுஉணனும் - பெருமை யுடையனவென்று சொலலின் அச்சொலலுங்குற்றப்படும், அனையது ஆம் எனின் - அவ்வாறு சொல்லுவ தமையுமென்றால், அரக்கர்தம் இருவுக்கும் அளவை நினையலாம் - அரக்கரது செல்வத்துக்கு மெல்லையை நினைக்கலாம், (நினைக்கலாகாதாகலின) அன்றி உவமையும் அன்னதாகிறகும் - அன்றியுவமையு மந்நினைத்தலளவாய் நிற்கும். எ-று. (எ)

இந்திரனது செல்வத்திற்களவை நினையலாம் அரக்கரது செல்வத்திற் களவை நினையலாகாதென்பது கருத்து.

உஎ. மணிகளெத் துணைபெரியவுமாற் றிருமார்பின
அணியுங் காசினுக் கன்றன வுளவென லரிதால
தணியு நன்னகர்த் திருமனை தெய்வமாத் தச்சன
துணிவின் வந்தனன் றொட்டழ கிழைத்தவத் தொழில்கள். (அ)

இ-ள். மணிகள் எத்துணை பெரியவும் மால் திருமார்பில் - எவ்வளவு பெரியரத்நங்களுந் திருமாலினது திருமார்பில், அணியும் காசினுக்கு அகன்றன உள எனல் அரிது - தரிக்கின்றகௌத்துவமணிக்கதிகமானவைகளாக வுள்ளனவென்றுசொல்லுதலில்லை, (அதுபோல) நல்நகரத்தினியும் திருமனை தெய்வமாத்தச்சன் - இந்தநல்லநகரில நெருங்குகின்ற அழகிய வீடுகளுக்குத் தெய்வத்தன்மை பொருந்திய பெருமையுடைய தச்சனாகிய விச்சுவகன்மா, துணிவின வந்தனன தொட்டு அழகு இழைத்த அத்தொழில்கள் - (இராவணன் மகிழச் செயயலா மென்னும்) துணிவோடுவந்து தன்கையாற் றொட்டழகுபெறச் செயதவத் தொழில்களெங்குமில்லை. எ-று. (அ)

உஅ. வாழுமன்னுயிர்யாவையுமொருவழிவாழ
ஊழிநாயகன் றிருவயிற்றுத்துள திவ்வூர்
ஆழியண்டத்தினருக்கன்றனலங்குமேதாப்புரவி
ஏழுமல்லனவீண்டுளகுதிரையுமெல்லாம். (கூ)

இ-ள் வாழும்மன்னுயிராவும ஒருவழிவாழ - வாழுகின்ற நிலைபெறற உயிர்களெல்லா மொருமுறையாக வேரிடத்

தில் வாழ்வதற்கு, இவவூர்-இந்நகரம், ஊழிநாயகன் திருவயிறு ஒத்துஉள்ளது - அழியாமுதல வனுகிய திருமாலினது திருவுத ரத்தை யொத்துள்ளது, ஈணடுஉளள குதிரையும எல்லாம் - இங்குள்ள வெலலாக்குதிரைகளும, ஆழி அண்டததின் அருக் கன்தன அலங்குதோபபுரவி ஏழும - வடடவடிவாகிய ஆகாய த்திற சூரியனது சஞ்சரிககினற தேர்ககுதிரைக ளேழையும் போல் வனவாயினும், அலலன - அவைகளலலன. எ-று. (கூ)

உக. மரமடங்கலுஙகறபகமனையெலாஙகனகம
அரமடநதையாசிலதியரரககியாககமரா
உரமடங்கிவந்தழையரரயுழல்பவரொருவர்
தரமடஙகுவதனறிதுதவஞ்செயததவமால. (௨0)

இ - ள் (ஆகலின்) இது - இச்செல்வம், ஒருவர்தரம் அட ங்குவது அன்று தவம செயததவம் - ஒருவர்வசமாயக கூடி யிருப்பதன்று தவஞ்செய்த தவததாலெனபது (க0)

ங0. போரியைநதனதோறறவெனறிகழ்ச்சிறபுறமபோய்
நேரியனறவனறிசைதொறுநின்றமாநிறக
ஆரியநதனியைஙகரககளிறுமோராழிச
சூரியனறனித்தேருமேயிநநகாதொகாத. (கக)

இ - ள். போரஇயைந்தன தோற்ற என்று இகழ்தலில் புற ம்போய் - யுத்தத்திற் 'குடனபட்டனவாயப் பின்பு தோறறன வென்று இராவணனிகழ்தலால துாரமபோய், நேர்இயனறவன் திசைதொறும் நின்ற மாநிறக - தமக்குச்சரியாயமைந்த பலமு டைய எடடுததிக்குககளிலும நின்ற யானைகளநிற்க, ஆரியம் - அழகும், தனி - ஒப்பின்மையுமுடைய, ஐஙகரககளிறும-ஐந்து கரஙகளையுடைய கணபதியாகிய யானையும், ஓராழி சூரியன் த னித்தேருமே - ஒற்றையுருளையையுடைய ஒப்பில்லாத சூரியன துதேருமே, இநநகா தொகாத - இபபட்டினததி லிலலாதன. ஏனை யானைகளும தேர்களும இந்நகரிலுள்ளன வெனபது கரு த்து. எ-று. (கக)

ஙக. மரகததநிலுமறறுளமணியினுமவனைநத
குரகதத்தடநதேரினமவைபயில்கொட்டில
இரவிவெள்கவினமிமைக்கினறவியறகையவெனறுல்
கரகமொககுமானனனெடுநதுறககமிநநகாககு. (கசா)

இ - ள், இந்நகர்க்கு இந்தப் பட்டினத்திற்கு, நல் நெடும துறக்கம் - நல்ல இன்பம் நீடிய சுவர்க்கம், நரகம் ஒக்கும் - நரகத்தையொக்கும். (கச)

௫உ. திருகுறுஞ்சினத் தரக்கருங் கருநிறந் தீர்ந்தார
அருகுபோகின்ற திங்களு மறுவறறதழகைப
பருகுமிந்நகா தன்னொளிபாய் தலிறபசும்பொன
உருகுகின்றது போன்றுள துலகுசூழுவரி. (சரு)

இ - ள். அழகைப்பருகும் இந்நகர் தன் ஒளிபாய்தலின் - அழகைக் கொள்ளுகின்ற இந்தப்பட்டினத்தினது நெருங்கிய வொளிபரவுதலால், திருகுறும் சினத்து அரக்கரும் கருநிறம் தீர்ந்தார் - முறுகுகின்ற கோவத்தையுடைய இராக்கதருந் தமது கரிய நிறத்தை நீங்கினார், அருகுபோகின்ற திங்களும் மறுவு அற்றது - அந்நகருக்கருகு செல்லுகின்ற மதியுங் களங்கத்தை நீங்கிற்று, உலகுசூழ் உவரி - உலகைச்சூழ்ந்தகடல், பசும்பொன் உருகுகின்றது போன்று உளது - பசியபொன் னுருகுகின்றதையொத்துள்ளது. எ - று. (கரு)

௫௩. அண்டமுற்றவும்வீங்கிருள் கற்றுநின்றலரி
கண்டவாற்றினிக் கடிநகர் நெடுமனைகதிர்கள்
உண்டவாற்றினென் றுரைப்பரி தொப்பிடிற்றனமுன
விண்டவாயசிறுமின்மினி யென்னவும் விளங்கான. (சசு)

இ - ள். அண்டமுற்றவும் வீங்கு இருள் - அண்டமுழுதும் நிரம்புகின்ற விருளை, நின்று - நிலைபெற்று, அகற்றும் அலரி - ஓட்டுகின்ற சூரியனை, கண்ட ஆற்றின் - செயகின்றமுறைமையோடு, இக்கடிநகர் நெடுமனைக்கதிர்கள் உண்ட ஆற்றின் - காவல்பொருந்திய இந்தநகரிலுள்ள வுயர்ந்தவீடுகளி னொளிகள் போக்கிய முறைமையினை, ஒன்று உரைப்பு அரிது - ஒருபடியாகவுஞ் சொல்லுதலுக்கரிது, ஒப்பு இடில் - உவமை சொன்னால், தனமுன் விண்டவாயச்சிறு மின் மினி என்னவும் விளங்கான - (அச்சூரியன்) தனக்குமுன னொளியை விடுகின்ற வாயையுடைய சிறியமின் மினியென்று சொல்லவும் விளங்கானாயினன். எ - று (கசு)

௫௪. நீருமவையமுநெருப்புமேனிமிர் நெடுங்காலும
வாரிவானமுமவழுங்கலவாகுந்தம்வளர்ச்சி
ஊரினிந்நெடுங்கோபுரத் தயர்சிகண்டுணர்ந்தால
மேருவென்னனம் விளாக்குமோ முழுமுற்றும்வெள்கி. (௨௦)

இ-ள். நீரும - அப்பும், வையமும-பிருதிவும், நெருப்பும்-தேயுவும், மேல் நிமிர் நெடும் காலும - மேல நிமிர்ந்து உலாவுகின்ற நெடியகாற்றும, வாரி-வருதற் கிடமாகிய, வானமும்-ஆகாயமும், தம்வளாசசி - தமதுயர்வால், வழஙகல ஆகும்-விளங்குவன வல்லவாகிய தன்மையால், மேரு - மேருமலை, ஊரின் இநநெடும கோபுரதது உயாச்சிகண்டு-இப்பட்டினததிலுள்ள வுயாந்த இந்தககோபுரததினுயாவைப் பாாதது, உணர்ந்தால் - தனனுயர்வையும பாாததால, முழுமுற்றும் வெள்கி-மிகவும் நாணி, எஙஙனம விளாககுமோ-உடம்பெலலா மெவ்வாறு விளர்க்குமோ. எ-று. (௨௦)

௩௫. பாடுவார்பலரெனனினமறறவரினுமபலராவ
ஆடுவாரகண்மறறவரினுமபலருளாரமைதி
கூடுவாரிடையினனியஙகொட்டுவாரமுட்டில
வீடுகாணகுறுநதேவாரலவிழுநடஙகாணபாா. (௨௫)

இ-ள். பாடுவார் பலர் என்னில் - இசை பாடுவார்கள் பலரென்றால், அவரினும-அபபாடுவார்களினும், ஆடுவார்கள்பலர்-ஆடுவார்கள் பலராவர், அமைதி கூடுவார இடை - சமையமுளதாகிப் பார்க்கவந்த அரககாமுனபு, இன இயம கொட்டுவார்-இனியவாததியஙகளை யியமபுவோர்கள, அவரினும்பலர் உளர்-அவ்வாடுவாரகளினும பலருள்ளார், விழுநடம் காண்பார்- சிறந்த நடனத்தைப பாாககிறவாகள், முட்டு இல - குறைவில்லாமல் தமது தொழிலைச்செய்து, வீடுகாண்குறும தேவர் - விடுதலைப்பெற்ற தேவராவார்கள். எ-று. (௨௫)

௩௬. இழைபுமாலையுமாடையுஞசாநதமுமேநதி
உழையரெனனநினறுசயுவநதியஙகளொருவா
விழையுமபோகமேயிஙகிதுவாய்கொணடுவிளமபின
குழையுநெஞசினனினையினுமாசெனறுகொளளும. (௨௭)

இ-ள். ஒருவர் விழையும் போகமே - ஒருவர்விரும்பும்போகமோ, இஙகு இதுவாய கொண்டுவிளமபில - இவ்வூரிலுள்ள இப்போகத்தை வாயிறகொண்டு சொலலின, குழையும் - அவ்வாய்குழைந்துபோகும், நெஞ்சினல் நினையினுமமாசு என்று கொள்ளும் - மனததால்நினைபபினும் அமமனந் தனக்குக்குற்றமுண்டாமெனறு கொள்ளும. (௨௭)

௩௭. பொன்னின்மால்வரைமேன்மணிபொழிந்தனனபொருந்தி
உன்னுநான்முகத்தொருவனின்றூழ்முறையுரைக்கப
பன்னிநாளபலபணியுழன்றரிதினிற்படைத்தான
சொன்னவானவர்தச்சனாமிந்நகர்துதிப்பான. (௨௮)

இ-ள். சொன்ன வானவர் தச்சன - சிறப்பித்துச்சொல்லப்பட்ட தேவர் தச்சனாகிய விசுவகன்மா, நாம் இந்நகர் துதிப்பான் - நாமிந்நகரைத்துதிக்கும பொருட்டு, பொன்னின் மால் வரைமேல் - பொன்னாலாகிய பெரிய மேருகிரிமேல், மணிபொழிந்தனன் - இரத்தினங்களைப பதித்தவனைப்போல, பொருந்தி - பொன்னாலாகிய மாளிகைகளினமேல இரத்தினங்களைப்பதித்து, உன்னு நானமுகத்து ஒருவன நின்று ஊழ்முறை உரைக்க - எல்லாரும் நினைக்கின்ற நான்கு முகங்களையுடைய பிரமன் நின்று வரிசைக்கிரமங்களைச் சொல்ல, பன்னி - இராவணனாலேவப்பட்டு, பலநாள பணி உழன்று அரிதினில் படைத்தான் - அநேககாலமிததொழிலில வருந்தியரிதாயச செயதான. எ-று. (௨௮)

௩௮. எழுந்தனர்திரிந்துழைக்குமிடத்தாயினுங்காற்றம
கிழிந்திலதண்டமென்னுமித்தனையேயளப்பதல்லால
அழுந்திநின்றுவதென்னேயலருளோனாதியாக
ஒழிந்தபேருயிர்களெல்லாமரக்கருக்குறையுமபோதா. (௩௪)

இ-ள். அழுந்தி நின்று ஆவது என்னே - உய்த்துணர்தலாலாவது யாது, அலருளோன ஆதியாக - தாமரை மலரிலவதியும பிரமன முதலாக, ஒழிந்தபேர உயிர்களெல்லாம - மற்றமிருந்த வுயிர்களெல்லாம, அரக்கருக்கு உறையும போதா - இராக்கதர்களுக்கு உறையென்னுங கணக்கிடவுமபற்ற, (௩௪)

௩௯. காயத்தாற்பெரியார்வீரங்கணக்கிலருலகங்கல்லும்
ஆயத்தார்வரத்தின்றன்மையளவற்றார்திறத்தேற்ற
மாயத்தாரங்காகெங்கேனுமவரம்புமுண்டாமேமற்றோர்
தேயத்தார்தேயஞ்சேறலதெருவிலோர்தெருவின்சேறல. (௩௫)

இ-ள். காயத்தால் பெரியா-சரீரத்தாலும பெரியர், வீரம் கணக்கிலர் - வீரத்தாலுமளவில்லாதவர், உலகம் கல்லும் ஆயத்தார்-உலகத்தைத தோண்டும்படியான உயரமுடையார், வரத்தின் தன்மை அளவு அற்றார் - வரத்தின தன்மையா லளவில்

லாதவர், அறிதல் தேற்றுமாயத்தார்-எவரும் அறியாதமாயை யுடையார், நகர்க்கு எங்கேனும் வரம்பும் உண்டாமே - இதத ன்மையார் வதியும் நகர்கரு எவ்வகையாலாயினு மெல்லையுமு ண்டாமோ, (உண்டாகாதாயினும) தெருவிலோர் தெருவின் சேறல் - இவ்வூரிலுள்ள ஒருவீதியிலுள்ளோர் மறறொரு வீதிக் குச் செல்லுதல், தேயத்தார்மற்றோ தேயம்சேறல - ஒருதேய த்திலுள்ளார் மற்றொரு தேயததிற்குச் செலலுதலே யொகக்கும் எ - று. (௩௫)

௪௦. வளளிநுணமருஙகுலனனவானவாமகளிருளளம
தளருறபபாணிதளளாநடமபுரிதடஙகணமாதா
வெளளிவெணமுறுவறோனறமடநதையாவெளகுகினறா
களளிசையரக்காமாதாகளியிடுகுரவைகாணபாா. (௩௮)

இ - ள். வள்ளிஅன்னநுண மருஙகுல் வானவர் மகளிர்-கொடி போன்றநுண்ணிய இடையை யுடையதெயவப்பெணகள், பா ணிதள்ளாநடம் - இசைப்பாட்டிற்குத் தவிராத நடனத்தைப் ரிக்க, உளளம் தள்ளுற - மனந்தளளவநது, புரிதடஙகண் - பார்க்கு ்தைச்செய்கினற விசாலமுடைய கண்களும், மாதா - விருப்பத ர் ்ள்ளி வெண்முறுவல - வெள்ளிபோனற வெண் அழகிய, வெ-றகளும, தோனற - விளஙக, மடநதையர் - சிறு மையுடைய ்ய, கள் இசை அரககா மாதா - பொயசொல்லுகி பெணகளாகி ா மகளிா, களி இடுகுரவை காணபாா - கள்மயக் ன்ற இராக்கத ற குரவைககூததைப்பார்தது, வெளகுகின்றார்- கத்தா லாடுகிற எ - று. (௩௮)
நாணுகின்றார்

௪௧. எல ்யிலிமிரிருட்குறையுமவவிருள
யகிலவினவெணமுறியுஙகளவன
கலவி யயபகைஙெனப்பொருவபோனறன
புல லிகைமலாதொறுமபொதிநதவணடெ (௫௮)
மது

மல்லிகைப்பூக்கள் தோறும் நெரு வண்டுக
இ - ள். அவ்விராத்திரியில் நெருங்கிய விருளின் ்ண்டஙக ளெலலாம், ிருளைப்போககிய சநதிரனது வெண்மையால் துண் ளும், அவ ்ள்ளப்படிவங் கொண்டனவாய, தமக்கடுத்தபகை டங்களும் கு ாலப் போர்செய்வன போனறன. எ - று. (௫௮)
யுடையுத்தை

௪௨. ஏழுலகில்வாழுமுயிர்யாவையுமெதிர்ந்தால்
ஊழின்முறையன்றியுடனேபுகுதலுண்டே
வாழியரியங்குவழியீதெனவகுத்தால்
ஆழியுளவேழினளவன்றுபகையென்றான். (௯௭)

இ-ள். ஏழ உலகில வாழும் உயிர யாவையும் எதிர்ந்தால்- ஏழுலகங்களிலும் வாழுகின்ற வுயிர்களெல்லா மொருசேர வந்தாலும், ஊழின்முறை அன்றி உடனே புகுதல உண்டு-முறையினையுடைய வரிசையாலன்றி எல்லாரு மொருசேரச் செல்லுதலுக்கு வாயிலகலமுண்டு, வாழியர் இயங்கு வழி ஈது எனவகுத்தால் - வாழுமவர்கள் சஞ்சரிக்கின்ற வழியின் தன்மை யிது வென்று சொன்னால், பகை - நமக்குப்பகை, உள - உள்ளன வாகிய, ஆழி ஏழின் அளவு அன்று என்றான் - கடல்களேழின ளவன்றென்று நினைந்தான் அநுமான். எ-று (௯௭)

இலங்கைமாதேவியைச்சொல்லியது.

௪௩. அஞ்சுவண்ணத்திலுடையுடுத்தாளரவெல்லாம்
அஞ்சுவண்ணத்தின்வேகமிகுத்தாளருளில்லாள்
அஞ்சுவண்ணத்திலுத்தரியத்தாளலையாரும்
அஞ்சுவண்ணத்தின்முத்தொளிராரத்தணிகொண்டாள். (௭௯)

இ-ள். அஞ்சுவண்ணத்தின் ஆடை உடுத்தாள் - ஐந்து நிறமுள்ள ஆடை தரித்தாள், அரவு எல்லாம் அஞ்சு உவணத்தின் வேகம் மிகுத்தாள் -- சாப்பங்களெல்லாமஞ்சுமபடியான கருடனைப்போல் வேகத்தில மேம்பட்டாள், அருள் இல்லாள்-இரக்கமில்லாள், அம்சுவணத்தின் உத்தரியத்தாள் - அழகிய சுவர்ணத்தாலாகிய உத்தரியமுடையாள், அலை ஆரும் - அலைகள் நிறைந்த, அம் - அழகிய, சு - நலல, வள் - வலிய, நத்தின்முத்து ஒளிர் ஆரத்து அணிகொண்டாள் - சங்கத்தினது முத்துக்களைக்கோத்த விளங்குகின்ற மாலையை யணிந்தாள். எ-று. ()

௪௪. சிந்தாரத்தின்செச்சையணிந்தாள்தெளிநூல்யாழ்
அந்தாரத்தினோவருசொல்லாளறைதும்பி
கந்தாரத்தினின்னிசைபாடிக்களிகூரும்
மந்தாரத்தின்மாலையலம்புமகுடத்தாள். (௮௦)

இ-ள். சிந்து ஆரத்தின் செச்சை அணிந்தாள் - மணம் வீசுகின்ற சந்தனத்தினது குழம்பைப்பூசினாள், தெளிநூல் யாழ்

அம்தாரத்தின் நேர்வரு சொல்லாள் - தெளிந்த இசைநூலின் படியாகிய வீணையினதழகிய தாரமென்னு நரம்பினை யொத்த சொல்லுடையாள, அறைதுமபி கந்தாரத்தின் இன் இசைபாடிக்களிகூரும் - சிறபபிததுச சொலலுகின்ற வண்டுகள இசைப்பாட்டுபோல வின்னிசையைப் பாடியுவககினற, மந்தாரத்தின் மாலை அலமபு மகுடததாள் - மந்தாரப்பூவாலாகிய மாலையசைகின்ற முடியுடையாள். எ - று. (அ0

௬௫. வஞசஙகொணடானவானரனலலனவருகாலன
துஞசுஙகணடாலெனனையிவனசூழதிரையாழி
நஞசஙகொணடகணணுதலைபபோனகுகினறான
நெஞசஙகணடேகலலெனநினறேநினைவுறறாள. (அ

இ-ள். இவன வஞ்சம கொண்டான - இவன வஞ்சனை கொணடிருககினறான, வானரன் அலலன - வானரனல்லன, வருகாலன - இறுதியில் வருமயமனும், எனனை - எனனை, கண்டால் துஞசும - பார்ததாலிறப்பான, சூழ்திரை ஆழி நஞ்சம கொண்ட கண்ணுதலைபபோல நகுகினறான - உலகைச சூழ்ந்த அலையையுடைய கடலிலுணடாகிய விடத்தைக கண்டத்திற கொண்ட சிவனைப்போல விளஙகுகினறானெனறு, நெஞசம் கண்டு கல என நினறு நினைவுற்றாள - அனுமானுடைய மனவலியைப்பார்தது மலைபோல நினறு நினைநதாள. எ-று. (அசு)

௬௬. தடிததாமெனனதனனெதிர்செலலுநதழலவேலை
கடிததானாகமவிணணினமுரிககுஙகருளனபோல
ஒடிததானகையாலுமபருவபபவுயாகாலம
பிடித்தானெஞசுந்துணனெனவெணணமபிழையாதாள.

இ-ள். தடித்து ஆம என்னத்தன் எதிர செலலும் தழல் வேலை - மின்னலொப்பாமென்று சொல்லுமபடி தனக்கெதிர் வருகின்ற நெருபபுமயமான அசசூலத்தை, நாகம-சர்ப்பத்தை, கடித்தான்-வாயாற் கவ்வி, விண்ணில முரிககும்கருளன்போல்-ஆகாயத்திற் சென்று காலால் முரிக்கின்ற கருடனைப்போல், உம்பர் உவப்ப - தேவருவப்ப, கையால் ஒடித்தான் - தனது கையாலொடித்தான், உயர்காலம் பிடிததாள் - அச்சூலத்தை நெடுய

காலங் கைக்கொண்டிருந்தவவள், நெஞ்சம் துணுணென - மனந் திடுக்கென்று நடுங்கவும், எண்ணம் பிழையாதாள் - தன்னினைவு பிழையாது. எ-று. (அஅ)

சஎ. மொய்ம்மணிமாடமூதூர் முழுதிருளகற்றுந்தானே
மெய்ம்மையேயுணரினாணாமிகையெனவிலங்கிப்போனான்
இம்மதிலிலங்கைநாயகனெய்துமேற்றனபாலெய்து
மின்மினியல்லனோவவ்வெயிற்கதிர்வேந்தனென்றான். (கூஅ)

இ-ள். மொய்மணிமாடமூதூர்தானே - ஒளி மொய்த்தஇரத் தினம் பதித்தமாடங்களையுடைய இம்மூதூர்தானே, முழுதும் இருள் அகற்றும் - இருள்களையெல்லாம் போக்குகின்ற, மெய் மை உணரின் - உண்மையையறியின், நாண ஆம் மிகை எனவில ங்கிப் போனான் - வெட்கமாகுமெனறுந் தான் இலங்கைக்கு வேண்டாதமிகையென றுமொதுங்கிச் சென்ற, அவ்வெயில கதிர் வேந்தன் - அக்கிரணங்களையுடைய சூரியன், இமமதில இலங் கைநாயகன் எய்துமேல் - மதிலையுடைய இவ்விலங்கை மத் தியில் வருவானாயின், தனபாலஎய்து மின்மினி அல்லனோ என றான் - தனக்கு முன்பு வருகின்ற மின்மினியல்லனோவென்றான் அனுமான். எ-று (கூஅ)

சஅ. பெரியநாளொளிகொணாறுவித்தமணிப்பித்திப்பத்தி
சொரியுமாநிழல்களாங்குச்சுற்றலாற்காலின்றோன்றல்
கரியனாய்வெளியனாகிச்செய்யனாய்க்காட்டுங்காண்டற்
கரியனாய்வெளியனாய்த்தன்னகத்துறையழகனேபோல. (கoஉ)

இ-ள். பெரியநாள ஒளிகொளநாறுவித மணிப்பித்திப்பத் தி - பெரியநக்ஷத்திரம்போல வொளியைக் கொண்டபலவிதரத் நங்களைப் பதித்த சுவர்வரிசை, சொரியும மாநிழல்கள் ஆங்குச் சுற்றலால் காலின் தோன்றல் - வீசுகின்ற பெருமைபொருந்திய நிழல்கள் அவ்விடமெல்லாஞ் சுழலுதலால வாயு புத்திரனாகிய அனுமான், காண்டற்கு அரியனாய - பிரதி கூலர் பார்த்தலுக் கரியனாய், எளியனாய் - அனுகூலர் பார்த்தலுக்கெளியனாய், தன் அகத்து உறை அழகன்போல் - தனதகத்துறைகின்ற ஸ்ரீராமபி ரான் முத்தொழிலுக்குஞ் செவப்புக் கறுப்பு வெளுப்பு யென் னுமூன்றுநிறங் கொள்ளுதல்போல, கரியனாய் - மரகதத்தின்

சோதி படுமிடத்திற் கருநிறமுடையவனாகி, வெளியனாகி - வயிரத்தின் சோதிபடுமிடத்தில வெண்ணிறமுடையனாகி, செய்யனாய் - மாணிக்கத்தின்சோதி படுமிடத்தில செந்நிறமுடையனாகி, காட்டும - தன்னைத்தோன்றச்செயவான் எ-று (௧௦௨)

நானாவிதமணியாவன - மரகதமுதலியரத்நங்கள்

கும்பகருணனைச் கூறியது.

௪௯. தடைபுகுமந்திரந்தகைந்தநாகம்போல
இடைபுகலரியதோருறக்கமெய்தினான
கடையுகமுடிவெனுங்காலம்பார்த்தயல
புடைபெயராநெடும்புணரிபோலவே. (௧௨௧)

இ-ள். தடை புகுமந்திரம தகைந்த நாகம்போல - தடை செய்வதாகிய மந்திரத்தாற் கட்டுப்பட்ட சாப்பத்தைப்போல, இடை புகல அரியது ஓர் உறக்கம எயதினான் - நடுவே விழித்து வருதலில்லாததொப்பில்லாதநித்திரையையடைந்தான்,(௧௨௧)

௫௦. அவித்தநின்றெவனாயினுமாகவென்றங்கை
கவித்துநீங்கிடச்சிலபகலென்பதுகருதாச
செவிக்கதுதேனெனவிராகவன்புகழினைத்திருத்தும
கவிக்குநாயகனனையவனுறையுளைக்கடந்தான. (௧௩௨)

இ-ள். அவித்து நின்று எவன ஆயினும ஆகஎன்று-கோவத்தை யடக்கி நின்று எவனாயினுமாகவென்று, அங்கைகவித்து-தனதழகிய கையை யமைத்து, நீங்கிடச் சிலபகல என்பது கருதா - இவன் மரிக்கவினுஞ் சிலநாளேயுள்ளன வென்பதை நினைந்து, (௧௩௨)

௫௧. மணிகொள்வாயிலுட்சாளரத்தாள்களின்மலரில
கணிகொளாத்திறத்தாலினும்புகையினுங்கலந்தும
நுணுகுமவீங்குமற்றவனிலையாவரோநுவலவார
அணுவின்மேருவினாழிபானெனச்செலுமனுமன. (௧௩௪)

இ-ள். ஆழியான என - திருவாழியையுடைய திருமாலைப் போல, அணுவின மேருவின செலலும் அனுமன்-அணுவினைப் போலச்சிறுத்தும் மேருவினைப்போலப் பருத்துயர்ந்துஞ் செல்லுகின்ற அனுமான், மணி கொள்வாயிலுள் - மணி கட்டிய வாயில்களுள்ளும், சாளரத்தாள்களில் - சாளரப் பூட்டுக்களி

லும், கண்ணிகொள்-மாலைகட்டிய, மலரின் - பூக்களினது, நாளத்தில் - தண்டுகளிலும், காலினும்புகையினும் கலக்கும்-காற்றினைப்போலவும் புகையினைப்போலவுஞ் சேர்வான், நுணுகும் வீங்கும் அவன நிலையாவா நுவலவாா - ஓரிடத்தில் நுண்மையாகின்ற ஓரிடத்தில் பருக்கின்ற அவ்வனுமான றன்மையை யாவரறிந்துசொல்லுவார். எ-று. (௧௩௪)

விபீடணனுழைவானதிருமாளிகையிற்சென்றதைச்சொல்லியது.

௫௨. ஏந்தலிவ்வகையெவ்வழிமருங்கினுமெய்திக்
காந்தண்மெல்விரன்மடந்தையர்யாரையுங்காண்பான்
வேந்தர்வேதியர்மேலுளோர்கீழுளோர்விரும்பப்
போந்தபுண்ணியன்கண்ணகன்கோயிலுட்புக்கான் (௧௩௫)

இ-ள். மேலுளோர் கீழுளோர் விரும்ப-மேலுலகத்தாருங் கீழுலகத்தாரும் வேண்ட, போந்த புண்ணியன் கண் அகன் கோயிலுள் புக்கான-பிறந்த புண்ணியனாகிய விபீடணனுடைய இடமகன்றமனை யுட்போனான். (௧௩௫)

விபீடணுழ்வானைக்கண்டதைக்கூறியது.

௫௩. பளிக்குவேதிகைப்பவளத்தின்கூடத்திற்பசுந்தேன்
துளிக்குங்கற்பகப்பந்தரிற்கருநிறத்தோரை
வெளித்துவைகுவதரிதெனவவ்வுருமேவி
ஒளித்துவாழ்கின்றதருமமன்னானையுற்றான். (௧௩௬)

இ-ள். பளிக்கு வேதிகை - பளிங்குக்கற்களாற் செய்ததிண்ணைகளிலும, பவளத்தின் கூடத்தில - பவளத்தாலாகிய கூடங்களிலும், பசுந்தேன துளிக்கும கற்பகப் பந்தரில் - பசியதேனைத் துளிக்கின்ற கற்பகப்பந்தல்களிலும வதிகின்ற, கருநிறத்தோரை - கரியநிறத்தையுடைய அரக்கர்களுள், வெளித்து வைகுவது அரிதென அவ்வுரு மேவி - வெண்ணிறங்கொண்டு வைகுவது கூடாதென்று கருதி அவ்வரக்கரது கரியநிறத்தைக் கொண்டு, ஒளித்து வாழ்கின்ற தருமம அன்னானை உற்றான்- மறைந்துவதிகின்ற தருமத்தையொத்தவிபீடணனைக்கண்டான். எ - று (௧௩௬)

௫௪. தனிக்கடக்களிற்றனையொருதுணையிலானருய
பனிக்கடற்பெருங்கடவுடன்பரிபவந்துடைப்பான்
இனிக்கடப்பதென்றேழ்கடல்கிடந்தவெத்திசைத்தான்
கணிக்கடற்கதிர்தொடாதவனகழியைக்கண்டான். (௧௩௭)

இ - ள். தனிக்கடக்களிறுஎன ஒருதுணைஇல்லான் - ஒப்பற்ற மதயானையையொத்த வொருதுணையுமில்லாது, கடல்கதிர்- கடலிற்றோன்றுகின்ற சூரியனை, கனி - பழமென்று நினைத்து, தொடர்ந்தவன் - பாய்ந்த அனுமான், அகழியைக்கண்டான் - அகழியைப்பார்த்து, தாய - முனபுதாண்டிவந்த, பனிக்கடல் பெரும் கடவுள்தன பரிபவம் துடைப்பான் - குளிர்ந்தகடலாகிய பெருமைபொருந்திய வருணனதிழிவைப் போக்குதற்கு, இனிககடப்பது அன்றுஏழ்கடல் கிடந்ததுஎன்று இசைத்தான்- இனி இக்கிடங்கு நம்மால் தாண்டப்படுவதன்று ஏழ்கடல்களுமொருசேரககிடந்தாற்போல விருக்கின்றதென்று சொன்னான். எ - று. (கசசு)

கடவுள் தன பரிபவமென்றது அனுமான் கடலைத்தாண்டியதை. அப்பெருமான் இலங்கையி னகழியைத்தாண்டின் வருணனுக்கு வந்த இழிவைப போககியதாகு மென்பதுகருத்து.

ருரு. மேக்குநால்வகைமேகமுங்கீழ்விழத
தூககினலனன தோயததாய்ததுயா
ஆக்கினனபடையனனவகழியை
வாககினுரைவைககலுமாகுமோ. (கசஎ)

இ - ள். மேக்குநால்வகை மேகமும் - ஆகாயத்தின் மேலுள்ள நானகுவகை மேகங்களுமம, கீழ்விழத்தூக்கினல் அன்ன தோயத்தது ஆய்-(அகழியின) அடிததரை தோன்ற நீர்மொண்டெழுந்தா லவ்வளவுள்ள நீருடையதாகி, துயர் ஆக்கினன் படை அன்ன அகழியை - உலகுககெலலாந் துனபமுண்டாக்கிய இராவணனது சேனையையொத்த அகழியைக்குறித்து, வாக்கினல் உரைவைககலும ஆகுமோ-நமதுவாயினல்சொற்களைச் சொல்லுதலுங கூடுமோ. எ - று. (கசஎ)

ருசு. இளககரிமுதெஞசவிழுமெணணருவிளககைத
துளககியதுதென றலபகைசோரவுயாவோரின
அளக்கரொடளககரியவாரைசயுறவீசா
விளக்கினமவிளககுமணிமெயயுறவிளக்கம். (கசஅ)

இ - ள். பகைசோர உயர்வோரின் - பகைதளர்ந்தபோது வெற்றிபெறுவோரைப் போல, இளக்கர் இழுது எஞசவிழும்

எண்ண அருவிளக்கை - இளகுதலையுடைய நெய்குறைய வலி கின்ற எண்ணக்கூடாத தீபங்களை, தென்றல் துளக்கியது - தென்றற் காற்று அசைத்தது, அளகரொடு அளக்க அரிய ஆசை உற - கடலோடொப்பச் சொல்லவரிய ஆசையுண்டாகும்படியான, மெய்யுறு - (அரக்கியர்) சரீரத்திலணிந்த, மணிவிளக்கம் - மணியணிகளின்சோதி, வீசா-வீசி, விளக்கு இனம விளக்கும் - விளக்குக்கூட்டம்போல விருளைப்போக்கும் எ-று. ( )

---

## ௩-வது. காட்சிப்படலம்.

## அனுமான் சானகிபிராட்டியாரைப் பார்த்ததைக் கூறுகின்றபடலம்.

— o —

சீதாபிராட்டியாரைக்கூறியது

௫௭. ஆவியந்துகிலபுனைவதொன்றன்றிவேறறியாள
தூவியன்னமென்புனலிடைததோயகிலாமெய்யாள
தேவுதெண்கடலமிழ்துகொண்டனங்கவேள்செய்த
ஓவியம்புகையுண்டதேயொக்கின்றவுருவாள. (௧௫)

இ-ள். மென்தூவி அன்னம் - மெல்லிய சிறகையுடைய அன்னத்தைபபோல வாள், ஆவி - தனக்குயி ரொன்றுபோல, புனைவது - உடுத்திக் கொளவதாகிய, அம்துகில் ஒன்று அன்றி வேறு அறியாள் - அழகிய சீலை முன்னுடுத்திய வொன்றேயன்றிவேறிலலாது, புனலிடைததோயகிலாமெய்யாள் - நீரில குளிக்காத சரீரமுடையாள, (௧௧)

அரக்கியரைசசொல்லியது.

௫௮. சூலமவாளசக்கரந்தோட்டிதோமரம்
காலவேல்கறபணங்கறறைகயினா
ஆலமேயுருவுகொண்டனையமேனியா
வாலமேதரித்தவனவெருவும்வண்மையா. (௫௮)

இ-ள். வால் அம் தரித்தவன் வெருவும் வண்மையர் - வெண்மையுள்ள கங்காசலத்தைத் தரித்த உருத்திரனு மஞ்சுகின்ற வலிவளப்பத்தை யுடையார், (௫௮)

வால்அும் - சுந்தசலம் என்றமையால் கங்காசல மென்பது பெற்றாம். அதற்கு வெண்மை "ஆறெலாங்கங்கையேயாய" என்பதனானு முணர்க.

---

## ச-வது. நிந்தனைப்படலம்.

## மைதிலியார் இராவணனை நிந்தித்ததைக் கூறுகின்றபடலம்.

இராவணனைச்சொல்லியது.

௫௧. நீனிறக் குன்றி னெடிதினிற் றாழ்ந்த நீத்தவெள் ளருவியி னிமிர்ந்த
பானிறப் பட்டின் மாலையுத் தரியம் பண்புறப் பசும்பொ னாரத்தின்
மானிறப் புடவி யுடையுறப் பரந்த வளர்கதி ரிளவெயில் பொருவச்
சூனிறக் கொண்மூக் கிழித்திடைத் துடிக்கு மின்னென மார்பினூ றுளங்க.

இ - ள். நீலநிறக்குன்றின் நெடிதினில் தாழ்ந்தநீத்தவெள் அருவியின - கருநிறத்தையுடைய மலையினின்று நீளமாய விழுகின்ற பிரவாகமாகிய வெள்ளிய அருவியைப் போல, நிமிர்ந்த பால் நிறப்பட்டின் மாலை உத்தரியம பண்புஉற - உயர்ந்தபால் நிறமுடைய பட்டினலாகிய வொழுங்காகிய உததரியம் அழகு பொருந்தவும், பசும்பொன் ஆரத்தின் மாலநிறம் - பசும்பொன னலாகிய மாலையினது பெருமை பொருந்தியசோதி, புடவி - புவிக்கு, உடை - ஆடையாகியகடலில், உறப்பரந்த வளர்கதிர் இளவெயில் பொருவ - மிகவும் பரவிய வுயர்கின்ற சூரியனது இளவெயிலை யொப்பாகவும, சூல் நிறக்கொண்மூக்கிழித்து இடைதுடிக்கும் மின எனமார்பின நூல்துளங்க - கருப்பத்தால் கருநிறமுடைய மேகத்தைக கிழித்ததனிடத்திற்றுவளுகின்ற மின்னலைப்போல மார்பில் பூணூல்விளங்கவும். எ-று. (௫)

இதுவுமது.

௬௦. தன்னிறத் தோடுமா றுதந்திலை மகருநீவி யந்தழைபட வுடுத்த
பொன்னிறத் துகிற் கருவரை மருங்கிற் றழுவிய புதுவெயில் பொருவ
மின்னிறக் கதிர்ச் சுற்றிய பசும்பொன் விரற்றலை யவிரொளிக் காசின்
கன்னிறக் கற்றை நெடுநிழல் பூத்தக் கற்பகமுழுவண் கவின. (எ)

இ - ள். தன்னிறத்தோடு மாறுதந்து இமைக்கும்-தனதொளியோடு வேறுபாடுசெய்து விளங்குகின்ற, (சரையையுடைய) நீவி அம்தழைபட உடுத்த பொன்னிறத்துகில்-கொய்சகத்தினது அழகுதழைவு தோன்றஅவனுடுத்திய பொன்மயமானவாடை, கருவரை மருங்கில் தழுவிய புதுவெயில பொருவ - கரியமலையினிடத்திற் சூழ்ந்த இளவெயிலை யொப்பாகவும், விரல்தலை - அவனது கைவிரலகளில, மினநிறக்கதிரில் சுற்றிய பசும்பொன்-மின்னுகின்ற ஒளியையுடைய செஞ்சுடர்போலச் சூழ்நதபசும் பொன்னாலாகிய மோதிரங்களின், அவிர் ஒளிக்காசின் கல நிறக் கற்றை-ஒளியுடைய இரத்தினக்கற்களி னொளிதொகுதி, நெடுநிழல்பூத்த கற்பக முழுவனம் கவின - நீண்டவொளியோடு மலர்ந்தகற்பக முழுவனமபோல அழகுசெயயவும. எ-று. (எ)

திரிசடைபிராட்டியாருக்குச்சொல்லியது.

சுக. இன்னோரன்னவெய்தியகாலததிடைநின்றாள
முன்னேசொன்னேன கண்டகனவின்முடிவமமா
பின்னேவாளாபேதுறுவீரேறபிழையென்றாள
அன்னேநன்றென்றாரவரெலலாமறிவுற்றா (அக)

இ-ள். இன்னோர் அன்ன எய்திய காலத்து - இவ்வகை யரக்கியர் அவ்வாறு வந்தபோது, இடை நின்றாள - நடுவில்நின்ற திரிசடை, கண்டகனவின் முடிவு-யானகண்ட சொபபனத்தின் முடிவை, முன்னே சொன்னேன்-முன்பே கூறினேன், பின்னே வாளா பேதுறுவீரேல பிழை என்றாள் - இப்போது வீணாய் மயங்குவீரேல குற்றமாமென று(பிராட்டியைநோககிச்)சொன்னாள், அவரெல்லாம - அவ்வாககிய ரெலலாரும, (திரிசடையைப் பார்த்து) அன்னே நன்று என்றார் அறிவுற்றார் - தாயே நீகண்ட கனவின் றிற நன்றென்று தெரிந்தார். எ-று. (அக)

## ரு-வது. உருக்காட்டுப்படலம்.

## அனுமான் தனது விசுவரூபத்தைப் பிராட்டிக்குக் காட்டியதைக் கூறுகின்றபடலம்.

ஸ்ரீராமபிரானதுதிருவடிகளைககூறியது.

சுஉ. சேயிதழ்த்தாமரையெனறுசேனுளோா
ஏயினாதனறுணையெளியதில்லையால
நாயகனறிருவடிகுறிததுநாட்டுறின
பாய்திரைபபவளமுங்குவளைப்பணபினும். (ஙக)

இ-ள். பாய்திரைப் பவளமும் குவளைப்பண்பின் ஆம் - பரவுகின்ற அலையில மிதக்கின்ற பவளமுங குவளைமலரினதுபண்புடையதாம, (ஙக)

திருவடியின செவப்பை நோக்கின் பவளம் குவளையாகுமென்பது கருத்து.

பெருமாளதுதுயரத்தைப் பிராட்டிக்குஆஞ்சநேயாசொல்லியது.

சுரு. போதாயினபோதுனதண்புனலாடலபொய்யோ
சீதாபவளககொடியனனவட்டேடியெனகண்
நீதாதருகிறறிலையேனெருபபாதியென்றுக
கோதாவிரியைசினநகொணடனனகொணடலொப்பான. (அரு)

இ-ள் போது ஆயினபோது-சூரியனுதயமானகாலை, சீதா-சீதை வந்து, உனதண்புனல் ஆடல பொயயோ-உனது குளிர்ந்த புனலில் நீரதத மாடல் பொய்யோ, பவளக்கொடி அன்னவள தேடி எனகண் நீதா-பவளக கொடியையொத்த அச்சீதையை நாடி யென்னிடத்தில நீகொடு, தருகிற்றிலையேல் நெருப்பு ஆதி என்று - கொடுத்திலையேல் எனது வாளியால் நெருப்பாதியென்று. (அரு)

இதுவுமது

சுசு. உணடாயதுமுறறதுமுறறுமுணாததியுள்ளம்
புணடாலெனனநோயுறவிமமுறுகினறபோழ்தின
எணடாணிழநதிட்டனனேநதிழையாஙகளகாட்டக
கண்டானுயாவேநமுமபோதமுஙகாண்கிலாதான். (கூo)

இ-ள். உயர்வேதமும் போதமும் காண்கிலாதான் - பெருமைபொருந்திய வேதங்களாலும் ஞானத்தாலுங்காணக்கூடாத எம்பெருமான, உண்டாயதும-திருவயோத்தியில் கைகேசியால் வந்ததையும், உற்றதும - வனத்தில் மானால் வந்ததையும், முற்றும் உணர்த்தி - முழுதுஞ் சொல்லி, உளளம் புண்தான என நோய் உற விமமுறுகினற போழ்தின-மனம புண்தானே யென்று சொலலுமபடி வருத்த மிகுதியாகத துக்கபபடுகிற காலே, எண் இழநதிட்டனன்-நினைவையிழந்து, ஏந்து இழையாங்கள் காட்டககண்டான்-நீபூணடிருந்த ஆபரணஙகளை யாங்கனெடுத்துக் காட்டப்பார்த்தான். (கூ0)

இதுவுமது

கூரு. தணிகின்றநஞ்சொறறொடாததனமையதனனைத
துணிகொணடிலங்குஞ்சுடாவேலவனறாயநினகண
அணிகணடுழியேயமுதநதெளிததாலுமாறுப
பிணிகொணடதுபணடதுணடாயினும்போபபதனறு. (கூக)

இ-ள். தணிகின்ற நமசொல் தொடர்தனமை - தாழ்ந்து சொலலுகின்ற எங்கள் சொலலைக்கேட்கின்றமையால, அததன்மை தனனைத் துணிகொணடு - அததுககததைப போககிககொண்டு, இலஙகும் சுடர்வேலவன - விளங்குகின்ற வொளியையுடைய வேலாயுததததை யுடைய பிரான், தூயநினகண அணி கண்டுழி - பரிசுததமாகிய வுனனிடத்திருந்த ஆபரணங்களைப் பார்த்தபோது, அமுதம் தெளிததாலும் ஆறு - அமுதத்தைத் தெளித்தாலுந தீராத, கொண்டது - கொண்டதாகிய, பிணி-நோய், பண்டது உண்டாயினும போப்பது அனறு-பழையதாயுண்டாயினும் போககததககதன்று. எ-று. (கூக)

## சா - வது. சூடாமணிப்படலம்.

## பிராட்டி தான் வைத்திருந்த சூடாமணியை அனுமானிடம் கொடுத்ததைக் கூறுகின்ற படலம்.

பிராட்டியனுமானுககடையாளங்கூறியது.

சாசா. வநதெனைககரம்பறறியவைகலவாய்
இநதவிபபிறவிககிருமாதரைச்
சிநதையாலுநதொடேனென்றசெவ்வரம்
தந்தவார்த்தைதிருச்செவிசாறறுவாய். (கூ௨)

இ-ள். வந்து என்னைக்கரம்பற்றியவை கல்வாய்-மிதிலாபுரி வந்து என்னை மணம்புரிந்தநாளில், இந்த இப்பிறவிக்கு இருமாதரை - இந்த அவதாரத்திற்கு நினையன்றி யிரண்டாவது பெண்ணை, இந்த வவதாரத்திற்கு நினை யன்றி பெரியபிராட்டிபூப்பிராட்டி யென்னு மிரண்டு பெண்களை என்பாருமுளர். பெரியபிராட்டியே யிவளாகலின் அதுபொருந்தாது. (௩௪)

இதுவுமது.

௬௭. எந்தைநின்சரணஞ்சரணென்றவிதனால்
முந்துநின்குறையும்பொறுத்தனமுந்துன
சந்தமொன்றுகொடித்திரள்கண்கட்குமே
வந்தோர்நன்மணிநிற்கெனவைத்ததும்வைப்பாய். (௮௧)

இ-ள். எந்தை நின்சரணம் - என்னையனே யுனதுபாதமே, சரண் என்ற இதனால் - புகலிடமென்றவிந்தச் சொல்லால், முந்துநின் குறையும் பொறுத்தனம் - முன்பு நீசெய்த உனதுகுற்றத்தையும் பொறுத்தோம், முந்து - நீ இக்குற்றத்தைச் செய்ததற்கு முன்பு, உன் சந்தம் ஒன்று கொடித்திரள் கண்கள் தமக்கு-உனது வடிவைப்பொருந்திய காக்கைக்கூட்டங்களினிரண்டு கண்களுக்கும், ஓர் நல்மணி வந்து நிற்கென வைத்ததும் வைப்பாய் - ஒருநல்ல கண்மணி வந்து நிற்கவென்று நியமித்ததையுஞ் சொல்லுவாய். (௮௧)

## எ-வது. பொழிலிறுத்தபடலம்.

## அனுமான் அசோகவனத்தை யழித்ததைச் சொல்லுகின்றபடலம்.

௬௮. பாடலம்படர்கோங்கொடும்பன்னிசைப்
பாடலம்பணிவண்டொடும்பஃறிரைப்
பாடலம்புயர்வேலையிற்பாய்ந்தன
பாடலம்பெறப்புள்ளினம்பாறவே. (௩௧)

இ-ள். படர் கோங்கொடும் - படர்ந்த கோங்க மரங்களோடும், பன் இசைப்பாடல் அம் பணி வண்டொடு - பாடுகின்ற

இசைப்பாடலும் அழகுங் குளிர்ச்சியு முள்ள வண்டுகளோடும், பாடலம் - பாதிரி மரங்கள், பாடலம் பெற - (கடல்நீர்) சிவந்த நிறத்தைப் பெறவும, புள் இனம் பாற - தமமிடததுளள பற வைக கூட்டஙகளோடவும, பல திரைப்பாடு அலமபு உயர் வேலையில் பாயந்தன - பல அலைகள் பககமெல்லாந் ததும்புகி ன்ற வுயர்ந்த கடலில விழுநதன. எ-று (௩௧)

௬௯. வணடலமபுநலாறறின மராமரம
வணடலம்புனலாறறினமடிநதன
விணடலமபுகநீஙகியவெணபுனல
விணடலமபுகநீணமரமவீழநதவே. (௩௨)

இ-ள். வணடு அலம்பு நல ஆற்றின மராமரம - வண்டுக ளொலிக்கின்ற நல்லொழுக்கினை யுடைய கடப்ப மரங்கள், வண் டல் அம் புனல ஆற்றில மடிநதன - சேற்றையுடைய வழகிய நீராற்றில் விழுந்து மடிந்தன, விண்தலமபுகநீள மரம் - ஆகா யத்தை யணுகவளாந்த மரஙகள், விண்டு - திருமாலினது திரு வடியை, அலம்பு - மஞசன மாட்டிய, உகம நீஙகிய வெண்பு னல் - பலயுகஙகளைக கடநத ஆகாயகஙகையில், வீழ்ந்த - விழு ந்தன, எ-று. (௩௨)

௭௦. தாமரைததடம்பொய்கைசெஞசநதனம
தாமரைததனவொத்ததுகைததலின
காமரககளிவணடொடுஙகளளொடும்
காமரககடலபூககடல்கணடவே. (௩௩)

இ - ள். தடம் - பெரிய, தாமரைப் பொய்கை - தாமரைக் குளங்கள், செம் சந்தனம் தாம அரைத்தன ஒதத-சிவந்தசந்த னங்களை யரைததுக குழப்பின போலாயின, துகைத்தலின்- அனுமான் திருவடிகளாற்றுகைத்தலால், கா - அசசோலையிலு ளள, மரககடல் - மரஙகளாகிய கடல்கள், காமரக்களிவண்டொ டும கள்ளொடும் - இசைப்பாட்டையும் மயககததையு முடைய வண்டுகளோடுந் தேனொடும, பூக்கடல்கண்ட - மலர்க்கடலைச் செய்தன. (௩௩)

௭௧. சிந்துவாரநிசைதொறுஞசென்றன
சிநதுவாரமபுரைதிரைசோநதன
தந்துவாரமபுதவொடுதாளறத்
தந்துவாரநதுகளபடச்சாய்நதவே. (௩௪)

இ-ள். திசை தொறும் சென்றன - அசசோலையி னின்று திசைகள்தோறு நீண்டனவாகிய, சிந்துவாரம் - நொச்சிமரங்கள், சிந்து - கடலினது, வாரம் - கரையிலும், புரைதிரை-உயர்ச்சியுடைய அலைகளிலும், சேர்ந்தன - சார்ந்தன, தந்து-அநுமாறு லெறியப்பட்டு, வார் அமபுதவொடு தாள் அற - நீண்ட அழகியகதவொடு தாளற்று, தம்துவாரம் துகள் படச்சாயந்த-அவ்வரக்கருடைய வாயிலகள துகளாக அழிந்தன எ-று.(௩௪)

௭௨. நநதவானதது நாணமலா நாறின
நநதவானதது நாண்மலா நாறின
சிநதவா நநதிரிநதுகச்செமமணி
சிநதவானநதிரிநததிரைககடல. (௩௫)

இ-ள். நந்தவானத்து - அவ்வசோக வனத்தில், நாள்-தினந்தோறும், நாறின - பூத்த, மலா - மலர்கள், நந்த-அதிகமாக, வானத்து - ஆகாயத்திற் சென்று, மலா-அழகு விளங்குகின்ற, நாள் - நக்ஷத்திரங்களைபபோல, நாறின - விளங்கின, சிந்து - நீரைப்பெய்கின்ற, அவ்வானம - அமமேகங்கள், திரிந்து உக-காற்றூற் சுழன்று சிதற, செமமணி சிந்த - செவ்வையானமுத்துக்களைப் பெறுவதறகு, வால் நந்து - வெள்ளிய சங்கங்கள், திரைக்கடல் இரிந்த - அலையையுடைய கடலுள அஞ்சியோடின. எ-று. (௩௫)

## ௪௦-வது. பஞ்சசேஞபதிகள்வதைப்படலம்.

படையெழுநதைசசொலலியது.

௭௩. பண்மணிககுலம்யானையினபுடைதொறுமபரநத
ஒணமணிக்குலமழையிடையுருமெனவொலிபபக
கணமணிக்குலநகனலெனககாநதுவகதுபின
தண்மணிசகுலமழையெழுகதிரொனததழைப்ப. (௧௩)

இ-ள். யானையின் - யானைகளின் கழுத்திலணிந்த, பண்மணிக்குலம் - தகுதி யுடைய மணிக்கூட்டமும், புடைதொறும் பரந்த ஒண்மணிக்குலம் - இருபுறத்திலும பரந்த வொள்ளிய மணிக்.கூட்டமும், மழை இடை உரும் என ஒலிப்ப - மேகத்தி

ணிடத்தி லிடியைப்போல வொலிக்க, கண்மணிக் குலம் கனல் எனக்காந்துவ - அவ்யானைகளின் கண்மணிக் கூட்டங்கள் நெருப்பைப்போலக் காந்துவனவாய், கதுப்பின தண்மணிக்குலம் - இருகவுள்களிலும் ஆபரணமாயணிந்த குளிர்ந்த இரத்தினக் கூட்டங்கள், மழை எழுகதிர் எனத்தழைப்ப - மேகத்தி லெழுகின்ற சூரியனைப்போல வொளிசெய்ய. எ-று. (௧௯)

படைவீரரைக்கூறியது.

எச. இந்திரனிசையிழந் தேகுவானிகல்
றந்திமுன் கடாவினன் முடுகத் தாமமன்
மந்தர வாலடி பிடித்து வல்லையேல்
உந்துதி நீயென வலிந்தூற் றத்தார் (௨௰)

இ-ள். இந்திரன் இசை இழந்து ஏகுவான் - இந்திரன்றனது புகழை யிழந்து செலவானாகி, இகல தந்திமுன் கடாவினன் முடுக - வலியுடைய ஐராவதத்தை முனனே செலுததி விரைந்துபோக, மந்தரம் - மநதரமலைபோன்ற, அதன் - அவ்யானையினது, அடிவால் பிடித்து - அடிவாலைப்பற்றி, வல்லையேல் - வல்லையாயின், நீ உந்துதி என வலிந்த ஊற்றத்தார் - நீசெலுத்துதியென்று காய்ந்த வலியுடையார். எ-று (௨௧)

இதுவுமது.

எரு பானிறுத் தந்தணன் பணியனாகினின்
கோனினைத் திலனென வுலகங் கூறலும்
நீனிறத் திராவணன் முனிவு நீக்குவான்
காலனைக் காலினிற் கையிற் கட்டினார் (௨௨)

இ-ள். பால் நிறுத்து அந்தணன பணியனாகி - முறையே உயிர்களைப படைக்கின்ற பிரமனுடைய ஆணைபெற்றவனாய், நின்கோல் நினைத்திலன என உலகம கூறலும் - (நமன்) உனதுத்தரவைக கொண்டிலனென்று இலங்கைநகரார் சொல்லுதலும், நீல்நிறத்து இராவணன் முனிவு நீக்குவான் - கறுப்பு நிறத்தையுடைய இராவணனது கோவத்தைப்போக்குவதறகு, காலனைக்காலினில் கையில் கடடினார் - யமனைக்காலிலுங் கையிலுங் கட்டிக்கொணர்ந்தார. எ-று, (௨௨)

## ௧௧-வது. அட்சகுமாரன் வதைப்படலம்.

அட்சன இராவணனுக்குச சொல்லியது.

௭௬. துண்டசதூணதனிறறோனறுஙகோளரிசுடர்வெண்கோட்டு
மண்டொதததிமிராணகேழலாயினுமலைதலாற்று
தண்டததைக்கடநதுபொங்கியபபுறததகலினெனபால
தண்டததையிடுதியனறேநினவயிறறங்கிலேனால. (௫)

இ-ள். துண்டத்தூண் அதனில் தோன்றும் கோளரி-மரத்தின் துண்டாகிய தூணிலவதரிதத நரசிங்கமும், சுடர வெண்கோட்டு மண்தொத்த திமிர் ஆண்கேழல் ஆயினும்-ஒளியுடைய வெள்ளிய கொமபில பூமி தஙகியிருககஉயர்ந்த (திருமாலவதாரமாகிய) ஆண்பன்றியாயினும், மலைதல்ஆற்று-என்னோடு பொருதலைசசெயயா, தண்டசதைககடந்துபொஙகி அப்புறத்து அகலின்-இநநாட்டைக்கடந்தோங்கியப்பாலக்குரங்கு செல்லினும, நினவயின தங்கிலேனேல்-(அதைபபிடத்து) நின்னிடங்கொண்டுவந்திலேனாயினும, என்பால் தண்டத்தை இடுதி-எனக்குத்தண்டம் விதிப்பாய. எ-று. (௫)

௭௭. நீததாயோடினவுதிரபபெருநதிநீராகசசிலைபாராகப் [காமுன்
போயததாழ்செறிதசை யரிசிநதினபடிபொஙகபபொருமுயிர்போ
மீத்தாவிமிர்சுடரவயிரககைகொடுபிடியாவிண்ணொடுமணகாணத்
தேய்ததானூழியினுலகேழ் தேயினுமொருதனபுகழிறைதேயாதான.

இ-ள் ஊழியின்உலகு ஏழ்தேயினும ஒருதன்புகழ் இறைதேயாதான்-யுகமுடிவிலேழுலகங்களுந் தேயினு மொப்பற்றதனதுபுகழ் சிறிதுந் தேயாத அனுமான், நீத்தாயஓடின உதிரப்பெருநதி நீராக-நீத்தாயோடிய வுதிரமாகிய பெரியநதி புனலாகவும, சிலைபாராக-அமமிககல் புவியாகவும், போய்த்தாழ் செறிதசை அரிசிந்தினபடி பொங்க-நீண்டு தங்கிய அட்சகுமாரனது தசை அரிசிகளைவைத்தபடி மேனமேற்கு வியவும், பொரும்உயிர் போகாமுன்-போர்புரிந்தவுயிர் போகாமுன், மீத்தாவிமிர்சுடர் வயிரக்கை கொடுபிடியா-மேலே தாவுகின்ற அதிககாந்தியுள்ள வலியுடைய் கைகளால் அவ்வட்சனைப்பிடித்து, விண்ணொடு மண்காணத தேய்த்தான்-விண்ணுலகத்தாரொடு மண்ணுலகத்தார்காணத் தேய்த்தான். எ-று. (௩௮)

௭௮. கதிரெழுந்தனையசெந்திருமுகக்கணவர்மா
டெதிரெழுந்தடிவிழுந்தழுதுசோரினநலார
அதிநலங்கோதைசேரோதியோடன்றவூர
உதிரமுந்தெரிகிலாதிடைபரந்தொழுகியே. (௪௩)

இ-ள். சூரியன்உதயமானாற்போலிருக்கின்ற(இரத்தத்தால்) சிவந் தழகுள்ளமுகங்களை யுடைய நாயகரிடத்தில், முன்சென்று அந்நாயகர் காலின்மேல விழுந்து அழுது சோர்கின்ற இளம்பெண்க ளுடைய, மிகுந்த வழகுள்ள பூமாலைசூட்டிய கூந்தலோடு, அன்று அவ்வூரிற் சிதறிய இரத்தமு மிடங்களிற் பரவி நீண்டு (வேற்றுமை) தெரியாது. எ-று. (௪௩)

௭௯. ஓடினாருயிர்களைநாடுடலகள்போலுதவியால
வீடினார்வீடினார்மிடையுடற்குவைகள்வாய
நாடினார்மடநலார்நவையிலாநணபரைக
கூடினாரூடினாரும்பர்வாழ்கொம்பனார. (௪௫)

இ-ள் உயிர்கள நாடு உடல்கள்போல் - உயிர்களைத்தேடுகின்ற உடம்புகளைப்போல, வீடினார் மிடை உடல் குவைகள் வாய் - இறந்தவீரர்களுடைய நெருங்கிய வுடற் குப்பைகளினிடத்து, ஓடினார்-அரக்கிகளோடி, உதவியால் வீடினார் - அவ்வீரர்கள் செய்த பேருதவியை யெண்ணித் தாமு மிறந்தார், மடநலார்-அவ்வாறிறந்த விளமபெண்கள், நவையிலா நணபரை-வீரத்திற்குற்றமில்லாத தந்நாயகரை, நாடினார் கூடினார் - விண்ணிற் றேடிக்கூடினார், உம்பர் வாழ் கொம்பனார் ஊடினார் - அவ்விண் புக்கவீரரொடுவாழ்கின்றதெய்வமகளிர் அவ்விளமபெண்களோடுபிணங்கினார். எ - று. (௪௫)

௮௦. ஏந்தினாடலையையோரெழுதருங்கொம்பனாள்
காந்தனின்றாடுவானுயர்கவந்தத்தினை
வேந்தனீயலசினையவிடுதியானடமெனப
பூந்தளிர்க்கைகளானமெய்யுறப்புல்லினாள். (௪௭)

இ - ள். எழுத அரும் ஓர் கொம்பு அன்னாள் - எழுதப்படாத பூங்கொம்பைப் போன்ற வொருத்தி, தலையை ஏந்தினாள்- அற்றதலையைக் கையிற்கொண்டு, நின்று ஆடுவான் - நின்றாடுகின்ற, காந்தன் - தன்கணவனுடைய, உயர்கவந்தத்தினை- நீண்

டவுடலைப்பார்த்து, வேந்தன் நீ அலசினாய் விடுதி நடம் எ-ஊ-அரசனே நீயாடியிளைத்தா யினியாடுதலை விடுதியென்று, பூந்தளிர்க்கைகளால் மெய்உறப்புல்லினாள் - அழகிய தளிர்போன்ற கைகளால் அத்தலையை யவனுடலிற் பொருந்தச் சேர்த்தாள். எ - று. (௪எ)

---

## ௧உ - வது. பாசப்படலம்.

:O:

## இந்திரசித்து அனுமானைப் பாசத்தாற் கட்டியதைக் கூறுகின்றபடலம்.

அக. குரக்குநல்வலங்குறைந்ததெனருவலங்கொட்டி
இரைக்குமாநகரெறிகடலொத்ததெம்மருங்கும்
திரைக்குமாசுணம்வாசுகியொத்ததுதேவர்
அரக்கரொத்தனர்மந்தரமொத்தனனனுமன். (சுக)

இ-ள். இந்தக்குரங்கு மிகுந்தவலி நீங்கிற்றென்று கருவத்தால்தோள்களைக்கொட்டி, ஒலிக்கின்ற இலங்காபுரி அலையை வீசுகின்ற கடலையொத்தது, எவ்விடத்திலுஞ் சூழ்ந்திருக்கின்ற அம்பாகிய பாம்பு வாசுகியென்னும் பாம்பையொத்தது, அரக்கர் தேவரை யொத்தார் அநுமான் மந்தரகிரியை யொத்தான். எ - று. (சுக)

அஉ. கறுத்தமாசுணங்கனகமாமேனியைக்கட்ட
அறத்துக்காங்கொருதனித்துணையாநின்றவனுமன்
மறத்துமாருதம்பொருதநாள்வாளராவரசு
புறத்துச்சுற்றியமேருமால்வரையையும்போனறான். (சுஉ)

இ-ள். கருநிறமுள்ள அப்பாம்பு பொன்மயமான பெருமை பொருந்திய திருமேனியைகட்ட, தருமத்துக்காங்கொரு ஒப்பற்ற துணையாய நின்ற அநுமான், உதிரத்தோடு பெருங் காற்று வீசியபோது ஒளியுடைய ஆதிசேடன், சுற்றிலுஞ் சுற்றிய மேருவாகிய பெரிய மலையையு மொத்தான். (சுஉ)

# ௧௩-வது. பிணிவீட்டுபடலம்.

## அனுமானைக் கட்டுநீக்கியதை யோதுகின்றபடலம்.

இராவணனைககூறியது.

௮௩. குவித்தபனமணிககுபபைகளாகலையொடுஙகொழிபபச
சவிசசுடாககலனணிந்தபொறறோளொடுதயங்கப
புவிததடம்படாமேருவைபபொனமுடியெனனக
கவிததுமாலிருஙகருஙகடலிருநததுகடுபப. (௪௨)

இ-ள். குவிதத பல்மணிக்குப்பைகள - கூட்டி யமைத்திருக்கின்ற பலவித ரதநககூட்டஙகள், கலையொடும கொழிப்ப- உத்தரியத்தொடு மொளியை வீச, சவிச்சுடர்ககலன் அணிந்த பொன் தோள் தயஙக-சூரியப்பிரகாசமான ஆபரணஙகளை யணிந்த வழகிய தோள்கள விளஙக, புவித்தடம்படர் மேருவைப் பொன்முடி என்ன - புவியில் விசாலமாய்ப் பரவிய மேருமலையை யழகிய மகுடமாக, கவித்து மால் இரும் கரும்கடல் இருந்தது கடுப்ப - சூட்டிககொண்டு மிகப்பெரிதான கரியகடல் வீற்றிருந்ததை யொபபாக. எ-று ஒடுஇசைநிறை. (௪௨)

இதுவுமது.

௮௪. வணமைக்குநதிருமறைகட்கும்வானினுமபெரிய
திண்மைககுநதனியுறையுளாமுழுமுகநதிசையின
கண்வைககுநதொறுஙகளிறறொடுமாதிரஙகாககும
எண்மாககும்மற்றையிருவர்ககும்பெருமபயமியறற. (௪௪)

இ-ள். வண்மைக்கும - புகழ்க்கும், திருமறைகட்கும்-சிறந்த வேதங்களுக்கும், வானினும் பெரிய திண்மைக்கும் - ஆகாயத்தினும் பெரியவலிககும், தனி உறையுள ஆம் முழுமுகம்- ஒப்பில்லாத விருப்பிடமாகிய நிறைவுள்ளமுகம, திசையிலகண்வைக்கும் தொறும் - திசைகளைப் பார்க்குந் தொறும, (௪௪)

இதுவுமது.

௮௫. திங்கள்வாளுறுதனமடநதையாசேயரிககிடநத
அங்கயறறடந்தாமரைககலரியோனுகி
வெங்கணவானவர்தானவரெனறிவாவிரியாப்
பொங்குகைகளாநதாமரைககிந்துவேபோன்று. (௫௪)

இ-ள். பிறைபோன்ற ஒளி பொருந்திய நெற்றியையுடைய மகளிரது செவ்வரிகள் தங்கிய, அழகுடைய கண்ணாகிய கெண்டைமீன்களுள்ள முகமாகிய தாமரைமலர்களுக்குச் சூரியனாகி, தன்மேல் கொடுமையுள்ள தேவர்களும தானவர்களுமென்று சொல்லப்படுகின்ற விவர்களது விரியாமற் குவிந்துகொண்டிருக்கின்ற, மிகுதியான கைகளாகிய தாமரைமலர்களுக்குச் சந்திரனையொத்தது. எ-று. (௫௪)

அனுமான் நினைத்ததைக் கூறியது,

௮௬. மாடிருந்தமற்றிவன்புணர்மங்கையாயமங்கை
யூடிரிந்திடமுடித்தலைதிசைதொறுமுருட்டி
யாடல்கொண்டுநின்றாக்கள்றந்ததுகொடிதம்மா
தேடிவந்ததோர்குரங்கெனும்வாசகஞ்சிறிதோ (௫௮)

இ-ள். தேடி ஓர் குரங்குவந்தது என்னும் வாசகம் சிறிதோ-பிராட்டியைத்தேடி யொருகுரங்குவந்ததென்று சொல்லுகின்ற வார்த்தை சிறிதாமோ, பெரிதேயாம, (௫௮)

இராவணனை அனுமானுக்குச்சொல்லியது.

௮௭. உங்குலத்தலைவனுனைனேடொப்பிலாவுயர்ச்சியோனை
வெங்கொலையம்பிற்கொன்றுகாட்டொழிற்மேற்கொண்டோரல
எங்குலப்புறுநுஞ்சீர்த்திநும்மொடும்மியைந்ததென்றால
மங்குலிற்பொலிந்ஞாலமாதுமையுடைத்துமாதோ. (௮௮)

இ-ள். நும் சீர்த்தி எங்கு உலப்புறும்-உமதுகீர்த்தி எங்கு முடிவுபெறும், நும்மொடும் இயைந்தது என்றால் - இப்பழிச் செய்கை உம்மோடு கூடிற்றென்றால, (௮௮)

அநுமான இராவணனுக்குச்சொல்லியது.

௮௮. பாரைஞ்ஞூறுவபறபலபொறபுடம
ஈரைஞ்ஞூறுதலையுளவெனினும
ஊரைஞ்ஞூறுகடுங்கனலுட்பொதி
சீரைஞ்ஞூறவைசேமஞ்செலுத்துமோ. (௧௦௨)

இ-ள். ஊரைஞூறும் கடுங்கனல உள்பொதி-ஊரையழிக்கின்ற கடியநெருப்பை யுள்ளேகொண்ட, சீரைஞூறு - நூறு சிலையாயினும், அவைசேமம் செலுத்துமோ-அச்சிலைகள் வெந்தொழியாமல் தம்மைக்காத்துக்கொள்ளுமோ (அவ்வாறு) பா

னை நூறுவ பற்பலபொன்புயம் - புவியையழிப் பனவாகிய அநேக தோள்களும், ஈர் ஐஞ்ஞூறுதலை உள என்னினும் - ஆயிரந்தலைகளுமுள்ளவாயினும், அவையென்செய்யும். எ-று. (௧௦௨)

௮௯. தன்னிறைககுறுகணவெய்யோராயிற்றலுங்கேட்டினனே
அனனவாககிறுதியாகவணிநகாழிபபனெனறுச
செநதிறசசிகையவெமபோர்மழுபபினனாசசேறலொககும
அனறிததணணறுதனனல்செழுகொறறநீளவால (௧௩௬)

இ-ள். தன் இறைக்கு உறுகண் வெய்யோர் இயற்றலும் கேட்டு - தன்னிறையாகிய சிவனுக்குக் கைலையைப் பிடுங்குதல் முதலிய துன்பங்களை யரக்கர்கள் செய்தலுங்கேட்டு, இன்னே அன்னவர்க்கு இறுதி ஆக அணிநகர் அழிப்பல் என்று - இப்போதே அவ்வரக்கர்களுக்கு முடிவுண்டாக வழகிய விலங்கையை யழிப்பேனென்று, செந்திறச்சிகைய வெம்போர் மழுப பின்னர்ச் சேறல் ஒக்கும் - சிவந்ததிறமுடைய சுவாலைபொருந்திய வெவ்விய வலியுடைய மழுவாயுதம் அவ்வனுமானுக்குப் பின்னர்ச் செலவுதலையொக்கும். எ-று (௧௩௬)

## கச-வது. இலங்கையெரியூட்டுபடலம்.

### இலங்கையைக்கொளுத்தியதைக் கூறுகின்றபடலம்.

௯௦. பேயமனறினினறுபிறங்கெரி
மாயருணடநறவுமடுததால
தூயரொனறவர்வைகிடநதுனனிலல
தீயரன்றியுநதீமையுஞ்செயவரால. (௧௪)

இ-ள். பேய - பசாசுகள் சூழ்ந்துள்ள, மன்றினில் நின்று பிறங்கு எரி - பொதுச்சாலைகளில் நிலைகொண்டு எரிகின்ற நெருப்பு, மாயர்-மாயையையுடைய வரக்கர், உண்ட நறவும் மடுத்தது - உண்ட மிச்சிலாகிய கள்ளையுங்குடித்தது, தூயரொன்றவர் - தூய்மையுடையோர், வைகு இடம் துன்னிலல - தீயர் வதியுமிடத்தைச் சார்ந்தால், தீயர் அன்றியும் தீமையும் செய்

வர் - (அவர்போல) தீயராவரன்றியுங் கொடியபாபங்களையுஞ் செய்வர். எ-று. (௧௪)

௯௧. பரிதிபற்றிநிமிர்ந்தெழுபைங்கனல
கருகிமுற்றுமெரிந்தெழுகார்மழை
அருகுசுற்றுமிருந்தையதாயதின
உருகுபொற்றிரளொத்தனனொண்கதிர். (௨௨)

இ-ள். பரிதிபற்றி நிமிர்ந்து எழுபைங்கனல் - சூரியனைத் தொடர்ந் துயர்ந்தெழுகின்ற பசுமையான நெருப்பால், கருகி முற்றும் எரிந்து எழுகார்மழை-தீய்ந்து முழுதும வெந்தெழுகின்ற கரியமேகங்கள், அருகுசுற்று மிருந்தையதாய - பக்கமெல்லாஞ் சூழ்ந்திருக்கின்ற கரிகளாக, அதின் - அக்கரியுள், உருகு பொன்திரள் - உருகுகின்ற பொற்கட்டியை, ஒண்கதிர் ஒத்தனன்-ஒளியுடைய சூரியனொத்தனன். எ-று. (௨௨)

௯௨. தளைகொளுத்தியதாவெரிதாமணி
முளைகொளுத்திமுகத்திடைமொய்த்தபோ
உளைகொளுத்தவுலந்துலைவுற்றன
வளைகுளம்பின்மணிநிறவாசியே. (௨௩)

இ-ள். தளை கொளுத்திய தா எரி - பின்காற் கயிற்றைக் கொளுத்திய தாவுகின்ற நெருப்பு, தாமணி முளைகொளுத்தி- கழுத்துக்கயிற்றையுங் கட்டுமுளையையுங் கொளுத்தி, முகத்திடை மொய்த்தபோ உளைகொளுத்த - முகத்தில் நெருங்கிய மிகுந்த பிடரி மயிரைக்கொளுத்த, வளைகுளம்பின் மணி நிறவாசி- வளைந்த குளம்பினையுடைய வழுகிய நிறமுள்ளகுதிரைகள், உலந்து உலைவுற்றன - வருந்திச் செத்தன. (௨௩)

௯௩. அகருமஞ்ஞுறுஞ்சாந்தமுமுதலியவநேகம்
புகரினன்மரத்துறுவெறியுலகெலாம்போர்ப்ப
பகருமூழியிற்காலவெங்கடுங்கனல்பருகும்
மகரவேலையினவெந்தனநந்தனவனங்கள். (௨௪)

இ-ள். அகரும் அந்நறும் சாந்தமும் முதலிய அனேகம்- அகில் மரங்களும் அந்த நல்லவாசமுள்ள சந்தன மரங்களும் முதலிய பலவகைகளாகிய, புகரில் நல்மரத்து உறுவெறி உலகு எல்லாம் போர்ப்ப - குற்றமில்லாத நல்லமரங்களிற்பொருந்திய வாசம் உலகமுழுதுங் கவிய, பகரும் ஊழியில் காலவெங்கடும்

கனலபருகும் - சொலலுகின்ற யுகமுடிவில் வெவ்விய காலாக்கினியால் குடிககபபடுகிற, மகரவேலையில் - மகரமீன்களுள்ள கடலைப்போல, நந்தனவனஙகள் வெநதன - சோலைகள் வெந்தன

௧௪. வெருளுமவெமபுகைப்படலையின்மேறசெலவெருவி
இருளுமவெமகடலவிழுநதனவெழுந்திலபறவை
மருளினமீனகணமவிழுஙகிடவுலநதனமனததோா
அருளிலவஞசரைநதஞசமெனறடைநதவரனைய. (௩௭)

இ-ள். வெருளும் வெமபுகைபபடலையின - பயப்படத்தக்க வெவ்விய புகைபபடர்ச்சியால, மேற்செல வெருவி - ஆகாயத்திறசெலல வஞ்சி, இருளும வெமகடல் விழுநதன எழுநதில பறவை - இருணடிருககினற வெவவியகடலில விழுநதெழுந்திலவாகிய பறவைகள், மனதது ஓா அருள இல் வஞ்சரைத் தஞசமென்று அடைந்தவர் அனைய - மனத்திலொருவகையிரககமிலலாத வஞசாகளைத் தமக்காதாரமென்று சாாநதவர்களையொபபாக, மருள் இல மீன கணம விழுஙகிட உலநதன - மயககமிலலாத மீன கூடடஙகள விழுஙகமாயநதன. எ-று. ([illegible]௧)

# கரு-வது. திருவடிதொழுதபடலம்.

## அனுமான் ஸ்ரீராகவபிரானது திருவடிகளைத் தொழுததைச் சொல்லுகின்றபடலம்.

௧௫. மைநநாகமெனனனினறருனறையுமாபினெயதிக
கைநநாகமனையோளுறறதுணாநதினனகணதனகாலைப
பைநநாகநிறகுமவீராதனனெடுவரவுபாாககும
கொயநநாகமுநதேனசிரதுஙகுனறிடைககுதியுங்கொணடான. (...)

இ-ள். பைநாகம் நிற்கும் வீரர் - படமெடுத்து நிற்குஞ் சர்ப்பம்போலத தலையெடுததுப் பார்தது நிற்கினற அஙகதன்முதலியோர்,

௧௬. கண்டனெனகறபினுக்கணிகையக்கணகளால
தெண்டிரையலைகடலிலஙகைதனெனகா
அணடர்நாயகவினித்துறததியையமும்
பண்டுளதுயருமென்றனுமன்பன்னுவான்.

இ-ள். தெண்டிரை அலைகடல் இலங்கைத் தென் நகர் - தெள்ளிய அலைகளையுடைய கடல் சூழ்ந்த இலங்கையாகிய வழகிய நகரில், கற்பினுக்கு அணியை - கற்பினுக் காபரணமாகிய எம்பிராட்டியை, கண்களால் கண்டனென - அடியேன் கண்களாற் பார்த்தேன், அண்டர் நாயக - தெய்வநாயக, ஐயமும் பண்டு உள்ள துயரும் - சந்தேகத்தையும் முன்புகொண்டுள்ள துன்பத்தையும், இனி துறத்தி என்று அனுமன் பன்னுவான் - இனிப்போக்குதியென்று அனுமான் சொல்லுவான். எ-று, (௫௮)

ஐயமாவது பிராட்டி உயிரோடிருக்கின்றாளோ இலளோவென்றுசங்கித்திருத்தல.

௯௭. உன்குலமுன்னதாககியுயர்புசழ்க்கொருத்தியாய
தனகுலந்தன்னதாககித்தளனையிழனிமைசெயதான்
வனகுலங்கூற்றுகசீநதவ்வானவர்குலத்தைவாழ்வித
தெனகுலமெனககுததந்தாளெனனினிச்செய்வதிங்குமோய. (௧௧)

இ-ள். என் கூலம் எனக்குத்தந்தாள் - ...து வாலையனக்குக்கொடுத்தாள், கூலம-குலம என விகாரமாயிற்று. (௬௧)

...வாலி பிராட்டிதந்தாளென்றது வாலி லெரியூட்டிய காலை "எரியே யவனைச்சுடல" என்ற பிராட்டி மொழியால் வாலழியாமைபற்றி.

## ஐந்தாவது. சுந்தரகாண்டம்

முற்றிற்று.

---

காண்டம் ஐந்துக்கு ஆ திருவிருத்தம் - ௭௨௩

---

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

முற்றிற்று.

ஸ்ரீ

# சுந்தரகாண்டம்

## செய்யுளகராதி.


| செய்யுள். | பக்கம். |
|---|---|
| அகரும் | ௪0 |
| அக்காலை | ௮ |
| அஞ்சுவ | ௧௯ |
| அண்டமு | ௧௫ |
| அலங்கலி | ௧ |
| அவிதது | ௨௨ |
| — | |
| ஆவியந | ௨௫ |
| — | |
| இநதிரன | ௩௩ |
| இந்நாக | ௪ |
| இழையும் | ௧௬ |
| இளக்கா | ௨௪ |
| இனைய | ௧௨ |
| இன்னோர் | ௨௭ |
| — | |
| உங்குல | ௩௮ |
| உணடாய | ௨௮ |
| உன்குல | ௪௨ |
| — | |
| எநதைதின | ௩0 |
| எல்லி | ௧௮ |
| எழுந்தனர் | ௧௭ |
| — | |
| ஐந்தல் | ௨௩ |
| ஐந்திறுள் | ௩௫ |
| ஐழுலகின | ௧௯ |
| — | |
| ஒடிஞா | ௩௫ |
| — | |
| கண்ட | ௪௧ |
| கதிரெழு | ௩௫ |
| கறுத்த | ௩௬ |
| — | |
| காதக்கடு | ௯ |
| காயத்தால் | ௧௭ |
| — | |
| குரகு | ௩௬ |
| குவிதத | ௩௭ |
| குழலும | ௧௨ |
| — | |
| கூன்குன | ௫ |
| — | |
| சாகாவர | ௪0 |
| — | |
| சிநதார | ௧௯ |
| சிநது | ௩௧ |
| — | |
| சூலம | ௨௫ |
| — | |
| செவ்வான | ௬ |
| — | |
| சேயிதழ | ௨௮ |
| — | |
| தடிததா | ௨0 |
| தடைபுகு | ௨௨ |
| தணிகினற | ௨௯ |
| தங்கிற | ௨௬ |
| தலைகொளு | ௪0 |
| தனிக்கட | ௨௩ |
| தனிமறைக்கு | ௩௯ |
| — | |
| தாமரை | ௩௧ |
| — | |
| திங்கள் | ௩௭ |
| திருகுறுஞ் | ௧௫ |
| — | |
| தூண்டத் | ௩௪ |
| — | |
| நந்த | ௩௨ |
| — | |
| நாகா | ௧௧ |
| நாவி | ௩ |
| — | |
| நிறங்கு | ௪ |
| நினருள் | ௯ |
| — | |
| நீணடான | ௮ |
| நீதநா | ௩௪ |
| நீருமு | ௧௫ |
| நீணிற | ௨௬ |
| — | |
| நூலோநது | ௪ |
| — | |
| பஞ்சி | ௪௨ |
| பனைமணி | ௩௨ |
| பரிதி | ௪0 |
| பல்லாயி | ௫ |
| பளிகரு | ௨௩ |
| — | |
| பாடலம | ௩0 |
| பாடுவார | ௧௬ |
| பாரை | ௩௮ |
| பாணிறுத | ௩௩ |
| — | |
| புறத்துற | ௩ |
| — | |
| பெரியநாள் | ௨௧ |
| — | |
| பேயமன | ௩௯ |
| பேழ்வாய் | ௮ |
| — | |
| பொனகொ | ௪0 |
| பொன்னின | ௧௭ |
| — | |
| போதா | ௨௮ |
| போரியை | ௧௪ |
| — | |
| மணிகள் | ௧௩ |
| மணிகொ | ௨௨ |
| மரகதத் | ௧௪ |

| செய்யுள். | பக்கம. | செயயுள. | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| மரமட | ௪௬ | மைந்நாகம் | ௬௧ | வனறநத | ௨ |
| — | | — | | — | |
| மாகாரின | ௧௧ | மொய்மணி | ௨௧ | வாழூமன | ௧௩ |
| மாடிருநத | ௩௮ | — | | வாளொத | ௭ |
| — | | வருசங | ௨0 | — | |
| முன்பிற | ௬ | வணடலமபு | ௩௧ | விளித்துப | ௩ |
| — | | வண்மைக் | ௩௭ | — | |
| மேக்கு | ௨௬ | வநதெனே | ௨௯ | வெங்கார் | ௮ |
| — | | வள்ளிறுண | ௧௮ | வெருளும் | ௬௧ |


செய்யுளகராதி முற்றிற்று.

ஸ்ரீ

# உயுத்தகாண்டம் பிழைதிருத்தல்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|
| ௯ | ௭ | யெறற | பெறற |
| ௨௨ | ௨௧ | வேலைப .. | வேலை. |
| ௨௮ | ௨௭ | பொயகைப ... | பொயகை |
| ௫௭ | ௨௬ | நோககும ... | நோககும. |




நன்றாக குருவாழ்க குருவேதுணை.

ஸ்ரீ

ஸர்வம்விஷ்ணுமயம்ஜகத்.

ஸ்ரீமத்கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

# ஸ்ரீமத்கம்பராமாயண

## அருங்கவிவிளக்கம்.

## ஆறாவது உயுத்தகாண்டம்.

### க-வது. கடல்காண்படலம்.

### ஸ்ரீராகவபிரான் கடலைப்பார்த்ததைக் கூறுகின்றபடலம்.

தனியன்.

மகிழ்மாறனைவழுத்துவாயென்றனக்கு
நெகிழ்மாறனைநினைக்குநேயம் - முகிழ்மா
முலைக்கமலையேறமொழிகாவியத்தால
நிலைக்கமலையேகவருணீ.

காப்பு.

க. ஒன்றேயென்னினொன்றேயாம்பலவென்றுரைக்கிற்பலவேயாம்
அன்றேயென்னினன்றேயாமாமேயென்னினாமேயாம்
இன்றேயென்னினின்றேயாமிலதென்றுரைக்கினிலதேயாம்
நன்றேநம்பிகுடிவாழ்க்கைநமக்கிங்கென்னோபிழைப்பம்மா. (க)

உ. பொங்கிப்பரந்தபெருஞ்சேனைபுறத்துமகத்தும்புடைசுற்றச்
சங்கிற்பொலிந்தகையானைப்பிரிந்தபின்புதமக்கினமாங்
கொங்கிற்பொலிந்ததாமரையின்குழுவுந்துயில்வுற்றிதழ்குவிக்குங்
கங்குற்பொழுதுந்துயிலாதகண்ணன்கடலைக்கண்ணுற்றான். (உ)

இ-ள். மிகுந்து பரந்த பெரியசேனை வெளியிலும் (கணக்கால்) மனத்திலுஞ் சுற்ற, வளையல்களால் விளங்கிய கையுடைய பிராட்டியைப் பிரிந்தபின்பு கண்களான தமக்குறவாகிய, வாசத்தோடு விளங்கிய செந்தாமரை மலர்க்கூட்டமும நித்திரையடைந்து இதழ்களைக் குவிக்கின்ற, இராப்பொழுதிலுங் கண்வளராத ஸ்ரீராமபிரான் கடலைக்கண்டான் எ-று. (௩)

௩. சேயகாலம்பிரிந்தகலத்திரிந்தானை மீண்டுஞ்சேக்கையினபால
மாயனாவந்தானினிவளரானென்றுகருதிவருந்தென்றல
ஆயமலர்போனுரைத்தொகையுமுத்துஞ்சிந்திப்புடைசுருட்டிப
பாயலுதறிப்படுப்பதேயொத்ததிரையின்பரப்பமா. (௪)

இ-ள். மாயன், நெடுங்காலம்பிரிந்தகன்று யாண்டுந்திரிந்து படுக்கையின்பத்தால், மீண்டுமவந்தான இனி நம்மிடத்திற் கண்வளர்வானென்று கடல் நினைந்து வீசுகின்ற தென்றலால், பரிசுத்தமாகிய மலர்களை யொத்த நுரைத்தொகையையும் முத்துக்களையுஞ் சிந்தி, பாயலை யுதறிச் சுருட்டி, விரிப்பதைத்திரையின் தொகுதிகளொத்தன. எ-று. (௪)

௪. நென்னற்கண்டதிருமேனியின்றுபிறிதாயநிலைதளர்வான
றன்னைக்கண்டுமிரங்காதுதனியேகதறுந்தடங்கடலவாயப
பின்னற்றிரைமேற்றவழ்கின்றபிள்ளைத்தென்றல்கள்ஞயிற்கரும்
புன்னைக்குறும்பூநறுஞ்சுண்ணம்பூசாதொருகாற்போகாதே. (௫)

இ-ள். நேற்றுப்பார்த்த திருமேனி இன்று வேறாகி நிலையினின்று தளர்வானாகிய, ஸ்ரீராமபிரானைப் பார்த்தும் அவனிடம் வந்து நின்னருமைத் திருத்தேவியை நீங்கினையோ வென்று அழாது தனியே கதறுகின்ற பெரிய கடலினிடத்துண்டாகிய, பின்னு தலை யுடைய அலைகளின்மேல் தவழுகின்ற இளந்தென்றல் தேனைச்சொரிகின்ற, புன்னையினது சிறிய மலர்களின் நறுவிய தாதுகளை யொருகாற் பூசாது போகாதோ. எ-று, (௫)

பிராட்டி கடலிற்றோன்றினவளாகலின் அதை ஸ்ரீராகவபிரானுக்கு மாமி யெனவும் தென்றலை மைத்துனனெனவுங் கொண்டு கம்பர் கூறியதாயுள்ள விசேஷார்த்தமுமுண்டு.

௯. இருந்தவன்னறந்தறபேதையிருந்தாணீங்காவிடர்கொடியேன்
றந்தபாவைதவபபாவைதனிமைதகவோவெனததளாநது
சிநதுகினறநறுநதரளககணணீாததும்பிததிரைதெழுநது
வந்துவள்ளனமலாததாளினவீழவதேயக்குமறிகடலே. (௯)

இ-ள். அலைமறிகின்ற கடல், பிறையையொத்த நெற்றியை யுடைய சீதாபிராட்டி நீங்காத துனபததி லிருககினறாள், கொடியேனாகிய யான்பெற்ற அப்பெணணாகிய தவபபெண் தனிமையி லிருப்பது தகுதியோவெனறு மனநதளாநது, சிந்துகினற நல் லமுததுக்களாகிய கண்ணீா ததுமபித திரைதெழுநது, வந்து ஸ்ரீராமபிரானது மலாபோனற திருவடிகளில விழுவதை யொக் கும். எ-று. (௯)

௰. பள்ளியாவிறபேருலகமபசுஙகல்லாகபபணிகாறறை
துளளுநறுமெனபுனறெளிபபததுாசுழவிமுறைசுறறி
வெளளிவணணநுரைககலவைவெதுமபுமணணறிருமேனிக்
கள்ளியபபததிரைககரததாலரைபபதேயககுமணியாழி. (௧௦)

இ-ள். இரத்தினஙகளையுடைய கடல், ஆதிசேடன்மே லிருக்கினற பெரியபூமி அமமியாக, பனிககறறை துள்ளுகின்ற நறுவிய மெல்லிய நீரைத தெளிக்க, புனலாகிய குழவியால முறை சுற்றி, வெளளி நிறமுடைய நுரையாகிய கலவைச் சாந்தை, வெதும்புகினற ஸ்ரீராமபிரானது திருமேனியிலளளிப் பூசததிரையாகிய கரததாலரைப்பதை யொககும. எ-று (௧௦)

## ௨-வது. மந்திரப்படலம்.

:o.

### அனுமான் இலங்கையைக்கொளுத்திவந்தபின்பு இராவண னதனை முன்போலச்செய்து மந்திரியரோ டாலோசித்ததைக்கூறுகின்றபடலம்.

௧. பூவருமயனொடும்புகுநதுபொனனகர்
மூவகையுலகினுமழகுமுற்றுற
வேவெனவியறறினனகணததினென்பராற
றேவருமருளகொளத்தெய்வததச்சனே. (௧)

இ-ள். பூவருமு அயனொடும் புகுந்து - திருமாலுந்தித்தாமரையிற் றோன்றிய பிரமனோடும் இராவணன இலங்கைவந்து, பொன்னகர் - அழகிய அவ்விலங்காபுரியை, மூவகைஉலகினும அழகுமுற்றுற - மூன்றுலகினு மிலலையென்று அழகதிகரிக்கும்படி, ஏவு என-(இராவணன பிரமனைப்பார்தது) ஏவுதியென்று சொல்ல, தெய்வததச்சன தேவருமு மருள்கொளள - மயன் தேவர்களுமு அதிசயிக்கும்படி, கணத்தின இயற்றினன் என்பர் - கணப்பொழுதிற் செய்தனனென்று சொலலுவர் அறிந்தோர். எ-று. (க)

அ. பொனனினுமணியினுமமைநதபொறபுடை
நனனகர்நோக்கினனாகநோககினன
முன்னையினழகுடைததெனறுமொயகழன
மனனனுமுவநதுதனமுனிவுமாறினன. (உ)

இ-ள். நாகம் நோக்கினன் - தெய்வலோகத்தைப்பார்த்து, பொனனினும் மணியினும் அமைந்த பொற்பு உடை - பொனனுலு மிரத்தினங்களாலுஞ்செய்த வழகுடைய, நல்நகர் நோக்கினன் - நல்ல இலங்கையையபபார்தது, மொய்கழல் மன்னனும் - மொய்த்த வீரகண்டாமணி யணிந்த இராவணனுமு, முன்னையின் அழகு உடைத்து என்று - (இலங்கை) முன்னினு மழகுடையதென்று, உவந்து தன் முனிவு ஆறினன - மனமுவந்து தனது கோவ மாறினன். எ-று. கோவமுமு எனனுமு உமமையை முன்னையினுமென்று மாறுக. (உ)

நாகநோக்கினன் நன்னகர் நோக்கினன் எனவே தேவருலகும் இலங்காபுரியும் முன்பு ஒத்த அழகுடையவாயின. முன்னையி னழகுடைத்தெனவே அததேவருலகினும் இலங்கை யிப்போது சிறந்ததாயிற்று.

கூ. இச்சிரததவனுரைததிறுக்குமெல்லையில்
வச்சிரதெயிறறவன வலலைகூறினன்
அச்சிரத்தைக்கொருபொருளன்றுயினும்
பச்சிரததம்பொழிபருதிக்கண்ணினன. (உஅ)

இ-ள். இச்சிரத்தவன்-இத்தலைமையானமகோதரன்,(உஅ)

இந்திரசித்துஇராவணனுக்குச்சொல்லியது.

௬௦. குரங்குபடமேதினிகுறைததலைபடப்போ
ரரங்குபடமானிடரலந்தலைபடப்பே
ரிரங்குபடர்சீதைபடவின்றிருவாநின்றார்
சிரங்குவடெனக்கொணர்தல்காணுதிசினத்தோய்.　　(சுக)

இ-ள். சினத்தோய் - கோபமுடையாய், குரங்குபட - குரங்குகள் சாக, மேதினி குறைத்தலைபட - புவியில் கவந்தங்கள் கிடக்க, போர் அரங்குபட - போர்க்களம் யாண்டு முண்டாக, மானிடர் அலந்தலைபட - மானிடரெல்லாருந் துன்பப்பட, சீதை இரங்குபேர் படர்பட - சீதை வருந்துதலால் மிகுந்த துன்பத்திலழுந்த, இருவர் நின்றார் சிரம குவடு என - இராமலக்குமணரென்று இருவராய் நின்றவரது தலைகளை மலையைப் போல, இன்று கொணர்தல் காணுதி - இன்றே யான் கொணர்தலைப் பார்த்தி. எ-று　　(சுக)

விபீடணன்சொல்வானஇராவணனுக்குச்சொல்லியது.

கக. மிடல்படைதவொருவனுயமரர்கோனவிடையதாயவெரிநின்மேலாய்
உடல்பதைததவுணராயினரெலாமடியவாளுருவினனும
அடல்படைத்தவனியையபெருவளநதருகவெனறருளினனும்
கடல்படைததவனெடுங்கங்கைதந்தவனவழிக்கடவுண்மன்னன். ()

இ-ள். வாள் உருவினன்-வாளையுருவிய காகுத்தன், வளம் தருக என்று அருளினன் - வளத்தைத தருகவென்றருளிய பிருதுசக்ரவர்த்தி, கடல்படைத்தவன் - சகரன், நெடும் கங்கை தந்தவன் - பகீரதன், வழிக்கடவுள் மன்னன் - என்னு மிவர் குலத்திற் றோன்றிய தெய்வத் தன்மையுடைய தயரதசக்ரவர்த்தி. உம்மை இரண்டுமசாரியை.　　(அங)

இதுவுமது.

கஉ. பேருமோவொருவராலவர்களாலல்லதிஃபெரியவேனும்
நாருழரியுமறுநம்முடைச்சிலைகள்போனவியலாமோ
தாருவோவேணுவோதாணுவாயுலகினைத்தழுவிநிறகும்
மேருவோமால்வரைக்குலமதோவல்லவோவில்லுமனறே.　　(அக)

இ-ள். வில்லும் - அவரதுவிற்களும், அவர்களால் அல்லது ஒருவரால் பேருமோ - இராமலக்குமணரென்னு மவ்விருவர்களா லல்லாமல் வேறொருவரா லிடம்விட்டெழுமோ, நம்

முடைச்சிலைகள்போல் நாரும் மூரியும் அரு-நம்முடையதனுக்களைப்போல அச்சாபங்கள் நாணையும் வலியையுமரு, இப்பெரியவேனும் - நம்முடைய விற்கள் பெரியவாயினும், நலியலாமோ - அவற்றை யழிக்கலாமோ, தாருவோ - மரமும், வேணுவோ - மூங்கிலும், தானுவாய் உலகினைத் தழுவிநிற்கும் மேருவோ- தூணாகிப் புவியினைததழுவி நிற்கின்ற மேருகிரியும், மால்வரைக் குலமதோ - பெரியமலைக்குலமும், அல்லவோ - அவரது விற்களல்லவோ. எ-று. (அகூ)

இதனானே அவரது விற்கள் அவற்றின் வலியைப் படைத்தனவென்பது.

இதுவுமது.

கங. புகனமதிததுணர்கிலாமையினமகெளிமைசாலபொறுமைகூர
நகனமதிககிலமறுபபொலியவாளொளியிழநதுதயநணணும்
பகன்மதிக்குவமையாமவிபுதராமிரவுகாலபருவநாளி
னகனமதிககுவமையாயினதபோதனருளாாவதனமம்மா. (கூங)

இ-ள். புகல் மதித்து உணர்கிலாமையின் - யாம் சரணமடையுமிடத்தை யெண்ணி யுணராமையால், எளிமைசால் பொறுமை நமக்குகூர - எளிமையமைந்த பொறுத்தல்நமக்கதிகமுண்டாகவும, நகல்மதிக்கிலம்-சிரித்தலை யெண்ணிலம்,மறுப் பொலியவாள் ஒளி இழந்து - மாசுவிளங்க வொளியை யிழந்து, பகல் - பகறபொழுதில, உதயம் நண்ணும் - உதயமாகின்ற,மதிக்கு உவமையாம் - சந்திரனுக் கொப்பாகிய, விபுதர் - தேவர்கள், தபோதனர் - தவத்தோர்கள், ஆம - ஆகிய, உள்ளார்வதனம் - உள்ளவரது முகங்கள், பருவநாளில் - பௌர்ணமியில், இரவுகால் - இரவுகானற, அகல்மதிக்கு உவமை ஆயின - அகன்ற சந்திரனுக் கொப்பாயின. எ-று. (கூங)

இராவணனவிபீடணுழ்வானுக்குசசொலலியது.

கச. சொல்லுமாறறங்கடெரிநதிலைபன்முறைதோற்றும்
வெல்லுமாற்றலுமொருமுறைபொறுததனனவிண்ணைக்
கல்லுமாற்றலெனகிளையயுமெனனையுஙகளத்திற்
கொல்லுமாற்றலருளரெனககோடலுங்கொண்டாய். (கoச)

இ-ள். சொல்லும் மாற்றங்கள் தெரிந்திலை- சொல்லுகின்ற வார்த்தைகளை யறிந்திலை, ஒருமுறை தோற்றும் - ஒருமுறை

தோல்வியடைந்தும், வெல்லும் ஆற்றலும் பல்முறை பெற்றுத்தனன் - வெல்லும் வலியையும் பலமுறைகொண்டேன். (கoச)

இதுவுமது.

கரு. பித்தனாகியவீசனுமாலுமெனபெயர்கேட்
டெய்த்தசிந்தையரேகுழியேகுழியெலலாங
கைத்தவேற்றினுங்கடவியபுள்ளினுமுதுகிற
றைத்தவாளிகளின்றுளகுன்றினவீழ்தடித்தின. (ககரு)

இ-ள். பித்தன் ஆகிய ஈசனும் மாலும் என்பெயர் கேட்டு - உன்மத்தமுடையவனாகிய சிவனுந் திருமாலு மெனது பெயரைக்கேட்டு, எய்த்த சிந்தையர் ஏகுழி ஏகுழி எலலாம் - தளர்ந்த மனமுடையராகி யோடு மிடங்களிலெலலாம், கைத்தஏற்றினும் கடவிய புள்ளினும் முதுகில் - வெறுத்த இடபத்தினுஞ் செலுத்திய புள்ளரசினும் முதுகில், தைத்தவாளிகள் - தைத்த அம்புகள், குன்றின்வீழ் தடித்தின - மலைமேல் விழுந்த இடியைப்போல, இன்று உள - இன்றுமுள்ளன. (ககரு)

பெயர்கேட்டலாவது - இராவணன் வருகின்றானென்று சொல்லக்கேட்டல். கைத்தலாவது - ஏகுழி யேகுழி யெல்லாம் அவனடித்தலால் இவரைச் சுமந்தன்றோ இவ்வுதைபட வேண்டியதாயிற்றென்று வெறுத்தல்.

---

## ௩-வது. இரணியன்வதைப்படலம்.

---

விபீடணுழவானஇராவணனுக்குச்சொல்லியது.

கசு. பாழிவன்றடந்திசைசுமந்தோங்கியபணைக்கைப
பூழிவன்கரியிரண்டிருகைகொடுபொருதது
மாழங்காணுதற்கரியவாயகனறபேராழி
யேழுந்தனிருதாளளவெனககடந்தேறும. (௩)

இ-ள். பெரியவலிய விசாலமுள்ள திசைகளைச் சுமந்தோங்கிய பருத்தகரத்தையுடைய, புழுதிபடிந்த வலிபொருந்திய இரண்டு யானைகளைத் தன திரண்டுகரங்களைக்கொண்டு முட்டவிடுவான், ஆழம்பார்த்தலுக்கரியவாயாழ்ந்த பெரியகடல்களேழை

யும், தன இருகாலனவென்று சொல்லும்படிக் கடந்தேறுவரன். எ - று. (ந)

இதுவுமது.

கஎ. மண்டலந்தருகதிரவன்வந்துபோய்மறையு
மெண்டலந்தொடற்கரியனதடவரையிரண்டும்
கண்டலம்பசும்பொனனிறத்தவற்கிளங்காளை
குண்டலங்களமற்றென்னிப்பெருவிறல்கூறின். (கக)

இ-ள். இனிப்பெருவிறல் கூறின் - இனி அவனது மிகுந்த வலியைச் சொல்லின், மண்டலம் தருகதிரவன் வந்து போய் மறையும்-வட்டமாகிய சூரியனுதயமாகிச் சென்று மறைகின்ற, எண் தலம் தொடற்கு அரியனதடவரை இரண்டும் - மனந் தொடர்தலுக் கரியனவாகிய பெரியமலைகளிரண்டும், கண்தலம் பசும் பொன் நிறத்தவற்கு இளம் காளை-இரணியாக்கனுக்கிளைய அவ்விரணியனுக்கு, குண்டலங்கள்-குண்டலங்களாயின், மற்று என் - வேறுயாது. (கக)

இதுவுமது.

கஅ. மருக்கொடாமரைநான்முகன்முதலியவரன்றோர்
குருக்களோடுகேறறோதுவதவனபெருங்கொற்றம்
சுருக்கநான்மறைதொன்றுதொட்டுரைதொறுந்தோன்று
திருக்குந்தெய்வமுமிரணியவேநமவெனனும். (கஉ)

இ-ள். நான்மறை சுருக்கம் - நான்குவேதங்களின் சுருக்கமாகிய பிரணவத்தில், தொன்றுதொட்டு உரைதொறும் தோன்றாது இருக்கும் தெய்வமும் - பழமையாக வார்த்தைகள்தோறுந் தோன்றாமலிருக்குந் தெய்வமும், (கஉ)

பிரகலாதாழ்வாறுக்குச்சுக்கிராசாரிசொல்லியது.

ககூ. முந்தைவானவர்யாவர்க்குமுதல்வற்குமுதலோ
னுந்தைமற்றவன்றிருப்பெயருரைசெயற்குரிய
வந்தணாளனேனென்னினுமறிதியோவையா
விந்தவிப்பெயருரைத்தெனைக்கெடுத்திடலென்றான. (உக)

இ-ள். முந்தைவானவர் யாவர்க்கும்முதல்வற்கும் - உலகுக்கு முற்பட்ட தேவர்களெல்லார்க்கும் முதற்கடவுளுக்கும், உந்தைமுதலோன் - உனது தந்தை முதலோன், அவன் திருப்

பெயர் உரைசெயற்கு உரிய - அவனது திருநாமத்தை யோதுதற்குரிய, அந்தணனேன் என்னினும் ஐயா அறிதியோ - அந்தணனாகிய என்னைக் காட்டினும் ஐயா அறிதியோ, இந்த இப்பெயர் உரைத்து என்னைக்கெடுத்திடல் என்றான் - இந்த இப்பெயரைச் சொல்லி யென்னைக் கெடுக்காதியென்றுசொன்னான். எ - று. (௨௯)

அவன் திருப்பெயராவது இரணியவே நம என்றல.

இப்பெயராவது ௨௩ - வது. பாட்டில் ஓநமோநாராயணய என்றல் - தான் அந்தத்தை யணைவுவோனென்பான் அந்தணனென்றான். அந்தமாவது வேதாந்தம்.

பிரகலாதாழ்வானசுக்கிராசாரிகளுச்சொல்லியது.

௩௦. எனக்குநானமுகத்தொருவற்கும்யாரினுமுயர்ந்த
தனக்கும்வேறுளசராசரமனைத்திற்குநத்லைவன்
மனக்குவந்தனனவந்தனயாவையுமறையோ
யுனக்குமின்னதினல்லதொன்றிலலெனவுரைத்தான். (௩௩)

இ-ள். யாரினும் உயர்ந்த தனக்கும்- எல்லாரினு முயர்ந்த இரணியனாகிய தனக்கும்,

இரணியன்பிரகலாதாழவானுக்குச்சொல்லியது.

௨௧. தேவர்செய்கையனங்ஙனமுரைசெயததீயோன்
றாவில்வேதியன்றக்கதேயுரையெனத்தக்கோ
னுவதாருகவனறெனிலறிருவமனறே
யேவதவ்வுரையியம்புதியியம்புதியெனறான். (௪௧)

இ-ள். தீயோன் - இரணியன், தாஇல்வேதியன் - குற்றமில்லாத சுக்கிராசாரி, தக்கதே உரை எனத்தக்கோன்-ஓதத்தகுந்தையே யோதென்று சொல்லத்தகுந்தவன்,

பிரகலாதாழவான்இரணியனுக்குச்சொல்லியது.

௨௨. முக்கட்டேவனுநான்முகத்தொருவனுமுதலா
மக்கட்காறுமிம்மந்திரமறந்தவாமறந்தார்
புக்குக்காட்டுவதரிதிதுபொதுவுறக்காண்பா
ரொக்கநோக்கினரல்லவரதனிலயுணரார். (௪௪)

இ-ள். இம்மந்திரம் மறந்தவர் மறந்தார் - இம்மந்திரத்தை மறந்தவர் தம்மை மறந்தாராவர், புக்குக்காட்டுவது அரிது-

சொல்லிக்காட்டுவ தரிதாகலின், இது பொதுவுறக் காண்பார். இதனை நடுவுநிலைமை பொருந்த வுணர்வாரோடு, ஒக்க நோக்கினர் அல்லவர் அதன நிலைஉணரார் - கூட ஆராய்ந்தவரையல்லாதவர் அம்மந்திரத்தினிலையை யுணரார். (௩௩)

இரணியனபிரகலாதாழவானுக்குச்சொலலியது.

௨௩. முனைவர்வானவர்முதலினாமூன்றுலகதது
மெனையருள்ளவர்யாவருமெனனிருகழலே
நினைவதேததுவதெனபெயாநினககிதுநேர
வனையரஞ்சுவாமைந்தநீயாரிடையறிநதாய. (௩௪)

இ-ள். மைந்த - குமரா, முனைவா வானவர்முதலினர்மூன்று உலகத்தும் எனையர் உள்ளவர்யாவரும் - முனிவர் தேவர்முதலினரும மூன்றுலோகத்திலு மெவ்வகைப்பட்டவரா யுள்ளவரெல்லாரும், என் இருகழலே நினைவது - எனதிரண்டு பாதங்களையே தியானிப்பதும், என்பெயா ஏத்துவது-எனது பெயரையே துதிப்பதுமா யிருகக, நினக்கு இது நேர அனையர் அஞ்சுவர் - உனக்கு இதைச்சொல்ல அமமுனைவர் முதலியோரஞ்சுவர், நீ ஆரிடை அறிந்தாய் - நீயாரிடததிற் கற்றாய். எ-று. ()

பிரகலாதாழ்வானசொல்லியது.

௨௪. கருமமுங்கருமததின்பயனுங்கண்ணிய
தருமுதறறலைவனுநதானுநதானவ
னருமையும்பெருமையுமறிவரேலவ
ரிருமையெனறுரைசெயுநகடனின்றேறுவார். (௩௫)

இ-ள். கருமமும் கருமத்தின் பயனும் - வேள்விமுதலிய கருமங்களும் அக்கருமங்களின் பயனும், கண்ணிய தருமுதல் தலைவனும் - நினைத்தவற்றைக் கொடுககின்ற ஆதிபகவனும், தானும் - பெறுகின்ற சீவனும், தான் - தானே யாவன், (௩௫)

இதுவுமது.

௨௫. * புகுதியினுட்பயனபயநததனனதின்
மிகுதியினமிகுதிகளொவையுமேலவாம
வுகுதியினவசததுவரவுபோக்கது
புகுதியிலலாதவர்புலததிறரறுகுமோ. (௩௬

இதுவுமது.

உகு. * எழுத்தியலுளததினெண்ணிலாவகை
முழுத்தனிநானமுகன்முதலமறறுயிர
வழுததரும்பொருட்டதோரொளியினவைருமால
விழுத்தனிபபல்லிதழ்விரையிலாமுகிழ. (எ0)

இதுவுமது.

உஎ. சிநதையிறசெயகையிற்சொல்லிறசோநதுளன
இநதியநதொறுமுளனுறறதெணணினன
முநதையோரெழுததெனவநதுமுமமுறைச
சந்தியும்பதமுமாயததழைதததனமையான. (எஉ)

இ-ள். முந்தை ஓர் எழுத்து என வந்து - பழமையான வொப்பற்ற அககரமெனவந்து, மும்முறைச் சநதியும பதமும் ஆய் தழைத்த தன்மையான் - மூனறுகிரமஙகளையுடைய சந்தியும் பதமுமாகித் தழைத்த தன்மையையுடையான. (எஉ)

முந்தையோரெழுத்தாவது பணவம். அதனுள் மூன்றெழுத்துள்ளனவென்றும் அவற்றுக்குப் பதத்துப்பிரகாரமாய்ப் பொருளுள்ளதென்றும் * "மூன்றெழுத்ததனை மூன்றெழுத்ததனால் மூன்றெழுத்தாக்கி" என்ற பாசுரம் அபபொருளைக் கொண்டதென்றுங் கூறுப.

உஅ. வெண்கோடிறறனமெயயிலாசெய்யுங்
கணகோடறபொறியிற்கடிதேகி
யெண்கோடறகரிதெனனவெகுணடான
றிணகோடைககதிரிநறெறுகணணன. (கூஅ)

இ-ள். வெண்கோடு இற்றன - வெள்ளிய கொம்புகளொடிந்தன, மெய்யிலர் செய்யும் கண் - மெய்யிலர் துன்பஞ் செய்யுமிடத்து, திண்கோடைக் கதிரில் தெறுகண்ணன் - முதிர்ந்த கோடைக்காலத்துச் சூரியனைப்போல அழிக்கின்ற கண்களையுடைய இரணியன், கோடல் பொறியில் கடிது ஏகி - பார்த்தலைச் செய்கின்ற இந்திரியமாகிய கண்போல விரைவிலேகி, எண்

* மூனறெழுததனைமூன்றெழுததனாலமூனறெழுததாககிமூனறெழுத்தை
ஏன்றுகொண்டிருபபாக்கிரக்கநன்குடையவெமபுருடோததமனிருக்கை
மூன்றடிநிமிர்த்துமூனறினிற்றோன்றிமூன்றினினமூன்றுருவானான
கான்றடம்பொழில்சூழ்கங்கையின்கரைமேற்கண்டமெனனுமகடிநகரே.

கோடற்கு அரிது என்ன வெகுண்டான் - இவனது வலியை வாங்குதலுக்கு அரிதென்னவென்று கோவித்தான். எ-று. ()

உகூ. அத்தனமையறிநதவருநதிறலோ
னுய்த்தயம்மினெனமுன்னெனவுய்ததனராற்
பித்துணடதுபோவுறுமாபெறுதங்
கைத்துஙகடுநஞ்சினெனக்கனலா. (ககசு)

இ-ள். அத்தன்மை அறிந்த அருந்திறலோன் - அத்தன்மையைத் தெரிந்த அரிய வலியுடைய இரணியன், என்முன் - எனக்கு முன், உய்த்து உய்மின் என உய்த்தனர் - (பிரகலாதனை) கொண்டு வாருமென்று சொல்லக்கொண்டுவந்தனர், பித்து உண்டு அதுபோஉறும் ஆபெறுதும் - (அப்பிரகலாதனை) பித்துத் தொடுத்ததுண்டு அப்பித்து நீங்கும் விதத்தைச் செய்வோம், என - என்று கருதி, கைத்தும் கடும் நஞ்சின் கனலா - கைக்கின்ற கடியவிடம்போலக் கோவித்து. எ-று. (ககசு)

ந0. இட்டார்கடுவல்விடமெண்ணுடையான
றொட்டானுகரதொகைவன்கனைசயிற
கட்டார்கடுமததிகைகளகொடியான
விட்டானவன்மேலவாவீசினரால். (ககரு)

இ-ள். கடுவன் விடம் இட்டார் - கடிய வலிய விடத்தைக் கலத்திலிட்டார், எண்ணுடையான் - தியானமுடையான், நுகரத்தொட்டான் - உண்ண அவ்விடத்தை யெடுத்தான், கொடியான் - இரணியன், தொகைவன் கனையில்-கூட்டமாகிய வலிய முறுக்கிய கம்பிகளைப்போன்ற, கட்டு ஆர் கடுமத்திகைகள் விட்டான் - கட்டமைந்த கடிய குதிரைச் சம்மட்டிகளை யெடுத்தெறிந்தான், அவர் அவன்மேல் வீசினர் - அவர் அப்பிரகலாதன்மேல் வீசினர். எ-று. (ககரு)

நக. குயிற்றியவண்டங்குஞ்சையிட்டிலாமுட்டைமுட்டப
பயிற்றியபருவமொத்தகாலத்துளமுதுபல்கும்
எயிற்றுவன்பகுவாயுள்புக்கிருக்குனவிருக்கையெய்தி
வயிற்றின்வநதன்னுளின்னுள்வாழுமன்னுயிர்கண்மனனே. (கநரு)

இ-ள். குயிற்றிய அண்டம் குஞ்சை இட்டிலா முட்டை முட்ட - தான்படைத்த அண்டமாகிய குஞ்சைப் பொறிக்காத

மூட்டையுள் மோத, பயிற்றிய பருவம் ஒத்த காலத்துள்-(குஞ்சைப்பொறிக்க) அனைத்தகால மொத்தகாலத்தில், வயிற்றின் வந்து - உதரத்தினின்றுவந்து, அந்நாள்-இரணியனைக்கொன்ற அக்காலத்திலும், இந்நாள் - இககாலத்திலும், வாழும் மன்னுயிர்கள் - வாழுகின்ற நிலைபெற்ற வுயிர்கள, அமுது பல்கும் வன்எயிற்று பகுவாய் உள்புக்கு - அமுதூறுகின்ற வலிய பற்களையுடைய பெரியவாயுட புகுந்து, இருககை எய்தி இருக்குன-தாமிருககுமிடத்தைதயடைந்து இருந்தன. எ-று. (க௯௫)

௯உ. வகிர்ப்படுததுாககுமபறறிவாய்களைபபிளககும்வனறோல்
துகிற்படுததுாிககுஞசெநதீககணகளைதேோணடுருசுறறிய
பகிர்பபடக்குடரைகசொய்யுமபசையறபபிசையும்பல்கா
லுகிாபபுரைபுகசோர்தம்மையுகிாகளாலுறககுமேனறி. (ச௯அ)

இ-ள். உகிர்ப்புரைபுக்கோர் தம்மை உகிர்களால் ஊன்றி உறக்கும் - நகஙகளினுடபுகுந்த அசுரர்களை நகங்களாலூன்றிப் பிதுக்கும், (க௯அ)

பிரமனதுதி

௯௯. தனனைப்படைத்ததுவுநதானேயெனுந்தன்மை
பினனைப்படைத்ததுவேகாட்டும்பெருமபெருமை
யுன்னைப்படைததாய்நீயெனறுலுயிர்படைபபா
னெனனைபபடைததாயெனுமிதுவுமேதாமோ. (கருள)

இ-ள். தன்னைப் படைத்ததுவும் தானே எனும் தன்மை பின்னைப் படைத்ததுவேகாட்டும் - தன்னை யுண்டாக்கியதுந்தானே யென்னுந் தன்மையை (எல்லாரையும் படைத்தயென்னை) பின்புண்டாக்கியதுவே சொல்லும், பெரும பெருமை - பெரிய பெருமையுடைய, (கருள)

இதுவுமது.

௯௪. பேரையொருபொருட்கேபல்வகையாறபோததெண்ணுந
தாரைநிலையைதனிமையைபிறரிலலை
யாரைப்படைககின்றதியாரையளிககினற
தியாரைததுடைககினறதையாவறியேமால. (கருக)

இ-ள். பேரை - எல்லாப் பேர்களையுமுடைய, ஒருபொருட்கே பல்வகையால் பேர்த்து எண்ணும் - (நீயாகிய) ஒருபொருளையே பலவகையால் வேறுபடுத்தெண்ணுகின்ற, தாரை நிலை

மை - ஒழுங்குடைய நிலைமையுடைமை, தனிமை - தனிமை யுடைமை, பிறர்இல்லை - இவ்வாறு நீயன்றிப்பிறரில்லை, (கருகூ)

---

## ச - வது. விபீடணனடைக்கலப்படலம்.

## விபீடணாழ்வான் சரணாகதஞ்செய்ததைச் சொல்லும்படலம்.

இராவணன்விபீடணாழ்வானுக்குச்சொல்லியது.

௩௫. இரணியனெனபவனெம்மனோரினு
முரணியனவனறனைமுருககிமுறறினை
அரணியனெனறவறகனபுபூணடனை
மரணமென்றொருபொருண்மாறறும்வணமையோ. (உ)

இ-ள். இரணியன் என்பவன் எம்மனோரினும் முரணியன் - இரணியனென்று சொல்லப்படுபவன் எம்போலியரினும் வலியுடையவன், அவன் தன்னைமுருக்கி முற்றினன் - அவனைக்கோவித்து முடித்ததிருமால், அரணியன் என்று - காப்பவனுவானென்று, மரணமென்று ஒருபொருள் மாற்றும் வண்மையோ - சாவென்று சொல்லப்படுகின்றவொரு பொருளைப் போக்கும் வண்மையாலோ, அவற்கு அனபு பூண்டனை - அத்திருமாலுக் கன்பு செய்தனை. (உ)

௩௬. மினனகுமணிவிரறறேயவீழ்சணீா
துன்னருமபெருஞசுழியழிபபசோாவிறொ
டினனகைநுளைசசியரிழைககுமாழிசால
புனனையம்பொதும்பருமபுககுறோககினை. (உ-அ)

இ-ள். மின் நகுமணி விரல்தேய - ஒளிவிளங்குகின்ற இரத்தினம் பதித்தவிரல தேயும்படி சுழித்த, துன அரும்பெரும் சுழி - கூட வரிதாகிய பெரிய சுழியை, வீழ்கண்ணீர் அழிப்பச் சோர்விறொடு - விழுகின்ற கண்ணீர் அழிக்கச் சோர்வோடு இன் நகை நுளைச்சியர் இழைக்கும் ஆழிசால் - இனிய பற்களை யுடைய நெய்தனிலப்பெண்கள் (மீண்டும்) செய்கின்ற வட்டங்

களமைந்த, புன்னை அம்பொதுமபரும்புக்குநோக்கினன் - புன்னைமரங்கள் நிறைந்த அழகிய சோலையையும் புகுந்து பார்த்தான். எ-று. (உஅ)

சுழிக்குஞ் சுழிகளையெல்லாங் கண்ணீரழிபபதால சோர்வினேடிழைக்கு மென்றார். சுழியின்னதென்று பாலகாண்டத்திற் கூறினும்.

௩எ. கூதிர்நுணகுறும்பனிநதிவலைசகோவைகால
மோதிவெணடிரைவாமுடவெணடாழைமேற
பாதியஞ்சிறையிடைபபெடையைப்பாடலைநத
தோகிமநதயிலவகணமயிாபபுலீஙகினை. (உகூ)

இ-ள். வெண்திரைமோதிவர - கடலினது வெள்ளியஅலைகள் மோதி வீச, கூதிர் நுண்குறும்பனித்திவலைக்கோவைகால் - காற்றால் நுண்ணிய சிறிய குளிர்சசியுடைய திவலை வரிசைகளைத்துளிக்கின்ற, முடவெண்தாழைமேல - கோணலுடைய வெண்டாழை மரததின்மேலிருநது, (உகூ)

௩அ. மறறொருபொருளுளதெனனின்மாறிலாக்
கொறறவசரணெனககூயதோருரை
உறறதுசெவிததலததையனெலலென
நறறுணைவரைமுகநயநதுநோககுற. (௩௫)

இ-ள். மற்று ஒருபொருள் உளது என்னில் - நின்னையன்றியொருபரமபொருளுள்ளதென்று சொல்லின், மாறிலாக் கொற்றவ - அதினின்றும் வேறுபடாத இறைவ, சரண் எனக கூயது ஓர் உரை - சரணமென்று நினைககூவியதாகிய வொருவார்த்தை, செவித்தலத்து உற்றது - செவியுற் பட்டதென்று சொல்ல, ஐயன் ஒலலென நல்துணைவரை முகம் நயந்து நோக்குற - ஸ்ரீராகவபிரான் விரைவாய் நல்லதுணைவராகிய சுககிரீவன்முதலியோரது முகஙகளை விரும்பிப்பார்த்து, (௩௫)

மயிநதனஸ்ரீராகவபிரானுக்குசசொலலியது

௩௯. முரணபுகுதீவினைமுடிததமுனனவன
கரணபுகுசூழலேசூழககாணபதோ
ராண்பிறிதிலலெனவருளினவேலையைச
சரணபுகுநதனனெனமுன்னஞசாறறினை. (௫௩)

இ-ள். முரண்புகு தீவினை முடித்த முன்னவன் - வலியுடைய தீவினைகளைச் செய்த தமையன், கரண்புகு சூழலே சூழ-மனஞ் சென்ற வழியிலே செல்ல, காண்பது ஓர் அரண் பிறிது இல் என-தான்பெறுவதாகிய வோர்காப்புவேறில்லையென்று, ()

௬௰. * அடுத்தநாட்டரசியல்புடையவாணையாற
படுததவர்பட்டவாபகைஞரோடொரு
மடக்கொடியயாநதவாமைந்தராயினு
முடற்கொளததகையாநமமுழைவநதொன்றினல். (௮௧)

அனுமான்சொலலியது.

௬௧. பகைபபுலத்தோர்துணையல்ல ரென்றிவரைபபற்றேமேலறிஞர்பார்க்கி
னகைப்புலததுதாமனறேநறறுயமுளதாயபறறுனமிகக
தகைப்புலத்ததநதையாகடமபியர்கடமையரிவாதாமேயனறே
மிகைப்புலத்துவிளைகினறதொரு பொருளைக்காதலிககின்விளிஞராவார்

இ-ள். பகைப்புலத்தோர் துணை அல்லர் என்று இவரைப்பற்றேமேல்-பகையிடத்தோர் நமக்குத் துணையாகாரென்றிவரைக்கொள்ளேமாயின், அறிஞர் பார்க்கின் நகைப்புலத்தது ஆம்-அறிவுடையோர் கேட்பின் அது சிரிப்பிடத்ததாகும், மிகைப் புலத்து விளைகின்றது ஒருபொருளைக் காதலிக்கின்-மிகுதியான அறிவினிடத்திலுண்டாகிய ஒருபொருளை விரும்பின், நல்தாயம் உளதாய பற்றுல் மிக்க-நல்லவுறவுளதாகிய அன்பால் மிகுந்த, தகைப்புலத்த தந்தையர்கள் தம்பியர்கள் தமையர் இவர்தாமே விளிஞர் ஆவார் - மேன்மைபொருந்திய அறிவுடைய தந்தையர்களுந் தம்பியர்களுந் தமையர்களுமாகிய விவர்தாமே "கோவமுடையோராவார், (௧௦௫)

ஸ்ரீராமபிரான்சொல்லியது.

௬௨. பிறநதநாடடொடஙகியாருநதுலைபுக்கபெரியோன்பெற்றி
மறநதநாளுணடோவெனனைச்சரணெனவாழ்கினறுனைத்
துறநதநாட்கின்றுவநதுதனனினுனசூட்சியாலே
இறநதநாளனறேவெனறுமிருநதநாளாவதெனறுன. (௧௦௧)

இ - ள். துலைபுக்க பெரியோன்பெற்றி - ஒருபுறவின் பொருட்டாகத் துலையிலேறிய சிவிசக்ரவர்த்தியின் குணத்தை, யாரும் பிறந்தநாள் தொடங்கி - எல்லாருந் தாம் பிறந்தநாள் மு

தல், மறந்தநாள் உண்டோ - மறந்தநாளுமுண்டோ, என்னைச் சரண் என வாழ்கின்றானை - எனக்கபயங்கூறி வாழ்கின்ற வீடணனை, துறந்தநாட்கு - நானபயஞ்செய்யாமல் நீக்கியநாளுக்கு, இன்றுவந்து துன்னினான் சூழ்ச்சியாலே-இன்றுவந்து சேர்ந்த அவ்வீடணன் செய்யுந் தந்திரத்தாலே, இறந்தநாள் அன்றோ என்றும் இருந்தநாள் ஆவது என்றான - மரித்தநாளன்றோ என்று மிருந்த நாளாவதெனறு சொலலினான. எ-று. (கo௯)

எதிர்மறை உமமை வருவிக்கபபடடது.

இதுவுமது.

௬௩. மன்னுயிரெலலாநதானேவருவித்துவளர்ககுமாயன
தனனனவுலகமெலலாநதருமமுமெலவயுநதானே
யெனனினுமடைநதார்தமமையேமுறவினிதினுமைப்
பினனும்வீடளிககுமெனறுலென்னினிபபிறிதுபேசில. (௧௧௧)

இ-ள். நிலைபெற்ற வுயிர்களெல்லாவற்றையுந்தானேபடைத்துக் காக்கின்ற திருமால், தன்னுடைமையனவாகிய எல்லாவுலகங்களுந் தருமமுதலிய யாவுந்தானே யாயினும், அடியார்களை உவக்க இனிது காததுப்பினபு நிரதிசயவின்பவீட்டையும் அருளுவா னென்றால் பேசில் (அபயஞ்செய்ய வேண்டியதேயன்றி)வேறினியாதுளது. (௧௧௧)

௬௪. மாற்கடஞ்சூழ்நதவைபபினஙகதன்மருஙகுகாப்ப
நாற்கடலுடுததபாரினாயகனபுதலவனுமப
பாறகடல்சுறறவிறகைவடவரைபாஙகுநிறகக
கார்க்கடலகமலம்பூததநெனபபொலிவானைககணடான. (௧௩௧)

இ - ள் அங்கதன் மருங்கு காப்ப - அங்கதனொருமருங்கு நின்றுகாக்க, வில்கை வடவரை பாங்குநிற்க - விலலைக கையிலுடைய மேருகிரியை யொத்த இளையபெருமாள ஒருபககநிற்க, நாமப்பால் கடல்சுற்ற - அழகிய பாற்கடல சூழ, கார்க்கடல் கமலம் பூத்தது எனப்பொலிவான் - கருமையுடைய கடல்தாமரைமலர்களை மலர்ந்ததைப்போல விளங்குகினற, நாலகடல் உடுத்த பாரின் நாயகன் புதல்வன் - அசைதலை யுடைய கடலாடை யுடுத்திய புவிக்கு நாயகனாகிய சக்ரவர்த்தித் திருக்குமாரனை, மற்கடம் சூழ்ந்தவைப்பில் - குரங்குகள் சூழ்ந்த நிலத்தில், கண்டான் - விபீடணனாழ்வான் பார்த்தான். எ-று. (௧௩௧)

மற்கடம - மாற்கடமென விகாரப்பட்டது.

சரு. அள்ளிமீதுலகைவீசுமரிக்குலச்சேனைநாப்பண்
டெள்ளுதண்டிரையிற்றாகிப்பிறிதொருதிறனுஞ்சாரா
வெள்ளியகடலின்மேனாள்விண்ணவர்தொழுதுவேண்டப்
பள்ளிதீர்ந்திருந்தானென்னப்பொலிதரும்பண்பினானை. (கநஉ)

இ - ள். தெள்ளுதண்டிரையிற்று ஆகிப்பிறிது ஒருதிறனும் சாரா—தெள்ளிய குளிர்ச்சியுடைய அலைகளையுடையதாகிவேறொருதிறனுஞ் சாராத, வெள்ளியகடலில் மேல்நாள் விண்ணவர் தொழுது வேண்ட - திருப்பாற்கடலில் முனநாளில் தேவர்கள் தொழுது பிரார்த்திக்க, பள்ளிதீர்ந்து இருந்தான என்ன-யோகநித்திரை நீங்கி வீற்றிருந்தவனைபபோல, உலகை அள்ளி மீது வீசும் அரிகுலச்சேனை நாப்பண் - உலகைப் பிடுங்கி மேலெறிகின்ற வலியுடைய குரங்குச் சேனையினடுவில்,பொலிதரும்பண்பினானை - பொலிகின்ற அழகுடையானை. எ-று. (கநஉ)

சசா. கோனுதறகமைந்தகோலப்புருவம்போற்றிரையுங்கூடப்
பூணுதறகினியமுத்தினபொலிமணல்பரநதவைபபிற
காணுதற்கினியநீளவெணமையிறகருமைகாட்டி
வாணுதறசீதைகணணினமணியெனவயஙகுவானை. (கநந)

இ-ள். கோனுதலுக் கமைந்த அழகுடைய புருவங்களைப் போல அலைகளுஞ்சேர, அணிதலுக இனியமுத்துக்களைப்போலப் பொலிகின்ற மணல் பரந்த விடததில், பார்த்தலுக்கினிய நீண்ட வெண்மையிற் கருமையைத் தோற்றி, ஒளிபொருந்திய நெற்றியையுடையசீதாப்பிராட்டியினது கண்ணினது மணியைப்போல விளங்குவானை. எ-று. (கநந)

கோள்நுதற்கு அமைந்த - பெருமைபொருந்திய நெற்றிக் கமைந்த எனவுமாம்.

சஎ. படர்மழைசுமநதகாலைப்பகர்வருமமரர்கோமா
னடர்சிலைதுறநதெனனவாரநதீமார்பினானைக்
கடல்கடைமத்திறபாம்புகழறறியதெனனக்காசின்
சுடரொளிவலயநீததசுநதரததோளினானை. (கநச)

இ - ள். (மேகங்கள்)படர்ந்த புனலைக்கொண்ட காலை துதித்தலுக்கரிய இந்திரனது, வலியுடையவில்லை நீக்கியதென்று சொல்லும்படி இரத்தினமாலை நீங்கியமார்புடையானை, கடலைக்

கடைந்த மந்தரகிரியாகிய மத்திற் சுற்றியகயிருகிய வாசுகியைக் கழற்றியதென்று சொல்லும்படிக்குற்றமில்லாத, மிகுந்தஒளியை யுடைய தோள்வலயங்களை நீத்த வழகிய தோளுடையானை. எ - று. (கசு)

சஎ. மினமினியொளியினமாயுமபிறவியைவேரின்வாங்கச
செம்மணிமகுடநீககிததிருவடிபுனைநதசெலவன
றம்முனாகமலததணணறுதையாசரணநதாழ
வெமமுனறெனககுசசெயதவுதவியெனறேமபலுற்றுன. (கஎ)

இ - ள். மின்மினிப் பூச்சியினதொளியைப்போலக் கணப் பொழுதில் மாய்கின்ற பிறவியை வேரொடுமபறிக்க, செவந்த இரத்தினங்கள் பதித்த கிரீடத்தைநீககிப் பாதுகங்களைத் தரித்த செல்வனுகிய பரதாழ்வானுககு, மூத்தோராகிய தாமரைமலரில் வதிகின்ற பிரமனுககுத் தந்தையாரது திருவடிகளை வணங்க, எனது தமையனாகிய இராவணனுறெனக்குச் செய்தவுதவி யென்று விபீடணுழ்வான் மகிழ்வுற்றுன். எ-று. (கஎ)

---

## ரு-வது. இலங்கைகேள்விப்படலம்.

:0:

## இலங்கையின்சிறப்பை விபீடணுழ்வான்சொல்ல ஸ்ரீராகவபிரான்கேட்டதைக்கூறுகின்றபடலம்.

விபீடணுழ்வானசொலலியது.

சக. விண்ணிடைவிழித்தனர்கிறரும்வெய்யவ
ரெணணிருகோடியினிரட்டியெனபரான
மணணிடைவானவாவருவரெனறவா
கணணிலாகரையிலாகரநதுபோயினா. (உரு)

இ-ள். கரையிலர்-அளவில்லாதவர், மண்ணிடை வானவர் வருவர்எனறு - புவியில் தேவர் வருவரெனறு, அவர் கண்ணிலர் கரந்துபோயினர் - அத்தேவர் கண்ணுக்குத் தோன்றுராகி யொளிந்து போயிருககினறனர், (உரு)

இதுவுமது.

௫௦. தேவருநதக்சமுனிவருநதிசைமுகனமுதலா
மூவருமபக்கநோககியேமொழிதாமுனிவான
றூவரும்பக்கமெணணிருகோடியினறலைவன
மாபெரும்பக்கனெனறுளனகுனறினுமவலியான். (௩௯)

இ-ள். தேவாகளும் தககமுனிவாகளும பிரமன் முதலிய, மூவர்களும் (அசசதநால்) பக்கம பாாதநுப் பேசும்படி கோவிப்பான், கெடுதலில்லாத சேனை பதினாறுகோடிக்குத் தலைவன், மாபெரும்பக்க னென்றொருவ னுள்ளானவன் மலையினும் வலியுடையான். எ-று. (௩௯)

இதுவுமது.

௫௧. உச்சிரதநெரிகதிரெனவுருநதெரிமுகதத
னச்சிரப்படைநாலிருகோடிககுராதன்
முசசிரத்சயிறறலைவறகுமவெலறகருமொயம்பன்
வசசிரதநெயிறறவனுளனகூறறுவனமாறறுன். (௪௰)

இ-ள். உச்சிரதத்து எரிகதிர் என உருத்து எரிமுகத்தன்- உச்சிப்பொழுதில ரதத்தினின் றெரிகின்ற சூரியனைப்போலக் கோவித்தெரிகின்ற முகத்தையுடையான், அச்சிரப்படை - அத் தலைமையான படை, (௪௰)

## ௬-வது. வருணனைவழிவேண்டுபடலம்.

:o:

இதுவுமது.

௫௨. காநதுநினறநினறனமையயதுசெலககருதும
பாநததுனறிருககுலமுதறறலைவராறபரிவாய
வரநதரும்மிநதமாககடல்படைசெலவழிவே
றிரநதுவேண்டுதிபெறிதிரைபபாவையையென்றன. (௨)

இ-ள்.கரந்து நின்ற நின்தன்மையை செல்லக் கருதும்-ஒளிந்துநின்ற உனது தன்மையைக கடக்கக் கருதுகின்ற, அது-அக்கடல், உன் திருககுலமுதல் தலைவரால் பாந்தது-உனது திருக்குலத்திற்கு முதலாகிய தலைவர்களால் தோண்டப்பட்ட தாகலின்; இந்த மாக்கடல் பரிவாய் வரம் தரும்-இந்தப்பெரியகடல்

அன்பாய் வரங்கொடுக்கும், படைசெல - சேனைசெல்ல, எறிதிரைப்பரவையை-வீசுகின்ற அலையையுடைய அககடலை,இரந்து வேறுவழி வேண்டுதி என்றான - இரந்து வேறுவழியை வேண்டுவாயென்று சொனனான். எ-று (௨)

ஸ்ரீராகவபிரானசொல்லியது.

௫௩. மறுமைகண்டமெஞ்ஞானியாஞாலநதுவரினும
வெறுமைகண்டபினயாவருமயாரெனவிரும்பார
குறுமைகண்டவாகொழுங்கனலெனவினுஙகூசாா
சிறுமைகணடவாபெருமைகணடலலதுதேறா. (௧௪)

இ-ள். வெறுமைகணடபின் யாவரும் யார் என விருமபார்- அவரிடத்தில ஒருபொருளுமில்லாமையைப பார்த்தபினபு எல்லாரு மிவர் யாரோவெனறு விருமபார், (௧௪)

௫௪. மீனுநாகமுமவிணதொடுமலைகளுமவிறகா
யேனைநிறபனயாவையுமேலெரியெயதப
பேனநீர்நெடுநெயயெனபபெயகணைநெருபபாற
கூனையங்கியினகுணடமொததுசடறகுட்டம். (௧௧)

இ-ள். மீன்களும் பாம்புகளும்•ஆகாயத்தைத் தொடுகின்ற மலைகளும் விறகாக, ஏனையுள்ளனவெலலாம் (வெந்து) மேலெரியோங்க, நுரையுடைய நெடும்புனல் நெய்போலாக, ஸ்ரீராகவ பிரா னெய்த வம்புகளின் நெருப்பால், கடலாகிய குட்டம்வளைவான அழகுடைய வககினிகுண்டததை யொத்தது.எ-று.(௧௧)
கூன் ஐ என்று பிரிக்க.

௫௫. செபபினமேலவாசீறினுமதுசிறபபாத
றபபுமேயதுகணடனமுவரியிறறணியா
வுப்புவேலையெனறுலகுறுபெருமபழிநீஙகி
யபபுவேலையாய்நிறைந்ததுகுறைநததோவளககர். (௫௫)

இ-ள். அம்பு வேலையாய் நிறைந்தது அளக்கர் குறைந்த தா-அம்பு வேலையாய் நிறைந்தது கடல் குறைவடைநததோ.

அம்பு அப்பு எனவிகாரப்பட்டது.

௫௬. ஆழியிற்புனலறமணிகளட்டிய
பேழையிறபொலிநதனபரவைபேறறப
பூழையிற்பொருகணையுருவபபுககன
மூழையிற்பொலிநதனமுரலுமவெள்வளை. (௫௨)

இ-ள். ஆழியில் புனல் அற - கடல்களில் நீரற்றுப்போக, பரவை - அக்கடல்கள், மணிகள் அட்டிய பேழையில் பொலிந்தன - இரத்தினங்களை நிறைத்துவைத்த பெட்டியைப்போல விளங்கின, பேறு உற பூழையில் பொருகணை உருவப்புக்கன - வாய்ப்புறத் துவாரத்திற் பொருந்திய அம்புகள் உருவநுழைய, மூரலும் வெள்வளை மூழையில பொலிந்தன - ஒலிக்கின்ற வெள்ளிய சங்கங்கள அகப்பையைப்போல விளங்கின. எ-று. (௫௨)

௫௭. நன்றிதுபுரிதுமனறேநளிாகடறபெருமைநமபா
லினறிதுதீருமெனனிலெளிவரும்பூதமெலலாம
குனறுகொணடடுககிசசேதுகுபிறறுதிரெனறுகூறிச்
சென்றனனிருககைகோககிவருணனுமருளிறசெனறுன். (௮௫)

இ-ள். நன்று இது புரிதும-நன்றிதனைச் செய்வோம், நளிர் கடல் பெருமை இது - குளிர்ச்சியுடைய கடலின் பெருமையாகிய இது, இனறு நம்பால தீரும் என்னில - இன்று நம்மிடத்திலடங்குமாயின், பூதம் எல்லாம் எளிவரும் - மற்றைய பூதங்களெல்லா மெளிதாயடங்குமென்று சொல்ல, (௮௫)

## எ-வது. சேதுபந்தனப்படலம்.

௧௮. அசம்புபாய்தேனும்பூவுமாரமுமகிலுமறறும்
விசும்பெலாமுதவுந்தெயவவேரியினமிடைநதுவிம்மத்
தசும்பெலாமவாசமூட்டிசசார்ததியதணணீரெனனப்
பசம்புலாறுறுமவேலைபரிமளங்கமழநததனறே. (௧௭)

இ-ள். தசும்பு எல்லாம்வாசம ஊட்டிச் சார்த்திய தண்ணீர் என்ன-குடங்களிலெல்லாம வாசத்தையூட்டி வார்த்த குளிர்ச்சியுடைய நீரைப்போல, பசமபுலால் நாறும் வேலை பரிமளம் கமழ்ந்தது - பசியபுலால நாறுகின்ற கடல் மிகுந்த மணத்தை வீசிற்று. (௧௭)

௫௧. மூசெரிபிறக்சமீககொணடிறககியமுமிக்கநதன்றுற
கோசொரிநறவமெனனததணபுனலுக்குகருங்குனறின்
வேய்சொரிமுதுக்கமமாவிருநதுசெயதிருநதவீணட
வாய்சொரியிப்பியோடும்வலம்புரியுமிழ்நதமுததம். (௨௫

இ - ள். மூசு எரிபிறக்க மீக்கொண்டு இறக்கிய முடுக்கம் தன்னால் - மொய்க்கின்ற அக்கினியுண்டாகமேலே கொண்டு இறக்கிய முடுக்கத்தால், கோசொரி நறவம் என்னத் தண்புனல் உகுக்கும் குன்றின் - ஆகாயஞ்சொரிகின்ற தேனைப்போலக் குளிர்ந்த நீரைச்சிந்துகின்ற மலையிலுள்ள, வேய் சொரிமுத்து க்கு - மூங்கில்கள் சொரிந்த முத்துக்களுக்கு, ஈண்டவாயசொரி இப்பியோடும் வலம்புரி உமிழ்ந்த முத்தம் - சேர்ந்த வாய்கள் சொரிந்த இப்பியின் முத்துக்களோடுஞ் சங்கங்களீன்ற முத் துக்கள், விருந்து செய்து இருந்த - விருந்தாக வந்திருந்தன. எ - று. (உ௫)

௬௰. யானுண்டனவிங்கிவையென்னவே
தீனுண்டனவென்னிதுசெய்யுமே
மானுண்டதிரைக்கடல்வாழ்தரு
மீனுண்டனவில்லைவிலங்கரோ. (உ௬)

இ-ள். இங்கு இவை யான் உண்டன என்ன-இக்கடலி லுள்ள இவைகள் யானுண்டவைகளென்று, தீன் உண்டனை இது என்செய்யும - தீனியை யுண்டன இதுவன்றியாது செய்யும், மான் உண்டு திரைக்கடல் வாழ்தரு- மான்களுண் ண இல்லாத அலையையுடைய கடலில் வாழ்கின்ற, மீன உண்டனை விலங்கு இல்லை - மீன்களுண்டனவாகிய விலங்குக ளில்லை. எ-று. (உ௬)

௬௧. வவ்விலங்குவளர்த்தவர்மாட்டருள
செவ்விலங்கலிலசிந்தையிற்றீருமோ
விவ்விலங்கல்விடோமினியெனபபோ
லெவ்விலங்குமவந்தெய்தினவேலையே. (உ௭)

இ - ள். வவ்விலங்கு வளர்த்தவர்மாட்டு - பிடிக்கப்பட்ட மிருகங்கள் தன்னை வளர்த்தவரிடத்தில, செவ் அருள்விலங்கல் ..ல் சிந்தையில் தீருமோ - செவ்வையான அன்பு நீங்கலில்லாத ..னத்தாற் பிரியுமோ, இவ்விலங்கல் - இம்மலையை. (உ௭)

௬௨. அருணசெமமணிகுன்றயலேசில
விருணற்குனறமடுககினவேய்நதன
கருணைக்கொண்டல்வறியனகழுதடுதன
வருணற்கீநதன்றுணசரதகையே. (௩௰)

இ-ள். அருணச்செம்மணிக்குன்று அயலே - சிவப்புடைய செவ்விய அழகுடைய மலைகளுக்குப் பக்கத்தில், இருள்நல் சில குன்றம் அடுக்கின - இருள்போன்ற நிறமுடைய நல்லசிலமலைகளடுக்கப்பட்டன, கழுததுவறியன் என - (வருணன்)கழுத்து வறியனாயிருக்கின்றானென்று, கருணைகொண்டல் - அருளுடைய மேகம்போன்ற ஸ்ரீராமபிரான, வருணறகு ஈந்தவருண சரத்தை - அவ்வருணனுக்குக் கொடுத்தபல நிறங்களையுடைய மாலையை, ஏய்ந்தன - அம்மலைகளொப்பாயின. எ-று. (௩௫)

## ௮-வது. ஒற்றுக்கேள்விப்படலம்.

### இராவணன் ஒற்றுக்கேட்டதைக் கூறுகின்றபடலம்.

௯௩. ஊழிமுதனாயகனவியப்பினொடுவநதா
னூழமுறைசெய்யுமளவேயினியதொன்றே
வாழியினிலங்கைபெரிதததிசையசாமே
லேழுகடலுநகடிதடையபபணிவனெனறான. (௪)

இ-ள். ஆழியின் இலங்கை பெரிது அத்திசையது ஆமேல் - இக்கடலிலிருக்கின்ற இலங்கைதூரமாகிய அத்திசையி லிருப்ப தாயின், இவன் - இந்நளன, ஏழுகடலும் கடிது அடைப்பன் என்றான் - ஏழுகடலையும் விரைவிலடைப்பானென்றுசொல்லினான். (

அத்திசையென்றது - ஏழுகடலுக்கு மப்புறத்திடத்தை.

௯௪. மெய்யிடைநெருங்கவிசையுற்றவயலவீழும
பொய்யிடமிலாதபுனலிறபுகலிலாத
வுய்விடமளிக்குமருளாளாமுறையுய்ததாா
கையிடைசெனறுகரைகணடகரையிலலை. (௫

இ-ள். மெய் இடை நெருங்க விசை உற்ற அயல் வீழும் - சரீரங்கள் நடுவில் நெருங்க வேகம்பொருந்திய குரங்குகள் பக்கத்தில் விழும், பொய இடம் இல்லாத புனலில் புகல் இல்லாத - வெற்றிடமில்லாத நீருட் செல்லாதனவாய், உய்வு இடம் அளிக்கும் அருளாளர் முறை உய்த்தார் - பிழைப்புக் கிடஞ்செய்யும் அருளுடையார் முறையாய்ச் செலுத்தினார், கையின் இடைசெ

ன்று கரைகண்ட கரை இல்லை - (அவ்வாறு) கைபற்றிச்சென்று கரையைச்சார்ந்த குரங்குகளுக்களவில்லை. எ-று. (௧௦)

௬௫. இழைத்தனையவெங்கதிரின்வெஞ்சுடரிராமன்
மழைத்தமுகிலன்னமணிமேனிவருடாமற
றழைத்தநிழலுறறகுளிர்சநதனமுயாநத
வழைத்தவையெடுததருகுசெனறனரநேகர். (௧௧)

இ-ள். இழைத்து அனைய வெம்கதிரின் வெம்சுடர் - ஆகாயத்திற்பதித்து இழைத்ததை யொத்த வெவ்விய சூரியனது வெப்பமுடைய கிரணம், இராமன் மழைத்த முகில் அன்னமணி மேனி வருடாமல்-ஸ்ரீராமபிரானது நீருடைய மேகம்போன்ற அழகிய திருமேனியை வருடாமல், அநேகர் - அநேகவானரர், தழைத்த நிழல் உற்ற-தளிர்களால் தழைத்த நிழல்பொருந்திய, உயர்ந்த குளிர் சந்தனம் - வளர்ந்த குளிர்ந்த சந்தனமரங்களை, அழைத்து - பிடுங்கி, அவை எடுத்து அருகுசென்றனர் - அம் மரங்களை யெடுத் தருகிற்சென்றனர். எ-று. (௧௧)

௬௬. செயிர்பபினுமழகுசெயயுநதிருமுகததணஙகைதநிீரநது
துயிறசுவைமறநதானறோளிறறாயநிலாததழுவுநதோறற
மயிறகுலமபிரிநததெனனமரகதமலைமேனமெளள
வுயிர்பபுடைவெள்ளைபபிளளைவாளராவூாவபோனற. (௨௨)

இ-ள். கோவிப்பினும் விகாரமின்றியழகைச்செய்கின்ற திருமுகத்தையுடையசானகிபிராட்டியைப்பிரிந்து, துயிலின்பத்தை மறந்தஸ்ரீராமபிரானது தோளில் பரிசுத்தமாகிய நிலாத்தழுவு தன்றதோற்றங்கள், மயிற்கூட்டம் பிரிந்ததென்று மரகதமலை மேல்,மூச்சுடைய வெள்ளைநிறமபொருந்திய பாமபுகுட்டிகள் ஊர்வதையொத்தன. (௨௨)

௬௭. பெருமையுஞ்சிறுமைதானுமுற்றுறுபெற்றியாறற
வருமையின கன்று நீணடவிஞ்ஞையுளடங்கிததாமு
முருவமுநதெரியாவணணமொளிததனருறையுமாயத
திருவரையொருஙகுகாணுமயோகியுமெனனலாஞ்ஞ. (௨௬)

இ-ள். பெருமையும் சிறுமைதானும் உற்றுறு பெற்றி ஆற்ற-பெருமையுஞ் சிறுமையும் பொருந்திய தன்மை மிகுந்த, அருமையின் அகன்று நீண்ட விஞ்ஞையுள அடங்கி - அருமை

யோடு பரந்து நீண்ட வித்தையுளடங்கி, தாம் உருவமுந்தெரி யர்வண்ணம் ஒளித்தனர் - தமதுருவமுந் தெரியாத விதமாய் (அரக்கரிருவரும்) ஒளித்தனர், மாயத்து உறையும் இருவரை ஒருங்குகாணும் யோகியும் என்னல் ஆனுன்-மாயத்தால் மறைந் துறைகின்ற சிவேசுவரரென்னு மிருவரை யொக்கப்பார்க்கின்ற யோகியுமென்று சொல்லுமபடி விபீடணுழ்வாஞனுன். எ-று.()

சுஅ. கள்ளரேகாணடியெனறுமநதிரங்கருததுட்கொண்டான
றெள்ளியதெரிகருந்தெவவர்தீர்வினைசேர்தலோடும்
துள்ளியினிரதந்தோய்நதுதொனனிறங்கரிநறுவேருய்
வெளளியோடிருநதசெம்புமாமெனவேறுபட்டாா. (ருக)

இ-ள். கள்ளரே காண்டி என்று - இவராக்கரே பார்த்தி யென்று, தெள்ளிய தெரிக்கும் - தெள்ளியவற்றைத் தெரிவிக் கின்ற, மந்திரம் கருத்துள் கொண்டான்-மந்திரத்தை மனத்து ளெண்ணினுன், தெவ்வர் தீர்வினை சேர்தலோடும் - பகைவர் கொண்ட குரங்குருவம் நீங்கும்படியான அம்மந்திரஞ் சேர்த லோடும், (ருக)

ஒற்றாகூறியது.

சுகூ. தாயதெரிநதுலகுகாததவததியைததனனைககொல்லும்
நோயதெரிநதுணராானறேடிககொண்டனனுவலவெனறு
வாயதெரிநதுணரா்வணணங்கழறுவாாவணஙகிமாய
வேயதெரிநதுரைககவநதோமவினையினுலவீரவெனருா. (ருரு)

இ-ள். வாயதெரிந்து உணராவண்ணம் கழறுவார் - வா[ய்] கால் பிறாறிந்துணராவண்ணமாய்ச் சொல்லுவார், வணங்கி-[த்தி] வடியைப் பணிந்து, வீர - வீரனே, தாய்-தாயை, தெரிந்துஉல குகாத்த தவத்தியை-அறிந்துலகைக்காக்கின்ற தவமுடையாளை, தன்னைக்கொல்லும் நோய - தனனைக்கொல்லும் பிணியை, தெரி ந்து உணரான் தேடிக்கொண்டனன்-அறிந்துணராஞகிக் கேடு தேடிக்கொண்ட இராவணன், நுவல என்று-ஒற்றிவாரு மென் றுசொல்ல, வினையினுல் - கள்ளப்படிவத்தால், மாய வேய்தெரி ந்து உரைக்க வுந்தோம் என்ருர் - வஞ்சகமா யொற்றறிந்து (அவ்விராவணனுக்கு) சொல்லவந்தோமென்று சொன்னுர். எ-று. (ருரு)

மாலியவான்சொல்லியது.

எ0. கிழிபடக்கடல்கீண்டதுமாண்டது
மொழிபடைத்தவலியெனமூண்டதோர
பழிபடைத்தபெருமபயத்தன்னவன்
வழிகொடுத்ததெனனுளளம்வருததுமால். (சரு)

இ-ள். கடல் கிழிபடக்கீண்டதும் - கடல் கிற்றுப்படக்கீண்டதும், ஆண்டதும் - இராமன் அதனையாண்டதும், வலிமொழி படைத்த எனமூண்டது - வலிமொழியைப் படைத்ததென்று உலகெங்கும் பரவிய, ஓர் பழிபடைதத பெரும்பயத்து அன்னவன் - ஒப்பற்ற பழிச்சொல்லைக்கொண்ட மிகுந்த அச்சததை யுடைய அக்கடலிறைவன, வழிகொடுததது என்னுளளம் வருத்தும் - வழிகொடுததது மெனது மனத்தை வருததுகின்றது. எ - று. (சரு)

ஒற்றர்இராவணனுக்குசசொலலியது.

எக. அடியமந்நெடுஞ்சேனையையாசையால
முடியநோககலுறறேமுதுவேலையின
படியைநோககியபாரமபடர்குற்ற
கடியவேகககலுழனிறகண்டிலம. (ருஎ)

இ-ள். முது வேலையின் படியை - பழைய கடலின் நிலத் தினது, பாரம் - முடிவை, நோக்கிய-பார்ப்பதற்கு,படர்குற்ற- சென்ற, கடிய வேகக்கலுழனில் - கடியவேகததை யுடைய கருடனைப்போல, அடியம் - அடியோங்கள், ஆசையால் - விருப்பத் தால், அந்நெடும்சேனையை முடியநோக்கலுற்றோம்-அந்நெடிய சேனையை முற்றும் பார்க்கலுற்றோம், கண்டிலம் - முற்றும்பார் த்திலம். எ - று, (ருஎ)

இதுவுமது.

எஉ. நுவலயாமவர்வேணடியநோககதோ
கவலைவேலையெனுங்கரைகண்டிலா
தவலமெய்தியடைத்துழியாதநெழுந
துவலையேவநதுசொல்லியதில்லையோ. (ருஅ)

இ-ள். அவர் நோக்கு அது யாம் நுவலவேண்டிய,

## ௬-வது. இலங்கைகாண்படலம்.

# ஸ்ரீராகவபிரான் இலங்கையைப்பார்த்ததைக் கூறுகின்றபடலம்.

இராவணனுக்குமாலியவானசொல்லியது.

எ௩. பூசறகுமுயனறுநமபாறபொருதிரைபபுணரிவேலைத
தேசததுககிறைவனைதசரதனசிறுவன்றனனை
மாசறறசோதிவெளளததுசசியினவரம்பிறறோனறு
மீசறகுமீசனவநதானெனபதோராவார்ததையிட்டார். (எ)

இ-ள். நம்பால் பூசற்கு முயன்று - நம்மிடத்திற் பொருத லுக் கெத்தினித்துவந்த, (எ)

எ௪. உளளமேதூதுசெல்லவுயிரனாருறையுளுடுங்
கள்ளமாமகளிர்சசேருநேமிபபுட்கவறசிநீஙகக
கொளளைபூணடமரர்வைகுங்குனறையுங்கோட்டிறகொண்ட
வெள்ளநீரவடிநதநெனனைவீஙகிருள்வெடிநததனறே. (உ௩)

இ-ள். உள்ளமே தூதுசெல்ல உயிர் அன்னார் உறையுள் நாடும் - தமதுள்ளமே தூதுபோக உயிரையொத்த அன்பரா திருக்கையைத் தேடிச் செல்லுகின்ற, கள்ளமாமகளிர்ச்சேரும் நேமிப்புள் கவற்சி நீஙக - கள்ளமுடைய பெருமைபொருந்திய மாதரைச் சாருகினற சக்கரவாகப் பறவைகளின் வருத்தம போக,

கள்ளமாமகளிரைச்சேருதல் - அவர் முகத்தைச் சந்திர னென்று கருதி.

ஸ்ரீராமபிரானஇளையபெருமானைநோக்கிச்சொலலியது.

எ௫. மாசடைபாநதமானமரகததலததுவைதத
காசடைசமைநதமாடங்கதிாதழைகறறைசுறற
வாசடைகுனறவெள்ளியகன்மலையனனமாகப்
பாசடைப்பொய்கைப்பூததபஙகயங்காப்பாராய். (௩௪)

இ-ள். மாசு அடைபாந்தமான மரகதத்தலத்துவைத்த- கருமையான இலைகள் பரந்ததற் கொப்பான மரகதமேடையிற் பதிக்கப்பட்ட, காசு அடைசமைந்த கதிர் தழை கற்றைசுற்ற

இரத்தினங்கள் தடுக்கலிற் பொருந்திய ஒளிகள் தழைந்து கூட்டமாய் யாண்டுஞ் சுழல, ஆசு அடைகுன்றவெள்ளி அகன்மனை அன்னம் ஆக - மங்கலாகிய குற்றமிகுதி குறைய வெண்ணிறமுடைய பெரிய வீடுகள் அன்னங்களாக, பாசு அடைப் பொய்கைபூத்த பங்கயம் - பசிய இலைகளையுடைய குளங்கள் பூத்த தாமரை மலர்களை, மாடம்-மாளிகைகள், நிகாப்பபாராய் - ஒப்பாவன நோக்காய் எ-று. (௬௪)

இதுவுமது.

எசு. கோனிறக்குனிவிற்செங்கைக்குமரனேகொழுவெண்டிங்கட்
காணிறக்கதிர்வெண்டிங்கடெற்றியவாயகாட்சி
வானிறத்தரளப்பந்தர்மரகதநடுவண்வைத்த
பானிறப்பரவைவைகும்பரமனைநிகாப்பபாராய. (௬௫)

இ-ள். கோல் நிறக்குனிவில் செஙகைக்குமரனே-அம்பைக்கொண்ட ஒளி பொருந்திய வளைந்த வில்லைப்பற்றிய சிவந்த கரமுடைய குமரனே,கொழுவெண்திஙகள்-கொழுமையான வெள்ளிய சந்திரனுக்கு, கால் நிறக்கதிர வெண்திஙகள்-புனலைக்கக்குகின்ற குணமுடைய ஒளி பொருந்திய வெள்ளிய சந்திரகாந்தக் கற்களின, நடுவண் – நடுவில், வான் நிறத்தரளப்பந்தர்மரகதம் வைத்த - வெண்ணிறமுடைய முத்துப் பந்தலின்கீழ் மரகதங்கள் பதிக்கப்பட்டனவாய், தெற்றிய ஆயகாட்சி-இழைத்தவாகியதோற்றஙகள், பால நிறப்பரவை வைகும் பரமனை நிகர்ப்ப பாராய் - திருப்பாற்கடலில் வைகும் பரமனை யொப்பாவன பாராய். எ-று, (௬௫)

திங்கள் ஆகுபெயர். சந்திரகாந்தம திருபபாற் கடலுக்கும் மரகதம் பரமனுக்கும் உவமை. திண்ணைகளின் விளிம்பில் சந்திரகாந்தக்கற்களைப்படுத்து நடுவில மரகதககற்களைப் படுத்திருக்குந் தோற்றங்கள் திருப்பாற கடலில வைகும் பரமனை யொப்பாவன என்பது கருத்து.

இதுவுமது.

எஎ. கோளவாவரியேறனனகுருசிலேகொளளநோககாய
நாளவாமினறேயமாடததுமபரோர்நாகாபாவை
ஞாளவாவுறையின்வாங்குங்கண்ணடிவிசும்பிறகவ்வி
வான்ராவிழுங்கிக்காலுமதியினைநிகாப்பபாராய. (௬௬)

இ-ள். காளவாவுறையின்வாங்கும் கண்ணடி-கருமையான வுறையினின் றெடுத்த கண்ணடிகள, வாள் அரா-அச்சத்தைக் கொடுக்கின்ற பாம்பு, விசும்பில்கவ்வி-ஆகாயததிற்கவ்வி, விழுங்கிக் காலும் மதியினை நிகர்ப்பபாராய்-விழுஙகிக் கக்குகின்ற சந்திரனையொப்பாவன பாராய் (௪௨)

---

## ௧0-வது. இராவணன்றனைகாண்படலம்.

## இராவணன் வானரசேனையைப்பார்த்ததைக் கூறுகின்றபடலம்.

*இராவணனஸ்ரீராமபிரானைபபார்ததததைசசொலலியது.*

௭௮. தோரணததினமணிவாயினமிசைசசூ
ளீரணைததமுகிலாமெனநினறான
ஆரணததையரியையமறைதேடும
காரணததைநிமிரகண்கொடுகண்டான. (௧௭)

இ-ள். தோரணத்தின் மணிவாயின்மிசை - கோபுரவாயிலின் அழகுபொருந்திய இடத்தினமேல், சூல ஈரம் அணைத்த முகில ஆம என நின்றான் - கருப்பமுடைய குளிர்ச்சிகொண்ட மேகமாமென்று சொல்லுமபடி நினறான், (௧௭)

ஈர் - கடைக்குறை.

*இதுவுமது.*

௭௯. ஆகராகவனையவ்வழிகணடான
மாகராகநிறைவாளொளியோனை
யேகராசியினினெய்தவெதிாகரும்
வேகராகுவெனவெமபிவெகுண்டான. (௧௯)

இ-ள். ஆக - அவ்வாறாக, ராகவனை அவ்வழிகண்டான் - இராகவபிரானை அபபோது பார்த்தான, மாகம் நிறை ராகம் வாள் ஒளியோனை - ஆகாயத்தில நிறைந்த சிவப்புடைய வொளிபொருந்திய சூரியனை, ஏகராசியினின் - அமாவாசையில், (௧௯)

*சாரனஇராவணனுக்குச்சொலலியது.*

௮0. மூரபன்னகுதோளவனமூரியடங்கலெனனக்
கரபன்னகமனனவைமினனுகக்காநதுகினறான
வரபன்னகநதனனையும்வேரொடுவேணடின்வாங்குஞ்
சரபன்னவனிவன்சதவலியாயதக்கோன. (௮௪)

இ-ள். முரபன் - வலியுடையவனும், நகுதோளவன் - விளங்குகின்ற தோளுடையவனும், மூரி மடங்கல் என்ன - பெரிய சிங்கத்தைப்போல, கரம்பல நகம் அன்னவை மின்னுக காந்து கின்றான் - கைகளும் பற்களும் உகிர்களுமாகிய அவைகளொளிர விளங்குகின்றவனுமாகிய, வேண்டின் - விரும்பின், வரம் பன்னகம் தன்னையும் வேரொடுவாங்கும் - மேன்மை பொருந்திய ஆதிசேடனையும் வேரொடுபிடுங்குகின்ற, சரபன் அவன் - சரபனென்பானவன், இவன் சதவலி ஆயதக்கோன் - இவன் சதவலியாகிய தக்கோன். எ-று. (௩௪)

## கச-வது. முதற்போர்ப்படலம்.

அ௩. இறுக்கவேண்டுவதில்லையெண்டீரமணி
வெறுகைகையோங்கியமேருவிமுகககலா
னிறுக்கநேர்வருவீரர்நெருக்கலாற
பொறுக்கலாதுமதிலதரைபுககதால். (௪௫)

இ-ள் கணக்கில்லாத இரத்தினங்களு முயர்ந்த பொருள்களும் மிகுந்துள்ள மேருவாகிய பெரியமலையோடு (துலாத்தில் வைத்து) நிறுக்க ஒத்துவருகின்ற வீரர்களேறி நெருக்கலால், மதில் அவ்வீரர்களைத் தாங்காது புவியுளழுந்தினமையால், அம்மதிலை யுடைக்கவேண்டுவதில்லை. எ - று. (௧௫)

வீரரொவ்வொருவரும் மேருகிரியையொத்த கனமுடையவரென்பது கருத்து.

அ௨. அறைநதமாமுரசானைப்பதாகையான
மறைந்தவானெடுவானகமாதிரங்
குறைநததூளிகுழுமிவிண்ணுடுபுக்
குறைந்ததாங்கவர்போர்க்கெழுமோதையே. (௧௬)

இ-ள். அறைந்தமாமுரசு ஆனைப்பதாகையால் - அடித்த பெருமைபொருந்திய முரசைச்சுமந்த யானைமேற் பிடித்த கொடிகளால், மறைந்தவான் நெடுவானகம்மாதிரம் - மறைந்தபெரிய நீண்டவானமுந் திசைகளும், தூளிகுழுமி குறைந்த - துகள்கள் நெருங்கித் தூரங்குறைந்தன, ஆங்கு அவர் போர்க்கு எழும்

ஓதை - அப்போதவர் யுத்தத்திற் கெழுமோசை, விண்ணூடு புக்கு உறைந்தது - விண்ணுலகிற் சென்று தங்கிற்று. (கசு)

அரு. ஆனைபட்டவழிபுனலாறெலாம
பானலபட்டபலகணைமாரியின
சோனைபட்டதுசொலலருமவானரச
சேனைபட்டதுபட்டதுசெமபுனீா. (ருo)

இ - ள். ஆனைபட்ட அழிபுனல் ஆறு எல்லாம் பானல்பட்ட - யானைகளினிடத்திலுண்டாகிய வழிந்தமதஜீராகிய நதிகளெல்லாங்கடலிற் சார்ந்தன, பலகணை மாரியின் சோனைபட்டது - பல அம்புமாரியின் சொரிதலுண்டாயிற்று, (அதுண்டாகவே) சொல்ல அரும்வானரச் சேனைபட்டது - கணக்கிட்டுச் சொல்ல அருமையான வானரச் சேனை மரித்தது, (அதுமரிக்கவே) செம்புண்ணீர் பட்டது - இரத்தம் பெருகிற்று. எ-று. ()

இராவணனைசொலலியது.

அசு. கருபபைபோற்குரஙகெறறககதிாசுழல
பொருபபையொபபவாதாமினறுபொன்றின
ாருப்பமெனறுபகையையுமாரழ
னெருப்பையுமிகழ்நதாலதுநீதியோ. (கூஉ)

இ-ள். குரங்கு எற்ற - குரங்குகள் புடைக்க, கதிர் சுழல் பொருப்பை ஒப்பவர்-சூரியன் சுற்றுகின்ற மேருகிரியையொத்த வீரர்கள், கருப்பைபோல் - எலியைப்போல், இன்று பொன்றினார் - இன்று மரித்தார். (கூஉ)

அரு. உறுபகைமனிதனின்றெம்மிறைவனையுறுகிறபானேல்
வெறுவிதுநநதம்வீரமெனனொருமேன்மைதோன்ற
வெறிபடையரககரேறறாரேறறதுமாறறானெனன
வறியவனொருவன்வணமைபூணடவனமேற்செனறென்ன. (கசஎ)

இ - ள். வறியவன் ஒருவன்- தரித்திரனொருவன், ஏற்றது மாற்றான் என்ன-விரும்பியதை மறுக்கானென்றெண்ணி, வண்மை பூண்டவன்மேல் சென்று என்ன - ஈகையைக் கொண்டவனிடத்திற் சென்றாற்போல, அரக்கர் எறிபடை ஏற்றார் - இராக்கதர்களெதிர்சென் றெறிகின்ற படைகளைத் தமது மார்பிற் றாங்கினார். (கசஎ)

அரு. அயிருக்கனநெடுமால்வரையனலுக்கனவிழிக
ளயிருக்கனமுழுமூளைகடலையுக்கனதரியா
உயிருக்கனநிருதக்குலமுயர்வானரமெவையு
மயிருக்கனவெயிறுக்கனமழையுக்கனவானம. (களசு)

இ - ள். நெடுமால்வரை - நெடிய பெரியமலைகள், அயிர்-நுண்மணலைப்போல, உக்கன-சிதறின, விழிகள் அனல உக்கன-கண்கள் அக்கினியைப்போலச் சிதறின, முழுமூளைகள் தயிர் உக்கன-முழுமூளைகள் தயிரைப்போலச் சிதறின, (களசு)

அஎ. கற்றங்கியினெடுவாயுவினிலைகண்டவாகதியால
முற்றங்கொருவடிவுற்றதுமாறுடுறுகாலை
பற்றங்கொருமையிலன்னதுபயில்கின்றதொர்செயலா
லுற்றங்கதுபுறம்போயுடல்புகுந்தாரெனவுணர்ந்தான். (களஎ)

இ-ள். அங்கியின் நிலைகற்று - அக்கினியின் குணத்தைக் கற்று, நெடுவாயுவின நிலைகண்டவர் – நெடியவாயுவின் குணத்தை யறிந்தவர், கதியால் மற்று அங்கு ஒருவடிவு உற்று-விரைவோடு வேறங்கொரு உருவத்திற் புகுந்து, அதுமாறுடுறுகாலை-அவ்வுருவந் தடுமாறும்போது, அங்கு பற்று ஒருமையில் - அங்கு பற்றியிருந்த வொருபிறப்பில், அன்னது பயில்கின்ற தொர்செயலால் - அப்பரகாயப் பிரவேசத்தைச் செய்கின்றதாகிய வொருசெய்கையால், உற்று அங்கு அதுபுறம்போய் உடல் புகுந்தார் என உணர்ந்தான் - பொருந்தி யப்போது அச்சரீரம் புறம்போகத் தமதுடலிற் புகுந்தாரைப்போல இராவணனுணர்ந்தான். எ-று. (களஎ)

இராவணன்அனுமானைநோக்கிச்சொல்லியது.

அஅ. வலியெனபதுமுளதேயதுநின்பாலதுமறவோ
யலியெனபனபுறநின்றனவுலகேழினுமடைத்தாய
சலியென்றெதிராமலரோனுரைதந்தாலிறைசலியேன்
மெலிவெனபதுமுணர்ந்தேனெனைவென்றாயினிவிறலோய். (கஅக)

இ-ள். மறவோய்-வீரமுடையோய், வலியென்பதும் உளதே - உலகில் வலியென்று சொல்லப்படுவது மிருக்கின்றதே, அது நின்பாலது - அவ்வலி நின்னிடத்திலுள்ளது, புறம் நின்றன அலி என்பன - வேறாய் நின்றனவாகிய வீரமுதலியவற்

றை அலியென்று சொல்லப்படுவனவாக, உலகு ஏழினும் அடைத்தாய் - உலகேழிலும் பரவச்செய்தாய், (கஅக)

அகூ. உற்றவாறெனறுமொன்றுநூறுயிரமுருவா
யிற்றவாறெனறுமிடிப்புணடுபொடிப்பொடியாகி
யற்றவாறெனறுமரககனேயடுசிலேகொடியோன
கற்றவாறென்றும்வானவாகைததலஞ்சூலேததார. (ககூச)

இ-ள். உற்ற ஆறு என்றும் - மலேகள் வந்தவிதமென்றும், ஒன்று நூறு ஆயிரம் உருவாய் இற்ற ஆறு என்றும் - அம்மலேகளிலொன்றுநூறுயிர முருவாகி யுடைந்த விதமென்றும், இடிப்பு உண்டு பொடிப்பொடி ஆகி அற்ற ஆறு என்றும் - இடித்தலேயுண்டு பொடிப்பொடியாகி யுடைந்தவிதமென்றுந் தெரியாதவிதம், அடுசிலேக்கொடியோன கற்ற ஆறு என்றும்- கொல்லுகின்றவிலலுடைய இராவணன்தனுநூல் கற்றவிதமென்றும், அரக்கனே - அவ்விராவணனேப பார்தது, வானவர் கைத்தலம் சூலேத்தார் - தேவர் கரங்களேக் சூலேததாா. எ-று. (ககூச)

கூo. அடறுடைததுமென்றரிககுலவீரரனறெறிநத
திடறுடைத்தன தசமுகன சரமவை திசைசூழ்
கடறுடைததனகளததினின்றுயர்தரும்பூழி
யுடறுடைததனவுதிரமுந்துடைததநொண்புடவி. (ககூரு)

இ - ள். அடல் துடைத்தும் என்று அரிக்குலவீரர் அன்று எறிந்த-பகையைப்போக்குது மென்று வானரக்குலவீரர் அன்றெடுத்து வீசிய, திடல்துடைத்தன தசமுகன் சரம்அவை - மலேகளேப்போக்கிய இராவணனது வாளிகளாகிய அவை, திசைசூழ்கடல் துடைத்தன - திசைகளேச் சூழ்ந்த கடல்நீரைக் குடித்தன, களத்தினின்று உயர் தரும்பூழி உடல் துடைத்தன - யுத்தகளத்தினின்று மேலெழுந்ததுகள்கள் உயிர்துறந்தவுடல்களே மூடின, உதிரமும் ஒண்புடவி துடைத்த - உதிரங்களுமொள்ளியபுவியை மூடின. எ-று. (ககூரு)

கூக. தகுதியாய்நினறவென்றிமாருதிதனிமைசார்ந்த
மிகுதிகூடவேறுநோககிவெவ்வணணம்விளமபுந்தன்மை
புகுதிகூர்நதுள்ளாாவேசம்பொாதவுறப்புலத்துநோக்கும்
பகுதியையொததானவீரனமேலேத்தன்பதமேயொர்த்தான். (உஉக)

இ-ள். தகுதியாய் நின்ற வென்றிமாருதி தனிமைசார்ந்த உரிமையாய் நிலைபெற்ற வெற்றியுடைய அனுமான் ஒப்பில்லமையை யடைந்துள்ள, மிகுதியை வேறுநோக்கின் - பெருமையை வேரு யாராயின், விளம்பும் தன்மை எவ்வண்ணம் - யாடுத்துச் சொல்லுந் தன்மை யெவ்விதம, புகு - புகுந்த, தி அறிவு, கூர்ந்துள்ளார் வேதம் பொதுவுறப புலத்துநோக்கும் மிகுந்துள்ளவர் வேதங்கருவியாய்ப் பொதுவாகத தமமறிவாலா ராயப்படுகின்ற, பகுதியை ஒத்தான் - அவ்வனுமான்மூலப் பிரகிருதியை யொத்தான், வீரன மேலைததன பதமே ஒத்தான்- ஸ்ரீராமபிரான் மேன்மையாகிய பரமபததிலுள்ளநிலைமைய யே யொத்தான். எ-று. (உஉக)

ஸ்ரீராமபிரான்இராவணனுகருசசொலலியது.

கஉ. ஆளையாயுனககமைநதனமாருதமறைநத
பூளையானதுகணடனையினறுபோயபபோாகரு
நாளைவாவெனநலகினனுகிளஙகமுகின
வாளைதாவுறுகோசலநாடுடைவளளல. (உருரு)

இ - ள் ஆள் - அரக்கரையாளுகின்ற, ஐ - அரசனே, உன க்கு அமைந்தன மாருதம் அறைந்த பூளையானது கண்டனை- உனக்கமைந்தன வாகிய சேனைகள் பெருங்காற்றால் வீசப்பட்ட பூளைப்பூப்போ லானதைப் பார்த்தனை. யா - அசை (உருரு)

---

## கரு - வது. கும்பகருணப்படலம்.

:0:

கஙு. நாளொத்தநளினமனனமுகததியர்நயனமெலலாம்
வாளொததமககளவார்நதையிராகவன்வாளியொதத
கோளொததசிறையைவததாண்டகொறறவறகற்றைநாட்டன
தோளொததுணைமெனகொங்கைநோககங்குததுடர்கிலாமை. (க)

இ-ள். கோள்ஒத்த சிறைவைத்து ஆண்ட கொற்றவற்கு-கிரகங்களைப் பொருந்திய சிறைப்படுத்தி யாண்ட இராவணனுக்கு, அற்றைநாள் தன்தோள்ஒத்தணைமென்கொங்கைநோக்கு அங்குத்தடர்கிலாமை - தனதுதோள்களில் வதிகின்ற இரட்டையாகிய மெல்லிய முலைகளையுடைய வெற்றித்திருமகளின் பார்வை யவ்விடத்திற் செல்லாமையால், (க)

இராவணனமாலியவானுக்குச்சொல்லியது.

௬௪. சங்கம்வந்துற்றகொற்றத்தாபதர்தம்மோடெம்மோ
டங்கமவந்துற்றதாகவமரர்வந்துற்றதாற்ருர்
கங்கம்வந்துற்றசெய்யகளத்துநங்குலத்துக்கொவ்வாப
பங்கம்வந்துற்றதன்றிப்பழியும்வந்துற்றதென்றுன. (௬௪)

இ-ள். சங்கம்வந்து உற்றகொற்றத் தாபதர் தம்மோடு - சேனையோடு வந்து சேர்ந்த வெற்றிபொருந்திய இராமலக்குமணரோடும், எம்மோடு அங்கம்வந்து உற்றது ஆக-எம்மோடும் யுத்த அங்கம் வந்ததாக, அமரர்வந்து உற்றது ஆற்ருர் - தேவர்கள்வந்து பார்க்க வந்ததை நமமேனோர் பொறுககார் (அவ்வாறுக) (௬௪)

இதுவுமது.

௬௫. நல்லியற்கவிஞர்நாவிற்பொருள்குறித்தமர்ந்தநாமச
சொல்லெனசசெய்யுட்கொண்டதொடையெனத்தொடையைநீக்கி
யெல்லையிலசெல்வந்தீராவிசையெனபபழுதிலாத
பல்லலங்காரப்பண்பேகாகுத்தனபகழிமாதோ. (௬௫)

இ-ள். காகுத்தனது அம்புகள், நல்லஇலக்கண மமைந்த புலவர்களது நாவினின்று பொருளைக கொண்டமர்ந்த அழகுடைய, சொற்களைப்போலவும அவரது செய்யுட்கள் கொண்ட எதுகைத்தொடை மோனைத் தொடைபோலவும் அத்தொடையைநீககி, எல்லையிலலாத சிறப்பினின்று நீங்காத இசையைப் போலவும் குற்றமிலலாத, பலஅலங்காரத்தின் குணங்களேயாகும். எ-று. (௬௫)

இதுவுமது.

௬௬. உற்பத்தியயனேயொக்குமோடும்போதரியேயொக்குங்
கறபத்தினரனேயொக்குமபகைஞரைககலந்தகாலைச்
சிறபத்தினம்மாறபேசச்சிறியவோவெனனைத்தீராத்
தறபத்தைத்துடைத்தவென்றுறபிறிதொருசான்றுமுண்டோ. (௬௬)

இ-ள். அவ்வாளிகள் தோனறும்போதே பலவாய்த்தோன்றுதலின் படைப்புத் தொழிலையுடைய பிரமனை யொக்குமென்றும், பகைவர் புறந்தந்தோடும்போது அறம்நோக்கிக் கொல்லாது விடுதலின் காத்தற்றொழிலையுடைய திருமாலை யொக்குமென்றும், எதிர்நின்று போர்செய்யும் பகைவரைக் கூடியகாலை

யொருங்கு வீட்டுதலின் பிரளயகால வுருத்திரனை யொக்குமென்றும், அதிதற்கரிய செயலினுண்மையால் நம்மாற் பேசச்சிறியவோவென்றும், தான் பிடித்திருந்தவில்லை அவ்வாளிகள் மேலுங்கீழுந் துணித்து விலநடுவைப் பிடித்திருந்த கையிலடித்தலும் அப்போது இராவணன் வலிபொறுக்காமல் இராமன் அறப்போர் செய்கின்றவனென் றெல்லாருஞ் சொல்லினரே, நிராயுதனு யிருக்கின்ற வென்னையவனம்புகள் கொலலுகின்றனவே யென்றெண்ணிப் பிடித்திருந்த அவ்விற்றுணியை விடடெறிந்தான். அவனதை யெறியவே அமபுகள் பிரானது தூணிசேர்ந்தன வாகலின் என்னைவிட்டுநீங்காத தனது பற்றைப்போக்கினவென்றால் வேறொரு சான்றுமுண்டோ வெனறுங் கூறினான்.

தனதுபற்றுவது - வில்லின்துண்டு, பத்து – போலி

கும்பகருணனைச்சொலலியது.

௩௭. உதிரவாரியோடூனொடுமபுதோ
னுதிரவாரிநுகர்வதோருணிஞன
கதிரவாள்வயிரப்பணைக்கையினன்
கதிரவாள்வயிரககழற்காலினன. (௩௩)

இ - ள். உதிரவாரியோடு ஊனொடு-இரத்தவெள்ளத்தையும் தசையையும், எலும்புதோல் உதிர - எலும்புந் தோலுஞ் சிந்த, வாரிநுகர்வது ஓர்ஊணினன் - ஒருங்குவாரி யுண்ணப்படுவதாகிய வொருவகையுணவுடையான், கதிரவாள் - நெற்கதிரின்வடிவினவாகிய வாளாயுதத்தைப் பிடித்த, வயிரப்பணைக்கையினன் - பலமுடைய பருத்தகையை யுடையான், கதிரவாள் வயிரக்கழல் காலினன் - ஒளியுடைய வொலியா லச்சத்தைக் கொடுக்கின்ற வயிரங்கள் பதித்த வீரக்கழலணிந்த காலுடையான். எ - று. (௩௩)

இதுவுமது.

௩௮. இரும்பசிக்குமருநதெனவெஃகினோ
டிருமபசிக்குமருந்துமெயிற்றினன
வருங்களிறறினைதின்றனனமாலறு
வருங்களிறறிரிகினறதோராசையான. (௩௪)

இ-ள். இரும்பசிக்கு மருந்து என-மிகுந்த பசிப்பிணிக்கு மருந்தென்று, எஃகினோடு இரும்பு - வேலோடு பிறவாயுதங்

களை, அசிக்கும் - சிரித்து, அருந்தும் எயிற்றினன் - தின்னு கின்ற பற்களையுடையான், வரும் களிற்றினைத் தின்றனன்-தன்னிடம் வருகின்ற யானைகளைத்தின்று, மால் அறா வரும்கள்ளில் திரிகின்றது ஓர் ஆசையான் - மயக்கம் நீங்காத பாளையினின்று வருகின்ற கள்ளிற் செல்லுகின்றதாகிய ஒப்பற்ற விருப்பத்தை யுடையான் எ-று. (௬௪)

இதுவுமது.

௬௬. சூலமேகந்திருத்தியதோளினன
சூலமேகமெனப்பொலிதோற்றத்தான
காலனமேனிமிர்மத்தனகழற்பொரு
காலனமேனிமிர்செம்மயிர்க்கற்றையான. (௬௫)

இ-ள். ஏகம் சூலம் திருத்தியதோளினன் - ஒருசூலத்தைச் சார்த்திய தோளுடையான், சூலமேகம்எனப் பொலிதோற்றத்தான் - நீருண்டமேகம்போல விளங்குகின்ற காட்சியை யுடையான், காலன்மேல் நிமிர்மத்தன் - எமன்மேற் செல்லுகின்ற செருக்குடையான், கழல்பொருகாலன-வீரக்கழல்கள் தம்முள் மோதிய காலுடையான், மேல் நிமிர் செம்மயிர்க்கற்றையான்- மேலோங்கிய சிவந்த மயிர்த்தொகுதியுடையான். எ-று. (௬௫)

இதுவுமது.

௬00. எயிறலைத்தகரதலத்திந்திர
னெயிறலைத்தகரதலத்தெற்றினு
னயிறலைத்துடரங்கையனசிங்கவூ
னயிறலைத்துடரங்ககலவாயினன. (௬௬)

இ-ள். எயிறு அலைத்தகரதலத்து இந்திரன்-வச்சிராயுதத்தைச் சுழற்றிய கரமுடைய இந்திரனை, எயிலதலைத்தகரதலத்து எற்றினன் - மதிலின சிகரஞ்சிதைய அதினிடத்தில் மோத்தினன், அயில்தலைத்துடர் அங்கையன் - சிறப்பாகிய சூலஞ் சேர்ந்த அகங்கையுடையான, சிங்க ஊன் அயில் தலைத்துடர் அங்கு அகல்வாயினன் - சிங்கத்தின் தசையை யுண்ணுதலைத் தொடர்கின்றஅப்போதகன்ற வாயினையுடையான்.எ-று.(௬௬)

இதுவுமது.

௬0க. காம்புறங்குங்கனவரைக்கைமலைத
தாம்புறங்குமுகத்தினதய்த்தட
லோம்புறும்முழையென்றுயாமுக்கினன்
பாம்புறங்கும்படர்செவிப்பாழியான். (௬௭)

இ-ள். தூம்பு உறங்கு முகத்தின - துவாரம் பொருந்திய முகத்தையுடையனவாகிய, கைமலை-யானைகள், துய்த்து உடல் ஓம்புறும்-புசித்து உடலைககாககும், காமபுஉறங்கும கனவரை-மூங்கில்கள் பொருந்திய பெரியமலையிலுள்ள,முழைஎன்று உயர் மூக்கினன் - முழையென்று சொல்லும்படியாகிய வுயர்ந்த மூக்குடையான், பாம்பு உறங்கும் படர்செவிப்பாழியான்-பாம்புக ளடைகின்ற படர்ந்தசெவியி னகலமுடையான. எ-று. (சு௬)

இராவணனகுமபகருணனுககுக்கவசங்கட்டியதைசசொல்லியது.

க0௨. விடமெழுந்ததுபோனெடுவிண்ணினைத
தொடவுயாந்தவனமாாபிடைச்சுற்றிற
னிடபமுந்துமெரிபுரைநானகுதோட்
கடவுளீயநதகவசமுங்கட்டினை. (எசு)

இ-ள். விடம் எழுந்ததுபோல் நெடுவிண்ணினைத் தொட உயர்ந்தவன் மார்பிடை - நஞ்செழுந்ததை யொத்து நெடியவாகாயத்தைத் தீண்டும்படி யுயர்ந்த கும்பகருணனது மார்பில், இடபம் உந்தும் எரிபுரை நான்குதோள் கடவுள் ஈய்ந்த கவசமும் - இடபத்தைச் செலுத்துகின்ற நிறத்தா லக்கினிக்கொப்பாகிய நான்கு தோள்களையுடைய பரமசிவன கொடுத்த கவசத்தையும், சுற்றினன் - தானவனைச சுற்றிவந்து, கட்டினன்-கட்டினன். எ-று. (எசு)

"தாளுடைமலைகொலாம்" என்றபடி கும்பகருணன் அவ்வாறு பருத்தவனாகலின் இராவணனிருந்த இருப்பி லிருந்தவனுக்குக் கவசங்கட்டக்கூடாமல தானெழுந்தவனைச் சுற்றிவந்து கட்டினனென்பது கருத்து.

ஸ்ரீராகவபிரானவிபீடணனுழ்வானை நோக்கிச்சொல்லியது.

க0௩. தோளொடுதோள்செலத்தொடர்ந்துநோக்குறி
னாள்பலகழியுமானடுவணின்றதோர்
தாளுடைமலைகொலாஞ்சமரம்வேட்டவோ
ராளெனவுணர்கிலேனார்கொலாமிவன. (கசக)

இ-ள். தோளொடுதோள் - தோளொடுதோளை, செலத் தொடர்ந்து நோக்குறின் - முற்றுந்தொடர்ந்து பார்க்கலத்தினிப் பின், நாள்பலகழியும் - பலநாட்கள் செல்லும், நடுவண் நின்ற

தோர்தாளுடை மலைகொல் - சேனையின் நடுவில் நின்றதாகிய காலுடைய ஒருமலையோ, சமரம் வேட்ட ஓர் ஆள்என உணர்கிலேன் இவன் ஆர்-உயுத்தத்தைவிரும்பிய ஒருமனிதனென்று நினைக்கிலேன் இவன்யாவன். எ - று. (ககக)

விபீடணாழ்வான ஸ்ரீராகவபிரானுக்குச்சொல்லியது.

கOச. காலனாருயிர்காலனார் - காலின்மேனிமிர்காலினார்
மாலினார்கெடவாகையே - சூலமேகொடுசூடினார். (ககசு)

இ-ள்· காலனார் உயிர்காலனார் - யமனாருயிர்க்கு யமனார், காலின்மேல் நிமிர்காலினார் - காற்றினுக்கு மதிகம் வேகமாய்ச் செல்லுகின்ற காலையுடையார், (ககசு)

இதுவுமது.

கOரு. தாங்குகொம்பொருநானகுகா - லோயகலொன்றினையும்பாகோன்
வீங்குநெஞ்சனவிழுநதிலான - தூங்கநினறுசுழறறினன. (ககஎ)

இ-ள். ஒரு நான்கு கொம்புகளைக் கொண்டிருக்கின்றகால்களையுடைய, ஐராவதமாகிய மலையொன்றனைப்பிடித்து அதன் மேலிருந்த இந்திரன், வீங்குநெஞ்சினனாகி விழாது, தொங்க நின்று சுழற்றினன். (ககஎ)

இதுவுமது.

கOசு. மின்னினின்றியவிண்ணுளோா - முன்னிலெனறமர்முறறினு
ரன்னிலெனறுமவெணணிலாா - வெனனிலனறிவிழித்திலான். ()

இ - ள். ஒளிபொருந்திய தேவர்கள், எமக்குமுன் நில்லென்று போர்செய்தாராயின்,கணக்கில்லாத அத்தேவரதுமுதுகையன்றி எற்றைக்கும் முகத்தைப்பார்த்திலான். (கஉஉ)

விபீடணாழ்வான கும்பகருணனுக்குச்சொலலியது.

கOஎ. கண்ணுதறீமைசெய்யக்கமலததுமுளைத்ததாதை
யணணறன்றலையினைறையறுககவென்றமைந்தானன்றே
புணணுறுபுலவுவேலோய்பழியொடும்பொருநதிப்பின்னை
யெண்ணுறுநாகினவீழவறிஞருமியற்றுவாரோ. (கஉச)

இ - ள். கமலத்து முளைத்ததாதை தீமைசெய்ய - திருமாலுந் திக்கமலத்திற் றோன்றிய பிரமன் தீங்குசெய்ய, கண்ணுதல் - சிவன், அண்ணல்தன் - அப்பிரமனது, (கஉச)

௧௦௮. ஊழியிற்பட்டகாலத்துலகங்கள்பட்டாலொப்பப்
பூழியிற்பட்டுச்செங்நீர்ப்புணரியிறபட்டுப்பொங்குஞ்
சூழியிற்பட்டநெற்றிக்களிற்றொடுந்துரந்ததேரி
னாழியிற்பட்டவன்றேயவனியிற்பட்டவெல்லாம். (௧௭௯)

இ-ள். ஊழியுண்டானகாலத்தில் உலகங்களழிந்தாற்போல, புவியிலுண்டாகிய பொருள்களெல்லாம், தூளியிலழுந்தி இரத்தக்கடலில் மூழ்கி விளங்குகின்ற, முகபடாத்தோடு பட்டங்கட்டிய நெற்றியையுடைய யானைகளோடு செலுத்திய இரதங்களின், சக்கரங்களா லழிந்தன. எ-று. (௧௭௯)

௧௦௯. மறறினியொருவன்மேலோமரனொடுங்கறகள்வைக்கப
பெறறிலமாதுமன்றேயினறொடும்பெறுவதாதும்
அற்றனநீங்குமெனனாவரிகுலததலைவர்பறறி
யெறறினவெறிநதவெலலாமிணைநெடுநதோளினேற்றான். (௧௮௦)

இ-ள். இனி ஒருவன்மேலெறிய ஒருமரத்தொடு கற்களை, பெற்றிலமாகுதும் இன்றோடு பெறுவதாகுதும், (தீங்குகளும்) அற்றனவாய் நீங்குமென்று வானரகுலததலைவர் பிடுங்கி, மோதினவும் வீசினவுமாகிய எல்லாவற்றையுந் தன திரண்டுதோள்களால் தாங்கினான். எ-று. (௧௮௦)

௧௧௦. பேழையொததகல்வாயனபேய்க்கணமுகக்கு
மூழையொததனகழுததறவீழநதனமுறைசா
லூழையொததனவோர்கணைதைத்தனவுதிரத
தாழியொத்தவெங்குருதியின்மிதபபனதலைகள். (௨௧௭)

இ-ள். பேழை ஒத்து அகல்வாயன-பெட்டியைப்போன்ற கன்றவாய்களை யுடையனவாகிய, பேய்க்கணம் முகக்கும் மூழை யொத்தன கழுத்து அற - பேய்க்கூட்டங் குடிக்கின்ற குகையை யொத்த கழுத்துக்க ளற்றுப்போக, முறைசால் ஊழைஒத்தன ஓர்கணைதைத்தன - முறையமைந்த பழவினையையொத்த ஒப்பற்ற அம்புகள் தைக்க, வீழ்ந்தன-யானைகளிறக்க, உதிரத்தாழி ஒத்த - இரத்தம்பெய்த குடங்களைப்போன்ற, தலைகள் - அவ்யானைத்தலைகள், வெங்குருதியில் மிதப்பன-வெப்பமுடைய இரத்தத்தில் மிதப்பன. எ-று. மூழைமூழை எனவிகாரமாயிற்று. ( )

ககச. ஒட்டிநாயகன்வென்றிநாள்குறித்தொளிர்முளைக
ளட்டிவைத்தனபாலிகைநிகர்த்தனவழிந்து
நட்டவாமெனவீழ்ந்தனதுடிகளினவைதீர்
வட்டவானகணிலவதிந்தனவருணசாமரைகள். (உகஅ)

இ-ள். நவைதீர்வட்டம்-குற்றந்தீர்ந்தவட்டமாகிய, வான்-பெரிய, கணில் * * * துடிகளில் - பறைகளில், அழிந்து நட்டஆம் எனவீழ்ந்தன - அழிந்து நட்டனவாமென்றுசொல்லும்படி விழுந்தனவாகி, வதிந்தன வருணசாமரைகள் - சொருகிய வெண்ணிறமுடைய சாமரைகள், நாயகன் வென்றி நாள் ஒட்டி குறித்து ஒளிர்முளைகள் - ஸ்ரீராமபிரான் வெற்றிபெறும் நாளை ஒட்டிக்குறித்து விளங்குகின்ற முளைகளை, அட்டிவைத்தனபாலிகை நிகர்த்தன - நிறைத்து வைத்த பாலிகையை யொத்தன. எ-று. (உகஅ)

ககஉ. தூரகருமெய்யுணர்விருவினைகளையெனுஞ்சொல்லிற
கரகருமவீரங்கடீமையேயெனுமிதுகண்டோ
மிரககநீங்கினரறததொடுந்திறம்பினரெனினு
மரக்கராக்கையையரம்பையாதழுவினாவிருமபி. (உஉஉ)

இ-ள். மெய்யுணர்வு இருவினைகளை-மெஞ்ஞானம் நல்வினை தீவினைகளை, தூரக்கும் என்னும் சொல்லில்-போக்குமென்னுஞ் சொல்லைப்போல, வீரங்கள் தீமை - வீரங்கள் தீவினையை, கரக்கும் என்னும் இது கண்டோம் - மறைக்குமென்று சொல்லுகின்ற இதை இப்போது பார்த்தோம், அரக்கர் - இராக்கதர், இரக்கம் நீங்கினர் அறத்தொடும் திறம்பினர் எனினும் - அருளைப்போக்கித் தருமத்தோடும் மாறுபட்டவராயினும், அரம்பையர் - தெய்வப்பெண்கள், ஆக்கையை விரும்பி தழுவினர்-அவ்வரக்கருடலை விரும்பிப் புல்லினர். எ-று. (உஉஉ)

கும்பகருணன்நினைத்ததைசசொல்லியது.

ககரு. எனமுகங்காண்பதன்முன்னமியானவன
றனமுகங்காண்பதுசரதந்தானெனப்
பொன்முகங்காணபதோர்தோளும்போரிடை
வனமுகங்காண்படுதோர்வாளும்வாங்கினன். (உகஅ)

இ-ள். இராமன் எனது முகத்தைப் பார்ப்பதற்கு முன்னம் யான், அவன்முகத்தைப் பார்ப்பது உறுதியென்றுபொன்

லைப்பதித்தமுகந்தோன்றுவதாகிய கேடகத்தையும், யுத்தத்தில் வலியுடையதாய்த் தோன்றுவதாகிய ஒப்பற்ற வாளாயுதத்தை யும் கையிற் கொண்டான். எ-று. (௨௯௮)

௧௧௪. மற்றும்வீரர்களுளரெனறகெளிதரோமறதொழிலிவனமாடு
பெற்றுநீங்கினராமெனினலலதுபேரெழிறறோளோடு
மறறுவீழ்நதகையருதவெங்கையிறலெடுததவனாதரோடி
யெற்றவீழ்நதனவெயிறிளிதரோடினவானரசகுலமெலலாம. ()

இ-ள். இவன்மாடு மறத்தொழில் - இக் கும்பகருணனிடத்தில் வீரத்தொழிலை, பெற்று நீங்கினர் ஆம் எனின் அல்லது - பெற்று நீங்கினராமென்று சொல்லினல்லது, மற்றும் வீரர்கள் உளா எனற்கு எளிதரோ - வேறுவீரர்களுளரென்று சொல்லுதற்கெளிதோ, பேர் எழில் தோளொடும் அற்று வீழ்ந்தகை - மிகுந்தவலியுடைய தோளோடும் அற்று விழுந்தகையை, அறாத வெம்கையினால் எடுத்து ஆர்த்து ஒடி அவன்எற்ற - அறுபடாத வெவ்விய கையினாலெடுதொலித்தோடி அக்கும்ப கருணன் புடைக்க, வானரக்குல மெல்லாம் எயிறு இளித்து ஓடின வீழ்ந்தன - வானரக்கூட்டங்களெல்லாம் பற்கிழிததோடிச்சாய்ந்தன. எ-று. (௩௩௮)

௧௧௫. வள்ளல்காத்துடனிறகவுமவானரத்தானையைமறக்கூற்றங்
கொள்ளைகொண்டிடப்பணைடையினமும்மடிகுமைக்கின்றதுறிநோக்கி
வெள்ளமினறொருடுமவீய்ந்துறுமெனபதோர்விம்மலுறறுயிரவெம்ப
வுள்ளகையினுமற்றவெங்கரதைதயேயஞ்சினவுலகெல்லாம். (௩௩௧)

இ-ள். ஸ்ரீராமபிரான் காத்துடனிற்கவும் வானரச்சேனையை வலியுடையயமன், கொள்ளைகொள்ள முன்னினும் மும்மடங் கதிகமாக அழிக்கின்ற குறியைப்பார்த்து, குரங்குவெள்ளம் இன்றோடுஞ் சாகுமென்பதாகிய ஒருகலக்கமுற்று உயிர்பதைப்ப, உலகமெல்லாம் அறுபடாதுள்ளகையினும் அறுபட்ட வெவ்விய கையையேயஞ்சின. எ-று. (௩௩௯)

௧௧௬. மாக்கூடுபடர்வேலைமறிமகரத்திரைவாங்கி
மேக்கூடுகீழ்க்கூடுமிகஇரண்டுதிக்கூடு
போக்கூடுகவித்திருகண்புகையோடுபுகையுயிர்க்கு
மூக்கூடுபுகுப்புக்குமூழ்கியதம்முகக்குன்றம். (௩௫௧)

இ - ள். மாக்கூடுபடர் வேலை மகரமறி திரைவாங்கி-பெரி யவங்களுஞ் செல்லுகின்ற கடலில் சுறுமீன்கள் மடங்குகின்ற அலைகளைப் பிடித்து, மேக்கு ஊடு கீழ்க்கு ஊடுமிக்கு இரண்டு திக்கு ஊடு - மேற்றிசையினுங் கீட்டிசையினு மெஞ்சிய வடக்குத் தெற்குக்க ளாகிய இரண்டு திசைகளிலும், போக்கு ஊடு கவித்து-போகுதலைத்தடுததுள்ளழுத்தி, இருகண் புகையோடு- இரண்டு கண்களுங்கானற நெருபபோடு, மூக்கு ஊடு - மூக்கு வழியாய், புகை உயிர்க்கும் - புகையை விடுகின்ற, அம்முகக்குன்றம் புகப்புகுகு மூழ்கியது-அம்முகமாகிய மலை யுள்ளே புகுந்து மூழ்கியது. (௩௫௪)

---

## ௧௬ - வது மாயாசனகப்படலம்.

## அரக்கனொருவனை மாயையால் சனகமகாராசன் போலச்செய்து பிராட்டிக்குமுன் கொண்டுவந்ததைக் கூறுகின்றபடலம்.

இராவணன் பிராட்டியைநோககிச் சொலலியது.

௧௭. நோயிடைநுகரவேயுநுணங்கினிறுணங்குமாவி
நாயுயிராகுமனறேநாள்பலகழிததகாலை
பாயிரமுணர்ந்தநூலோர்காமததுப்பகுததபததி
யாயிரமலலபோனவையிரணடெனபாபொய்யே. (௧௭)

இ-ள். நோயிடை நுகரவேயும் - காமநோயால் உணவுண்ணவேணுங் கூடாமல், ஆவி நுணங்கி நின்று உணங்கும் - உயிர் மெலிந்து நின்று வாடும், பலநாள் கழித்தகாலை - (யான்வேண்டநீயிணங்காது) பலதினங்களைப்போக்கிய காலை, நாய் உயிராகும் - எனதுயிர் நாயினுயிராகும், பாயிரம் உணர்ந்த நூலோர் காமத்துப் பகுத்தபத்தி - பாயிரமறிந்த வின்பநூலோர் காமத்திற்கு வகுத்த வரிசையாகிய அவத்தை, ஐயிரண்டுயென்பர் பொய் - பத்தென்று சொல்லுவர் அது பொய், ஆயிரம் அல்ல போன - ஆயிரக்கணக்குமன்றி மிகுதிகமுள்ளன. எ - று. (௧௭)

பாயிரமென்பது நூலுக்குமுன் கூறப்படுவது.

சீதாபிராட்டிசொல்லியது.

கக௮. சுற்றுண்டபாசநாஞ்சிற்சுமையொடுஞ்சூடுண்டாற்ற
வெற்றுண்டுமென்றுநீங்காவிழுசிறுகுண்டையென்னப்
பற்றுண்டநாளேமாளாப்பாவியேனுமமைமையெல்லாம்
விற்றுண்டேனெனக்குமீளுமவிதியுண்டேநரகில்வீழ்ந்தால். (ச0)

இ-ள். பாசம் சுற்றுண்ட - கயிற்றாற்கட்டப்பட்ட, நாஞ்சில் சுமையொடும் - கலப்பையாகிய பாரத்தொடும், சூடு உண்டு - காய்ச்சிய கோலாற் சூடுபட்டும், ஆற்ற எற்றுண்டும - மிகவும் அடிக்கப்பட்டும், என்றும் நீங்காவிழுசிறுகுண்டை என்ன - என்றும் நீங்காம லிடறிவிழுகின்ற சிறிய இடபத்தைப்போல,( )

இதுவுமது.

கககூ. நகுவன நின்னோடையநாயகனுமவாளி
புகுவனபோழ்ந்தனமார்பிற்றிறந்தனபுண்களெல்லாந்
தகுவனவிளையசொல்லத்தக்கனசாபநாணி
னுகுவனமலைகளென்னப்பிறப்பனவொலிகளம்மா. (ருசு)

இ - ள். ஐய -.ஐய, நாயகன் நாமவாளி நின்னோடு நகுவன - எம்பிரானது அச்சத்தைக்கொடுக்கின்ற கணைகள் உன்னோடு சிரிப்பன, புகுவன போழ்ந்து உன்மார்பில் திறந்தன புண்கள் எல்லாம் தகுவன - அவைபுகுந்து பிளந் துனதுமார்பில் திறந்த புண்களெல்லா முனக்குத்தகுவன, சாபநாணின்-வின்னாணினின்று, பிறப்பன ஒலிகள - பிறப்பனவாகிய வொலிகள் தோறும, மலைகள என்ன - மலைகளைப்போல, உகுவன-உனது சிரங்கள் சிந்துவனவாகும், சொல்லத்தக்கன இவையே-என்றால் சொல்லத்தக்கன இவைகளாம எ-று (ருசு)

இதுவுமது.

கஉ0. சொல்லுவமதுரமாற்றந்துணடத்தாலுணடினக்கண்ணைக்
கல்லுவகாகம்வந்துகலப்பனகமலக்கண்ணன்
வில்லுமிழ்பகழிபின்னரிலங்கெழிலலங்கன்மார்பம்
புல்லுவகளிப்புக்கூர்ந்துபுலவுநாறலகையெல்லாம். (ருஎ)

இ-ள். கமலக்கண்ணன வில் உமிழ் பகழி - செந்தாமரை மலர்போன்ற கண்களையுடைய ஸ்ரீராமபிரானது வில்லுமிழ்ந்த அம்பு, பின்னர் - உன்னைக்கொன்றபின்னர், உன்கண்ணைக் கல்லுவகாகம் வந்து கலப்பன - உனது கண்களைத் தோண்டுவன.

வாகிய காகங்கள்வந்து கூடி, துண்டத்தாலுண்டு - மூக்காலக் கண்களையுண்டு, மதுரமாற்றம் சொல்லுவ - மதுரவார்த்தைகளைப் பேசுவன, புலவுநாறு அலகைஎல்லாம் - புலால்வீசுகின்ற பிசாசுகளெல்லாம், களிப்புக்கூர்ந்து - உவகைமிகுந்து, இலங்கு எழில் அலங்கல் மார்பம் புல்லுவ - விளங்குகின்ற வலியுடைய உனது மார்பைத் தழுவுவன எ-று. (ருஎ)

இதுவுமது.

கஉக. புன்மகனகேடடிகேட்டறகுரியதுபுகுநதபோரி
னுனமகனுயிரைபெம்மோய்சுமிததிரையுய்யவீன்ற
நனமகனவாளிநககநாயவனுடலைநகக
வெனமகனிறநதானெனனநீயெடுததரறறலெனருள். (ருகூ)

இ-ள். புன்மகன் கேட்டி - இழிமகனே கேட்டி, புகுந்த போரில் - நேர்ந்த யுத்தத்தில், உன்மகன் உயிரை - உனதுமகனாகிய இந்திரசித்துவினுயிரை, எம்மோய சுமித்திரை உய்ய ஈன்ற நன்மகன் வாளி நக்க-எங்களன்னையாகிய சுமித்திராதேவி உலகுய்யப்பெற்ற இலக்குமணன் விடுத்த அம்புகுடிக்க, நாய் அவன் உடலைநக்க - நாய்கள் அவனுடலை நாவால் நக்குதலைச் செய்ய, என்மகன் இறந்தானென்ன நீ எடுத்து அரற்றல் - என் மகன் மரித்தானென்று நீயெடுத்துக்கதறுதல், கேட்டற்கு உரியது என்றாள் - என்றாற் கேட்டற்குரியதென்று சொன்னாள். எ-று. (ருகூ)

கும்பகருணன் இறநததைக்கேட்டு இராவணனபுலம்பியது.

கஉஉ. கல்லன்றோநீராடுங்காலத்துட்காறேய்கரு
மல்லொன்றுதோளாயவடமேருமானிடவன
விலலொனறுஙின‌னைவிளிவிததுளதென்னுரு
சொல்லனறோவெனனைச்சுடுகின்றதுதோனறல். (அ0)

இ-ள். மல் ஒன்றுதோளாய் - வலிபொருந்திய தோளுடையாய், வடமேரு - வடக்கிலுள்ள மேருகிரி, நீராடும் காலத்துள் கால்தேய்க்கும் கல் அன்றோ - நீபுனலாடுங் காலத்திற் காலைத் தேய்க்கும்படியாகிய கல்லன்றோ, (அ0)

கஉங. அண்டத்தளவுமினையபகர்நதழைத்துப்
பணடைததனருமததினகாரணத்தைப்பாவிததான்
றெண்டைக்கனிவாய்துடிப்பமயிர்பொடிப்பக்
கெண்டைத்தடஙகண்ணருள்ளேகிருகிருத்தாள. (அசு)

இ-ள். தன்நாமத்தின் - இராவணனென்னுந் தனது பெயரின், பண்டை - முன்புள்ளதாகிய, காரணத்தைப்பாவித்தான் - காரணத்தைப்பாவனை செய்தான். (அசு)

நாமத்தின்காரணமாவது அழுதல். கைலைமலையழுத்தியகாலை யிவனழுதமையா லிவனுக்கிராவண னென்னும் பெயருண்டாயிற்று.

## கஎ-வது. அதிகாயன் வதைப்படலம்.

அதிகாயன இராவணனுககுச் சொலலியது.

கஉச. வானஞ்சுகவையகமஞ்சுகமா
லானஞ்சுமுகததவனஞ்சுகமே
னானஞ்சினனெனறுனைநாணுகபோர்
யானஞ்சினனெனறுமியமபுமதோ. (அ)

இ-ள். வான் அஞ்சுக - வானுலகத்தாரஞ்சுக, வையகம் அஞ்சுக - மண்ணுலகத்தாரஞ்சுக, மால் அஞ்சுமுகத்தவன் அஞ்சுக - திருமாலும் ஐந்து முகங்களையுடைய சிவனுமஞ்சுக, மேல் நான் அஞ்சினன் என்று உன்னை நாணுக - அதிகம் நானஞ்சினேனென்றுன்னை நீயேநாணுக, போர் யான் அஞ்சினன் என்றும இயம்புமதோ - யுத்தத்திற்கு யானஞ்சினெனென்றுஞ் சொல்வதுமுண்டோ. (அ)

இதுவுமது.

கஉரு. வெம்மைப்பொருதானவாமேல்வலியோா
தம்மைத்தளையிறகொடுதந்திலனோ
வுமமைக்குலையப்பொருமும்பரையுங்
கொம்மைககுயவட்டணைகொணடிலனோ. (கூ)

இ-ள். மேல்வெமமைப் பொருதானவர் - அதிகங் கடுமையோடும் யுத்தஞ்செய்த அசுரராகிய, வலியோர் தம்மைத் தளையில்கொடுதந்து இலனோ - வலியுடையோர்களை விலங்கிற் போட்டுக் கொணர்ந்திலனோ, குலைய உம்மைப்பொரும் உம்பரையும் - நடுங்கும்படி யுமமைப்பொருத தேவர்களையும் பிடித்து, கொம்மைக்குய வட்டணைகொண்டு இலனோ - வலியுடைய அவர்கள் மார்பில் தாளம்போட்டிலனோ. எ - று. (கூ)

இதுவுமது.

௧௨௬ ஈாயபபுணடநெடும்படைகையுளதாயத்
தேடபபுணடவனுஞசிலசிலகணையா
லாயபபுணடவனுமமவர்சொலவலதா
லேயபபுணடவனுமமெனவெண்ணினையோ. (௧0)

இ-ள். கொல்லுலையிற் காய்ச்சப்பட்ட நெடிய ஆயுதங் கையுளதாக, தேயக்கப்படட அக்ஷனையும், சில அற்பமாகிய பகழிகளாற் றுளயப்படட கும்பகருணனையும், (இராமலக்கும ணனென்னும்) அவர் சொல்வலியா லேய்ககப்பட்ட வீடணனை யும்போல, என்னை நினைத்தனையோ. எ - று. (௧0)

இதுவுமது.

௧௨எ. உம்பிககுயிரீறுசெயதானொருவன
றம்பிககுயிரீறுசமைததவனைக
கம்பிபபதொர்வனறுயாகணடிலனே
னம்பிககொருநனமகனோவினிநான. (௧௧)

இ-ள். உனது தம்பியாகிய கும்பகருணன னுயிர்க்கு ஒருவ னிறுதியைச் செயதான், அவனதமபியின துயிர்க்கு இறுதியைச் செய்து அவனை, நடுங்குவிபபதாகிய ஒப்பற்ற மிகுந்த துன்பஞ் செய்திலனேல், ஆண்மகனாகிய வுனககு இனி நான் ஒரு நல்ல மகனோ. எ-று. (௧௧)

௧௨அ. தேர்சென்றனசெஙகதிரோனொடுதே
ரூாசென்றனபோலொளியோடைகளின
காாசென்றனகாாநிரைசென்றனபோற
பாாசென்றனசென்றிலபாயபரியே. (௨௫)

இ-ள். செங்கதிரோனொடு தோ ஊா சென்றனபோல்-சூரி யனோடு பலதெர்களூர்ந்து சென்றனபோல, தோசென்றன- வீரர்களோடு தோகளபோயின, கார் நிரை சென்றனபோல்- மேகவரிசைகள் சென்றனபோல, ஒளி ஓடைகளின் கார் சென் றன - ஒளிபொருந்திய வோடைகளையுடைய யானைகள்போயின, பாய் பரிபார்சென்றில சென்றன - பாயுங்குதிரைகள் புவியிற் சென்றிலவாய்ப் போயின. எ-று. கார் - ஆகுபெயர். (௨௫)

௧௨௯. மோரததனைவெறபினமொயததுநெடும
பாாிறசெலுமாறுபடடபபடருந
தோாசுறறிடவேகொ௱டுசெனறுமுரட்
போாமுறறுகளததிடைபுக்கனனல். (௨௬)

இ-ள். மேரு அத்தனைவெற்பு இனம்மொய்த்து-மேருகிரியைப்போன்ற வததனைபெரிதாகிய மலைக்கூட்டஞ்சேர்ந்து, நெடும்பாரில் செல்லும் ஆறுபட - நெடியபுவியிற் செலலுகின்றவிதந்தோன்ற, படரும் தேர்சுற்றிட கொடுசென்று - செல்லுகின்ற தேர்கள் தன்தேரைச் சூழக்கொண்டுபோய்,முரண்போர்முற்று களத்திடை புக்கனன் - வலியுடைய அமா முற்றுகின்ற களத்திற் சார்ந்தான் எ-று. (உசு)

அதிகாயனகுமபகருணனுடலைபபார்ததசதைசசொலலியது.

ச௱0. மலைகணடனபோலவருதோளொடுதோள
கலைகணடகருஙகடல்கணடுளவாம
நிலைகணடனகண்டொருதாதைநெடுந
தலைகணடிலனினறுசலிததனனால். (உஅ)

இ - ள். மலைகண்டன'போல் வருதோளொடு தோள்-மலைகளைப் பாாத்தன போலத் தோனறுவதாகிய தோளொடுதோளையும், கலைகண்ட கரும்கடலகண்டு - மகர மீன்கள் வதிகின்ற கரிய கடலைப்பார்த்து, உள ஆம் நிலைகண்டு அன்னகண்டு-அக்கடலி லுள்ளனவாகிய நிலைமைகளைக் கண்டாற்போல உடலைப்பார்த்து, ஒரு தாதைநெடும் தலைகண்டிலன் நின்று சலித்தனன் - ஒரு சிறு தாதையின் தலையைப் பாராது நின்றுதுககித்தான். எ - று. (உஅ)

க௱.ச. என்றுமுனியாவிதிழைததுளவன்
பினனுமியபடிசெய்துபெயாந
தனனிடாகணடிடராறுவனென
றுனனுவொருவறகிதுணர்ததினனல. (௱.க)

இ-ள். என்றுமுனியா இது இழைத்து உள வன் - என்று கோவித்து இதுசெய்துள்ளவனாகிய இராமனுக்கு, பின்னையும் இப்படி செய்து பெயர்ந்து - தம்பியாகிய இலக்குமணனையுமிவ்வாறு செய்துபோய், அன்னான் இடர்கண்டு இடர்ஆறுவன் என்று உன்னு-அவ்விராமன் படுந்துன்பத்தைப் பார்தது யான் துன்பமாறுவேனென்று நினைந்து, ஒருவற்கு இது உணர்த்தினன் - ஒருவனுக்கிதைச்சொல்லினன். எ - று. (௱.க)

அதிகாயன்மயிடனுக்குச்சொலலியது.

௪௩௨. தீதென்றதுசிநதனைசெய்திலனு
லீதென்றறமனனெறியாமெனநீ
தூதெனறிகழாதுளசொலவதலாற
போதெனறுடனேகொடுபோதுதியால். (௩௫)

இ - ள். தீது என்றது சிந்தனை செய்திலன் - தீதென்றதை யெண்ணஞ் செய்திலன், ஈது அறம் - இது தருமம், ஈதுமன் னெறி - இது அரசநீதி, ஆம்என்று - ஆகுமென்று, என - சொல்லி, நீதூது என்று இகழாது உளசொலவது அல்லால் - நீதூது செல்லுகின்றோமென்றிகழாமலுள்ளதைக் கூறுவதல்லாமல், போதுஎன்று உடன் கொடுபோதுதி - வருதியென்றுடன் கொண்டு வருதி. (௩௫)

இதுவுமது.

௧௩௩. சிநதாகுலமெநதைதிரிததிடுவான்
வநதானெனவெனனெதிரேமதியோய
தந்தாயெனினயானலதியாாதருவா
ருநதாரியவல்லவுயாநதவெலாம. (௩௭)

இ-ள். எந்தை சிந்தாகுலம் திரித்திடுவான் - எனது தந்தையினது மனககவலையை மாற்றும்பொருட்டு, வந்தான் என என் எதிர் - அதிகாயன் வந்தானென்று சொல்லி யெனக்கெதிரே, தந்தாய் எனில் - இலக்குமணனைக் கொணர்ந்தாயாயின், மதியோய்-அறிவுடையோய், உந்த அரிய அல்ல உயர்ந்த எல்லாம் - நீககவரிய வல்லாத வுயர்ந்த பொருள்களையெல்லாம, யான் அலது தருவார் யார் - யானலதுனக்குத் தருவார் யார். எ-று. (௩௭)

மயிடன இளையபெருமானுககுச்சொல்லியது.

௧௩௪. சையப்படிவததொருதர்ஜைதயைமுன
மெயயெபபடிசெய்தனனும்முனவிரைந்
தையபபடலபயடியிப்படியிற்
செய்யபபடுகிற்றிதெரிததனனல். (௫௦)

இ-ள். சையப்படிவத்து ஒரு தந்தையை-மலையையொத்த சரீரத்தையுடைய எனதொரு சிறுதாதையை, முன் - முன்னமே, மெய் - தேகத்தை, நும்முன் எப்படி செய்தனன் - உனது

தமையனாகிய ராமன் எவ்விதஞ்செய்தான், விரைந்து - சீக்கிரமாய், அப்படி இப்படியில் - அவ்வாறு இச்சமரபூமியில், செய்யப்படுகிற்றி தெரிந்தனன் - நீயதிகாயனால் செயயப்படுவாய் அதைச்சொன்னேன், ஐயப்படல் - ஐயப்படாதே. எ-று. (ருo)

மயிடன்பிறரைநோக்கிச்சொலலியது.

கருரு. கொன்றானொழியக்கொலைகோளறியா
நின்றானொடுநினறதெனேடியெனிற
றன்றாதைபடுந்துயர்தநதையைமுன
வென்றானையியற்றுமவேட்கையினால். (ருக)

இ-ள். கொன்றான் ஒழிய-கொன்ற இராமனொழிய, நேடி - தேடி, கொலைகோள் அறியா நின்றானொடு நின்றது என்னெனில்-கொலையின் கோட்பாட்டை யறியாமல் நின்ற இலக்குமணனோடு நின்றது யாதுகாரணத்தாலென்றால், தன்தாதை படுந்துயர்-தனது தாதையாகிய இராவணன் தம்பியை யிழந்து படுகின்ற துன்பத்தை, தந்தையைமுன் வென்றானை - சிறியதந்தையாகிய கும்பகருணனை முன்வென்ற இராமனை, இயற்றும் அவ்வேட்கையினால் - செய்யவேண்டு மென்னு மவ்விருப்பத்தா லென்றான். எ - று. (ருக)

விபீடணாழ்வானஸ்ரீராமபிரானுககுச்சொலலியது.

கருசு. காலங்கள்கணக்கிலகண்ணிமையா
வாலங்கொணமிடற்றவராரழல்வாய்
வேலங்கொழியகொடுவிட்டதுநீள்
சூலங்கொலெனப்பகர்சொல்லுடையான. (சுக)

இ-ள். கணக்குஇலகாலங்கள் கண் இமையா-கணக்கில்லாத காலங்கள் கண்களை யிமைக்காத, ஆலம்கொள் மிடற்றவர்-விடத்தைக் கொண்ட கண்டத்தையுடைய சிவனா ரறிந்த, ஆர் அழல்வாய்வேல் - நிறைந்தநெருப்பு வாய்ந்த வேலாயுதத்தை, அங்கு ஒழியக்கொடு நீவிட்டது - தன்மேற் படாம லொழியக் கைக்கொண்டு நீவிட்டதாகிய, சூலம் கொல்எனப்பகர்சொல் உடையான் - சூலமிதுவோ வென்று கூறுகின்ற மொழியை யுடையான், எ - று. (சுக)

இதுவுமது.

௧௩௭. வலலாருருவாயிரமாய்வரினும்
நலலாரமுறைவீசிநகுநதிறலார
மலலாலிளகாதுமலைநதனனமா
லலலாயிரமாயிரமஃகினவால (௬௯)

இ-ள். நல்லார் முறைவீசிநகும் திறலார்-சான்றோருடைய முறையை நீககி விளங்குகின்ற வலியுடைய ராகிய, வல்லார் உரு ஆயிரமாயவரினும் - வல்லவர் கோவித்து ஆயிரம்போக ளாய் வரினும், மால - திருமால், மல்லால இளகாது மலைநதனன் - வலியாற் றளராது போர்செய்தனன, ஆயிரம ஆயிரம் அல் அஃகின - பலவாயிர நாட்கள் கழிந்தன. எ-று. (௬௯)

இதுவமது.

௧௩௮. தனபோல்பவர்தானுமிலாததனிப
பொனபோலொளிர்மேனியனைபபுகழோ
யெனபோல்பவர்சொலலுவதெனனுடையா
ருனபோலபவரியாருளரென்றுரையா. (௭௦)

இ-ள். தன்போல் பவர்தானும் இலாததனிப்பொன்போல் ஒளிர் மேனியனை - தன்னை யொப்பவர் தானுமில்லாத ஒப்பற்ற பொன்னைப்போல விளங்குகின்ற சரீரத்தையுடைய மதுவென் பானை, (திருமால்நோக்கி) புகழோய் என்போல்பவர் சொல்லு வது என் - புகழுடையோய் என்னை யொப்பவர் புகழ்வது யாது, உடையார் உனபோல்பவர்யார் உளர்என்று உரையா- வலியுடையா ருன்னை யொப்பவர் யாருளரென்று சொல்லி. எ-று. (௭௧)

ஸ்ரீராகவபிரானவிபீடணாழ்வானுககுசசொலலியது.

௧௩௯. ஏகாயுடனீயுமெதிர்நதுளனு
மாகாயநெடுநதலைவாளியொடு
மாகாயமளந்துவிழுநததனைக
காகாதிகணுங்குதலகாணுதியால. (௮௨)

இ-ள். நீயுமுடன் செல்லுதி எதிர்த்துள்ளவனாகிய அதிகா யனது, பெரியசரீரமும் நெடியதலையும் அம்போடு, பெருமை பொருந்திய ஆகாயத்தையளந்து புவியில்விழுந்து அவ்வுருவை, காகாதி பறவைகளுண்ணுதலைப் பார்த்தி. எ-று. (௮௨)

கசo. சேனைக்கடலசென்றதுதென்கடலமே
லேனைக்கடல்வந்ததெழுந்தவென
வானைக்கடல்தோபரியாளமிடையுந
தானைககடலோடுதலைப்படலும். (அஅ)

இ-ள். தென்கடல்மேல் ஏனைக்கடல் வந்தது எழுந்தென-தெற்குக் கடல்மேல் மற்றொருகடல்வந் தோங்கியதுபோல, சேனைக்கடல் சென்றது-குரஙகு சேனைககடல் சென்றது, தேர் பரி ஆள்மிடையும் தானைக்கடலோடு-தேருங் குதிரையும்ஆளும் நெருங்கிய அவ்விராக்கத சேனைக்கடலோடு, ஆனைக்கடல்தலைப் படலும் - யானைக்கடல்வந்து சேர்தலும். எ-று (அஅ)

கசக. பசும்படுகுருதியிறபண்டுசேறுபட்
டசும்பறவுருகியவுலகமார்ப்பெழக்
குசும்பையினறுமலர்ச்சுண்ணககுப்பையின்
விசும்பையுங்கடந்ததுவிரிந்ததூளியே. (அகூ)

இ-ள். பசும்படுகுருதியில் - பசுமைபட்ட இரத்தத்தால், உருகிய உலகம் - இளகிய அமர்க்களம், பண்டுசேறுபட்டு அசும்பு அற-முன்னஞ்சேறுபட்டதாகி யொழுக்கறும்படி, ஆர்ப்பு எழ - வீரர்களினொலி யெழுதலால், விரிந்ததூளி-பரந்ததுகள், குசும்பையின் நறுமலர்ச் சுண்ணக்குப்பையின் விசும்பையும் கடந்தது-செந்துருககமரத்தி னறுவியமலர்களினது பராகங்களின் றொகுதியைபபோல ஆகாயத்தையுங்கடந்து சென்றது. எ-று. (அகூ)

இரத்தத்தாற் சிவந்ததுகளென்பார் குசும்பையின்நறுமலர் சுண்ணக்குப்பையி னென்றார்.

கசஉ. மரவமுஞ்சிலையொடுமலையும்வாளெயிற்
றரவமுங்கரிகளும்பரியுமல்லவும
விரவினகவிக்குலம்வீசவிமமலா
லுரவருங்கானெனபொலிநததும்பரே. (கூகூ)

இ-ள். மரவமும் சிலையொடு மலையும் வாள் எயிற்று அரவமும் கரிகளும் பரியும் அல்லவும் - மரங்களையுங் கல்லொடு மலைகளையும் அச்சத்தைக்கொடுக்கின்ற பற்களையுடைய பாம்புகளையும் யானைகளையுங் குதிரைகளையும் மற்றவைகளையும், கவிக்குலம் வீச - குரங்குகூட்டமெடுத்து மேலெறிய, விரவின விம்மலால்-

(அவைகள்) தம்முட்கலந்தனவாய் நெருங்கலால், உம்பர் உரவு அரும் கான் எனப் பொலிந்தது - ஆகாயம் வலியுடைய அருமையான வனத்தைப்போல விளங்கிற்று. எ-று. (கூ௯)

கசரு. அடக்கருங்கவந்தநின் றாடுகின்றன
விடற்கரும்வினையறச்சிந்திமெய்யுயிர்
கடக்கருந்துறக்கமேகலந்தவாறென
வுடற்பொறையுவகையிற்குனிப்பவொத்தன. (கககூ)

இ-ள். விடற்கு அரும்வினை அறச்சிந்தி - போக்குதலுக் கரிய தீவினைகளை முற்றும்போக்கி, மெய் உயிர்கடக்க அரும் துறக்கம் கலந்த ஆறு என - என்று முள்ளவுயிர் எவருந் தள்ள அரிதாகிய சுவர்க்கத்தைச் சேர்ந்தனவென்று, உடற்பொறை உவகையில் குனிப்ப ஒத்தன-தேகம் உவப்பாலகூத்தாடுவதைப் போன்று, அடக்க அரும் கவந்தம் நின்று ஆடுகின்றன-அடக்க வரிதாகிய கவந்தங்கள் நிலைகொண்டாடுகின்றன. (கககூ)

கசச. தாக்கியசரங்களிற்றலைகணீங்கிய
வாக்கையபுரசையோடளைந்ததாளன
மேக்குயரங்குசக்கையவெங்கரி
நூக்குவகணிப்பிலவரக்கர்நோன்பிணம். (ககச)

இ-ள். கணிப்பு இல அரக்கர் நோன்பிணம் - அளவில்லனவாகிய இராக்கதரது வலிய பிரேதங்கள், தாக்கிய சரங்களில் தலைகள் நீங்கிய ஆக்கைய-தாக்கியவாளிகளால் தலைகளறுபட்டு நீங்கிய சரீரங்களையுடையனவாய், புரசையோடு அளைந்த தாளன - யானையின் கழுத்துக்கயிற்றோடு சேர்ந்த கால்களையுடையனவாய், மேக்கு உயர் அங்குசக்கைய - மேலுயர்ந்த அங்குசத்தைப் பிடித்த கையுடையனவாய், வெம்கரி நூக்குவ - வெவ்விய யானைகளைச் செலுத்துவன. எ-று. (ககச)

கசரு. கோளுடைக்கணைபடப்புரவிகூத்தன
தோளுடைநெடுந்தலைதுமிந்துந்திர்கில
வாளுடைக்குறைத்தலையிரவாடுவ
வாளுடைத்தடக்கையவாசிமேலன. (ககரு)

இ-ள். கோள் உடைக்கணைபடப்புரவி - கொலையுடைய வாளிகள் தைத்தலுங் குதிரைகள், தோள் உடைநெடும்தலை துமிந்தும் திர்கில - தோளுடைய நீண்டதலைகள் துணிந்து

விழுந்துளு சாகிலவாய், கூத்தன-கூத்துடையன, வாசிமேலன- அக்குதிரைகளின்மேலுள்ளனவாகிய, ஆள் உடைகுறைத்தலை- ஆளுடைய முண்டங்கள், வாள் உடைத்தடக்கைய - வாள் பிடித்த அகன்றகையுடையனவாய, அதிர ஆடுவ - நடுங்கும் படியாடுவன. எ- று. (ககரு)

கசசு. தூணடருங்கணைபடதது மிநது துளளிய
நீணடருநெடுநதலைதழுவிசசோநதன
பூணடெழுகரதலமபொறுக்கிலாதன
வாணடலைநிகாததனவெருவையாடுவ. (ககஅ)

இ - ள். தூண்டு அரும் கணைபடத்துமிந்து துள்ளிய - போக்குதலுக்கரிய அம்புதைகக அறுபட்டுத்துள்ளிய, நீண்டு அரும் நெடும்தலை - எடுததலுக்கரிய நெடியதலைகளை, தழுவிச் சேர்ந்தன-(முண்டஙகள்) அணைத்துச் சார்ந்தனவாய, பூண்டு எழுகரதலம் பொறுக்கில்லாதன - எடுதெழுந்தகையால் தாங் கவில்லாதனவாய, ஆணடலை நிகர்த்தன - கோழியை யொத்த னவாய், எருவை ஆடுவ - உதிரத்திலாடுவன. எ-று. (ககஅ)

கசஎ. விளக்குவானகணைகளால்விளிநதுமேருவைத
துளககுவாருடற்பொறைதுணிநதுதுள்ளுவா
ரிளககுவாரமராதஞ்சிரதைதயெண்முது
குளுககுவாணிலமகள்பிணதநிஞெஙகலால. (கஉ0)

இ-ள். விளிந்துமேருவைத் துளககுவார்-கோவித்து மேரு கிரியை யசைப்பவர், வான்விளக்கு கணைகளால்- ஒளியைச்செய் கின்ற அமபுகளால், உடல்பொறை துணிந்து துள்ளுவார் - சரீரங் கூறுபடடுத்துள்ள, அமரர்தம்சிரத்தை இளக்குவார் - தேவர்தமது சிரங்களைக்குலுக்குவார், நிலமகள் பிணத்தின் ஓங் கலால் - புவிமகள் பிணத்தின மலைகளால், எண்முதுகுஉளுக்கு வாள் - வலியமுதுகைச்சுளுக்குவாள். எ-று (கஉ0)

கசஅ. நாலாயினநவயோசனைநனிவனறிசையெவையு
மாலாயினமதவெஙகரிதிரிகினறனவரலுந
தோலாயினதுலகெஙகணுமெனவஞ்சினதுகளே
போலாயினவயவானமுமாறுனதுபுவியே. (கருக)

இ-ள். நாலாயின நவயோசனை நனிவன்திசை எவையும் - நான்கு பக்கங்களிலாகிய ஒன்பது யோசனை தூரமுள்ள மிகுந்த

வலியுடைய யுத்தகளத்தின் திசை யெல்லாவற்றிலு மிருந்து, மாலாயின மதவெம் கரிதிரிகின்றன வாலும் - மயக்கமுடையன வாய் மதமுடையவெப்பம்பொருந்தியயானைகள் உலாவுகின்றன வாய் வருதலும், எங்கணும் தோல ஆயினதுஎன - எல்லா விடமும் யானைகளாயிற்றென்று, உலகு அஞ்சின-உலகங்களஞ்சின, வயவானமும் - வலியுடைய ஆகாயத்திலும், துகள்ஆயின-புழுதிகள் படிதலாயின, புவிமாறுனது - புவிவேறுபட்டது. (கருக)

போல் — இசைநிறை.

கசகூ. மலையஞ்சினமழையஞ்சினவனமஞ்சினபிறவும்
நிலையஞ்சினதிசைவெங்கரிநிமிர்கின்றனகடலி
னலையஞ்சினபிறிதெனசிலதனியையங்கரகரியுங
கொலையஞ்சுதல்புரிகின்றதுகரியினபடிகொளலால். (கருச)

இ-ள். திசைவெம்கரி — வெப்பம் பொருந்திய திசையானைகளும், நிமிர்கின்றன கடலின் அலை — ஓங்குகின்றன வாகிய கடலினலைகளும், அஞ்சின - அஞ்சின, பிறிதுசிலஎன் - வேறு சிலஎன், தனிஐங்கரகரியும் - விநாயகனாகிய ஒப்பற்ற ஐந்து கரங்களையுடைய யானையும், கரியினபடி கொளலால் - பிறயானையைப்போல உருவங்கொண்டிருத்தலால், கொலை அஞ்சுதல் புரிகின்றது - கொலைக்கு அஞ்சுதல் செய்கின்றது. (கருச)

கருo. * ஆமாமெனத்தலைமூனறுடையவனூர்த்துவநதடர்த்தான்
கோமான்றனிப்பெருநதுதனுமெதிரேசெருக்கொடுத்தான்
காமாணடவாகல்லாதவாஉலீொனக்கழரு
நாமாண்டனரயனினறுறநடுவேபுகநடந்தான். (களஎ)

கருக. பின்னின்றாமுன்னினறரைக்காணலாம்பெற்றிததாக
மினனினறவயிரவாளிதிறநதனமேனிமுறறு
மநநினறநிலையிறைறலகுறைநதிலனுவிநீங்கான
பொனனினறவடிம்பின்வாளியுருமெனபபொழியும்வில்லான். ()

இ-ள். பின்நின்றார் முன்நின்றாரைக் காணலாம பெற்றித்து ஆக-பின்னின்றவர் தமக்கு முன்னின்ற வரைப் பார்க்கலாகுந் தன்மை யுடைத்தாக, மேனிமுற்றும் - இடைநின்றவரது சரீர முழுதையும், மின்நின்ற வயிரவாளி திறந்தன - ஒளிபொருந்திய பலமுடைய கணைகள்துளைத்தன, (உoச)

* ஆம ஆம எனத தலைமூன்று உடையவன ஆாததுவநது அடர்த்தான்-நீ சொன்னவாறு ஆகுமாகுமென்று திரிசிரசு என்பான் கருச்சிதது வந்து போாபுரிநதான, கோமான தனிபபெரும் தூதனும-இறைவனது ஒபபில்லாத பெருமை பொருநதிய தூதுவனாகிய அனுமானும், கா - அசோகவனததில், மாண்டவா - எனனால் மடிநதவா, கல்லாதவர் - போாததொழிலைக கலலாதவா, வலலீா எனக கழறு - நிரததொழிலில வலலீரொனறு கூறி, நா மாண்டனா அயல் நினறற - அரககாதைககேட்டு நாவடங்கினராய்ப பககததிலநிற்க, நடுவே புக நடநதான - நடுவேபுகுநது நடந்து, எதிரே செருககொடுததான-அவனுககெதிரே செருச்செயதான். (கஎஎ)

இலஙகையில் வாலாலும் காலாலும கையாலும மாண்டனா பலராகலின "காமாணடவர்" என்று அதனை யீணடுககுறிப்பித்தாா. இழிததறகு வலலீரெனப்பன்மையாற கூறினாா. புக என்பது செயதெனெசசத்திரிபு.

கருஉ. கூர்மத்தினமுதுகினவைத்துவாளவரமுதங்கொண்ட
நீர்மத்தினிமிர்நததோளானிறைமத்தமதுவைத்தேக்கி
யூர்மத்தமுண்டாலன்னமயக்கத்தாலுருமைத்தின்பான
போர்மத்தனெனபான்வந்தான்புகாமத்தப்பூட்கைமேலான ()

இ-ள். மத்தம் நிறைமதுவைத்தேக்கி - மயக்கம் நிறைந்த கள்ளைக்குடித்து, ஊர் மத்தம் உண்டால் அன்ன - ஊரிலுள்ள பூமத்தங்காயை யுண்டா லொப்ப, (உகரு)

பூமத்தங்காயை இக்காலத்தார் ஊமத்தங்காயென்று வழங்குப.

கருங. காற்றன்றேறகடுமையெனஞுங்கடலன்றேனமுழக்கமெனஞுங்
கூற்றன்றேற்கொலைமறறெனஞுமுருமன்றேறகொடுமையெனஞு
சீற்றந்தானன்றேறசீற்றமவேறுனறுதெரிப்பதெங்கே
மாற்றனறேமலைமற்றெனனேமத்தனறனமத்தயானை. (உகசு)

இ-ள். மத்தன் தன் மத்தயானை - மத்தனுடைய மதமுடைய யானைக்கு, மலை மாறு அன்று - மலைபிரதியன்றாயின், மற்று என் - வேறுயாதுளது. (உகசு)

கருச. செயவாயிகலெனறவனினறுசிரித்தா
னைவாயரவமமுழைபுக்கெனவையன
கைவாயவழிசெனறவனுருயிர்க்ககப்
பைவாய்நெடுநாவைமுனிநதுபறித்தான. (உசஎ)

இ-ள். ஐவாய் அரவம் முழைபுக்கு என - ஐந்தலையுடைய பாம்புமுழையிற் புகுந்தாற்போல, ஐயன் கை வாய் வழிசென்று அவன் ஆருயிர்க்கக - அனுமான் தனது கையை வாய்வழியாய் விட்டு அக்கும்பனுயிர் நீத்துச்சாக, (உசஎ)

கைபாம்பினுடலுக்கும் விரல்கள் ஐந்துதலைக்கும் உவமை.

கருரு. திசையினைநோக்குநின்றதேவரைநோங்கும்வந்த
வசையினைநோக்குங்கொற்றவாளினைநோககுமபற்றிப்
பிசையுறுங்கையைமீசைசுறுக்கொளவுயிர்க்கும்பேதை
நசையிடைக்கணடாலென்னநகுமழுமுனியுநாணும். (உசஅ)

இ-ள். பேதை நசை இடைகண்டால் என்னநகும் அழும் முனியும் நாணும் - அறிவில்லான் ஆசையைத் தன்னிடத்திற் செய்தாற்போல சிறிதுபொழுது சிரித்து அழுது கோவித்து வெட்குவான். (உசஅ)

## கஅ-வது. நாகபாசப்படலம்.

## இந்திரசித்து நாகபாசத்தாற்கட்டியதைக் கூறுகின்றபடலம்.

இநதிரசித்தின தேரைக்குறிததுசசொலலியது.

கருசு. நூறுயிரமாளியிஞெனைமைதெரிநதசீயத
தேருமவையனனளவயாயிரம்பூண்டதெனப
மாறுயொரிலங்கைநிகாப்பதுவானுளோருந
தேறுதுமற்றவனேறியதெய்வமாத்தேர் (கசு)

இ-ள். அவ்விந்திரசித்தேறிய தெய்வத்தன்மை பொருந்திய பெரியதேர், நூறுயிரம் ஆளிகளின் வலியையுடைய ஆண்சிங்கங்களாயிரம் பூண்டதென்று சொல்வர் அறிந்தோர், பிரதியாய ஒரு இலங்கையை யொப்பாயது, தேவர்களாலு மித்தன்மைத்தென்றறியப்படாதது. (கசு)

இதுவுமது.

கருஎ. பொன்செனறறியாவுவணததனிப்புள்ளினுக்கு
மின்செனறறியாமழுவாளன்விடைகருமேனுட்
பினசெனறதல்லாலோர்பெருஞ்சிறப்புற்றபோது
முனசென்றறியாததுமூனறுலகததினுள்ளுமே. (உ0)

இ-ள். பொன் சென்று அறியா உவணத் தனிப்புள்ளினுக்கும் - நிறத்தாற் பொன்ஞெப்பாகாத கருடஞகிய ஒப்பற்ற பறவைக்கும், மின்சென்று அறியாமழுவாளன் விடைக்கும் - மின்னலொப்பாகாத மழுவாயுதமுடைய சிவனது இடபத்துக்கும், மேல் நாள் பின்சென்றது அல்லால் - மேனுளிற் பின்பு சென்றதல்லாமல், ஓர் பெரும் சிறப்பு உற்றபோதும் - அப்புள்ளும் இடபமும் ஒப்பற்ற மிகுந்த துணைவலியைப் பெற்றகாலத்தும், மூன்று உலகத்தின் உள்ளும் முன்செனறு அறியாதது - திரிலோகத்துள்ளும் (அத்தேர்) முன்புசென்றறியாதது. எ-று. (உ0)

இந்திரசித்தின் இரதத்தைப்பார்த்தலும் கருடனும் இடபமும் எதிர்நில்லாமலோட அத்தேர் பின்றேடியவற்றைத் துறத்தலால் பின்சென்றதல்லால் முன் சென்றறியாதது என்றார். ()

கருஅ. மயிர்ந்தனுமிளவருனுமழைக்குலங்கிழித்துவானத்
துயர்ந்தெழுமெருவைவேந்தருடனபிறந்தவரையொத்தா
கயங்குடைந்தாடும்வீரக்களிறெருதத்தானகவையனகாலிற்
பெயாந்திலனுற்றதலலாறகேசரிபெரும்போர்பெறறுன. (ருகூ)

இ-ள். எருவை வேந்தர் உடனபிறந்தவரை ஒத்தார்-கழுகு களுக் கிறைவராகிய சம்பாதி சடாயுவென்னும் சகோதரரைப் போன்றார், (ருகூ)

இவர் தெய்வலோகம பார்ககவேண்டி விண்மேற்பரந்தார்.

கருகூ. மீளியொண் கணைகடோறுமுந்தியவேழமொறறை
வாளியினறலையபாரிளமறிவனமலையிறசூழ்ந்த
வாளியினறுப்பின்வீராபொருகளததார்ததவாழித
தூளியினறெகையவளளலசுடுகணைதொகையுமமமா. (கூசு)

இ-ள். மீளிஒண்கணைகள்தோறும் உந்தியவேழம்-வலிமை யுடைய ஒள்ளிய வாளிகளை விடுந்தோறும் அவ்வாளிகள் சாய் த்த யானைகள், ஒற்றைவாளியின தலைய - ஒருஅம்பின் தலை யையுடையனவாய், பாரில் மறிவன மலையில் சூழ்ந்த - புவியிற் சாவனவாய் மலையைப் போலச் சூழ்ந்து கிடநதன, வள்ளல் சுடுகணைத்தொகையும் - இளையபெருமாளது சுடுகின்ற அம்பு களின் றொகைகளும், ஆளியின் துப்பின் வீரா பொருகளத்து ஆர்த்த ஆழித்தூளியின் தொகைய - சிஙகத்தைப்போல வலியி னையுடைய வீராகள் பொருத யுத்தகளத்தில் நிறைந்ததுகள் களின்தொகையவாம். எ-று. (கூசு)

அம்பின் தொகை தூளியெனவே யிறந்த யானைகளின் றொகையும் அத்துணையதாம்.

கசு0. குடாகிடநதனபாம்பெனக்கோணமதித
திடர்கிடநதனசிநதினதேர்ததிரள
படர்கிடநதனபல்படைகைகயினா
கடலகிடநதனபோனறகளததினே. (கருஎ)

இ-ள். பல்படைக்கையினர் - பலஆயுதங்களைப் பிடித்தகை யுடைய வீரர்களாலாகிய, கடல்கிடந்தன போன்றகளத்தின்-கட ல்கள் கிடந்தன போன்ற யுத்தகளத்தில், பாம்பு எனகுடர் கிட ந்தன - பாம்பைப்போலக் குடல்கள் கிடந்தன, கோள்மதித்தி

டர் கிடந்தன - பெருமை பொருந்திய திங்கள் மேடாகிய (பற்கள்) கிடந்தன, படர் - செல்லுகின்ற, தேர்த்திரள் சிந்தின கிடந்தன-தேர்க்கூட்டங்கள் சிதறினவாய்க்கிடந்தன. எ-று.()

௧௬௯. சுற்றிவாலகொடுதூவுநதுகைக்கும்விட்
டெற்றும்வானினெடுத்தெறியும்மெதி
ருறறுமோதுமுதைக்குமுறுக்குமாற்
கொறறவில்லியனறேறியகூறறமே. (௧௪௦)

௧௭௦. பாரக்குமஞ்சவுறுகரும்பகட்டிளுற்
றூரக்கும்வேலையைதோள்புடைகொட்டிநின
ருர்கருமாயிரநதேரடிததங்கையா
லீாகருமையனனறேறியயானையே. (௧௪௧)

௧௭௧. மாவுமியானையும்வாளுடைததானையும்
பூவுநீருமபுனைதளிரும்மெனத
தூவுமளளிப்பிசையுநதுகைக்குமாற
சேவகனறெறிநதேறியசீயமே. (௧௪௨)

௧௭௨. உரகம்பூண்டவுருளைபொருநதின
விரதமாயிரமேயெனுமாததிரை
சரதமாகத்தரைப்படச்சாடுமால்
வரதனனறுவநதேறியவாசியே. (௧௪௩)

கூற்றம், யானை, சீயம், வாசி, என்பன அனுமான்.

௧௭௩. விகடமுறறமரனொடுவெற்பினம்
புகடவுற்றபொறுததனபோவன
துகடவததொழில்செயதுறைககமமியர்
சகடமொததனதாரணிதேரெலாம். (௧௪௪)

இ-ள். விகடம் உற்றமரனொடு-சிதைந்த மரங்களொடு, உற்றவெற்பு இனம்புகட - எறிதலால் விழுந்த மலைக்கூட்டமுட்புக, பொறுத்தன போவன - தாங்கினவாய்ச்சென்ற, தார்அணிதேர் எல்லாம் - கிண்கிணிமாலை யணிந்த தேர்களெல்லாம், துகள் தவத்தொழில் செய் துறைக்கம்மியர் சகடம் ஒத்தன - குற்றம் நீங்கத்தொழில்செய்கின்ற துறையையுடைய கம்மியர்களது பண்டிகளை யொத்தன. எ-று. (௧௪௪)

கருத்து. உடைந்து கலகலவென்றோடுந் தேர்கள் பாத்திரமேற்றியகம்மியரது பண்டிகளையொத்தன.

அங்கதன், வீசிய மாதனைச்சொல்லியது.

கசுசு. ஏரழித்தது செய்தவனீண்டெழிற
சீரழித்தவனுமெனத்தேவர்க
ளூரழித்தவுயர்வரைத்தோளவன
றேரழித்ததிமைப்பினிற்சென்றதால். (கருஅ)

இ-ள். செய்தவன் எழில்சீர் அழித்தவன் என - செய்த தவமுடையோனாகிய பிரமனது அழகின் சிறப்பை யழித்த உருத்திரனைப்போல, ஈண்டு - விரைவில், ஏர்அழித்தது - அழகை யழித்து, தேவர்கள் ஊர்அழித்த உயர்வரைத் தோளவன் தேர் அழித்தது இமைப்பினில்சென்றது - தேவர்களூரை யழித்த வுயர்ந்த மலைபோன்ற இந்திர சித்தினது தேரை யழித்ததா யிமைப் பொழுதிற் சென்றது. எ-று (கருஅ)

கசுஎ. நேர்செலாதிடைநின்றனர்நீணெடுங்
காரசெலாதிருளகீறியகண்ணகன
றேர்செலாதுவிசும்பிடைசசெலவதோா
பேர்செலாதுபிணத்தினபிறக்கமே. (கருகூ)

இ-ள். பிணத்தின் பிறக்கம் - பிணத்தினச்சத்தால், நீள் நெடும் கார்செல்லாது - மிகுந்த நெடியமேகமுஞ்செல்லாது, இருள் கீறிய கண்ணகன் தேர்செலலாது - ஒளியாலிருளைப்போக்கிய இடமகன்ற(சூரியனது)தேர்செல்லாது, விசும்பிடைசசெல்வது ஓர் பேர்செல்லாது - ஆகாயத்தினிடத்திற் செல்வதாகிய ஒரு பெயருடைய பொருளுஞ் செலலாது, நேர்செலலாது இடை நின்றனர் - (ஆகலால்) எலலாரும் நேரேசெல்லாது இடையில் நின்றனர். எ-று. (கருகூ)

கசுஅ. வாழியவேதநானகுமனுமுதலவநதநூலும
வேழ்வியுமெய்யுநதெயவவேதியர்விளைவுமஃதே
யாழியஙகமலகைகயானாகியபரமனெனனு
வேழையருளளமெனனவிருண்டனதிசைகளெல்லாம். (கஎக)

இ-ள். நான்குவேதங்களும் மனுமுதலாகச் செய்யப்பட்ட நூல்களும், யாகங்களும் உண்மையும்வாழ்க, தெய்வத்தன்மை பொருந்திய பிராமணரது விளைவும் அவ்வாறே வாழ்க, சக்கிரத்தைத் தரித்த அழகிய கமலம்போன்ற காமுடையானாகிய திரு

மால் உலகுக்கு முதலாகிய பரமனென்றெண்ணாத, அறிவினரது மனத்தைப்போலத் திசைகளெல்லா மிருண்டன. (கஎகூ)

இந்திரசித்து நாகபாசம் விடப்போகின்றானாகலின் இவ்வகை வாழ்த்தினார்.

கனுகூ. நாகமேயனையநமபநாழிகையொன்றுநான்கு
பாகமேகாலமாசப படுசதியேறபட்டானனறேல்
வேகவாளரக்கர்காலமவிளைநதனுவிசும்பின்மீதா
வேகுமேல்வெல்வனெனபதிராவணறகிளவல்சொனனான். (க௲௦)

இ - ள். நாழிகை ஒன்று நான்குபாகமே காலமாக - நாழிகையொன்றினது நான்கி லொருபாகமாகிய கால் நாழிகையே காலமாக, (க௲௦)

கஎ௦. வீரரையெலலாம்பார்க்குமவிதியினைப்பார்க்குமவீரப்
பாரவெஞ்சிலையைபபாாகுமபகழியைப்பார்கும்பாரின
யாரிதுபட்டாரென்போலெளிவநதவண்ணமெனனும்
நேரிதுபெரிதெனறோதுமளவையினிமிரநின்றான். (உஉரு)

இ - ள். நேர் இது பெரிது என்று ஓதும் அளவையின் நிமிர நின்றான்-நேராக இதுபெரிதென்று சொல்லுகின்ற அளவையினு முயரநின்றான், (உஉரு)

பெரியதிருவடிதோத்திரம்.

கஎக. இத்தனமையெய்துமளவின்கணின்றவிமையோர்களஞ்சியிதுபோ
யெத்தனமையெய்திமுடியுங்கொலெனறுகுலைகின்றவெல்லையிதன்வா
யததனமைகணடுபுடைநினறவண்ணலகலுழன்றனனபின்மிசையாற்
சித்தங்கலங்குமிதுதீரமெள்ளவிருளுடுவநதுதெரிவான். (உசஅ)

இ-ள். இத்தன்மை-இந்தப்பிரகாரம், எய்துமளவின்கண்-நடக்குங்காலததில், இமையோர்கள்-பிரம உருத்திரேந்திராதிதேவர்கள், அஞ்சி - பயந்து, இது - இந்தக்கோபமானது, போய்-மிருந்து, எத்தன்மை - எந்தப்பிரகாரமாய், எய்தி - நடந்து, முடியுங்கொலென - ஆறுமோவென்று, குலைகின்ற - நடுங்குகின்ற, எல்லை - சமயமாகிய, இதன்வாய் - இத்தருணத்தில், அத்தன்மை - அந்தப்பிரகாரத்தை, கண்டு-பார்த்து, புடை-பக்கத்திலே, நின்ற - நில்லாநின்ற, அண்ணல்கலுழன் - பெருமாளுடைய பெரியதிருவடி, தன் - பெருமாளுடைய, அன்பின்மிசையால் - பிரியத்தின் மிகுதியால், சித்தம்-மனது, கலங்கும்-வேறு

பட்டிருக்கின்ற, இது - இந்தத்துயரம், தீர - நீங்க, மெள்ள-மையய, இருளூடு - அந்தகாரத்தினுள்ளே, வந்து தெரிவான்-தோன்றிவிளங்குகிறான். எ-று. (உசங)

இது முதலெட்டுப்பாட்டும்-குளகம். இதனகருத்து பெரிய திருவடிகள் வருமாறும், பெருமானைக்கண்டு தொழுமாறுந் துதிக்குமாறுங் கூறுகின்றது. பதப்பொருள் கீழுரைத்தாஙகுரைக்க காட்டு கோயில்கடோறும் பெரியதிருவடியை புறப்பாட்டிற்சேவித்து நடத்தல் - நிற்றல் - கைகுவித்தல - பணிதல - மொழிதல்களைப் பாவித்துக்காண்க. இனிவிடைகூறவே வினுவும் விளங்குமாகலா னவ்விரண்டு முள்ளுறுத்திக் கூறுகின்றாம. மறைந்துவந்த நியாமகனைத் தொடர்ந் தடிமைசெய்யக்கடவ -நியாமியங்களுமறைந்து நின்றமையாற் புடைநின்றவண்ணல் கலுழனென்றார்.

கஎஉ. அசையாதசிந்தையரவாலனுஙகவழியாதவுள்ளமழிவான
இசையாவிலங்கையரசோடுமண்ணலருளினமைகணடுநயவான
விசையாலனுங்கவடமேருவையமொளியாலவிளஙகவிமையாத
திசையானைகண்கண்முகிழாவொடுஙகநிறைகாலவழங்குசிறையான். ()

இ-ள். அசையாத - கலஙகாத, சிந்தை - மனதானது, அரவால் - நாகபாசத்தாலே, அனுங்க - பெருமாள்கலங்க, (அது கண்டு) அழியாத - நடுங்காத, உள்ளம்-மனசானது, அழிவான-நடுங்குவானாய், இசையா - சரணாகதிகுடன்படாத, இலங்கையரசோடும - இராவணன்முதலிய வெல்லார் விஷயத்திலும், அண்ணல் - பெருமாளானவர், அருளினமை - அருளின்றிக் கோபங்கொள்ளுதலை, கண்டும - பார்த்தும, நயவான்-விரும்பாதவனாய், விசையால் - வேகத்தாலே, அனுங்கவடமேரு-மேருமலை குலையவும், வையம் - உலகமெல்லாம், ஒளியால் - காந்தியால், விளங்க - பிரகாசிக்கவும், இமையா - நிமையாத, திசையானை-திக்கானைகள், கண்கள்-விழிகள், முகிழா-மூடி, ஒடுங்க - பதுங்கவும், நிறை - நிரம்பிய, கால் - காற்றை, வழங்கு - தருகின்ற, சிறையான் - இறகையுடையவனாய். எ-று. (உசச)

கலங்காத திருவுள்ளம் பெருமாள் கலங்கக்கண்டு திருவடியானுங் கலங்கினனென்றார். இசையாவிலங்கை யரசோடுமென்ற ச்சவும்மையாகலான் எல்லார்விஷயத்திலுமென்றாம்.

௧௭௩. காதங்களகோடிகடைசென்றுகாணுநயனங்களவாரிகலுழக்
கேதஙகள்கூரவயாகின்றவளளறிருமேனிகணடுகிளர்வான
சீதங்கொள்வேலையலைசிநதஞாலமிருள்சிநதவந்தசிறையான
வேதங்களபாடவுலகங்கள்யாவுமவினைசிநதநாகமெலிய. ()

இ-ள். காதங்கள்கோடி - கோடிகாதத்தின், கடைசென்று - எல்லையுளவுஞ்சென்று, காணும் - அங்குள்ளனவற்றையுந் தெரியத்தக்க, நயனங்கள்-கண்களிலே, வாரி-ஊறிவருகிறநீர், கலுழ - சிந்தவும், கேதங்கள்கூர - துக்கமிகுதியாக, அயர்கின்ற - சேர்ந்துகிடக்கிற, வள்ளல் - பரமோதாரராகிய பெருமாளுடைய, திருமேனி - திவ்வியமங்களவிக்கிரகத்தை, கண்டு - பார்த்து, கிளர்வான்-பூரித்தவனாய், சீதஙகொள்-குளிர்ச்சியைக்கொண்ட, வேலை - சமுத்திரமானது, அலை - தரங்கங்களை, சிந்த-மிகுத்து வீசவும், ஞாலம் - உலகத்தைமூடிய, இருள்-அந்தகாரம், சிந்த - சிதறிவிலகவும், வந்த - விளங்கிவருகிற, சிறையான் - இறகினாலே, வேதங்கள் - வேதகானங்களை, பாட - கோஷிக்கவும், உலகங்கள் யாவும் - எல்லாவுலகங்களும், வினை-பாவஙகளை, சிந்த - நீங்கவும், நாகம் - பிடித்திருக்கிற நாகபாசம், மெலிய - தளர்வும். எ - று. (௨௪௫)

இருக்கெசுச்சாமவதருவச்சிறையாகலானச்சிறகொலியான் வேதங்கள்பாடவென்றார்.

௧௭௪. அல்லைச்சுருட்டிவெயிலைப்பரபபியகலாசையெங்குமழியா
விலலைசசெலுததிநிலவைததிரட்டிவிரிகின்றசோதிமிளிர
வெலலைக்குயிற்றியெரிகின்றமோலியிடைநின்றமேருவெனுமத
தொலலைபபொருப்பினமிசையேவிளஙகுசுடரோனினமும்மைசுடர. ()

இ-ள். அல்லை - இருளை, சுருட்டி - இறகடிக் கொள்ளுதலாலே சுருளப்பண்ணியும, வெயிலை - சூரியகிரணத்தை, பாப்பி - பொன்னொளியாலே விரித்து, அகல் - அகன்ற, ஆசையெங்கும் - திக்குகளெல்லாம், அழியா - சேதியாத, வில்லை - மூக்கின் வளைவாகிற வில்லொளியை, செலுத்தி - ஒதுங்கப்பண்ணியும், நிலவை - சந்திரனை, திரட்டி - கண்டத்தொளியாலே திரளப்பண்ணியும், விரிகின்ற - அச்சந்திரனிழலிருந்து மிகாசிக்கிற, சோதி சந்திரிகையானது, மிளிர - விளங்கவும், எல்லை - சூரியபிரகாசத்தை, குயிற்றி - சேரப்பண்ணி, எரிகின்ற - காந்துகின்ற, மோலி

கிரீடமானது, இடைநின்ற-உலகநடுவிலே நில்லாநிற்கிற, மேரு வெனும் - வடமேருவென்கிற, அ-அந்த, தொல்லை - பழைமை யான, பொருப்பினமிசையே - மலையின்மேலே, விளங்கு - பிர காசியாநின்ற, சுடரோனின - சூரியனைப்பார்க்கிலும, மும்மை-மும்மடங்கு, சுடர் - விளங்க. எ-று. (உசசு)

தோன்றிமறையும் வானவில்லைப்போலாது அழியாவில்லெ ன்றது வேற்றுமையணி. விற்போல்வளைந்த மூகைவிலலென்ற தும் நிலவைப்போலுங் கண்டதொளியை நிலவென்றது முரு வகவுயர்வு நவிற்சியணிகள் செலுத்தலும திரட்டலும் அதனை தன் பிரதிபிம்பத்தை மோலிசுடரோனின மும்மைசுடரவென்ற தெதிர்நிலையணி பெரியதிருவடியை யிடைநின்ற மேருவெனு மத் தொல்லைப்பொருப்பென்ற துருவகவுயாவு நவிறசியணி, ஆகவேவில்லு நிலவுஞ் சுடரோனு மொருகாலத்தின மேருமி சைதொடரச்செயதது தொடர்புயர்வுநவிற்சியணி.

கஎரு. நனபாலவிளங்குமணிகோடியோடுநளிாபோதுசெமபொனமுதலாத,
தனபாலியைநதநிழல்கொணடமைநத தழுவாதுவநதுதழுவ, மின
பாலியனறதொருகுனறம்வானினவிளிாகினறதெனனவெயிலோன,
றெனபாலெழுநதுவடபாணிமிாநதுவருகினறசெயகைதெரிய. ()

இ-ள். நன்பால் - கண்டத்தொளியாகிய பரிசுத்தவெள்ளை யில், விளஙகும் - விளஙகநிற்கிற, மணிகோடியோடு - கோடி அரதநக்கோவைமாலையோடு, நளிர் - பிரகாசியாநின்ற, போது-புட்பமாலையும்,செம்பொன் -சிவந்த *பொன்னரிமாலையும,முத லா - ஆதியாகிய, தன்பால் - அமமாலைகளிடதது, இயைந்த - தனித்தனியே பொருந்திய, நிழல்கொண்டு - பிரபைகளைக்கொ ண்டு, அமைந்த - உண்டாகியவை, தழுவாது-மார்பிலேபொரு ந்தாமல், வந்து - அமமாலைகளாய்த்தோன்றி, தழுவ - பொருந் தவும், மின்பால் - ஒளிவிடும்ப குதிகளெல்லாம, இயைந்தது - கூடியதாகிய, ஒருகுன்றம் - ஒரு நெடியமலை, வானின் - ஆகா சத்தினின்றும், விழுகின்றதென்ன-இறங்குவதுபோல, வெயி லோன் - சூரியன், தென்பால் - தென்றிசையில, எழுந்து-உத யமாகி, வடபால் - வடதிசைநோக்கி, நிமிர்ந்து-மேலெழுந்து,

* பொனனரிமாலை-எனபது, பொனவணடு மாலை.

வருகின்ற - வாராநிற்கிற, செய்கைதெரிய - நூதனவிசேஷமாய்த் தோன்றவும். எ-று. (௨௪௭)

பால்போலுங்கண்டத் தொளியைப்பாலென்ற துருவகவுயர்வு நவிற்சியணி. மணியாலும் - பூவாலும் - பொன்னாலுமாகிய மாலைகளைத்தழுவாதென்றது அதனதன்பிரதிபிம்பத்தைத் தழுவவென்றது அம்மாலைகளை மின்பாலியைந்த தொருகுன்றமென்னவென்றது பண்புவமை, அம்மாலைகளது தொங்குதலை குன்றம்வானின் விழுகின்ற தென்னவென்றது தொழிலுவமை. தருதிபற்றி விழுகின்றதென்றற்கியையத் தொங்குதலை வருவிக்க.கீழ்பபாட்டிலுரைத்தாமென்ற வுத்தியான் மோலியாகிய சூரியன் மின்பாலியைந்த தொருகுன்றமாகிய வுதையகிரியிலே தென்றிசையிலுதித்து வடதிசைமேற் செல்வதாகச்செய்தது தொடர்புயர்வு. நவிற்சி உதையகிரி யென்றது மின்பாலியைந்த தொருகுன்ற மென்றதும். 'மோலியென்றது வெயிலோனென்றதும் உருவகவுயர்வுநவிற்சி. மொழிந்த பொருளோடென்ற வவ்வயின்மொழியாத தனையு முட்டின்று முடித்தலென்னு முத்தியால் உதையகிரிக்குந் தென்றிசைக்கும் வெயிலோனுக்கு மியையப் பெரியதிருவடி தலையாகிய தேர்மேலென்று கொள்வது முருவகவுயர்வு நவிற்சி.

௧௭௬. பன்னகர்சென்னிமணிகோடிகோடிபலகொண்டுசெய்தவகையான்
மின்னலியன்றதெனலாய்விளங்குமிளிர்பூண்வயங்கும்வெயில்கால்
பொன்னாலியன்றநகையோடைபொங்கவனமாலைமார்புபுரளத
தொன்னாள்பிரிந்ததுயர்தீரவண்ணறிருமேனிகண்டுதொழுவான. ()

இ-ள். பன்னகர் - பல நாகங்களுக்குஞ் சிரேஷ்டர்களுடைய, சென்னிமணி - சிரோரத்தினங்களை, கோடிகோடி - உச்சியினின்றும் உச்சியினின்றும், பல - அநேகமாக. கொண்டு - சித்தெடுத்து, செய்தவகையால் - இழைத்தவகுப்புகளாலே, மின்னால் - மின்னலைக்கொண்டு, இயன்றது - செய்தது, எனலாய் - என்று சொல்லும்படியாய், விளங்கும் - பிரகாசியாநின்ற, மிளிர் - காந்தியையுடைய, பூண் - ஆபரணங்களும், வயங்கும் - பிரகாசியாநின்ற, வெயில் - சூரியப்பிரபையை, கால் - கக்குகின்ற, பொன்னால் - சுவர்ணத்தால், இயன்ற - செய்த, நகை - விளங்

குதலையுடைய, ஓடை - நெற்றிப்பட்டமும், பொங்க - பிரகாசிக்கவும், வனமாலை - துளசிமணிமாலை, மார்பு - மார்பின்கண்ணே, புரள - அசையவும், தொன்னாள் - ஆதிகாலத்தில், பிரிந்த - நீங்கலாகிய, துயர் - கிலேசம், தீர - போக, அண்ணல - பெருமானுடைய, திருமேனி - திவ்வியமங்களவிக்கிரகத்தை, கண்டு - பார்த்து, தொழுவான் - கைகுவிப்பானாய். எ - று. (உசஅ)

கோடி கோடி யென்பவற்றிலேந்த னுருபுகடொக்கன் இவ்வடுக்கு மொழி பல வுச்சிகளைக குறிப்பிக்கின்றது. பல கொண்டென்றமையால் பூண். ஓடை. மாலை. என்பவற்றி லெண்ணும்மைகடொக்கன.

களஎ. முடிமேனிமிர்ந்தமுகிழேறுகையனமுகின்மேனிமிர்ந்தவொளியா
னடிமேலவிழுந்துபணியாமனின்றநிலையுன்னியுன்னியழிவான
கொடிமேலிருந்திவுலகேழொடேழுதொழநின்றகோளுமிலனாய்ப்
படிமேலெழுந்துவருவான்விரைந்துபலகாலினைந்துபணிவான. ()

இ-ள். முடிமேல் - உச்சிக்குமேலே, நிமிர்ந்த - உயர்ந்த, முகிழேறு - குவித்தலைக்கொண்ட, கையன் - கரங்களையுடையவனாய், முகின்மேல் - மேகத்தைககாட்டிலும், நிமிர்ந்த - அதிகமான, ஒளியான் - சாமளவர்ணத்தையுடைய பெருமானுடைய, அடிமேல் - திருவடியின்கீழே, விழுந்துபணியாமல் - சாஷ்டாங்கதெண்டஞ்சமர்ப்பியாமல், நின்று-நின்றுகொண்டு, அந்நிலை - சோகித்துக்கிடக்கிறவநதச்சுபாவத்தை, உன்னியுன்னி - நினைத்துநினைத்து, அழிவான் - தளர்வானாய, கொடிமேல் - துவசத்தின்மேல், இருந்து - வாசம்பண்ணி, இ - இந்த, உலகேழொடேழு - பதினாலுலகமும், தொழ - வணங்குதல்செய்ய, நின்ற கோளும் - நில்லாநின்ற கொள்கையும், இலனாய் - இல்லாதவனாய், படிமேல் - பூமியின்கண்ணே, எழுந்து - எழுந்தருளி, வருவான்விரைந்து - விரைந்துநடப்பவனாய, பலகால - அனேகவிசையாய், நினைந்து - எண்ணியெண்ணி, பணிவான் - வணங்குவானாய். எ - று. (உசகூ)

தெரிவான் முதற்றொழுவா னிறுதியாகிய முற்றுக்களைச் மாய் முகிழேறு·கையனாய்ப் பணியலாயினான் எனக்கூட்டுக.

௧௭௮. வந்தான்மறைந்துபிரிவால்வருந்துமலர்மேலயன்றன்முதலோர்
தந்தாதைதாதையிறைவாமறைந்துவிளையாடுகின்றதனியோய்
சிந்தாகுலங்களகளைவாய்தளர்ந்துதுயர்கூரலென்னசெயலோ
வெந்தாய்வருந்தலுடையாயவருந்தலெனவின்னபன்னிமொழிவான்

இ-ள். வந்தான்மறைந்து - மறைந்துவந்தா லென்றபடி, (இனிச் சொல்லாமல்வந்தால்) பிரிவால- பிரிவாற்றமையாலே, வருந்தும் - நோவையடைவான, (யாரென்றால்) மலர்மேல் - பூமேலிருக்கிற, அயன் - நான்முகன, தன் - தனக்கு, முதலோர் - பூருவராகிய நித்தியசூரிகள, தம - தமக்கு, தாதை - காரணராகிய சேனையர்கோனுக்கு, தாதை-பிரதானராகிய, (திருவனந்தாழ்வான் மறைநதுவநதால வருந்துமெனறங்யம) இறைவா, பரமபுருஷனே, மறைநது - எனக்குச்சொல்லாமல், விளையாடுகின்ற - லீலைசெயகின்ற, தனியோய - ஒப்பற்றவனே, சிந்தாகுலங்கள - மனக்கிலேசஙகளை, களைவாய - எல்லாருக்கும் போக்குகிறவனே, தளர்ந்து - மெலிந்து, துயர்கூரல் - துக்கததழுந்துதல, என்னசெயலோ - யாதுகாரணமோ, என்தாய் - என்சுவாமியே, வருந்தல-நோவுபடாதே, உடையாய் - சர்வசுவாமியே, வருந்தல் - நோவுபடாதே, என - என்று, இன்ன - இவ்விதங்களாய், பன்னி - பிரலாபித்து, மொழிவான் - துதிக்கத்தொடங்குவான. எ - று. (௨௫௦)

தாதையென்றது மகனென்னுங் காரியம் பிறக்கக் காரணமாயினோனை யாகலா லயனுக்குக் காரணமானோர் நித்தியசூரிகளாகவும். அவருக்குக் காரணனு சேனையர்கோனாகவும். அவருககுக் காரணங் கருடனாகிய தாமாயிருக்க நைசசியாநுசந்தானத தாற் றமமைக கூறாது திருவனந்தாழ்வானைக் கூறினரென்று கொள்க. அண்ணல் கலுழனென்னு மெழுவாய். பணிவானாய் மொழிவானென்னும் பயனிலைகொண்டது. இனிவரும் பாட்டுகளுக்குக் கருத்து முதலியவைந்தும் பொருளவிளக்க வேண்டியவாறே யெழுதுகின்றமையா லாங்காங்குணர்க. இருக்கெசுச்சாமவதருவச சிறையெனறது சிறையையுடைய னென்றுகு பெயராய் சிரஞ் சேதனமென்கிற செய்யுளிற் காண்க.

௧௭௯. தேவாதிதேவர்பலராலுமுந்துதிருநாமமோதுசெயலோய்
மூவாதநாளுமுலகேழொடேழுமரசாளுமேன்மைமுதல்வா
மேவாதவினைபமவைமேவிமேவநெடுவீடுகாட்டமுடியா
யாவாய்வருந்தியழிவாய்கொலாரிவ்விரேகம்ாயையறிவார்

இதில்வீற்றிருந்தேழுலகுந் தனிக்கோல்செல்ல வீவில்சீராம் றன்மிக்காரு மம்மானே வருந்தாதே யென்கிறார்.

இ-ள். தேவு - சேனையர்கோனே, ஆதி - முதலாகவுடைய, தேவர் - நித்தியசூரிகள், பலராலும்-அநேகராலும், முந்து - ஆரம்பத்திலே, திருநாமம - ஹரிஃ என்கிற திருநாமததைக்கொண்டு, ஓது - துதிக்கத்தக்க, செயலோய் - செயகையையுடையவனே, மூவாது - தேவமனித திரியக்குத தாவரமாம் யாவையுங்கெடாமல், அந்நாளும் - உட்கொண்ட அக்காலத்திலும், உலகு - உலகங்கள், ஏழொடேழும் - பதினாலும, அரசு - தனிககோல்வழியே, ஆளும் - செல்லநடாததுகிற, மேன்மை - மேம்பாட்டையுடைய, முதலவா - காரணபூதனே, மேவாத - மானிடராகவரலரிதாகிய, இன்பம் - ஆனநதஙகள், அவை - அப்பதினொன்றும், மேவி - அடைந்து, மேவு - பின்படையத்தகக, அந்நெடுவீடு - அவவினபஙகளி னெடியவின்பததை, காட்டு- காடடுதற்கிடமான, அம் - அழகிய, முடியாய - பதினாலுலகுககுந் தலைமையான திருநாட்டையுடையவனே, ஆவாய் - இங்கு நின்றநிலையினு மாகுமவன், வருந்தி - இஙஙனே நோவுபட்டு, அழிவாய்கொல் - கலங்குமவனோ, ஆர் – மயர்வற மதிநலமருளப் பெறுதாரில்யாவர், இவ் - கலங்காதவன் கலங்குதலாகிய விந்த, அதிரேகமாயை - மகாமாயையை, அறிவார - அறியத்தக்கவர், ஒருவருமறியாரென்றபடி. எ-று. (உ௬க)

நாளுமென்ற வும்மையாலுட் கொள்ளாத காலத்திலு மரசாளுகைதானே போதரும் உருத்திரனுக் கந்தரியாமியாய் நின்றுயிர் வாழ்தற்கிடமாகிய பூதவுடம்பைப் பிரித்தபோ· தவ்வுடம்பழிதல் பற்றி அழித்தலுமோர் செய்கையென்னும் பிறர் தம்மதமேற் கொண்டு களைந்து தானுட்டித்தனது நிறப்பாலுண்டபோது முண்ணுதபோதும் அரசாளுகை தவிரானென்கிறார். இதுபற்றியன்றே கடவுள் வாழ்த்தில் உலகம்யாவையுந் தாமுளவாக்கலு நிலைபெறுத்தலு நீக்கலுமென்றது. மனிதன் மனிதகந்தருவன்றேவகந்தருவன் பிதிர்கருமத்தேவன்றனுடன் ஈசான்சுராணிந்திரனுசானும் பிரசாபதியாரேன்கனகன் விராட் ணியகர்ப்பன் முறைகருது மிப்பதினொரு பேர்கள் பின்வா

னந்தங்கணுரையாம் பிரளயவெள்ளக்கடல் பிரமானந்தம் என்னுமிப்பாட்டானே உயர்வறவுயர் நலமென்று கொள்க. மனிதவின்பந் தொடங்கி மலரோனின் பங்காறு மொவ்வொன்றாக விட்டடையு மின்பத்தை வீடென்றதாகுபெயர் மேவகாட்டவெனப் பெயரெசசங்களாகவும். உயர்வறவுயர் நலத்தைக்காட்டுகின்ற திருநாட்டை முடியாகவும் அதனீற்றய லெதிர்மறை, யாகாரமாகவு மயஙகக்கூறுதல் குற்றமன்றோ வெனனிலன்று தேவாதிய்யன்றுதொடங்கிய கீழுமெழுவாயென்று நடத்துகிற மேனுநோக்கி எற்புழியறிந்திதற் கிவ்வகையாமெனத் தகும்வகை செலுத்துதறந்திரவுததி யெனகிறபடியே யுயததுணர்க வென்பார் ஆழமுடைத்தாதலாகிய வழகுதோன்றக் கூறினார். இங்ஙனங் கூறுகின்ற வெல்லாங் கம்பசூத்திரமென்பது நாடக வழக்கு சிததிரமெனவுஙகூறுப.

௧௮௦. எழுவாயெவாககுமுதலாகியீறொடிடையாகியெங்குமுளையாய்
வழுவாதவர்க்குமவரமீயவல்லையவராலவரஙகள்பெறுவாய்
தொழுவாயுணாச்சிதுடராததனமையுருவாயமறைந்துயரா
லழுவாயொருததனுளைபோலுமாரிவ்வதிரேகமாயையறிவார். ()

கீழே பரத்துவங கூறியிதிலே வியூகமும் அந்தரியாமித்துவமும் விபவமுங் கூறத்தொடங்கி ஏகமூர்ததி யிருமூர்த்தி - மூன்றுமூர்த்தி பலமூர்த்தியாகி யைநதுபூதமா யிரண்டு சுடராயருவாகி நாகமேறி நடுக்கடலுட்டுயின்ற நாராயணனே வருந்தாதே யெனகிறா.

இ-ள் எழுவாய் - பாற்கடலில வாசுதேவனா யெழுந்தருளுவாய், எவர்க்கும் - எவ்வகைமேம்பாட்டோருக்கும், முதலாகி - ஆக்குஙகாரணனாய், ஈறொடு - நீக்குங்காரண னாதலோடு, இடையாகி - காககுஙகாரணனுமா யெழுவாயென்றங்யம், எங்கும் - கரந்தசிலிடந்தொறு மிடந்திகழ் பொருடொறும், உளையாய் - வியாபிக்குமவனாய, வழுவாது - தப்பாமல், அவர்க்கும்- அந்த மூவருக்கும, வரம் - வேண்டுமவைகளை, ஈயவல்லை- கொடுக்கமாட்டுவை, அவரால் - அந்தமூவராலும், வரங்கள் - வேண்டுமவைகளை, பெறுவாய் - பிரமா விஷ்ணு ருத்திரர்களாகிக் கொள்ளுவாய், தொழுவாய் - இந்திராதி தேவர்களாய்

வணங்குவாய, உணாசசி-மெய்யுணாவை, தொடாாது - பொரு ந்தாமல் பிரமாதிகளைத தொழுவா யெனறுமயம, அது - அந்த மெய்யுணர்வை, அன்மை-அல்லாதவையந்திரி பறியாமைகளை யுடைய, உருவாய - மனிதவடிவாகி, மறைந்து - தெரியாதவ ளுய், துயரால் - துன்பததாலே, அழுவாய - அழுமவளுய, ஒரு த்தன் - இராமனென்னு மொப்பற்றவளுய், உளை-உளளுகிருய், போலும் - முன்னிலேயசை, ஆா - எவா, இ - இந்த, அதிரேகம்- பெரிதாகிய, மாயை-மயககததை, அறிவார் - தெரிகிறவர், இப் படிப் பட்டமகா மாயையையறிவாரார். எ-று. (உருஉ)

ஆமோத. பிரமோத சம்மோதமெனகிற மூன றுலகங்களி லும் சங்கருஷ்ணப பிரத்யுமளுனிருததர்களா யெழுந்தருளி யிருக்கிருர்களென்பது சித்தாந்த மாகலாற் பிரமாதி மூவர்கு ரிய முத்தொழிற்கும் காரணராக வமமூவரையுங கூறினுராயி ற்று. வரங்கள் பெறுவாயென்றதளுலே அம்மூவரதனுககிரகத தா லிம்மூவருமுத்தொழிற்குரிய ராயினுரென்றுயிற்று. இப்பா ட்டு. மிகைபடக கூருது சுருஙகச்சொல்லலென்னு மழகு குன்றக் கூறலனறு மேலவிளஙகவைத்தலால்.

கஅக. உன்ளுெக்கவைததவிருவாககுமொததியொருவாககுமுணமையுரை யாய, முனளுெககிற்றியுலகொககவொததிமுடிவெர்ககிளுென்றமு டியாய், எனளுெககுமினனசெயலோவிதெனனிலிருளொக்குமென றுவிடியாய, அநநொபபமேகொலபிறிதேகொலாரிவவதிரேகமாயை யறிவார். (உருங)

கீழே வைகுந்தத்திற் பரவாசுதேவனெனறேகமூர்ததி பா ற்கடலில் வாசுதேவளுே டிருமூர்ததி மூனறுமூாததி பலமூர்த்தி யென்றுரா யிதிலே மூன றுமூர்ததி பலமூாததியென்றதை யனு வர்தித தைந்துபூதமா யிரண்டுசுடரா யருவானவனே வருந்தா தே யென்கிருா.

இ-ள். உன் - விஷ்ணுவாகிய வுன்ளுேடு, ஒகக - கூட்டியெ ண்ண, வைதத - நிறுத்திய, இருவர்க்கும-பிரமருததிரருக்கும், ஒத்தி - வியாபகததிலொததிருக்கிருய், ஒருவர்க்கும் - இருவரி லொருவருக்காயினும், உண்மை - (எலலாநாராயணனே யென் கிற) மெய்யுணர்ச்சியை, உரையாய - தெரியப்படுத்தாய், முன்-

இம்மூவருக்குமுன்பே, ஒக்க - விஷ்ணுவவதரித்தாரென்பதும் இலைய, நிற்றி - இராமனாய்நிற்கிறாய், உலகு-ஐந்துபூதமிரண்டு சுடரென்பதற்கு, ஒக்க - இலைய, ஒதநி - வியாபகத்திலெலாத் திருக்கிறாய், முடிவு-இந்த லீலாவிபூதியடங்கலும், ஒக்கின்-இரு மூர்த்தியு மேகமூர்த்தியேயென்று கலக்குமிடத்தில், ஒன்றும்-பொருந்துதற்கிடமான, முடியாய் - திருநாடாகிய நித்தியவிபூதி நாதனே, என் - யாதொனறு, ஒக்கும - இபபடி யெல்லாவற்றி லும் வியாபிததிருக்கும், இன்ன - இப்படிப்பட்ட, செயலோ-செய்கைதானோ, இது - இந்தவியாபகவஸ்து, என்னில்-என்று ராயப்புக்கால், இருள் - அந்தகாரத்தை, ஒக்கும்-ஒத்துவிளங்கா திருக்கும், (இது இன்னசெயலோ என்னுக்குமென்னி லிரு ளொக்குமென்றநயம்) என்று - சூரியன்போல, விடியாய்-விள க்கமாகாய், (இரண்டுசுடரென்ப தில்லையேயெனில் - இருளென் பதில் மதிதோன்றி யென்றி லடங்கினதற் கொண்சுடரிரவி யிட த்தினிற் றிங்கடொறுமினி துறவு செய்குவதேயென்பதனாற் கா ண்க.) அங்கொப்பமே-எங்கு முளையென் றங்குச்சொன்ன நொ ப்பமே, (மங்கியவருவாநொப்பமுநீயே) பிறிதே - வேறொன்று அன்று, இரண்டுசொல்லு மசைநிலை. நொப்பத்தினேகாரந் தேற் றம், பிறிதினேகாரம் வினா, முடிவொகுகினென்பதில் ஏழனுரு பைந்தனுருபாய் மயங்கிற்று. எ-று. (உ௫௩)

௧௮௨. வாணாளளித்திமுடியாமனீதிவருநாளுநிற்றிமறையோய் [யா
பேணாயுனக்கொர் பொருளவேண்டுமென்று பெறுவானருத்திபிழை
பூணாயுயிர்க்குமுயிராகிநிறறியுணர்வாயபெணணினுருவா
யாணாகிமற்றுமலியாகியாரிவ்வதிரேகமாயையறிவார். (உ௫௪)

இதில் ஆயபதப்பொருளைக் கூறிக் கீழே எல்லா நாராயண னேயென்றதைத் திருஷ்டாந்தரத்தாற்கூறி வருந்தாதே யென் கிறார்.

இ-ள். வாணாள் - உடம்போடுகூடி வாழுநாளை, அளித்தி-கொடுக்கிறாய், முடியாமல்-தீராமல், (நீங்காது பந்தத்தைக்கொ டுக்கிறா யென்றாயிற்று.) நீதி-சிங்காமை விரித்த வறநூலின்வழி யே, வருநாளும் - அடையுங்காலத்திலும், நிற்றி - வீட்டையுந் தந்துநிற்கிறாய், மறையோய் - வேதவிளக்கே, பேணாய் - அறம் பொருளின்பங்களை வேண்டினோரை விரும்பாய், உனக்கு-ஒன்

றாவொன்று குறைவில்லாத வுனக்கு, ஓர்பொருள் வேண்டுமென்று - ஏதேனு மொருபொருளையாயினுங் கருதிப் பேணாயென்றந்வயம், (அவர்கருதிய மூன்றிலொன்றைத் தந்து பந்தத்தில் விடுகிறாயென்று கருத்து.) பெறுவான் - கைங்கரியமாகிற பரம புருஷார்த்தத்தை வேண்டினோரைப் பெறுதற்கு, அருத்தி-விரும்பிநிற்றலை, பிழையாய் - தவிராய், (இவ்விரண்டடியாலும் உருவோபாய புருஷார்த்தங்க ளின்னபடியென்றும், அதற்குத் தகுதியாகத் தலைக்கட்டுகிறான் அர்ச்சாவதாரமாயென்றுங் கூறினாராயிற்று. தமருகந்தெவ்வுருவ மவ்வுருவந்தானே தமருகந்ததெப்பேர் மறறப்பேர் மாறாயிணைந்த தன பொன்னடியன்றி இவைகளாற்காண்க.) ஊனாய் - அனனமயமாகிய வுடமபாகியும, உயிர்க்கும் - அவ்வுடம்பிலவாழு மானமாவாகியு மவ்வான்மாவுக்கும், உயிராகி - பரமானமாவாகி, நிற்றி - நிற்கிறாய, (அசித்தும் - சித்தும் - ஈஸ்வரனுமாகிநிற்கிறா யெனறாயிற்று. ஆகவே அசித்தும்-சித்தும-சரீரமாகத்தான் சரீரியாய் நிற்கிறானென்று கருதது எங்ஙனேயெனனில்) உணர்வாய் - இம்மூனறையுங் காட்சியளவையா லறிதற்காகிய, பெண்ணினுருவாய்-பிரகிருதியென் றறிதற்குப் பெண்வடிவாகியும், ஆணாகி-அத்தாலே மயங்கிக்கிடக்கிற புருடனென்றறிதற் காண்வடிவாகியும், மற்று-அசைநிலை, (இவ்விரண்டுகளும் வேறாகிய பிறிதெனப் பொருள் கூறவுமாம.) அலியாகி - பெண்டன்மையும் ஆண்டன்மையுமல்லாததுமாகி, ஊனாயுயிர்க்குமுயிராகி நிற்றியென் றந்வயம், மற்றின்கணும்மையை நடுநிலைசசொற்றீவகமாககி யேனையிரண்டிடத்துங் கூட்டுக. ஊனாயென்றபோதே யுயிராயென்பதுதானே போதரவேண்டி யுயிர்க்குமென றுடனே விதந்தார் இவ்விடத்தும்மைகடொககன. (௨௫௪)

கஅரு, தானந்தமிலலைபலவெனனுமொன்றுதனியென்னுமொனறுதவிரா
ஞானந்துடர்ந்தசுடரெனனுமொனறுநயனந்துடர்ந்தவொளியால்
வானந்துடர்ந்தபதமென்னுமுனனைமறைநாலின்வநதமுறையால்
ஆனந்தமென்னுமயலென்னுமாரிவவதிரேகமாயையறிவார. (௨௫௫)

கீழே திருமந்திரத்தைச் சொன்னாய் வேதவிளக்கென்றது நால்வகையென்றும் அவற்றினதுசார மிருவகையென்றுங் கூறி-வருந்தாதேயென்கிறார்.

இ-ள். தான்-வேதவிளக்காகியதுதான், அந்தமில்லை - முடிவில்லையாகலால், பல - மனமும் வாசகமுஞ் செய்கையும் யானு நீதானே, என்னும் - (ப்ரக்ஞாப்ரம்மம்) என்று சொல்லும், ஒன்று - இருக்கு, தனி - யானுந்தானுயொழிந்தானே,என்னும்-(அஹம்ப்ரம்மாஸ்மி) என்றுசொல்லும், ஒன்று - எசு, தவிரா-நீங்காத, ஞானம்-அறிவை, துடர்ந்த-கூடிய, சுடர்-ஜோதி, அவனென்றுகியொழிந்தான், என்னும் – (தத்வமஸி) என்றுசொல்லும்,ஒன்று–சாமம்,நயனம்(எண்ணிற்கண்ணிலொன்றே என்கையால் அன்றிக்கே நயனம்) இரண்டுகண்களும், தொடர்ந்த - (கூடலான் கண்ணுகிய சூரியமண்டலத்தை தொடர்ந்த) பற்றிச்செல்லுகிற, ஒளியால் - ஜோதியாலே, வானம் - பரமாகாசமாக, தொடர்ந்த - கூடப்பெற்ற, பதம் - இடம், (யானே நீயாகி யென்னையாள்வானே) என்னும் - (அயமான்மாப்ரமமம்) என்று சொல்லும் தகுதிபற்றி வருவித்து, ஒன்று – அதர்வணம், உன்னை - இராமனுகிய வுன்னையே, மறைநாலின் - நான்குவேதத்தாலும், வந்த - திரண்டுவந்த, முறையால் - கிரமமிதுவாகையாலே, ஆனந்தம் - முழுநலம், என்னும் - என்றுசொல்லும், அயல் - அவ்வானந்தத்துக்கிடமாகிய முழுவுணர்வு, என்னும் - என்றுசொல்லும், ஆக ஞானனந்தமயனென்றது சாரம், உன்னையேயென்பதிற் றேற்றேகாரந்தொக்கது செய்யுளாகலான். எ - று. (உருரு)

கஅசு. மீளாதவேதமுடிவினகணின்னைமெய்யாகமெய்யினினையுங் [ன்
கேளாதவென்றுபிறவென்றுசொன்னகெடுவோர்களசொன்னகடவா
மாளாதநீதியிகழாமைநின்கணபிமானமிலலைவறியோ
ராளாயும்வாழ்தியரசாள்தியாரிவ்வதிரேகமாயையறிவார். (உருசு)

வேதாந்தக்கருத்துணராத சூனியவாதிகளைக் கண்டித்து அடிமையும் ஆண்டானுமானவனே வருந்தாதேயென்கிறார்.

இ-ள். மீளாதவேதம் - அவ்வேதம்மீளாது (இதன்றி தன்றென்றுசென்ற வேதங்கள் மீட்சியின்றிக்கே), முடிவின்கண்-அந்தங்களிலே, நின்னை - நாராயணுகிய வுன்னை, மெய்யாக - ஞானனந்தமயனுக, மெய்யில் - தமதறிவின் கண்ணே, நினையும் - எண்ணும் இவற்றை, கேளாதவென்று - கேட்டறியாதன

வென்றும், பிறவென்று - கண்டறியாதனவென்றும், சொன்ன-முதலிலேசொன்னவைக்கு, கெடுவார்கள் - அறிவுகெடுமவர்கள், சொன்ன - அவாங்மனகோசரமென் றவறறைத்தானே சொல்லிய, கடவால் - மறுமொழியினாலே, மாளாத - அழியாத நீதி - வேதங்களது சொல்லுகையை, இகழாமல - தபபாமல், நின் - உன்னுடைய, கண்ணபிமானம் - கடாக்ஷவீக்ஷண்யம், இல்லை - இல்லையாகி, வறியோர் - சூனியவாதிகளானார்கள், (அவர்கள் வேதவிரோதிகளாகையாலே அவ்வேதவிளககாகிய வுனக்கு விரோதிகளானார்களென்று கருத்து. ஊன்சுடர்மிகு சுருதியுளென்றதை யறியாரே வறியார் நித்தியமாகலான ஞானத்தை மெய்யெனறார்) ஆளாயும - நானென்கிற வடிமையாகியும், வாழ்தி-கைங்கிரியமாகிற புருஷார்த்தத்தோடு வாழ்கிறாய், அரசு - நாராயணனென்கிற ஆண்டானாகியும், ஆளதி - அக்கைங்கிரியத்தைக் கொள்ளுகிறாய. எ - று. (௨௫௬)

௧௮௫. சொல்லொன்றுரைத்திபொருளாதிதூயமறையுந்துறந்துதிரிவாய்
வில்லொன்றெடுத்திசரமொன்றெடுத்திமிளிர்சங்கமங்கையுடையாய்
கொல்லென்றுரைத்திகொலையுண்டுநிற்றிகொடியாயுன்மாயையறியே
னல்லெனறுநிற்றிபகலாதியாரிவ்வதிரேகமாயையறிவார். (௨௫௭)

கீழே திருமந்திரத்தை வெளியிட்டபடியைக்கூறி யிதிலே அதனது சங்கிரகமாகிய பிரணவத்தையு மதனது பொருளையுங் கூறி வேதவிளககென்பதை யறியாது சூனியரான ராவணாதிகளறிய வெளிவந்தவனே வருந்தாதே யென்கிறார்.

இ - ள். சொல்லொன்று - மூனறெழுத்தாகிய பதமொன்றை, உரைத்தி - உபதேசிககிறாய், பொருள - ஆண்டானுக்கே அடிமைகளென்கிற பொருளும். ஆதி - நரநாராயணவடிவாகிறாய் (முந்து திருநாமமெனறதிலே ஹரிஎனறு இதிலே ஓம்என்று இப்படித் துடங்குவதாகிய), தூய - பரிசுத்ததைதயுடைய, மறையும் – வேதத்தையும், துறந்து - விடடு, திரிவாய் - ஞானாநந்தமயனென்பதற்கு வேறாய்,வில்லொன்று-வேறேஒரு வில்லை, எடுத்தி-எடுக்கிறாய், சரமொன்று - அவ்வில்லுக்கேற்ற பாணமொன்றும், எடுத்தி -எடுக்கிறாய,மிளிர்-பிரகாசியாநின்ற, சங்கம் - சங்குமுதலிய திவ்வியாயுதங்களை, அங்கை - அழ்கிய

கையிலே, உடையாய் - வேதத்திலே உடையவனென்று சொல்லப்படுகிறாய், (சங்கென்றதில் மற்றை யாயுதங்களையு முபலக்ஷணமாய்க் கூட்டுக,) கொல்லென்றுரைத்தி - தேவருக் கந்தரியாமியாய் வதைபண்ணென்கிறாய், கொலையுண்டு - ராக்ஷதருக் கந்தரியாமியாய் வதைபட்டு, நிற்றி - நிறகிறாய், கொடியாய் - இப்படிக் கோணலாயிருக்கிறவனே, உன்மாயை - உனது மயக்கச் செய்கையை, அறியேன் - வாகனமாகிய நானே யறியேன், அல்லென்றும் - ஆவரணமாகவும், நிற்றி - நிற்கிறாய், பகல் - விக்ஷேபமும், ஆதி - ஆகிறாய. எ - று. (உருஎ)

கஅசு. மறந்தாயுமொத்திமறவாயுமொததிமயலாரும்யானுமறியேங்
துறநதாயுமொததிதுறவாயுமொததியொருதனமைசொல்லவரியாய்
பிறநதாயுமொததிபிறவாயுமொத்திபிறவாமனல்குபெரியோ
யறநதாணிறுததலரிதாகவாரிவ்வதிரேகமாயையறிவார். (உருஅ)

கீழே அந்தரியாமியாகையாலே ஆவரணசத்தியாலே யொருகான்மயக்கியும், விக்ஷேபசததியாலே யொருகால் விளக்கியும் நிற்கிறதேயன்றிச் சூனியவாதிகளறிய விபவமாகி நிற்கிற நிலையிலும் அம்மயக்க விளக்கங்களையுடையவனே வருந்தாதே யென்கிறார்.

இ - ள் மறந்தாயும் - முற்றுமுணர்தல் முடிவிலாற்றல்களை மறந்தாயென்றாலும, ஒத்தி - அன்புமிகுத்துச் சித்தங்கலங்குதலாலே ஒத்திருககின்றாய், மறவாயும் - அவற்றை மறவாயென்றாலும், ஒத்தி - இலங்கையரசு முதலானோரோ டருளின்மையாலே யொததிருக்கின்றாய், மயல்-பிரகிருதிக்குள்ளாகிய, ஆரும் - எல்லாரும், யானும் - அதுநீங்கியயானும், அறியேம்- அறியாதிருக்கிறோம்; துறந்தாயும் - நீ சங்கசக்கிராதி அனந்தகருடாதிகளை விட்டிருககிறாயென்றாலும், ஒத்தி - மறைந்துவந்தமையா லொத்திருக்கிறாய், துறவாயும் - அவைகளைவிடாதிருக்கின்றாயென்றாலும், ஒததி - அவைகள் புடையே நின்றமையாலொத்திருக்கிறாய், ஒருதன்மை-(மறத்தல் துறத்தல்களையுடையன் மறவாமை துறவாமைகளை யிலனென்) றொருபடியாக, சொல்ல - (மயலாலே யவைகளையுடையனென்றும் என்றாலேயவைகளை யிலனென்றுஞ்) சொல்லுதற்கு, அரியாய்-அருமை

யானவனே (இருதிறத்தாருக்கு மிரண்டுபடியாகையா லொரு படி யல்லையென்கிறார்.) இவையுரைத்தாமென்னுமுத்திகள். பிற ந்தாயும - (சக்கிரவர்த்திதிருமகனாய்) யவதரித்தா யென்றாலும், ஒத்தி - வில்லொன்று சரமொன்றெடுத்தமையா லொத்திருக்கி றாய், பிறவாயும் - நெடுவீடுகாட்டமுடியா யென்றாலும், ஒத்தி- (பல்லாயிரத்தின் முடியாதபக்க மவை வீசமேனிவடுத்தீரவும், தன்னசங்கமுந் தானுமுழுங்கிறருகவும, மேலேவிக்கொள்ளுத லாலே) ஒத்திருக்கிறாய், இவை உரைத்துமென்னுமுத்தி. பிற வாமல்-(பிறவித்துன்பமென றடைந்தாரை மீள) வப்பிறவியில் விடாமல, நல்கு - கடைக்கணிக்கின்ற, பெரியோய - இயல்பா கவே பாசங்களி னீங்கினோய, அறம - தருமத்தை, தான் - தா னான தன்மையொன்றையேகொண்டு, நிறுத்தல் - நிலைநிற்கச் செய்தலில், அரிதாகி - கூடாமையா யிரண்டுபடியுங்கொண்டு நிற்கிறாயென் றங்யம என்றாலென்பது சொல்லெச்சம. எ-று.

௧௮௭. வினைவாககமுறறமுடனேபடைத்தியவையெய்தியென்றுமவிளையா
நினைவாககுநெஞ்சினுறுகாமமுற்றியறியாணமநிற்றிமனமா
முனைவாக்குமொத்தியமராககுமொத்திமுழுமூடரெனறிமமுதலோ
ரனைவாக்குமொத்தியறியாமையாரிவவதிரேகமாயையறிவார். ()

இதில் முக்காலங்களுமுணர்ந்த பெரியதிருவடி தாமாக இந்திரியங்களின மனமாகின்றேனும் யானேயென்னுங கிதோப நிடதாசாரியனே வருந்தாதேயெனகிறார்.

இ-ள். வினை - வினையைத்தருகையாலே வினையென்றதாகு பெயர், வர்க்கமுற்றும் - அவ்வினமுழுதும, உடனே - ஏககா லத்திலே, படைத்தி - சிருட்டிக்கிறாய், அவை-அவ்வினங்களை, எய்தி - அடைந்து, என்றும் - (அவற்றின் பயனைப் பொறுக்க மாட்டாம) லெக்காலத்திலும், விளையா - மீளவுண்டாகாமல், நினைவர்க்கு - எண்ணுவோர்க்கு, நெஞ்சில் - சுழுத்திநிலையில், உறு - எல்லாவற்றிலு மிகுந்த, காமம் - காமத்தை, முற்றி - நிரம்பச்செய்து, அறியாமல - அவ்விளையாமையை யெண்ணு வோரை யறியவொட்டாமல், நிற்றிமனமா-மனமாகநிற்கிறாய், முனைவர்க்கும் - முதல்வராகிய பிரமருத்திராதிகளுக்கும், ஒத் தி - ஒத்துநிற்கிறாய, அமரர்க்கும் - இந்திராதிதேவர்களுக்கும்,

ஒத்தி - ஒத்துநிற்கின்றாய், முழுமூடர் - முழுதுமறிவீனர், என்று - என்றுசொல்லப்படுகிற, இம்முதலோர் - இந்த ராவணாதிகளோடு, அனைவர்க்கும் - எல்லாருக்கும், ஒத்தி - (உருப்பசி மோகினி அகலிகை - சீதை - கைகேசி - முதலாயினோர் விஷயத்தில், பிரம - ருத்திர - னிந்திரன் - இராவணன - சக்கிரவாத்திமுதலாயினோர் மிக்க காமங்கொண்டமையா) லொத்து நிற்கின்றாய், அறியாமல் - மதிநலமருளப் பெற்றறியாமல, இவ்வதிரேகமாயையை யறிவாரார் - எல்லாவறறிலுமிக்கது காமமென்பதை காதலகாதலறியாமையென்கிற திருவள்ளுவராற் காண்க. எ-று.

௧௮௮. எறிநதாருமேறுபடுவாருமின்னபொருள்கண்டிரங்குபவருஞ்
செறிநதாரினுண்மையெனலாயதன்மைதெரிகின்றதுன்னிடையே
பிறிநதார்பிறிநதபொருளோடுபோதிபிறியாது நிற்றிபெரியோ
யறிநதாரறிந்தபொருளாதயாரிவ்வதிரேகமாயையறிவார். (௨௬௦)

இதில் அவ்வினைவர்கக மித்துணைத்தென்று மதத்துணையுமனமாகிய நின்னிடத்துந் தோன்ற நிற்கிறவனே வருந்தாதேயென்கிறார்.

இ-ள். எறிந்தாரும் - நாகபாசத்தை வீசினோரும், ஏறுபடுவாரும் - அவ்வீசலை யேற்றுக்கிடக்கிறவரும, இன்னபொருள் - வெற்றிதோலவியென்றிருவகையான பொருளையும், கண்டு - பார்த்து, இரங்குபவரும் - கலங்குபவருமாக, செறிந்தாரில் - கூடினோரிடத்தே, நுண்மையெனலாயதன்மை - அணுரூபமான மனமென்று சொல்லலாகியபடி, தெரிகின்றது - விளங்குகின்றது, உன்னிடையே - உனதுவிஷயத்திலே, (எவ்வாறென்னில்) பிறிந்தார் - வெகுளியாற் பிறிந்தாராகிய ராவணாதிகள் விஷயத்தில், பிறிந்த பொருளோடு - பிறிதற்கேதுவான வெகுளியென்கிற பொருளோடு, போதி - போகின்றாய், பிறியாது - (காமத்தாற் பிறியாராகிய இளையபெருமாளாதிகள் விஷயத்திற் காமத்தோடு) பிறியாமல், நிற்றி - நிற்கின்றாய், பெரியோய - வரம்பிலின்பத்தால் பெரியோனே, அறிந்தார் - இவ்விருதிறத்தகையுங் கண்டறிந்தாராகிய இந்திராதிகள் விஷயததில், அறிந்தபொருள் - (எத்தன்மையெய்திமுடியுங்கொலென்று) மயக்கமாகிய பொருள், ஆதி - காமித்தலும் கோபித்தலுமின்றி மயக்கமாகி நிற்கின்றாய், யாருள் -

மறந்தாய் - எறிந்தார் - இம்மூன்றுசெய்யுளு நிரனிறையணி. கண்டிருந்த தேவர்களை யென்செய்யலாமென் றெண்ணுகையான் மயக்கமாயிற்று. காமாதி - ஆறுவர்க்கமும், ராகாதி - பதின்மூன்று வர்க்கமுமடங்க காமம் - வெகுளி - மயக்க மிவைமூன்றென்ற திருவள்ளுவரி னிவரு மடக்கினமைகாண்க எ-று. (உ௯0)

௧௮௯. பேராயிரங்களுடையாயபிறநதபொருடோறுநிற்றிபிரியாய
தீராயபிரிநதுதிரிவாய்திறநதொறவைதேறுமெனறுதெளியாய
கூராழியங்கையுடையாயதிரணடொருருவாதிகோடலுரிபோ
லாராயினேதுமிலையாதியாரிவவதிரேகமாயையறிவார. (உ௯௧)

இதிலே திரிபுடியாய்த தேடுதற்கரியவனே வருந்தாதே யென்கிறார்.

இ-ள். பேராயிரங்களுடையாய் - ஆயிரநாமங்களை யுடையவனே, பிறந்த - உடம்போடு பிறந்த, பொருடோறும் - ஆன்மாக்களெல்லாம், நிற்றி - நிற்கிறாய, பிரியாய - பிரியாதவனாய், தீராய் - அப்படி ஒருபடியே நீங்காதவனாய, பிரிந்து - மெய்வாய் கண்ணோடு மூக்குச்செவி வழியாலே, திரிவாய் - வேறுபடுவாய், திறந்தொறு - தோறுமெனபதிலும்மை தொக்கது, (சுவை யொளி யூறோசை நாற்றங்களை யுண்டு) அவை - அப்பொறிகளும், தேறுமென்று - அறியுமென்று, தெளியாய் - தெளியப்படானாய், கூர் - கூரிய, ஆழி - திருவாழியை, அங்கை - அழகியகையிலே, உடையாய் - உடையவனே, திரண்டு - திரிபுடியாகததிரண்டு, ஒருருவாதி - ஒருவடிவாகிறாய், கோடல் - வெண்காந்தறகிழங்கை, உரிபோல்-உரித்தாறபோல, ஆராயின்- உள்ளேயிருப்பதெதுவென றாராயபபுககால், ஏதுமிலையாதி - ஒன்றுமில்லையாகிறாய், "இன்பமுதலிய பேற்றுககேதுவா மிந்திரியமனமாமஃதே - இன்பமலியான்மாத்தோறும் மிருப்பதாலநந்தமெனவு நித்தத் - தின்பகுதியெனவு மனுரூபமெனவுந் துலங்கவிலங்குமான்கண் - ணினபகுதிகவர்ந்து கெண்டையெனப்பிறழ்ந்து வண்டுறழ் நேத்திரத்தினளே" என்பது நியாயவிவேகம் இம்மூன்றுபாட்டும் பிறர்மதத்திற் கூடன்படல். எ - று. (உ௯௧)

கக0. என்றின்னபன்னியழிவானெறிந்தவெறிசோதிகீறவிருள்போய்ப்
பொன்றுன்னியன்னவெயில்வீசுகின்றபொருள்கண்டுநின்றபுகழோ
னின்றுன்னியுன்னியிவனியாவனென்றுநிமிர்கின்றவெல்லைநிமிரச்
சென்றுன்னிமுன்னருடனாயினானிவ்வுலகேழுமூடுசிறையான். (உசுஉ)

இவ்வாறு திருவடிதெருட்டப் பெருமாள் சோகந்தெளிந்து கண்டமை கூறுகின்றது.

இ - ள். என்று - என்றுசொல்லி, இன்ன - இவ்விதமாக, பன்னி-பிரலாபித்து, அழிவான - கலங்குகின்ற திருவடி, எறிந்த - வீசிய, எறிசோதி - காந்துகிற சூரியன், கீற - கிழிக்க, இருள் - மயக்கவிருளானது, போய் - சழிந்து, பொன் - சுவர்ணப்பிரபை, துன்னியன்ன - நெருங்கினாற்போல, வெயில் - சூரியப்பிரபையை, வீசுகின்ற - தந்துநிற்கிற, பொருள் - தமதுபொருளாகிய திருவடியை, கண்டு - பார்த்து, நின்ற - நிலைபெற்ற, புகழோன் - வாதஸல்யாதி கல்யாணகுணங்களையுடைய பெருமாள், நின்று - நிதானித்து, உன்னியுன்னி - எண்ணியெண்ணி, இவன் - இந்தமஹாபுருஷன், யாவனென்று - எவ்வுலகத்தானென்று, நிமிர்கின்ற - தலைதூக்குகிற, எல்லை - சமையத்தில், நிமிர - முழுதுந்தலைதூக்க, சென்று - போய், உன்னிமுன்னர் - ஆலோசிக்கிற பெருமாளுக்கு முன்னே, உடனாயினான் - கூடலானான், இவ்வுலகேழும் - இந்தவுலகேழையும், மூடு - மறைக்கத்தக்க, சிறையான் - சிறகையுடையவன். எ - று. (உசுஉ)

எறிந்தவெறிசோதி - இருள உருவகவுயர்வுநவிற்சி. பொன்றுன்னியன்ன வெயில உவமையணி. வீசுகின்ற பொருளென்பதும்து வில்லியென்றாற்போல வுன்னியென்றது வினைமுதற்பொருண்மையுணர்த்து மிகரவிகுதி.

ககக. வாசங்கலந்தமரைநாளநூலினவகையென்பதென்னைமழையென்
றாசங்கைகொண்டகொடைமீளியண்ணல்சராமன்வெண்ணையணுகுந்
தேசங்கலந்தமறைவாணர்செஞ்சொலறிவாளரென்றிம்முதலோர்
பாசங்கலந்தபசிபோலகன்றபதகன்றுரந்தவுரகம். (உசுரு)

இ-ள். வாசம் - பரிமளத்தோடு, கலந்த - கூடிப்பிறந்த, மரை - தாமரையினது, நாளம் - தண்டிலுண்டாகிய, நூலின் - மெல்லிய விழையினது, வகை - விதமாயிற்று, என்பது - என்

றுசொல்லுமது, என்னை - எப்படி, (தேரீர்க்கும் வடக்கயிறு போலு நாகபாசத்தை மெல்லிய தாமரைநூல்போலாயிற்றென் கிறது முழுதுந் தேயாமையா லவ்வுவமை கூடாதென்றபடி.) மழையென்று - கைம்மாறு கருதாது வழங்கு மேகமென்று, ஆசங்கைகொண்ட - மயஙகுதலைச செய்துநிற்கிற, கொடை - கொடுத்தறறொழிலிலே, மீளி - மீட்சியில்லாதவனாகையால, அ ண்ணல் - அககொடைவீரரிற் றலைவனாகிய, சரராமன - இராக வன், மறைவாணர்-வடநூன்முனிவரும, செஞ்சொலறிவாளர்- தென்மொழிப் புலவரும, என்று - என்றுசொல்லுகிற, இம்மு தலோா - இவர்முதலாயினோரை, பாசம - கயிறாக, கலந்த - பி ணிக்கப்பட்டிருககிற, பசிபோல் - உதராக்கினிபோல, அகன்ற- நீங்கின, பதகன் - இந்திரசித்தாகிய வஞ்சகன், துரந்த - பிர யோகிதத, உரகம் - நாகபாசம். இவ்வுவமை நாகபாசமுழுது மில்லையாயிறறென்று துவனிககினறதாகையாற் கூடுமவ்வுவ மை கூடாதென்றார் எனற தொழிப்பணி சரராமனெனப துரு வகவுயர்வு நவிற்சி. ஆசங்கிததல - மயஙகுதல - இனனதல்ல இதுவென மொழிதலெனனு முத்தி. எ - று. (உசுங)

ககூஉ பலலாயிரததினமுடியாதபக்கமவைவீசவநதுபடாகால
செலலாநிலததினிருளாதலசெலலவுடனினறவாளிசிதறுற
றெல்லாவிதததுமுணாவோடுநண்ணியிவனேபிழைக்குமெனவோா
வலலானொருததனிடையேபடுததவடுவானமேனிவடுவும. (உசுச)

இவ்விரண்டுபாட்டும் நாகபாசம் நீங்கினமை கூறுகின்றன

இ-ள். பல்-பல்லுக்குவமையான முருந்து, (அதாவது இற கினடிக்குருத்து.) ஆயிரத்தின் - ஆயிரமெனகிற கணக்கினும், முடியாத - அளவுபடாது மேலிடுகிற, பக்கம் - சிறகுகளாகிய, அவை - அவ்விரண்டாலும், வீச - வெயிலையெறிய, வந்து - நாசிவழியேவந்து, படர் - பாதிகழிந்து பாதிமீண்டு மவ்வழி யேசெல்லுகிற, கால் - பிராணவாயு, செல்லாத - போகக்கூ டாத, நிலத்தின்-சுவாதிட்டான நிலையிலுள்ள, இருள் - மயக்க மாகிய விருள், ஆதல் - ஆகியிருந்தது, செல்ல - கழியுமளவில், உடல் - அவ்ரவருடம்புகளிலே, நினற - தைத்திருந்த, வாளி- பாணங்களும், சிதைவுற்று - அழிவுபட்டு, எல்லாவிதத்தும் - சகலவிஷயங்களிலும், உணர்வோடு - சோர்வுறாத வுணர்வோடு,

நண்ணி - நடக்கப்பெற்று. இவனே - இத்தன்மையவனே, பிழைக்கும் - சோர்வையடைவான், என - என்றுசொல்லலாக, ஓர்- ஒப்பற்ற அல்ல துணருமவனை, வல்லாரொருத்தன - உணர்வால்வல்லவொருவன், இடையே - அவ்வுணர்வோடு நண்ணியநடுவிலே, படுதத - பூர்வகாமத்தாலடையலான, வடு - சோர்வாகிய குற்றத்தை, ஆன - ஒப்பாயின, மேனி - அவருடம்பிலுள்ள, வடுவும - பாணத்தாலாகிய தழும்புகளும, உடலிற் றழும்புகூடவில்லை யென்றுயிறறு. எ - று, (௨௬௪)

இசையுமெனினு மிசையாதெனினும் வசைதீரவெண்ணுவா சான்றோராகலான் இடையேபடுதத வடுவிசையினரி மாவுளங்கிழித்த வம்பினிற்றீதோ வரிமாப பிழைபபெய்தகோல் தீதன்றுகையாலே இடையேபடுதத வடுகுற்றமன்றென்றார். இது வேற்றுப்பொருள வைப்பணி இதற்குவமை யணியஙகம். முருந்தைப்பல்லென்றது எதிர்நிலையை யஙகமாகக்கொண்ட வுருவக வுயர்வு நவிறசி. மயககத்தை யிருளெனறது முருவகவுயர்வு நவிற்சி.

௧௧௯. தருமததினொன்றுமொழுகாதசெய்கைதழுவிப்புணாநததகையா
லுருமொததவெஙகணவினைதீயவஞசருடலுயததிலலையுலகின
கருமததினினறகவிசேனைவெளளமலாமேலவவளளலகடைநா
ளிருமிததவெனனவுயிரோடெழுநதுகிலைநினறதெய்வநெறியால. ()

இ-ள். தருமததின் - அறத்தின்வழியே, ஒன்றும் - ஒருவிதத்திலும், ஒழுகாத - நடவாத, செய்கை - செய்யுந்தன்மையை, தழுவி - அநுசரித்து, புணர்நத - அச்செய்யுந் தன்மையான பாபத்தோடுகூடிய, தகையால - பண்பினாலே, உரும - இடியை ஒத்த - ஒப்பான, வெஙகண் - கொடுமையான, வினை - பாபமானது, தீய - நசிககுமபடி, வஞ்சர் - பாதகருடைய, உடல் - தேகங்களிலே, உய்த்ததில்லை - அப்பககத் தொளிசென்றதில்லை, உலகின் - உயர்ந்தோர்களுடைய, கருமத்தின் - காரியத்தின்கண்ணே, நின்ற - உத்தியோகித்துநின்ற, கவிசேனை - வானரசேனையாகிய, வெள்ளம் - எழுபதுவெள்ளமும், மலர்மேல் - பூமேலிருந்து, அவ்வள்ளல் - முன்னேசிருட்டித்த அந்தப்பிரமன், கடைநாள் - அவ்வெள்ளமுடிவாகிய பிற்காலத்திலும், நிருமித்த

தென்ன - மீளவுஞ் சிருட்டித்தாற்போல, உயிரோடெழுந்து- உயிருடனேயெழுந்து, நிலைநின்ற - பெருமாளருகேநின்றன, தெய்வநெறியால - ஈஸ்வரசங்கல்பத்தாலே. கடைநாணிருமித்த தென்னவென்பதில பொருளுவமை. உலகினென்பதிலாறனுருபைந்த னுருபாய் மயங்கிற்று. வெவ்விய கண்போறலிற் கொடுமையை வெங்கணென்றார். எ-று. (உசுரு)

ககசு. இளையானெழுந்துதொழுவானையனபினிணையாரமார்பினணையா
விளையாததுனபமவிளைவிததெயவமவெளிவநதெனனவியவாக்
கிளையாரினினனதுணையோரையாவிசெழுவாவெழுநதுதழுவா
முளையாததிங்களுகிரானமுனவநதுமுறைநினறவீரனமொழிவான. ()

இ-ள். இளையான - சலியாதவனுய, எழுந்து - வீரத்தோடெழுந்து, தொழுவானை - வணங்குகிற இளையபெருமாளை, அன்போடு-பிரீதியோடே, இணை - தம்மோடொத்ததன்மை, ஆர- தோன்ற, மார்பின் - திருமார்பிலே, அணையா - அணைத்து, விளையாத - வரத்தகாத, துன்பம் - துக்கத்தை, விளைவித்த - வரப்பண்ணின, தெய்வம் - காட்சியாகாத தெய்வந்தானே, வெளிவந்தது - காணவந்தது, என்ன - என்கிறதாக, வியவா - அதிசயித்து, கிளையாரின் - மீண்டுமுயயாதவர்போல, இன்ன - இத்தன்மையான, துணையோரை - அளவாயினோரை, ஆவி - தமதுபிராணன், செழுவா - அப்போது பொருந்தியதாக, எழுந்து-அத்துணையோரின்முன்னேயெழுந்து, தழுவா - தழுவிக்கொண்டு, முளையாத - ஆகாயத்தின் முளைத்துமறையாத, திங்கள் - பாதிச்சந்திரனைப்போலும், உகிரான்முன் - நகத்தையுடைய பெரியதிருவடிக்குமுன்னே, முறைநின்று - தெய்வசன்னிதானத்தின் முறையேநின்று, அவ்வீரன - அந்தரகுவீரனாகிய பெருமான், மொழிவான் - சொல்லத்தொடங்கினான். எ-று. (உசுசு)

## கககூ-வது. படைத்தலைவர்வதைப்படலம்.

மாலியவான்சொல்லியது.

ககரு. தூதுநடந்தவனைதொழுதநநா
ளோதுநெடுஞ்செருவஞ்சியுடைந்தார்
தீதிலர்நின்றவர்சேனையினுர்
பாதியின்மேலுளர்நாசிபடைத்தா. (கச,

இ-ள். அந்நாள் தூதுநடந்தவனைத் தொழுது-அப்போது தூதுவந்த அநுமானைத தொழுது, ஓது நெடுமசெரு அஞ்சி உடைந்தார் - சொல்லுகின்ற பெரும்போரி லஞ்சிததோற்று, தீது இலர் நினறவா சேனையில் நின்றார் - தீதிலராகி நின்றவர் சேனையிலிருந்து, நாசிபடைத்தார்-மூக்கறுபடாமலுடையராய், பாதியினமேல் உளர்-பாதியெண்ணுக்கு மேலுள்ளார். எ-று. ()

கககூ. சாலகிளர்தேரொடுகால்வரையோடு
மேல்கிளர்பலகொடிவெணடிரைவீசு
மால்கடலானதுமாமழைவானப்
பாலகிளர்மீனிடையாடியபண்பால். (உச)

இ-ள். கால்கிளர் தேரொடு கால்வரையோடு - உருளைகள் விளஙகுகின்ற தேர்களோடுங் காலகளையுடைய மலைபோன்ற யானைகளோடும், மேல்கிளர் பல்கொடி—அவற்றின்மேலே பொலிகின்ற பலகொடிகள், மாமழை வானபபால் கிளர்மீன் இடை ஆடிய பண்பால - பெருமைபொருந்திய மேகங்கள் பரவுகின்ற ஆகாயத்தினிடத்தில் விளங்குகின்ற மீன்களிடையாடிய விதத்தால், வெண்திரைவீசுமால் கடல ஆனது-(உயுத்தகளம்)வெள்ளிய அலைகளை வீசுகினற பெரியகடலைப்போலாயது.எ-று.(உச)

ககஎ. பேரிகலிததனபேருலகைச்சூ
ழேரிகலிததனவாமெனயானைக
காரிகலிக்கடலோடுகலிபப
மாரிகலிததெனவாசிகலிப்ப. (உரு)

இ-ள். பேர் உலகைச்சூழ் ஏரிகலித்தன என - பெரியவுலகைச்சூழ்ந்த கடல்கஒளாலித்தனபோல, பேரிகலித்தன - முரசுகஒளாலித்தன, யானைக்கார் இகலிககடலோடு கலிப்ப - யானையாகிய மேகங்கள் பகைத்துக் கடலோடொலிப்ப, மாரிகலித்து என வாசிகலிப்ப - மேகங்கஒளாலித்தாற்போல குதிரைகஒளாலிப்பன. எ-று. (உரு)

ககஅ. கரகமுநதியமலைமுனமுயிறகட்செவி
யுரகமுநதினவெனவொளிகருமொள்ளிலை
யரகமுநதுறநெடுங்கவியிருக்கையிற்
றுரகமுர்தினரெடுத்தெறியுஞ்சூலமே. (சக)

இ-ள். கட்செவி உரகம்-கண்ணைச் செவியாகவுடைய பாம்புகள், கரகம் உந்திய மலைமுழையில்-அருவித்துளிகளை யுந்திய மலைமுழையில, உந்தின என-நுழைந்தாற்போல, துரகம் உந்தினர் எடுத்து எறியும - குதிரைகளைச் செலுத்தினரா யெடுத்தெறிகின்ற, ஒள் இலை - ஒள்ளிய இலைபோன்ற, சூலம் - சூலங்கள், அராகம முந்துறும நெடும கவியின் ஆகமையில - அடங்காமை முற்படுகினற நெடியகுரங்குகளின தேகத்தில், ஒளிக்கும் - அழுந்திமறையும். எ-று. (௯௧)

அராகம் அரகமென விகாரமாயிற்று.

௧௯௯. தனறாதையைமுனபுதடுததொருநாள
வெனறானைவிலஙகலினமேனியனைப
பினறுதவலதநுயாபெறறியனைக
கொனறனகவியினகுலமாளுடையான. (௮௬)

இ-ள். கவியின் குலம் ஆளுடையான்-குரஙகுகளின குலத்துக் கரசனாகிய சுககிரீவமகாராசன், தன் தாதையை முன்பு ஒருநாள்தடுத்து-தனது தந்தையாகிய சூரியனை முன்பொருநாளெதிர்த்து, வென்றானை - வெனற சூரியன பகைவனை, விலஙகலின் மேனியனை - மலைபோன்ற சரீரமுடையவனை, பின்றுதவலந்து உயர்பெற்றியனைக் கொன்றான் - அமரிற்புறந்த ராத வலத்தாலுயர்ந்த தன்மையுடையானை மாயததான. எ-று. (௮௬)

சூரியன்மகனாகிய சுக்கிரீவன் சூரியன்பகைவனைக் கொன்றானென்பது கருதது.

௨00. இன்றூதியமுண்டெனவினனகைபாற
செனறூதினதுமபிகடெனறிசையான
வனறூதருமெய்தினாவஞசனையான
றனறூதருமெய்தினர்தனனகாவாய். (௪00)

இ-ள். இன்னகைபால்-சானகிபிராட்டியாரிடத்தில், இன்று ஊதியம் உண்டு என - இன்று நன்மையுண்டென்று, தும்பிகள் சென்று ஊதின - வண்டுகள்போயூதின, (௧00)

## ௨௦-வது. மகரக்கண்ணன்வதைப்படலம்.

*மகரக்கண்ணன் இராவணனைநோக்கிச்சொல்லியது.*

௨௦௧. *யானைசெலவெண்ணுவனெய்துதலாற்*
*றேனோவதுநீதெனவேதணிவேன*
*வானோநிலனோமுதன்மற்றுமெலாங*
*கோனேயெனைவெல்வதொர்கொள்கையதோ.* (௩)

இ-ள். யானை செல எண்ணுவன் - யுத்தத்திற்கு யானை போக நினைப்பேன், எயதுதலால் - இந்திரசித்துப் போதலால், நேர்வது தீது எனவே தணிவேன் - இதில்தநினிப்பது தீதென்றே நீங்குவேன், வானோ நிலனோ முதல் மற்றும் எல்லாம் கோனே - வானுலகமு மண்ணுலகமு முதலாகிய வேறுள்ள எல்லாவுலகங்கட்கும அரசனே, எனைவெல்வது ஓர் கொள்கையதோ - (குரங்குசேனை) என்னை வெலவதாகிய ஒருகொள்கையுடையதோ, எ-று. (௩)

௨௦௨. *அமபின்வாயாறுசோருமரக்கனறனருளிலயாக்கை*
*யுமபரிறபரபபிததானவேறொளிததனனெனனவோர்வான்*
*செம்புனறசுவடுநோககியிதுநெறியெனறுதேவர்*
*தம்பிரானபகழிதூண்டததலையறறுததலததனானன்.* (௨௮)

இ-ள். அம்பின்வாய் ஆறுசோரும் அருளில்அரக்கன்-கணைதைத்த வாய்வழி புண்ணீராறொழுகுகின்ற அருளில்லாத மகரக்கண்ணன், தனயாக்கை - தனது சரீரம்போன்ற பலசரீரங்களை, உம்பரில் பரப்பித தான் வேறு ஒளித்தனன் என்ன-ஆகாயத்திற் பரப்பித் தான் வேறோரிடத்தி லொளித்தனனென்று, தேவர் தம்பிரான் - தேவர்க்குத்தேவன், ஓர்வான் - அறிந்து, செம்புனல் சுவடுநோக்கி இது நெறி என்று - இரத்தமொழுகுகின்ற குறியைப்பார்த்து அம்பெய்யத்தக்க வழியிதுவென்று, பகழி தூண்டத் தலையற்றுத் தலத்தன் ஆனான் - கணைவிட அம்மகரக்கண்ணன் தலை துணிந்து நிலத்தில் விழுந்தான். எ-று. ()

௨௦௩. *அயின்மடுத்துருமிற்செல்லுமம்பொடுமரக்கன்யாக்கை*
*புயல்படக்குருதிவீசிப்படியிடைப்புரள்தலோடும்*
*வெயிலெடுத்திருளையோட்டுங்காலத்தின்விளைவினோடுந*
*துயில்கெடக்கணவுமாய்ந்தாலொத்ததுசூழ்ந்தமாயை.* (௨௯)

இ-ள். புரள்தலோடும் - புரளலோடும், சூழ்ந்த மாயை - அம்மகரககண்ணன செயத மாயை, வெயில் எடுத்து இருளை ஓட்டும் காலத்தின விளைவினோடும் - வெயிலையெடுத்திருளையோட்டுகின்ற விடியற்காலததினது விளைவினால், துயில்கெடக்கனவு மாய்ந்தால் ஒததது - நித்திரைநீஙகக கனவு நீங்கினாற்போன்றது. (உகூ)

உ0௪. குருதியினகணணனவணணககொடிநெடுநதேரனகோடைய
பருதியினடுவட்டோனறுமபசுஞசுடாமேகபபணப
னெரிகணைசிநதிககாலினெயதினானறனனோடேறறான
விரிகடறறட்டானகொலலனவெஞசினததசசனவெயயோன. (௩0)

இ-ள். குருதியின் கண்ணன-குருதிககண்ணனும, வண்ணக் கொடி நெடும்தேரான் - நல்லநிறமுடைய கொடிகள் கட்டிய நெடியதேருடையவனும், கோடைப்பருதியின் நடுவண் தோனறும் பசும் சுடாமேகப்பண்பன்-கோடைககாலததுச் சூரியனுக்கு நடுவில விளஙகுகின்றபசுமையான ஒளியுடைய மேகத்தினது தோறறமுடையவனுமாகிய, எரிகணை சிநதிக்காலின எய்தினான் தன்னோடு - அக்கினிபோல எரிகின்ற பகழிகளைத துரந்து காற்றைப்போல வந்தவனோடு, விரிகடல் தட்டான் கொலலன வெம் சினத்து - விரிந்தகடலைச் சேதுவால் தடுத்தவனாகிய நளன் வெவ்விய கோவத்தோடு, ஏற்றான் - பொருதான். வெய்யோன் அச்சன் - வெய்யோனாகிய அக்குருதிக்கண்ணன அச்சனானான்.

---

## உக-வது. பிரமாஸ்திரப்படலம்.

## இந்திரசித்து பிரமாஸ்திரத்தாற் கட்டியதைக் கூறுகின்றபடலம்.

உ0ரு. புரந்தரனசெருவிற்றநதுபோயதுபுணரியேழு
முரநதவிர்த்தூழிபெருஙகாலததுளொலிக்குமோதை
கரநததுவயிற்றுக்காலவலம்புரிகையின்வாஙகிச்
சிரமபொதிர்நதமாரஞ்சலூதினாறிசையுஞ்சிநத (கஉ)

இ-ள். புரந்தரன் செருவில் தந்துபோயது - இந்திரன் யுத்தத்திலுடைந்து பரிகொடுத்துச்சென்றதும், புணரி ஏழும் உரம்

தவிர்த்து ஊழிபெரும் காலத்துள் ஒலிக்கும் ஓதை - கடலோசையையும் வலிபோக்கி ஊழிமுடியுங்காலத்தி லொலிக்குமோதையை, வயிற்றுக்கரந்தது - வயிற்றுளொளித்துவைத்ததுமாகிய, காலவலம்புரி கையின் வாங்கி - முடிவுகாலத்தைக்காட்டுகின்ற சங்கத்தைக் கையாலெடுத்து, அமரா சிரம்பொதிர்ந்து அஞ்ச - தேவர்கள் தலைநடுங்கி யஞ்சவும், திசையும் சிந்த ஊதினான்-திசைகளுதிரவும் இந்திரசித்தூதினான். எ-று. (கஉ)

இந்திரசித்து இளையபெருமாளைநோக்கிச்சொல்லியது.

உ0சு. முனபிறந்தவுனறமையனை முறைதவிர்ததுனக்குப்
பினபிறந்தவனைக்குவனபினபிறந்தோயை
முன்பிறந்தவனுக்குவனிது முடியேனே
லெனபிறந்தசனறபயனிராவணறகெனறான். (சுக)

இ-ள். முன்பு பிறந்த உனது தமையனை முறையைத் தவிர்த்துனக்கு, பினபு பிறந்தவனைச் செய்வன் பின்பு பிறந்த உன்னை, அவனுக்கு முன்புபிறந்தவனைச் செய்வன் இதைச்செய்யேனேல், இராவணனுக்கு (யான) பிறந்ததனால் பயன் யாதென்றான். எ-று. (சுக)

முறைதவிர்த்து என்றான் பிறந்த முறையே யிறக்கு முறைமை யககாலத்திற் றவிராதாகலின.

உ0எ. செஞ்சரத்தொடுசெமமழைவிசும்பினமேறசெல்லா
மஞ்சனமாமழையோவியமாமெனமாற
வஞ்சினனகனறனெனவறிநதனராரததார்
வெஞ்சினந்தருகளிபபினாவானரவீரர். (அக)

இ-ள். மஞ்சன்-வீரனாகிய இந்திரசித்து. செம்சரத்தொடு செம்மழை விசும்பின்மேல செல்லா - செவ்விதாகிய அம்போடு செவந்த மேகம்போல ஆகாயத்தின மேற்சென்று, மாமழை ஓவியம் எனமாற - பெருமைபொருந்திய மேகசித்திரம்போல வேறுபாடாக, (அக)

உ0அ. சொரிந்தனபசழிமாரிதோளினுமாரபினமேலுந்
தெரிந்தனவசனிபோல்வசெறிபொறிபிதிர்வதிக்கின
வரிந்தனவெருவைமானச்சிறைகளாலமரர்மார்பை
யரிந்தனவடிம்புபெரன்கொண்டணிந்தனவாகுங்கண்ணே. (சஉஎ)

இ - ள் திக்கின் அசனிபோல்வசெறி பொறி பிதிர்வ-திசை களில் இடிபோன்ற செறிந்த தீப்பொறிகளைச் சிதற்றுவனவும், எருவைமானச்சிறைகளால் வரிந்தன - கழுகின் து பெரியஇறகு களால் வரியப் படடனவும, அமரர் மாரபை அரிந்தன - தே வர்கள் மார்பைப் பிளந்தனவும், வடிம்பு பொனகொண்டு அ ணிந்தனவாகும கண்ண - வடிம்பிற் பொன்னைகொண் டணிந் தனவாகிய இடஙகளையுடையனவும், சொரிந்தன பகழிமாரி- தூரக்கப்பட்டனவுமாகிய கணைமாரிகள், தோளிலும் மாரபின் மேலும் தெரிந்தன-அனுமானது தோள்களிலும மார்பினிடத் திலும் தைத்துத்தெரிந்தன. எ-று. (கஉஎ)

மரிததுவிண்ணிறசெனறகவிகளைநோககித
தேவரகள்சொலலியது.

உ0க. பாரபடைததவனபடைககொருபூசனைபடைததீர
நீர்படககடவீரலீர்வரிசிலைநெடியோன
போபடைததவாக்கடியவர்ககடியரும்பெறுவார
வோபடைததவெம்பிறவியாறறுவககுணுவீடு. (கஅ0)

இ-ள். பாரபடைத்தவன் படைக்கு ஒரு பூசனைபடைத்தீர்- புவியைப்படைத்த பிரமனது கணைக்கொருபூசையைச் செய்தி ரல்லாமல், நீர்படக்கடவீர் அல்லீர்-நீர் சாககடவீரல்லீர், வரி சிலைநெடியோன்-வரிந்த சிலையையுடைய இரகுநாதனது, பேர் படைத்தவர்க்கு அடியவர்க்கு அடியரும் - இராமனெனற நாம த்தைக்கொண்டவர்களுக் கடிமைபூண்டவர்களுக் கடிமைபூண் டவரும், வேர்படைத்த வெம்பிறவியால் துவக்கு உண்ணுவீடு- வேரூன்றிய வெவ்விய பிறவியாற் கட்டுப்படாத நிரதிசய வின் பவீட்டை, பெறுவார் - அடைவார். எ - று. (கஅ0)

தேவர்கள்இராகவபிரானைததுதித்தது.

உக0. அம்பரீடற்கருளியதுமயனுர்மகனுக்களிததது
மெம்பிரானேயெமக்கின்றுபயநதாயென்றேயேமுறுவோம்
வெம்புதுயரநீயுழககவெளிகாணுதுமெலிகின்றோந
தம்பிதுணைவாநீயிதனைததவிர்தெம்முணர்வைததாராயோ.(உஉச)

இ-ள். அம்பரீடற்குஅருளியது என்றது துருவாசமுனிவர் விட்ட பூதத்தினின்றுங் காத்ததை. அயனுர் மகனுகிய சிவனுக் களித்தது என்றது பஸ்மாசுரனினின்றுங் காத்ததை.

## உ௬-வது. மருந்துப்படலம்.

:0:

## அனுமான் சஞ்சீவியைக் கொணர்ந்ததைக் கூறுகின்றபடலம்.

சாம்புவான் அனுமானுக்குச் சொல்லியது.

உசக. மாண்டாரை யுயிர்க்கும் மருந்தொன்று மெய்வேறு வகிர்களாக்க, கீண்டாலும் பொருந்துவிப்ப தொருமருந்து படைக்கலங்கள் கிளர்ப்பதொன்று, மீண்டேயுந் தம்முருவே யருளுவதோர் மெய்மருந்து முளநீவிர், வாணடேகிக் கொணர்தியென வடையாளத் தொடு முரைத்தா னறிவின் மிக்கான். (உஎ)

இ-ள். படைக்கலஙகள் கிளர்ப்பது ஒன்றும் - மெய்யிற்பதிந்த ஆயுதஙகளை வெளிப்படுத்துவதொரு மருந்தும், மீண்டேயும் - முற்று மழிந்தபின்பு திரும்பவும், தம் உருவே அருளுவது ஓர் மெய்மருந்தும் உள - தமது தேகத்தையே கொடுப்பதாகிய ஒப்பற்ற மெய்மருந்துமுள்ளன, (உஎ)

உகஉ. தொடுத்தநாண் மாலைவானோர் முனிவரே முதலாந் தொல்லோ
ரடுத்தநாண் மறைகளோதி யாய்ந்தநா ளவுணர்வேந்தன்
கொடுத்தநா ளளந்துகொண்ட குறளனார் குறியபாத
மெடுத்தநா ளொத்ததண்ண லெழுந்தநா ளுலகுக்கெல்லாம். (சo)

இ-ள். அண்ணல் எழுந்தநாள் - அனுமான் மருந்துகொணர எழுந்தநாள், உலகுக்கெல்லாம் - உலகிலுள்ளோர்களுக்கெல்லாம், தொடுத்தநாள் மாலைவானோர் - நாரால்தொடுத்த அன்றலர்ந்த பூமாலையணிந்த தேவர்களும், முனிவர்முதல் ஆம் தொல்லோர் - முனிவர்முதலாகிய பழமையோரும், அடுத்தநாள் - திருமாலிடஞ்சேர்ந்த நாளையும், மறைகள் ஓதி ஆய்ந்தநாள் - வேதங்களையோதித் துதித்தநாளையும், அவுணர்வேந்தன் கொடுத்தநாள் - அவுணர்க் கரசனாகிய பலிச்சக்கிரவர்த்தி தானங்கொடுத்தநாளையும், அளந்துகொண்ட குறளனார் குறியபாதம் எடுத்தநாள் ஒத்தது - திருவடியாலளந்துகொண்ட குறளனார் அளப்பதற்குச் சிறியபாதத்தை யெடுத்தநாளையு மொத்தது. எ-று (சo)

அடுத்தநாள் முதலாகிய அந்நாட்களும் அண்ணலெழுந்த அந்நாளும் உலகுக்கினபஞ்செய்த நாளாகலின் ஒத்ததென்றார்.

ஸ்ரீராகவபிரானது திருக்கண்களைக்குறித்துச்சொல்லியது.

உ௧௩. வண்டனமடந்தையாமனத்தை வேரொடுங்
கண்டனகொளவருங்கருணைத்தாமெனக்
கொண்டனகொடுப்பனவரங்களகோளிலாப
புண்டரீகத்துணைதருமம்பூத்தன. (௬௫)

இ-ள். வண்டு அன மடந்தையர் மனத்தை வேரொடும் கண்டன - வண்டைப்போல மாதர்களது தாமரையாகிய மனத்தை வேரோடு மறிந்தனவும், கொள அரும் கருணைத்தாம் எனக் கொண்டன — பெறுவதற்கரிய அருளே தாமென்று கொண்டனவும், வரஙகள் கொடுப்பன-அடியார்கள் வேண்டிய வரங்களைக் கொடுப்பனவுமாகிய, கோள் இலலாப் புண்டரீகத்துணை தருமம் பூத்தன - குற்றமில்லாத தாமரையாகிய இரண்டு கண்களுந் தருமம்போல மலர்ந்தன. எ - று (௬௫)

சாம்புவான ஸ்ரீராமபிரானுக்குச்சொல்லியது.

உ௧௪ யானலாலெந்தையாயுலகையீன்றுளான
ூனலாறசிவனலானேமிதாங்கிய
கோனலாலியாவருமுணருங்கோளிலா
வேனிலானமேனியாயமருந்தைமெய்யுற. (அ௬)

இ-ள். வேனிலான் மேனியாய் - மதனனையொத்தத் திருமேனியுடையாய, மருந்து மெயயுற - மருந்துகள் மெய்யாக, யான் அல்லால் - யானல்லாமலும, எந்தையாய் உலகை ஈன்று உள்ளான் அல்லால் - எனது தநதையாய உலகைப் படைத்துள்ள பிரமனல்லாமலும், சிவன் அல்லால-சிவனல்லாமலும், நேமிதாங்கிய கோன் அல்லால் - சக்கிரத்தைக்கொண்ட இறைவனல்லாமலும், யாவரும் உணரும்கோள் இல்லா - எல்லாருமறியுங் கொள்கையில்லாதனவாம். எ-று, (அ௬)

## உச-வது. களியாட்டுப்படலம்.

—:o:—

### பகைவென் றுருவப்பாற் கட்குடித்தாட்டங் காணுதல் வழக்காகலாற்பிரமாஸ்திரத்தாலிறந்தகவிகள் மருந்தாற் பிழைத்தமையுணராத இராவணன் நறவுபருகிமகளிராட்டங்கண்டதைக் கூறுகின்றபடலம்.

உகரு. நற்பெருங்கலவிச்செலவநவையறுநெறியைநண்ணி
முறபயனுணாநதூயோாமொழியொடும்பழகிமுறறிப
பிறபயனுணாதறேறருப்பேதைபோலவஞ்சன்செயத
கறபனையெனனவோடிக்கலந்ததுகள்ளின்வேகம். (சு)

இ-ள். நலலபெருமையுடைய கல்வியாகியசெல்வத்தினது குற்றமற்ற நெறியையடைந்து, முற்பயனுணர்ந்த தூயோரது சொல்லோடும் பழகியறிவால் முதிர்ந்து, பின்பதன் பயனையறிதல் செய்யாதபேதையை யொத்த வஞ்சனாகிய இராவணன்செய்த, கற்பனையைப்போலக் கள்ளின் மயககம்விரைந்து கூடிற்று.

உகசு. கூநதலம்பாரக்கறறைகொநதளககோலககொண்ட
லேநதகலல்குறறேரையிகநதுபோயிறங்கயாணாப
பூநதுகிலோடும்பூசன்மேகலைசிலமபுபூண்ட
மாநதளிரெயதநொயதினமயங்கினர்மழலைச்சொலலார். (அ)

இ-ள். அம்கூந்தல் பாரக்கற்றை - அழகிய கூந்தற் பாரக் கற்றையாகிய, கொந்தளக்கோலக்கொண்டல் - குழற்சி பொருந்திய அழகுடைய மேகம், ஏந்து அகல அல்குல்தேரை இகந்து போய் இறங்க - ஏந்திய அல்குலாகிய தேரைக் கடந்துபோய்த் தாழ்ந்து, யாணாப்பூந்துகிலோடும் - புதுமை பொருந்திய அழகுடைய ஆடையோடும், பூசல் மேகலை - ஒலியுடைய மேகலை யோடும், சிலம்புபூண்ட மாந்தளிர் எய்த - நூபுரமணிந்தபாதத்தைச்சார, மழலைச்சொல்லார் நொய்தில் மயுங்கினர் - மழலைச் சொல்லுடைய மாதர்கள் விரைவில் மயஙகினர். எ-று. (அ)

உசஎ. கோததமேகலையினேடுந்துகின்மணிக்குறங்கைககூடக்
காதரன கூநதற்கற்றையுற்றவதைதன்மைகண்டு
வேத்தவைகீழுளோருங்கீழ்மையேவிளைததார்மேலோர்
,சீரதரவாசெய்யத்தககருமமேசெய்தாரெனன, (க)

இ-ள். வேத்தவை கீழ் உள்ளோர் கீழ்மையே விளைத்தார்-ஏனமுள்ளோ ரிராசசபையி லீனதைதயே செயதார், மேலோர் சீர்த்தவர் செய்யத்தகக கருமமே செய்தார் என்ன - மேலோராகிய சிறந்தவர் தாஞ்செய்யததகுந்த மேலானகருமத்தையே செய்தாரென்று சொல்லும்படி, சோத்தமேகலையினேடும்துகில் மணிக்குறங்கைக்கூட - கோதத மேகலாபரணததோடு முடித்திய ஆடை யழகுடைய துடையைச்சார, உற்ற அதுதன்மை கண்டு - சார்ந்த அத்தன்மையைப்பாாதது, கூந்தல கற்றை காத்தன-கூந்தற்கற்றைகள்ழானத்தலததைக் காததன. எ-று.( )

உகஅ. * பாணியிறறளளிகாலமாததிரைபடாதுபட்ட
நாணினமுறையிறசெலலாதொருவழிநடையிறசெல்லு
மாணியினழிநதபாடனறவெனவனங்கவேடன
தூணியினடைததவம்பிறகொடுநதொழிலுறந்தகண்ணா. (௪0)

உ௲. வஙகியமவகுததகானமாறுகொண்மழலைமாறுச
சங்கையிலபெருமபாணுறறநிறததுறைநிரமபிததளளச
சிஙகலினமிர்தினேடுமளியளிதேறலெனன
வெங்குரலெடுததபாடலவிளிததனாமயககம்வீஙக. (௪க)

இ-ள். வங்கியம் வகுத்தகானம மாறுகொள் மழலைமாறு - பொளளாங் குழல வகுதத கானததை மாறுகொண்டமழலைச் சொல்லோடு வேறுபடாத, சஙகையில பெரும்பாண் உற்ற நிறத்துறை நிரம்பிததளள - குற்றமில்லாத பெருமைகொண்டபண்பொருநதிய வண்ணத்துறைகள் நிரமபித்தள்ள, சிஙகல் இல் அமிர்தினேடும அளி அளி தேறல் எனன - குறைதலில்லாத அமுதையும் வண்டுகள கொடுககினற தேனையும்போல வினிமையாய, மயக்கம்வீஙக வெம்குரல் எடுத்த பாடல் விளித்தனர் - மயககமுண்டாக விரும்பததக்க குரலாலெடுத்த பாடலைப பாடினர் எ - று (கக)

உஉ0. * ஏனையபிறவுங்கணடார்கநிநதிரசாலமெனனத
தானவையுருவிறறேனறுமபாவனைததகைமைசான்றோர்
மானமாறோகநிறைமைநதரைக்காட்டிவாயா
லானைமைவிளம்பித்தேவரயபிரயத்தியறறியுறறார். (கஉ)

உஉக. உயிர்ப்புறத்துறறதன்மையுணர்ததிருளளததுள்ள
துயிர்பபினிலறிதிறேனறேயுதுகளியாட்டமாகச்
செயிர்ப்பறுசிநதைதசெய்வததிருமறைமுனிவர்க்கேயு
மயிர்ப்புறந்தோறும்வநதுபொடித்ததுகாமவாரி. (கங)

இ-ள். அயிர்ப்பு இல் - ஐயமில்லாமல், உள்ளத்து உள்ள - மனத்திலுள்ளதாகிய, காமவாரி-காமவெள்ளம், உயிர்ப்புறத்து உற்றதன்மை - தங்களுயிரினிடத்துப் பொருந்திய தன்மையை, அறிதிர் என்று - உணர்திரென்று, அது களி யாட்டம் ஆக - அதனைக் களியாட்டங் காரணமாக, உணர்த்தினர் - அபிநயத்தால் தெரிவித்தார், செயிர்ப்பு அறுசிந்தைத் தெய்வத்திருமறை முனிவர்க்கேயும் - கோவமற்ற மனத்தையுடைய தெய்வத்தன்மைபொருந்திய வைதிக முனிவர்களுக்கும், மயிர்ப்புறந்தோறும் வந்து பொடித்தது - (அக்காமவாரி) மயிரிடங்கடோறும் வந்து பொடித்தது. எ - று. (கச)

---

## உரு - வது - மாயாசீதைப்படலம்.

### பிராட்டியைப்போல மாயையாலுண்டாக்கிக் கொன்றதைக் கூறுகின்றபடலம்.

—:0:—

உஉஉ. இலங்கையினின்றமேருபிற்படவிமைப்பிறபாய்ந்து
வலங்கிளாமருநதுினறமலையொடுங்கொணரவல்லா
னலங்கலநதடநதோளண்ணலனுமனேயாகவேணடுங்
கலங்கலிலுலகுக்கெலலாங்காரணங்கணடவாற்றல. (ந)

இ-ள். கலங்கல் இல் உலகுக்கு எல்லாம் காரணம்கண்ட ஆற்றல் - கலங்குதலில்லாத வுலகங்களுக்கெல்லாம் ஸ்ரீராமபிரானருள்செய்தவிதத்தால், (ந)

ஆகவேண்டுமென்று முடிக்க.

உஉந. மானிடனல்லன்றுலைவானவனல்லன்மறறு
மேனிவர்முனிவனல்லனவீடணன்மெய்யிறசொன்ன
வேனவனெண்ணிறநீர்ந்தாரெண்ணுமொருவனென்றே
தேனகுதெரியனமனணுசேகறத்தெரிநதனன்றே. (கஉ)

இ-ள். எண்ணில் தீர்ந்தார் எண்ணும் ஒருவன் என்றே - மனத்தாற் பற்றற்றவர் தியானிக்குமொருவனென்றே, (கஉ)

---

## உசு - வது - நிகும்பலைப்படலம்.

:o:

## நிகும்பலையென்னுமிடத்தில் இந்திரசித்து யாகஞ்செய்ததைக் கூறுகின்றபடலம்.

உஉச. மினனுமபடைவீசலின்வெம்பகைமேற்
பன்னுங்கவிசேனைபடிந்துளதாற்
றுனனுநதுறைநீர்நிறைவாவிதொறும்
அன்னங்கள்படிந்தனவாமெனலாய் (உஉ)

